# திருமணி மாலை

நபி இபுறாகீம் (அலை) அவர்களின்
வரலாற்றுக் காப்பியம்

புலவர் நாயகம் செய்கு அப்துல் காதிர்
நயினார் லெப்பை ஆலிம் இயற்றியது

பதிப்பாசிரியர் :
எம். செய்யிது முஹம்மது "ஹஸன்"

வெளியிடுவோர் :
ஏவி. எம். ஜாபர்தீன்-
நூர்ஜஹான் டிரஸ்ட்
6-D, முருகேசனார் காலனி, எஸ். எஸ். ஐயங்கார் ரோடு,
தேனாம்பேட்டை, சென்னை-600 018.

உரிமைப் பதிவு.

முதற் பதிப்பு : நவம்பர் 1984

விலை : ரூ. 35-00

84038

விற்பனை உரிமை :

**மில்லத் பப்ளிஷர்ஸ்,**
16, அப்புமேஸ்திரி தெரு,
சென்னை-1.

அச்சிட்டோர் :

**மில்லத் பிரிண்டர்ஸ்**
16, அப்புமேஸ்திரி தெரு,
சென்னை-600001.

ஏவி. எம். ஜாபர்தீன்—நூர்ஜஹான் டிரஸ்ட்டின் நிறுவனர்
அல்ஹாஜ் ஏவி. எம். ஜாபர்தீன் அவர்களின்

# முகவுரை

இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களுள் சீருவுக்கு ஈடான காப்பியம், நபி இபுருஹீம் (அலை) அவர்களின் வரலாறு கூறும் புலவர் நாயகம் அவர்களின் ''திருமணி மாலை'' ஒன்றுதான்.

ஆனால், நூல் கிடைக்காமை என்ற ஒரே காரணத்தினால் இந்த உண்மை யாராலும் உணரப்படவில்லை.

ஒரு சிலரிடம் மட்டுமே அபூர்வமாக இருக்கும் இந்நூலை கனம் அண்ணன் ''ஹஸன்'' அவர்கள் தேடி அலைந்த நிகழ்ச்சியும், அது எப்படி நெருப்பின் வாயிலுக்கே சென்று தப்பியது என்ற வரலாறும் புல்லரிக்க வைக்கின்றன.

''நபி இபுருஹீம் (அலை) அவர்களைத்தான் அல்லாஹ் நெருப்பிலிருந்து காப்பாற்றினான். இப்போது அவர்கள் வரலாற்று நூலைக்கூட நெருப்பிலிருந்து காப்பாற்றி என்னிடம் கிடைக்கும்படி அல்லாஹ் செய்திருக்கின்றானே! இது என் முயற்சியால் அச்சாகி வெளிவர வேண்டுமென்பது இறைவனின் நாட்டம் போலும்!'' என்று அண்ணன் ''ஹஸன்'' அவர்கள் கண்களில் நீர் மல்கக் கூறிய நிகழ்ச்சி இன்றும் என் நினைவை விட்டு அகலவில்லை.

கனம் ''ஹஸன்'' அவர்களின் மகிழ்ச்சியில் உறுதுணையாக இருந்து இந்தக் காப்பியம் வெளிவர எங்கள் ''டிரஸ்ட்''டுக்கு வாய்ப்பளித்த இறைவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

இஸ்லாத்திற்கும் தமிழுக்கும் தொண்டு செய்ய வேண்டும் என்பதை முக்கிய நோக்கங்களில் ஒன்றாகக் கொண்டுள்ள எங்கள் டிரஸ்ட்டின் மூலம் அச்சில் இல்லாமல் மறைந்து வரும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களை அச்சிலேற்ற இறைவன் துணை நிற்க வல்ல நாயனிடம் இறைஞ்சுகிறோம்.

—ஏவி. எம். ஜாபர்தீன்

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113.

# மதிப்புரை

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் சமயங்கள் பெரும் பங்கு கொண்டுள்ளன. சங்கம் மருவிய காலம் முதற்கொண்டு இன்று வரையிலான வரலாறு இவ் உண்மையை உறுதிப்படுத்தும். தமிழும் சமயமும் ஒன்றையொன்று சார்ந்து ஒன்றின் வளர்ச்சியில் இன்னொன்று வளர்ந்த நிலையினைத் தமிழ் இலக்கிய வரலாற்றாலும் தமிழகத்தில் சமயங்கள் பெற்றுள்ள செல்வாக்காலும் அறிகின்றோம்.

சமணம், பௌத்தம், சைவம், வைணவம் ஆகிய சமய நூல்கள் தமிழில் பெருகியிருப்பதைப் போன்றே இஸ்லாமிய, கிறித்தவ சமய நூல்களும் தமிழில் விரவிக் காணப்படுகின்றன. எனினும் பிற சமய நூல்கள் தமிழ்மக்களுக்கு அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதைப் போன்று இஸ்லாமியத்தமிழ் நூல்கள் அறிமுகப் படுத்தப் படவில்லை என்றே சொல்ல வேண்டும். கி. பி. 16-ஆம் நூற்றாண்டு முதற்கொண்டு முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் பேரின்ப ஞானமூட்டும் பக்திப் பனுவல்களைப் பைந்தமிழில் பாடி வந்துள்ளனர். தமிழில் பொதுவாக விளங்கும் பேரிலக்கியங்களும் சிற்றிலக்கியங்களும் ஆக்கியதோடல்லாமல் கிஸ்ஸா, நாமா, மசலா, படைப்போர், முனாஜாத்து போன்ற புதிய இலக்கிய வகைகளையும் தமிழில் படைத்துச் சிறப்புச் சேர்த்துள்ளனர்.

முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் பதினைந்திற்கும் மேற்பட்ட காப்பியங்களைப் பாடியுள்ளனர் என்று அறிய முடிகின்றது. இஸ்லாமியத் தமிழ்க்காப்பியங்களில் பலராலும் அறியப்பட்டு விளங்குவது உமறுப்புலவர் இயற்றிய சீறாப் புராணமாகும். உமறுப்புலவர் போன்றே பல முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் இறைத் தூதர்களையும் இறையடியவர்களையும் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு காப்பியங்கள் படைத்துள்ளனர்.



கி. பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் வாழ்ந்த காயல் பட்டணத்தைச் சேர்ந்த சேகனாப் புலவர் எனப்படும் செய்கு அப்துல் காதிறு நயினார் லெப்பை ஆலிம் புலவர் புதூகுஷ்ஷாம், குத்புநாயகம், திருக்காரணப் புராணம், திருமணி மாலை என்னும் நான்கு காப்பியங்களைப் படைத்துள்ளார். தமிழிலக்கிய வரலாற்றில் நான்கு காப்பியங்களைப் பாடியுள்ள ஒரே புலவராக இவர் விளங்குகின்றார். சேகனாப் புலவர் கலம்பகம், அந்தாதி, மாலை போன்ற சிற்றிலக்கியங்கள் பலவும் செய்துள்ளார். 1842-ஆம் ஆண்டில் சீறாப்புராணத்தைப் பதிப்பித்து அச்சிட்டார். இத்தகு சிறப்புக்களால் 'புலவர் நாயகம்' என்று போற்றப்படுகிறார். இப்புலவர் பெருமகனார் இயற்றிய 'திருமணிமாலை' இயற்கையங் காண்டம், செயற்கையங் காண்டம் என்று இரு காண்டப் பிரிவுகளையும் முப்பத்தியொரு படலங்களையும் 1908 பாக்களையும் உடைய காப்பியமாக அமைந்துள்ளது.

உலகில் அறம் தேய்ந்து அல்லவை பெருகும்போது ஏக இறைக் கொள்கைக்கு எதிரான இணைவைப்புச் செயல்கள் நிகழும்போது ஓரிறைக் கொள்கையை வலியுறுத்தி மக்களை நன்னெறிப் படுத்துவதற்காக இறைவன் தன் தூதர்களை அனுப்பி வைத்தான் என்பதும், அவ்வாறு உலகில் தோன்றிய இறைத்தூதர்களின் மொத்த எண்ணிக்கை 1, 24,000 என்பதும், முதல் மனிதரான ஆதம் இறைவனின் முதல் இறைத்தூதர் என்பதும், முகம்மது நபி இறுதித்தூதர் என்பதும் இஸ்லாமிய நம்பிக்கையாகும். முஸ்லிம்களின் புனித வேதமாகிய திருக் குர்ஆனில் ஒருசில நபிகளைப் பற்றிய செய்திகள் விரிவாகப் பேசப் பட்டுள்ளதாக அறிகின்றேன். அவர்களுள் ஒருவரான இபுறாகீம் நபியின் வரலாற்றை விரிவாகக் கூறும் காப்பியமாகத் திருமணி மாலை திகழ்கிறது.

**காப்பியக் கதை**

நூகு நபியின் மரபில் வந்த நமுறூது என்பவன் தன் தந்தை கன்ஆனைக் கொன்றுவிட்டு ஆட்சியைக் கைப்பற்றுகின்றான். தன் வலிமையாலும் சூழ்ச்சியாலும் உலகின் பிற நாடுகளையெல்லாம் வென்ற நமுறூது தானே உலகின் அதிபதி, தன்னால்தான் எல்லாம் நடக்கிறது, தானே இறைவன், தன்னையே மக்கள் வணங்க வேண்டும் என்ற செருக்குடன் கொடுங்கோலாட்சி புரிந்து

வருகின்றான். 'மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி' என்பதற்கொப்ப அந்நாட்டு மக்களும் கொடுஞ்செயல்கள் புரிந்து, சிலை வணக்கத்தில் ஈடுபட்டு, அஞ்ஞானத்தில் உழல்கின்றனர்.

இந்நிலையில் நமுறூதை அழிக்க இபுறாகீம் நபி தோன்றுவார் என அடிக்கடி அசரீரி ஒலிக்கிறது. ஒருநாள் தான் கண்ட கனவின் பொருளைக் கூறுமாறு நமுறூது சோதிடர்களைக் கேட்க, மன்னனுக்கு நெருங்கிய ஒருவரின் மகனாகப் பிறக்கும் ஒருவர் நமுறூதை அழித்து நல்லாட்சி செய்வார் என்கின்றனர். இதைக் கேட்ட நமுறூது சூல் கொண்டிருந்த பெண்களின் கருவையெல்லாம் அழித்து விடுகின்றான். ஆனால் இறையற்புதத்தால் இபுறாகீம் நபி நமுறூதின் தலைமையமைச்சரான ஆசறு என்பவரின் மகனாகப் பிறக்கிறார். வானவர்கள் இபுறாகீம் நபியை வளர்த்து வருகின்றனர்.

வளர்ந்து பெரியவரான இபுறாகீம் நபி ஓர் இறைக் கொள்கையை உலகுக்கு உரைக்கின்றார். நமுறூது மன்னன் இபுறாகீம் நபியை அழிக்கப் பலவாறும் சூழ்ச்சி செய்கின்றான். ஆனல் இறையருளால் இபுறாகீம் நபி நமுறூதை வெல்கின்றார். நமுறூது அழிகின்றான்.

இபுறாகீம் நபி சாறா, காஜரா என்னும் இரு மங்கையரை மணக்கின்றார். காஜரா வயிற்றில் இசுமாயீல் நபியும், சாறா வயிற்றில் இசுகாக்கு நபியும் பிறக்கின்றனர். இபுறாகீம் நபியின் உள்ள உறுதியை இறைவன் பலவாறும் சோதிக்கின்றான். ஒருநாள் தன் மகன் இசுமாயீல் நபியை அறுத்து இறைவனுக்குப் பலியிடுவதாக இபுறாகீம் நபி கனவு காண்கின்றார். இறையெண்ணத்தை நிறைவேற்ற மைந்தரை அழைத்துக் கொண்டு தபீறு என்னும் மலைக்குச் சென்று அங்கு மைந்தரின் முழுமன ஒப்புதலோடு அவரைக் கூர்மையான கத்தி கொண்டு அறுக்கக் கத்தி கழுத்தில் இறங்காமல் அப்படியே நின்றது. மூன்று முறை முயன்றும் முடியாமற் போகவே கத்தியைத் தூக்கியெறிய அது ஒரு பாறையில் மோதிப் புதைந்தது கண்டு திகைத்தார் இபுறாகீம் நபி.

அப்போது, இறைவனுக்காகத் தம் அருமை மகனையே குறுபான் (தியாகம்) செய்ய முன்வந்த இபுறாகீம் நபியின் தியாக உள்ளத்தைப் போற்றி அசரீரி ஒலிக்கிறது. ''இந்நாள் உமக்கும் உம் சந்ததியில் தோன்றும் முகம்மது நபிக்கும் அவர் வழி நடப்



போர்க்கும் பெருநாளாகும் (இந்நாளைத் தான் முஸ்லிம்கள் பக்ரீத் பெருநாள் என்று கொண்டாடுகின்றனர்), நீர் கண்ட கனவை மெய்யாக்கினீர். மகனுக்குப் பதிலாக இந்த ஆட்டை அறுத்திடும்'' என்ற அசரீரியைக் கேட்ட இபுறாகீம் நபியும், இசுமாயீல் நபியும் இறைவனைத் தொழுது இறைவனால் அனுப்பப்பட்ட ஆட்டை அறுத்து இறையாணையை நிறைவேற்றினர்.

இசுமாயீல் நபிக்குத் திருமணம் முடிகின்றது. தந்தையும், மகனும் ஏக இறைக் கொள்கையை உலகில் பரப்பி வரும்போது வானவர் தலைவரான சிபுரியீல், முதல் இறை இல்லமான கருபத்துல்லாவைக் கட்டி முடிக்கும்படியான இறைவனின் ஆணையைக் கூற, இபுறாகீம் நபியும், இசுமாயீல் நபியும் கருபத்துல்லாவைக் கட்டி முடிக்கின்றனர். இந்நிகழ்ச்சியுடன் காப்பியம் நிறைவு பெறுகின்றது.

தெய்வக் கதை, அரசர் கதை, மக்கள் கதை எனக் காப்பியப் பொருளடிப்படையில் கதையை மூவேறாகப் பிரிக்கலாம். இக் கதையை இறைத்தூதர் கதை எனலாம்.

## காப்பியக் கூறுகள்

கி. பி. 2-ஆம் நூற்றாண்டிலேயே சிலப்பதிகாரம், அதைத் தொடர்ந்து மணிமேகலை மற்றும் பல காப்பியங்கள் தமிழில் தோன்றியிருப்பினும் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் வடமொழியிலிருந்து பெயர்க்கப்பட்ட தண்டியலங்காரம் என்னும் நூலே முதன் முதலாகக் காப்பிய இலக்கணம் கூறுகின்றது.

தண்டியலங்காரம் கூறும் இலக்கணம் வடமொழிக் காப்பியங்களுக்கு உரியதெனினும் தமிழ்க் காப்பியங்களும் இவ்விலக்கணத்திற்கு ஒப்ப அமையக் காணலாம்.

மாலை எனப் பெயர் பெறினும் திருமணிமாலை பெருங் காப்பிய இலக்கணத்திற்குப் பெரிதும் பொருந்தி அமைந்துள்ளது.

## கடவுள் வாழ்த்து

வாழ்த்து, வணக்கம், வருபொருள் இவற்றிலொன்று அல்லது மூன்று காப்பியத் தொடக்கத்தில் அமைவதைத் தமிழ்க் காப்பியங்களில் காண்கிறோம். இஸ்லாமியத் தமிழ்க்காப்பியங்

களில் கடவுள் வாழ்த்துப் பகுதியில் முதலில் அல்லாவைப் போற்றி அவனருளை வேண்டுதலும், முகம்மது நபியின் புகழ் கூறிப் போற்றுதலும், பிற இறைத்தூதர்களை வாழ்த்துதலும், முதல் நான்கு கலீபாக்களான அபூபக்கர், உமறு, உதுமான், அலி, முகம்மது நபியின் பெயரர்கள் ஹசன், ஹுசைன், நபிகள் நாயகத்தின் தோழர்கள் ஆகியவர்களைப் போற்றுதலும், முகிய்யித்தீன் ஆண்டகை. நாகூர் ஆண்டகை, போன்ற ஞானிகளின் புகழ் கூறுதலும் இஸ்லாமியத் தமிழ்க்காப்பிய மரபாக அமைந்துள்ளது.

திருமணிமாலையிலும் இம்மரபு அப்படியே பின்பற்றப் பட்டுள்ளது. சேகனாப் புலவர் இறைவனை வணங்கி வாழ்வோர் இம்மையிலும் மறுமையிலும் நற்பேறடைவர் என்றும் அவனை எண்ணி வழிப்படாதோர் இழிவடைவர் என்றும் கூறி இறை வணக்க மேன்மையை உணர்த்துகின்றார் (4).

முகம்மது நபியின் மருகரான அலி அவர்கள் மிகச்சிறந்த வீரர். அவரைப் போற்றிப் புகழும் போது அவரது வீரத்தையே பிரதி பலிக்கும் வகையில் ஓசை நயமுடைய சொற்களை அமைத்துப் பாடலை யாத்துள்ளார், புலவர்.

"திசைபல வதிர்தர மலைநிலை பெயர்தர
செறியலை சுவறிடவே
விசைதரு மணிலமு மெரிகதிர் தழல்புவி
விரையிடி யவையலற
வசையுறு மடையலர் பதிகுலை குலைவுற
வருநெறி துரகதமே
லிசைதர நடமிடு மலிபுலி யவர்துணை
யிருபத மதுகதியே, (13)

## காப்பியக்களம்

காப்பிய நிகழ்வுக்களம் அரேபியாவைச் சேர்ந்த சாம்நாடாகும். ஆனால் திருமணிமாலையின் நாட்டுப் படலத்தைப் படிக்கும் போது தமிழ் நாட்டைத் தான் நாம் காண்கின்றோம். தமிழ் மரபையொட்டி ஐந்நில வருணனை மிக அழகாகக் கூறப்பட் டுள்ளது. (43-47)



அறிவுடைச்சான்றோர்கள் அழுக்காறை அகற்றி வாழ்வர். அது போன்று நெல்லோடு சேர்ந்து முளைத்திருந்த களையினைக் களைந்தனர் என்று புலவர் சொல்வது நயம் உடையது (58).

## புதிய போக்கு

இறைத் தொடர்புடைய காப்பியங்களில் காப்பியத் தலைவரின் முன்னோர் மரபு கூறப்படுதல் இயல்பு. ஆனால் இக்காப்பியத்தில் பாட்டுடைத் தலைவரான இபுறாகீம் நபியின் முன்னோர் மரபு கூறப்படவில்லை. மாறாக எதிர்மைத் தலைவனான நமுறூதின் முன்னோர் மரபுச் செய்தி விரிவாகப் பேசப்படுகின்றது. காப்பியத் தொடக்கத்தில் எதிர்மைத் தலைவனை அறிமுகப் படுத்தி விட்டு அதன் பின்னரே காப்பியத் தலைவரை அறிமுகப் படுத்தும் போக்கைக் காப்பியத்தில் காண்கிறோம்.

## காப்பிய நாயகர்

காப்பியத் தலைவர் தன்னிகரில்லாத் தகுதியுடையவராய் விளங்க வேண்டும் என்கின்றது தண்டியலங்காரம்.

இபுறாகீம் நபியின் பிறப்புச்செய்தியை,

"மானமுந் தகையுஞ் செல்வமுந் தயவு
மார்க்கமு மாக்கமுங் கதிரா
யீனமுங் கசடுங் கொடுமை வஞ்சகமு
மிரிதர வறுத்தறுத் தொதுக்கித்
தானமுந் தவமுந் தண்ணளி யுடனே
தடக்கிரி யறையிடஞ் சுவனத்
தானநன் மணியின் விளக்கிபு றாகீ
மாண்டகை மாண்புடன் பிறந்தார். (594)

என்ற பாடலில் தீமைகளை அறுத்து நன்மையினை ஓங்கச்செய்ய நபி இபுறாகீம் தோன்றினார் என்கின்றார் புலவர்.

இறைத் தொடர்பு உடையவராகவும், இறையருள் பெற்ற வராகவும், மீவியல்பு ஆற்றல் மிக்கவராகவும் இபுறாகீம் நபி விளங்குகின்றார்.

இபுறாகீம் நபியின் தனிப்பெரும் ஆற்றலினைக் குறிக்கக் 'காரண' நபி என்று அவரைக் குறித்துள்ளார் புலவர் (383, 469,

538). இபுறாகீம் நபி இறைத்தோழர் (கலீல்) என்னும் சிறப்புப் பெற்றவர்.

"அரியவன்றன் பணியதனா னவனுவந்த தோழனெனுங் கலீல்" (1236).

இபுறாகீம் நபியின் அறப்பண்புகளும் ஓர் இறைக்கொள்கையில் அவர்க்கிருந்த உறுதியும் நூல் முழுவதும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. 'இசுமாயீல் நபியைக் குறுபான் செய்த படல'த்தில் மகனையே இறைவனுக்காகத் தியாகம் செய்யத் துணிந்த இபுறாகீம் நபியின் இறைபக்தியைக் காண்கிறோம்.

**அகம், புறச் செய்திகள்**

நூலில் அகச்செய்திகள் ஆங்காங்கே கூறப்பட்டுள்ளன. கன்ஆன் அரசுரிமைப் படலம், நமுறூது அரசுரிமைப் படலம், மந்திரப் படலம், நமுறூது போர்புரிப் படலம் ஆகிய படலங்களில் போரின் படிநிலைகளைக் காண்கின்றோம். இக்காப்பியத்தில் ஆன்மீக வெளிப்பாடு புறத்தின் ஒரு கூறாக அமைந்துள்ளது.

**கனவு**

கனவுக் காட்சிகள் காப்பியக் கதையோட்டத்திற்குத் துணை செய்கின்றன. கன்ஆன் கண்ட கனவும் (நமுறூது அரசுரிமைப் படலம்) நமுறூது கண்ட கனவும் (நமுறூது கனவு கண்ட படலம்) அவர்களின் அழிவுச் செய்தியை முன்னரே உணர்த்தும் வகையில் இடம்பெற்றுள்ளன. இபுறாகீம் நபி கண்ட கனவு (இசுமாயீல் நபியைக் குறுபான் செய்த படலம்) இறைவனுக்காக எதையும் தியாகம் செய்யும் அவரது உள்ள உறுதியை வெளிப் படுத்த உதவுகிறது.

இவ்வாறாகக் காப்பியச் சிறப்பு மிகுந்து விளங்கும் திருமணி மாலை பொருட்சிறப்பும் ஓசை இனிமையும் உடைய பாக்களைக் கொண்டுள்ளது. மனைவி காஜராவையும் மகன் இஸ்மாயீல் நபியையும் மக்கா நகரில் விட்டுச் செல்லும்போது, 'அனைத்திற்கும் காவலனான நீயே அவர்களையும் காக்கவேண்டும்' என்று இறைவனிடம் இறைஞ்சுகின்றார் இபுறாகீம் நபி. இதனை மிக அழகான பாடலின் மூலம் கூறுகின்றார் புலவர்.

"பொறிகாவல புலன்காவல புகழ்காவல பிசகா
நெறிகாவல செயல்காவல நினைகாவல வைத்தக்



குறிகாவல மனைகாவலக் குடிகாவல வென்ற
னறிகாவல வபயம்பல துயரின்றிய வறிவே." (1598)

இப்பாடலைப் போன்று ஓசையும் பொருளும் சிறந்த பல பாடல்கள் திருமணிமாலையில் செறிந்து காணப்படுகின்றன.

**விருத்தக் காப்பியம்**

தமிழ் இலக்கிய வரலாற்றில் 10-ஆம் நூற்றாண்டிற்குப் பின்பு விருத்தப்பாக்கள் மிகுதியாக வளர்ந்தன. ஜீவக சிந்தாமணி முதலில் விருத்தக்காப்பியமாக அமைந்தது. அதற்கு முன்பு விருத்தம் தோன்றத் தொடங்கிற்று. ஆனால் அதற்குப் பின்பு விருத்தக் காப்பியம் வளர்ந்தன. அந்நிலையில் விருத்தக் காப்பிய மாக 'திருமணிமாலை காப்பியம்' அமைந்துள்ளது. நாற்சீர் விருத்தம் முதல் எண்சீர் விருத்தம்வரை பல விருத்தங்களைக் கொண்டுள்ளது இந்நூல். வஞ்சித்துறைப் பாடல்களும் இடமடைந்து காணப்படுகின்றன. ஒரு பாடல்கூட எதுகை மோனை இல்லாமல் அமைந்த பாடல் இல்லை. ஓசை நயத்தோடு எல்லாப் பாடல்களும் அமைந்துள்ளன. 'சுவாலய மெறிந்த படலத்தில்' வஞ்சித்துறைப் பாடல்களாக 13 பாடல்கள் காணப் படுகின்றன.

ஓசை இனிமைக்கும் பொருள் சிறப்புக்கும் பின்வரும் பாடலைக் காட்டாகத் தரலாம் என்று நினைக்கிறேன்.

அறிவிலங்க வுளமிலங்க மதியிலங்கத் துதியிலங்க
வலர்ந்த வாயும்
வெறியிலங்க மலரிலங்கப் புயமிலங்கக் கொடையிலங்க
விளங்குங் கையுங்
குறியிலங்க விழியிலங்க மதியிலங்க முகமிலங்கக்
கொற்ற வள்ளல்
பொறிவிலங்கிப் பொழிலிலங்குந் தலம்விடுத்து வெளிப்புறத்திற் (1231)
புறப்பட் டாரே.

**ஒப்பாய்வு**

இக்காப்பியத் தலைவரான இபுருகீம் நபியின் வரலாறு திருக்குர்ஆனிலும், பைபிளிலும் காணப்படுகிறது. எனவே இவ்விரு வேத நூற்களோடும் திருமணி மாலையை இயைத்து ஆய்வு செய்ய வேண்டும்.

உலகம் தொடங்கிய நாளில் இருந்து இறைத் தொண்டர்களுக்கும் அந்தக் காலத்தில் வாழ்ந்த மன்னர்களுக்கும் பகைமை உணர்வும், மன்னன் இறைத் தொண்டர்களை மதிக்காமையும், இறைத் தொண்டர்கள் இறைவன் ஆற்றலால் தாங்கள் நிலை நின்றதையும் வரலாற்றில் நாம் பார்க்கிறோம். இபுறாகீமைக் கொடுங்கோலனான நமுறூது கொதிக்கும் கொப்பரையில் தள்ளச் செய்கிறான். அதே போன்று பள்ளம் தோண்டி அதில் விறகுகளை அடுக்கி தீயை உண்டாக்கி தீயில் தள்ளிவிடுகிறான். இறைவன் அருளால் இபுறாகீமுக்கு வெம்தீ நிழலாக அமைகிறது. இந்தக் கதையைப் படிக்கும்போது, நாவுக்கரசர் நினைவு வருகிறது.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

என்ற பாடல் நினைவுக்கு வருகின்றது.

இக்காப்பியத்தின் காப்பியப் பிரிவே, இயற்கையங்காண்டம். செயற்கையங்காண்டம் என மிகச் சிறப்பாகவும் பொருத்தமாகவும் அமைந்துள்ளது. இந்நூல் மிகச் சிறந்த முறையில் வருவது குறித்துப் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். பழம் கவிதை நூல்கள் குறைந்து வருகின்ற இந்தக் காலத்தில் இதைத் துணிவோடு பதிப்பித்து வெளியிடுகின்ற முயற்சியினை மேற்கொண்ட திரு ''ஹஸன்'' அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இதற்குக் கொடை வழங்கிய கொடை வள்ளலையும் நெஞ்சில் நினைந்து போற்றுகிறேன்.

அடுத்த பதிப்பில் இந்நூலை உரையோடு வெளியிட வேண்டும் என அவர்களை வாழ்த்துகிறேன்.

—ச. வே. சுப்பிரமணியன்

—o—

பன்னூலாசிரியர் 'கஷ்ஃபுல் முல்க்' அல்ஹாஜ்
மௌலானா, மௌலவி, பி. எஸ். கே. முஹம்மது இப்ராஹீம் சாஹிபு
அவர்கள் வழங்கும்

# தகவுரை

பரந்து விரிந்து கிடக்கும் இப்பாருலகில் வாழ்ந்து வரும் மனித குலத்திற்கு ஓரிறைக் கொள்கையையும் அந்த ஓர் இறைவனால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட தூய வாழ்க்கை நெறியையும் காட்டி அவர்களை அவ்வழியைப் பின்பற்றி நடக்கச் செய்வதற்காக இவ்வுலகின் எல்லாக் கோணங்களுக்கும் எல்லாச் சமூகத்தார் பாலும் அவனால் தேர்ந்தெடுத்து அனுப்பி வைக்கப்பட்ட மாமக்களைச் சத்திய இஸ்லாம் அன்பியாக்கள், நபிமார்கள் என்று அழைத்து வருகிறது. இந்த உண்மையை 35 : 24, 13 : 8 ஆகிய இரு குர்ஆன் வாக்கியங்களும் நன்கு தெளிவு படுத்தியிருக்கின்றன. இறைவனே அவர்களைத் தேர்ந்தெடுத்துள்ளான் என்பதை அந்தத் திருகுர்ஆன் என்னும் சத்திய வேதம் 6 : 124-ல் உறுதிப் படுத்தி விட்டது. அந்த நபிமார்களில் முதலாமவர் ஆதம்(அலை) அவர்களும் கடைசி நபி, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுமாவர். அந்த இறுதி நபியவர்கள் வருகையோடு இவ்வுலகிற்கு நபிமார்களின் வருகை முற்றுப் பெற்றுவிட்டது என்பது இஸ்லாமியப் பெருங்குடி (சுன்னத்து வல் ஜமா அத்) மக்களின் தொன்று தொட்ட ஒரு முகமான கொள்கை. இக்கொள்கைக்குத் திருகுர்ஆனின் 33 : 40-வது வாக்கியமும் எனக்குப் பின் ஒரு நபியின் வருகை கிடையாது என்னும் நபிமொழியும் ஆதாரங்களாம். இந்த இரு ஆதாரங்களையும் இவை போன்ற இதர ஆதாரங்களையும் மனம் போன போக்கில் வலிந்துரைக்கு உட்படுத்தி அப்பெருமகனாருக்கு பின் வேறு நபி வரலாம் என்றும், வந்திருக்கிறார் என்றும் வாதித்துக் கொண்டிருப்பவர்கள் இஸ்லாமியப் பெருங்குடி மக்களின் பாரம்பரியக் கொள்கைக்கு மாறுபட்ட கொள்கை யுடைவர்களாயிருப்பதால் அவர்களை முஸ்லிம் சமுதாயம் இஸ்லாமியச் சமுதாயத்தை விட்டு ஒதுக்கித் தள்ளி விட்டது. ஆதலால் அவர்கள் கூற்று முஸ்லிம் மக்களிடம் செல்லாக் காசாகி விட்டது.

இவ்வுலகிற்கு இறைவனால் அனுப்பி வைக்கப்பட்ட நபிமார்களில் நபி இப்ராஹீம்(அலை) அவர்கள் தனிச்சிறப்புகள் பல வாய்ந்தவர்களாய் விளங்கி வந்திருக்கிறார்கள். அப்பெருமகனாரை அல்லாஹ் தன் தோழராக்கிக் கொண்டான் எனத் திரு குர்ஆன் 4 : 124-ல்

கூறியிருக்கிறதோடு அத் திருவேதம் 16 : 120, 121, 122 ஆகிய மூன்று வாக்கியங்களிலும் அப்பெருந்தகையார் பத்துத் தனிச் சிறப்புகள் பெற்றிருந்ததாகவும் கூறுகிறது. அவை வருமாறு: 1-மக்களின் தலைமைப் பதவி 2-இறைவனுக்குக் கீழ்ப்படிதல் 3-நேரிய வழி நடத்தல் 4-ஷிர்க்கை (இணைவைத்தலை) மறுத்தல் 5-இறைவன் நன்றி மறவாமை 6-இறைவனால் (தோழமைக்குத்) தேர்தெடுக்கப் படல் 7-இறையின் வழிகாட்டலைப் பெறல் 8-இம்மைப் பேறு பெறல் 9 மறுமையில் நல்லார் இனத்தைச் சேருதல் 10-அப்பெருமகனார் சென்ற சீரிய வழியைப் பின்பற்றி நடக்கும்படி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறைவன் ஆணையிடுதல் (தஃப்சீர் ஜலாலைன்), இவை களில் 8-வது சிறப்பு முக்கியமானது. அது, 'இவ்வுலகிற் காணப்படும் யூத, கிறிஸ்தவ இஸ்லாமிய சமயத்தார்களான முச் சமயத்தாரும் அப்பெருமகனாரின் தலைமையை ஏற்றுக் கொள்வதாம். இன்றைக்கும் அந்த மூன்று சமயத்தார்களும் அம் மாநபியவர்களைப் போற்றி வருகின்றார்கள்.

10-வது சிறப்பு முஸ்லிம்களுக்கே சொந்தமானது. நபி இப்ராஹீம் அவர்கள் நடந்து வந்த சீரிய வழியென்பது ஷிர்க்கில்லாத வழியாம். இதனை 'இப்ராஹீம் நபியின் வழியைப் பின்பற்றுவீர். அவர் முஷ்ரிக்குகளைச் சேர்ந்தவரா யிருக்கவில்லை' என்ற திரு குர்ஆனின் 3 : 95 வாக்கியம் தெளிவுபடுத்தி நிற்கிறது.

உலக சமயத்தார்களில் மூன்று சமயத்தார்கள் அந்நபியவர்களைத் தந்தை என்னும் வாஞ்சையுடன் போற்றி வருகிறார்கள். அப் பெருமகனார் அவர்களைப் போல் பெரும் சமுதாயத்தினரைத் தம் மக்களாகக் கொண்ட ஒரு நபி வேறு எவருமில்லை. ஆதலாலேயே முஸ்லிம்கள் தம் ஐவேளைத் தொழுகைகளிலும் அல்லாஹ்வே! இப்ராஹீம் நபியவர்களுக்கு நீ நல்லாசி வழங்கியது போல் எங்கள் நபி முஹம்மது (ஸல்) அவர்களுக்கு நல்லாசி வழங்கி யருள்வாய். அல்லாஹ்வே! நீ இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு (மக்கள்) பெருக்கத்தை அளித்துள்ளது போல எங்கள் நபி முஹம்மது (ஸல்) அவர்களுக்கும் அப்பெருக்கத்தை அளித்தருள்வாய்' என்ற கருத்துக் கொண்ட ஸலவாத் என்னும் வாழ்த்து மொழியைக் கூறி வருகிறார்கள் போலும்.

''இப்ராஹீம் நபியவர்கள் நமது நபிகள் பிரான் (ஸல்) அவர்களின் மூதாதையாக இருப்பதாலும் அரபு மக்கள் அம் மாநபி யவர்களின் மரபினராக இருப்பதாலும் நம் நபியவர்களையொட்டி முஸ்லிம்களான நமக்கும் அந்நபியவர்கள் தந்தையாகி விடுகிறார்கள்'' என மவ்லானா ஷப்பீர் அஹ்மது உஸ்மானீ (ரஹ்) என்னும் மாமேதை



தமது உர்தூ திருமறை விரிவுரையில் 22:78-வது வாக்கியத்தின் விளக்கக் குறிப்பில் கூறியுள்ளார். ஆதலால் எஞ்சியுள்ள இக் கட்டுரையில் அத்திரு நபியவர்களைச் சொந்தம் பாராட்டி உரிமையோடு நமது தந்தை என்றே குறிப்பிட்டு வருவோம்.

நமது தந்தை இப்ராஹீம் (அலை) அவர்களே அவர்களின் சந்ததியரான நமக்கு முஸ்லிம்கள் என்று பெயர் சூட்டினார்கள். (22: 78) உம்மத்தன் முஸ்லிமத்தன் என்ற நம் சமுதாயத்தை இவ்வுல கிடையே அனுப்பி வைக்கும்படி அல்லாஹ்விடம் வரம் கேட்டார்கள் (2:128). இவை தவிர இவ்வுலக முழுதும் பரவிக் கிடந்த நரபலியை ஒழித்துக் கட்டி அதற்கு ஈடாக மிருக பலி இயக்கத்தை இறையாணைப் படி ஆரம்பித்த அருள் வடிவும் அவர்களே. (37: 102, 103, 104, 105, 106, 107) ஓரிறைக் கொள்கையை உலகிடையே பரவச் செய்து ஷிர்க்கை அழித்தொழிக்க கங்கணங்கட்டி அரசன் தண்டனைக்கும் மக்கள் வெஞ்சினத்திற்கும் இலக்காகி நெருப்புக் குண்டத்தில் தூக்கி எறியப் பட்டுத் தீக்குளித்து வெற்றியுடன் மீண்டு வந்த வீரச் செம்மலும் அவர்களே. நூஹ்நபி கால உலகப் பெரு வெள்ளத்தில் சிதைவுற்கு இலக்கான இறைவனின் ஆதியில்லமாம் கஃபா ஆலயத் தைப் புதுப்பித்து மீண்டும் ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றிச் செல்ல இறையாணைப் படி உலக மக்களுக்கு அழைப்பு விடுத்தவரும் அந்த அண்ணல் நபி அவர்களே (22: 27) இவை தவிர விருந்தோம்பல் என்பது அவர்களின் இயற்கைப் பண்பாக அமைந்திருந்தது உலகப் பிரசித்தம். அதனோடு தர்க்க வாதத்தில் அப்பெருந்தகையார் தமக்குத் தாமே நிகராய் விளங்கி வந்தார்கள். அவர்களிடம் எதிர்வாதம் புரிந்த அரசன் மறு மொழி கொடுக்க இயலாது திண்றித்திக்கு முக்காடினான் (2: 258).

இவ்வுலகில் தோன்றிய நபிமார்கள் ஒவ்வொருவருக்கும் பலம் வாய்ந்த ஒவ்வொரு எதிரி தோன்றி அவர்களின் இயக்கங்களை அவரவர் செல்வாக்கினாலும் செல்வச் செருக்கினாலும் தடைசெய்ய மும்முரமாக முயன்று இறுதியில் தோல்வியுற்று அழிவை அடைந்தனர் என்பது வரலாறு கண்ட உண்மை. அரபு நாடுமுழுவதிலும் தனிச் செல்வாக்குப் பெற்ற அபூஜஹ்லு எம்பிரான் (ஸல்) அவர்களின் ஒரு உறவினனே. அவன் அவர்களின் எதிரியாக இருந்து வந்து இறுதியில் பதுறுப்போரில் வெட்டுப் பட்டுச் செத்தான். மூஸா நபியவர்களின் எதிரியான பிர்அவ்ன் என்னும் கொடுங்கோலன் இறுதியாக நைல்நதியில் தன் பரிவாரத்துடன் மூழ்கி மடிந்தான். நம் தந்தை இப்ராஹீம் நபி அவர் களின் எதிரியான ஒரு பேரரசனின் நாசித்துவாரம் ஒன்றில் கொசு ஒன்று நுழைந்து அவன் அழிவிற்குக் காரணமாயிருந்திருக்கிறது. என் னும் இங்கு கவனத்திற்குரிய விடயம் ஒன்றுண்டு. அது வருமாறு:-

மூஸா (அலை) அவர்களின் திருப்பெயரும் அவர்கள் பற்றிய இதர விபரங்களும் 133 இடங்களிலும் அவர்களின் எதிரியான பிர்அவ்ன் என்பானின பெயரும் இவன் செய்திகளும் 21 இடங்களிலும் அவன் மந்திரி ஹாமானின் பெயரும் செய்திகளும் 6-இடங்களிலும் திருகுர்ஆனில் காணப்படுகின்றன. இப்ராஹீம் நபியவர்களின் திருப்பெயரையும் செய்திகளையும் 69-இடங்களில் குறிப்பிட்ட அவ்வேதம் அப்பெருமகனாரின் எதிரி பெயரை ஒரு இடத்திலாவது குறிப்பிட்டிருக்கக் காணோம். அவனை அம் மாநபியுடன் எதிர் வாதம் புரிந்தவன் என்று மட்டுமே ஓரிடத்தில் அது குறிப்பிட்டிருக்கிறது (2: 258).

சரித்திரங்கள் அவன் பெயரை நம்ரூது என்று குறித்திருக்கின்றன என்றால் அதன் ஆசிரியர்கள் இப்பெயரை எங்கிருந்து தெரிந்து எடுத்தார்கள் என்ற வினா எழுகிறது. இதற்கு அவர்கள் அரபு நாட்டில் பரம்பரையாக வரும் செவிவழி வரலாறுகளிலிருந்தோ விவிலிய வேதத்திலிருந்தோ அப்பெயரை எடுத்தாண்டிருக்கலாம் என்றே விடை காண வேண்டியதிருக்கிறது. அரபு மொழிப் பேரகராதியான அல்முன்ஜிதிலும் இப்பெயர் காணப்படவில்லை. அது அரபு அல்லாத வேறு மொழிச் சொல்லாக இருப்பதால் திசைச் சொல்லாக அரபு மொழிப் புழக்கத்தில் இடம் பெற்றிருக்கிறது. ஆதலால் அரபு மொழி அகராதியில் அது இடம் பெறாதிருந்து வரலாம் போலும்.

பிர்அவ்ன் என்னும் வார்த்தை அரபுப் பேரகராதியில் இடம் பெற்றிருக்கிறது. அரபு மக்கள் எகிப்திய மன்னர்களை அப்பெயராலே அழைத்து வந்திருக்கின்றனர். ஆதலால் அது அரபுச் சொல்லே. அது 'பர்அன' என்னும் இறந்த காலவினைச் சொல்லிலிருந்து பிறந்தது. அதன் பொருள் வரம்பு மீறியவன் என்பதாம் என அவ் அகராதி கூறுகிறது. எது எவ்வாறிருந்தாலும் அக்கொடுங்கோலன் பெயரை திருகுர்ஆன் குறிப்பிடாததன் காரணம் எம் சிற்றறிவிற்கு எட்டவில்லை. அது தவிர அவன் பெயர் நம்ரூதா நும்ரூதா என்பதும் தெளிவாகவில்லை. திருமணி மாலையின் ஆசிரியர் அதை அவ்விரு விதமாகவும் அம்மாலையில் உச்சரித்துள்ளார். மேலும் நம்ரூது என்னும் பெயரின் ஈற்றெழுத்து தாலா அல்லது புள்ளியுள்ள தாலா எனில் ஜலாலேன் என்னும் நூலின் எகிப்துப் பதிப்பு மூலம் அது புள்ளியுள்ள தாலாகவே காணக் கிடக்கிறது.

நம் சமுதாயத் தந்தையாகவும் நம்மை இவ்வுலகில் தோற்றுவித்தருளும் படி இறைவனிடம் வரங் கேட்டவர்களாகவும் விளங்கி வந்த மாநபி இப்ராஹீம் (அலை) அவர்களின் புனித வரலாற்றைத் தெரிந்து வைப்பது அன்னாரின் சந்ததியர்களான நம்மவருக்கு மிக அவசியமானதாம். இதை மனதிற்கொண்ட காயற்பட்டின ஆலிம்கள் என்னும் அரபு மொழி வல்லுனர் மூவர் கூடி இச்சரிதை உருவாக்க முயன்றிருக்



கின்றனர். அவர்களில் ஒருவரான நத்தர் சாகிபு ஆலிம் என் ார் நம் தந்தையவர்களின் வரலாறுகளைப் பல அரபு மொழி நூற்களிலிருந்து தேடி எடுத்து ஒன்று சேர்த்து இரண்டாமவரான அபூபக்கர் லெப்பை ஆலிம் என்பாரிடம் சேர்க்க, அவர் அதை நன்கு ஆய்ந்து முறையாகத் தொகுத்து மூன்றுமவரிடம் சேர்த்து வைத்திருக்கிறார். மூன்றுமவரோடு ஷைகு அப்துல் காதிர் நைனா லெப்பை ஆலிம் புலவர் என்னும் அரபு, வடமொழி, தமிழ் ஆகிய மும்மொழி வல்லுனரான பெரும் புலவர் அவ்வரலாற்றை சொன்னயம் பொருணயம், யாப்பு நயம் மிக்கத் தமக்கே உரிய கற்பனை நயத்துடன் 1908 கவிகளாகப் புனைந்து திருமணி மாலை என்ற பெயரால் ஹிஜ்ரி 1231-ம் ஆண்டு (கி. பி. 1815) ஷவ்வால் மாதம் 14-ம் தேதி நிறைவு செய்துள்ளார்.

இப்பொழுது ஹிஜ்ரி ஆண்டு 1404 ஆகிறது. இந்த நீண்ட இடைவெளியில் அந்நூல் ஒரு முறையே (ஹி. 1290 கி.பி. 1873) அச்சாகியிருக்கிறது. ஆதலால் அதன் பிரதிகள் இப்பொழுது கிடைப்பது அரிதினும் அரிதாக இருக்கிறது. இஸ்லாமியப் பழைய இலக்கியங்களை அச்சிட்டு வெளியாக்குவதில் பேரார்வங்கொண்ட நம் சகோதர அறிஞர் சைய்யிது முஹம்மது ஹஸன் அவர்கள் தேடித் துருவி அந்நூலின் பழைய பிரதி யொன்றைப் பெறுவதில் வெற்றி பெற்று அதையே முன்மாதிரியாகக் கொண்டு அந்நூலை அழகாக அச்சிட்டு வெளியாக்கி மன நிறைவடைந்துள்ளார். அதன் ஒவ்வொரு செய்யுளிலும் அடங்கியுள்ள கருத்துச் சுருக்கத்தை அச்செய்யுளின் தலைப்பாகக் கொடுத்திருப்பது அச்செய்யுளின் கருத்துக்களை எளிதாகப் புரிந்து கொள்ள வசதியாய் அமைந்திருக்கிறது.

இத் திருமணி மாலை இஸ்லாமிய சமூகத்தாரின் தந்தையான இப்ராஹீம் நபியவர்களின் வரலாற்று நூலாயமைந்திருப்பதால் பண்டிதரும் பாமரரும் படித்துப் பயனடையும் முறையில் சீறுப்புராணத்திற்கு கவிஞர் திலகம் கலை மாமணி கா. மு. ஷரீப் அவர்கள் தந்து வருவது போல ஓர் தமிழுரை தரப்பட்டால் மக்கள் அதன் மூலம் அடையும் பலன் மிகப் பெரிதாயிருக்கும். அவ்வாறு அந்த மாலைக்கு ஒரு சிறந்தவுரை விரைவில் வெளிவர இறைவன் அருள் புரிவானாக!

எல்லாம் வல்ல அல்லாஹ் நமது சகோதர அறிஞர் சையது முஹம்மது ஹஸன் அவர்களுக்கு அவர் தம் ஆர்வத்திற்குத் தக்கவாறு இஸ்லாமியத் தமிழ் இலக்கியச் சேவை செய்யும் அரிய வாய்ப்பு பல அளித்து அவைகளுக்குரிய இம்மை மறுமை ஆகிய இரு நற்பேறுகளையும் குன்றாது குறையாது கொடுத்தருள்வானாக! ஆமீன்!

—பி. எஸ். கே. முஹம்மது இபுராஹீம்

முஸ்லிம் தமிழ்க் கவிஞர் மன்றத் தலைவரும்,
இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் தலைவரும் சீறப்புராண
உரையாசிரியரும் ஆன கலைமாமணி,
டாக்டர், கவி கா. மு. ஷெரீப் அவர்கள் வழங்கிய

## வாழ்த்துப்பா

புலவர்களின் நாயகமாய்ப்
புவிபோற்றும் ஞானியுமாய்ச்
சமயந் தோறும்
புகுந்தறிந்த மேதையராய்ப்
புகலரிய கவிமணியாய்
இஸ்லாம் மார்க்க

நலவுடைய ஆலிமுமாய்
காரிமுப்தி ஹாபிசென்னும்
நயக்கும் பட்டம்
எவையுண்டோ அவையனைத்தும்
பெற்றரபிப் பண்டிதராய்
இலங்கி யிந்த

நிலவுலகு வியக்கப்பல
காப்பியங்கள் படைத்தளித்துக்
கற்றோர் போற்ற
நிலையான தமிழ்த்தொண்டும்
நிகரில்லாத் தீன்சமயத்
தொண்டும் செய்த

மலைவில்லாப் பேரறிஞர்
ஷெய்கப்துல் காதிர்நயி
ஞலெப் பையென்(று)
அறையுமுயர்ப் பெயர்கொண்ட
காயல்நகர் யீந்திட்ட
கவிதைக் கொண்டல் (1)



காவியங்கள் செய்ததல்லால்
கவிமழைகள் பொழிந்ததல்லால்
சீறு போன்ற
கவின்மிகுந்த நூற்பதிக்க
ஊருராய்ச் சென்றேடு
தேடிப் பெற்று

மேவுமதன் பிழைதிருத்தி
ஷரகுநெறி வழுவின்றி
அச்சி லேற்றிப்
பிற்காலச் சாமிநாத
ஐயருக்கு வழிகாட்டி
யாய்த்து லங்கி

ஆவலுடன் தமிழ்த்தொண்டு
செய்திட்ட இவர்பெருமை
நவிலப் போமோ
அருஞானி யானகுணங்
குடியார்தம் முடன்கல்வி
கற்ற தல்லால்

நாவினிக்க அவர்பாட்டை
நாம்படிக்கச் சரிபார்த்துத்
தரவும் செய்தார்
நட்பினுக்கோர் இலக்கணமாய்
அவரடங்கி உளஇடத்தில்
அடங்கி யுள்ளார் (2)

இவ்வரிய மாகவிஞர்
நாவிருந்து பிறந்திட்ட
எழிலின் மிக்க
இன்கவிதை காலிலட்ச
மாகுமிவர் காப்பியமாய்
நான்கு செய்தார்

அவ்வரிய காப்பியங்கள்
தம்மிலொன்றும் திருமணிமா
லையென் றோதும்
அணிநயமும் பொருள்நயமும்
கவிநயமும் ஆர்த்திலங்கும்
இன்நன் நூலாம்

செவ்வையுடன் இன்நூலைக்
கற்றவர்கள் செப்பிடுவர்
இதனை யொப்ப
செழியதமிழ் நூல்வேறொன்(று)
இல்லையிஃது முற்றும்மெய்
மெய்யா மென்றே

பௌவியமாய் யானுமெடுத்(து)
இசைத்திடுவேன் பாஅமைப்பில்
கருத்தில் சொல்லில்
பன்நயஞ்சேர் திருமணிமா
லைக்குநிகர் பகரவொரு
பனுவ லில்லை! (3)



இத்தகுசீர்ச் சிறப்புடைய
இன்தமிழ்ச்சா(று) ஆனஇன்நூல்
ஏற்றம் மிக்க
இபுறாஹீம் நபியுடைய
வரலாற்றை எடுத்தியம்பும்
இனிய நூலாம்

மெத்தஉயர் வானஇன்நூல்
விரும்பித்தேடி அலைந்திடினும்
கிடைப்ப தில்லை
வெகுகால நிலைமையிதாம்
எனினுமிதை வெளிக்கொணர
நினைத்தோ ரில்லை

அத்தகுவன் நிலைமாறி
யாவருக்கும் எளிதாக
இந்நூல் கிட்ட
அவாவுற்றோர் 'ஹஸன்' என்பார்
ஆதரித்து வெளிக்கொணர்ந்தார்
கூத்தா நல்லூர்

உத்தமராம் உயர்ந்தவராம்
பலநூற்கள் வெளிவருதற்(கு)
உதவி நிற்கும்
உதாரகுணச் செழும்வள்ளல்
அவ்ராத்தர் குலத்துதித்த
ஆன்ற சீலர் (4)

ஹாஜிஏவி எம்ஜாபர்
தீனென்னும் அழகுமிளிர்
நாமத் தாரே
இவராலே இந்நூலே
யாம்படித்தின் புறலானோம்
இன்று நன்றே

வாசிப்பார் தமிழறிந்த
யாவருமே எளிதாக
இனிஇந் நூலே
''மானிடரைக் கல்வியின்பால்
ஆட்படுத்தும் நற்செயல்போல்
பிரிதொன் றில்லே

தேசத்தீர் கற்றிடுவீர்
கல்விதனைப் போதிப்பீர்
கற்றி டற்கு
முடிந்தவரை உதவிடுவீர்''
எனஉரைத்தார் திருநபியார்
இனிய வாயால்

தேசமுடன் அவர்சொல்லே
நிறைவேற்றும் ஜாபர்தீன்
நினைப்பு வெல்க
நினைப்பதற்கும் மேலாக
அன்னருக்(கு) இறையருள்க
நெடிது வாழ்க! (5)

—கவி கா. மு. ஷெரீப்

# பதிப்புரை

இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் மறைந்து போகாமல் கண்டு பிடிக்கப் பட்டு காப்பாற்றப் படவேண்டும்; அவை மீண்டும் அச்சிடப் பெற்று தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்கப் படவேண்டும் என்னும் ஆர்வத்திஞல் உந்தப் பெற்றவர்களுள் நானும் ஒருவன். அம்முயற்சியில் எனக்கு ஓரளவு வெற்றியை வழங்கியுள்ள வல்ல அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகிறேன்.

ஒன்றரை நூற்றுண்டுகளுக்கு முன்பே இத்துறையில் நமக்கெல்லாம் வழிகாட்டியாக விளங்கி—ஏன், தமிழ் நூல் பதிப்பாளர்கள் எல்லோருக்குமே முன்னோடியாகச் செயல் பட்டு—தமிழில் அச்சிடப்பட்ட முதற்பெருங்காப்பியமாக உமறுப் புலவரின் சீருப்புராணத்தைப் பதிப்பித்து அச்சியற்றித் தந்தனர், புலவர் நாயகம் செய்கு அப்துல் காதிர் நெயினார் லெப்பை ஆலிம் அவர்கள். அவர்கள் தாமே நான்கு பெரும் காப்பியங்களைப் படைத்திருந்தும் அவற்றுள் எதனையும் அச்சிடாமல் சீறுவையும் அவர்கள் தம் பள்ளித் தோழர் குணங்குடி மஸ்தான் சாஹிபு அவர்களின் திருப்பாடல் திரட்டையும் அச்சிடுவதையே தலையாய பணியாகக் கருதினர். அவர்கள் இயற்றியவைகளுள் ''நாகையந்தாதி'' எனும் சிற்றிலக்கியம் மட்டுமே அவர்களால் அச்சியற்றப் பெற்றது. மேலும் காசிம் புலவரின் ''திருப்புகழ்'' மின்னு நூருத்தீன் புலவரின் ''பொன்னரிய மாலே'' போன்ற சிறந்த நூல்கள் பலவற்றின் கையேட்டுப் பிரதிகளை புலவர் நாயகமவர்கள் பார்வையிட்டு செப்பனிட்டு வைத்திருந்ததாகவும் அவற்றைப் பார்த்தே தாங்கள் அந்நூல்களை அச்சிட்டதாகவும் அவற்றின் பதிப்பாசிரியர்கள் சான்று பகர்ந்துள்ளனர்.

புலவர் நாயகம் அவர்களின் மறைவுக்குப் பிறகே அவர்களின் நான்கு காப்பியங்களும் அச்சிடப் பெற்றன. குத்புநாயகம் என்னும் முகியித்தீன் புராணம் 1853-ஆம் ஆண்டிலும் திருக்காரணப் புராணம் 1863-லும் திருமணிமாலே 1873-லும் புதூகுச் சாம் 1860-லும் முதன் முறையாக அச்சேறின. மேற் சொன்னவற்றுள் குத்புநாயகம் மட்டுமே இரண்டாம் முறையாக 1903-ஆம் ஆண்டில் அச்சிடப் பட்டது. அதன் மூன்றும் பதிப்பு சென்ற ஆண்டில் கூத்தாநல்லூரா கொடைவள்ளல் ஜனுப் A V M. முஹம்மது இப்ராஹீம் ஹாஜியார் அவர்கள் உதவியுடன் அதிரைப் பேராசிரியர் ஜனுப் மு. அப்துல் கறீம் M. A. அவர்களால் பதிப்பிக்கப் பெற்று அச்சிடப்பட்டது.

1979-ஆம் ஆண்டில் இலங்கை கொழும்பு நகரில் நடைபெற்ற நான்காம் - இஸ்லாமியத் தமிழிலக்கிய ஆராய்ச்சி மாநாட்டின்

சிறப்புப் பணிகளுள் ஒன்றாக புத்தூகுஷ்ஷாம் காப்பியம், பகுதி பகுதியாக உரையுடன் வெளியிடப் பட்டு வருகிறது. 6787 பாடல்களைக் கொண்ட இம்மாபெருங் காப்பியம் ஏழு தொகுதி களாகப் பிரிக்கப் பட்டு அவற்றுள் இதுவரை நான்கு தொகுதிகள் மட்டும் வெளிவந்துள்ளன.

எஞ்சியுள்ள இரு காப்பியங்களுள் ஒன்றான இந்தத் திருமணி மாலையின் பிரதி எதுவும் நீண்ட காலம் முயன்றும் எனக்குக் கிடைக்காமலேயே இருந்தது. இலக்கிய ஆர்வலர்களான மூன்று நண்பர்களிடம் மட்டுமே அதன் படிகள் இருப்பதாக அறிந்தேன்.

இந்நிலையில் என் குடும்ப நண்பர் ஒருவரிடம் இந்நூலைப் பற்றிக் குறிப்பிட்டு அது எங்காவது கிடைத்தால் பெற்றுத்தரும் படி கோரியிருந்தேன். நான் அவ்வாறு கேட்டுக் கொண்டதற்குப் பின் ஈராண்டுகள் கழிந்தன. அப்போதுதான் அந்த அற்புத நிகழ்ச்சி நடந்தது!

என் ஊருக்குச் சென்ற போது அந்த நண்பரின் வீட்டுக்குப் போய்ப் பேசிக் கொண்டிருந்தேன். நண்பர் அவர்தம் இல்லத்தில் நடந்த அந்த சம்பவத்தை விவரித்தார்.

அவருடைய வீட்டில் கிடந்த பழைய நூல்களையும் காகிதங் களையும், கறையான், கரப்பான் பூச்சி, எலி முதலானவை பாழடித்துக் கொண்டிருந்தன. அவற்றைக் காப்பாற்ற வகை எதுவும் அறியாத நிலையில் என் நண்பரின் மனைவியார் ஒரு நாள் ஒரு கூடை நிறைய அவற்றை வாரி எடுத்து அடுப்பங்கரையில் வைத்துக் கொஞ்சம் கொஞ்சமாக அக்காகிதங்களை அடுப்பெரிக்கப் பயன் படுத்திக் கொண்டிருந்தார். எல்லாம் முடிந்து விட்டது. கூடையின் அடியில் கடைசியாக ஒரு புத்தகம் கிடந்தது. அதையும் அடுப்பில் போடு முன்பாகக் கையில் எடுத்து அட்டையைப் புரட்டிய சமயம், மனைவியிடம் ஏதோ செய்திகேட்பதற்காக என் நண்பர் சமலயலறையினுள் நுழைந்தார். தம் மனைவியின் கையில் ஒரு நூல் அடுப்பினுள் திணிக்கப் படுவதற்குத் தயாராக இருந்த தைக் கண்டு ''அதை இங்கே கொடு,'' என்று வாங்கிப் பார்த்தார். உடனே ''நல்ல வேளை! இதை அடுப்பில் போட வேண்டாம். இதைத்தான் நம் செய்யது முகம்மது அண்ணன் தேடிக் கொண்டிருந்தார்!'' என்று கூறி, அதை எடுத்துவைத்திருந்தார். இந்நிகழ்ச்சியை என் நண்பர் சாதாரணமாகத்தான் கூறி என்னிடம் நூலைக் கொணர்ந்து தந்தார். ஆவலோடு வாங்கி நூலைப் புரட்டிப் பார்த்தேன். முழுமையான நூலாக இருந்தது.

நபி பெருமகனார் இப்றாஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் வாழ்க்கை வரலாறுதான் திருமணி மாலை. அவர்கள் தம் வாழ்வில் அவர்களை இறைவன் நெருப்புக் குண்டத்திலிருந்து காப்பாற்றியது ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். அந்நிகழ்ச்சி இக்காப்பியத்தின்



21-ஆவதான ''சுவாலய மெறிந்த படலத்''தில் மிகச் சிறப்பாக வர்ணிக்கப் பெற்றுள்ளது. திருமறையில் இறைவன், இதனை,

''அதற்கவர்கள் (தங்கள் மனிதர்களை நோக்கி) நீங்கள் ஏதும் செய்வதாயிருந்தால், இவரை நெருப்பில் எரித்து உங்கள் தெய்வங்களுக்காகப் பழிவாங்குங்கள் என்று கூறினார்கள்.

(அவ்வாறே அவர்கள் இப்ராஹீமை நெருப்புக் கிடங்கில் எறியவே, நெருப்பை நோக்கி) ''நெருப்பே, இப்ராஹீமுக்குச் சுகந்தரக் கூடிய விதத்தில் நீ குளிர்ந்து விடு!'' என்று நாம் கூறினோம்.

அவர்கள் இப்ராஹீமுக்குத் தீங்கிழைக்கக் கருதினார்கள். எனினும் நாம் அவர்களையே நஷ்டமடைந்தவர்களாகச் செய்து விட்டோம்.''

என்னும் வசனங்களில் (21:68-70) நமக்கு உணர்த்துகிறான்.

அந்நூலைக் காப்பாற்றியது எப்படி என்று நண்பர் கூறி அதனைத் தந்த போது நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் திருவாழ்வில் நடந்த அந்நிகழ்ச்சிதான் சட்டென என் நினைவுக்கு வந்தது. எனக்குப் புல்லரித்தது! ''நபியவர்களை நெருப்பிலிருந்து அல்லாஹ் காப்பாற்றினான். இப்போது அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூலைக்கூட நெருப்பிலிருந்து காப்பாற்றி என் கைக்குக் கிடைக்கும்படி இறைவன் செய்திருக்கிறானே! இது என் முயற்சி யால் அச்சாகி வெளிவர வேண்டுமென்பது இறைவனின் நாட்டம் போலும்!'' என்று நினைத்து அல்லாஹ்வுக்கு நன்றி கூறினேன்.

இதை அச்சிட்டு வெளியிடும் வாய்ப்பினை நான் சென்ற மூன்றாண்டுகளாக எதிர்பார்த்திருந்தேன். சென்ற ஆண்டில் ஒரு நாள் நண்பர் ஹாஜி A.V M ஜாபர்தீன் அவர்களிடம் இந்நூல் பற்றிக் கூறி, அதன் பழைய பிரதி எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தையும் விளக்கினேன். அதைக் கேட்டவுடன் ஜனாப் ஜாபர்தீன் ஹாஜியார் அவர்களும் மெய்சிலிர்த்தவர்களாக அதனை அச்சிடும் வேலையை உடனே துவக்கும்படி என்னிடம் கூறினார்கள். அவர்கள் அண்மையில் நிறுவியுள்ள ''ஏ.வி.எம். ஜாபர்தீன்-நூர்ஜஹான் ட்ரஸ்ட்''டின் முதற்பணியாக இது இருக் கலாம் என்று நான் கூறிய யோசனையையும் அன்புடன் ஏற்றுக் கொண்டார்கள்.

மேற்சொன்ன அறக்கட்டளையின் அடுத்த பணியும் இங்கு குறிப்பிடத் தகுந்ததாகும். சென்னையிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஆய்வுச் சொற்பொழிவுகள் பலவற்றிற்கான ஏற் பாடுகளைச் செய்துள்ளனர். மாதம் ஒன்றாக நடைபெறும் அச்சொற் பொழிவுகள் உடனே நூலுருவிலும் வெளியிடப்படுகின்றன.

அவற்றுள் இஸ்லாமியத் தமிழிலக்கியம் சம்பந்தப்பட்ட மூன்று சொற்பொழிவுகளுக்கு அந்நிறுவனம் இடம் தந்துள்ளது. சீதக்காதி அறக்கட்டளையின் சார்பில் "இஸ்லாமும் தமிழும்" என்ற பொதுத் தலைப்பிலும், ஏவி. எம். ஜாபர்தீன்-நூர்ஜஹான் ட்ரஸ்ட் சார்பில், "இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங்கள்" என்னும் பொதுத் தலைப்பிலும், சதாவதானி செய்குத் தம்பிப் பாவலர் அவர்களின் நினைவுப் பணிக் குழுவின் சார்பில் "இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்களும் சூபி இலக்கியங்களும்" என்னும் தலைப்பிலும் ஆண்டு தோறும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெறும். அவற்றிற்குரிய நிதிகள் மேற் சொன்ன மூன்று அமைப்புகளாலும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திடம் சேர்ப்பிக்கப்பட்டுள்ளன.

1984 ஜனவரித் திங்களில் சீதக்காதி அறக்கட்டளை சார்பில் "இஸ்லாம் வளர்த்த தமிழ்" என்னும் தலைப்பில் பேரறிஞர் டாக்டர் எம். எம். உவைஸ் அவர்களால் சொற்பொழிவு நிகழ்த்தப் பெற்று நூலும் வெளிவந்துள்ளது.

ஏவி. எம். ஜாபர்தீன்-நூர்ஜஹான் ட்ரஸ்ட் சார்பில் "இராஜ நாயகம்" காப்பியம் பற்றிய ஆய்வுச் சொற் பொழிவை சென்னை உயர்நீதி மன்ற முன்னாள் தலைமை நீதிபதி டாக்டர் எம். எம். இஸ்மாயீல் அவர்கள் 1984 ஜுலைத் திங்களில் நடத்த விருக்கிறார்கள்.

அல்ஹாஜ் ஏவி. எம். ஜாபர்தீன் அவர்களும், பெரு மதிப்பிற் குரிய அவர்கள் தந்தையாரும், சகோதரரும் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும், பெரிதும் துணைபுரிந்து வருகிறார்கள். அவர்களைப் போலவே மற்றுமுள்ள இஸ்லாமியச் செல்வர்களும் பெருமனங் கொண்டு செயலாற்றினால் நமது இஸ்லாமியத் தமிழ் இலக்கியச் செல்வங்கள் எவ்வளவு உயர்ந் தவை, மிகுந்தவை என்று உலகறியச் செய்து கொண்டே இருக்கலாம்.

"திருமணி மாலை ஒரு முற்றுப் பெறாத காப்பியம்" என்று சிலர் கூறுவதுண்டு. அவர்கள் அந்த முடிவுக்கு வரக்காரணம், காப்பியத்தின் இறுதியில் "திருமணிமாலை புலவரவர்கள் பாடிய வரைக்கு முற்றிற்று" என்றிருப்பது ஒன்று. மற்றொரு காரணம் நூல் முழுவதுமே "முதலாவது செயற்கையங் காண்டம்" என்ற ஒரே தலைப்பில் அச்சிடப்பட்டுள்ளதுமாகும்.

கி. பி. 1842-ல் புலவர் நாயகமவர்கள் சீறாப்புராணத்தை அச்சிட்டு அதன் முடிவில் "கிசுறத்துக் காண்ட மும்மறுப்புலவ ரவர்கள் பாடியதளவு முற்றுப் பெற்றது" எனக் குறிப்பிட்டுள் ளார்கள். அதைப் பொறுத்த வரையில் அக்குறிப்பு சரியானதே யாகும். ஆனால் அம்முறையினை அப்படியே பின்பற்றி, "புலவ ரவர்கள் பாடிய வரைக்கும் முற்றுப்பெற்றது" என்று முடிவுரை யாக அச்சிடும் வழக்கத்தை பதிப்பாசிரியர்கள் சிலர் மேற்கொண்டு



வந்துள்ளனர். இஃதேயன்றி நபி இப்றுஹீம் (அலை) அவர்களின் வரலாறு இக்காப்பியத்தில் முழுமையாகவே உள்ளது. தந்தை இபுறுஹீம் நபியும் தனையர் இஸ்மாயீல் நபியும் சேர்ந்து "கஃபதுல்லா இயற்றிய" படலத்தோடு காப்பியம் முடிகிறது.

இரண்டாவதான காண்டப் பெயரைப் பொறுத்த வரையில் அதன் பதிப்பாசிரியர் சற்று கவனமின்றியே நூல் முழுவதையும் செயற்கையங்காண்டம் என்ற தலைப்பில் அச்சிட்டுள்ளார் என்றே தோன்றுகிறது.

"நபி முகம்மது சல்லல்லாகு அலைகியோ சல்லமவர்கள் இயற் கையுஞ் செயற்கையுமாகிய சீறா வென்கிற புராணம்" என்றே புலவர் நாயகம் சீறாவின் தொடக்கத்தில் அச்சிட்டுள்ளனர். அதே போல "நபி இபுறுகீம் கலீலுல்லா அவர்களுடைய இயற்கையுஞ் செயற்கையுமாகிய திருமணிமாலை" என்றே இந்நூலின் முதற் பதிப்பின் தொடக்கத்திலும் காணப்படுகிறது.

இவ்வாறு குறிப்பிடப்படும் இயற்கை என்பதும் செயற்கை என்பதும் என்னவென்று பார்ப்போம். இச்சொற்களுக்கு இன்று பொதுவாக உணரப்படும் பொருள் இங்கு பொருந்தாது. இயற்கை என்பது அப்பாத்திரத்தின் இயல்பான குணநலன்கள் பற்றிப் பேசுவதாகும். செயற்கை என்பது அப்பாத்திரத்தின் செயல்களைக் குறிக்கும். முன்னதை Character என்னும் ஆங்கிலச் சொல்லுக்கும் பிந்தியதை Conduct அல்லது Exploits (வீரச் செயல்கள்) என்னும் ஆங்கிலச் சொல்லுக்கும் நேராகக் கொள்ளலாம். ராமாயணம் என்னும் நூற்பெயர் ராம + அயன எனும் சொற்களின் கூட் டாகும். அயன என்பதற்கு மேற் சொன்ன "செயற்கை" என்பதோ அல்லது 'நடத்தை" என்பதோ பொருத்தமான பொரு ளாகும்.

திருமணி மாலையிலும் நபி இப்றுஹீம் (அலை) அவர்களின் வாழ்க்கையை இரு பகுதிகளாகப் பிரித்துக் காணலாம். நபி யவர்கள் நெருப்புக் குண்டத்தில் வீசப்பட்ட போது கூட அவர் களின் வயது பதினாறுதான். அதனையடுத்து நமுறூது போர் புரிந்ததும், நமுறூது அழிவுண்டதும் சிறுவரான இபுறகீம் நபிய வர்களின் சுய முயற்சி அதிகமின்றி இறைவனுதவி கொண்டு அற்புத நிகழ்வுகளாகவே நடை பெற்று முடிகின்றன. எனவே அதுவரையிலுள்ள பகுதியே "இயற்கையங் காண்ட"மாக கொள்ளப் பட வேண்டும். அதன் பிறகு 24-ஆவதான கடிமணப் படலத்திலிருந்து அவர்கள் யுக்த வயதினையடைந்து முழுமனிதராகி நகர் நீங்கி, இஸ்லாம் மார்க்கத்தினைப் பிரசாரம் செய்யப் புறப் பட்டதும் அதன் தொடரான நிகழ்ச்சிகளும் வருகின்றன. இவையே செயற்கையங் காண்டத்தில் இடம்பெறக் கூடிய நிகழ்ச்சி களாவதால் கடிமணப் படலத்திலிருந்து இரண்டாவதான செயற் கையங் காண்டமாக இப்பதிப்பில் கொள்ளப்பட்டுள்ளது.

இக்காப்பியத்தின் முதற் பதிப்பில் 20 ஆம் படலம் ''காமாத் தாக்கிய படலம்'' என்றே குறிப்பிடப் பட்டுள்ளது. இது பிழை யெனத் தெளிவாகத் தெரிகிறது. ''காமரத்தாக்கிய படலம்'' என்றே இருத்தல் வேண்டும். முற்காலத்தில் 'கால்' (ா) எழுத் துக்கும் 'ர'வுக்கும் வேறு பாடின்றியே எழுதி வந்தனர். 'காடு' என்பதும் 'கரடு' என்பதும் 'காடு' என்றே எழுதப்பட்டன. படிப் பவர்கள் சந்தர்ப்பம் தெரிந்து படிக்க வேண்டும். நன்கு கற்றவர் களே இந்த வேற்றுமையை உணர முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு அத்தகையோரை ''காடு, கரடு பார்த்து வாசிக்கத் தெரிந்தவர்'' எனக்குறிப்பிடும் சொல் வழக்கு முன்பு தமிழகத்தில் இருந்து வந்துள்ளது. இந்தப் படலத்தில் 'காமா' எனப் பெயர் கொண்ட எவரும் எதையும் தாக்கவில்லை. நபி இபுறுஹீம் (அலை) அவர்கள் நெருப்புக் குண்டத்தில் எறியப்படுமுன் நெருப்பு உலை ஒன்றில் இருத்தப் பட்டனர். காமரம் என்றால் அடுப்பு அல்லது உலை என்று பொருள். அப்படலத்தின் 57-ஆம் பாடலிலேயே இந்த ''காமரம்'' என்ற சொல் இடம் பெற்றுள்ளது.

''கொன்னிலை காமரத்திற் கொழுந்தழ னிரைத்து முன்னர்
சொன்னிலை யென்ன வைத்தா ரவருளஞ் சுடுதற் கன்றே''

என்று வருகிறது. நெருப்பு சுட மறுத்தது. நபியவர்கள் மீண்டும் சிறையிலிடப் பட்டனர். எனவே காமரத்து + ஆக்கிய படலம் என்று கொண்டுள்ளேன்.

அடுத்து வரும் படலத்தின் தலைப்பு சுபாலயமெறிந்த படலம் என்றுள்ளது. அத்தலைப்பும் பொருத்தமற்றதாகப் படுகிறது. வ, ப என்னும் இரு எழுத்துக்களையும் அதிக வேற்றுமையில்லாத வகையில் எழுதும் வழக்கம் சிலரிடையே இருப்பதுண்டு. வட மொழியிலும் வல்லுநரான புலவர் நாயகம் அவர்கள் ஜ்வால் + அயம் என்னும் இரு வடமொழிச் சொற்கள் கொண்டு ''சுவாலயம்'' என்ற சொல்லை ''தீ கொழுந்து விட்டெரியும் குண்டம்'' என்னும் பொருளில் உருவாக்கியுள்ளனர் எனத் தோன்றியது. எனவே தான் சுபாலயமெறிந்த படலம் எனும் தலைப்பை ''சுவாலய மெறிந்த படலம்'' என மாற்றினேன்.

கலீபத்துல்லா வியற்றிய படலத்தில் கஃபாவினை அமைக்க ஐந்து மலைகளில் நின்றும் நபி இசுமாயீல் (அலை) அவர்கள் கல் எடுத்து தம் தந்தையார் இப்றுஹீம் நபி (அலை) அவர்களிடம் கொடுத்த செய்தி பேசப்படுகிறது. அதன் 40-ஆம் பாடலில் ''திணிகொள் சைத்தா னெனுந் திகிரி வண்சிலை'' என்று பதிப் பிக்கப் பட்டுள்ளது. தமிழில் வெளிவந்துள்ள ''கசசுல் அன்பியா'' நூலில் அது ''சைத்தூன் மலை'' எனக் காணப்படுகிறது. கசசுல் அன்பியாவின் அரபி மூல நூலிலோ அதன் பெயர் ''சைத்தா'' என்றே காணப்படுகிறது. எனவே ''சைத்தா னெனுந்'' என்று முதற்பதிப்பில் இருப்பதை ''சைத்தா வெனுந்'' என மாற்றி யுள்ளேன்.



இந்நூலில் காணப்படும் மற்றொரு வியப்புக்குரிய அம்சம் இதில் திசைச் சொற்கள் (அரபி, பார்சி மொழிச் சொற்கள்) விரல் விட்டெண்ணக் கூடிய வகையில் மிக மிகக் குறைவாக இடம் பெற் றிருப்பதாகும், இதனைப் புலவர் நாயகம் அவர்களின் சாதனை என்றே குறிப்பிடலாம். எந்தவொரு இஸ்லாமியத் தமிழ் இலக் கியத்தை எடுத்துக் கொண்டாலும், அது சிற்றிலக்கியமேயானா லும், அதில் நூற்றுக் கணக்கான அரபி, பார்சிச் சொற்கள் காணப் படுவதுண்டு. கதாபாத்திரங்களின் பெயர்களை விட்டுவிட்டுப் பார்த்தால், அத்தகைய சொற்கள் இதில் இருபதுக்கு மேல் இல்லை எனலாம். ஒகி, சுகுபு, சுசூது, குறுபான், தெளகீது போன்ற சொற்களே அவை.

கலைமாமணி கவி கா. மு. ஷரீப் அண்ணன் அவர்கள் சீறுப் புராணத்திற்கு விரிவுரை எழுதி வெளியிட்டு வருவது போன்று இக்காப்பியத்திற்கும் பதவுரை, கருத்துரை, விளக்கவுரை போன்ற வைகளுடன் விரிவுரை நூல் ஒன்று வெளிவருவது மிக மிக அவசிய மாகும். சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் நாகூர் வா. குலாம் காதிறு நாவலர் அவர்கள் ''திருமணி மாலை வசனம்'' என்னும் பெயரில் இக்காப்பியத்தை உரை நடைப் படுத்தி நூல் ஒன்று எழுதி வெளியிட்டார். அந்நூல் இப்போது கிடைப்பதில்லை.

அந்நூலில் அவர் இடையிடையே திருமணிமாலையில் காணப் படும் சில செய்திகளுக்கு மறுப்புக் கூறி எழுதி விமர்சனம் செய்தி ருந்தார். அதைக் கண்ணுற்ற புலவர் நாயகம் அவர்களின் பரம ரசிகரும் அவர்கள் மீது ''தோத்திர மாலை'' பாடிப் புகழ் பெற்ற வரும், ''மக்காக் கோவை''யின் ஆசிரியருமான நாகூர் த. செவத்த மரைக்காயர் சீரியர் அவர்கள் ''திருமணி மாலை வசனம் பார்க்க விசனம்'' என்ற பெயரில் ஒரு கண்டன நூலை எழுதி வெளியிட்டார்.

இப்போதுள்ள நிலையில் நூல்கள் மறைந்து விடாமல் காப்பற்றும் நோக்கில், மூலம் மட்டுமாவது வெளிவந்தால் போதும் என்றிருப்பதால் இது உரையின்றியே வெளியிடப் படுகிறது. எனினும், இக்காப்பியம் கூறும் வரலாற்றினை வாச கர்கள் உணர்ந்து படிக்க உதவும் வகையில் பாடல்களுக்கு சிறு தலைப்புகள் நூல் முழுவதும் தரப் பட்டுள்ளன.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 1985 ஜனவரித் திங்களில் நிகழ்த்தப்பட விருக்கும் சீதக்காதி அறக்கட்டளைச் சொற்பொழிவின் பொருளாக இந்த ''திருமணி மாலை'' காப்பியம் பற்றி ஆய்வுச் சொற்பொழிவு ஆற்றுமாறு கலைமாமணி டாக்டர் கவி கா. மு. ஷெரீப் அவர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டுள் ளார்கள்.

இருபதுக்கும் மேற்பட்ட இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங் களுள் இன்னும் எட்டு நூல்களே மீண்டும் அச்சாக வேண்டி

யுள்ளது; அவற்றுள் சில அண்மையில் வெளிவரக் கூடிய வாய்ப்புகளும் பிரகாசமாக உள்ளன என்று துணிந்து கூறலாம். எனவே, இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்திற்கு மீண்டும் ஒரு பொற்காலம் தோன்றியுள்ளது என்னும் கூற்று உண்மையேயாகும்.

> அல்லாஹ், தன் திருமறையில், "நபியே, இவ்வேதத்தில், இப்ராஹீமைப் பற்றியும் கூறும்; நிச்சயமாக அவர் உண்மையானவராகவும், நபியாகவும் இருந்தார்." (19:41).

என்று நபிபெருமானாருக்குக் கட்டளையிடுகிறான். அவர்களுக்கு இடப்பட்ட ஆணை நமக்கும் பொருந்தும்.

திருக்குர்ஆனில் ஹலரத் மூஸா நபி (அலை) அவர்களின் பெயர் 133 இடங்களிலும், அதற்கடுத்தபடியாக தந்தை இபுறாகீம் நபியவர்களின் பெயர் 69 இடங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கணித்துள்ளனர் திருமறை ஆய்வாளர்கள். இபுறாஹீம் நபியவர்களின் வாழ்க்கையினை இஸ்லாமிய சமுதாயம் முன்மாதிரியாகக் கொண்டு ஒழுக வேண்டும் என்பதே இறைவனின் விருப்பம் என்பதை மேற்சுட்டிய வசனத்திலிருந்து நாம் உணர முடிகிறது.

நம் கவிச் சக்கரவர்த்தியான புலவர் நாயகம் செய்கு அப்துல் காதிர் நெயினார் லெப்பை ஆலிம் அவர்கள் நமக்கு வடித்துத் தந்துள்ள இபுறாகீம் நபி (அலை) அவர்களின் ஒப்பற்ற வரலாறு கூறும் "திருமணி மாலை" என்னும் இப்பெருங்காப்பியத்தினைக் கற்பதும் பரப்புவதும் மேற்சொன்ன இறைகட்டளையை நிறைவேற்றும் நன்மை மிகுந்த செயலாகும் என்பதில் ஐயமில்லை.

இப்பணி நிறைவேற உறுதுணையாக நின்று, தமது "ஏவி. எம். ஜாபர்தீன்—நூர்ஜஹான் அறக்கட்டளை நிறுவனம்" வாயிலாக இதனை வெளிக் கொணரும் அல்ஹாஜ் ஏவி. எம். ஜாபர்தீன் அவர்களுக்கு இஸ்லாமிய சமுதாயம் நன்றிகூறக் கடமைப் பட்டுள்ளது.

எல்லா இஸ்லாமிய இலக்கியப் படைப்புகளையும் போலவே இக்காப்பியமும், சமயப்பணி ஆற்றும் அதே நேரத்தில், தமிழுக்கும் தொண்டு செய்வதாக அமைந்துள்ளது. எனவே பொதுவாகத் தமிழ் கூறும் நல்லுலகும் இதனை ஏற்றிப் போற்றிப் பாராட்டும் என்று நம்புகிறேன்.

இதற்கு மதிப்புரை வழங்கிப் பாராட்டியுள்ள, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியனார் அவர்களின் கருத்துக்கள் மேற்கூறிய நம் நம்பிக்கையை உறுதிப்படுத்துகின்றன. தமக்குள்ள பெரும் பொறுப்புகள், பணிகளுக்கிடையிலும் இதனைப் படித்து அரியதோர் ஆய்வுரை வழங்கியதற்காக பேரறிஞர் டாக்டர் ச. வே. சு. அவர்களுக்கு ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



மார்க்கப் பேரறிஞர் மௌலானா மௌலவி பி. எஸ். கே. முஹம்மது இபுறுஹீம் சாஹிபு அவர்கள் உடல் நலிவுற்ற நிலையிலும் இப்பதிப்பை ஆராய்ந்து இஸ்லாமிய அடிப்படையில் விளக்கமான "தகவுரை" வழங்கியுள்ளார்கள். அவர்களுக்கும் எங்கள் நன்றி உரியது.

இஸ்லாமிய இலக்கியச் சேவைக்கென்றே தம்மை அர்ப்பணித்துக் கொண்டு இரவு பகலென்று பாராமல், ஓய்வின்றி, இஸ்லாமியச் சேவையிலும் தமிழ்ப் பணியிலும் ஈடுபட்டுள்ள அண்ணன் கலைமாமணி டாக்டர் கவி. கா. மு. ஷரீப் சாஹிப் அவர்களின் வாழ்த்துப்பா எங்களுக்கும் பெரும் உற்சாகமூட்டுவதாக அமைந்துள்ளது. அவர்களுக்கும் எங்களின் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

1973-ஆம் ஆண்டில் திருச்சியில் முதலாவது உலக இஸ்லாமியத் தமிழாராய்ச்சி மாநாடு நடந்தபோது, பொதுமக்களுக்குத் தடையின்றி கிடைத்து வந்த இஸ்லாமிய இலக்கியப் படைப்பாக, "குணங்குடி மஸ்தான் சாகிபு திருப்பாடற்றிரட்டு" மட்டுமே இருந்தது. சீறாப்புராணத்தின் கடைசிப் பதிப்போ அதற்கு 45 ஆண்டுகளுக்கு முன் பதிக்கப் பெற்று அதன் படிகள் கிடைப்பது வெகு அரிதாக இருந்தது. மற்றவைகளைப் பற்றிச் சொல்ல வேண்டுவதில்லை. சராசரியாகச் சொல்லப் போனால் நூறு ஆண்டுகள் பழமையானவையாக அவை இருந்தன.

இறையருளால் அந்நிலை மாறி, பதினைந்துக்குக் குறையாத இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் கடந்த பத்தாண்டுகளுக்குள் வெளிவந்துள்ளன. இன்னும் வரவிருக்கின்றன. அதே சமயத்தில் அவற்றிற்குச் சமுதாயம் அளிக்கும் வரவேற்பு மிக மிகக் குறைவானது என்பதை வருத்தத்துடன் சுட்டிக்காட்டாமலும் இருக்க முடியவில்லை. இனிமேலாவது இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் புத்துயிர் பெற்று வெளிவருவதோடு மட்டுமின்றி, அவை நன்கு பரவவும் வழிவகைகள் காணப்பட வேண்டும். அப்போதுதான் எஞ்சியுள்ள இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களும் வெளியிடப்படுவதற்கான உற்சாகமான சூழ்நிலை தோன்றும்.

இந்நூல் வெளிவரத் துணை புரிந்துள்ள ஹாஜி ஏவி. எம். ஜாபர்தீன் அவர்களுக்கும் மீண்டும் நன்றி கூறுகிறேன்.

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அல்லாஹ்வின் நல்லருளும் துணையும் நம் அனைவர்க்கும் கிட்டுவதாக! வஸ்ஸலாம்.

—மு. செய்யிது முஹம்மது "ஹஸன்"
பதிப்பாசிரியர்.

# பொருளடக்கம்

## முதலாவது இயற்கையங் காண்டம்


| | | பக்கம் | பாட்டு |
|---|---|---|---|
| 1. | கடவுள் வாழ்த்துப் படலம் | 17 | 36 |
| 2. | நாட்டுப் படலம் | 25 | 34 |
| 3. | நகரப் படலம் | 31 | 24 |
| 4. | கன்ஆனரசுரிமைப் படலம் | 35 | 117 |
| 5. | நமுறூதரசுரிமைப் படலம் | 56 | 77 |
| 6. | அரசிருக்கையியற்றிய படலம் | 68 | 44 |
| 7. | மந்திரப் படலம் | 75 | 50 |
| 8. | காட்சிப் படலம் | 83 | 37 |
| 9. | நமுறூது கனவு கண்ட படலம் | 89 | 49 |
| 10. | நபி இபுருகீம் அவதாரப் படலம் | 97 | 69 |
| 11 | புவனம் விளங்கிய படலம் | 108 | 67 |
| 12. | புறப்பாட்டுப் படலம் | 121 | 79 |
| 13. | நமுறூதைக் கண்ணுற்ற படலம் | 136 | 112 |
| 14. | உளந்தேற்றுப் படலம் | 156 | 22 |
| 15. | விழைவ டிய படலம் | 160 | 43 |
| 16. | சிறையிடு படலம் | 167 | 74 |
| 17 | இறந்தவரெழுந்துயர் படலம் | 175 | 42 |
| 18. | சிறைமீட்டுப் படலம் | 189 | 53 |
| 19. | பகைவர்க்கிலம்பாட்டுப் படலம் | 198 | 59 |
| 20. | காமரத்தாக்கிய படலம் | 207 | 60 |
| 21. | சுவாலயமெறிந்த படலம் | 217 | 71 |
| 22. | நமுறூது போ புரிப் படலம் | 22[illegible] | 65 |
| 23. | நமுறூதழிவுண்ட படலம் | 240 | 51 |
| | | | 1335 |


## இரண்டாவது செயற்கையங்காண்டம்


| | | | |
|---|---|---|---|
| 24. | கடிமணப் படலம் | 249 | 91 |
| 25 | நகர் நீங்கு படலம் | 263 | 61 |
| 26. | இசுமாயீல் நபியவதாரப் படலம் | 274 | 27 |
| 27. | இசுகாக்கு நபியவதாரப் படலம் | 279 | 38 |
| 28. | பின்குடியை நன்குடியாக்கிய படலம் | 289 | 82 |
| 29. | இசுமாயீல் நபியைக் குறுபான் செய்த படலம் | 303 | 134 |
| 30. | இசுமாயீல் நபி வதுவை வேட்டுப் படலம் | 330 | 70 |
| 31. | கருபத்துல்லா வியற்றிய படலம் | 341 | 70 |
| | | | 1908 |


பிசுமில்லா கிர்றகுமா னிர்றகீம்

# திருமணி மாலை

## முதலாவது
## இயற்கையங் காண்டம்

### காப்பு—விருத்தம்

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

உலகமும் பரமும் பன்மை யுயிர்களும் தகைய பண்பும்
அலகிலா வினையும் பேறு மவையவை பெற்று நாளுங்
கலகமே யின்றி வாழ்த்துங் கணித்திடா வல்ல நாய
னலனுறுந் தொழிலின் மேன்மை நாட்டிய காப்புத் தானே.

## 1. கடவுள் வாழ்த்துப் படலம்

### இபுருகீம் நபி புகழ்பாட துணை வேண்டல்

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

அருணலம் பொழியு முத்த மாதியின் சமுகத் துற்றுத்
தெருணலம் பொழியுஞ் சோதி செயமுறு மிபுரு கீந்தம்
பொருணலம் பொழியும் வாகைப் புகழணி புனைவா னுகப்
பெருநலம் பொழிந்து நாளும் பெரியவா துணைசெய் வாயே.
1(1)

### இறைகாவல் தேடல்

படர்ந்தபன் னிலத்து முற்ற பரிவுறு முயிர்க ளெல்லாந்
தொடர்ந்திடுங் கருத்தி னுட்டத் தோற்றமு மிவையென்
திடந்தர வுணவு மீந்து தேடிய தளித்துக் காக்கு [றுய்ந்து
மிடந்தரும் புகழின் மிக்கோ னியல்பதே காவ லன்றே. 2(2)

### இறைவனைப் போற்றுதல்

எறியலை யுவரி வான மிருஞ்சுடர் மலையா தாளங்
குறியலை யாது நாட்டு நாட்டத்திற் குறிப்பொன் றில்லா
னெறியலை யாத வல்லோர் நிட்டையின் வணங்கு மேன்மை
யறியலை யாது காக்கு மாண்டகை கருத்த னன்றே. 3(3)

### இறைவனை நினையாதார் இழிவு கொள்வர்

ஒருவனே யென்று முண்மை யுரைத்தவ னியல்பி னேக்கி
மருவனே யென்று நெஞ்சே வணக்கமே பூண்டு நாளுங்
கருவனே கருமை யோனே கருத்தனே யென்று நிற்றித்
தருவனே யிருமை வாழ்வுந் தகைகொளார் நகைகொள்
வாரே. 4(4)

### மார்க்கவொழுக்கம் பேணலின் மாண்பு

செய்வினை தனக்குஞ் செய்யுஞ் செறிபலன் றனக்குங் கூடு
முய்வினை தனக்கு மார்க்க வொழுக்கமே யுடைமை வல்லோன்
பொய்வினை தனக்குஞ் சிந்தைப் புன்மைக்கு நீப்ப தற்கு
மெய்வினை தனக்குங் சுத்த னெஞ்சமே விடுவ லன்பே. 5(5)

### சொர்க்க வாழ்விற்குரியோர்

அணிதவத் துடைய மேலோ ரன்பொடும் பொறிக டுண்ணிக்
கணிதவப் பன்மை நீக்குங் காரண முடையா ராகின்
மணிதரும் செம்பொ னட்டு மாளிகை யிறைவ னண்பாற்
பணிதரு மரம்பை மார்பாற் புலனுகர் பலவுண் டாமே. 6(6)

### நபிபெருமானாரின் பெருமை

ஒன்பதின் சீர் விருத்தம்

நீத மும்பல வரங்கள் கொண்டநனி
நேர்மை யும்பரவு கின்ற புந்தியி னர்சொல்
வேத முந்தகைய மந்தி ரங்களொடு
வீறு மன்புநிறை யின்ப நன்சுவை யெலாம்
போத மும்பெருக வுந்தருந் தகுதி
பூம லர்ந்தநதி விதங்கள் மிஞ்சிய துவே
காத முங்கமழ் நரந்த வங்கமுயர்
கார ணந்தரு முகம்ம தின்சர ணமே. 7(7)

### பெருமானார் வாழ்த்து

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

ஆதிய ரும்பொரு ளோது நெடுந்தகை யாரண நன்குருவாம்
வீதிகொ டுந்தழ லேத மறும்புனல் வீறொடு தந்தருள்கார்
சோதிம னந்திகழ் போத முறுந்தனி தூய விதந்தருவார்
மூதறி வின்பதி மாமதி னம்மகு மூதை நிதம்புகல்வாம். 8(8)



### 1,24,000 நபிமார் வாழ்த்து

எழுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

சீருந்து மாலநபி பால்சிந்தும் வேர்வையது
தேளமெங்கு மோடி யுலவிப்
பேருந்து நேர்மைகொடு பூநின்று தூயநெறி
பேசும் பவா பலனுளார்
தாருந்தும் வாடையொடு போதங்க ளாசைபல
தாவுந் தயாநிதி யனு
ரீரைம்ப தாறெழிய வாறைந்தி னுயிரவ
ரியாநெஞ்ச மீதணி குவாம். 9(9)

### அபூபக்கர் (ரலி) வாழ்த்து

எழுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம் (வேறு)

வாரி யாடையணி மாநி லம்புகழும்
வள்ள றம்மொடு மருங்கினர்
காரி யாடுமலை நாக முன்புவரக்
கால ணித்தடை படுத்தினர்
தாரி னின்றதுளி தேன லர்ந்தொழுகு
தண்ணி வர்ந்தபுய மன்னர்கோன்
பேரி லங்குமபு பக்கர் தன்சரண
பேறு ளங்கொடு விளக்குவாம். 10(10)

### உமறு (ரலி) வாழ்த்து

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

புவியதனி னொப்பேது முரையரிய மிக்கான
புகழுடைய சொற்காவலர்
நபியவர்த மக்காக மகவுதவு நட்பாளர்
நனிநியதி நட்டாதிபர்
கவியதனி லெக்காலு மணிநிரை துதிப்போடு
கதிவழி யணித்தீகுவார்
திவளரு மணித்தோளி னுமறிபுனு கத்தாபின்
திருசரண மெய்ப்போதுவாம். 11(11)

### உதுமான் (ரலி) வாழ்த்து

எண்சீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

தேன ளாவிய மேலிசைப் பூரணச்
சீர ளாவிய போதமும் வேதமும்
ஞான பாகமு நாடொறு மாசற
நாவி னுனுரை மேதகை யாளரா

மான ஞுவிழி யாநனி மேனியின்
மான மாநபி தாமருண் மாதர்கள்
கான ளாவும ஞுகர நாயகர்
காவ லாருது மானல ஞேதுமே 12 (12)

அலீ (ரலி) வாழ்த்து

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

திசைபல வதிர்தர மலைநிலை பெயர்தர
செறியலை சுவறிடவே
விசைதரு மனிலமு மெரிகதிர் தழல்புவி
விரையிடி யவையலற
வசையுறு மடையலர் பதிகுலை குலைவுற
வருநெறி துரகதமே
லிசைதர நடமிடு மலிபுலி யலர்துணை
யிருபத மதுகதியே. 13 (13)

ஹசன் (ரலி) ஹுசைன் (ரலி) வாழ்த்து

பன்னிருசீர் விருத்தம்

கான கந்தனி லழலவி தரநதி
யாறெ ழும்படி யினிதரு ணபியவர்
காத லன்பொடு பெறுமக ளணிமணியார்
ஞான மும்பல வறிவொடு நவநித
மேன லந்தரு புகழொடு மிகையொடு
நாநி லந்தனி லுதவிய திருநிதியார்
வான கந்தனி லுறைபவர் தலைமையர்
பாலி ருந்தழ கொழுகிட வுயர்பதி
மாது ளங்கனி யருளிட வுணவுசெய்தார்
பான லந்தரு மொழியொளி ரசனுசைன்
மேன லந்திகழ் வரிசைகள் பலநிறை
பாத மென்கணி லனுதின நிலைபதுவே. 14 (14)

நன்மாராயம் பெற்ற பதின்மர் வாழ்த்து

கலி விருத்தம்

மருப்பாவிய நயினுரொடு மருவாநிலை மருவு
முருப்பாவிய தகையாளர்க ளுருபாகிய தோழர்
கருப்பாரெழு கியவாயினர் கருவாளர்க ளுல்வ
ரொருப்பாவழி யிருமூவர்க ளொருபானவர்ப் புகழ்வாம்.
15(15)



பெருமானுர் மரபினர் பதினுல்வரை நினைவு கூரல்

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

வரனிலை நயினுர் மரபினி லுரியோர் வழிநிலை யுடையோர்கள்
கரனிலை பதினுன் கவரொடு மறைநேர் கதிநெறி புனைவோர்க
ளுரனிலை நினைவோ டுறுவினை மவல்வா ரொழுகிய தகையாளர்
சரணிலை பெறுவோர் சுகநிலை யுடனே தலநிலை பெறுவாரே
16(16)

முகியித்தீன் ஆண்டகை வாழ்த்து

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம் [வேறு]

நனிபொரு ணபிதந் நாவி னவமுறு மமிர்தந் தேக்கி
யினிபொரு ளெவர்க்கு மூட்டி யெழும்பொருள் விளக்க
வல்லார்
நுனிபொரு ளுணர்த்துஞ் சிந்தை நோக்கிய மகிமை யோங்குந்
தனிபொருள் கவுதுல் லகுலந் தண்பதந் தலையிற் கொள்வாம்.
17(17)

ரிபாயி ஆண்டகை வாழ்த்து

திணிவரு மாக்கை யெங்குஞ் செறியரு வுயிரி னுக்கங்
கணிவரு மியற்கை நோக்கிக் காரண முணர்த்து மெய்மைப்
பணிவருஞ் சிந்தை பூத்துப் படரறி வினங்க ளோங்கு
மணிவரு நிதிசுல் தானுல் லாரிபீன் பதமுட் கொள்வாம்.
18(18)

அஜ்மீர் காஜா முயீனுத்தீன் சிஷ்தீ வாழ்த்து

கதிதரும் வழியு மேவாக் கனறரும் வழியுஞ் சுட்டி
மதிதரு மறிவிற் பூட்டு மனநிலை யறிவுங் காட்டுந்
துதிதருஞ் சகத்தின் பான்மை துலக்குற விளக்கு நன்மை
முதிர்தரு முணர்வின் காஜா முகீனுத்தீன் பதமுட்
கொள்வாம். 19(19)

இறசூல்நேசர் அப்துற் றகீம் புர்யீ வாழ்த்து

மறப்பிலா மனத்தி னுட்ட மதிப்புடன் கதிக்கும் பூட்டி
யிறப்பிலான் சகல பன்மை விளேதமே யிவையென் றுய்ந்து
சிறப்பலால் வேறின் றென்னச் செழிப்பருள் வள்ளல்வண்டாரி
நறைப்புய வாகை யப்துற் றகீமலர்ப் பதமுட் கொள்வாம்
20(20)

நாகூர் ஆண்டகை வாழ்த்து

நிலத்திடை கிடந்த வன்கன் னிரிடைக் காலி னேட்டும்
வலத்திடை நின்ற காட்சி மாதவர் கவிதை யென்றன்
கலத்திடை நிறைந்த செவ்வி கனமணி யென்னு நாகைத்
தலத்திடை விளங்குஞ் சாகுல் கமீதுதா ளுள்ளங்
கொள்வாம். 21(21)

### சதக்கத்துல்லா அப்பா மீது வாழ்த்து

விரிதரு மறையின் வாரி மனநெடு மேகம் புக்கிப்
புரிதருந் தெளிவி னோடும் போதரப் பருகிச் செந்தேன்
சொரிதருந் திருவாய் வள்ளற் றுதிதரும் வகுதை மேவிப்
பெரிதருஞ் சதக்கத் துல்லா பிறங்கணி பதமுட் கொள்வாம்
22(22)

### உரை தந்த நல்லறிஞர்

பாநலஞ் செறிந்த நாகைப் பதியினர் மரபின் மிக்கார்
மாநலஞ் செறிந்த செய்யித் முகம்மது சுதாரி தோன்றற்
றேனலஞ் செறிந்த வாயின் செய்யிது காமி தென்று
மானநத் தறுசா கீபு ஆலிமிவ் வுரைசெய் தாரால். 23(23)

### உரையைச் சரிசெய்த பேரறிஞர்

விழுமிய பொருளி னின்னோர் விரித்திடு முரையி னுற்ற
மொழி முரணீத்து மிக்க மூதுரை யளித்தார் காய
லெழில்வரு மப்துல் காதிர் லெப்பையா லீந்தந் தோன்ற
லழகொழு கியசொல் வல்ல அபூபக்கர் லெப்பை யாலீம்.
24(24)

### நூற்பெயர்

இவர்களால் விளங்கும் சொல்லி னியல்பினுன் முன்னூல்
செய்த
வவர்களால் வழிநி றீஇய வரும்பொரு ணிரையி னோடுந்
திவடருங் கார ணீகச் செயற்கையி னெழுக்கி னுனுஞ்
செவிபுனை யிவற்றி னுமந் திருமணி மாலை யன்றே. 25(25)

### நூலின் அமைப்பு

இயல்புறுந் தரும மாதி யியைபுறும் பொருள்க ளுன்கும்
பயனுந் தகுதி நோக்கிப் பயிற்சியி லறிவுண் டாமென்
றுயர்மன நினைவி னுற்பா வொழுகிய விருத்த மாலை
யயர்விலா தெவரும் பூண்பா னருங்கவி பனுவல் செய்தான்
26(26)

### ஹபீபாசர் விரும்பினர்

அணிவளம் பழுத்த காய லதிபதி யிசுயா யீல்கண்
மணிவள மணிக பீபு முகம்மதென் றுயர்ந்த மன்னன்
கணிவள மனந்தங் காட்டுங் காரண ரிபுரு கீந்தந்
திணிவளம் புனைதல் செய்வான் றிருக்கருத் தியற்றி னுனே.
27(27)



### நிதி சொரிந்தார் ஹபீபரசர்

திருமுத்தந் தரித்த செவ்வி திகழ்நபி வரிசை வேண்டித்
தருமுத்த மப்துல் காதிர் சாகிபு துணைவ னியார்க்கு
மருமுத்த மணிக பீபு முகம்மதின் மலர்க்கை ம்சப்பப்
பருமுத்த நிதிக ளுளும் பண்பொடும் பொழியா நின்றுன்.
28(28)

### நூல் செய்த காரணம்

பூட்டுங்கா ரணத்தி னுனும் பொருணய முணர்ந்த மேலோர்
மாட்டுறும் புகழி னுனு மன்னபி கொண்ட மார்க்கஞ்
சாட்டுறுந் தகுதி யானுந் தவப்பய னதனு லுள்ளங்
கோட்டுத லின்றி யிந்நூல் குணத்தொடுஞ் சொற்ற தன்றே
29(29)

### அவையடக்கம் கூறல்

எண்டிசை கதிரின் முன்ன ரில்லிசை சுடரே போன்றும்
வண்டிசை மரையின் முன்னர் மலர்தருங் கொட்டி போன்று
மண்டிசை யாழின் முன்னர் வன்பறை போன்றும் வல்லோர்
கண்டிசை நூன்முன் யானுங் கருத்தொடு மிசைத்த லன்றே
30(30)

### வல்லோர் இயல்பு

நூனலந் தருதல் கண்டும் நுவன்றிடு மென்சொல் புன்சொல்
லானலந் தாரா தேனு மதற்குறு முயற்சி நோக்கிப்
பாநலந் தருதற் கேற்ற பயிற்சியி னிற்பர் வல்லோர்
வானலந் தருவார் கொண்ட வண்பெய ரதனு லம்மா 31(31)

### நூலை ஆக்கியோர்

இருமையே கொண்ட காய லெழின்மணி பரீட்சை வல்லோர்
பெருமையே கொண்ட மாணுப் பிள்ளையி லெப்பை யாலீ
மருமையே வளர்க பீபு முகம்மது லெப்பை தோன்ற
லொருமையோன் கருணை மிக்கி னுரைத்தன னிந்நூ லன்றே
32(32)

### கதிபேறு விரும்பிச் செய்தது

மருமணி பன்னூல் சிந்தா மணிதொகை பார நூல்கள்
பருமணி சின்னூ னன்னூற் பயன்றருந் தொன்னூன் முன்னூ
லொருமணி யுணர்வுந் தோற்ரு வுளத்தினன் கதிபே
றெண்ணித்
திருமணி மாலை கோத்தான் செய்கப்துல் காதி றென்போன்
33(33)

### நூலைப் பயில்வோர் பெறும் பேறு

வழிதரு நெறிகள் பூண்பார் மனநிறை யறிவு பூண்பார்
மொழிதருஞ் செல்வம் பூண்பார் முதிரணி புகழே பூண்பா
ரிழிதரு நமுறா தஞ்ச வெதிர்தரு மிபுரு கீந்தஞ்
செழிதருங் கிருபை பூண்பார் திருமணி மாலை பூண்டார்.
34(34)

### நூல் இயற்றிய காலம்

மறைவளம் பழுத்த வாய்மை முகம்மது நயினார் செல்வ
நிறைவரும் கிசுறத் தோரா யிரநிலை யிருநூற் றோடுங்
குறைவரா முப்பா னொன்றிற் குளிர்மதி சவ்வாற் றெய்தி
யுறைபன்னான் கமுதன் வாரத் துரைத்தனன் வல்லோ
னன்பால். 35(35)

### கொடை நாயகர் வாழ்த்து

இருநிதி பெருக மெய்மை யியைதரு மிபுரு கீந்தந்
திருநிதி பெருக வாகைத் திறத்தொடும் புனைதல் செய்வான்
வருநிதி நிறைக பீபு முகம்மதும் வனைந்து நின்றார்
தருநிதி பெருக மேன்மை தழைத்திட வாழி வாழி. 36(36)

கடவுள் வாழ்த்துப் படலம் முற்றிற்று
ஆக திருவிருத்தம்-36.

—(.—

# 2. நாட்டுப் படலம்

### படலச் செய்தி

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

கானலர் மரவப் பொற்றோள் கபீபுதம் மொளிவில் வந்த
மானல ரிபுரு கீந்தம் மனுநெறி தவிசின் செவ்வி
கோனல னணிந்த சாமின் குலந்தரச் சூழ்ந்து நாளுந்
தேனலர் பொழிலி னாட்டின் சிறப்பலங் காரஞ் சொல்வாம்
1(37)

### மழை பொழிதல்

அனுமனித் தடருங் கோணத் தானனத் தமரர் வாழு
மினுமினுத் திலங்கும் வான வெண்மையி னெழுந்த மேக
மினமிகுத் திருந்த முத்தத் தெறியலை மேய்ந்து தேவர்
மனுமுகத் துடையா ரண்ட மானவே மீண்ட தன்றே 2(38)

வானிருந் தவனி யெங்கு மன்னுயிர் தழைப்பா னாகக்
கானிரு மின்னி னோடுங் கனைகுரற் றௌபா வோடுங்
கோனிருந் திசைநோக் காதம் போன்றிடுங் கொண்ட
லன்னோர்
தானிரு கண்ணி னூற்றுஞ் சலமெனப் பொழிந்த தன்றே
3(39)

திசைதிசை படர்ந்து வான்வில் லணிந்துவெஞ் சீற்றத் தோடு
மிசையழற் பொறியி னோடும் வெற்பெனும் பகைவ னோக்கிப்
பசையுறுந் தெண்ணீ ரங்கிப் பயில்கணை வருணன் பூட்டி
விசைகொண்ட தென்னத் தாரை கோபமும் வீழ்ந்த வன்றே
4(40)

### பெருகிப் பாய்ந்த வெள்ளம்

நிறைந்தபூ மாரி வெற்பி னிவர்ந்தசெம் மணிகண் மற்று
முறைந்தபற் பண்ட மெல்லா மொரீஇயத னழுக்கின் குப்பை
யறைந்துதுப் புரவு செய்தே யறிவுளோர் தாழுஞ் சேர்ந்தோர்
குறைந்திடா ரென்ன வெள்ளங் குரவையி னெழுகிற் றன்றே
5(41)

செறிதருங் கனிகள் பூக்க ளுதிர்த்துறுஞ் செழும்புன் னெல்லாங்
குறிதரா துயர்த்திப் பற்றுங் கொழுந்தருப் பிடுங்கிப் பாங்கி
னெறிதரும் விலங்கி னங்க ளிசையிலார் சூழியிற் சுற்றிப்
பறிதரு மலகை யென்னப் பாதலத் தோடு நீத்தம். 6(42)

பொன்னொடும் பொருள்க ளோடும் புகழொடு மாயு ளோடு
மின்னொடு மிடங்க டோறு மிருங்குளி குளித்த லோடுந்
தென்னொடுஞ் சுவேத நாகஞ் செறிந்தபோன் மலையி னுச்சி
தன்னொடு மொழுகும் வெள்ளந் தவழ்ந்ததே நிலத்தி னன்றே
7(43)

சொல்லிய பொருளி னோடுந் தொடர்தருங் குறவர் வாழு
மில்லியற் றினையுந் தேனு மிருங்கனி குளிரி யாழுங்
கல்லிய மூல மற்றுங் கையரி கொண்டு பாலை
மல்லியர்க் களித்த வெள்ள மன்னவன் போலு மன்றே 8(44)

ஆறலைப் பொருளுஞ் செந்நா யரும்பருந் தார்கு ராவுங்
கோறலை யுளத்தி னாரு மெயிற்றியர் குழவி யாவு
மேறலை யெடுத்து முல்லை யிடமெல்லாம் பரப்பிப் பாடி
வேறலை வுறவே சீறி யுழக்கிய சூறை போன்மே. 9(45)

வெண்மது நுகர்ந்து சேயான் வேணிரை யனைத்துஞ்சாய்த்துத்
தண்மதி நறுநெய் கொண்ட கடம்பல தலத்திற் றூக்கி
யுண்மலி வீரர் செய்யு முரத்தொடும் விரிச்சி யோடுங்
கண்மலி மருத வேலி காவலின் வளைந்த வெள்ளம். 10(46)

திணைதொறுஞ் செறிந்து பண்டஞ் சேர்தர வாரி முன்னி
னணைதொறுந் தகர்த்துப் பன்மை யரும்பொருட் சிதைந்து
மொன்றாய்ப்
பிணைதொறு மதுர மூறும் பெருந்தொடை நிறைந்த பாவின்
பணைதொறு மினிய வெள்ளம் படர்ந்தன காலினூடே 11(47)

மள்ளரின் மகிழ்ச்சி

உண்ணினை வகற்றும் புன்மை யுலவிய வெறிது போக்குந்
தண்ணிலை மணியும் பொன்னுந் தவழ்தருஞ் சலதி நோக்கி
யெண்ணிலை மகிழ்ச்சி யோடு மிசைதருங் கிணையி னோடும்
பண்ணிலைத் தடங்க டோறும் பரந்தனர் மள்ள ரன்றே.
12(48)

அணைகள் இட்டனர்

கயலினங் கலங்குஞ் சேற்றிற் கண்மருண் டெழுந்த தாக்கி
னயலின வளைகண் முத்த முதிர்த்தவவ் வாவி யெங்கு
மயல்களி றனையார் பள்ளம் வனம்புகுத் தணைக ளிட்டா
ரியலறு மசேத னத்தா ரறிவிடத் திசைந்த போலும். 13(49)



வண்ணிறச் சிறக ரன்ன மணையிட மலரி னெங்கு
மொண்ணிற வண்டின் கூட்ட மொலியிட நளினத் தாளிற்
பண்ணிடப் பணில முற்ற பைம்புனற் றதும்ப னோக்கி
மண்ணிட மிருப்ப மள்ளர் மந்திரித் தவரி னார். 14(50)

உழுது நாற்று நட்டனர்

பன்மலர் நறவஞ் சிந்தும் பழனங்க ளெவணுங் கூண்டு
மென்மலர் நைந்து சிந்த மேன்மையி னுழுது பின்னர்
மன்மலர் மணியின் சோதி வளரிடங் கடிய மள்ளர்
புன்மனக் கயவர் சிந்தை புரையசே தகஞ்செய் தாரால்
15(51)

மருதமு மகிழுஞ் சூடி யூடலின் மனது கொண்டார்
கருதுநல் லறத்தை யோர்பாற் கணிதரப் பதித்த லென்ன
மிருதணி சேற்றிற் பொன்னெல் வித்தினர் தகைய பண்பா
லிருதுவின் சிறப்பா னாற்று மிசைதர வெழுந்த வன்றே. 16(52)

பணைசெறி கதலி சாடும் பழந்தரு நறவு மாலை
யிணைசெறி கன்னற் சாறுங் குரக்கெறி வருக்கை மட்டு
மணைசெறிந் தெழுந்த நாற்று மப்புறம் பதிக்கு மானார்
கணைசெறி நயனக் கெண்டை கயத்தொடு நோக்கா நிற்பார்.
17(53)

இருபுற மிரண்டு வண்டு மிடையரக் காம்பல் பூப்ப
வருபெரு நளின மென்ன மதிமுக நீரி னோக்கி [நாற்றுப்
யொருபுறங் கொண்டாள் காட்டும் நகையொடு முணர்ந்து
பெருபுற நடுவார் பைம்பூண் பிறங்கிய கடைசி மாரே 18(54)

அணையணி யூன்று நாற்றி னருங்கருந் திவலை வாயிற்
கணிதர நீரிற் றூற்றுங் களியளி யிருந்த வாம்பற்
பிணிதரா மலரி தென்னப் பேதையின் னளைவார் கையா
லணிதரு மள்ள ருள்ள மலமரல் கொள்வர் கண்ணால். 19(55)

குரவையின் இனிமை

வலம்புரி போன்றுஞ் செவ்வி மணிக்கழுத் தஃதின் னோதை
நலம்புரி போன்று மிட்டார் நாரியர் குரவை கேட்டு
நிலம்புரி சூதம் வெந்நி வந்ததென் றுணர்ந்து சேவற்
றலம்புரி பெடையைத் தேடுந் தண்டலைக் குயில்க ளம்மா.
20(56)

### குருகினம் மயங்குதல்

கரைபுர ளுகஞ் செய்ய கதிர்மணி விளக்கிற் றேற்றுந்
திரையிடை யெழுந்த மொட்டின் சீறரக் காம்ப னேக்கி
விரைதரு மரவென் றுன்னி வெண்குரு கருகாஅ நிற்ப
வரைசெறி மடையிற் கெண்டை மாலொடுங் குதிக்கு மன்றே
21(57)

### களையினைக் களைவோரின் மருட்சி

பல்வகை யறிவி னூடே படர்தரு மழுக்கா றென்னும்
புல்வகை தெளிந்து நீக்கும் பான்மையே போன்றுஞ் சூழ்ந்த
நல்வகை வயலிற் பம்பு நனிகளை களையு மின்னார்
வல்வகைப் போத ரத்தி னரும்பொடு மருளா நிற்பார்.
22(58)

### நெற்பயிரின் செழிப்பு

குதப்பிய கடைவாய்ப் பூவின் கொழுநரு வுடனு மேதி
யுதிர்ப்படு மடியிற் சிந்தும் பாலொடு முயர்ந்து மேலோர்
பதப்படுங் கருத்தி னொத்துப் பல்பல பறவைக் கன்பி
னதிர்ப்பகங் கொடுத்துக் காய்த்த °தணிந்திழை யனைய சாலி
23(59)

### நெற்போர்க் குவியல்களின் சிறப்பு

தேன்வருங் கழையி னைப்பச் செழித்தெழுஞ் சாலி வண்மை
மேன்வரு முதியோ ரொப்ப வியனில னிறைஞ்சா நிற்பக்
கூன்வரும் பிறைவாள் யள்ளர் குழீஇப்பிடு மரிக ளெல்லா
மான்வரும் விழியார் கொண்டு மலையெனப் போர்கள்
செய்தார். 24(60)

ஊறுகள் ளுழக்குஞ் சிந்தை யுழவர்கள் பரப்பும் போரி
னேறுக டுவைப்பக் கூவு மோதையு மிருந்த சேரி
வீறுகொ ளவலிற் றுக்கு முலக்கையின் விரிந்த சத்த
நாறுபூ வாகை வேந்த னனிமுரச னைய வன்றே. 25(61)

### விளைபயன் ஈதல்

வேதியர்க் களித்துச் சுற்றும் விளைபயன் பெறுதற் கீந்து
காதிய பகடி னீண்ட கழுத்திடை சகடத் தேற்றிச்
சோதிய வில்லந் தோறுந் தொகுத்திடும் விருந்தி னோதை
போதியென் றகற்றும் வஞ்சப் புன்குர லினத்தை யன்றே.
26(62)

0 அணியிழை



### கொடை நாயகரின் மனைச் சிறப்பு

நென்மணிப் பணில முத்த நிதிமணி நாசஞ் செய்ய
பொன்மணி கன்னன் முத்தம் பொலிகின்ற செழுமை
போன்று
மன்மலி பொருள் கபீபு முகம்மதின் மனையி லென்று
நன்மலி செல்வ மேன்மை நனிபெறப் பெருகு மன்றே. 27(63)

### விழாக்கோலம் பூண்ட நாட்டின் சிறப்பு

தேங்கனி யுகுத்த சோலை செழுங்குயின் மழலைத் தீஞ்சொல்
வாங்குவின் னுதலா ராடு மஞ்சன வாடை யெங்கு
மோங்குமெல் லளிக டாவி யிடையிடை யுலவு மென்னிற்
பாங்கணி மைந்தர் தம்மாற் பகரலாந் தகைய நாடோ.
28(64)

வெண்ணிலா முகத்தின் மானார் வேரியந் தொடையல் சூட்டி
வண்ணமா ராடை சுற்றி மழலையிற் பாடும் போதிற்
றண்ணுலாத் தெங்கு மொய்த்த குரும்பையாற் றலைக ணணிப்
புண்ணுறச் சினந்து நிற்பார் புதுவிழா வயர்வ ரன்றே 29(65)

தண்டலை சதுக்கத் துற்ற தண்ணிலா மணிகள் கையி
னொண்டருங் களங்கின் மாத ரொளிமணி மூரற் றூன்றல்
விண்டது வழிந்த நீரும் வியர்வுமென் டிசையிற் றுன்னி
மண்டியே நெய்த லெங்கு மணந்தர வொழுகு மன்றே 30(66)

சங்கணி முத்து மிப்பி தருமணி முத்து முற்றி
லங்கணி நிறைய மோந்து பரதர்தம் மரிவை மார்கள்
செங்கணி வெண்ணெல் வேண்டும் பற்பொருள் விருப்பின்
மாற்றும்
பொங்கணி செல்வ மேய பெரும்பய னுடை தன்றே. 31(67)

மான்மதஞ் சந்தஞ் சாந்த மலைபடுங் குறவர் கொண்டு
கான்மதப் பளித வெண்ணெற் கைகொளும் போதில்வாடைத்
தான்மதங் கொண்டு பண்டந் தற்குண மொழிக்கு மென்னில்
யான்மத நிறுத்தி நாட்டி னியல்பெவ னுரைத்த லன்றே.
32(68)

கவலையிற் சேர்க்கும் பண்டங் கானவர் குவித்துச் செந்நெல்
லவலொடு மாற்று மோதை யைந்திணை யொன்று மோதை
யிவளவென் றுரையா தாலு மியல்பனே கத்தி னாலு
நவநகர் நாட்டின் பேரு நாட்டலாஞ்சாமி யென்றே 33(69)

தன்னைநே ரில்லா தாலுந் தணப்பிலா திசைத லாலு
மன்னைநே ரெடுத்த லாலு மதிப்பிறு மாப்பி னாலு
மெந்நிலை தருத லாலு மெதிரிணை யில்லா தாலு
மந்நிலை சாமி யென்ற தரும்பெயர் நாட்டிற் கன்றே 34(70)

நாட்டுப் படல முற்றிற்று
ஆகப் படலம் 2-க்கு திருவிருத்தம் 70

# 3. நகரப் படலம்

### படலச் செய்தி

கலிவிருத்தம்

பூமலி நிறைபுகழ் புதிய நாயகன்
றேமறுந் தோழனுர் துதிக்கு நந்நபி
நாமணி வழியிபு றுகீங் கோனிலை
சாமெனும் பெரும்பதித் தகைமை கூறுவாம். 1(71)

### சாம் நகரச் சிறப்பு

நமக்கணி நாயக நபிக ளுயகந்
தமக்கணி நல்விழி சகத்திற் றேற்றவே
கமைக்கணி யன்னவர் கருத்தி னட்டிய
சமைக்கணி நகரினைச் சாற்றற் பாலதே. 2(72)

கடலெனுந் துகினெடுங் கனவெற் பேர்முலைப்
புடவியென் றியற்றிய பூவை மாமுகத்
தடல்வருங் கண்ணிரண் டரிதி னன்னுதற்
றிடனுறுந் திலகமே யென்னு மூரரோ. 3(73)

### அகழ்ச் சிறப்பு

தண்ணெழில் விசிய சலஞ்ச லத்தின்வாய்ப்
பண்ணெழி னகரெலாம் படரச் செல்வமே
விண்ணெழின் மேகமே யுண்ணும் வெண்டிரை
யொண்ணெழி லகழெனு முவரி சூழ்ந்ததே. 4(74)

### நன்னீர்க் குளச் சிறப்பு

தன்னிலை யுணர்ந்தவர் நவிற்றுஞ் சொல்லொடு
மன்னிய தெளிவொடு மனத்தின் ருழ்வொடு
மின்னியற் சுவையொடு மிசைந்த வெண்மையுந்
தன்னிலை கயத்தொடுந் தகைய நீரரோ. 5(75)

### அரண்களின் சிறப்பு

நாலிய வங்கத்தா னனிதி றத்தினற்
கோலியன் முறையினற் பொறியின் கூட்டத்தாற்
பாலியற் படைகளாற் குடிப டர்ந்ததாற்
சாலரண் காவலன் றகைய நீர்மைத்தே. 6(76)

### மதிலின் உயர்வு

வான்படுங் கொடியுயர் மதியிற் றீண்டலாற்
றூன்படு மமிர்தமே தவழ்ந்த தெங்குமே
யீன்படா தகற்றுமே யெனிலம் மாமதில்
யான்படுத் துரைத்தலெவ் வாறு முற்றுமே. 7(77)

### மாடமாளிகைகளின் சிறப்பு

குளிர்தரும் வண்புயல் குடிகொண் மாதர்கள்
களிதரு மயிலினங் கடுக்கும் பன்மர
மிளிர்தரு மணியிவை மிகைய வெண்சுதை
தெளிதரு மாளிகை சிகரி யேயுமே. 8(78)

உயர்கதிர்க் கலசமு முயருந் தண்மதி
யியல்சுதை சித்திரத் திசைந்த முத்தின
மயனுறு முடுவினம் வான மாநில
நயனுறு மாளிகை நலங்கொள் கின்றதே. 9(79)

திங்களின் செழுமணி செறிந்த நீரொடும்
பொங்கலின் வாடையிற் பொருப்பின் றென்றலு
மங்கமும் பூத்திட வலர்ந்த சாளரத்
தங்கமும் விளக்கிய தவள மாடமே. 10(80)

அணைத்தலிற் றுயுமா மரிய தோர்பல
னிணைத்தலிற் றந்தையா மியைந்து நிற்றலிற்
பிணைத்தலின் மக்களா மினைய பேறுள
பணைத்தலிற் சிறப்புள பரிவின் மாடமே. 11(81)

### வீதிகளின் சிறப்பு

நிரைநிரை மாளிகை நிலவு மொண்செயுந்
திரையறை சாந்தினஞ் செழிக்குஞ் சித்திரத்
தரைவிழி மாறின்றித் தழைக்கும் பேரெழில்
வரையறுங் காட்சியின் வசந்த வீதியே. 12(82)

புதுக்குலஞ் சாலையிற் பூவு நன்மணி
சதுக்கையி னூற்றிய மலருஞ் சாலவே
மதுக்குடி யலர்கடை வீதி மன்னவர்
கதித்துட வீருட லென்னக் காட்டுமே. 13(83)



பொன்னொடு மிரசதப் பொலிவு நன்மணி
மின்னொடுங் குவைத்தவர் விளக்கு மாணியின்
றன்னொடு முதிர்பொடி தாழ்ந்த பேர்கொடு
மன்னொடு நிலைதரும் வளத்தின் வீதியே. 14(84)

சங்கணி முத்தமு மரிய தண்டுகிர்
பொங்கணி யம்பரும் பொருவி லோதையு
மங்கணிப் பூரமு மக்கு மன்னலா
லிங்கணி கங்கையி னியைந்த வீதியே. 15(85)

கடைபடு நோயினர் கவலை சிந்தவே
கடைபடுங் கடிமருந் தாற்றுங் கன்னிய
ருடைபடு மணம்பல வொதுக்கி யெண்டிசை
யுடைபடு மான்மத மொளிகொள் வீதியே. 16(86)

கையிடத் தடங்கிலாக் கதியின் கந்துகக்
கையிடத் தண்ணலார் கடிய வெஞ்சின
மையிடத் தடக்கரி மல்லி னோதையே
மையிடத் திடியென மலிந்த வீதியே. 17(87)

பொன்னலந் தொடையலின் பூவை மாருருப்
பொன்னலந் தருந்தெளி வாடி பொங்கலாற்
கன்னலங் கன்னியர் கணித்து நல்விலைக்
கன்னலங் கண்டவர் களிக்கும் வீதியே. 18(88)

மேவலர் திசைதிசை வெருவி யோடவே
கூவலர் பேரியுங் கவிகைக் கொள்ளையும்
பூவலர் சிவிகையிற் பொலியு மன்னவர்
தாவற வுலாவருந் தகைய வீதியே. 19(89)

மிடறிசை யாழிசை நரம்பின் மெல்லிசைக்
கடறிசை முழக்கெனக் கறங்கும் பேரியு
மடறரு முதியருக் கருளு மோசையுங்
கடையிடந் துன்னிய கனக வீதியே. 20(90)

### ஊரின் சிறப்பு

அழகின ரணியின ரனந்த மேயதால்
குழகுறு மாளிகைக் கதிர்கொள் வீதியான்
மழலையின் மொழியினர் வடிவின் மிக்கதா
லெழிலுயர் துறக்கமே யென்னு மூரரோ. 21(91)

தானமு மன்புடன் றயவு மியாவர்க்கு
மானமும் வரிசையு மல்கி நின்றதா
லீனமும் புன்குர வேகு நீதத்தால்
வானமும் மாரியே வழங்கு மூரரோ. 22(92)

ஊரவரின் உயர்வு

வேதமு மதனிடை விரிந்த மெய்ப் பொருள்
போதமும் பயிற்சியிற் பொழுது போக்குவார்
நீதமு மொழுக்கமு நேர்மை மிக்குறுங்
காதலின் முயற்சியிற் கலைவ லாளரே. 23(93)

விருந்தின்றி யுண்கிலார் வெற்றி நல்வர
மருந்தின்றி நிற்கிலார் மாத வத்தினர்
பொருந்தின்றி வாழ்கிலார் புகழென் றோதிய
திருந்தின்றி யிருந்திலார் சிறந்த வூரரோ. 24(94)

நகரப்படல முற்றிற்று
ஆக படலம் 3-க்கு திருவிருத்தம் 94.

—□—

# 4. கன்ஆனரசுரிமைப் படலம்

படலச் செய்தி

எழுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

திருவளர் வரிசை நபிகளி னயினார்
சிறப்புறும் பேரொளி விளங்கி
மருவளர் புயத்தி னபியிபு றாகீ
மாநிலத் துதிக்குமுன் னவரிற்
பொருவளர் நமுறா தியல்பினி துரைப்பப்
புனைதரு மரபினி னியற்கை
யிருவளர் செயற்கை வகைவகை விரிவி
னியாவர்க்குந் தெரிதர விசைப்பாம். 1(95)

நூகு நபியின் மூன்று மைந்தர்கள்

பெருமலை யெனவும் பொருமலை யெடுத்துப்
பெயரலை யொலிமரு நீத்த
மிருமலை யனைத்துங் குலைதருங் காலை
யெழின்மரக் கலத்திற்பல் லுயிரு
மருமையின் காத்தற் கேதுவா னவர்நல்
லாற்றினர் நூகுமெய் நபியா
ரொருமையி னில்லா திறந்தவ னொருவ
னொழியமும் மைந்தர்க ளிருந்தார். 2(96)

சாம், ஹாம், யாபிது பெற்ற ஆட்சிப் பகுதிகள்

விரியலை யுடுத்த நெடும்புவி யதனை
விளங்கமுப் பகுதிய தாக்கிப்
புரிநடு நிலையை யறபிக டந்தைப்
புகழ்தருஞ் சாமினுக் களித்தார்க்
கருநிறத் தபசிக் கையனா ராமுக்
கதிகமேற் பகுதியை யளித்தார்
வருவதிற் கிழக்கிற் றுருக்கிக ளத்தன்
வலிதரு மியாபிதுக் களித்தார். 3(97)

ஹாமின் மகன் கொடுங்கோலன் கறுது

நடுநிலை யுடையார் நடுநிலை யுடைய
நபிகளுக் கியல்பினார் விருதிக்
கடைநிலை யுடையார் செயற்கையில் வினையிற்
கடைப்பிடி யாயின ரிவரிற்

றிடனுறுங் கதிரோன் படுந்திசை காக்குந்
திறத்தின ரரசுறு நிலையிற்
கொடுநிலை கொண்டா ளுழுவந் தீன்ற
கோமகன் வருமர பிசைப்பாம். 4(98)

### கறுது பெற்ற இரு கொடிய மைந்தர்

நன்னபி மகவா மாமினி தளித்த
நரபதி மேற்றிசை யெவனும்
புன்னலி கொடுங்கோ லியற்றிய திறத்தான்
புரிதருங் கறுதெனும் பெயரா
னன்னவ னடாத்து மவந்தரு மொழுக்கா
லகந்தையிற் புவனங்க ணகைப்பான்
மன்னலந் தகையி னினிதொடு மளித்தான்
வன்மன மகவிரண் டன்றே. 5(99)

### கூசுவும் சாகூருவும்

வீரமு மதமு மளவிய மனத்தின்
வீறுறுங் கூசெனு மொருவன்
சூரமுந் திறனு மாண்மையின் சாகூ
ருவெனுந் துங்கவ னொருவன்
காரமும் படர்ந்த சினத்தினன் மன்னர்
கனகப்பொன் முடிநிதம் பரவிச்
சேருமங் களங்கிற் கழலணி பதத்திற்
செம்மலென் றுயர்த்திட விருந்தான். 6(100)

### மன்னன் கூசுவின் தன்மை

இன்னவன் றிறத்தின் மும்மடங் காகி
யெதிர்த்திடு மொன்னல ராவி
மின்னலந் தொடைய லணிந்தவேல் வலத்தின்
மேவலர் திசையெரித் தவர்கள்
கன்னியுங் கவரும் வல்வினை யாளன்
கடும்புலி நகத்தினன் பருத்துத்
துன்னிய வுடலான் பருதியின் விழியான்
றுன்புறுங் கூசெனு மரசன். 7(101)

### அவன் புரிந்த அட்டூழியம்

தன்வினை யியற்று முறையினிற் சேர்ந்த
சதுரங்க தளத்தொடு மொருநாள்
மன்வினை யியற்று மவரெவ ரென்ன
மண்டிசை யடங்கலுந் தேண்டிப்



புன்வினை யழித்து நகர்பல தீய்த்துப்
புனையிழை யருஞ்சிறை வாரிக்
கொன்வினை யவர்கள் சஞ்சலங் கொளவே
கொடுமைய னொருதிகை போந்தான். 8(102)

### வெற்றிப் பயணம்

கொடுந்தொழில் வனைந்த விலங்கின வரைகள்
கொதிதரு நிலம்பல கடந்து
நெடுந்தலம் போம்போ தவணெழிற் சிறந்த
நிவர்மரச் சோலைகள் வசந்த
னொடுந்தரும் வாச மாறிலா தலர்ந்த
வுயர்மரை யருவிகள் மல்கித்
தொடுங்கட லனைய நதியதன் மிகுத்த
தூயதோ ரிடத்தினி லானான். 9(103)

### சோதிடரை வரவழைத்தல்

வேகவெம் பரியு மும்மத வரையும்
வீரரு மணியணி செறிய
மாகவெம் பருதி போன்முடி தரித்த
மன்னனு மவ்விடத் திறங்கிப்
பாகமுற் றவரிற் பணித்தனன் கணிதப்
பயன்றரு நூன்முயல் பவரிங்
காகவே கொணர்மி னென்னலுங் கொணர்ந்தா
ரவனடி தாழ்ந்தவர் நின்றார். 10(104)

### நகரம் நிறுவ சோதிடரிடம் நிமித்தம் கேட்டல்

குணக்கினுங் குடக்குந்தெ னுதினும் வடக்குங்
குலவிய தேயங்க ளவைக்கு
மணக்குமொண் மலரி னருவியுஞ் சோலை
வளமையின் மிகுத்துள விவணில்
கணக்கறு மணியி னகரமுண் டாக்கிக்
கருத்தொடு முறிலதி னன்றோ
பிணக்குறுங் கொல்லோ விரண்டிலொன் றுய்ந்து
பிரித்துரைத் திடுகவென் றிசைத்தான். 11(105)

### சோதிடர் நான்காம் நாள் திரும்பி வரல்

பொன்னலந் தொடையன் மன்னவன் கேட்பப்
பொருவறுங் கணிதவல் லவர்க
ளின்னவா றுரைப்பான் மூன்று நா ளெல்லை
யெங்களுக் களித்திடே யென்ன

வன்னவர் கேட்ப நன்றென விசைந்தா
னவர்கள்போந் தரியநூற் றேர்ந்து
மன்னுமீன் பயனிற் றுைகைவிரித் துணர்ந்து
மறுத்துநான் கணிதினத் தடைந்தார். 12(106)

அது இணையற்ற பதி ஆகும் எனல்

கொடுங்கதி ரிலைவேன் மன்னவ னோக்கிக்
கொற்றவ நும்முரைப் படியே
நெடுங்கதிர் நடைபன் மீனிலை கூட்ட
நின்றிடும் பயனய முணர்த்தும்
விடுங்கலை யறிவிற் கண்டன மியாங்கள்
வினவுமித் தலம்வள மிகையத்
தொடுங்கடற் பாரி னிவணிணை யின்றித்
தோற்றுமோர் பெரும்பதி யன்றே. 13(107)

மாமன்னன் அதை ஆள்வான் எனல்

அப்பெரும் பதியிற் றிறத்தொடு மரணின்
வகைதரு மருங்கொடி நிறுவி
யிப்பெரு நிழலில் வீற்றிருந் துலக
மெண்டிசை யடங்கலுந் தனியே
செப்பருங் கோன்மை நடத்துவான் வலத்திற்
செம்மலொன் றுண்டென நன்னூ
லொப்பற விளக்கிற் றென்றனர் கணித
ரொளிர்முடி மன்னவ னுணர்ந்தான். 14(108)

யானே அவன் எனக் கூசு உரைத்தல்

வாரணி முரச வீரியர் பரவு
மன்னவன் புன்னகை கொண்டு
நேரணி யிவணி னூரணி யெழிலி
னணிகுடை தண்ணிழ லிருந்து
பேரணி நீதச் சீரணி விளக்கிப்
பெருமையி னிலைத்திடுந் தலைவன்
சேரணி யிலைவேல் வலத்துடை யவனியா
னலதிலை தேயத்தி னென்றான். 15(109)

வலுவான கோட்டை அமைத்தல்

கலிவிருத்தம்

வலத்திடை திறற்புய மறத்துடைய மன்ன
னலத்திடை மகிழ்ச்சியி னனிப்புடை யுளார்பாற்
றலத்திடை கரப்படு தகைப்பொறியி னிஞ்சி
பலத்தொடு மியற்றுக வெனப்பணி யளித்தான். 16(110)



கூறுமொழி நன்குணர்வு கொண்டுபுடை நின்றோ
ராறுமதி வல்லவர் செறிந்திடு மரும்பொன்
வீறுகொள் வன்பொடு விருப்பினி தளிப்பத்
தேறுதலி னவ்வினை திறத்தொடு முடித்தார். 17(111)

அப் புதுநகரின் வருணனை

சுற்றிய வரண்டிசை துலங்குபொறி வன்பின்
வெற்றியி னருந்திற மறத்தினர் விருப்பி
னுற்றுறு தலங்களு முளுற்றுமக மீதே
சொற்றகு பெருங்கிரி துலக்குமணி மாடம். 18(112)

வன்புரிசை யுள்ளக மணிக்கதி ரிலங்கும்
பொன்புரிசை மாளிகை நடுப்புற மலர்ந்த
நன்புரிசை மேடைக ளவந்தரு சதுக்கை
யன்புரிசை கொண்டவ ரகம்பெற வமைத்தார். 19(113)

மேகமது சுற்றுமதின் மீமதி யலர்ந்த
பாகமது மாளிகை பரந்தொளி விலங்கு
மாகமது வன்கதிர் மணித்தவிசு மைம்பொன்
னுகமணி யொத்தநகர் மாணில வகத்தே. 20(114)

இனந்தரு நெடுஞ்சுவ ரிடங்கொள விரிந்த
வனந்தரு நறுந்தளிர் வளந்தரு மரங்க
ளனந்தமுயர் வன்மிருக மங்கண மிகுந்த
கனந்தர நிரைந்தனர்கள் கண்கவர் நிறத்தால். 21(115)

ஓரிடம் வரைந்தனர்பின் னோரிட நிறைந்த
சீருரு தெரிந்திடில் சிறப்பது படர்ந்த
வோரநனி சித்திர முயர்த்தினர் வரத்தின்
பாரவினை யில்லவரின் பாவினை விளக்கும். 22(116)

பொன்மணி வியன்பெறு பொருந்திய விடங்க
ணன்மணி யிரிப்பின நவங்கொள விரித்தார்
சொன்மதி லகத்துமதின் சுற்றினுஞ் சுழிக்கும்
தென்மலி நதிப்புன லெழும்படி செய்தாரால். 23(117)

ஓடுநதி கூலமதி னோங்குமலர் சிந்தும்
வாடைதரு சோலைபல வைத்தனர் குளிர்ந்த
பீடுறு வசந்தனு மடிக்கடி பிறங்கி
யூடுலவு மெய்யது களித்துள மதர்க்கும். 24(118)

இவ்வகை யகத்தணி யியற்றிவெளி யப்பால்
செவ்வகை தரும்பழன முஞ்செறிய வைத்தா
ரவ்வவை யெழுந்திணை யணித்துற முடித்துக்
கவ்வையறு பற்குடி கணிப்பில நிரைத்தார். 25(119)

நகருக்குக் கவுதாரிய்யா எனப் பெயரிடல்

இப்பதி தனக்குக்கவு தாரிய வெனும்பேர்
செப்பதிக காரண திறத்தொடு மளித்தா
ரப்பதியி னிஞ்சியி னருந்தவிசி னுற்றே
யெப்பதிக டாடொழ விருந்துமுறை செய்தான். 26(120)

வெய்யசிலை வீரியர் விறற்படை யெடுத்த
கையணி வலத்தினர் கருத்தறிவு சொல்லு
மையரு மமைச்சரு மருந்தலைவர் மொய்ப்ப
வையமொரு கோலினில் வழங்கிமுறை செய்தான். 27(121)

இரு ஆண் மக்கள் பிறந்தனர்

காணரிய காட்சி கனப்பதி கருத்தன்
கோணரியின் கோளுடைய கூசெனுங் குபாடன்
பூணரிய புன்மையுறு புந்தியினர் பூமான்
பேணரிய பிள்ளையிரு பேரவர் பிறந்தார். 28(122)

அல்காலாவும் கன்ஆனும்

வெங்கொடுமை செய்பவன் விளங்குபய னென்ன
வங்ஙனனி முன்னவ னரும்பெய ரல்காலா
மிங்குவரு காரண மிசைந்துவரு பின்னோன்
கங்கணி நெடும்படை கன்னெனு மறத்தான். 29(123)

தந்தையின் மகிழ்ச்சி

செல்வநிலை கொண்டுவரு சேயிவர்கள் வன்மை
நல்வயது யர்ந்திட நவம்புரி திறத்தின்
கல்வியொடு தந்தையணி கண்டுளமு ணர்ந்து
வெல்வரிசை மந்திரியின் மேலவ ணிருந்தான். 30(124)

மூத்தவன் படைத்தலைவனுதல்

செங்கதி ரயிற்படை திறத்தினர் மறத்தின்
வெங்கதி நடம்பரி விறற்கரி யனைத்து
மங்கவ னுரைப்படி நடப்பவவன் முன்னோ
னிங்கித வுரைப்படி யிசைந்தினி திருந்தான். 31(125)



இளையவன் வேட்டைப் பிரியனுதல்

வெவ்வரியி னுந்திற மிகுத்தவ னலத்தோர்
செவ்வழி யழித்திடு சினத்தினன் மதத்த
வெளவிய நிறைந்தவ னழற்றவழும் கண்ணு
னெவ்வன முறுங்கண விலங்கின மயின்றுன். 32(126)

எண்டிசையி னின்றகிரி யின்சுமை யலைக்கு
மண்டிய வலக்கமடம் வல்லுட லதிர்க்கு
மிண்டியல் விலங்கின வியன்கரு கலங்கும்
விண்டவன் முழங்கிடின் மிகுந்தவலி யுள்ளான். 33(127)

கோட்டுயர் பெருங்கிரி யுடன்கொடிய வொன்னுர்
நாட்டுய ரரண்பல நலித்திடு புயத்தான்
காட்டுறு சினக்கடு விலங்குளங் கலங்க
வேட்டுறு தொழிற்றிறன் விரிந்தபடை யுள்ளான். 34(128)

வல்லையகல் வெற்புறு வளைந்துபுடை பாந்த
ளெல்லையகல் பன்மர மிகுந்தவுயி ரெல்லா
மொல்லையக வுந்தரை யுளந்துடி துடிக்குங்
கல்லையக றிண்புய மடித்திடு கதத்தான். 35(129)

மன்னன் கூசுவின் மரணம்

இன்னவ னிதத்தின ரிசைந்தமொழி கேளான்
முன்னவ னுரைத்திற முயற்சியிடை நின்று
னன்னவ ரருந்திற மடர்ந்துவரு காலை
மன்னவ னிறந்தனன் மனத்தயர்வு கொண்டார். 36(130)

அல்கால் முடிசூடி ஆளுதல்

தம்மக மதத்தினர் சடங்குள வியற்றி
வெம்மக மிகுத்திடு விளங்கறிவின் முன்னோ
னம்மக விதத்தொடு மருங்குரிசி லென்ன
செம்மக விருத்தியிளை யோன்பணிதல் செய்தான். 37(131)

மின்னிடை பெருந்தனம் விளங்குமட மானுர்
பொன்னிடை யருங்கவரி பொற்புட னியற்ற
பன்னிடை தனத்திறை பகைத்தவ ரளிப்ப
மன்னிடை யருங்குழுவின் மன்னவ னிருந்தான். 38(132)

### கன்ஆன் வேட்டைக்குச் செல்லல்

பொற்றவிசின் முன்னவன் பொலன்முடி புனைந்து
மற்றவ வமைச்சர்மதி வல்லவர் குழுஉவ
பற்றவ முயன்றவர் பயன்றர விருப்ப
பிற்றவன் மதத்தொடு பெருங்களியி னின்றான். 39(133)

வாட்டட வலத்தினர் வசத்தொடணி சூழ
வேட்டையது வேதொழிலின் வேலைகொடு நின்ற
தாட்டகைய பின்னவன் றடப்பதி வளைந்த
காட்டினொரு நாடனி கருத்தொடு நடந்தான். 40(134)

### காட்டில் ஒரு மங்கையைக் காணல்

விலங்கின மலங்கிட வெடித்தகுர லோடும்
விலங்கின வதிர்த்தலின் விறற்படை யெறிந்தே
வலங்கிளர் திறத்தினன் வரும்பொழு தவண்பா
வலங்கிளை தனக்கொடி மடந்தையணி கண்டான். 41(135)

### காமவயப்பட்டு அவளை நெருங்குதல்

கலிநிலைத்துறை

வஞ்சம னத்தா னஞ்ச மிகுத்து வருகண்ணான்
கஞ்சம லர்த்தா ளஞ்சொல் குயிற்போல் கனிவாயாள்
மிஞ்சுக ணத்தாஅப் புஞ்சவ னத்தே மேயாளாய்
வஞ்சியி னிற்பக் கண்டுமு ளத்தே மயலுற்றான். 42(136)

ஆயரி னுள்ளா ளாயவ னத்தே யவளேதான்
சேயணி யாஅவோ டங்ஙன மண்பின் செயல்கொண்டே
மேயம னத்தி னாசைமி குத்தான் விரைவாகப்
போயினன் முன்னின் றுள்ள மயக்கப் பொலிவுற்றான்.
43(137)

காமமெ னும்பேய் வன்றலை கொண்டான் கண்டாற்றா
தாமதி யொன்று மில்லவ னாலவ் வணிகோதை
யேமுற வன்பி னாட்டமு ணர்ந்தா னியலின்றித்
தாமன மில்லா துற்றன னோக்கித் தான்சொல்வான். 44(138)

### அவ்வாயர்குலப் பெண்ணின் எச்சரிக்கை

தண்ணிழ லுந்துஞ் சோலை யகத்தே தருகாமப்
புண்ணழ லுந்தா நிற்றியெ டீஇயுன் புனைமாலை
யுண்ணிழ லுற்றோ னுண்டுகொ லிங்ஙனு ரையாதென்
கண்ணிழ லுற்றா யென்றன னம்மான் கழறுற்றாள். 45(139)



என்னல னுண்டு மின்ப மளித்து மினிதோடுந்
தன்னல னோடுந் தொங்க லணிந்த தலைமன்னன்
பின்னல னோடு மங்ஙன முற்றான் பெலனோடும்
நின்னல னோடென் முன்னுரை யற்க நெறியில்லாய். 46(140)

நீமன மஞ்சா தென்மு னுரைக்கு நிலைவாய்மை
யாமலி யோதை யன்னவ னன்கா தடைந்துற்றா
லேமுற வுள்ளத் தெண்டுயரெய்த வெரிவேகம்
வேமுற வந்திங் கடர்குவ னென்றாண் மிளிர்பூணாள். 47(141)

### மன்னன்—மங்கை வாக்குவாதம்

சொன்மொழி வெந்தீ யென்ன வெதும்பிச் சுடுகண்ணான்
வன்மொழி யென்கொல் வாரி யுடுக்கும் வைப்பெங்கு
மென்மொழி வீரத் தகையினி னென்னி யாரேனு
மன்மொழி வல்லா ருண்டுகொ லென்றான் மதியில்லான்.
48(142)

எக்கா லத்து மாண்டகை யுள்ளா ரெனும்வாய்மை
யொக்கா திவ்வா றுள்ள மயக்கிற் சொற்றானென்
றிக்கா லத்திற் புந்தியி லானென் றெண்ணத்தி
னக்கா நின்றே யன்னவ னோக்கி நவில்கின்றாள். 49(143)

துன்னிய பொற்பூ வின்ன வனத்துந் தொடர்வெற்பு
மன்னிய மிக்குப் பற்பல் விலங்கு மடிவாகக் [தொழிலாள
கொன்னிலை கொற்றங் கொண்டுணும் வேட்டைத்
னன்னவ னீயோர் மல்லினன் கொல்லென் றறைந்தாளே.
50(144)

### அவள் கணவனின் வருகை

இருவரு நின்றே யிகன்மொழி கொண்டே யிசைநேரம்
பெருவலி கொண்டா னுறுநிலை மற்றப் பெண்மயமை
வருவழி கண்டே யங்ங னடைந்தே மனையாளன்
செருவய முற்றே செவ்வழல் கண்ணிற் சினமுற்றான். 51(145)

### ஆயன் மன்னனைத் தாக்கி வீழ்த்தல்

சீறிய வுள்ளத் தன்னவன் முன்னிற் றிறன்மன்னன்
கூறிய கன்னான் கன்ன மகத்தே கொடுவானத்
தேறிய வொத்தே பேரறை யிட்டே யிடை பற்றி
வீறினெ டுத்தே வீழ்த்தினன் முல்லை வியன்றோன்றல். 52(146)

காலும யர்ந்தே யூரும யர்ந்தே கடிவீர
மேலும யர்ந்தே கீழ்விழு கின்றான் மேனெஞ்சின்
மேலுமி ருந்தே யுள்ளந டுங்கும் மிடறிற்கை
யாலுமடர்ந்தே யாயன் மிகைப்ப வழலுற்றான். 53(147)

மன்னன் ஆயனைக் கெஞ்சுதல்

பஞ்சிற் கொப்ப வாயுறை நீரும் படர்கண்கள்
மஞ்சிற் கொப்ப வோடிய செம்பொன் மனமெல்லா
நஞ்சிற் கொப்ப மன்னவ னாயன் நனிபோற்றிக்
கெஞ்சிக் கொப்ப மால்கரி யென்னக் கிளறுற்றான். 54(148)

வஞ்சகமாக மன்னன் ஆயனைக் கொல்லுதல்

னையக் கண்டான் கெஞ்சா நிற்கு நனிகண்டே
யுய்யக் கொண்டான் மேலெழு முன்ன மொளிர்தோளான்
கையைக் கொண்டே யாயனி ரண்டுங் கமலத்தாட்
பையக் கொண்டே பூமி யறைந்தே பழிசெய்தான். 55(149)

அன்னவ னைக்கொன் றங்க மகிழ்ந்தே யடர்கன்னான்
பொன்னவண் முற்கொண் டென்றிற முன்றன் புருடற்கு
மன்னவ ருந்திண் வன்றிற மென்சொல் வழிகண்டா
யென்னம தம்பற் றன்பினு ரைத்தே யிசைக்கின்றான். 56(150)

மங்கை சல்காவைக் கற்பழித்து கவர்ந்து செல்லல்

நின்கடி கொண்டா னிங்ங னிறந்தா னிலையற்றா
யுன்கடி கொள்வா னியாருள ரென்றே யுறுவல்லான்
புன்கடி கொண்டே வன்பினிழுத்தே புணர்வுற்று
நன்கடி விட்டே பற்றி நடந்தா னகரன்றே. 57(151)

வண்பூ முல்லை யம்புற வுற்ற மடப்பேதை
தண்பூங் கூந்தல் சல்கா வென்னுந் தகைநாம
வொண்பூ மான்கொண் டன்புறுந் தன்பா லுழிவைத்தான்
கண்பூ வென்னுங் காவலின் வன்கண் கனிவேந்தன். 58(152)

கள்ளம் பற்றுஞ் சிந்தை யிழுத்துங் கடிசெய்துங்
கொள்ளும் குற்றத் தப்புணர் வாலே கோளூன்றி
யுள்ளும் பற்றுந் தீயின் வயிற்றே யுளபான்மைத்
துள்ளும் பற்றத் துற்றனள் பின்கா லுரைசெய்வாம். 59(153)



நூகுநபிமகன் யாபிதின்மகன் சுவைதின்மகன் சவுகறு

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

குணதிசை யாளுங் கோமா னியாபிது குமரன் வன்மை
நிணதிசை சுவைதின் றான்ற னெடுமுடி சவுக றென்போன்
கணதிசை யிகலி வெம்போர் கடந்தருஞ் சிறைகள் வாரி
மணதிசை முன்னோ னுற்று மகிழ்ச்சியி னிருக்குங் காலை.
60(154)

அல்கால் மீது பழிதீர்க்க சவுகறின் தந்திரம்

முன்னவ னிருப்பக் கன்னான் முதிர்வனத் திடையிற் பற்று
மன்னவ ளோடு மின்பத் தாக்கமே கொண்டு நிற்கு
மின்னவன் றனக்கு வென்றி யியல்பினிற் றிறமுங் கூறி
மன்னவன் சவுக றென்போன் வரைந்தனன் முடங்க
லொன்றே. 61(155)

ஓலைபெற்ற கன்ஆன் சவுகறின் மகளைக் கேட்டல்

உன்னுடன் பிறந்து முன்பா லுயர்பதி வளிக்காஅ நின்றா
னென்னுட னமர்செய் திங்ங னிருஞ்சிறை பலவுங்
கொண்டான்
றன்னுடன் பொருது மியாமே தலம்பல கவர்ந்து கோடு
மின்னுடன் படுகி லென்ன விளையவன் வாசித் தோர்ந்தான்.
62(156)

யாபிது பேரன் பானின் றெய்திய வோலை யோர்ந்து
தாபிது நன்று நின்றன் றவத்தொடு மரிதிற் பெற்ற
மாபிதிர் மகவை யென்பான் மணமுடித் தளித்தி யேலென்
றாபிதி ராளைக் கொண்டோ னனுப்பினன் முடங்க லொன்றே.
63(157)

வேடனுக்கு மகளைத்தர இசையேன் எனல்

வரைந்தவிவ் வாய்மை யன்னோன் மனதுற வுணர்ந்து மற்றோர்
நிரைந்தவா சகத்தி னோடும் நிறுவிய விடையி னோடும்
விரைந்திடும் வீரத் தோடும் விளக்குவான் முடங்க லொன்றே
கரைந்திலா தனுப்பக் கன்னான் கருத்தொடும் வாசித் தானால்
64(158)

படர்தருந் திசைக ணான்கும் பரவிய சீர்த்தி யோடு
மடர்பவ ருடனும் போர்செய் தமைதரும் பதிகள் வவ்வித்
தொடர்தருந் திறைகள் கொண்டுந் தொகுத்திடு முறுப்பி
னோடு
மிடறதி யாது மெய்தா திருத்தலே யரசின் மாட்சி. 65(159)

வழுவின்றி நியதி சொல்லு மாதவ ராசு கூறும்
விழுமிய செல்வத் தோடும் வேந்தனை யென்னி னன்று
கொழுவிய கருத்தொன் றில்லாக் கோட்டகம் வேட்டை
வேட்ட
லெழுதொழி லாள னென்னி லியாவரே பொருந்து வாரே.
66(160)

நின்னிடை வினைக னோக்கி னிருபர்கண் மைந்த னன்று
பொன்னிடை புகழ்ந்து நின்றா ரல்லவர் பொருந்து வாரே
லென்னிடை யிருந்த செல்வி யிணங்குமோ வேடற் கென்ன
வன்னிடை யினைய கண்டா னழற்பொறி யுள்ளங் கண்டான்.
67(161)

சீற்றங்கொண்ட கன்ஆன் தமையன் முன் செல்லல்

கண்டன னுள்ளங் காந்துங் கதத்தினன் கன்னா னென்போன்
வண்டணி மலர்த்தா ரல்கால் மன்னவன் முன்ன ரெய்தி
மிண்டணி யுளத்தி னோக்கி மிகைப்பொடு ஞால மெங்குங்
கொண்டனை நெறியோ யென்னப் பற்பல கூறுகின்றான்.
68(162)

தன்னை அவமதித்த சவுகறைத் தண்டிக்க படை கேட்டல்

ஒருவனை யரிதிற் பெற்று மொருமையி னிருவ ராகிப்
பெருகிய சிறப்பி னின்றே வளர்ந்தனம் பிரிவி லாது
கருதுநந் தந்தை கொண்ட கடனில மனைத்து நீவிர்
வருமுறை தாங்குந் தன்னால் வளங்கெட விருந்தே னியானே.
69(163)

சொல்லினாற் கொண்ட பேறுந் தொழிலினாற் கொண்ட பேறு
மல்லினாற் கொண்ட பேறும் வயிரந்தாற் கொண்ட பேறுங்
கல்லினாற் கொண்ட பேறென் றிருந்தனன் கலங்குந்தெண்ணீர்
புல்லினாற் கொண்ட பேறாய்ப் போயிற்ற தின்று மன்னே.
70(164)

மன்னவர் முதல யாரும் வழிபடுந் திறமுங் கேட்கும்
பொன்னவ மணிக ளேதும் புகழ்நிலை கொண்டு நிற்ப
நின்னலன் கொண்டு மெய்ப்பி யென்பதும் நிலைத்த தந்தை
தன்னல மியாவு மென்பாற் றகையின்றி வீந்த தன்றே.
71(165)

திறஞ்செயுஞ் செங்கோல் கொண்டு தேயமு மரபு மார்க்கத்
தறஞ்செயும் பண்பு மெல்லா மருங்கழ றாங்கு கொண்டாய்
மறஞ்செயும் வீரம் நின்று மானிடர் வாயாற் சுட்டு
நிறஞ்செயுந் தந்தை பேறாய் நெடுநகை தாங்கி னேனால்.
72(166)



அரசரி னல்லன் வீரத் தாண்மைய னல்லன் வெம்போர்
விரைசின னல்ல னொன்றும் விளைப்பதற் கல்ல னென்னப்
புரசைமா களிற்று வேந்தன் சவுகரே புகன்றா னென்றாற்
றிரைசெய்வா ருதியிப் பாரி லியாவரே செப்பா ரல்லார்.
73(167)

எங்களி னொருமை தன்னாற் காரிய மொன்றுண் டாக்கற்
கங்கவ னிட்ட வாய்மை யதற்கவன் மகவை யென்பாற்
பொங்கலின் மணஞ்செய் தீகென் றிசைத்தனன் புகன்ற
மாற்றத்
துங்களி னுள்ளா னல்ல னென்னவு முரைத்தா னன்றே.
74(168)

புவியொரு கோலி னோச்சும் புரவலன் மைந்த னல்லன்
கவிவனந் திரியும் வேட்டை வினையுறுங் கருத்த னென்று
மவிமொழி யுரைத்தா னன்னோ னழித்தரும் புதல்வி
கொள்வான்
குவிதருஞ் சேனை யென்பாற் கூட்டுதி சிலவென் றானால்.
75(169)

பொறுக்கும்படி மன்னன் புத்தி கூறல்

நன்றுநின் னுள்ளத் தூடு நாடிய வெய்து மன்னோன்
வென்றியி னியாபி தென்போன் கிளையினில் விறலின் மிக்கான்
றுன்றிய சூழ்ச்சி யாளன் றொகுபடை யுள்ளா னா
லின்றமர் பொருவல் யாமே யிணையன்றென் றரசன்
சொற்றான். 76(170)

கன்ஆன் தமையனைக் கொன்று அரியணை ஏறுதல்

கேட்டனன் கோபச் செந்தீ கெழுமிய வகத்தி னுள்ளே
பூட்டனன் வயிரத் தோடுங் கண்களும் பொறிக டுன்ன
மீட்டன னுயிர்ப்பி னன்னோன் வேந்தன் சேயல்ல னென்றல்
நாட்டினை நீயு மென்ன நறுக்கின னதரத் தந்தம். 77(171)

சோரியிற் கண்க ளோடுந் துணைப்புயங் குலுங்க நீர்சூழ்
பாரினி லுற்ற யாவும் பதைபதைத் துள்ள மஞ்ச
மாரியி னோதை யென்ன மணித்தவி சுதைத்தான் காலாற்
றாரிருந் தடந்தோள் வேந்தன் றரையிடம் வீழ்ந்தா னன்றே.
78(172)

நிலத்திடை விழுந்த மன்ன னிவர்கழ லிரண்டும் பற்றி
வலத்திடத் தறைந்தா னாவி மாண்டன னுடனே கொண்டு
சலத்திடை கழுவி னாட்டு மெனவுரை சாற்றிக் கன்னா
னலத்திடை தவிசி லுற்றா னஞ்சினு மிருண்ட நெஞ்சான்.
79(173)

அணியணி பதிகள் வாழ்த்த வறிவுளர் மருங்கின் வாழ்த்த
மணியணி யமைச்சர் சூழமந்திரித் தவர்க ளேத்தக்
கணியணி வல்லோர் போற்றக் கதிரினுஞ் செழித்த மோலித்
திணியணி கொண்டு கன்னுன் செவ்வணை பொருந்தினுனல்.
80(174)

பற்படை கரத்தின் வீரர் பாய்பரி மதத்த யானை
பொற்பணி மணித்தே ராளர் பொலிந்தணி நிரையிற் சூழ
வற்புறு மடவார் செவ்வி யருமரை சிவிறி யேந்த
மற்புய வாகை யோடும் வளம்பெருந் தவிசி னுற்றுன்.
81(175)

சவுகறுக்கு எதிராக கன்ஆன் படையெடுத்தல்

பதியுறுங் குடிகூழ் நட்புப் பற்றினர் வாய்மை கொள்ள
வதிபதி யாய கன்ன னரும்படைத் தலைவ ரோடுங்
கதிபுரி வேகப் பாய்மா கரியணி வயவ ரோடு
மதிர்கடன் முரச மார்ப்ப வமர்பொர வெழுந்தா னன்றே.
82(176)

வெள்ளமொத் தனீகம் வேந்தர் வெவ்வரி யொத்துஞ் சிந்தை
கள்ளமொத் திருந்த வேந்தல் கதிரொத்து மழலிற் போந்து
கொள்ளவைத் திருந்த செம்மான் குணதிசை சவுக றென்போ
னள்ளகத் தரிதிற் சுற்றி நலிதரப் பொருதா னன்றே.
83(177)

தோற்ற சவுகறைக் கொன்று அவன் பெண்ணை மணத்தல்

அவன்றகை சேனை யாவு மழித்தணி நகரிற் புக்கி
யிவன்றகை வீர ரங்ங னிருநிதி சிறைகள் வாரிப்
பவன்றகை யழித்துக் கையிற் பற்றிப்பெற் றிருந்த பெண்மா
னவடனை யெடுத்து மீண்டா னரசிய லெடுத்த கோமான்.
84(178)

தன்னர சிருந்து வந்த தவநிதி யொருபால் சேர்த்தி
மன்னவன் சவுகர் சென்னி களைந்துவன் கழுவி னிட்டுப்
பின்னவன் பெற்ற வண்பூஞ் செழுந்தொடைப் பெண்ணிற்
சூட்டி
யென்னர சுலக மென்ன வியல்புற்றுன் கன்ன னன்றே.85(179)



சவுகறு மகன் பல்கு பழிவாங்கத் துடித்தல்

அருமையி னீன்ற தந்தை யழிகழு வேற்றி யன்பி
னொருமையிற் பிறந்த நங்கை யொண்டொடை யணிந்தா
னென்னக்
கருமையிற் படைகள் சேர்த்துக் கடுஞ்சின முன்னித் தாவப்
பெருமையி னெழுந்தான் சவுகர் பெறுமகன் பல்கென்
போனே 86(180)

பல்குவின் சேனை கன்ஆனின் படைகளை முறியடித்தல்

வாளணி வலத்தார் வஞ்ச மனத்தினுர் வன்மை வேகக்
கோளணி யுளத்தார் சாபக் கோலினுர் வெற்றி மாலைத்
தோளணி திறத்தார் சீற்றந் துன்னிய கண்ணுர் வீரத்
தாளணி யுடையார் மொய்ப்பத் தலைவர்கோன் வந்தா
னன்றே. 87(181)

வெய்யவே லரசன் கன்னுன் வியனகர் கடலிற் சூழ்ந்து
மொய்யவன் சேனை யெல்லா முறிபடப் போரிற் றுக்கி
யையரி கண்ணுர் வாரி யழிவுகள் பலவுஞ் செய்தான்
கையணி வலத்தின் சவுகர் கான்முளை பல்கென் போனே.
88(182)

கன்ஆன் தப்பியோடல்

கடுவிசைப் பரியின் வீரர் கடிதரு மனைந்தஞ் சேனை
விடுவிசை யிரிந்து வேகம் வீழ்த்திட மாய்த்த வாற்று
லடுவிசை யணிந்த கன்ன னயர்வொடுங் கவுதா ரிய்யா 89(183)
நெடுவிசை நகரம் விட்டு நீந்தினன் புறந்து மாதோ.

தலைநகரை பல்கு அழித்துச் சென்றபின் கன்ஆன் திரும்பல்

படர்தரும் படைகள் மிக்குப் பலிகொடு வாளிற் கீந்து
தொடர்தருங் குழுவி னேடுஞ் சுடரெழுந் திசையிற் புக்கா
னடர்தரு மனேக வீர ரழிதருங் கன்ன னென்போ 90(184)
னிடர்தர நகரி னுற்று னென்புட லனைய நீரான்.

நடந்ததை எண்ணி கன்ஆன் புலம்புதல்

பன்மணி யாச னத்தின் பரிவுற்று நெஞ்சின் மீதே
வன்மணி பூண்டு காலின் மரக்கலக் கருத்தி னேடு
நன்மணி யொளிவில் லென்ன நனியின்றி முகமுங் கொண்டு
முன்மணி யலங்க லார்பான் மொழிகுவன் கன்ன னன்றே.
91(185)

காரமு மதமும் வன்மைக் கருத்துமொய்த் திருந்த சேனை
வீரமுந் தனதிற் கொண்ட மிகுபொருட் பெருமை வெல்லுஞ்
சூரமு மினைய வெல்லாந் தொலைத்தணி பல்கென் போன்றன்
பாரமுங் கையிற் கோடற் பரிவன்றி வேறு முண்டோ. 92(186)

### வேற்று அரசர்களுக்கு கன்ஆன் தூது அனுப்பல்

என்றிவை யிசைத்துத் தன்பா லிணங்கிய வனீக மற்றுந்
துன்றிய புறத்து முற்ற பெரும்படைத் தொகுதி வேற்றார்
வன்றிறற் சேனை யாவும் வனைவித்து மினுகின் மைந்த
னன்றவன் பாலு மோலை யனுப்பித்தான் மன்ன னன்றே. 93(187)

### ஊசு மன்னன் உதவ முன் வருதல்

குரவரி லொருவற் கொன்றும் பிறர்குடி கொண்ட பெண்ணு
முரவரிற் பற்றுங் கன்னா னுவன்விடு முடங்க னோக்கி
வரவரு மாத ரீன்ற மகள்மக னூசென் றோதுங்
கரவலி யுடையா னின்ன காரியந் துணித லானான். 94(188)

### ஊசுவின் ராட்சசத் தோற்ற வருணனை

எழுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

வான முந்திசை யடங்க லுங்கரைய
மண்ட லத்தெழு பெருந்திரை
பேன முஞ்சிதறி வந்த வெள்ளமது
பின்க ரண்டையுறு தாளினான்
மான முந்தகை யுறுந்த வத்துடைய
மன்ன வர்க்கொரு பெரும்பிணி
யான வஞ்சமுறை சிந்தை யான்வன
மடங்க லுந்திரி மடங்கலான். 95(189)

ஓடு கின்றநதி யந்தெ ளிந்தபுன
லொக்க வள்ளிடு சிறங்கையான்
காடு நின்றபல வண்ட வன்மிருக
முங்க லங்கநொடி யிட்டுளான்
பீடு கொண்ட நெடு விண்டினங்களை
பிடுங்கி விட்டெறி திறத்துளா
னோடு கொண்டபட லங்கனஞ் சிதற
வப்பெழப் பிழியு மங்கையான். 96(190)

விண்டி னங்களி னுலம்பொ ருந்தினமு
மிண்ட டந்தரு புயத்தினான்
கண்டி டுந்திசைக ணைந்தி டும்படி
துவைத்திடுங் கடிய காலினான்



மண்டி டும்பல படர்ந்த வல்லுயிர்கள்
வெளவி மெல்லுமகழ் வாயினா
னண்ட மும்புவன கண்ட முங்கிடுகி
டென்ற திர்ந்திட நடந்துளான், 97(191)

நின்ற நின்றதிசை சென்று றும்பவன
நேரெ ழாதுதடை மேனியான்
றுன்று செந்தழ லெரிந்து வண்பொறி
துதைந்த கண்ணெனு நெருப்பினான்
கொன்று வெம்பழி யனந்த மன்னிய
கொடுங் கயஞ்செறி யுளத்தினா
னின்று மன்றுமன மஞ்ச வன்றொழி
லியற்று கின்றமத வீரனே. 98(192)

குயினி ருந்திசை யடங்க லுங்குலைய
குளறு மவ்விடி பறிப்பவன்
வயின கன்றதிரை யதுக லங்கவிடை
வருதி மிங்கிலமும் வாருவான்
வெயிலி டுந்தழல் வெதும்ப வன்பொடு
விரும்பி யுண்டிடு வதற்பவான்;
பயிலு மெண்கிரிக ளடியிடுந் தகைய
பாத மெட்டிய விதத்தினான். 99(193)

### ஊசு பெரும்படையுடன் வந்தடைதல்

இனைய வன்றிற னிவன்றொ டர்ந்தபடை
யெண்ண மோரெழு சதாயிர
மனைய வீரரினி னின்ற மன்னியர்க
ளறுப தோடொருப தெழுபதாங்
கனையு லாவுகட லதிர்த லென்னவுயர்
ககனு லாவுமழை யென்னவே
வனையி னன்பொடு மருங்கு மொய்ப்பவிசை
மன்ன யன்கடி தெழுந்தனன். 100(194)

பேரியுந் தவிலு மூது கொம்பொடு
பெருஞ்சி கண்டிபறை சின்னமும்
தாரை யுங்குளல்க டண்ண மும்முழவு
தக்கை யோடுறு தடாரியும்
பாரி னின்றெழு முழங்கு மோசைதிசை
பம்ப மூரிமத யானையும்
வாரி யுங்ககன லோக முங்கொளும்
வதிந்த தந்நிலை யதிர்ந்தரோ. 101(195)

வான ரத்தினுமு யர்ந்து வெய்யசுழி
  வாயு வின்கதி கொளும்பரி
யூன ரத்தமொளி ரும்பெ ரும்பிறைய
  தொத்த கோடுய ரிபம்பல
கான லர்த்தமலர் தொங்க லங்கொடி
  கணங்கொ ணல்லிரத மும்பிற
மான லத்தசிவி கைத்த லத்தினும்
  வதிந்த மன்னர்புடை போதவே. 102(196)

அயிலு மம்புமொளிர் வாளும் வேலுமெழி
  லத்த முற்றபடை பல்லவும்
வெயிலெ னும்படி யிலங்க வெண்டிசை
  விரிந்த வெள்ளமென னீகமேல்
வியனு றும்படி நடுப்பு றத்தொரு
  விளங்கு வெற்பென மதத்தவ
னயனி லங்குடிக ளஞ்சி யஞ்சிட
  வடர்ந்த வேகமொடு வந்தனன். 103(197)

இருபடைகளும் கிளம்பி பல்கின் நகரை வளைத்தல்

எழுதி விட்டவ னரும்ப திக்கிடையி
  னுற்று மந்நக ரிரும்படை
முழுது மொய்த்திட வெழுந்து வஞ்சமுறை
  மூத ருந்தலைவ ரிருவரு
மெழுப தின்மரு மருங்கி னுற்றவ
  ரிரண்டு மைந்தின திலக்கமும்
பழுத றுஞ்சின மிகுந்த சேனைகள்
  படர்ந்த டர்ந்ததிரை யொத்தவே. 104(198)

பூத லங்களு நடுங்க வெண்டிசை
  பொருப்பெ ழுந்துகளின் விம்மவே
பாத லங்களி னுறுஞ்ச லங்கசிவ
  பான்மை வேர்வையது பரவவே
மீத லங்கன மெரிந் திடும்படி
  விரிந்த கண்பொறிகள் சிந்தவே
தீத லர்ந்தவுளி வஞ்சமும்புனை
  செறிந்த வஞ்சிபுய மாருமால். 105(199)

வேக வெம்பரி தருங்கு ளம்பினடி
  மேக மீதிடை குதிப்பவே
நாக வெங்கரி படர்ந்த வெற்பிடை
  நடந்த ளாவிதிசை துன்னவே



பாக மண்டிரத மாக வாயுவொடு
  பாழி யாழிமுன முன்னவே
யாக வெங்ஙனு நிறைந்து தண்கவிகை
  யரசர் கேதன நெருங்கவே. 106(200)

வெய்ய மன்னவர் தரித்த மோலிகள்
  விளங்கு மொண்கதிரி னெங்குமே
செய்ய கன்னிய ரெடுத்த வெண்கவரி
  கற்றை யிந்தன சிறக்குமே
மெய்ய ணிந்தமணி யார மீனின
  மலிந்த மீதெழு பெருந்துகண்
மொய்ய லர்ந்தகக னென்ன நன்னில
  முடங்கி டும்படி நடந்ததே. 107(201)

திண்கொ ளும்புய திறத்தி னரரிகள்
  சீறல் கொண்டுவரு மேறனோர்
கண்கொ ளும்பொறி தழற்று ளாரிதழ்
  கடித்தி ரத்தமுணும் வாயினோர்
மண்கொ ளுந்திடர் பதத்தி னர்பெரிய
  மனுட னேடிவர்கள் யாவரும்
வண்கொ ளும்பலு கிருந்த மாநகர்
  வளைந்த டர்ந்துபொர லுற்றனர். 108(202)

பல்குவின் படை எதிர்த்துப் புறப்படல்

கதிகொ டுத்தநடை பரியினத்தொகுதி
  கதமு ருத்தகரி யினமுமே
விதிகொ டுத்தவணி ரதவி னத்தொடடர்
  விறன் மிகுத்தபடை வயவரும்
பதிகொ டுத்தமுறை யதிப தித்திரள்கள்
  பலவர் சுற்றவள வுரையிடாக்
கொதிகொ தித்தபடை பலுக னுப்பிவிட
  குரைக டற்கிணையி னெதிரவே. 109(203)

பயங்கரப் போரின் வருணனை

சூறை யென்றுவரு வாயு வுங்கனலி
  சூழவொன்றிய வெனும்படி
யேறெ னுங்குரல் குலாவு வன்பறைக
  ளீபெ ரும்படை முழங்கவே
கூறு கொண்டபல வாயுதங்களொரு
  கூடெ னுந்திசை நிறைந்திட
நாறு தும்பையினர் சாரி வந்துசமர்
  நாளொடும் பொருதல் கொண்டனர். 110(204)

கூடு வாரிடையி ஞர வீரனெழில்
    கூசு மாயுதமி லாததோர்
பாடு மேரினைய மானை யோடுகொடு
    பரவு போரினடு வாகியே
யாடு வானிசைகள் பாடுவான் வெகுளி
    யாறு வானதிர நானிலம்
ஓடு வானணிகள் சாடுவான் மணல்க
    ளூது வானெதிரின் மோதுவான். 111(205)

தோள டித்திடுவன் மார்பி டித்திடுவன்
    சூறை யொத்திடுவ ஞர்கழற்
றுளு தைத்திடுவன் மீத ரைத்திடுவன்
    றுவி னெக்குவ னுருமதத்
தாளெ டுத்திடுவன் வான கத்திடுவ
    ஞக யக்குவன்ம தாசலக்
கோள ழித்திடுவன் மேலு யர்த்திடுவன்
    கூசெ னப்பெயர் மறத்திஞன். 112(206)

பல்கு தோற்று கொல்லப் படல்

கால ழிந்துபலர் சீர ழிந்துபலர்
    காவல் சிந்தியழி வாகவே
வேல ணிந்தகர வீர ரும்பட
    விரோத மைந்தனகர் மேவியே
நூல ணிந்துமணி யாதும் வஞ்சியர்க
    ணூறி யுஞ்சிறைகள் வாரிஞர்
மேல ணிந்திடுக ஞனு மாகொடிய
    வீர ரும்படையி ஞேருமே. 113(207)

பொழுதெ ழுந்திசையி னைகர மும்பதன
    மும்பு னைந்தபலு கென்பவ
னழுதெ ழும்படி யருங்கொ டுந்தொழிலி
    னணிகை கொண்டுடல் பிளந்தனர்
குழுவு டன்செறி யணங்கி னங்கள்பொருள்
    கொண்ட ரும்பதியி னன்புடன்
வழுவ றுந்தலைவ ஞெருவ னின்றுவர
    வந்தி டும்பொழுதி னன்றரோ. 114(208)

பல்குவின் மனைவி ஊசுவின் மனைவியாக்கப்படல்

அன்ன வன்றகைய தொங்க லந்தொடை
    யணிந்த பெண்டினை யருந்திறன்
மன்ன வன்பெரிய கூசெ னும்பதி
    மணங்கொ ளும்படி முடித்தன



னின்ன வண்டர்பல வென்று வாகையணி
    யின்பு டன்றிகழ் புயத்திஞன்
கன்ன லங்கழனி தன்ன கர்த்தவிசின்
    வந்த னன்கண மிகுத்துளான். 115(209)

கன்ஆன் பெருமையோடு ஆளத் தொடங்குதல்

வஞ்ச மன்னர்பல ருந்தி றைக்குறுதி
    வாங்கி நின்றடி விளக்கவே
விஞ்சை நன்னிலைய ராசி ஞேடுசுவி
    விந்தை பாடலிசை யின்புறும்
வஞ்சி யன்னவர் நடம் புரிந்திட
    வனங் கிடந்தநிலம் யாவுமோர்
துஞ்சு தண்குடை யிருந்த னன்வலிய
    கூசு தந்தசுத ஞமரோ 116(210)

கோடி னின்றமலை மீதிருந்தகொடி
    கொற்ற முற்றமலர் மாலையான்
பாடி னின்றபல சேனை மந்திரர்
    பணிந்தி டுங்கழ லுரத்திஞ
ஞடி நின்றவிற லாழி யானதிகன்
    ஞனெ னும்பெயரின் மன்னர்கோன்
பீடி னின்றன னிரைந்த பின்வழி
    பிரித்தி தத்தொடு விளக்குவாம் 117(211)

கன்ஆனரசுரிமைப் படல முற்றிற்று.

ஆகப் படலம் 4-க்கு திருவிருத்தம் 211.

# 5. நமுறூதரசுரிமைப் படலம்

### வருங்கேடறியா வன்மனன் கன்ஆன்

கலிநிலைத்துறை

இனைய தன்மையன் பருதியங் கண்ணின னியல்பி
னனைய தன்மையர் தேர்ச்சியிற் றுணைவர்நல் லரசர்
வனைய வொண்மணி யரியணை வளமுடி யிலங்க
மனைய வாழ்க்கையி னிருந்தனன் வருமதி யறியான். 1(212)

### சோதிடரை அழைத்துக் கூறியது

செழீஇய மண்டபத் தாசனத் திருந்திடும் செம்மல்
குழீஇய மைந்தரிற் சுணிதவல் லவர்தமைக் கூவி
வழீஇய சிந்தையி னயர்வொடு மதிமுகம் கூம்பத்
தழீஇய வன்பொடுஞ் சிலமொழி சாற்றுவ னன்றே. 3(213)

### கண்டகனவின் பொருள் வினவுதல்

பொன்னின் மண்டப வறையிடம் பூவணை யதன்மே
லென்னி னல்விழி யியல்பொடுந் துயிலெழும் போதின்
மன்னி நின்றணி வலத்தொடு மற்புயத் தொருவன்
றன்னி ளுக்கிரத் தடர்ந்தனன் றடக்கரத் தன்றே. 3(214)

வண்டு றுக்கின னிருகரங் கடுப்பொடு வலத்திற்
கொண்டு றுக்கிமண் ணிலத்திடை யறைந்தவன் கொடிய
மிண்டு றுக்கியான் மார்பிட மேம்பொழு துரப்பிப்
பண்டு றுக்கொடு மெனைநிலம் படுத்தினன் பகையன். 4(215)

பூண்ட வண்மணிக் கழுத்தினை மடக்கினன் பொருப்புக்
கீண்ட வுந்திய விடியெனக் குத்தினன் கிளராத்
தாண்ட வன்பொடு மழுத்தியென் னுடலுளந் தயங்க
நீண்ட குந்தம்வெம் புண்ணிடை நீட்டல்போ னிகழ்த்தும்.
5(216)

பரவை மாநிலத் தெண்டிசை மன்பதை பழிப்ப
விரவை போன்றுளத் திப்புவிக் கிழிதருஞ் சுமைநீக்
குரவை போற்றளத் தரசரின் மதிப்புறுங் கொடியோ
னுரவை மன்னன்கொ லெனநகைத் துறுக்கின னன்றே.
6(217)



### சிலநாள் கழித்து சோதிடர் பொருளுரைத்தல்

இன்ன வன்கொடுங் கனவுகண் டயர்வொடு மெழுந்து
பன்ன லென்னெனத் தயங்கின னிதற்குறும் பயனே
நன்ன யத்தொடு முரைத்திரென் றிசைத்தன னன்னூான்
மன்னர் தங்களி னவதியின் வாங்கினர் சிலநாள். 7(218)

கவன வாம்பரி யன்னவ னுரைபல கணித்துப்
பவன மேமுத லியறரும் பரிவினூ லாய்ந்து
தவனை யாயபி னதற்குறுந் தகுதியி னடைந்தே
யவனி யாளுடை மன்னன்முன் னனைத்தையு மறைவார்.
8(219)

### அரசழிக்கும் மகன் பிறப்பான் எனல்

துயிலி டத்தினிற் றேற்றுமத் திறத்துடை தோன்றல்
பயிலி டத்தினும் வலியுடை பாலக னொருவ
னயலி டத்தினி லின்றியே யகத்தினிற் பிறப்பன்
மயலி டத்தினுன் மன்னவ நின்னர சழிப்பான். 9(220)

திறத்த நின்னலத் தரசினைச் சிதைத்திடற் குரிய
மறத்த வன்மையங் குழவியே வயினிடங் கருவா
யுறத்த ருந்திருத் தாயரு முளளென வுரைத்தா
ரறத்தை நீக்கிய மன்னவன் கேட்டுள மயர்ந்தான். 10(221)

### சல்கா வயிற்றில் சிசுவின் முழக்கம்

தரிகொ ளாக்கருத் தொடுமுழற் றலைவர்கோன் பிணையற்
புரிகொ ளாதெடு மாட்சியின் பொலிவயி னிடத்தே
நெரிகொ ளாதெழுங் கருவருங் குறிப்புநெக் கிடிபோ
லுரிகொ ளாமுழக் கடிக்கடி யுரப்புதல் கேட்டான். 11(222)

சிந்தை தேர்ந்தவ ருரைத்ததுஞ் சிலபகல் கழிய
விந்தை யாயிவண் மதித்திடுங் கருவுமிக் கதிரப்
பந்த மாய்முழக் கிடுவதும் பார்த்துளத் தெண்ணி
யந்த வல்வினை யிந்தநேர் குறியென வயர்ந்தான். 12(223)

### கருவை அழிக்க கன்ஆன் எழல்

நிலத்தி டத்தினி னின்றிய நெடுமுழக் கதனுல்
வலத்தி டலத்தினள் மதிமுக நோக்கிநின் வயிற்றிற்
பலத்தி டத்தொடு முறுகரு பரிவுறு மனுவின்
குலத்தி டத்தல வென்கொலோ வென்னவுங் கூறி. 13(224)

நின்ன யத்தொடும் வயிற்றையும் கிழித்துநின் றதிரு
மன்ன வற்புதக் கருவையு மழலெழ வழிப்ப
னென்ன முற்றிய சினத்தொடு மெழுந்தன னப்போ
துன்ன தத்துய ரிருந்தொரு பேரொலி கேட்டான். 14(225)

அசரீரி எச்சரிக்கை கேட்டு அயர்ந்தனன்

வன்க ணுற்றனை யிவ்வினை மறுப்பியிவ் வயிற்றின்
றன்க ணுற்றதை யழிப்பது தகுதிகொ லன்றே
நின்கண் மற்றதன் பழிகொளற் குரனின்று நிலைவைப்
புன்க ணுற்றவன் மாற்றுங்கொ லெனப்புகன் றிடவே.
15(226)

கேட்ட மன்னவன் கலங்கினன் கிளைத்திடும் புதுமை
யூட்ட தீதென வயர்ந்தனன் பொருமிநெட் டுயிர்த்தான்
வாட்ட முற்றவ னிருந்தனன் வயிற்றிடக் கருவுங்
கோட்ட முற்றிடுங் குறிப்பொடும் கூடிய திங்கள். 16(227)

கருமுற்றி சல்மா குழந்தை பெறல்

மண்ண ருந்தியும் புளிதுவ ரருந்தியு மணிவாய்க்
கண்ண ருந்தலம் வெளிர்த்துமுட் கருவளர் வயிற்றிற்
றிண்ண ருந்தியு மயிரினம் பொடித்துத்தன் செயல்கள்
வண்ண ருந்திலா ளயர்ந்தனள் மன்னவன் போலும். 17(228)

குன்ற மொன்றிய முலைமுகங் கறுத்தும்விற் கூன
லென்று மொன்றிய நுதலது பசிந்துமெய்ப் பிளைப்பாய்
நின்ற நின்றநல் லிடந்தொறு மயர்கொளு நெடிதுந்
துன்று திங்களு நிறைந்துபூண் டுயல்வரத் திகைத்தாள்.
18(229)

தொடர்ந்த நோதலிற் கண்டுளி யடிக்கடி துளித்துப்
படர்ந்த மர்தர்க ளருமையிற் பரிவினிற் பதறு
திடந்த ருங்கொடி யிவ்வுல கிருண்டவன் பாவ
முடன்ற தோருரு வெனமக வுவப்பொடு மீன்றாள். 19(230)

சிசுவின் பயங்கர உருவம்

எழுந்த வல்லிருட் படலங்க ளிருமனக் கயவ
ரழுந்து சிந்தையி லழுக்குமொத் தமைத்திடு முடலு
மொழிந்த நோக்கொடு யாறுகண் ணிரண்டொடு முதித்த
விழிந்த மைந்தனை மடிமிசை யேந்தின ளனையே. 20(231)



சிறு கருநாகம் சிசுவின் மூக்கில் நுழைதல்

திருந்த வுற்றவண் மடிமிசை சிறுகரு நாக
மருந்து வன்மையின் வெளிப்புறத் தெழுந்துள மஞ்சப்
பொருந்து லாயுறுங் குழவியின் மூக்கிடம் போத
வருந்தி நின்றுட றுணுக்குற மதிப்பொடுங் கண்டாள். 21(232)

கேட்ட மன்னன் சிசுவைக் கொல்ல ஏவுதல்

கண்ட போதினிற் பதறிவன் குழவியைக் கடிதிற்
கொண்ட போதெறிந் திளைப்பொடு மோடினள் குதித்து
மிண்ட போதன மன்னவன் முன்னணி மேவி
விண்ட போதினி லதற்குறு வினைபல சொல்வான். 22(233)

வெஞ்ச நீக்கிய வுலகினை நம்பெயர் விளங்கத்
தஞ்ச மாக்குற வருமக வன்றுமின் றழலி
னஞ்ச மாக்கிய கொடியைவல் லுடலுயிர் நையத்
துஞ்ச மாய்த்திடென் றுரைத்தனன் றுணைப்புய வலியான்.
23(234)

தாய் மறுத்துரைத்தல்

பரந்த நீள்வயின் சுமந்ததாற் பல்வகை யின்பஞ்
சுரந்த காதல னெனும்பெயர் தோற்றிய வதனுற்
புரந்த மன்னவ மனமது வினைசெயற் பொருந்தா
துரந்த ராவிடி னியற்றுத லென்னென வுரைத்தாள். 24(235)

காட்டில் எறியச் செல்லல்

சொல்ல வுங்கொடி யவனவ டேய்முக நோக்கி
வெல்ல வுந்தவி சழிக்கவும் வீரமுற் றவனுற்
கொல்ல வுங்கருத் துதவுத லில்லெனக் குறித்தா
யல்ல வும்புறத் தொருதிசை யெறிகவென் றறைந்தான்.
25(236)

பதியி டத்தல வப்புறங் கடத்திடை படர்ந்த
மதியி டத்தல விலங்கின மனதுற மணக்கு
மிதுவ லத்துடை காரிய மென்றன ளிவளு
மதுவ லத்தொடு மனையொடுங் காட்டகத் தெய்தாள்.
26(237)

ஆயனிடத்து குழந்தையைக் கொடுத்தல்

தழலு மப்புறம் படர்தருங் கரியெனத் தாங்குங்
குழவி யீன்றவ ளவணிட மொருகுட மேய்ப்பா
னழலி ஞன்றனைக் கண்டன ளடுத்துநின் றனக்கு
மழலை வேண்டுதி யென்றன ளணிமணி மடமான். 27(238)

எடுத்தி டும்பய னென்னென வினவலு மவன்சொற்
றொடுத்தி டும்படி நின்பணி தொண்டனு யிருப்பன்
றடுத்தி டாதுகொண் மின்னென மடமயில் சாற்ற
வடுத்து நண்பொடும் வாங்கின னருங்கருங் குழவி. 28(239)

அதன் நாற்றம் பொருது மாடுகள் சிதறியோடல்

பார வெம்பவத் துருவினை யளித்திடும் பாவை
சேர வன்பொடுந் தன்னகத் தடைந்தனள் செறிந்த
கார மொன்றிய குழவியைக் கரத்தினி லேந்திக்
கோர வானிரை புக்கினன் குறும்பொறை நாடன். 29(240)

படர்ந்த நன்னிரை யிடையினிற் பரிவொடும் வைத்தா
னடர்ந்த வானின மதனுறு வாடையா லஞ்சித்
தொடர்ந்த வல்லுரத் தொனியொடுந் திசைதிசை சிதறிக்
கடந்து போயின குறும்பொறை நாடனுங் கண்டான்.
30(241)

சிசுவைத் திருப்பிக் கொடுக்க எண்ணல்

சிதறி நின்றிடுஞ் சுரபிக ளொருதிசை சேர்க்கு
மதரி னிற்பவற் ககத்தொடு முடலமு மயரப்
பதறி நிற்கவு மிவையெலாம் பற்பல விடத்தே
விதறி நிற்பவும் வருவனோ வினைசெயுந் தொண்டன்.
31(242)

முயலு நாயனுக் குறுவினை முறையினின் மாறு
மியலு மித்திறத் தடிமையாம் படைத்தலென் னென்ன
வயர்த லோடுமுண் ணினைத்தவ னளித்திடு மவள்பால்
பெயர்தலோடருள் வதுநய னென்னவும் பிரித்தான். 32(243)

தன்னிடம் மீண்ட சிசுவைத் தாய் அடித்தல்

எண்ண முற்றவ னிருக்குமக் காலையி னீன்றுள்
வண்ண முற்றிடுங் குழவியைக் காண்குறு மதித்து
நண்ண லுற்றன ளணிபெற நடந்தவை நவின்றும்
அண்ண லற்றதீ தென்றருங் கரத்திடை யளித்தான்.
33(244)

தரித்த வென்னிடந் தன்னையுந் தந்தையு மழிக்கு
முரித்த வஞ்சக னஞ்சக னெனவொதுக் கிடமும்
பிரித்தி டற்குறும் பாவியென் றுளமிகப் பேதித்
தெரித்தி டும்படி யடித்தன ளீன்றிடுஞ் சல்கா. 34(245)



ஆயன் சொன்னபடி ஆற்றில் எறிந்தாள்

சினந்த டிப்பது குறும்பொறை நாடனுந் தெரிந்து
மனந்த டித்திட லென்னென வழியொடு மறுத்துப்
புனந்த லத்தினிற் காட்டினிற் பொருப்பினி லிழியும்
வனந்த டத்தினி லெங்ஙனு மெறிகென வரைத்தான்.
35(246)

சொல்லும் வாசகத் தொடுமவ டோன்றலைக் கொடுபோய்க்
கொல்லும் வல்விலங் குலவிய குறியிட நீக்கா
தல்ல லுற்றிடச் சுழித்தெழு மாற்றிடத் தெறிந்து
மல்ல லுற்றநன் மண்டப மடைந்தனள் மடவாள். 36(247)

கரையிடத்து ஒதுக்கியது ஆறு

கலிவிருத்தம்

நுரையிடஞ் சுழித்தெழு நொடியி னந்நதித்
திரையிட மெனுங்கரத் தினிதினிற் சேருற
வரையிடத் தணைத்திடு மனையின் பான்மையிற்
கரையிடஞ் சேர்த்தது கரிய வண்ணனே. 37(248)

புலி வந்து பாலூட்டியது

அலையிடத் தலைவிலா தருகி னுற்றபின்
மலையிட மலைவிலா வெய்ய வன்புலிக்
கலையிடங் கலைவிலாக் கத்தன் வாய்மையான்
முலையிடங் கொடுத்திட முன்ன ரெய்திற்றே. 38(249)

வேலையங் கரையிடை மேவு மைந்தற்குக்
காலையு மாலையுங் களிப்பி னெய்திநற்
பாலையுங் கொடுத்துடற் பரிவின் மோந்துதன்
சாலையி னடைந்திடுந் தரக்குத தாயரோ. 39(250)

வாயிரு கடையினும் வாடை வீக்கமு
மேயிரு வரியொடும் வெருண்ட சிந்தையி
னுயிரு புலியென வாக்க மூட்டலிற்
சேயிரு தலத்தினே செம்மை கொண்டதே. 40(251)

ஆயர் குலப் பெண் அனைவர்க்கும் உரைத்தல்

வெம்புலி யிவ்வணம் வளர்க்கு மெய்மையு
நம்பில னலிவிலா திருக்கு நாளினிற்
பம்பிய நிரைபல பரிவின் மேய்த்திடும்
வம்பிய லொருவன்சொன் மடந்தை கண்டனள். 41(252)

நோக்கினள் புதுமையி னாத னத்தெனத்
தேக்கின ளுளத்திடை சிந்தை முன்னுறப்
போக்கினள் முல்லையம் புறவு பாடியி
னுக்கின ளனைவர்க்குங் கண்ட காட்சியே. 42(253)

ஆயர் வந்து எடுத்துப் போதல்

ஆயர்க ளிவ்வுரை யரிதிற் கேட்டனர்
கூயினர் புதுமையிற் கூர்ந்தி யாவரும்
போயினர் புனற்கரை பொருந்துங் கார்நிறச்
சேயினை யெடுத்தனர் கொண்டு சேர்ந்தனர். 43(254)

நமுறூது எனப் பெயரிட்ட காரணம்

முடைகமழ் பாடியின் முல்லை யாயர்க
ளுடைமையின் வளத்தொடு முரத்த வெம்புலி
மடியமு துண்டிடு மதிப்பி னாற்பெயர்
கொடிநமு றூதெனக் குறித்திட் டாரரோ. 44(255)

வளர்ந்து பருவமெய்தினன்

இயல்பொடு மவரவ ரிட்ட வுண்டியா
லயலவர்க் கடிமையா லடரும் வெம்புலி
மயனுறுந் திறத்தினான் மறமும் வன்மையும்
வயனுமிக் குயர்ந்திட வளர்ந் தெழுந்தனன். 45(256)

ஆட்டிறப் பண்புட னூக்க மூட்டிய
தோட்டிற மனவலி துங்க மல்லலம்
வாட்டிற வினையொடு மலிய வாலிபந்
தாட்டிறப் பருவமுந் தகைய வெய்தினான். 46(257)

பாடி விட்டுப் போய் வழிப்பறிக் கொள்ளையனாதல்

காரியங் கொளும்வரை காக்கும் புன்மையின்
பூரியங் கொண்டவர் போன்று மின்னவன்
வீரியங் கொண்டபின் பாடி விட்டடர்
மாரியங் கோவனம் வழியின் மேயினான். 47(258)

ஈன்றவ ரிருவர்க்கு மெடுத்த பேர்கட்குந்
தோன்றுபு பயனிலான் சோரம் பற்றியே
கான்றரு வழியிடங் கரந்தி யாரையுங்
கீன்றுகொன் றுறுபொருட் கிடைப்ப வவ்வுவான். 48(259)



கொலைகாரக் கூட்டத்தின் தலைவன்

வழியிடை யெய்துவர் வதைத்து நற்பொரு
ளிழிவொடுங் குப்பையி னியற்றி மிக்குறும்
பழியிடை நின்றவன் பல்லர் தன்பணி
மொழியிடை நிற்பவே முயற்சி கொண்டனன். 49(260)

காட்டினும் வரையினுங் கவலை மேம்பொரு
ளீட்டியு மெறுழ்வலி யெடுத்த வீரர்கள்
மாட்டினுந் தன்னுரை மதித்தி யாவர்க்கும்
பூட்டினா னாணையே புன்க னாளனே. 50(261)

பற்பல வலத்துடை படையர் சூழ்தர
மற்பல புயத்துடை மன்ன னாயபின்
சிற்பல நாட்டினிற் சென்று சூறைகொண்
டற்பல நெறிகொண்டா னகந்தை கொண்டவன். 51(262)

கேள்விப்பட்ட கன்ஆன் அழைத்துவர ஆளனுப்பல்

சூரியன் வலத்துடை முனையன் பற்படை
வீரிய னொருவனென் றுரைக்கும் வெம்மொழி
வேரியந் தொடைப்புய வேந்த னற்கவு
தாரியம் பதிகன்னான் சாற்றக் கேட்டனன். 52(263)

அடுத்துரை யுணர்ந்தணி யரசன் றன்னிடம்
படுத்தவர் சிலர்தமைப் பரிவின் போந்தவ
ணிடத்துறு மேந்தலை யழைத்து வம்மென
விடுத்தன னன்னவர் விரைய லுற்றனர். 53(264)

கன்ஆனைக் காணச் செல்ல படைதிரட்டல்

வந்தவ ரழைத்தலும் வழியிற் கள்ளகப்
புந்தியன் றிரட்படைப் பெருக்குப் பொங்கவே
மைந்துடன் போதலே மதிப்பென் றுன்னியே
சந்தொடுஞ் சென்றிலன் றலைவன் முன்னரே. 54(265)

வருமவ ரவரெல்லா மறுத்தும் வவ்விய
பொருளொடும் பற்படை பொருநர் தம்மொடுந்
தெருளொடுஞ் சதுரங்கச் சேனை சூழ்ந்தபின்
மருணமு றூதிறு மாப்புக் கொண்டனன். 55(266)

### கன்ஆன் முன் நமுறூது தோன்றுதல்

கலி விருத்தம் [வேறு]

நலியாவிறற் கதிமாவொடு நகுமாமணி யோடை
யொலியானையு மெழிறேரொடு முயர்கே தனவரசர்
மலிவாகிய வலியார்பல வகையாயுத வயவர்
கலியாமென நமுறூதொரு கனல்வாகன முற்முன். 56(267)

புடைசூழ்தரு படையோடெழி லணிமாபுர வலனும்
படைசூழ்தரு கவுதாரியா பதிமீதிடை புக்கித்
தடைசூழ்தரு மணிமாளிகை யுயர்தாவறு மரணுங்
கடைசூழ்தர வழியாதுயர் கனனுனிட முற்முன். 57(268)

### நமுறூது கன்ஆனே வெட்டி வீழ்த்தல்

வீரத்திற முடையார்நடு விரிமாமணி மகுடம்
பாரத்திற முடையானுயிர் பலிகொண்டனன் வாளிற்
கோரத்திற ரயர்கொண்டிடும் வினையிற்கொடி யோனுஞ்
சூரத்திற மணியாசன மிசைதோன்றின னன்றே. 58(269)

### மகுடம் புனைந்து அரியாசனமேறுதல்

அன்போடரு ளுஞ்சீருறு மந்தாதையை வன்மைத்
துன்போடழி புன்காவல னணிநுன்றிய மகுட
மின்போடுயர் கொண்டேபல ரின்சொல்லொடு நிற்பப்
பொன்போரரி யணைமேவின னின்றும்புரை நெஞ்சான்.
59(270)

அரிதிற்பெறு முரியோனென வறியானறி வுடைய
பெரிதிற்றெளி வல்லோர்புடை பெயராதவனி நகரா
மருவித்திட வெழின்மன்னவர் திறைமன்னிட வணைமே
லுருமொத்திடு நமுறூதர சுற்முன்பரி சுற்முன். 60(271)

### ஆட்சியை உறுதிப் படுத்தல்

வேல்கொண்டவர் வாள்கொண்டவர் விற்கொண்டவர்
[வெய்ய
கோல்கொண்டவர் சூல்கொண்டவர் கோற்கொண்டவர்
[சீற்றக்
கால்கொண்டவர் பால்கொண்டவர் கற்கொண்டவர் சுற்று
மால்கொண்டணி வாழ்கொண்டிட மணிகொண்டன
[னன்றே. 61(272)

முன்னத்தல மீதுற்றிடு மூதந்தையர் கையின்
மன்னித்திட வரிதாகிய மருவார்தமை வென்று
துன்னத்திறை கொண்டேயடி தொழுதுற்றிட வாகை
தன்னிற்பொலி நமுறூதரி தவிசுற்றன னன்றே. 62(273)



### மேலைநாட்டரசன் அசுநூரைக் கொன்முன்

அளவின்றிய படையானுரை யதுகொண்டலின் மருவார்
களவன்றிற வுறுசேனைகள் கடலென்றணி வரவே
தளமொன்றிய வசுநூரசுயர் தலைவன்றிசை படுவான்
களமொன்றிட வருகாயமர் கடிகொண்டனன் மாதே.
63(274)

### கீழ்நாட்டரசன் அயிசாசுவை வென்முன்

படுவான்றிசை தலைவன்றனைப் பழிகொண்டவ னகரத்
தெடுவான்பொருள் பலவுங்கொடு வழியெண்டிகை நிறுவி
விடுவாம்பரி படைபின்செல விறன்மைந்தனு மெழுவா
னடுவான்பதி யயிசாசவ னகர்புக்கின னன்றே. 64(275)

பொழுதுந்திய பதியின்பதி புனைதந்திர படையும்
அழுதுந்துய ரொடுநைந்திட வடர்கொண்டவ னெங்கு
முழுதுந்தன துரைநின்றுற முறைபந்தனை விண்டே
தொழுதுய்ந்திட விறல்கொண்டன னழறுன்றிய விழியான்.
65(276)

### எமன் நாட்டரசன் அதினூசுவையும் கொன்முன்

கதிர்துன்றிய விடமும்படு கனன்மிஞ்சிய விடமும்
பதியென்றுயர் நெறிகொண்டடல் படைவன்றிற லுடனே
முதிரும்பல வறிவின்பெயர் மொழியும்பல வளமுங்
குதிகொண்டுறு மெமனென்றிசை குறிவன்றிசை வந்தான்.
66(277)

பொழிலார்வள மெமனுபுர மணிமாமுடி புனையு
மெழிலாருட லதினூசெனு மியன்மீறிய வரசன்
குழுவாகிய படைவீரர்கள் குறைவாயழி படவே
யுழுதாரம ரொடுமேவின னொளிர்பூணமி றூதே. 67(278)

### இந்துதேயத்தரசன் புகுமாலை அழித்தான்

வன்கொண்டுள மும்பங்கொளிர் மஞ்சம்புனை நெஞ்சங்
கொன்கொண்டிடு மன்கொண்டவர் கொன்றெண்டிசை
[யெங்குந்
தன்கொண்டணி நின்றண்டர்க டண்டம் பதம் வந்தே
நன்கொன்றிடு தெண்டஞ்செயு நண்பின்றிய நஞ்சான்.
68(279)

சிந்துந்தழ லின்செம்பொறி செம்பொன்றிய கண்கள்
கந்துந்தரும் வண்டின்றொடை சங்கஞ்சுழல் குந்தம்
பந்தும்புய வஞ்சன்றொடர் பங்கஞ்செறி தண்டஞ்
சிந்தென்றாட னுந்தும்படி யிந்தின்றிசை வந்தான். 69(280)

அதிகாரண நகர்வாழுடை யதிவீரியர் சூழும்
பதியாகிய புகுமாலெனும் பகையானவ னுடனே
விதியோடமர் பொருதேவிறல் வினையேகொடு பதியின்
மதியாதழி தருசூறையி னிதிவாரி னன்றே. 70(281)

பொன்னும்பயின் மின்னுங்கொடு புரமெங்ஙனுந் தன்சொன்
மன்னும்பெற நண்ணுந்திசை வழிகொண்டணி படையான்
பன்னும்பவ மன்னும்படி பண்பின்றிய கயவன்
றென்னுஞ்செறி வண்ணம்பதி செயமண்டுற வந்தான். 71(282)

### வெற்றி விஜயத்திற்குப்பின் தலைநகர் திரும்பல்

கடல்சுற்றிய புவிமுற்றினு முயர்கத்தர்க ளெல்லா
மடலறற்றிட விறலற்றிட வமர்கட்டிய திறமும்
படலைப்புய வலியெத்திசை பரிவுற்றிட வணியாய்
விடலைத்திற வணிமொய்த்திட வணைமிக்கினி னுற்றான். 72(283)

ஓராழியின் வாளுளியி னொளிராழியொன் றதனா
னீராழியி னுலகாளுடை நீராழிய வஞ்சன்
சீராளியி லுரையாளியி னனிசீறுறு வெய்யோன்
காராளுடை குடிசூழ்தரு கவுதாரிய வுற்றான். 73(284)

### உலகு முழுதும் ஒரு குடைக்கீழ் கொணர்தல்

மலையொன்றிய திறையும்பல வடிவொன்றிய சிறையுஞ்
சிலையொன்றியி ரதமும்பரி செறியுங்கிரி கரியு
நிலையொன்றிய வினமும்பயி னிகரின்றிய தவிசி
னலையொன்றிய மனவஞ்சக னகிலங்கொள நின்றான். 74(285)

மணமுந்திய மலரும்புனை கருமஞ்சணி குழலின்
வணமுந்திய மயிலின்றிற மடவஞ்சியர் கையின்
கணமுந்திய மணியின்கவ ரியும்வெண்சிவி றியுமே
குணமுந்திட வணியின்றவி சதுகொண்டனன் வயவன். 75(286)



முடிமன்னவர் தொடைமன்னவர் முனைமன்னவர் மார்பிற்
கடிமன்னவர் புலியன்னவர் கனல்கண்ணின ருடனே
படைமன்னவர் முறைபன்னவர் பதிமன்னர்கள் பணிய
விடைமன்னிய புவியின்னெறி விசைதுன்ன விருந்தான். 76(287)

வெய்யார்படை செய்யாரரி வெய்யோனென மிளிருங்
கையானதி பொய்யர்ன்மருள் கையான்வள நரரைத்
தொய்யாதிரை கையாதுனுஞ் செய்யார்சுக கவுதா
ரிய்யாநகர் மையார்பல ரையாவென நின்றான். 77(288)

நமுறூதாரசுரிமைப் படல முற்றிற்று
ஆகப்படலம் 5-க்கு திருவிருத்தம் 288

# 6. அரசிருக்கையியற்றிய படலம்

### இசையிலும் கூத்திலும் களித்த நமுறாது

கலிநிலைத்துறை

துன்னி நின்றபன் னரம்பினுந் துழனியி னிசைகள்
மன்னி நின்றிடுஞ் செவியொடுங் கைமணிக் கியையுங்
கன்னி நின்றியற் பரதமுங் கண்டுளங் களித்துப்
பொன்னி னன்மணி யாசனத் திருந்தனன் பூமன். 1(289)

### அவையோரை விளித்துரைப்பான்

தாது சிந்திய தண்ணளி யூதணி தயங்கும்
போது பைந்தொடைப் புயனமு றூதெனும் புல்லன்
காது கொண்டிடுங் கத்தர்க ளமைச்சர்கள் கலைநூ
லோது மைந்தர்கள் விளித்துளத் திருந்தவை யுரைப்பான்.
2(290)

### செய்ய வேண்டுவது ஒன்றுண்டு

திசை யடங்கலு மன்னர்க ளனைவருந் திருத்தி
நசை யடங்கலுங் கொடுத்திட விருந்தனம் நலிவி
லிசை யடங்கலுஞ் சூழ்ச்சிமற் றவையெலா மிசைய
விசை யடங்கிலா தொருவினை யுண்டென விரிப்பான்.
3(291)

### புதிய அரச மாளிகை வேண்டுமெனல்

பதியி னம்பதி போலில வரும்பொருள் பயினூல்
விதியி னும்விதி போலில பல்வினை யியற்றும்
நிதியி னந்நிதி போலில வெழுங்குடை நிழற்றுந்
திதியி னந்திதி போலில வுலகெலாஞ் செழிக்க. 4(292)

ஆத லானம தரும்பதி யிடத்தினி லழகிற்
றீதி லாதணி நவமணி யொளிவினிற் சிறந்த
கோதி லாதர சிருக்கையிற் குறித்தமா ளிகையொன்
றேதி லாதுள நன்குற வியற்றிடல் வேண்டும். 5(293)

### திறம் படைத்தவன் உண்டெனில் கொணர்க

நாட்டு மண்ணிலை யளவினூ னலம்புரி சிற்பர்
தீட்டு மெய்ப்பயன் புரியுநூற் சிறந்திடுங் கணிதம்
பூட்டு மெய்ம்முறை நூலினிற் றிறம்புரி கின்றோர்
காட்டு முண்டெனின் விளிமின்க ளென்றனன் கருத்தன்.
6(294)



### மன்னன் கருத்தை உள்ளத்து ஏற்றனர்

மன்னன் கூறலு மந்திரர் வாள்வலி யரசர்
பன்னன் னூலின ரியாவரும் பண்புளம் பூத்து
மின்ன லார்கழ லணிபெற வியன்கொடு தொழுது
சொன்ன விங்கிதத் துளங்கொளத் துதித்துறை குவரால்.
7(295)

### அறுபத்து நான்கு கலைகள் கற்றவன்

மாரி சிந்திய தண்டுளி வான்றருங் கங்கை
வாரி சிந்தினை மண்ணிலப் பரப்பினை மதித்துப்
பாரிற் சிந்தனை யின்றியே பலன்றரு முன்னூ
லோருஞ் சிந்தைய ரறுபதின் சதுகலை யுணர்ந்தார். 8(296)

### நூகுநபி மரபினன்

பொன்னி னல்வினை நூலொடு மரவினை புனைநூற்
பன்னி னல்வினை நூலொடும் பார்த்திபர்க் கிருக்கை
தன்னி னல்வினை நூலொடும் பழகிய தகையர்
முன்னி னல்வினை நூகரும் கான்முளை மரபார். 9(297)

### ஆசறுவை அனைவரும் முன்மொழிதல்

அரிய தோர்பணி யிதற்குறுந் தொழினல னமைத்தற்
குரிய நாயக ராசரென் றுயர்தரும் பெயரர்
தெரிய வேண்டுவ ரவரெனத் தேர்ச்சியிற் றுணைவ
ரிரிய மன்னவ ரனைவொரு மியல்பொடு முரைத்தார்.10(298)

### ஆசர் மன்னனிடம் வருதல்

அறிந்திவ் வாய்மைய ரவர்தமை யழைமின்க ளென்னத்
திறந்து கூறலுஞ் சிலபெருந் தூதுவர் சென்று
துறந்து கூறலு மாசர்பன் னூலொடுந் தோன்றி
யிறந்த பேரவை மன்னவன் கழலிறைஞ் சினனே. 11(299)

### அரிடதோர் அரசமாளிகை அமைக்க வேண்டுமெனல்

பதத்தின் வீழ்ந்தரும் பணிவொடும் வாழ்த்தியும் பதுமத்
திதத்த நன்கரங் கூப்பிமுன் னெழிலொடு நிற்கு
மதத்த வன்மர வினையனை மணித்தவி சிருந்த
கதத்த வீரிய ஞெக்கிநன் கருத்தொடு மறைவான். 12(300)

செய்ய நல்லொளி மணிமுதற் செழும்பொன்க ளவையுந்
துய்ய முத்தினம் பிறவொடுஞ் சகமெலாந் துதிக்குங்
கையி னல்வினை திறத்தொடுங் காவல ரிருக்கை
மெய்யின் மாளிகை யொன்றிவ ணியற்றிடல் வேண்டும்.
13(301)

**வைத்தகண் வாங்காது பார்க்கத்தக்கது**

பணியி னாலுய ரெழுதிய சித்திரம் படர்ந்த
வணியி னாலுமவ் வளவினிற் றிறத்தினா லியாருங்
சணியி லாதுளம் புதுமையி னிதயமுங் கண்ணுந்
தணியி லாதுற நிலைகொளத் தயங்கவும் வேண்டும். 14(302)

**இதுபோல் வேறொன்றிலது எனல் வேண்டும்**

முன்னு மின்றுமா தவம்பல முயன்றுர மேவுந்
தன்னு மின்றுமற் றருந்தல மியாண்டினு மின்று
பின்னு மின்றுநன் மணிபிறங் கியைதரு மிதுபோ
லின்னு மின்றென யாவரு மிசைத்திட வேண்டும். 15(303)

**என்பொருளனைத்தும் பயன்படுத்துக**

என்னி டத்தினி லுறுமணி பற்பொரு ளவையு
நின்னி டத்தினி லளித்தன னினைத்திடுந் தவிசின்
றன்னி டத்தினி லழித்தியுட் டருமுறை போல
வென்னி டத்தொடு மிசைத்தனன் புலியிடத் திசைந்தான்.
16(304)

**இயைந்த ஆசர் கருவூலப் பொறுப்பேற்றல்**

வெற்றி மன்னவன் விளக்கிய பணிவிடை கேட்டு
நன்று நன்றென நனிசிரந் துளக்கியுண் ணயந்து
துன்று மெய்ப்பொரு ளுறைகரு வூலந்தன் சுயத்தி
னன்று கொண்டனன் மீண்டன னாசறென் பவனே. 17 305)

**பளிங்கினால் மதில் எழுப்பல்**

மன்னன் றன்னுயர் பெயரொடும் வரன்முறை நோக்கி
நன்னி லத்திடை யளவினி லாயிரமுழத்துச்
சொன்ன நீளமு மகலமுஞ் சதுர்தரத் துலங்கு
மின்ன வெண்ணிறப் பளிங்கியின் மதிலியற் றினரே. 18 306)

**நவமணிகள் பதித்த சித்திர கூடங்கள்**

திருத்து நூலொடு மெடுத்திடு மரணுளஞ் சிறப்பிற்
பொருத்து சித்திர கூடங்கள் பொன்னொடு மின்னு
மருக்க னொத்தசெம் மணிகளா லணிபெற வியற்றிப்
பெருக்க நன்னிலம் வயிரமே பரப்பினர் பிறங்க. 19(307)



**பொன்தகடு வேய்ந்த சந்தன மரப்பலகைகள்**

ஒழுகு தண்கதிர் நிலத்திடை யணியணி யொழுங்காய்ச்
செழுநி லாவெனப் பளிக்கியின் சுவரிடை சிறப்பின்
முழுது நன்மணச் சந்தனத் துணிமுறை பரப்பிக்
கொழுவு பொற்றக டிலங்குறக் கோத்தன ரன்றே. 20(308)

**ஒழுங்குற அமைத்த மன்றங்கள்**

கோடி நோக்கினு நாற்றிசை நோக்கினுங் கொடிக
ளாடி நோக்கினு மருங்கத வணிநிலை நோக்கிற்
பீடு நோக்கினும் வீதிக ணோக்கினும் பிறங்கு
மோடு நோக்கினு மொழுங்குறு மொய்த்தமன் றவையே.
21(309)

**கருங்காலி மரத்திடை தந்தச் சிற்பங்கள்**

எடுத்தி டுந்திசை நிரையொடு மிடையிடை வீதி
தொடுத்தி டுந்திசை சபைகளிற் றுலங்கிய நிலைகள்
படுத்த வல்லிருண் மரத்திடைச் சித்திரம் பரப்பி
விடுத்த வெண்ணிறத் தந்தங்க ணிலவொடும் விளங்கும்.
22(310)

**சந்தன மரக் கதவுகள்**

சந்த னத்தினற் பலகையிற் றமனிய நாப்பண்
கந்த லர்த்திய பதுமமா மணிகளுங் கதிர்செய்
விந்தை யிற்கத வவைகளி னாற்புறம் விளங்கு
மெந்த நீளத்து நூலினு நேரெதிர்த் திருக்கும். 23(311)

**கலச அமைப்பின் ஒழுங்கு**

தகட்டின் மேலுறச் செழுமதி தண்மணி யதனான்
முகட்டின் மேலுற நவமணி முழுதினு மிழைத்த
வகட்டின் மேல்வரும் பொழுதென வழகிய கலசப்
பகட்டின் மேலுறு மொழுக்கினை யென்னெனப் பகர்கேன்.
24(312)

**பால், தெளிநீர், மது, தேன் ஆறுகள்**

அரிய வெள்ளரண் சித்திர கூடமு மாயத்
துரிய கோடென வவைகளு மதனிடை வீதி
சரிய பாகறல் வெறிமது பானமுந் தண்டேன்
விரியு மாறொரு நால்வகை விளங்குறச் செய்தார். 25(313)

**கரைகளில் நவமணிகளாலியற்றிய மரங்கள்**

துணர்கண் முத்தினாற் கனிகள்செம் மணியது துளங்கப்
பணர்கள் பொன்னினாற் பச்சிலை மரகதத் தாலு
மிணர்கொள் புட்பரா கத்தளி ரிருநிழற் றருக்க
ளுணர்த லில்லணி நதிக்கரை யொழுங்கியற் றினரே.26(314)

### சூத்திரப் பறவைகள்

நீல மாமணிக் கண்களு நிவர்முத்தச் சிறங்குங்
கால தேபிர வாளமு மரகதச் சூட்டுங்
கோல மாரிசை சூத்திரப் பக்கியின் குலங்கள்
கூல மேதருக் கோடணி நிறுவினர் குறித்தே. 27(315)

### கொலு மண்டபம்

சங்க வெண்மணி வேமணி கழைமணி தழங்கும்
பொங்கு நன்மணித் திரட்டிய புதுகடைக் காலி
னிங்கி தத்தினிற் கட்டினி லிசைதருங் கூட
மங்கி தத்துள மன்றங்கள் சித்திரத் தமைத்தார். 28(316)

### அரியாசனம்

மன்னன் றன்னர சியற்கையு நாப்பணின் வகுத்துப்
பொன்னி னீரொடுஞ் செம்மணி முதற்பொருள் செழிக்க
வன்ன வன்பெரு வுருவமு மணியணி பலவு
நன்ன யத்தொடு மெழுதினர் சிறப்பது நகைப்ப. 29(317)

### மன்னனுக்கறிவித்தல்

வன்ன மிக்குயர் பட்டினாற் சதுரங்க வரைவிற்
பன்னும் பந்தரும் பரிவொடும் புதவுமுன் னிட்டே
யின்ன பேரலங் காரங்க ளியற்றிய பின்னர்
மன்னன் றன்னிட முரைத்தனர் வணங்கிநின் றவரே.
30(318)

### மன்னன் மாளிகையில் புகுதல்

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

உரைத்திடு மொழிகேட் டுள்ளத் துவப்பொடு முகம னோடும்
வரைத்தடப் புயத்தின் வாகை மணத்தொடு மமைச்ச ரோடுந்
தரைத்தலத் தரச ரோடுந் தையலார் கவரி யோடும்
விரைத்திடுஞ் சிவிறி யோடும் வேந்தனவ் வகத்திற் புக்கான்.
31(319)

வழிகதி ரனைய செம்பொன் மணிநிரை கலசத் தோடும்
பொழிகதிர்த் திங்கள் போன்றுங் கொடிகளும் பொலிந்த
[வெண்மை
மொழிகதிர் வான மென்ன மொய்த்திடு மதிக வண்ணஞ்
செழிகதிர் நவமே பூத்த சித்திரக் கூடம் புக்கார். 32(320)



### மன்னன் கண்டு மகிழ்ந்த சிறப்புகள்

சிறப்பினிற் செல்வங் கொண்டுஞ் சிறப்பிலாப் பாவி யாகி
யிறப்பினி னின்று மென்ன யிரங்கியே யழுவ போன்று
முறப்பெரு முத்தின் சோதி தாக்கலி னுயர்ந்த காந்த
நிறப்பெரு மன்ற மேற்றே நீரது கசியக் கண்டான். 33(321)

பலகலை யறிவு நோக்காப் பரிவிலார் மானம் விற்குங்
கலகமே நயந்து நின்ற கணிகைய ருவந்தா லென்ன
விலகிய மதிலிற் பண்பி னெழுதிய தருவின் பூவிற்
குலவிய பயனில் வண்டுங் குழுவிய சிறப்புங் கண்டான்.
34(322)

அருமையின் மேன்மை கொண்ட வகைப்பொரு ளுரைத்து
மீதோர்
பொருளென மதியா வீணர் புரைதருஞ் சிந்தை யென்ன
வொருபுறத் திருந்த கோல முவப்பொடு நோக்கு முன்ன
ரிருபுறங் காட்டா நின்ற பளிக்கியி னியல்புங் கண்டான்.
35(323)

வரிபடும் புலியின் கோல வடிவினை நோக்கி ஞாங்கர்
தரிபடு மடவா ரஞ்சிச் சாமரை யொழிந்து நிற்பப்
புரிபடுஞ் சுவரிற் றோற்றும் புதுவுரு நோக்கி யொன்றும்
பிரிபட லென்ன வெண்ணிப் பேதுறுத் தன்னைக் கண்டான்.
36(324)

பெருமையிற் சேர்க்கச் சேர்க்கப் பிரித்துளம் பற்றி நின்ற
கருமையி னெருமை போன்றுங் கயவரி னவணி னெங்கு
மருமையி னியைந்த வண்ண மனைத்தையும் விடுத்தோர்
[பக்கத்
துருமையி னோக்கா நிற்கு முருவினம் பலவுங் கண்டான்.
37(325)

அணிதருஞ் செல்வப் பேற்றி னறிவின ருரைக்கு வாய்கண்
டணிதரு மேக்குற் றாரின் சேதனத் தாரை யொப்ப
மணிதரும் வலங்கொ டிண்டோ ணகையொடும் வடிவின்
[மாறுங்
கணிதருங் கண்ணிற் றானே களிப்பொடு முருவங் கண்டான்.
38(326)

பற்பல வுருவத் தோடும் பரிவுடன் கூட மற்றுஞ்
சொற்பல சபையி னுற்ற வணைமுதற் றொக்க வெல்லா
மற்புட நோக்கி வீசு மணிதருஞ் செவ்வித் தென்ற
லெற்புடல் பூப்ப வீதி யிடத்தினி லூற்று ஊன்றே. 39(327)

கரையிடஞ் சங்கு முத்துங் கதிரமு தொழுக நோக்கி
விரையிடங் குவளைத் தண்பூ விரிதர மேய வண்டு
நிரையிட வாற்றின் ஞாங்கர் மலரிடை நிவர்தன் முன்னர்
தரையிடந் தந்தை நீதிக் கேடெனத் தகைய கண்டான். 40(328)

கூலமே செறிந்த பைம்பூங் குளிர்தருக் கோட்டின் வாய்ந்த
நீலமே கண்க ணோக்கி நிறக்குயி லிசைகள் கேட்டுப்
பாலமே கொண்ட மன்னன் பைந்தொடி யவரி னொக்கக்
காலமே முற்ற மூடும் வாயினைக் களிப்பக் கண்டான். 41(329)

பளிக்குநன் மதிலிற் றீட்டுஞ் சேவலும் பதுமந் தெண்ணீர்
தெளிக்குமத் தோற்ற நோக்கிச் செறியடை கிடந்த பேடை
களிக்குமக் களிப்பி னோடே கசிவொடு புணருங் கிட்டா
தளிக்குலஞ் சினக்கும் பூவி னூற்றின தியல்புங் கண்டான். 42(330)

அரியாசனத்திலமர்தல்

பற்பல வலங்கா ரங்கள் பரிவுடன் கண்ட பின்னர்
கற்பல விழைத்துச் செய்த கனமணித் தவிசின் மீதே
பொற்புள வமைச்சர் மற்றும் புரவலர் சூழ நிற்ப
வற்புறும் புதுமை யோடு மரசர்கோ னிருந்தா னன்றே. 43(331)

ஆசர் பரிசுகள் பெறுவதும் தலைமையமைச்சராவதும்

பொன்னொடு மணியி னோடும் பொருளொடு நிலங்க ளோடு
மின்னொடுந் தூசி னோடும் வெகுமதி பலவு மீந்து
மன்னொடு மமைச்சர்க் கெல்லா மன்னவ னாக்கிப் பின்னர்
தன்னொடு மிருப்பச் செய்தா னாசறைத் தலைவ னன்றே. 44(332)

அரசிருக்கையியற்றிய படல முற்றிற்று
ஆக படலம் 6-க்கு திருவிருத்தம் 332

—□—

# 7. மந்திரப் படலம்

## நமுறூதின் கொடுங்கோன்மை

கலிவிருத்தம்

வண்ணவொண் மணியின மதியின் மாளிகை
நண்ணவத் திருக்கையி னும வேலொளி
விண்ணணி மின்னொடு மிலங்கும் வெய்யவன்
கண்ணென விருந்தனன் கடியுஞ் சிந்தையான். 1(333)

ஆசுரைத் தணியணி யறிஞர் வாழ்த்தவுந்
தேசுரை யூகியர் செறிந்து நிற்பவுங்
காசுறை சிந்தையின் கடலின் பூதலத்
தேசுறை கொடுமையே யியைந்து நின்றனன். 2(334)

களிப்பும் கடவுள் மறுப்பும்

கண்ணது சிறந்திடுங் காட்சி நல்லிசைப்
பண்ணது சிறந்திடுஞ் செவியும் பாவையர்
வண்ணது சிறந்திடு மணத்தி லின்பத்தி
லெண்ணது சிறந்திட மதங்க ளேய்ந்தனன். 3(335)

பொறியினுங் கருவியாற் போக்குஞ் சிந்தையிற்
குறியினுங் குறியிலாக் கருமங் கூடுத
னெறியென வியைந்ததா னினைவு மாறியே
வெறிமருண் டிறையினை விலக்கி நின்றனன். 4(336)

எல்லாம் என்னால் நானே இறைவனெனல்

தன்னினை வின்றியே சகல மேம்பொரு
ளென்னினை வுடையன வெவையு மாக்குவ
னன்னினை வுடனளித் திடுவ னுனைக்
கொன்னினை வுளனென வாக்கங் கூறுவான். 5(337)

இடத்தினி லிருத்தலு மிணங்க வுண்டியுங்
கிடைத்தலு மாக்கையிற் கிளர்ந்த கூற்றினங்
கொடுத்தலு மியானெனக் குவலை யத்தினு
ரடுத்தலு மியானென வாக்கங் கூறுவான். 6(338)

தங்கமும் பொருள்பல தவத்தி னிற்றலாற்
பங்கமு மன்னவன் பகைவர்க் கீந்ததா
லங்கமுந் துன்பிலா தழகு கொண்டதா
லெங்ஙனும் வேறிலா திறையென் றுற்றனன். 7(339)

உலகம் அவன் காலடியில்

கொங்கருங் குலிங்கருங் குடகர் தெக்கணர்
வங்கரு மலிங்கரும் வடுக ரீழத்தார்
சிங்கருங் கலிங்கருஞ் சீனர் யாவருஞ்
செங்கழற் றொழும்படி திறங்கொண் டானரோ. 8(340)

கலையனைத்தும் கற்றுத் தேர்தல்

சொல்லினம் பொருளினஞ் சோதி நூலினம்
புல்லின மருத்தினம் புனையும் பற்றொழில்
வெல்லினம் போரினங் கணித மேலின
மொல்லின வறிவெல்லா முவப்பிற் றேர்ந்தனன். 9(341)

இதுரீசுநபி வகுத்த வானசாத்திர வல்லுனன்
கலிவிருத்தம் [வேறு]

வான மாநிலம் வாழ்தரு நன்னபி
மீன நோக்கி விரித்துரை யாக்கிய
நூன லங்கொடு பன்னெறி நோக்கியே
கோன யம்பெறக் கூர்ந்துறுங் காலையே. 10(342)

இபுலீசின் தோற்றமும் அங்கு வருதலும்

திரையு மேனியுங் கூனியுந் தேயெயிற்
றுரையுங் கோலி லூன்றலு நின்றலு
நரையுந் தாடியு நாடியு மாடியும்
புரையும் புல்லிபு லீசவண் புக்கினன். 11(343)

மன்னன்முன் விழுந்து வணங்கியுரைத்தல்

பொன்னி லங்கிய பூமுடி மன்னவன்
றன்னி லங்கிய தாமரை யின்கழ
லன்னி லங்கொள வீழ்ந்தணி யங்கையு
முன்னி லன்பின் முகிழ்த்துநின் றோதுவான். 12(344)

இஃது மாலைமாற்று

வாத வாகன வாலவ காதவா
மாத ராவல மானத போதவா
வாத போதன மாலவ ராதமா
வாத காவல வானக வாதவா. 13(345)

மேலான அறிவு ஒன்று என்னிடமுண்டெனல்

என்று நண்புட னேத்தி யியைபுடன்
றுன்று பற்பல சூழ்ச்சியி னல்லறி
வென்று கற்றனை யாவினு மேலறி
வொன்று நன்றுள வென்னிடத் தென்றனன். 14(346)



சொல் என நமுறுது கூறல்

கற்ற வென்னிட மேய கலைக்கெலாம்
வெற்றி கொண்டன வென்ற விளங்கறி
வுற்ற வுன்னி னுவப்பொ டுரையெனச்
சொற்ற னன்மனப் புன்மை துளங்குவான். 15(347)

இபுலீசு மகிழ்ந்து வஞ்சகமொழியுரைத்தல்

வண்ண முற்றவன் கேட்க மனத்திடை
யெண்ண முற்ற விருந்த வுயிர்க்கெலாம்
புண்ண முற்றிடு வஞ்சனைப் பொய்மையிற்
பண்ண முற்றப் படிப்பித்தன் சூமனே. 16(348)

சேர்ந்த மேன்மை யுறுப்பின் சிறப்பழி
காந்து வன்பிணி காட்டிய கீழ்மையின்
வாய்ந்த மந்திரங் கற்று மனத்திடை
யேந்து மோட்டிறு மாப்பி னிருந்தனன். 17(349)

இருந்த மன்னவ னின்மதி யானனம்
பொருந்த நோக்கி யரும்புகழ் வாழ்த்தியே
திருந்த வுள்ளஞ்செய் பாவஞ் செனித்திட
வருந்து வஞ்சனோர் வன்மொழி கூறுவான். 18(350)

புது தெய்வம் ஒன்று இயற்ற வேண்டும்

திக்க னைத்து நடத்திய சீர்த்தியின்
மிக்க மன்னவர் முன்னவர் மேன்மையி
னொக்க லின்புற வுள்ள நிலைத்திடத்
தக்க தெய்வ வரிச்சனை செய்தனர். 19(351)

வேண்டு காரிய நண்பின் வினவிடி
லாண்டு காரண மாமல தென்றலும்
பூண்டு நின்றவர் புன்மை யழித்திடற்
கீண்டும் வாய்மை யிருந்தவை யென்கொலோ. 20(352)

சொல்லி னுலுயர் சொற்பொருள் பற்பல
மல்லி னலணி மற்புய வீரத்தா
லல்லி னற்பக லாலரி தானவை
வெல்லி னல்வரு வேந்தர்கள் வேந்தனே. 21(353)

சிலதி றத்தினர் சீர்மையிவ் வாய்மையே
பலதி றத்தினர் பான்மையெப் பாங்கரோ
நலதி றத்துமர் நாம நிலைத்திட
வலதி றத்துள மாற்றுவர் யாவரே. 22(354)

பேர்நி லைத்திட வென்றி பிறங்கிய
சீர்நி லைத்திட வண்மை செழித்திடு
மூர்நி லைத்திட வொக்க ணிலைத்திட
நேர்நி லைத்திடன் மன்னவர் நீதியே. 23(355)

ஆத லானம் மமைச்ச ரரைபரு
மீது லாநக ரோர்கள் விருப்புறப்
போதெ லாம்பணி யும்புதுத் தெய்வமொன்
றேதி லாதி னியற்றிடல் வேண்டுமே. 24(356)

### கேட்பதற்கெல்லாம் விடை கொடுக்கும் எனல்

கூடி நின்றநின் கொற்றமு மற்றவும்
பீடி னின்று பிறங்கிட வண்புகழ்
பாடி நின்று பணிந்து வினவிடிற்
றேடி நிற்ப திறத்தது கூறுமே. 25(357)

நீரு நிற்றிநின் சொற்றகை பெற்றவ
ரியாரு நிற்பினத் தெய்வ மெடுத்திடும்.
பேரு நிற்கி லுலகிடம் பின்னொரு
சீரு நிற்ப வருஞ்செயல் வேண்டுமோ. 26(358)

இருந்த போதினு மிவ்வுடல் வன்பிணி
புரிந்த போதினும் பொன்றிய போதினு
மிரிந்த போதினு மியாதும் வினவிடிற்
றெரிந்த போல நடப்பது செய்கையே. 27(359)

இனைய புன்மை யிளைந்த கருத்தினி
லனைவ ருக்கு மரையனை மாட்டியே
வினையன் வஞ்சகன் வெம்பவ நோய்க்கொரு
தனைய னெற்றி மறைந்தனன் சார்பினே. 28(360)

### ஆதம்-ஹவ்வாவைப் பிரித்தவனின் சூழ்ச்சி பலித்தது

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

அறத்துறை யனையுந் தந்தை யவரிடம் பிரிவு செய்த
மறத்துறை பாவ காரி வழங்கிய துணர்ந்து மன்னன்
றிறத்துறை ஞாங்க ருற்ற தேர்ச்சியிற் றுணைவர்க் கோமா
னிறத்துடை யாசர் நோக்கி யிம்முறை நிகழ்த்த லுற்றான்.
29(361)



### தன் உருவில் தலைமைச் சிலையமைக்க ஏவுதல்

வடிவினிற் கோலந் தன்னில் வண்ணத்தி லழகி லென்போ
லடவுடன் றெய்வ மொன்று மணியணி மற்றோர்க் கெல்லாந்
தடமுறுஞ் சிலைகள் பன்மை தகையினி னியற்றி நன்கிற்
றிடனுட னளித்தி யென்று னன்னதே சிரத்திற்
கொண்டான். 30(362)

### எழுபது சிலைகள் செய்யப்பெற்றன

பொன்னினு லிரசத் தாலும் பொலிநவ மணியால் வெண்கற்
றன்னினு லுலோகத் தாலுந் தாம்பிரங் கஞ்சங் கல்லா
லென்னினுன் மரத்தாற் கோல மியல்பொடு மெழுபான்
றெய்வ
மன்னினுற் செய்தார் சிற்பர் வணங்கிய பெருமா னன்றே
31(363)

கையணி பூட்டிச் செம்பொற் காலணி பூட்டிப் பட்டிற்
செய்யணி பூட்டிக் காதிற் சிரத்தினி லணிகள் பூட்டி
மெய்யணி பூட்டி வாடை விரைபல கமழ்த்தி மன்னர்
மொய்யணி தகைய நோக்கி முறைமுறை வழங்கி னரால்.
32(364)

பெருநக ராளர் மற்றோர் பிரிவிலா திறைஞ்சா நிற்ப
வருசிலை யமைத்துத் தேர்ந்து வண்மையி னிருந்த கையா
லிருமுழ மகல நீள மெழுமுழம் அரிய தங்கத்
தொருவடி விலங்குந் தெய்வ முவப்பொடு மியற்றி னரால்.
33(365)

இருவிழி மாணிக் கத்தி னிருகுழை மரக தம்பல்
லிருநிரை முத்த முத்த மிருதுகிர் புட்பராக
மிருதுளை நாசி நீல மிருகைகால் வால வாய
மிருநகம் வயிர மற்று மிருநிதி முலைக்க ணன்றே. 34(366)

### மன்னனின் சிலைக்குப் பெயர் சைலூன்

மணிபல விழைத்துச் செய்து பருதியின் வண்ணங் கொண்டு
திணிகதிர் மகுடஞ் சூட்டிச் செய்யபட் டுடுத்தி மேன்மை
யணிபல வணிந்து பாவத் தாக்கமே கொண்ட மன்னன்
றணிவிலா திறைஞ்ச சைலூ னெனும்பெயர் சாற்றி னரால்.
35(367)

### தூபதீபங்களுடன் பூசை தொடங்கல்

நீலமா மணியிற் சட்ட நிறுவிய காலின் முத்த
மேலமா வண்ணங் கொண்ட மேன்மையிற் பொன்னூல் வெண்ணூற்
கோலமார் பின்ன லோடுங் குளிர்மல ரணையி னோடு
மேலமார் பரியங் கத்தி னியல்பொடு மிருப்பச் செய்தார்.
36(368)

இவ்வணி கொண்ட தெய்வத் தெழுஞ்சிலை மன்னன் பாலி
னவ்வணி யோடு மன்பி னளித்தலு முள்ளம் பற்றிச்
செவ்வணி யென்னத் தூப தீபமுஞ் செழீஇய வைத்துக்
கவ்வணி பூசை நேமங் குடியொடுங் களிப்பச் செய்தான்.
37(369)

### இபுலீசு சிலையினுட புகுந்து விடையளித்தல்

கருத்துறு மறிவும் போக்கிக் கதிவழி மறந்த பேர்கள்
திருத்தமுற் றிருந்து வண்கற் சிலையிட மெவையுங் கேட்கி
லுருத்தெரி யாது வஞ்ச னுள்ளுறப் புகுந்து வேண்டு
மருத்தங்க ளின்ன வென்ன வவரவர்க் குரையா நின்றான்.
38(370)

வன்பிணி யாளர் நாட்ட மலிவின ரிறந்த பேரின்
றன்பெயர் கூறிக் கூறித் தடச்சிலை யிடத்திற் கேட்டுத்
தின்பன நடப்ப மற்றுஞ் சேரிட முணர்ந்தவ் வாறே
யன்பல குடிகே டோடு மாறுபட் டிருந்தா ரன்றே. 39(371)

### வழிகேடு தலைவிரித்தாடியது

இரவொடு பகலுஞ் செம்பொன் னெழின்மணித் தெய்வத் தோடும்
பரவுத லன்றி வேறு பதித்தில ருளத்தின் மன்னன்
கரவுடன் சூது வஞ்சங் களங்கொடு நடத்துங் கோன்மை
விரவொடு மவனே யென்ன விருந்தனர் விரிந்த வூரார்.
40(372)

கைப்பொருள் கொடுத்து வேண்டுங் கள்ளுண்டு வெறிமீக் கொண்டு
மெய்ப்பொரு ளுணர்வு மாறி மீறியே முரண்டா நிற்பார்
செய்ப்பொருள் கொலையிற் கொண்டு நகைப்பதே சிறப்பி தென்னப்
பொய்ப்பொருட் பணிதல் செய்வார் புன்மையி னகரா ரன்றே. 41(373)



தத்தமே கொண்ட கோபந் தந்தைதா யவர்கள் பேணு
தத்தமே கொண்ட தல்லா லப்பொருள் வருதல் பேணு
துத்தம மென்னும் வாய்மை யுலவுவர் கண்ணிற் காணு
தெத்தலந் தனினுங் கீழ்மை யியற்றலே துணிந்து நின்றார்.
42(374)

நன்னெறி மாறி நிற்கு நரபதி நமுறா தென்னு
மன்னெறி கயவ னன்றி மற்றொரு பதியில் லென்பார்
புன்னெறி சையலூ னென்னும் புத்தன்றி வேறு தெய்வ
மென்னெறி தனினு மின்றென் றியல்பழிந் தவர்க ளன்றே.
43(375)

கொலையது கொள்வார் தத்தங் குடிமகள் கவர்ந்து [கொள்வார்
கலையது கொள்வார் நஞ்சங் கலந்துபொன் னிதிகள் [கொள்வார்
புலையது கொள்வார் மற்றோர் பொருதொழிற் செய்து [கொள்வார்
சிலையது கொண்ட கையான் செலுத்திய கொடுங்கோ [லன்றே. 44(376)

மனத்திடை நினைத்த வண்ணங் கையிடை வருத லானுந்
தனத்திடை முடியா வண்ணந் தகையொடு செய்த லானு
மிலத்திடை யிருந்த வன்கல் லியற்றிய துரைத்த லானுங்
கனத்திடை யிழிந்த நீருங் கைப்பென நகைப்ப ரன்றே.
45(377)

தமர்களு மரபும் வீரத் தகுதியு மகங்கா ரத்தின்
சமர்களை வேலின் வென்றித் தாக்கினி னூக்கத் தானு
நமர்களை யமைத்தோ னின்ன நரபதி யுணர்வு ளானென்
றமர்களைத் தொல்கு வாரு மவன்பெயர் துதிக்கின் றாரே.
46(378)

பிறபொருள் வெஃகு வாரின் பேருறுங் கடிய மன்னன்
மறனுறு மியற்கை யென்கோ வாயினிற் பேசற் பாலோ
திறனுறுஞ் தோற்ற மேழுந் திருப்பொரு ளிடத்திற் கெஞ்சி
விறலொடு மழிப்பா னாக வீறொடு மிரந்த வன்றே. 47(379)

### இறைவனிடம் படைப்பினங்களின் முறையீடு

பன்னிலத் திடையிற் செய்யும் பாவியர் கொடுமை தன்னான்
மன்னில மலைநீர் வான மதிகதிர் தோற்ற மெல்லா
நன்னிலை யொருவன் பாலி னவத்தொடுங் கெஞ்சி நின்றே
பன்னிலை யுணர்வின் மிக்கிற் பரிவொடும் பகரு மன்றே.
48(380)

### இறைவன் தெரிவித்த நற்செய்தி

உன்னிடத் திருந்துன் பாலி னுணவொடுங் காவல் கொண்டுங்
கொன்னிடத் திருந்த வேறு குறிகொண்டு வணங்கா நிற்கு
மன்னிடத் திவரின் கோட்டி மற்றவை யழித்தி யென்றே
பன்னிடத் திறையோன் வாய்மை பரிவொடும் பிறந்த
தன்றே. 49(381)

செய்கொடுந் தொழிலும் வாழ்வுந் திறங்களு மிவர்கள்
கொண்ட
பொய்கொடுந் தெய்வ மெல்லாம் போக்குவன் பின்னர் நுங்க
ளுய்கடி வாய்கண் மூடு மெனவுரை யிறையோன் கூற
மெய்கொடு தத்தங் கேண்மை வீறொடு மிருந்த வன்றே.
50(382)

மந்திரப்படல முற்றிற்று.
ஆகப்படலம் 7-க்கு கூடிய திருவிருத்தம் 382.

—o—

# 8. காட்சிப் படலம்

### படலச் செய்தி

கலிநிலைத்துறை

ஆர ணந்தரு நந்நபி யணிமணி யிலங்கும்
பூர ணந்தரும் புகழிபு ருகிமிப் புவியிற்
கார ணந்தர வுதித்திடு முன்னரிற் காட்சி
வார ணந்தரும் வையகம் விளங்குற வகுப்பாம். 1(383)

### சயனிக்கச் சென்ற மன்னனை சப்பிரமஞ்சம் உதறியது

மன்ன மன்னியர் மந்திரர் மந்திரி மற்றோர்
துன்ன வன்னவொண் முடியணி துலங்கிட வயவன்
பொன்ன மின்னொளி யாசனத் திருந்தொரு போதிற்
றன்னை யுன்னிய தகையொடுந் தன்னறை புக்கான். 2(384)

ஆத வன்கதி ரெனவொளிர் செம்மணி யதனாற்
சோதி செய்யணை மஞ்சத்திற் றுயில்குவா னாக
மீதி னேறின னேறலு நிலமிசை விழவே
கோது றுங்கொடி யவன்றனை யுதறிய தன்றே. 3(385)

### திகைத்த நமுறூது அசரீரி ஒலி கேட்டல்

சித்தி ரத்தணி பாரியே யுதறலுந் திடுக்குற்
றெத்தி ரத்தன காரண மென்னென வெண்ணம்
பத்தி யுற்றிடுங் காலையிற் பகைநமி றூத
னத்த லத்தினி லோரொலி யுதிர்தரக் கேட்டான். 4(386)

### நபிஇபுருகீமின் நாயனுக்கு வழிபடாதவன் அழிவான்

துலங்குங் கீர்த்தியிற் றுதிதரு நபியிபு ருகீம்
வலங்கொள் வல்லவ னியாவர்க்கு மரசவன் றனக்கு
நிலங்க டன்னினு மாறுகொண் டவனிலை குலைந்து
கலங்கி யுள்ளமு மழிகுவ னெனக்கடி யுடனே. 5(387)

### அருகில் ஆசறைக் கண்டு நீயும் ஒலிகேட்டாயோ எனல

திடுக்கு ளத்திடை கொண்டவன் றிரிந்துநோக் குற்று
னடுக்க வத்தலத் தழகுட னாசறைக் கண்டா
னிடுக்க ணுற்றிவண் படரொலி நின்செவி யியையப்
படுக்க வெத்திற னுணர்ந்தனை யென்றனன் பகைவன். 6(388)

ஆம் நானும் கேட்டேன்

வினவும் வாசகங் கேட்டவன் வேந்தனை நோக்கி
நினைவி னீவிர்முன் னிலைதரத் தெரிந்தவை யென்ன
வனைய வப்பொரு ளுணர்ந்தன னியானுமென் றறைய
வினைய மின்றிய வமைச்சர்கோன் றன்னிடம் விளங்கும். 7(389)

அவன் எங்குளான், எப்படிப்பட்டவன், அறிவாயோ?

பிறந்த வித்தொனி விளக்கிய பெயருடை யவனே
திறந்த ருந்தல மியாண்டுள னெவன்றிரு மகவோ
நிறந்த ருங்குண மெக்குண நிலைதொழில் யாதோ
வறிந்த துண்டுகொல் கேள்வியி னென்றன னரசன். 8(390)

ஆசறு அறியேன் எனல்

அன்ன பேரின னிருப்பிட மளித்தவன் றொழிலு
மின்ன வாறென யாதொன்று மவனிட நாயன்
சொன்ன காரணன் றொகையொடு மறிந்தவ னல்ல
னென்ன வோதின னமைச்சர்க ளிணங்கிய பெருமான். 9(391)

சோதிட கணிதரை அழைத்து வினவுதல்

பின்னர் துன்னவை யிடத்துறும் பெற்றிநூற் கணிதந்
தன்னை மிக்குணர் வல்லவர் விளித்துயர் தகையான்
மன்னும் வன்றிற லின்னிபு ருகிமுக் குரிய
மன்னன் யாரென விளங்கினன் களங்கணி மனத்தான். 10(392)

அவர்களும் அறியோம் எனல்

சூருந் துன்னிய காவல வுரைத்திடுந் தோன்றற்
பேரு மன்னவன் குணங்குறி பெற்றுறுங் கருத்த
னூரு மற்றவு மியாங்களு முணர்ந்தவ ரலரென்
றோருஞ் சிந்தைய ருரைத்தன ரவனுளங் கலங்க. 11(393)

நடந்தது மறந்து மன்னன் இறுமாந்திருத்தல்

தெரிந்தி டாதிவை யென்னென வுளத்திடை திகைத்துக்
கரிந்த சிந்தையி னையமுங் கருத்தொடு மன்னன்
புரிந்த தன்னுய ரெண்ணமும் பொலிவுறச் சிலநாள்
பிரிந்த பின்னொரு காரணம் பிறந்தன வன்றே. 12(394)



அணியி னால்வகைச் சேனையு மரசருங் கருத்தர்
பணியு மற்றுள திறத்தினர் பரிவொடுஞ் சூழக்
கணியும் பொற்குவைத் திறைகளும் கண்டுளம் பூத்து
மணியுஞ் சீர்தருந் தவிசிடத் திருந்தனன் மன்னன். 13(395)

விரியும் வானருங் கதிரென விளக்கிய சோதி
புரியு மாசனம் பேரவை புதுமையங் கூடந்
தெரியுஞ் சிந்தையுங் கண்களு மலர்தரச் செம்மாந்
தரிய வாக்கமுற் றிருந்தன னிருக்குமப் போதில். 14(396)

"கொடியவனே, உனையழிக்க ஒருவருண்டு"

தன்னை மீறிய களிப்பினாற் றன்மதங் கொண்டு
மன்னை மீறிய புரையெடா நல்வழி மறந்து
கொன்னை மீறினை யிவைகொடு மகிழன்மின் கொடிய
வுன்னை யிவ்வுல கழித்திடற் கொருவருண் டென்றும். 15(397)

"நபிஇபுருகீம் என்னும் அவர் வருவார்"

வான மாதவர் பூதல மன்னவர் முனிவர்
தான மாதவர் யாவருந் தகையொடும் பணியு
மான மாதவர் நபியிபு ருகிமிவ் வைய
மீன மாதற வியல்பொடு மெய்துவ ரென்றும். 16(398)

"உனக்கு இவ்வுலகில் இடங்கிடைக்காது"

இவர்த மிக்குறு மாண்டகை நெடியவ னவையுங்
கவன மின்றியே காத்தருள் கருத்தனல் லன்பி
னுவரி சூழ்நில மெங்ஙனு முனக்கிட மிலையென்
றவணி னோரொலி யதிர்தரக் கேட்டன னரையன். 17(399)

எச்சரிக்கும் அசரீரி ஒலிகேட்டு மன்னன் மனக்கலக்கம்

எழுந்த பேரொலி யரியொலி யெதிர்வரு கரியின்
விழுந்து கால்கர மயர்வொடு மனமிக வேங்கி
யழுந்து சிந்தையிற் றிடுக்கொடு மடிக்கடி பதறிக்
கொழுந்து லாமணி முடிபுனை கொற்றவ னிருந்தான். 18(400)

இபுருகீம் யார், அவன் நாயன் எங்குளன் எனக் கேட்டல்

நெஞ்ச நெக்குறுங் கவலையி னிருபனப் போதிற்
பஞ்ச லக்கணக் கணிதநூல் பயில்பவர் விளித்து
வெஞ்சி னத்திபு ருகிமென் பவனெவன் விளங்கு
மஞ்ச வித்தவ னாயக னியாவனெங் குளனே. 19(401)

அவனிக் கோலத்தி னுள்ளவ னாயனிப் பாங்கி
னிவர்க ளென்றும ரரியநூ லிடத்தினி னீவிர்
நவம தொன்றுறக் கண்டது முண்டுகொ னவில்கென்
றவனி யாளுடை மன்னவ னயர்வொடுங் கேட்டான்.
20(402)

அவற்றைக் குறிக்கும் நட்சத்திரம் தோன்றினால்
மட்டுமே அறியக் கூடும்

சொன்ன பேர்வழி தற்கொரு தாரகை தோற்றி
லின்ன காரண மிஃதென வுணர்தலுக் கிடனா
மன்ன காரிய மொன்றுமின் றாகையி னவனே
மன்னன் றன்னையு மதித்தவ ரல்லரியா மென்றார். 21(403)

மன்னன் புலிகளையும் மதயானைகளையும் காவலுக்கு நிறுத்துதல்

உணர்த்து நூலினு முலகினுங் காண்கிலாப் புதுமை
யிணைத்த தென்னென வேங்கியு மயர்வொடு மெழிலிற்
றூணர்த்த மாளிகை சூழ்தரப் புலியுடன் றும்பி
பணைத்த வல்விலங் கரசவன் காவலிற் பதிந்தான். 22(404)

மல்லர் புடைசூழ மன்னன் வேட்டைக்குப் போதல்

மலை திரண்டன மற்புய மல்லர்கள் சூழக்
கொலை திரண்டவேல் வலத்தொடுங் கொற்றவ னொருநா
ளிலை திரண்டவன் காட்டகம் வேட்டையி னியைந்தே
யலை திரண்டன தளத்தொடுஞ் சார்ந்தன னன்றே. 23(405)

வனவிலங்குகள் ஒன்று திரண்டு மன்னனை எதிர்த்து வரல்

நறிய பூந்துணர்க் காட்டக நாப்பணிற் புக்கி
யெறியும் வாம்பரி யிடத்தின னெழிலறு நோக்கிற்
செறியும் வல்விலங் கடர்ந்துறுங் காலையிற் சிறந்த
நெறியி னாதியி னுத்தரத் தவையுரை நிகழ்த்தும். 24(406)

இபுறாகீம் நபி உன் ஆணவமழித்து ஆட்சியைக்
கவிழ்ப்பார் என அவை கூறல்

மாறு கொண்டுளந் திடுக்குறும் வஞ்சகக் கயவர்
வேறு கொண்டடர் மல்லர்கள் சேனைகள் வீரத்
தேறு கொண்டும்வெம் புலிகடுங் கரிகொண்டு மிதையக்
கூறு கொண்டுமியா மொருஉநிலை கோடுமென்
றுணர்ந்தாய். 25(407)



நின்னை யுநிக ழாண்மையு நிவர்மணி மாடந்
தன்னை யும்பிற பொருளையுந் தடக்கிரி யனைய
தன்னை யுங்கொடும் புலியையு மடரங்கச் சேனைக்
கொன்னை யுமழித் திடற்குறுங் கொற்றவ ருளரே. 26(408)

திறங்கொ ளொம்மிற சூலொளி துலங்கிய சிறப்பி
னறங்கொ ணன்னபி யணியிபு றாகிமென் றொருவர்
பிறங்கி நிற்பர்நின் னரசியல் பிறழ்தரு மென்ன
மறங்கொள் வல்விலங் குரைத்திட மன்னவன் கேட்டான்.
27(409)

நாடு திரும்பிய நமுறூது ஆசருடன் தேவாலயம் புகுதல்

செவி யெரிந்திடு மழன்மொழி யீதெனத் திகைத்துக்
கவி யெரிந்திடும் வலிமுகக் கயவனு மறுகித்
தவி யெரிந்திடுஞ் சிந்தையி னயர்வொடுந் திரும்பிப்
புவி யெரிந்திடுங் கோன்மணி யாசனம் புக்கான். 28(410)

அருகு நின்றதன் னமைச்சர்கோ னணிமுக நோக்கிச்
செருகு பூந்தொடை நாற்றிய செய்யவா லயத்தின்
பொருகு நற்கத விடுகெனப் பணித்தலும் பூட்ட
மொருகு செய்தனன் புகுந்தன ரிருவரு முவப்பின். 29(411)

மன்னன் முறையீட்டிற்கு சைலூன் சிலையின் பதில்

கடிகொள் பூந்தொடைக் கட்டுடன் புனைந்துதற் கொண்ட
நெடிய வன்சிலை முகத்தெதிர் நிதிமணித் தட்டில்
வெடிகொ டீபமுந் தூபமும் விளக்கியக் கொடியோ
னடிக ளென்றிரு கரங்குவித் திறைஞ்சிநின் றறைவான்.
30(412)

இருந்த லத்தினு மிருப்பினு மேகிய விடத்தும்
பொருந்து மோர்மொழி விளங்கிய புதியவக் கோலன்
வருந்த கைத்திற னென்னென மன்னவன் கேட்பத்
திருந்த வச்சை லூனெனுஞ் சிலையது விளம்பும். 31(413)

இபுறாகீம் நபிக்கு வழிப்படாவிடின் உனக்குக் கேடுதான்

நிந்தை மிஞ்சிய கொடியவ நிலைதரும் புகழின்
விந்தை மிஞ்சிய விறலிபு றாகிமென் றுரைக்கு
மந்த நன்னபி யாண்டகை யகங்கொளா திருக்கிற்
பந்த முற்றிய கெடுதிக ணின்னிடம் பலிக்கும். 32(414)

இறைகட்டளைப்படி அது உரைத்தது கேட்டு
மன்னன் நடுங்கினன்

தகைய மேன்மையுந் தன்னையு மறந்தனே சகத்திற்
பகையுங் கொண்டனை யிழிதரும் பழிக்கிடங் கொண்டாய்
நகையி னுயனே விடுத்தலி னனிகெட விருத்த
லுகைய மென்றது நடுக்கொடு முறுபதி யுணர்ந்தான். 33(415)

தன் தெய்வத்தின் சினந்தணிக்க எழுநூறு மாடும்
ஆடும் பலியிடப் பணித்தல்

கண்ட காட்சியு மொளிர்மணிக் கனகவன் சிலையும்
விண்ட காரணக் குறிப்பையு முணர்ந்தவன் விசைய
மண்டு மந்திரர்க் கதிபதி மதிமுக நோக்கித்
தொண்ட முன்னரிற் பயன்பெறச் செப்புவ னன்றே. 34(416)

தம்மி னத்தவர்க் கரசென நயத்தொடும் வந்த
செம்ம னத்துறுந் தெய்வமென் புறத்துறுஞ் சினத்தி
னிம்ம றத்துரை விண்டது களிப்பொடு மெழுநூ
றம்ம னத்திரு லொடுங்கொறி யளித்திடு கென்றான். 35(417)

பலிகொடுத்த பின்னும் கெட்ட குறிகள்
கண்டு கொண்டிருந்தனன்

வலத்து மன்னவன் சொற்படி வருமெழு நூறு
நலத்த சேவொடு மத்தொகை நனிகொறி யினமுந்
தலத்தி னிற்பலி கொடுத்தவ னுலையத் தலைவன்
பெலத்த நாமத்தின் மகிழ்ச்சியிற் பெருமையிற் போந்தான். 36(418)

கருத்து ளார்வரு மதிப்பொடுங் கதிரிலை நெடுவேல்
திருத்து மன்னவன் பற்பல காரணஞ் சிறப்பப்
பொருத்து நோக்கொடுந் திகைப்பொடு மிருந்தனன் பொங்கி
யுருத்து கின்றபின் குறிபல வியைதர வுரைப்பாம். 37(419)

காட்சிப் படலமுற்றிற்று
ஆகபடலம் 8-க்கு திருவிருத்தும் 419.

—o—

# 9. நமுறூது கனவு கண்ட படலம்

நமுறூது துயிலறையில் வானவர் தோற்றம்
கலிவிருத்தம்

எதிரடை யலருள மிரிதரு முரச
மதிர்தரு மறுகணி யணிவரு நகரிற்
கதிர்மணி லொளிவிடு கனதன தவிசின்
முதிர்கொடு நெறியொடு முறைசெயு மரசன். 1(420)

வயமிகு திறமன மதிகெடு மறிவின்
கயவனு மொருபொழு தவையது கலையத்
துயில்செய வெனமலர் துயலறை யதனி
லயர்வில தணைமிசை யவனுறு மளவில். 2(421)

சொரிகதிர் மதியென முகமது துன்றும்
பரிவுறு மெழிலொடு மொருவழி பண்பி
னுரியவ ரமரரி லொருவரவ் வில்லி
னெரிதரு கபடனி திருபன்முன் னுனர். 3(422)

உணர்வூட்டும் காட்சிபல கண்டும் திருந்தாததேன்

இனிதொடு பகலினு மிரவினு நினைவி
னனவினும் விழிமுகிழ் கனவினு நனிதின்
மனதொடு புதுமைகள் வரைவில வுணர்வுந்
தனதில வெவனெனத் தனியுரை செய்தார். 4(423)

மறுமொழி கூறாது மன்னன் துயிலல்

உணர்தலி னுரையொடு முளமது தெரியுங்
குணனொடு மறுமொழி குரிசிலு மறையா
விணர்தரு முடலொடு மவரினி துறையுந்
திணிநகர் புகவனை திருவிழி துயில்வான். 5(424)

கனவு கண்டு பதறியெழுந்த காவலன்

மயனறு கொடுமையின் வயவனு மணையிற்
றுயில்செயு மளவினி லுளமது துயரத்
தியலொடு மொருகன வெதிர்தரு முடலத்
தயர்வொடு மதிரொடு பதறியெ ழுந்தான். 6(425)

### நிலைகுலைந்து கொலு மண்டபம் அடைதல்

மணிபுனை மகுடமு மலர்புனை குலையத்
திணைபுனை புயமது திரளணி மெலியப்
பணிபுனை மதியென வயவர்வொடு பகையன்
றணிபுனை தவிசிடை வெளியினின் வந்தான். 7(426)

### மன்னன் ஏவற்படி சோதிடர் அழைத்துவரப்பட்டனர்

காவலி னிலைதரு கதிரிலை நெடுவேல்
சேவக ரொடுமுயர் திகழ்கணி தவர்கண்
மேவுற விரைவினி லிவணிடை யழைமி
னுவலி னெனவிறை யயர்வொடு விண்டான். 8(427)

ஓடினர் சிலரவ னுரைபல நவிலப்
பாடினர் கணிதவர் பரிவொடு மகிழ்வின்
மோடணி யரசவன் முனமரி தெய்தி
நீடிய கழலிடை பணிவொடு நின்றார். 9(428)

### கண்ட கனவின் பொருள் வினவுதல்

நின்றவர் முகமனி னிவர்முடி யரைய
னின்றொரு குலைதரு மிசைகன விரவிற்
றுன்றிய வதனுறு தொகுபய னுணர்வி
னன்றுற மொழிதிர்க ணவையற வென்றே. 10(429)

### அதன் பலன் தீயதாயின் என்னிடம் உரையாதீர்

கொடுமைய தெனவது பயனொடு குறைவின்
மடிமையின் மறைபட வுரைசெய லற்க
நெடுவினை தருதுயர் நிலைவரும் நுமரி
லடவுட னறிவொடு மறைதிர்க ளென்றான். 11(430)

### சோதிடக் கணிதர்கள் இசைந்தனர்

அகிலமு மொருகுடை யதனொடு புரியு
மிகுதிற னுமதுரை மிசையுறு பயனே
வகையொடும் அருள்குவம் வருகன வெமரோ
டிகலற மகிபதி யிசைதரு மென்றார். 12(431)

### ''அரிய அழகுடைச் சோதி ஒன்று வானின்று இறங்கியது''

அரிதரி தழகினி னழகுயர் மதியின்
விரிகதி ரொளிவினின் மிகுமொளி யொன்று
தெரிதரு திசைதிசை செறிதரு தெளிவி
னுரிதரு ககன்வழி யுலகிடை யுறவும். 13(432)



### ''அதனூடே அரும் வடிவினர் பலரும் இறங்கியுலவினர்''

வடிவின ரவயவ வரிசையர் வதனத்
தடவினர் பலரதை யணிபுடை தரவே
யிடனுறு நிலனிடை யினிதொடு முலவி
யுடனெடு வழிகக னுயரவு மன்றே. 14(433)

### ''நடுவில் ஒப்பற்ற அழகினனான ஒரு வாலிபனிருந்தான்''

உயர்தரு குழுவிடை யொளிர்தரு மதியின்
வியனுறு திருமுக மதிவித வுடலி
னயனுறு கடிதரு நவனித னொருவன்
பயனொடு முறவணி பலர்பல சொல்வார். 15(434)

### அனைத்து அருட்கொடைகளையும் இறைவன் அவனுக்கருள்வான் எனல்

அணியணி யொளிவினி லமைசெயு மமரர்
தணிதலி லுறைகக னதுதலை யரசன்
கணிதலி னவநித வுதவிகள் பலவு
மணிபெற வினிதொடு மருள்குவ னெனவும். 16(435)

எழுவகை வெளிவரு மிவைபல வுறையு
மெழுவகை புவிகளு மினிதொடு முயிரி
னெழுவகை யுமைகொடு நிலையியல் புரிவ
னெழுவகை குணமுறு மிறையவ னெனவும். 17(436)

மானமு மறிவொடு மகிமையு மியல்புந்
தானமு மதிபல தருகுவ னெனவு
மானவ ருவகையி னருமொழி யுடனே
வானக முயர்தர வருகன வென்றான். 18(437)

### தவணை கேட்டுப் பெற்று சோதிடர் திரும்பினர்

விரைதரு தொடைபுனை விறலர சறைய
நிரைதரு கணிதவர் நிருபனி னழகின்
மரைமுகம் விழிகொடு கனவழி மவுல்வான்
வரைவிடு பொழுதென மலரடி தொழுதார். 19(438)

### பொருளுணர்ந்த பின் மன்னனிடம் சொல்ல அஞ்சினர்

அரசனு மணிசிர மசைதர வவர்போய்
வரனுறு முடுநிலை வழிபல முறையி
னிரையொடு முணர்வொடு நெறியி னறிந்தே
யுரைதர நலிவொடு மொருநிலை கொண்டார். 20(439)

அமைச்சன் ஆசறிடம் பொருள் கூறச் சென்றனர்

தேசுறு மிறைமுனர் தெரிதரி னெஞ்ச
மாசுறு மெனவவர் மதிரொடு மவனின்
வாசலி னழகிய வருமணி தவிசி
னாசறு முறவவ ணதபொடு சென்றார். 21(440)

தந்திரர் மதியினர் தகையின ருணர்வின்
மந்திரர் தளபதி வடிவின ரருகே
சுந்தர நிலையொடு முறவெழி றுலகு
சந்திர னெனுமவ னடிதனை வணங்கார். 22(441)

மேன்மை பொருந்திய ஓர் ஆண்மகன் இங்கு பிறப்பான்

கலிநிலைத்துறை

வீர மன்னிய திண்புய விறல்புரி யூகச்
சூர மன்னிய தலைவநம் மரசவர் துயில்செய்
நேர மன்னிய கனவினி னிகழ்தரும் பயன்கள்
வார மன்னிய கருத்தொடுங் கேண்மென மவுல்வார். 23(442)

நமக்கு மேன்மைக ளிணக்கிய நரபதி யவர்தந்
தமக்கு மேன்மையி னுவந்தவ ரடுத்தவர் தம்பால்
கமைக்கு மேன்மையி னொருவடி வுறுங்கதிர் குலவி
யிமைக்கு மேன்மையின் மகவிவ னுதித்திடல் வேண்டும். 24(443)

அரசனும் அவனுக்குரிய அனைத்தும் அவனால் அழியும்

இலங்கும் வெண்மணி யெனவரு மியன்மக வதனாற்
குலங்கொள் வீரர்கள் கடகரி குரகத மற்றித்
தலங்க ளோடுநம் மன்னவன் சமையமண் டபமு
நிலங்கள் யாவையு நிலையற வழித்திடல் வேண்டும். 25(444)

உலகனைத்திலும் அதிகாரம் செலுத்துவான்

செறிந்த வன்கிரி யொடுபெருங் கடந்திரைக் கடல்சூழ்
நிறைந்த பாருல கடங்கலு மொருகுடை நிழற்றி
யுறைந்த வாண்டகை மன்னவ ரொருவழி கொண்டு
குறைந்தி டாதிறைஞ் சிடுமிகை கொள்ளவும் வேண்டும். 26(445)

அரசனிடம் சொல்ல அஞ்சி உம்மிடம் உரைத்தனம் எனல்

இனைய தோர்பய னுளவருங் கனவினி லிதனா
லனைகொள் பூந்தொடை மற்புய நரபதி பாலி
னினைவி னாலடுஞ் சினமென நிகழ்த்துவா னஞ்சிப்
புனைதல் செய்தனம் நும்மிடத் தென்றனர் புலவர். 27(446)



அவர்தம் அச்சத்தை ஆசறு அரசனுக்கு அறிவித்தல்

புலன்கொ ளாசறு மணிமுடிப் புரவல னிடம்போந்
திலங்கு பொற்கழ லிறஞ்சிநுங் கனவினிற் பயனே
துலங்கு முன்னரிற் சொல்லுவான் றுயரொடுங் கணிதர்
விலங்கி நின்றன ரவ்விடத் தென்றனன் வேண்டி. 28(447)

நான் எதுவும் செய்யேன் வரச் சொல்க என மன்னன் கூறல்

என்று கூறலு மியாதொன்று மெய்துவ தின்றென்
றின்று கூறியித் தலங்கொணர் கென்றன னமைச்சன்
சென்று கூறியக் கணிதவல் லவர்த்திரிப் பித்தார்
நன்று கூறிவந் தரசர்கோ னனிபதந் தொழுதார். 29(448)

ஆசறு முன் உரைத்த பலன்களை அவர்கள் வந்து கூறல்

கூம்பி நின்றகை யினர்முக நோக்கியக் குறிப்பிற்
றேம்பி டாதுரை மின்னென வேந்தனுஞ் செப்பச்
சாம்பி யாசர்முன் சாற்றிய வரன்முறை தவறா
தேம்பி நின்றனர் சோதிட நூலுணர்ந் திருந்தார். 30(449)

அவ்வீரன் எங்குளான் அவன் படை எது எனல்

புதிய கோலத்தி னுதித்திவை புவனங்க ளெல்லா
மதிக வீறொடு மொருவனே புரப்பனென் றறைந்தீர்
மதியு ளீரவ னெத்திறத் தெப்படை வசத்தி
னதனிற் காரண மென்னென வினவின னரசன். 31(450)

அத்தகு வசதிகள் அற்ற தனியன் அவன் எனல்

வேக வெம்பரி விகடவே தண்டவெங் கரியுங்
வாகு வல்லவர் பற்படை யாயுத மற்றும்
பாக மில்லவன் றனியவன் பரிவுறு மறிவன்
சோக மில்லவ னென்றனர் தொகுத்தருள் கணிதர். 32(451)

நகைத்து அவன் யார் மகனாய்ப் பிறப்பான் என வினவல்

வெள்ள மற்றணி யாயுத மிலனென விளக்கக்
கள்ள முற்றிடுங் காவலன் புன்னகை செய்து
தெள்ளு முற்றவ னாசறை நோக்கியச் சேயா
ருள்ள கத்திடை யுதித்திடல் வினவுக வென்றான். 33(452)

### மன்னனுக்கு நெருங்கிய ஒருவனின் மகனாகப் பிறப்பான் எனல்

மன்னன் சொற்படி மந்திரர்க் கதிபதி மருங்கிற்
றுன்னு கின்றவ ரிடத்தினில் வினவலுந் துதித்து
நன்ன யத்தர சிவர்நனி யுவந்தவ ரிடத்தி
லின்ன வன்றிறன் வருவனென் றிசைத்தனர் கணிதர்.
34(453)

### மன்னன் வியந்து சிந்தித்தல்

பாங்கி னுற்றிடு நட்பினர் முறையினர் பரிவு
மோங்கு மன்னவர்க் கருகரி னிவரென வுணர்நூ
லாங்கு சொற்றில வென்னவு மறைந்தன ரரச
னீங்கு சொற்றவ ரெவரென வுளத்திடை வியந்தான்.
35(454)

### கௌதாரிய்யா நகர் நிறுவிய கூசுவின் சந்ததியே தனக்கு நெருங்கியோர் என எண்ணல்

தொடர்ந்த நட்பின ருவப்பினர் துங்கவ ரருகர்
படர்ந்த வீரியர் கூசவன் பண்புறும் பிதிர்க
ளடர்ந்த வேல்வல மந்திரர்க் கதிபதி யன்றி
யிடந்த ருந்திறர் வேறிலை யெனவிறை யிசைத்தான். 36(455)

### கூசுவின் சந்ததியைக் கொன்றொழிக்க மன்னன் கட்டளை

தன்ன கத்திடை யிதற்குறுந் தகைமையே தென்னப்
பன்ன கத்தொடு மிவையிவை முடித்திடல் பரிவா
மென்ன கத்திடை சூழ்ச்சியி னுணர்ந்திறை யவனு
மன்ன கத்தவை யினிற்றிற மறவருக் குரைப்பான். 37(456)

ஆசு தந்திடு மரவென வழலென வடுக்கின்
மாசு தந்திடு மன்னவ ரெனும்வழக் கதுபோ
லேசு தந்திடுங் கொடிய னென்னரு குயர்ந்த
கூசு தந்திடும் பிதிர்களைக் கொலைபுரி கென்றும். 38(457)

### கருக்களையும் அறுத்தெடுத்து அழிக்க வேண்டும்

நகரி டத்தினுஞ் சுற்றினு நாற்குலந் தனினும்
பகர மைந்தர்க ளரிவையர் படுபுணர் மறுத்து
ளகடு தங்கிய கருக்களை யெடுத்தெடுத் தறுத்து
விகட வெம்பகை நீக்குதி ரெனவிடை யளித்தான். 39(458)



### அவ்விதமே செய்தனர் கொடியோர்

கொடிய மன்னவன் சொற்படி மறவர்கள் குழுமி
நெடிய கூசவன் பிதிர்களு நிலையற வதைத்தார்
படியும் வானமு மிரங்கிட வுள்ளமும் பதறக்
கடிய கூந்தலார் கருவெடுத் தழித்தனர் கதத்தார். 40(459)

### மக்கள் குமுறலும் மன்னன் மகிழ்தலும்

நான்கு மைந்துமா றேழென நலிவுறு மடவார்
மான்கு லாவிழிப் புனலுக வசைதரு மடவார்
நான்கி ரண்டுமொன் றுடையவர் நடையிலா மடவார்
ஊன்க லந்துள வொண்கரு வயினெடுத் தழிப்பார். 41(460)

பொருள்கள் போக்கிய கருவையுந் தாயையும் போற்றா
தருள்கள் போக்கிய மறவர்க ளடுங்கொலை புரியுந்
தெருள்கள் போக்கிய விலக்கமேற் செனித்திடுங் குழவி
மருள்க ளாக்கிய மன்னவ னுணர்ந்துள மகிழ்ந்தான். 42(461)

இலங்கு பொன்முடி மன்னவ னியலிசை நூலிற்
றுலங்கு மீன்கண முணர்தருந் துங்கவர் விளித்துத்
தலங்க ளெங்கனுந் தாயிடந் தரித்திடுங் குழவிக்
குலங்க ளொன்றல நூறுநா றாயிரம் குவிந்த. 43(462)

### அவன் அழிந்து விட்டானா என கணிக்கக் கேட்டல்

அனந்த வன்கொலை யாலக வன்மைய னரியோன்
வனைந்த தாயிடந் தன்னொடு மடிந்திறந் தனனோ
வினந்த டத்தொடு மிருந்தன னோவிவை நோக்கி
மனந்த கைப்பற வுரைத்திரென் றிசைத்தனன் வன்பின்.
44(463)

### இன்னும் கருவாகவே இல்லை என கணிதர் கூறல்

அற்ப றுத்தெறி கணிதவ ரவ்வதி புதுமை
வற்பு றுத்திட வருமெவ னினமெவர் வயிற்று
முற்ப வித்தில னென்றடி யிறைஞ்சின ருருத்து
முற்ப டுத்திய வழல்விழி முரணர சுணர்ந்தான். 45(464)

### படைப்பினங்கள் இறைவன்பால் அழுது முறையிடல்

பாத கத்துறை செயுமுறை பற்பல படைப்பு
மீதி னுற்றிடு மன்பினால் விழிபுன லுகுத்துப்
பூத லத்தினும் விண்ணினுங் காவலிற் புரக்கு
மாதி கத்தனை யிறைஞ்சிநின் றறைந்தன வன்றே. 46(465)

### இவனையழிக்க இன்னார் பிறப்பார் என இறைவன் நன்மாராயம்

இன்ன வண்கொலைக் கயவனு மிழிதரத் தோற்று
மன்ன வண்மைய ரிவரென வருங்குறிப் புடனே
சொன்ன தோற்றமே மகிழ்வுறச் சோபனத் தோடு
நன்ன யத்திறை யுணர்த்தின னனிகொண்மா ராயம். 47(466)

தோற்று மென்னபி காரணந் துலக்குற வுலகம்
போற்று மேன்மைக பீபுமு கம்மதும் புந்தி
யேற்ற நற்களிப் பென்னவே யிறைவன்மா ராயந்
தேற்ற யாவுமின் னருளொடுஞ் செழித்திருந் தனவே. 48(467)

### தன் திட்டத்தை நிறைவேற்றுவதில் கருத்தாயிருந்தான் கயவன்

கணித நோக்கலுங் கருபல வழித்தலுங் கவலைப்
பிணித னோக்கலு மிடையிடைப் பெருமையின் மகிழ்வு
மணித னோக்கிய வரிவையர் சுகத்தினு மவர்பாற்
கணித னோக்கொடு மிருந்தனன் கயவரிற் கயவன். 49(468)

நமுறூது கனவு கண்ட படல முற்றிற்று
ஆக படலம் 9-க்கு திருவிருத்தம் 468.

—□—

# 10. நபிஇபுறுகீம் அவதாரப் படலம்

### படலச் செய்தி

கலிவிருத்தம்

காரண நபியொளி கதிர்செய் மேன்மையிற்
சீரணி புகழிபு றுகீஞ் செம்மலார்
வாரண மணியென வரிசை மிக்கொடுந்
தாரணி யிடத்தவ தரித்த தோதுவாம். 1(469)

### அமைச்சர்கோன் ஆசறு தேவாலயக் காவலனும் ஆதல்

தண்ணணி யிசைமருத் தடத்துத் தண்டலை
நண்ணணி நகர்கவு தாரி யாவினின்
மண்ணணி மன்னவ னமைச்சர் கோனெனும்
பண்ணணி புயத்தினன் பரிவி னுற்றனன். 2(470)

தேசணி கலைபல தெரிந்த சிந்தைய
னாசறென் றியற்றிய வண்ணல் வன்சிலைக்
காசறு மாலயக் காவ லோடுநற்
பூசுரர் தொழிலொடும் பொங்கி நின்றனன். 3(471)

### கோயில் சென்ற ஆசறை சிலைகள் ஒருங்கு நோக்கல்

திசைபடுந் திரவியந் திறையி னிற்குவை
மிசைபடு மன்னவ னவையின் மேவிய
நசைபடு யூகியர் நடக்கை வேண்டிய
விசைபடு மந்திரன் வியன்கொள் காலையே. 4(472)

நறவணி பூந்துணர் மாலை நன்சுடர்
பிறவணி பொருளொடும் பெரிய கோயிலிற்
றுறவணி துறந்தவர் தோற்றும் யோதினி
லுறவணி சிலையெலா மொருங்கு நோக்கின. 5(473)

### சிலை அவர் காலடியில் குப்புற விழுதல்

பட்டுடை சரிதரப் பணிகள் பைந்துணர்
மட்டுடைப் பூழ்தியின் மறைய வண்பொனின்
கட்டுடைச் சிலையிவர் கழலி னோக்கியே
முட்டுற முகமது கவிழ்த்தி வீழ்ந்தனன். 6(474)

### ஆசறு இருகரம் கூப்பி அர்ச்சனை செய்தல்

நிலன்படுந் தெய்வங்க ணிலைக ளாய்ந்திடா
துலம்படு புயத்துடை யாச றுள்ளகம்
பெலன்பட விருகரம் பெட்பிற் கூப்பியே
தலம்படு வரிச்சனை தகையிற் செய்தனன். 7(475)

### சிலையின் பின் மறைந்து இபுலீசு பேசுதல்

அன்பறுங் கொடியிபு லீச னப்பொழு
தின்பறு முருவசத் திருந்து பத்தியின்
முன்பறு மாசர்தன் முகத்தை நோக்கியே
துன்பறு மொழிபல சொல்கின் றனரோ. 8(476)

### உண்மை வெளிப்பட்டது, பொய்மை போயிற்று எனல்

தோற்றிய பொருள்களிற் றுலங்கு நல்வினை
யாற்றலி னுண்மையே வெளியி னுயின
மாற்றுறுந் தீவினை வன்பொய் மாறவே
தேற்றுமிப் போதெனத் தெரிந்து கூறினுன். 9(477)

### குழப்பமடைந்த ஆசறு இல்லம் ஏகுதல்

முன்னிலை சிலையது மொழியக் கோட்டுயர்
நன்னிலை தெய்வமிந் நவிற லேதெனத்
தன்னிலை யயர்வொடுந் தயங்கி யாசறு
மின்னிலை தன்னகத் திடத்தி னெய்தினுன். 10(478)

### மனைவியிடம் அவ்வுரையின் பலன் கூறி அவளைத் தீண்ட முயல்தல்

வரைத்தட மாளிகை மனைவி நோக்கியே
விரைத்தடக் கோயிலின் வீழ்ந்த வன்சிலை
நிரைத்திடும் வாய்மையி னிகழ்ந்த பெற்றியு
முரைத்தனன் பயன்பெறு முற்ற மன்னனே. 11(479)

### முதுமையுற்றேன், நினைத்தது எப்படி நடக்கும் என அவள் கேட்டல்

என்னுயிர்க் குயிரென வியைந்த நாயக
மன்னிய பூப்பது மாறி நாள்பல
வின்னன மாயின வின்றிப் போதினி
லன்னவை குறிப்பொடு மடைந்த வென்கொலோ. 12(480)

தாதுளத் தமைபுன லிளமைத் தம்மிட
மீதினில் வருவன மேலு மின்றெனக்
கீதகத் தெய்திய தென்கொ லென்றனள்
மாதுரைத் திடுமொழி மகிழ்விற் கேட்டனன். 13(481)



### அச்செய்தி மன்னனுக் கெட்டலாகாது என ஆசறு கூறல்

இசைதருங் காரணத் தினைய செய்திகள்
மிசைதரு மன்னன்பான் மேவி டாதுளம்
பசைதர வுன்னிடம் பதனத் தாக்குதி
நசைதரு மென்றன னுமை வேலனே. 14(482)

### மன்னனின் மணிமுடி சிதையுமென ஆசறின் உள்ளத்தில் ஒலித்தல்

முறைமுறை முன்னன முற்ற நாளுமே
குறைவறக் குளித்தவர் குளிர்ந்த மாமண
நிறைவர நெடுங்குழற் கூட்டி நீர்மையி
லுரைதர வாசறு முற்ற காலையே. 15(483)

வெய்யவெஞ் சிலைவிறல் வீர மன்னவன்
செய்யமா மணிமுடி சிதைத்த லென்னவே
மையணி யுளத்துடை யாசர் வன்மனத்
தையுறப் பேரொலி முழங்கிற் றன்றரோ. 16(484)

### உன் முதுகிலுள்ள மேன்மையான ஒளி உன் மனைவியிடம் போகும் எனல்

மதியொடுங் கருணையு மான மேன்மையும்
பதிதரு மோரொளி பரிவி னின்முது
கதினிடை யிருந்ததை யகில நன்னெறித்
திதிகொள விறையவன் சிந்தித் தானரோ. 17(485)

பெருமையி னமைதரும் பெற்றி யாளென
வருமையி னின்றிரு மனைவிக் கன்பொடு
மிருமையி னின்மையே யெழிலி னீந்தன
ளொருமையி னளவிலா தொருவ னென்றரோ. 18(486)

### அச்சங்கொண்ட ஆசறு அஞ்சி வெளியிலோடுதல்

இயல்பொடுங் குறிப்பிலா தெழுந்த விண்ணொலி
யயர்தலி னுசறு மஞ்சி யஞ்சியே
பெயர்தலி னுளத்தொடும் பெரிது துள்ளியில்
லயலொடு முகங்கொண்ட வதரி னோடினுன். 19(487)

தன்முகம் போக்கிய தகமை யாசறுண்
மன்முகம் போக்கலின் வழியி னங்ஙன
நன்முக வமரரி லொருவர் நண்ணியே
மின்முகங் கொடுத்தணி விளம்பு வாரரோ. 20(488)

வழியில் வானவர் தடுத்து எங்கு செல்கிறீர் எனல்

அணிசிரத் துறுவியர் வாகந் துன்னவுந்
திணிபுயங் குலைதரத் திரித்த மூச்சொடுந்
தணிதலி லுளத்தொடு மியாண்டு சார்குதிர்
கணிதரும் புந்தியிற் களிக்கு மேன்மையீர். 21(489)

மனைதிரும்பி பேரொளியை மனைவியிடம் சேர்த்துவிடும் எனல்

நின்னெழின் முதுகிட நிவந்த பேரொளி
மன்னிய தகையிடம் வதிந்த மாமணி
தன்னிட மில்லகஞ் சார்ந்து சேர்த்தியென்
றன்னவ ருரைத்தனர் யாவு நீங்கினான். 22(490)

இல்லம் மீண்ட ஆசறு தனியாகத் துயிலல்

சொல்லொடு முன்னுறுஞ் சோபத் தோடுடற்
புல்லிய திகைப்பொடுந் திரிந்து போந்தவ
ரில்லவ ளொடுமிசை யாது தன்னினே
யல்லினிற் றுயிறலே யன்றின் மேயினார். 23(491)

துயிலெழுந்தபோது தன் நெற்றியில் நல்லொளி காணல்

வண்மையிற் றுயிலெழுந் தரிய வானிலம்
வெண்மையி னோக்கலு மவர்தன் மேன்முக
நண்மையி னுதலிடை நலங்கொண் மாமணி
யுண்மையந் திருவொளி வொளிரக் கண்டனன். 24(492)

தன்னிடத் திலகிய தண்கொ ணல்லொளி
முன்னிடத் தழகொடு மொய்ப்ப மேன்மையிற்
றுன்னிடப் புதுமையிற் றுளங்கி யுள்ளகத்
தன்னவ ரன்பொடு மரிதி னுற்றனர். 25(493)

தன் மனைவி அவுசா அழகும் இளமையும்
பெற்றுப் பொலியக் காணல்

எழிலியன் மாளிகை யிருந்த மேன்மையிற்
செழிதருந் திருவவு சாதன் பாரியார்
பொழிகதிர் மதியினும் பொழிய நல்லழ
கொழுகிய வியப்பினைக் கண்ணுற் றாரரோ. 26(494)

புத்தெழில் பெற்ற அவுசாவின் கேசாதிபாத வருணனை

செறிதரும் புயலெனச் சிதற லின்றிநீர்
மறிதரு மறலென மறுக லின்றிப்பின்
பறிதரு மிருளெனப் பகலின் றின்றியே
நெறிதருங் கருங்குழ லிவர வாசமே. 27(495)



சிலையது வளைவெனத் தெறித லின்றிவான்
கலையது பிறையெனக் களங்க மின்றிவன்
கொலையது மழுவெனக் கொடுமை யின்றியே
திலகநன் னுதலணி சிறந்தி லங்கவே. 28(496)

பொருகொடி யலகெனப் பொருத்து விட்டிடாத்
திருகொடிப் புருவமுஞ் சிறந்த கெண்டையின்
வருகொடி கணையினு மறித்த லுன்னலுந்
தருகொடி படர்விழி தளங்கு நின்றரோ. 29(497)

வள்ளையி னல்லிலை வள்ளி யூசலிற்
றுள்ளிய குழையொடுந் துலங்குஞ் சாணையிற்
றெள்ளணி யுலகுயிர் சீர்மை காட்டிய
வெள்ளைமெல் லாடிபோன் மிளிர் கபோலமே. 30(498)

செந்நறை கமழ்தருஞ் செண்ப கத்தெழி
லந்நறை மலரென வலரிற் றுண்டமு
மன்னறை கயிரவ மலரிற் றுப்பினின்
பின்னறை யதரமே விளங்கு நின்றரோ. 31(499)

முத்தென மதித்திடா மூரல் வண்ணமும்
புத்தெழி லொழுகிய புதிய சோமனு
மத்தல முயலின்றி யலர்ந்த தாமென
வத்திரந் தெளிவொடும் வண்மை தோற்[illegible] 32(500)

நீரிடத் தின்றிய பணில நீர்மையிற்
சீரிடக் கந்தரஞ் சிறப்பு லாவவே
பாரிடத் தெழிலொடும் படர்ந்து தீயி[illegible]
வேரலிற் றோளிணை விளங்கு நின்றரோ. 33(501)

இசைத்திடா யாழென விசைத்த முன்கை[illegible]
நசைத்தட நடுவலர் நளின வங்கையும்
விசைத்தலர் காந்தளின் மெலித லின்றிய
மிசைத்தகை விரனகம் வயிர மேன்மையே. 34(502)

திரைபடு முடலெலாஞ் செய்ய பொன்னென
விரைபடு மலரினம் விளங்கு மென்கொடி
புரைபடு மருங்கொடு புதிய சாயலின்
மரைபடு பதத்தணி மருவி நிற்பவே. 35(503)

34038

### தன் நெற்றியொளியும், அவுசாவின் இளமையும் அருங்காட்சிகளும் ஆசறைச் சிந்திக்க வைத்தல்

இவ்வகை யெழிலணி யிலங்குந் தேவியார்
செவ்வகை விளித்தெனின் சிறந்த மாமுகத்
தொவ்வறு மொளிவிருந் தொளிரக் கண்டனை
மெய்வகை கொல்லென வினவி னானரோ. 36(504)

நும்மிடத் தணிமணி நுதலிற் சோதியே
நம்மிடத் தலர்தர நனிதிற் கண்டனை
னெம்மிடத் திளமைவந் திருந்த மேன்மையே
யும்மிடத் துணர்ந்தநீ ரென்ன வோதினாள். 37(505)

தன்னிடத் தடிக்கடி யறிவின் சத்தமுந்
துன்னிடு வதற்குமத் தோகை பாங்கினின்
மன்னிடு புதுமைக்கு மனது ளாடவே
தென்னாறுஞ் சிந்தனை சிந்தித் தானரோ. 38(506)

### மன அமைதி காண ஆசறு கோயில் புகுதல்

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

எறியலைத் துரும்பாய்ப் பாவி னிடுகுழ லேய்ந்த நெஞ்சின்
மறிதலை யுடையா னுற்ற மனைவிடுத் தெழுந்து தத்தங்
குறிதருங் கருங்கற் செம்பொற் குழுமணி யிழைத்துச் செய்து
செறிதருந் தேவர் கோயிற் சிந்தனை யோடும் புக்காம்.
39(507)

### சிலைகளுக்குப் படைத்த பொருள்கள் அப்படியே இருக்கக் காணல்

இரவினிற் படைக்கும் பாகு மிருங்கனி யுண்டி யெல்லாம்
விரைவொடு நாளுந் துய்க்கும் வெங்கணம் வந்த காலை
வரனுறு மமரர் நீக்கும் வன்மையாற் கார ணத்தாற்
பரமொடு நென்னல் வைத்த பரிசவை யிருப்பக் கண்டான்.
40(508)

### அதைக் கண்ட ஆசறு கவலை கொள்ளல்

தேனகு கனியும் பாகுஞ் செவ்வுண வமரர் தம்மா
லீனவன் கணங்க ளுண்ணா திருப்பவை யாசர் கண்டு
மானநந் தெய்வ நம்பான் மனக்குறை யென்னோ வென்ன
வானமுற் கவலை தன்னி னதிகமுற் றயர்ந்தா னன்றே.
41(509)



### தெய்வ கோபம் நீங்க ஆசறு பிரார்த்தனை

இல்லகத் திருந்த போது மியைந்ததுங் கோயில் வைகுங்
கல்லகத் துணவுங் கண்டு வேறொன்றுங் கருத்துட் கொள்ளா
தல்லகத் தவணிற் றூய்நீ ராக்கையிற் புதுமை யாக்கி
நல்லகத் தோடுந் தெண்ட னனிபெறச் செய்யா நின்றான்.
42(510)

தெய்வத்துண் மனத்தின் மேய சினமெனப் பயந்து நண்பி
னுய்பத்தி யோடு முன்ன ருணவொடுந் தீப தூபங்
கைபற்றி வைத்துக் கூம்புங் கரத்தொடு மிரவு தன்னின்
மைபற்று முளத்தி னின்றான் மரவினைக் கதிப னன்றே.
43(511)

### ஆசறு திரும்பாமை கண்டு அவுசா தேடி வருதல்

திருமனை யிடத்திற் கண்ட செய்தியு மிருவர்க் குற்ற
வருமையுஞ் சிந்தை சிந்தித் தவரன்றோ விரவி னின்னம்
வருமுறை யொழிந்து நின்ற மாற்றமென் னென்னோ
வென்னத்
தெருமரல் கொண்டு மாதுந் தேவரில் லகத்தில் வந்தாள்.
44(512)

### அழகு மனைவியைக் கண்ட ஆசறின் உளத் தடுமாற்றம்

விரிகதிர் பருதி கோடி விளங்கிய தென்ன மேனி
சொரிகதிர் பணிகண் மின்னத் தூசணி துளங்கக் கூட்டும்
பரிமளங் கமழச் செவ்விப் பருவததின் மடமான் றோற்ற
வுருகிய வுளத்தி னின்ற யூகிமந் திரியுங் கண்டான். 45(513)

### ஆசறுக்குக் காமம் தலைக்கேறல்

நேமமு மொழிய வுள்ள திட்டையு மொழிய வாசத்
தூமமு மொழியத் தீபத் தோற்றமு மொழிய வாயி
னாமமு மொழியக் கூம்பு நனிகர மொழியக் கண்ட
காமமே விகாரங் கொண்டு தெய்வமே யொழியக்
கண்டான். 46(514)

பொங்கியுள் ளெழுந்த மோகப் புணரியி லமிழ்ந்தி யேதுந்
தங்கிடா தயர்ந்து நாணற் றனையெறிந் தாக்கங் கொண்டு
முங்கிய சோபந் தேம்பி மூச்சொடுங் கரையிற் செல்லும்
வங்கமென் றுற்ற தேவி மலர்க்கரம் பற்றி னானால். 47(515)

அந்த இடம் தகுந்ததன்றென அவுசா தடுக்க முயலல்

தொட்டுறு மன்ன னோக்கித் துங்கவ வண்ண மாலை
மட்டுறு மழகின் கோயின் மனையிட மன்று தெய்வங்
கிட்டுறு நகைக்கு மீதே கீழ்மையின் பொய்த லாமால்
விட்டுநீ ரொழியு மென்றாள் விளங்கிழை யிலங்கு மானே.
48(516)

மீறி ஆசறு அவுசாவொடு கூடல்

கண்ணவ டோற்ற மன்றிக் காதவ ளுரையே யன்றி
வண்ணவாய்ப் பான மன்றி மூக்கவண் மணமே யன்றி
யுண்ணல னவளே யன்றி யொன்றுமே நுகரி லாதா
லண்ணலும் விகார வேகத் தணைந்தனன் வியந்து மாதே.
49(517)

இபுருகீம்நபி தாயின் வயிற்றில் புகல்

வானகத் தரம்பை மார்கள் வழங்குசோ பனத்தி னோடுந்
தானகத் தமரர் வாழ்த்த தரணியே வாழ்த்த வண்மை
மானகத் தணிக பீபுமுகம்மதின் வாழ்த்த லோடுங்
கோனகத் திபுரு கீமுந் தாயகங் குடிகொண் டாரால்.
50(518)

திங்கள் தோன்றியது

பாதவத் துளமு மூரும் பல்லுயி ருளமு மிக்கோர்
மாதவத் துளமு வான மலைகட லவனி யெங்குஞ்
சீதநற் கிரணம் வீசத் தீயிரு ளுமுறா துள்ளம்
போதவுற் றெழுந்து சோமன் றாயகம் பொலிந்த வன்றே.
51(519)

ககுபா கலிமா உரைத்தது

மேனனி கதிரின் சோதி விளங்கிய ககுபத் துல்லா
கோனனி யிறைவன் சொல்லாற் குறிகொள விறைஞ்சி மேலும்
பானனி யமுத மூறும் பண்புறுங் கலிமாச் சொல்லித்
தூநனி கொண்ட தென்கோன் றாயகந் துலங்கும் போதே.
52(520)

சிலைகள் உருண்டன

புடையினிற் றிகைப்பி னிற்கும் பொன்மணிச் சிலைக டத்த
முடையது குலைய வாய்கை கண்ணொடு முறுமண் பற்றிக்
கடையது கொண்டு ளஞ்சிக் கவிழ்தரு முகத்திற் கீழே
படபடென் றுருண்ட வங்ஙன் பார்த்திப ரவதா ரத்தே.
53(521)



வனத்தில் வாழ் விலங்கினங்கள் வாழ்த்தின

வென்றிறற் புவிக்கு மேவு மன்னிய வுயிர்க்கு மன்பிற்
கன்றிய மனங்கொ டுற்றீர் களித்தருள் பெறுவீர் நிந்தை
பொன்றின வெனமா ராயம் புகன்றவெவ் விலங்கி னங்க
டுன்றுதந் தந்தக் கூர்வாய்த் தூய்நிலந் தடவி மாதோ.
54(522)

நபிஇபுருகீமின் நாமநட்சத்திரம் பிறந்தது

கதிர்மதி புகழ வானோர் களிப்பொடும் புகழ்ந்து கூடி
யதிர்தரு சோப னத்தி னணியணி யிறங்கி வாழ்த்தப்
பிதிர்தரா நிலங்க ளெங்கும் பிறிதிட மின்றிவ் வள்ளற்
றிதிதரு நாம வெள்ளி சிறப்பொடு முதித்த தன்றே. 55(523)

அதனைக் கண்ட மக்களின் வியப்பு

அன்னையார் வாழு மேன்மை யகத்திடம் புக்க வப்போ
துன்னதத் துதித்த வெள்ளி யொளிவிரு கதிர்க்கால் காய
மன்னவே யெழுவான் மேல்வான் மலிதரும் விளக்கந் தன்னாற்
பன்னரும் புவியின் மாக்கள் பல்லரும் புதுமை யுற்றார்.
56(524)

அதைப் பார்த்த நமுறூது அச்சத்திலாழ்தல்

எண்டிசை யுயிர்க ளெல்லா மின்னரு டுங்க வானின்
மண்டிசை யொளிவிற் றேற்றுந் தாரகை வடிவ நோக்கிப்
பண்டிசை யச்சத் தோடும் புதுமையிற் பாவி நெஞ்ச
மிண்டிசை யயர்தல் கொண்டான் வெம்புலி யயர்தல்
கொண்டான். 57(525)

உறக்கமின்றி மன்னன் உழலுதல்

கண்களு முள்ளந் தானு மழுக்கிய கதிரிற் கொண்ட
புண்களுட் புதுப்புண் ணாக்கிப் பொங்கழல் வேல்புக் கென்னத்
தண்கெழுஞ் சோதித் தாக்கிற் றயங்கிநித் திரையில் லாது
வண்களு மொழிய வல்லும் வருந்தலி னொழிந்த தன்றே.
58(526)

வெள்ளி தோன்றியதன் பலாபலன்களை சோதிடரிடம் கேட்டான்

தெளிதருங் காலை நன்னூற் சிந்தனை யழிக்கும் புன்மை
களிதருங் கணிதர் தம்மைக் கருத்தொடு மழைக்க விட்டா
னளிதருந் தூதர் சொற்கொண் டன்னவர் விரைந்து மன்னன்
ஒளிதருங் கழலிற் றாழ்ந்து பந்தனை யோடு நின்றார். 59(527)

அலையெறி கடற்பா ரெல்லா மறிந்துணர் வெய்த வெங்குங்
கலையெறி மதிய மென்னக் ககனிடை யின்றி ராவி
னிலையொடுந் தோற்று மீனி னிவர்தருங் கார ணங்கள்
மலைவெறி தருவா ளுய்ந்து வகைவிரித் துரைத்தி ரென்றான்.
60(528)

ஒரு குழந்தை பிறந்து மன்னனின் வாழ்வை அழிக்கும் எனல்

வரியளி முரலுந் தண்டார் மன்னவன் வதன நோக்கித்
தெரிவரு நூலிற் றேர்ந்து தெண்டனை மீண்டுஞ் செய்து
விரிதரு மும்பர் ஞால மடங்கலும் விளக்கச் செவ்வி
சொரிதரு மேன்மை பூத்துத் தோற்றுமோர் குழவி மன்னே.
61(529)

மன்பதை முதல யாவும் வாழ்த்திட வருமம் மன்னன்
றன்பர நின்றன் வாழ்வுந் தகுதியு மழியு மேலு
மன்புட னெவரும் போற்று மாட்டிற னென்ன விந்நூல்
வன்பற விளக்கிற் றென்றார் கணிதவல் லவர்க ளன்றே.
62(530)

அதுகேட்டு அவன் நடுங்க வானில் ஒலி எழுதல்

சொற்பொரு ளுணர்ந்து நெஞ்சிற் றுயரமே வயிரங் கொண்டு
பற்பொரு ளாய்த லோடும் பரவிய சூழ்ச்சம் பன்னு
மப்பொரு ளணியு மன்ன னவிருட னடுங்க வார்ப்பி
னுப்பறு மொலியொன் றங்ங னுன்னதத் தெழுந்த
தன்றே. 63(531)

''இன்றொரு குழவி தாய் வயிற்றில் தரித்தது''

நிலத்தும்வா னகத்தும் செங்கோ னீதியி னுணர்ந்து காக்கு
நலத்துடை யொருவ னுய நாயகன் றனக்கு மாறாய்ச்
சலத்துடை பகைவ னின்றே தகைபெறு மினைய தோன்றல்
வலத்துடை யெவரும் வாழ்த்த வயினிடந் தரித்த வன்றே.
64(532)

''அக்குழவி உன் வாழ்வையும் தகுதியையும் அழிக்கும்'' எனல்

வென்றியின் வல்ல நாயன மேன்மையிற் புவன மெல்லாந
தன்றுணைப் பாதந் தாழ்த்துந் தகையொடு முதிக்குந்
தோன்றல்
வன்றிறக் கரத்தா னின்னை மன்னுநின் வாழ்வை யாவும்
பொன்றிட வழிப்பா னென்னப் புகன்றவை யுணர்ந்தான்
வெய்யோன். 65(533)



மீண்டும் கருவையெல்லாம் அழிக்க மன்னன் கட்டளை

உளத்தொடுஞ் சினத்தாற் கண்க ளுகுபொறி மிளிர மேவுந்
தளத்தெழும் வீர நோக்கித் தன்னையே மதித்த மன்னன்
களத்தொழி லவரைக் கூவித் தையலார் கருக்க ளெல்லாம்
பிளத்தழித் திடுதி ரென்றா னிந்தையே பிறந்த வன்பன்.
66(534)

கொடியோர் செய்த கொலைபாதகமும் உலகம் இரங்கலும்

மறமுதிர்ந் தவர்கள் போந்து மானனூர் தேடித் தேடி
நிறமுதிர் தரவே கொண்ட நெடுவயிற் றெழுந்த பிளந்
திறமுதிர் கொலையே செய்தார் செந்துயி ரியாவு மேங்க
வறமுதி ருலக மெல்லாம் வாய்திறந் திரங்கு மன்றே.
67(535)

மாதரிட்ட சாபம் அவ்வஞ்சகனைச் சூழ்ந்து பற்றியது

பாதக னென்றுந் தீமைப் பழியின னென்றும் வெய்ய
காதக னென்றுங் கண்ணீர் கரைத்திடுங் கருப்ப மாதர்
வாதகத் தழிந்தா ரெண்ணில் வரைவின்று நஞ்ச புஞ்சஞ்
சூதகத் தழுந்தும் பாவி யுடலெலாஞ் சூழ்ந்த தன்றே.
68(536)

அனைத்தும் அவன் வீழ்ச்சியை உறுதிப்படுத்தின

அசைத்தலு முடலு மியாரு மணுகிலா தாலு மாக்கைப்
பசத்தலு முயிரு முள்ளம் பதறலுங் குறிமீக் காலு
மிசைத்தலுங் கற்பி னோர்க்கே யெனிலவ னினைய தன்னுன்
மிசைத்திடு பழியே சூழ்ந்து வீதலே சரத மம்ம. 69(537)

நபிஇபுறுகீம் அவதாரப் படல முற்றிற்று
ஆக படலம் 10-க்கு திருவிருத்தம் 537.

—௳—

# 11. புவனம் விளங்கிய படலம்

## படலச் செய்தி

கலிநிலைத்துறை

சிறந்த மேம்புகழ் நளினமா மணியெனத் திகழு
நிறைந்த காரண நபியிபு ருகீமிந் நிலத்தி
லறிந்த வல்லவன் கருணையா லழுக்கறு நெறியிற்
பிறந்த சீர்மைக ளினிதொடும் பிரித்தெடுத் திசைப்பாம்.
1(538)

அஞ்சாதே என அவுசா காதில் அசரீரி ஒலிக்கும்

வஞ்ச நெஞ்சினன் மனத்துறு வெம்மையின் மறத்திற்
புஞ்ச நெஞ்சொடுங் கருக்குலம் போக்கிடுங் காலே
தஞ்ச நெஞ்சினிற் பேரொளி தரித்திடுஞ் தாயார்க்
கஞ்ச லஞ்சலென் றணியணி சோபன மருகும். 2(539)

நான்காம் மாதம் கனவு கண்டு நாதனிடம் உரைத்தாள்

வேத நாயகன் காவலிற் குறிப்பொன்றும் வெளியி
லாத லின்றியே யழகொடு முயரரும் பொருளே
சீத நன்கொடும் வளந்தரச் செனித்திடு மனையார்
மாத நான்கினி லொருகனு மதிப்பொடுங் கண்டார். 3(540)

முரண்ட குங்களிற் றடையலர் முனைக்கடந் தொளிரு
மிரண்ட கும்படை யாசர்தன் னெழின்முக நோக்கிப்
புரண்ட குங்குமப் பூந்தொடைப் புனைந்தணி பொலனு
ணரண்ட குங்கிளி யினையன வன்பொடு மொழியும். 4(541)

என் முன்றுனையில் வான்சுடர் வந்திறங்கி ஒளிர்ந்தது

உடுத்தி டுந்தலைத் தானையி னிடையொரு தழலிற்
றெடுத்தி டுங்கதி ரொளியெழுந் தழகொடு தோற்றி
யடுத்தி ருந்துவா னகத்தரும் புவியெலா மளவி
விடுத்த சோதியின் கால்கொள விளங்கிய தென்றுர். 5(542)

அயலார் அறியாமல் மறைக்கும்படி ஆசறு உரைத்தல்

சொல்லு மாமயிற் றூய்முக நோக்கியித் தோற்ற
மல்லு மற்றுள ரறிந்திடிற் றீவினை யருகும்
புல்லுங் காரணத் துடையவிப் பொருண்மறைத் திடுமி
னில்லுங் கொண்டவ ரில்லெனு விசைத்திடும் பண்பால்.
6(543)



''நமுறூது அஞ்சும் குழந்தை உன் வயிற்றிலுள்ளதே''

கண்ட காரண முறிதியேற் கதிர்படு நிலங்கள்
கொண்ட காவல னின்வயின் றங்கிய குழந்தை
மிண்டு மன்னவ னயர்தருங் குறிப்பினின் வியப்பும்
பண்டு ளாளென வுரைத்தன னமைச்சர்கோன் பதுக்க.
7(544)

அவுசா வயிற்றில் குழந்தை வளர, மன்னன்
பிறர் கருவைத் தொடர்ந்தழித்தல்

கார ணம்பல நாடொறுங் காண்குறு மன்னே
யார ணம்பல வளர்தர வருமக வளருஞ்
சீர ணம்புனை சிந்தையின் மன்னவன் செனித்தோர்
பேர ணங்குறக் கருவழி பெருமையி னிருந்தான். 8(545)

மன்னன் கொடுமையால் ஊரார்க்குற்ற அவலம்

அணங்கி னன்னவர் சிலரருங் கணவனி னடர்வார்
வணங்கி வன்சிலை யிடத்தினிற் கருவரா திரப்பார்
தணந்தி லாதவர் தணத்தலு மறிகுவர் தகைகே. 9(546)
டுணர்ந்த மன்னவன் கொடுமையா லூரிலுள் ளவரே.

கர்ப்பத்தின் புறக்குறிப்புகளின்றி ஏழுமாதமாதல்

செழித்த மெல்லுடற் றோற்றில வருந்தில சிறப்பின்
பழித்த வன்குறி காண்டில வணிமணிப் பாவை
விழித்த கும்பயி னேர்மையின் காரண விளக்கே
பழுத்த நற்கரு மாதமே ழதுபடர்ந் ததுவே. 10(547)

மன்னன் மீண்டும் கனுக் கண்டது

அந்த காலையி னறனழி மறநிலை யரச
னந்த காரவுள் ளகத்திடை யயர்தரும் படியே
சந்த காரணக் குறிப்பொன்று தற்றுயில் காலை 11(548)
சந்த காரணன் கண்டிதத் தெழுந்தனன் றயங்கி.

சோதிடரை அழைத்துச் சொல்லல்

கால யர்ந்திட மனநிலை யயர்ந்திடக் கனன்ற
மேல யர்ந்திட வுட்குற வியனிலை யதிரப்
பால யர்ந்திடச் சோதிநூல் பயில்பவர் விளித்து 12(549)
மால யர்ந்தவன் சொல்லுவன் மதியயர் தரவே.

சுடர்ஒளி தோன்றி ஒலி முழக்கியது

தொக்க வெண்டிசை யடங்கலுஞ் சுடர்விரிந் திலங்கி
யொக்க வேநல ளெடுமழ லென்னவோ ரொளிவு
மிக்க பல்லுயிர் செவியினசை பெறவிளங் கொலியித்
தக்க வானகத் திடைமுகட் டழகொடுந் தயங்க. 13(550)

சந்திர மேனியரைச் சூழ்ந்து தொண்டியற்றிய கூட்டம்

கொண்ட சந்திர மேனியர் குளிரணி யுடையார்
மிண்டு வீரிய ரளவின்றி மிகுமனக் களிப்பின்
மண்டி நண்பொடும் புடையினி லுவகையின் மகிழ்ந்து
தொண்டி னின்றுநற் கருத்தொடுஞ் சோபனத் துரைப்பார்.
14(551)

அரசமாளிகையை நோக்கி சுடரொளி இறங்க வந்தது

தடத்து நீரலை யுடுத்தவிம் மாநிலந் தன்னிற்
றுடத்த பேரொளி வெழிலொடுந் துலக்கமே விளக்கி
யிடத்தி லொன்றணி யிறங்கிடற் குற்றதென் றுவப்பா
ரடுத்த வத்தழ லென்னுயர் மாளிகை யதன்மேல். 15(552)

என் இறைவனை ஏற்காவிடின் சுட்டுப் பொசுக்குவேன் என்றது

வான கத்தழ லெனமணி யகமுக டுலவிக்
கோன கத்துடை யென்னரு நாயகன் குறித்த
மான கத்தெழில் வழியொடு மனநிலை பிசகா
தீன கற்றிநின் றிடுதியென் றிசைத்திடா நிற்கும். 16(553)

உரைத்துப் பின்னுமெந் நாயக ளெருவழி யதனி
லுரத்து நின்றிடா தொழிந்தியே லுயர்பொரு ளுடனின்
றரத்தை யும்மெரித் திடுவனென் றதிரொடுந் தழற்றுப்
பரத்திச் சுட்டிடற் கென்னிடம் படர்ந்தது மன்னே. 17(554)

''நடுக்கம் விட்ட பாடில்லை; விரைவில் விளக்குவீர்''

சுடுந் தரத்தொடும் வருந்தழல் கண்டுளந் துணுக்கி
நெடுந் துயிற்கிடை யெழுந்தன னெட்டுயிர்ப் பின்னும்
விடுந் திறத்துட லிதன்பயன் விரைவொடுந் தேர்ந்து
படுந் தரத்துரை மின்களென் றறைந்தனன் பகைவன்.
18(555)

நின்னரசைக் குலைக்க வருபவனே என்பதன்றி வேறில்லை எனல்

வெஞ்சி னத்தவெங் கோட்டுடை வெற்பெனு மதமா
மஞ்சி னத்துயிர் வாய்வரும் வேல்வல மன்னன்
கஞ்ச மொத்தவுட் காண்டகை மதியெனக் கலங்கப்
பஞ்ச சொற்கலை யாளர்கள் பார்த்தெடுத் துரைப்பார்.
19(556)



மன்னர் மன்னவ வின்றிர வளர்கன விவ்வா
றன்ன தேயெனி னின்னர சலைவுறக் குலைப்ப
னென்ன வேதருங் குறியென வியல்பினால் சொற்ற
தின்ன தேயல தில்லெனத் துயரொடு மறைந்தார். 20(557)

மன்னன் வாட்டங் கொண்டனன்

கேட்ட மன்னவ னிசையகங் கலங்கினன் கிளர்வான்
மோட்டு வெவ்விடி படுமர வெனமுடிந் சாம்பிச்
சாட்டு மாண்டகை மறந்தனன் றற்பொருண் மறந்தான்
வாட்ட முற்றுடல் குலைவொடு மறுகுற விருந்தான். 21(558)

கர்ப்பம் ஒன்பது மாதமானது

கலங்கு மன்னவ னிருப்பவப் பாங்கினிற் கவலை
விலங்கு நன்னபி பேரொளி விளங்கிய வயிற்றிற்
றுலங்கு தற்குறி துலங்கிடா தழகொடுந் தோற்று
நலங்கொண் மாதமு நவம்பெற நவங்கடந் ததுவே. 22(559)

பேறுகாலம் குழப்பமின்றிக் கழிய வேண்டிட
சிலை முன் செல்ல முடிவு

கலிவிருத்தம்

எம்பெரு மானுறு மேந்திழை யோர்நாட்
டம்பெரு மான்சிலை தன்னிடம் பேறின்
வம்பெழ லாது வரம்பெற வென்றே
யம்பெரு மானிட மன்பொடு கேட்டாள். 23(560)

கற்ப வருத்த மகற்றிட நண்பி
னற்புடன் புக்கி யரும்பணி செய்கென்
றிற்பதி செப்ப விளங்குயி லென்னுஞ்
சொற்பயி னற்கொடி துன்ப மெறிந்தாள். 24(561)

கோயிலுக்கேக உரியன செய்து சென்றடைந்தாள்

தெள்ளு நறும்புனல் சீரொடு மாடி
வெள்ளை நறுந்துகின் மேன்மையிற் சூடிக்
கள்ளலர் தொத்துக் கருங்குழல் பெய்து
வள்ளை யருங்குழை வண்பணி யிட்டாள். 25(562)

சோதி தருங்கதிர் தொக்குறு மென்னப்
பாதி மதிக்கிடை யிற்பதி யுற்ற
ஆதி லகத்தி னலங்கொள வந்தார்
போதி னணிந்து பொலன்றொடை யிட்டாள். 26(563)

பொற்கதி ரின்பல பூண்வளை யிட்டே
நற்கதி ராழி நலங்குலி விட்டே
சிற்கதிர் நூபுரஞ் சீறடி பெய்தே
விற்கதி ரென்ன விளங்கி யெழுந்தாள். 27(564)

பத்தியி னுள்ளுறும் பண்பு கருத்துஞ்
சித்தியி னுய்தல் சிறந்த நினைப்புஞ்
சத்தியுங் கொண்டிர விற்றனி திங்க
ளொத்திழை சென்றுயர் கோயிலி னுற்றாள். 28(565)

சிலைகள் முகங்குப்புற விழுந்தன

புகுந்திரு வண்டொடி பொற்பதந் தன்னி
லகந்தரு வன்சிலை யாசனம் விட்டே
முகந்தரை கொண்டுடல் முட்டி விழுந்தே
யகந்தரு வள்ள லகங்கொள நின்ற. 29(566)

திகைத்து அவுசா திரும்பி வந்தாள்

உள்ளுறை வள்ள லுறுந்தகை தன்னால்
கள்ளுறை வன்சிலை யங்கழல் வீழத்
தெள்ளிழை யென்னென வுட்டிகை வுற்றே
நள்ளிடம் விட்டன டன்னி நடந்தாள். 30(567)

நமுறாது அவ்வழியே வருதல்

செல்லு நெடுந்தெரு செங்கதிர் தன்னி
லல்லு மகன்றன வங்கை விளங்கும்
புல்லிய சந்திர னும்பொரு பந்தம்
பல்லரி னண்படு பாவி யெழுந்தான். 31(568)

பொன்னொடு செம்மணி பொங்கழ லென்ன
மின்னொடு நன்முடி விண்கதி ரேயும்
கன்னய வண்மை கதிர்த்தெழு காதிற்
றுன்னிரு வெண்மதி யென்ன துலங்கும். 32(569)

நீரினை யுண்ட நிறப்புய லென்னக்
காரிணை மேனி கதிர்த்தெழு மின்னி
னாரம ணிந்தழ குந்திய வெண்டு
சேரணி மன்னுரை யென்ன விலங்க. 33(570)



ஆனனம் வெண்கதி ரன்ன விளங்க
வானவிர் சாமரை மானிழை வீசத்
தூநறைத் தண்கடி சுற்று மணக்கப்
பானலங் கண்ணியர் பண்டர வன்றே. 34(571)

சுட்டி தரித்தவர் செங்கைக ளேங்கத்
தட்டி யெடுத்தடி தத்திச கொள்ளக்
கிட்டிய கைம்மணி யுங்கி ளரத்த
னிட்ட மனத்திடை யின்பமு மல்க. 35(572)

அவுசா அவன் முன் எதிர்ப்படல்

துன்னிய பல்லவர் சூழ்ந்து விளங்கு
மின்னிடை மேகம் வியந்தென னுற்றா
தன்னநெ டுந்தெரு வங்ஙனம் போம்போ
தின்னவி லங்கிழை தன்னை யெதிர்ந்தான். 36(573)

நீ யாரென மன்னன் கேட்க ஆசறின் மனைவி எனல்

மன்னிய கங்குல் வனத்திடை தானே
தன்னிய வீதி தனித்து நடக்கு
மின்னெடி யேயெவ ளென்ன விளங்க
மன்னவ னோடும் வணங்கி யுரைப்பாள். 37(574)

உன்னடி யாரி லுறுஞ்சிறி யாளியான்
மன்னவ நன்குறு மந்திரர் கோமா
னன்னவ ராச றவற்குரி பாரி
யென்ன விளக்கினள் பின்னிறை சொல்வான். 38(575)

அவளைப் பெண்டாள நினைத்தவனின் மனம்
உடன் மாறியது இறையருளால்

அன்னவ டன்னைநம் மங்கையிற் கொள்ளு
மென்ன வுரைத்தன னிவ்வுரை யோடுத்
தன்னவன் றன்னரு ளாலவன் மீண்டு
மென்ன விடுத்தி ரெனத்தடை செய்தான். 39(576)

வேகமாய் வீடு நோக்கி சென்றனன்

அன்னவ னவ்வழி யப்புற முற்றான்
பின்னிய மாலை விடுத்த பிணைப்போ
லின்னவ ருள்ள மிருந்துடி கொண்டு
தன்னனி யில்வரு தன்றெரு வேகான். 40(577)

தன் வீதியை அடுத்தபோது பிரசவ வேதனை தோன்றியது

எழுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

அணியழ கொழுகு மாளிகை வீதி
யரிவையர் திலதநா யகியுந்
தணிவிலா துளத்தி னேகுமப் போதிற்
றனியவன் வண்மையங் கருணைக்
கணிவிலா திறங்கும் பேரொளி யிருக்குங்
கருப்பநல் வயிற்றிடை நோதற்
றுணிவது தொடர்ந்த வசைந்தசைந் தொல்கிற்
றுணையின்றி மெலமெல நடந்தாள். 41(578)

வானவர் தோன்றி தன்னுடன் வர அவுசாவை அழைத்தல்

அரியவன் பருமான் கொண்டவர் தம்மி
லழகுறுஞ் சித்திர வடிவின்
பெரியவர்க் கியன்ற காரியத் திருந்து
பிரியமுற் றிடுமம ரவரி
லுரியவ ரொருவ ரவ்வழி யிறங்கி
யொண்டொடி மதிமுக நோக்கி
யிரிதர மனத்துட் பயப்பட லென்னோ
டின்புடன் வருகவென் றிசைத்தார். 42(579)

ஆதியி னருளால் வருமவ னியானின்
னணிவயி னுறுமதி சயத்துக்
காதலின் குழவி யணிதலத் தடைந்து
களிப்பொடுந் தெளிவொடு மீன்று
பாதலத் தெவருங் காண்கிலா திவணிற்
பரிவொடு மீட்பிப்ப வேண்டி
யாதலுக் கடைந்தே னென்னலும் பொருந்தி
யன்பொடும் பின்றொடர்ந் தனரே. 43(580)

அவரைப் பின் தொடர்ந்து மலைக்குகை அடைதல்

திருநுதல் பசப்பு முகமது வெளிர்ப்புஞ்
செறிதரும் பசுநரம் பெழுப்பு
மருமயிர் பொடிப்பு மணிவயின் புடைப்பு
மடிக்கடி யிளைப்பொடும் யாவுந்
திருநடை பெயர்ப்பு மனநிலை யதிர்ப்புந்
திகழ்தரு மணிவிளக் கென்ன
வொருமயில் மலக்கோ டிருமணம் பொதிந்த
வுயர்வரைப் பொதும்பர்புக் கினரால். 44(581)



இதுரீசுநபி, நூகுநபி பிறந்த மலைப்பொதும்பு அது

காரணத் துணருங் கனிதநூ லுரைத்த
கருத்தனன் னபியுமற் றடர்ந்த
வாரணப் பெருக்கி னுயிர்களைத் தாங்கு
மரக்கலத் துடையவர் தாமும்
பூரணப் புகழிற் பிறந்திடு மேன்மைப்
புண்ணிய நனியுறு மொளிவே
சீரணித் தலரு மறிகொணுப் புதுமை
சிறந்துறும் பெருமலைப் பொதும்பே. 45(582)

அப்பொதும்பின் சிறப்புகளின் வருணனை

செம்மணி யதனாற் பரிவொடு மிழைத்துச்
செய்தணி தூக்கிய விளக்கால்
கம்மணி யென்னுங் கதிரவர் கோடி
காரணத் தடைந்தவோ வென்னும்
பம்மணி வயிர முத்தொடு மிலங்கும்
படங்கிட முடுவொடு மதிய
மம்மணிந் தவையு மகத்துவர் பேறுக்
கமைந்தவோ வெனுமலைப் பொதும்பே. 46(583)

ஒன்றினி லைந்து மைந்தினி லைந்து
முயர்நிறப் பட்டினங் கொய்து
துன்றிய வடைப்பி னிடையிடை சுவனத்
தூய்மலர் மாலைக ளூற்றிப்
பொன்றிகழ் சரங்க ளவமணி யினங்கள்
பொருந்திடத் திருந்திடத் தூக்கி
மன்றலங் களபஞ் சுவரெலாம் பூசி
மாநில மணங்கொளும் பொதும்பே. 47(584)

நோக்கிய கண்கள் மழுக்குறும் பசிய
நுண்முழு மணியொடு முத்த
மாக்குயில் விழியின் செம்மணி பலவும்
வரிபட நாலெடுத் தமுதந்
தாக்கிய விகற்பச் சித்திரப் பாவிற்
றகையொடும் பாவினி னெய்த
பாக்கிய நகரப் பரமதா னிகளும்
பாரெலாம் விளக்கிய பொதும்பே. 48(585)

காண்டகா மருந்தி னமுதமு முள்ளங்
கனிதரும் பானல மதுவும்
பூண்டகாத் துகிலும் பற்பல பண்டம்
பொலிவுறுந் தட்டங்க ளிலங்கு

மாண்டநா யகன்றன் றிருவைபயு ளொளிவே
    யணியணி யிறங்கிமுன் பின்னுய்
வேண்டருங் காட்சி கொண்டவ ணிருந்த
    வியப்பென மதிக்கொணுப் பொதும்பே. 49(586)

பூமண மருது தெளிதரு நதியிற்
    புகழொடு மஞ்சன மாடித்
தேமலர் புனைந்து வெண்டுகின் முதலச்
    சித்திர நறுந்துகி லுடுத்தி
வேம்று நயனத் தஞ்சன மெழுதி
    விளங்கிழை யளவிலா தணிந்து
காமர்மென் கொடியி னரம்பையர் களித்துக்
    கனிவொடு மிறங்கிய பொதும்பே. 50(587)

தயங்கி நின்ற அவுசா அச்சம் தீர்ந்து உள்ளே செல்லல்

வண்ணமும் பலவாய் வடிவமும் பலவாய்
    வாய்மையும் பல்பல புகழுந்
திண்ணமுஞ் சிறந்த வமரர்கள் கணக்கிற்
    றெளிகொணு ரணிபெறச் சூழ்ந்து
விண்ணள வியனீர் மண்ணள வனைத்து
    மேலவன் றனைப்புகழ்ந் திருப்ப
நண்ணிய மடவா ருள்ளகஞ் செல்லா
    நனிதரும் பயத்தொடு நின்ருள். 51(588)

வண்மையின் கருவுற் றிருந்தநன் மடவாய்
    மனத்திடை யஞ்சனீ யஞ்ச
லுண்மையி லுனையாண் டளிக்கும்வல் லவன்சொ
    லும்பர்க ளுறுமக வதற்குத்
திண்மையிற் பேணிச் சங்கைசெய் வதற்குந்
    தீங்குருஅ நின்னைக்காப் பதற்கு
மண்மையி னடைந்தோ முள்ளகம் புகுதி
    யெனவொலி யதிர்தரக் கேட்டாள். 52(589)

முகற்றம் பத்தாம் நாளன்று இபுருகீம் நபி பிறந்த சிறப்பு

சொல்லொடு மகத்துட் புகுந்தன ளனைத்துந்
    துதிதர வழகொடுங் கண்டு
நல்லொடு மிருப்ப நாயக னருளால்
    நனிதரும் வயிற்றிறே யகன்ற
மெல்லொடு மரம்பை மார்பணி விடையி
    ளுயுடன் மிகுந்துளங் களிப்ப
வெல்லொடு மொளிவு மிறங்கிட இபுரு
    கீநபி யிசையொடும் பிறந்தார். 53(590)



நீரலை யுடுத்த வெண்டிசை யிடத்து
    நிலைதரு முயர்திணை யோடும்
பேரலை வெடுத்த வஃறிணை யெவைக்கும்
    பிரியமே கொளவொலி யெழுப்பிச்
சீரணி கலிமா விளங்குற மொழிந்து
    திருக்கறுஞ் சமையிருப் புடனே
யேரணி குறியு மறைத்தெழி லிபுரு
    கீநபி யினிதொடும் பிறந்தார். 54(591)

பூவினி னடக்கும் வருடங்கள் பிறக்கும்
    புகழ்நிறை முகற்றமாந் திங்கள்
மேவிய தெய்தி பத்தினிற் பெருமை
    மிக்குறுந் தகுதியின் வெள்ளிப்
பாவிய வாரத் திரவினிற் சிறந்த
    பருப்பதப் பொதும்பினிற் றிகழ்ந்து
நாவல ரணிந்த புகழிபு ருகீ
    நபியவர் புவியினிற் பிறந்தார். 55(592)

வண்ணபி யழகுந் திசைதிசை யொளிர
    வானவர் சோபன முழங்கிக்
கண்ணக மணியென் றலரவர் களிப்பக்
    கமகமென் றுயர்மணங் கமழ
விண்ணகத் திரவி பலவொருங் குருவின்
    விளக்கமே யெனத்திகழ்ந் தீரந்
தண்ணளி துடக்கொன் றிலதிபு ருகீந்
    தவமிகு நபிபிறந் தனரே. 56(593)

மானமுந் தகையுஞ் செல்வமுந் தயவு
    மார்க்கமு மாக்கமுங் கதிரா
யீனமுங் கசடுங் கொடுமை வஞ்சகமு
    மிரிதர வறுத்தறுத் தொதுக்கித்
தானமுந் தவமுந் தண்ணளி யுடனே
    தடக்கிரி யறையிடஞ் சுவனத்
தானநன் மணியின் விளக்கிபு ருகீ
    மாண்டகை யாண்புடன் பிறந்தார். 57(594)

கொடை நாயகரை நினைவு கூர்தல்

சீர்த்தியின் வகுதைப் பதியிக மாயீந்
    திருவிழிக் கொருமணி யென்னக்
கார்த்தடக் கருணைப் பெருங்கொடை கபீபு
    முகம்மதின் கருத்திடை யலர்ந்த

வார்த்தளி வளர்பூந் திருப்பதக் குரிசி
லகிலமு மற்றுல கெல்லாங்
கீர்த்தியிற் பூத்த மலரென இபுறு
கீநபி பிறந்தன ரன்றே. 58(595)

பிறந்த குழந்தையின் தோற்றம்

அணிதிக ழுறையிற் பெருஞ்சிறை யொடுக்கி
யழகொடுஞ் சிபுறயீ லிறங்கி
மணிதிகழ் குழவிக் கொப்புளுங் கொய்து
மலரென மேன்மையங் காதிற்
றிணிதரு மொலியின் வாங்குமங் குறைத்துத்
திருமுகங் கரங்கொடு நீவிக்
கணிதரா மகிழ்விற் றிருப்பெயர் சாற்றிக்
கனியொடு மெடுத்தன ரன்றே. 59(596)

சுவர்க்கம் கொண்டுபோய் நீராட்டி
அலங்கரித்துக் கொணர்ந்தனர்

எண்டிசை யிடத்தும் விளங்கிய வொளிவை
யினிதொடு மணைத்தவர் கொடுபோய்த்
தண்டரு மலர்க்கா வணிதரும் றிலுவா
னென்னுமத் தடச்சுவ னத்தி
லொண்டொடி யவர்மா ராயமே யுரைப்ப
வுயர்நதி யிடத்துநீ ராட்டிக்
கண்டவர் கண்கள் வழுக்கும்வெண் டூசிற்
கனிதருங் குழவியை யுடுத்தார். 60(597)

அகிலமுங் ககன முறுபொருட் பலவு
மழகொடு நோக்கிய விழியிற்
றிகழ்தருஞ் சுறுமாக் கருமையிற் றீட்டி
மயிரிடஞ் சிக்கெடுத் துச்சி
மிகுமணத் தெண்ணெய் குளிர்தரத் தடவி
மீண்டவர் கொணர்ந்தகங் களிப்புற்
றிகலறு மனத்தின் மென்கொடி யவுசா
மடியிடம் வளர்த்தியே கினரே. 61(598)

ஐந்து விரல்களிலும் ஐவகையமுது சுவைத்த குழவி

திருவனை மடியிற் றிகழ்தருங் குழவிச்
செழுங்கர மலர்விர லைந்து
மருமலி வாயிற் சுவைத்திடத் தேனும்
பெருவிரல் வழிதர வடுத்து



வருவிரற் பானம் நடுவிரற் பாகு
மயல்விரல் வண்ணவெண் ணெய்யு
மொருவிர னீருஞ் சுவனநா டுடைய
வொழுகியூ றியவளத் துடனே. 62(599)

''குழந்தையை இங்கு விட்டு உன் இல்லம் திரும்புக''

மலரெனச் சிவந்த கரவிர லிடங்கள்
வருமவை பருகிவுட் களித்து
நலனெனக் கிடந்த குழவிகண் டகத்தி
னனிதரு மானந்தக் கடலிற்
பலதரங் குளிக்கு மன்னையை நோக்கிப்
பண்பொடுங் கொணர்ந்தவம் மலக்கும்
நிலைகொளு நின்றன் மகவினை வைத்து
நின்மனைக் கெழுகவென் றனரால். 63(600)

பெற்ற அடையாளமின்றி அமரரைத் தொடர்ந்த தாய்

பேரொளி விலங்குங் குழவியை வைத்துப்
பெற்றிலா ருடலென வேதோ
ரீரமும் வருந்துந் துன்பு மிலாதா
யின்புட னெழுந்தனர் நோக்கி
வாரமு மிவணி னடந்தவை யார்க்கும்
வழங்கிட லெனத்திட னுரைத்துச்
சீரொடு மவரு முன்னிவர் பின்னுஞ்
சிறப்பொடும் போந்தன ரன்றே. 64(601)

எவரிடமும் கூறவேண்டாமெனச் சொன்னபின் அமரர் சென்றூர்

அன்பொடுங் கொடுபோய் விடுத்தருங் கருணை
யமரரு மகன்றன ரவரில்
லின்பொடுங் கண்ட புதுமையிற் களிப்பு
மியறர நன்கொடு புகுந்து
வன்பொடுந் திரண்ட விரவினிற் பெற்ற
மகனிடம் பற்றிட நாட்ட
முன்பொடு மிருந்தார் தெரிசனைக் கென்ன
முதிர்கதி ருதையஞ்செய் தனனால். 65(602)

சூலாக இருந்தது வெறும் வாயுவாகக் கலந்து
வெளியேறியது என்றூன்

காலையிற் சிறந்த காந்தனு மடைந்து
காரிகை யழகொடுங் களித்து
வேலையி னமுத முகமதி யிலங்க
விருப்பொடு நோக்கின னேக்கிச்

சூலென விருந்த தருமக வகன்று
தோற்றிய வாயுவும் பறிந்து
மாலறப் போந்த பெருமித மென்றார்
மலரினு மலர்பதத் தணங்கே. 66(603)

**கணவன் மகிழ்ந்தனன், மகனின் மகத்துவம் குறித்து தாயும் மகிழ்ந்தனள்**

புரைதருஞ் சிந்தை யரசனிற் பயந்த
புந்திய னிவ்வுரை கேட்டுக்
கரைதரா மகிழ்ச்சி கொண்டன னுலகிற்
காரணக் குரிசிலென் றுரைக்கு
மரைதரும் பதத்தி னபியிபு றாகீ
மகத்துவ முளத்திடை யுன்னி
வரைவிலா னந்தத் திருந்தனள் வெய்ய
வன்றிற லயில்விழி மடமான். 67(604)

புவனம் விளங்கிய படல முற்றிற்று.
ஆசப் படலம் 11-ச்கு திருவிருத்தம் 604.

—□—

# 12. புறப்பாட்டுப் படலம்

**நமுறூது கனவு கண்டெழல்**

எழுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

வரிசையிற் சிறந்த நபியிபு றாகீம்
வண்மையே யெண்டிசை விளங்க
வரசியல் விளக்கு மொருபெரு நாய
னன்பினுற் பிறந்திடு மிரவே
பிரசமொய்த் தலரும் வாகையந் தோளிற்
பெலத்துடைப் புன்மைய னுமுறூ
துரிசையிற் றுயில்செய் காலையிற் கனவொன்
றுழறரக் கண்டெழுந் தனனே. 1(605)

**குகையில் குழந்தையொன்றிருக்கக் கண்டேன்**

காலமுந் திறனுஞ் செய்கையு நிலனுங்
கருவியுஞ் சீர்மையுஞ் சூழ்ச்சி
யேலவுந் தேர்ந்து நல்லறி வுறுத்து
மிசைதரு மமைச்சர்க ளேக்கி
மாலெழுங் குடுமிக் கிரியொரு பொதும்பின்
மணிவிளக் கலங்கரித் ததனுட்
காலெழுங் கதிரின் குழவியொன் றிருப்பக்
கணம்பல வணியணி சூழ. 2(606)

**வேறெவரும் அக்கனவு கண்டீரோ?**

போற்றுவ ரினிதின் வாழ்த்துவர் பேணிப்
புகழ்குவர் சிலருல கடங்க
வாற்றலி னிழற்றுங் கொடியொடு முரச
மடிபடுந் திரைக்கட லென்னத்
தேற்றிய மேன்மை யழகொடு மிருப்பத்
தெரிந்தனன் கனவிவை போல
நாற்றிசை யிடத்தி லியாண்டினு நீவிர்
நயனுற்ற துண்டுகொ லென்றான். 3(607)

**அவையோர் இல்லையென, இறைவன் மறக்கச் செய்தல்**

மந்திர ரெழுந்து பொன்முடி தாழ்ந்து
மலர்க்கரங் கூப்பிநின் றிவைபோ
லெந்தவெண் டிசையி னெவணினு மியாங்க
ளியலுறக் காண்கில மென்றார்

தந்திரத் துடையோன் முற்படுங் குறியிற்
    றயக்கமுந் தேற்றமுங் கொண்டு
சிந்தனை செய்வான் கருத்திடை மறைத்தற்
    செனித்திட விறைவிடுத் தனனால். 4(608)

### பொதும்பில் குழந்தை வளர்ந்த அழகு

பவமெனும் வித்திற் கொருநில னென்னும்
    பாதக னிவ்வினை யிருப்பத்
தவிரொடு மிருந்தான் வானவ ரணியாய்த்
    தவத்தொடும் புகழொடு மிறங்கி
நலநிதம் பிறக்கத் தெரிசனஞ் செய்யு
    நலனொடு மழகொடும் வாசங்
குவிதருங் குழவிக் கரவிர லமுதங்
    குடித்தரும் பொதும்பிடத் திருந்தார். 5(609)

அணிபெறு மமரர் திருமணி வாய்வின்
    டரும்புக ழோதிய முழக்கான்
மணிபல நிறைத்துச் சிறப்பிய வதனன்
    மலர்பல கடிவரு மதனாற்
றுணிதருந் தேவ ரரம்பையி ரவராற்
    செழுநில மிலங்கிய வதனாற்
கணிதருஞ் சுவன வறையென நபியுங்
    கதிர்மணி விளக்கென விருந்தார். 6(610)

### தனயனைக் காண தாய் வருதல்

அருமையி னகத்திற் களிப்பொடும் பெற்ற
    வழகுறு நம்பியைக் காண்பான்
மருமலர் மிலைந்த கருங்குழன் மடமான்
    வாரமுன் றுயபி னெழுந்து
தெருவணி மாக்கட் கண்ணுறு தேகித்
    திருமலைப் பொதும்பரி னடுப்ப
வெருவுறுஞ் சினத்த வெம்புலி மதமாக்
    காவலின் விருப்புறக் கண்டாள். 7(611)

இருகடை யிரையு மேதொடு மிரைப்பு
    மேப்பழும் வாவது புடைப்பு
மொருபுறம் புலியு மிடியென முழங்கு
    முரத்துவெண் கோடுறு மதமா
வருபுறஞ் சுற்றும் வாயலி னிருப்ப
    மலிதரு விலங்கினத் தயர்ந்து
பெருதுய ரெய்திப் புன்மனங் கலங்கிப்
    பெறுமனை யுள்ளுறப் புகுந்தாள். 8(612)



### தாய் கண்ட புதுமைகள்

காக்குநற் கருணை யிருவிழி சுறுமா
    மாமணி யொளிவெனக் காலப்
பூக்குமென் சிரசி னெண்ணெயுந் தடவிப்
    பூந்துகில் சுந்துசின் வளர்த்தித்
தேக்கிய வரிசை நிறைநிதி கபீபு
    முகம்மதின் றிருமனத் தவிசி
னுக்கிய வணையி நபியிபு ருகீ
    மணிபெறக் கிடப்பக்கண் டனளால். 9(613)

குறைதலு மின்றி நாண்முறை யின்றிக்
    கூடலுங் களங்கமு மின்றி
நிறைதலுங் கொண்டு தன்னிலை கொண்டு
    நீணிலா வொழுகிய மதியின்
மறைதரா வொளிவி னன்முக நோக்கி
    மனத்திடைப் புதுமையுற் றுக
மறைதராக் களிப்புற் றருமடி யியற்றி
    யகத்திடை வியப்பினெண் ணினளால். 10(614)

மானடர் குலவா வரையிடத் திருந்தும்
    வல்விலங் கணித்துறத் திரிந்தும்
கானகந் தனினும் பாகளித் துடலங்
    களிப்புற வாட்டமி லாது
தேனனி மதுர வாய்நலங் குழவி
    சிறப்பொடும் வளர்த்திடுந் தகையா
லானநந் தெய்வ மன்றிஃ துடைய
    வாண்டகை வேறென மதித்தாள். 11(615)

### வீடுதிரும்பி கணவனிடம் உண்மை கூறல்

அளவிலா மகிழ்ச்சி யுளத்தொடு மகவை
    யணியெழி லிடத்தினிற் கிடத்தி
யுளவிலா தெழுந்து தன்னிடத் தடைந்து
    வண்டொடி யுணர்வொடு முயிரிற்
றெளிவருங் காந்தன் முன்னடுத் தரிதிற்
    சென்றது மகவனித் ததுவுங்
களிவருங் காட்சிக் கண்டது மீண்டுங்
    கரந்தது முறைமுறை யுரைத்தாள். 12(616)

ஆசர் அஞ்சி இரகசியம் காக்கச் சொல்லல்

காரணக் குரிசி லென்றுரை கேட்டுக்
காந்தனு மடமயி லேக்கிப்
பூரணப் புதுமை பற்பல வுடைய
புகழினன் போறலா தலினாற்
காரணி குடுமி வரையிடம் போதற்
கண்டிவ ணெய்தலும வழியே
யாரணித் தறியாக் கரவொடுங் கோடி
யென்றன னென்றிய கருத்தே. 13(617)

மூன்று வாரத்திற் கொரு முறை தாய் சென்று வரல்

அகங்களித் தன்ப னுரைத்தசொற் கேட்டு
மடந்தையு மருமையின் முறையே
நிகழ்தருங் கிழமை மூன்றினுக் கொருக்கா
லியாவரு நேர்ந்திடா தேகி
யகிலமுஞ் சுவனம் விளக்கிய நயினு
ரழகுறக் கணடதி சயித்துச்
சிகரமுஞ் சிறந்த கிரிப்பொதும் பகன்று
திருமனை மறைவொடும் புகுவார். 14(618)

ஈராண்டுகள் கழிதல்

முறைமுறை யாயு மன்பொடும் போந்து
முத்தமிட் டுவப்பொடு மிருப்ப
நிறைநறை முதலப் பன்மது பருகி
நியதியிற் றிருவுடல் செழிப்பக்
குறையறு மருமை வானவ ரிறங்கிக்
கூடியே சீர்மைசெய் துவரப்
பொறையறை யதனிற் றிகழ்தர வருடம்
பூபதிக் கிரண்டுமுற் றியதே. 15(619)

சிபுரீல் குழந்தைக்கு கனி உணவூட்டுதல்

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

சொரிகதிர் மணியின் செவ்வி துலங்கிய சுவன நாட்டிற்
பரிமள வாச மாருப் பன்மரக் கனிக ளோடும்
விரிமண வுண்டி பாகும் விலங்கொளித் தட்டி னோடு
மரிதுணர் சிபுரி யீலவ் வாண்டகை யிடத்தி னுற்றார். 16(620)

தெளிவென விலங்கா நின்ற திருநபி யிறசூ லென்னு
மொளிவெழி றுலங்கு நம்பி யுவப்பொடு மேன்மை கொள்வா
னளிவளர் கருணைக் கண்ணு ரறிவொடு மூலக வின்பக்
கனிவரு மொழுக்கத் தோடுங் கனிவுண வருந்தச் செய்தார்.
17(621)



இபுலீசு வந்து இரகசியமறிய முயலல்

புதுநறு வொழுகுந் தீம்பாற் புனிதவான் பருகச் செய்து
மதுநறுப் பொழியு மேல்வான் வழியொடும் போந்தார் [கண்டு
கதுவருக் கொடிய பாவி கன்மசண் டாள னென்னுஞ்
சதியரு இபுலீ சங்ஙன் சார்ந்தன னப்போ தன்றே. 18(622)

வானகத் தமரர் வாழ்த்து முழக்கமும் வன்மை யில்லா
மீனத் துரினும் வென்றி வெண்கொடி நிறுவு மியார்க்கு
மானகத் தலர்ந்த நீத முரசமும் வாய னேக்கித்
தானகத் தடைதற் கேலாத் தவக்கமே கொண்டு நின்றான்.
19(623)

நன்னபி யிபுரு கீமு நவத்தொடும் பிறந்த வென்றி
யன்னவ னறிந்தா னல்ல னதனிடை யுற்ற மேன்மை
யென்னிதென் றறிகு மென்ன வெண்ணமுற் றருகிற் சுற்றித்
தன்னகம் பேத லித்துஞ் சார்தலே வியந்து நின்றான். 20(624)

நெருங்கினால் தீய்ந்து போவாய் எனக் குரல் கேட்டான்

நினைவுட னிற்கு மன்ன நிலையிலன் றன்னைக் கூவி
யினையகா ரணத்தி னேடு மிதனடு விருக்கும் வள்ளல்
வனைதரு மிபுரு கீமம் மாதவ ரிடத்திற் செல்லு
நனவில னகனீ யென்ன நவிற்றுமோ ரோதை கேட்டான்.
21(625)

செலத்தகான் சென்றாற் றீய்வ னெனுமொழி செவியிற் கேட்டு
மலைத்துளம் பயந்து துள்ளி மாழ்கியே மறந்து வன்கன்
னிலத்திடை விழுந்து பின்னர் தன்னினை வதனு னெஞ்சுங்
கலைத்தலி னயர்ந்து போந்தான் கலைத்தலை யயர்தல்
கொள்வான். 22(626)

மன்னன் மறந்தான் இபுலீசு அஞ்சினான்

வஞ்சக நிறைந்த மன்னன் மறத்தலே மனதி னிற்ப
நஞ்சக னிபுலீ சானே னனிநிலை பெயர்ந்து நிற்ப
மஞ்சகக் கருணை வானோர் மருவுண வருளா நிற்ப
வஞ்சக மின்றி வல்லோ னளியொடும் விளங்கா நின்றார்.
23(627)

### நான்கு வயதை அடைந்தனர்

சீரணி நிறைய வென்றித் தீனணி நிறைய வெங்கு
நேரணி நிறைய யார்க்கு நீதிக ணிறைய வானோர்
பாரணி நிறைய வெற்பிற் பல்லணி நிறைய வைகு
மாரணர் தமக்கு நான்கி யாண்டுமே நிறைந்த தன்றே.
24(628)

### நாயகரின் வளர்ச்சி

மனத்தலை யறிவு போன்று மன்னிய தெளிவி னோடுங்
கனத்தநல் வினைகள் போன்றுங் கைப்பிடி கொடையி னோடுந்
தனத்தினிற் செல்வம் போன்றுந் தற்குறு முயற்சி யோடும்
வனத்தினிற் சிறந்த கோமான் மணியுடல் வளர்ந்த வன்றே.
25(629)

### அமரர் வந்து நாயகரை அலங்கரித்தல்

தொக்குறும் பொறியிற் றோற்றும் புலன்படாத் தொகைக
ளெல்லா
மிக்குண மென்னத் தோற்று முணர்வொடு மெழுந்த
கோமான்
மிக்குறு மலங்கா ரத்தின் வெற்பிடைப் பொதும்பர் தன்னிற்
றக்குறு மமரர் தம்மிற் றகையின ரொருவர் வந்தார்.26(630)

சித்திரத் தழகு வாங்கிச் செம்மணி முதல மற்றும்
பத்தியிற் பதித்துச் செய்த பாருல கெவையுந் தோற்று
மித்திர னென்னச் சோதி விளங்கிய துகிற்பொன் னூரு
மத்தலத் துடைய வள்ளற் கன்னவர் புனைந்தா ரன்றே.
27(631)

### தௌஹீது எனும் ஏகத்துவ உண்மையை உணர்த்தினர்

காண்டலே முதல மற்றுங் கைப்பொரு ளைந்து மூன்றாய்
வேண்டலி னொன்று செய்து விரிபொருள் தௌகீ தென்னும்
பூண்டவத் தகுதி யூறும் பூமண மருத தேனு
மாண்டகை பருகச் செய்தா ரழகொளி ரமர ரன்றே.28(632)

### வானவர் செங்கோலளித்து வெளிவரச் சொல்லல்

ஊர்வன முதல யாவு மொருவழி கொண்டு நிற்ப
நேர்வன பிசகி நின்றார் நியதியிற் றண்டம் பூட்டப் [வள்ளற்
பார்வளர் பொருள்கள் வண்சொற் பரிவொடுங் கேட்ப
கேர்வளர் பகம்பொற் செங்கோ லெழிறருங் கரத்தி
னீந்தார். 29(633)



அணிதிகழ் வானோர் பின்ன ரருமையென் னரசை நோக்கித்
திணிதிகழ் பொதும்பர் மேவுந் தகுதியுஞ் சிறப்பக் கண்டீர்
கணிதிக ழுலகாண் டங்கள் கண்டுள முறுதி பூண்பான்
மணிதிகழ் நபியே ஞாங்கர் வெளிப்புறம் வருக வென்றார்.
30(634)

### வெளியிற் புறப்பட்டு வந்த திருநபி

அன்பணி யமரர் வல்லோ னருளிய தருளி னூலே
முன்பணி தகுதி பூண்டு முயற்சியி னின்ற கோமான்
வன்பணி புன்மை யாளர் வழிவரா திருக்கிற் றெண்டத்
தின்பணி செங்கோ லோடு மெழுந்தடி பெயர்த்தா ரன்றே.
31(635)

பல்லுயிர் மகிழ நன்கிற் பண்புள மகிழ வானோர்
நல்லுயிர் மகிழ மார்க்க நானில மகிழப் பூமான்
புல்லுயிர் மகிழ வெற்றிப் புனிதமே மகிழ வுற்றக்
கல்லுயிர் மகிழ வள்ளல் கடிமலர் நடத்தல் செய்தார்.
32(636)

### விண்மீன் கண்டு அதுவே இறையென எண்ணல்

சிறந்தபொன் மணிகண் மிக்குச் சித்திரம் படர்ந்து நின்ற
பிறந்தவப் பொதும்பர் வாயற்பிறங்குகோன் வெளியி னுற்றுத்
திறந்தரும் பூமி யெங்குந் தெரிந்துவா னகநோக் குற்றார்
நிறைந்திடு மாலைப் போதி னிவருடுக் கணங்கள் கண்டார்.
33(637)

பஞ்சரம் பறவை புக்கப் பல்லுயி ரிரைப்பு மாற்றித்
தஞ்சடத் தொதுங்க வந்த மாலையைத் தாவித் தாவிப்
பஞ்சருங் கதிரிற் சீய்த்துப் பண்பினோ ருடுவான் மின்ன
வஞ்சலித் திறைவ ரீதே யாண்டகை யென்ன விண்டார்.
34(638)

வெளித்திறத் திருந்த யாதும் விழித்தவ ரல்லார் மற்றுங்
களித்திடுஞ் சிறுவ ரென்னுங் காரணத் தானுங் கண்டு
ளுளத்திடை தேற்றும் பான்மை யுடையவன் பால வானுந்
தெளித்திடு முடுவை நோக்கிச் சீர்மையாண் டகையென்
றாரால். 35(639)

### பின் உடுக்கள் மங்க வந்த நிலவே இறையென்றெண்ணல்

தோற்றிய மீனும் வான மறைதலுந் தூய வள்ள
லேற்றிடு நாய னென்னி லெழிலொடும் விளங்கிக் காணு
தாற்றலற் றொழித்த லுண்டோ வன்றென விகந்து நெஞ்சந்
தேற்றினர் பின்னர் கண்டார் செழுங்கதி ரமுத னன்றே.
36(640)

திசையுயிர் பூப்ப முல்லை செழுங்குமு தங்கள் பூப்ப
விசைதரு மன்றில் பூப்பப் புவியெலாம் விளக்கஞ் செய்து
மிசைதரு முடுக்கள் சூழ மீவருந் திங்க டன்னை
நசைவரு மென்னை யாளு நாயக னிஃதே யென்றார். 37(641)

அடிக்கடி பெயர்ந்து வண்ணத் தமுதமுஞ் சுருங்க மேனி
யொடுக்கியும் பறவைக் கூட்ட முரப்பவும் பயந்து நன்பாற்
றடித்திடு முயலிற் செல்லும் சந்திர காந்தம் நீரும்
வடித்திவர் சொல்லிற் கேங்கி மறைந்தனன் குபேர
[னன்றே. 38(642)

வாட்டமுங் கசடுந் தாங்கா வதிதலும் வதிவிற் சற்றே
கோட்டமும் புயலிற் சிக்கிக் கொள்ளலு மறைவுங் கொண்
நாட்டமு நினைவு மான நாயக னுறுவ னென்னென் [டோர்
றீட்டிய தேற்றங் கொண்டே யிகழ்ந்தனர் வரிசை வள்ளல்.
39(643)

தகைபெறுந் தக்க நாயன் றகையொடு மென்னை மேன்மை
வகைபெறு நேர்மை யுற்ற வழியிதென் றுணர்த்தி லானேல்
நகைதரும் பகையர் பற்றுங் கேட்டிடை நடப்ப தாகு
மிகையொடுங் காக்கும் வல்லோ னென்னவே வியந்தா
[ரன்றே. 40(644)

கதிரவனைக் கண்டு அதுவே இறைவனெனல்

நன்கொடு புகழ்ந்து வண்மை நாட்டிய நபியு நிற்கப்
புன்கடு விருளும் போதப் பூந்தட நளினம் விள்ளப்
பொன்கதிர் கொழித்துக் கண்கள் பொலிவொளி மழுக்கி
[யெங்குந்
தன்கரந் தடவி வெய்யோன் சார்ந்தனன் ககனத் தன்றே.
41(645)

முன்வரும் வெள்ளி தன்னின் முதிரமு திந்தின் மிக்குப்
பொன்வரு கதிர்கு லாவிப் பொழுதவ னுதித்த காலை
மன்வரு நிலைக ளெல்லாம் வழிபடு மெந்தங் கோமா
னென்வரும் பெரிதே நாய னிஃதென வியந்து சொன்னார்.
42(646)

கதிரவன் மறைவு கண்டு உண்மை தெளிதல்

பரந்தவா னகத்து லாவிப் பாரெலாம் விளக்கித் தன்னின்
விரிந்தசெங் கதிர்க டொக்கி மென்மலர் குவித்துப் பின்னர்
சொரிந்தவர் தபங்களின்றி மேற்றிசை தொலைய வெய்யோன்
வரந்தனி கொண்ட வள்ளன் மறுத்தன ரதனை யன்றே.
43(647)



இபுறாகீம் நபி ஏக இறை பெருமை உரைத்தல்

பற்பல குறிப்பு நாட்டிப் பத்தியி னின்று வீணிற்
சிற்பயில் காபி ரானோர் செம்முக நோக்கி நீவி
ரற்புடன் வணங்கு கின்ற வரிமதி யனன்மற் றெல்லாம்
பிற்புற நீக்குந் தன்மைப் பெற்றவ னென்றார் வள்ளல்.
44(648)

செங்கதி ரவனுந் தண்மை திங்களு மிவைநா டோறுந்
தங்கணி யிடமுந் தாராத் தகைகொளுங் ககனு மற்று
மெங்குள வனைத்து மாக்கி யின்னருள் புரியா நிற்கு
மங்கவ னென்னை யாண்டு மளிக்கும்வல் லபத்தா னன்றே.
45(649)

இத்தகை யுடையோன் பாலி னியானுமென் னிதயத் தோடும்
பத்தியின் முகநோக் குற்றேன் பன்மன மடரா தென்றே
தத்துவ மெவர்க்கு மின்று தகுதியு மெவர்க்கு மின்று
கத்தனுக் கன்றி யென்ன நறுங்கலி மாவுஞ் சொற்றார்.
46(650)

தோற்றிய பொருள்க ளுணக்கித் தொழிற்குண மிடமற்
[றெல்லா
மாற்றலின் விரிவிற் றேர்ந்து கீழ்மையி னவைகண் மாற்றி
வேற்றொரு வங்கந் தாக்கி ளுளிர்தரும் வெண்பொன்
[னென்னத்
தேற்றிய வுள்ளங் கொண்டார் திருநபி யிபுறு கீமே. 47(651)

வானவர் சிபுறீல் வந்து தாய் வீடேகச் சொல்லல்

உறுதியே நிலைத்து நிற்குங் காலையி லுடையோ னன்பாற்
செறிதருஞ் சிறகு லாவுஞ் சிபுரியீ லினிதிற் றேற்றிப்
பெறுதலின் பிரியத் தோடும் பிறங்கெழி லமுதஞ் சிந்து
மறுவறு மதிய மென்ன மலர்முகத் தெதிர்ந்து சொல்வார்.
48(652)

என்றிறத் தோம்பல் பூண்டுந் தகையொடு மிருக்கா நின்றீர்
நன்றியி னும்மோ டெங்கு நாடொறு மிருக்கா நின்றேன்
வன்றிறத் துடன்பா டன்றே வாதலான் மனநீ ரஞ்ச
லின்றுவந் தின்று ரில்ல மினிதொடும் போதி ரென்றார்.
49(653)

சொற்றவை யுணர்ந்து சிந்தை துலங்குமா னந்த மூழ்கி
வெற்றியும் பேறுங் கொண்ட விமலநா யகனுஞ் செங்கை
பற்றது பொருத்துங் கோமா னவிரொளி யதனு வின்ன
பெற்றியில் சிபுரி யீலும் பெருமிதத் தேகா நின்றார். 50(654)

### அன்னை இல்லம் நோக்கிச் செல்லல்

கலிவிருத்தம்

இருபே ரதரே யினிதே மகிழ்வி
னொருபே ரெனவே யுறுவா முனமே
பெருபேர் நயினார் பிரிமா மணமே
மருபே ரவுசா மனையெய் தினவே. 51(655)

### தனையன் வாசனை முன் சென்றடைய தாயின் தவிப்பு

முழுவா சனைதன் முனநா சியினே
யுழுவா றதனு ளுளமார் தலினே
யெழுவா ணிலையா ளிருப்பா ளுலவாள்
வழுவாள் குனிவாள் மறுகா ளுயிர்ப்பாள். 52(656)

### மனவமைதி காண மனையாளைக் கோயிலுக்கு அழைத்தேகல்

நிலையுற் றிலளுற் றிடுநீர் மையினைத்
தலையுற் றிடுதன் பதிகண் டெடியே
மலைவுற் றனையென் மறுகுற் றனையென்
கலையுற் றனையே தகமென் கவறி. 53(657)

வஞ்சி விருத்தம்

வருபேதக மென்னில் வளங்கெழுநம்
பெருபேறெனு மம்பெரு மானிடமே
மருபோது வணங்கு வணங்கிடிவி்
வுருபோது மெனத்திற னேதினனே. 54(658)

தேவாலைய முற்றிடு தெய்வமதே
நாவாலுரை செய்திடி னென்றெனலு
மாவாலவ ளும்மது மாலையனும்
போவாநிலை கொண்டனர் போதிருளே. 55(659)

### சிலைகள் குப்புற விழக் கண்டு அஞ்சி வீடு திரும்பல்

உலவுங்கரு நள்ளிரு ளுள்ளமதி
னிலவும்படி நேரிழை யோடவனு
மலைவின்றி யடைந்திட வண்சிலைக
ணிலையின்றி விழுந்த நிலந்தனினே. 56(660)

சீராலைய முற்றிடு தெய்வமெலா
நேராக வணங்கி நிலத்துருள
வீராளரு முள்ள மியைந்துபயத்
தோராது திரும்பினர் தம்முழையே. 57(661)



மனமுற்றிடு வாட்டமு மாதவனுந்
துணிவுற்றிடு காரண முட்டுயரி
னினைவுற்றன னன்னவ னின்னவனு
மனையுற்றிடு வல்லிருள் காலையினே. 58(662)

### வானவர் வழிகாட்ட வீடு வந்த வள்ளல்

இருளானது சிய்த்தமு தத்திரவி
லொருமாமதி யொள்ளொளி வீசிடவே
மருவண்சுட ரோடெழின் மாநபியும்
வரும்வண்மையின் வந்தனர் வானவரும். 59(663)

அணிவீதி கடந்தபி னம்பரர்கோ
னுணிநூல்வல நுந்தையு மாயுமுறை
மணிவீடிஃ தென்ன வழங்கினர்பின்
றணிமேனிலை யேறினர் தாபதரே. 60(664)

### வந்தவரை ஆசர் வரவேற்றல்

படிமீதிடை வாயல் பதித்தநிலை
யடிமீதி னருங்கத வங்கையுற
வடிமீதின் விளுவிடு மப்பொழுதே
நெடுமீயினை வான்பதி நேர்ந்தனரே. 61(665)

வினவும்பொழு தங்ஙனம் வெந்துயரி
னனவுண்டவ னண்ணின னங்கதவந்
தனையுந்திய தாளது வாங்கிடலு
மனைவந்திடு மாதவர் சொல்லுவரால். 62(666)

இம்மாளிகை மேமிவ னுள்ளெனவே
யம்மாதவ நாயக ரானனநோக்
கம்மாவல வாசறும் வாருமெனச்
செம்மாரொடு புக்கினர் சீர்மையினே. 63(667)

### தாய் கண்டு தனயனைத் தாவியணைத்தல்

இருடுன்னிய வீர னிலங்கியநல்
லருடுன்னிய வாண்டகை தம்வடிவிற்
றெருடுன்னிய சோதி தெரிந்துமிகப்
பொருடுன்னிய ஃதார்புது மைப்பெறலும். 64(668)

தண்டாத நலத்துடை தாபதரைக்
கண்டாளுறு காரிகை கண்பெறுதல்
கொண்டாளினி திற்குளிர் மாமதியென்
றண்டாமு னணைத்து முகந்தனளே. 65(669)

நமுறாது மீதாணை இவன் நம் மகன் என தாயுரைத்தல்

எண்சீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

அரிதுணர் ஞானநல் வரத்தி னின்றவர்
அழகொடு மோரிட மணித்திருந் தனர்பின்
பெரிதொடு மாவலி னணைத்த வன்பினள்
பெறுதவ காதலன் முகத்தெதிர்ந் துடனே
வருதுரை யானினி தளித்த சுந்தர
மலிதரு மேனியி னடுத்தமைந் தனனம்
உரிநுமு றாதுயர் சிறப்பி னன்புள
உயர்பொரு ளாணையி னெனப்பகர்ந் தனளே. 66(670)

நமுறாதுமேல் ஆணையிடல் வழிகேடெனு நாயகர் கூறல்

இனையன வோதிய வலத்த மென்கொடி
எழிலனை மாமுக மெதிர்த்துநஞ் சணியான்
வனைபெயர் சீரி னதுசத் தியஞ்செய
வழிபிழை கேடெவை பிடித்ததுன் றனையே
மனநிலை மாறிய பவத்தி னின்றிடு
மதியிலெ டீஇயுயர் சிறப்பினம் பலவுந்
தனிநிலை யாகிய வொருத்த னன்பொடு
தகைதரு நாயக னவற்குவந் துளவே. 67(671)

ஏகநாயகன் தம்மைப் பிறப்புவித்த மாண்புரைத்தல்

இயலுட னேயணி வயிற்றி டந்தனி
லெனையரி தேகொள விருத்திமைந் தவர்கள்
அயலறி யாதுனை யொதுக்கி யென்றனை
யழகொடு பூமிசை புறத்தில்வந் திடவு
மயலறி யாதுறு பசிக்கு வந்திடும்
மதுபல பாகும தளித்துநண் பொடுமே
நயனொடு காவலின் வளர்த்தி டுந்தனி
நவநித நாயக னவற்குறும் பொருளே. 68(672)



மனக்கொதிப்புற்று ஆசறு உரைத்தது

பலபல மாதவ முயற்சி யின்குரு
பரிவொடு மீதுரை வளர்த்திடும் பொழுதே
வலனுறு மாசறு முளத்தில் வெந்தழல்
வழிவிழி யேகொடு மறத்தினண் பறவே
நலனிற தேவியை சினத்து வஞ்சக
னளிதரு கோபமு முருத்தியன் பிலதாய்க்
கலனடு வாரியி லடித்து சிந்தினர்
கவலையி னுகுல மிகுத்தியம் புவனுல். 69(673)

என்னுகுமோ என்றெண்ணி ஆசறு புலம்பல்

இவனுறு தேசிக மிகுத்த சந்ததி
யிதனிடை யாசையி னகத்துவந் துளநீ
நவமறு பேதக பயித்தி யங்கொடு
நலிவொடு சீரழி வெடுத்துநின் றனையே
அவனிலை யாவென துயர்த்து மந்திரி
யணிபெறு மேனிலை புறத்தகன் றிடுமோ
எவனென வாகுல மடர்த்த வெம்புலி
யெதிர்கொளு நீர்மையி னிடத்திருந் தனனே. 70(674)

எனவிவை யாசறு மிசைத்து ளன்பொடு
மிளமையி னுகிய வரத்தலர்ந் திடும்வான்
நனிமது வீசிய முயற் களங்கறு
நவமுறு சோமனின் முகத்தையுந் தளவப்
பனிநனி மூரலு மணத்த செஞ்சுடர்
படரிதழ் தேமொழி சடத்தினங் கதிருங்
கனமென நீள்கர மெடுத்த சுந்தர
மவையவை காண்தர பிகத்தெரிந் தனனே. 71(675)

திதியுறு பேரழ கெடுத்தி டும்படி
செயலுறு பாலவை வகுத்த லெங்கெனவே
புதுமையி னீர்வரு திடத்த சுந்தர
மதுநிறை போதலெ னகத்திடந் தனிலே
மதுகொள மேவிய பொருட்டு ளன்பது
மலிதகு மாதலி னெதிர்த்து நின்றிடவும்
அதிமொழி பேசவு மெனக்கி ருந்தில
வகமென மீளவு மறுத்தியம் புவனுல். 72(676)

அருமையி னியானக மிகுத்த வன்பதை
யணிபெறு மேனெனி லிதற்குறுந் திறனென்
பெருமையி னுகிய வலத்த குன்றென
பிரிவில தோளுடை கருத்தன்முன் யினிதாய்த்

தருநின தாகுல மெடுத்த வன்சொலும்
வகைவகை தாவுற வகுத்துவந் தனையே
புரிகுவ னேயென வுரைத்து மங்கவன்
புலைசெயும் வேதனை நினைத்திரங் கினனே. 73(677)

ஏகனுள என் இறைவன் காப்பான் என நாயகர் உரைத்தல்

அளவிலி சோதியி னிழைத்த செங்கதி
ரதனினு மாவழ மொழுக்குமங் கழுமே
களமரி னேவிடில் வதைக்கு முன்பினில்
கதிபொரு ளானதை யெடுத்தெறிந் தவனுய்
வளவிய பேறில னெனச்சொ லும்படி
வழிகொள லோவென நினைத்திரங் கிடவே
களவறு நாயக ரளித்த தந்தையை
கனிதர வேவிழி தெரித்தியம் புவரே. 74(678)

அலைகடல் சூழ்புவி யனைத்து மன்புக
ழுரியவ னுதிய னலத்தினென் றனையே
நிலைபெற தாழ்தர மிகப் புரந்திடு
நிசமுள னுதலில் வலத்துளங் கொடுநீ
ரலைவரு மாகுல மடர்த்தெ றிந்திடு
மணியெழி லோடெனை யளித்தவெந் தையரென்
றுலைவறு நாயக ருரைத்தி டும்பொழு
துவனொரு தீமொழி யிசைக்கநின் றனனே. 75(679)

ஆசர் நமுறுதினும் உயர்ந்த இறைவனுண்டோ எனல்

அணியணி கோயிலி னிரைத்தி லங்கிய
வதிகமு னூறுள வரத்தபொன் சிலையால்
கணிதரு காரிய மனைத்து ணர்ந்திடு
கருவின னீரலை யுடுத்தவம் புவியோர்
பணிதர வாழியர் வழுத்த வொன்றுயர்
பருதியி னுழியை நடத்திநின் றெழிலை
மணிதரு மேல்குடை நிழற்றி வெம்படை
மலிதர வீரரி னவத்திருந் திடுவான். 76(680)

தடமுறு நீணிதி படைத்து வன்பறு
தகைநுமு றூதென விசைத்திடும் பெயரிற்
றிடனுறு நாயக திறத்த னன்றியு
நிலதணி சீர்பெற வொருத்தனுண் டுகொலோ
வடிவழ கேபொழி நிரைத்த வெண்டுளிர்
மணியென மூரலி னிடத்துசிந் தியதேன்
கடிதரு பாலக வெனப்ப கர்ந்திட
வளமுறு காதலர் மறுத்தியம் புவரால். 77(681)



ஏகநாயன் பெருமையை மகன் எடுத்தோதுதல்

திசைதிசை மேவிய வுயிர்க்கு மன்புள
செயல்பல வேயுணர் கருத்தனென் றுமுளான்
மிசைமிசை வானக மகத்தி ருந்தவர்
வியனகர் பூமிகள் படைத்துநின் றவனு
யிசையிசை யேதில வினைக்கு மொன்றில
வியலுவ மானம துரைப்பதின் றினனுய்
நசைநசை யேவள ரொருத்த னன்குணர்
நனிபொரு ளேயுள வெனக்குமென் றனரே. 78(682)

நாள்தோறும் தந்தைக்கு போதனை செய்தல்

உணர்தரு நேர்வழி யெடுத்தெ றிந்திடு
முளனவ னுய்பல வடர்த்தவன் சொலினுல்
வணர்தர வோதலு மவற்கு நன்குற
மனநிலை சேதன மிசைத்தசெஞ் சொலினுர்
பணர்தர மேனிலை யுவப்பொ டுந்தகை
பரிவொடு மேன்மதி படுத்தலுந் தொழிலா
யிணர்தரு மாதவ னெனச்சி றந்திட
வியலுறு நாயக ரகத்திருந் தனரே. 79(683)

புறப்பாட்டுப்படல முற்றிற்று

ஆக படலம் 12-க்கு திருவிருத்தம் 683

—□—

# 13. °நுமுறூதைக் கண்ணுற்ற படலம்

### படலச் செய்தி

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

இயலணி வாய்மை யொன்றி னெழுல காளுங் கீர்த்தி
முயலறு மிபுரு கீமு முன்னிய கருத்தி னோடே
வியனணி தாய்வீ டுற்று விறற்படை நுமுறா தென்னும்
வயனணி நோக்கி வார்த்தை வழங்கிய முறைமை
சொல்வாம். 1(684)

### ஏகத்துவச் செய்தியை எங்கும் உரைத்தனர்

தன்னிடத் திருந்த போதுந் தகாவிடத் திருந்த போது
மன்னிடத் திருந்த போது மறுகிடத் துற்ற போதும்
பன்னிடத் திருந்த போதும் பயிலிடத் திருந்த போது
மென்னிடத் திருந்த வள்ள லிறைவனே விளக்கா நின்றார்.
2(685)

### கேட்டு சினந்தோர் ஆசறிடம் வருதல்

ஆண்டகை கொண்ட வல்லோ னாதியே யனாதி யேயென்
றீண்டகைத் திறத்தின் கோமா னிசைத்தலவ் வஞ்ச நெஞ்சிற்
பூண்டகை நுமுறா தாக்கம் பொருந்தினர் தம்மிற் புன்மை
காண்டகை சிலவர் கேட்டுக் கடிதினா சறின்முன் னானார்.
3(686)

### உம்மிடம் வளருமிச் சிறுவன் யாரெனல்

மன்னவ னமைச்சர் கோவே மதிவலீ ரழகு பூத்து
மின்னலர் வடிவத் தோடும் வெண்மதி முகத்தி னோடுந்
தன்னிக ரில்லா வண்ணத் தகுதியிச் சிறுவ னியாவன்
பன்னுதி யென்றார் பார்த்துப் பண்பொடு பகர லுற்றான்
4(687)

### முதுமையில் எனக்குப் பிறந்தவன் எனல்

உள்ளுறை யறிவுந் தத்தி யுறுபொறி குறைவுங் கொண்டு
தள்ளுறை பெலனுங் குன்றித் தளர்தரும் விருத்த னாகி
யெள்ளுறுங் காலந் தேடு மிரும்பலன் பால வாய
பிள்ளையீ தென்று சொன்னான் பிரிவிலாக் கருத்தி னன்றே.
5(688)

0 கமுறூதை, நமுறூதென்றுஞ் சொல்லுமாம்



### அவன் அரச நிந்தனை குறித்து வினவுமெனல்

நானிலத் ததிபர் போற்று நம்மர சவனை யெள்ளா
தினமுற் றிருந்த வார்த்தை யிசைப்பனின் னவனென் றெங்க
ளூனிடங் கொதிக்கும் வண்ண முணர்ந்தன மதனை யென்னென்
றுனநின் வலத்திற் கேட்டி யவனிடத் தென்றா ரன்னோர்.
6(689)

### என் மொழி கேளான், நீவிரே திருத்தும் எனல்

சொற்றவர் வதன நோக்கித் துதித்தியான் பயிற்றும் வண்ண
முற்றவ னல்ல னன்னோற் குறுமொழி செவிகொள் ளான
மற்றுநம் மார்க்கந் தன்னை மனங்கொள்வா னாக நீவிர்
பற்றுத லுரைத்தென் வாறும் படுத்துதி ரென்றான் றந்தை.
7(690)

### வந்தவர்கள் வள்ளலுக்கு புத்தி கூறல்

சீரது பரவு மென்கோரன் றிருமுக நோக்கி யன்பின்
காரது பரவுந் தன்கண் கருதருங் குழந்தாய் வாழும்
பேரது பரவி நின்ற பெற்றியே பரவத் தேடு
நேரது பரவ வன்றோ நிலைமகப் பேறு மன்னே. 8(691)

கருமையிற் பயின்றோர் வைத்த காதலுக் கிசைந்து நிற்ற
லருமையிற் கருத்த ராகி யவர்செயல் செயற்கை யாக்கல்
வருமனை நிலத்தல் கீர்த்தி வரைவின்றி வளர்த்த லுண்மை
யிருமையிற் கொள்ளல் பெற்ற மேலற னிஃது மன்னே.
9(692)

மக்களே மக்க ளாகு மதியிலான் மக்க ளாமோ
தக்கவன் றோன்ற லன்றோ தவறிலா வழிபா டுற்று
மிக்கநந் தெய்வந் தன்னை வியந்திடி லியாவு மெய்து
மிக்கணத் தென்றா ரன்னோ ரினையன நபியுஞ் சொல்வார்.
10(693)

### நபிநாதர் உரைத்த நன்மொழி

நீதியே யுரையா நின்றீர் நிலைதரப் பெற்றோர்க் கொத்துப்
போதலே நன்றென் றன்னோர் பொருந்தெய்வந் தொழுவ
லென்றீ
ராதிபி னொருவன் மற்று மவனன்றி யொருவ ரின்றென்
றோதலே மறந்தீர் சிந்தை யுழலொடு மொழியா நின்றீர்.
11(694)

பருவமும் பயிற்சி தானும் பான்மையும் பண்பு மெல்லாந்
தருவன மதியே யன்றித் தருவன வேறு முண்டோ
மருவுதல் பருவத் தன்றி மாழ்கிய மூப்பி னுண்டோ
வெருவுற மயக்கங்கொண்ட விருத்தருந் திறத்தா ரன்றே.
12(695)

வாலநற் பருவ மீதும் வழிகெட விருந்தான் மூப்பிற்
காலம்வந் துற்று னேர்மை காட்டுத லுணர்வான் யாவன்
சீலமுற் றறியான் பாலிற் றெருளுறு மகவுண் டாகிற்
கோலதன் வாய்மை கேட்கி னல்லறன் கூடு மன்றே. 13(696)

முதலது சினையி னுனுஞ் சினையது முதலி னுனு
மதுபெயர் பெறு தலுண்டே யாதலி னென்சொற் கேளாய்
முதுவய தாகுந் தந்தை முன்னிலை கொண்ட நீவி
ரிதுவழி நன்கிற் கேண்மி னிருள்வழி யகன்று போகும்.
14(697)

உரவுநீ ருலக மெல்லா மொருகுடை நிழற்று மன்னர்
பரவுமேற் றகமை தன்னுற் பன்மதங் கொண்ட நீவி
ரரசனு மடிமை யான வாண்டகை யொருவ னென்று
தரனுட னுறுதி பூண்மி னெனநபி சாற்றி னூரால். 15(698)

### வந்தோர் வேகத்துடன் திரும்புதல்

நன்மொழி விரித்துக் கூறு நாயக ருடனே தற்கப்
புன்மொழி கொண்ட வன்பர் புந்தியில் வேகம் பற்றித்
தன்மதி யழியும் வெஞ்சந் தாங்கியும் வயிரத் தோடும்
பன்மனை யவர்கள் போந்தார் படுநர கிடத்திற் போலார்.
16(699)

### தந்தை தனயனிடம் பேசத் தொடங்கல்

பாரகத் திசையிற் றுன்னும் படரிருட் பிழம்போர் வீட்டிற்
சேரகத் திருப்ப நாப்பண் செழுங்கதி ரமுதஞ் சிந்துஞ்
சீரகத் திருந்த திங்கள் சிவணவெம் பெருமான் றன்னைத்
தாரகென் றுரைக்குந் தந்தை நோக்கியே சாற்ற லுற்றான்.
17(700)

### நமுறூதுக் கிணங்கினல் நன்மைகள் உண்டெனல்

செய்தருந் தவத்தி னுனுஞ் செறிதருங் கார ணத்தான்
மெய்தருந் தண்டத் தானும் வேண்டிய நேர்ச்சை யானுங்
கைதரும் பயனிற் றேன்றுங் கண்ணிணை மணியே யென்றன்
வைதரா வாய்மை கேட்டி வழிபல வியையு மன்னே.
18(701)



நாண்டகும் வல்லி தந்தை நவிறலே வாய்மை யென்ன
மாண்டரும் பயனிற் கோடன் மக்கடங் வியப்பல் லாது
காண்டகு மவர்க ளோடுங் கதிரயி லவர்க ளோடும்
பூண்டகா வார்த்தைத் தேருப் புந்தியி னுரையன் மன்னே.
19(702)

எனக்குறு மேன்மைப் பான்மைக் கியல்புற வந்த மைந்த
சினக்குறு மொழிசெப் பாது செய்தொழிற் பாங்கின் மேவி
யினக்கணி யாய மன்ன னிருமனப் பொருத்தங் கொண்டு
மனக்கணிற் றெய்வப் பன்மை வணக்கமே கோடி சின்னே.
20(703)

என்னுரைக் கியன்று வந்து கருத்தொடும் பொருத்தம் பற்றி
நின்னுரை மறுத்தி யாயி னிலமுழு திறைஞ்சும் வண்ணப்
பொன்னிழைத் தமைத்த தெய்வப் பூசுர னுக்கி மேலுந்
தன்னிடத் துறவு கோலுந் தருகுவன் றவங்கள் மல்க.
21(704)

கால்கரந் தளர்ந்து மெய்யுங் கருத்துமே குலைவு தோன்ற
மேல்கன மூப்பு முற்ற விருத்தனு தலினு லென்றன்
மால்கரு மன்னன் பாலி லியான்பெறும் வரிசை யெல்லாம்
வால்கொண்டு நிறைய நின்பால் வைத்துமவ் வினையின்
மன்னே. 22(705)

நகுகதிர் மணியும் பொன்னு நானிலத் தெவரும் போற்றும்
பகுதியு முயர்ந்த மேன்மைப் பாட்டினும் வேறு முண்டோ
மிகுதிற னெய்துஞ் சொற்கள் யாவரும் வேண்டி நிற்பார்
தகுதியைச் சிதைத்த னன்றே தவத்தினிற் சிறந்த மைந்த.
23(706)

மன்னவ னுவப்ப வைகு மந்திர ருவப்பத் தெய்வந்
தன்னவ னுவப்ப வூரார் தத்தமே யுவப்ப விச்சொற்
சொன்னவ னுவப்ப வாயுந் துதியுளத் துவப்ப நின்று
லென்னமக் கியன்ற மேன்மை யிஃதன்றி வேறும் நல்லாய்.
24(707)

### வணக்கத்திற்குரியவன் ஏகஇறைவனே என நபி விளக்கல்

இவ்வகை வழியி னேடு மீன்றவ னிசைப்ப நோக்கிச்
செவ்வகை யுவந்து பெற்ற சீர்மைகொ ளெந்தாய் கேட்டிப்
பொய்வகை யின்றி யாவும் புகழ்ந்தடி வணங்கு மிக்க
மெய்வகை யொருவ னன்றி வேறில வெவனு மன்னே.
25(708)

நனிபெற விருப்பச் செய்து நல்லுண வளித்துத் துன்பத்
துனிபெற விளங்கத் தக்கத் துணைப்பொரு ளாகி யாரு
மனதுற வணங்காக் காலைத் தண்டனை வல்ல பத்தாற்
கனதுறப் பூட்டுங் கோன்மைக் கருத்தனே பயந்த வெந்தாய். 26(709)

நுமரொடு நின்ற தெய்வ நொறுங்குபொற் கற்க டத்தந்
தமரொடும் வணங்கி ஞலந் தாழ்தலின் றுனு மேதோர்
சமரொடு துன்ப மன்றித் தகையொடு மின்ப நல்குங்
கமரிடை நாளும் வாழ்வீர் காரண முளது கொல்லோ. 27(710)

புன்னிலைப் பயனு மின்று படுந்துயர் நீக்க லின்று
லந்நிலைக் கருங்கற் றெய்வ மென்றலே யறிவின் மேன்மைப்
புன்னிலை விருத்தி யான்சொற் புகழ்நிலை கோடி யென்றுர்
என்னிலை நிறுத்தும் வாய்மை யிசைதரு மிபுரு கீமே. 28(711)

கண்ணுடியில் தன்னுரு நோக்கி அன்னையொடு பேசல்

நன்னயத் துரைக்கு மாற்ற நனிகொளான் புன்மை நெஞ்சா
னின்னன விகலி னேடு மில்லகந் தன்னின் மேவு
மன்னமேம் புகழி னேடு மாண்டகை யிருப்பச் சின்னுள்
பின்னது கழிந்த வஞ்சன் பின்னிய செல்வம் போன்றும். 29(712)

இல்லகத் திருக்கு நாளி லெழினபி யொருநாள் வண்மைச்
சொல்லகத் திருந்த வாக்கப் பொருளெனத் துலங்குந் தூய
நல்லகத் தாடி தன்னி னவநித வதன நோக்கி
மெல்லகத் தீன்ற வன்னை விளித்துநன் கியம்பு வாரால். 30(713)

அழகன் நானோ நும் அரசன் நமுறாதோ எனக் கேட்டல்

திருநுத றன்னி னேக்கச் செம்முகந் தன்னின் மிக்கு
மருமண மேனி தன்னில் வடிவினி லழகி லியானே
வொருமனம் பற்று நீவி ரரசனே வுடைய னேர்ந்து
தெருளுற வுணர்த்தி யென்றுர் சிறப்பணி யுணர்த்துங்
[கோமான். 31(714)

நீயே அழகன், அரசன் குருபி எனினும் வல்ல
ஆண்டவன் எனல்

கோடிய புருவத் தோடு மாறிய குழிந்த கண்ணுஞ்
சாடிய திருக்கைத் தாழ்நீ ரோடிய மூக்குந் துன்னி
மோடிய வதர நீண்டு முனைதரு மெயிறுங் கோட்டஞ்
சூடிய முகமு மல்லிற் றுலங்கிய மேனி யானே. 32(715)



மருமலர் வதன மிக்கு மைந்தநின் னவய வங்க
ளுருமலர் சோதி காலு மொளிவினி னழக னீயே
பெருமையன் மற்று மன்னன் பெலத்தினிற் றெருளும் யூக
மருமைபொன் னிதியின் மேன்மை யாண்டகை யென்று
சொற்றுள். 33(716)

அத்தகு வல்லவன் குருபியாய்ப் பிறந்ததேனோ எனல்

முன்னணி யன்னை நோக்கி மூதுரை யுணருங் கோமா
னன்னவ ளுட்சி மாட்சி யனைத்துள ளுகி லியாரும்
பன்னிய நகையிற் கேற்ற படைப்பொடும் பிறத்த லென்னே
வுன்னகத் துணர்க வென்று ரொருஉவகத் திருந்தா ரன்றே. 34(717)

தாய் மகிழ தந்தை கோபித்துரைத்தல்

இம்மொழி யறிந்துள் ளாகத் திருத்திமெய் யன்ப தாகிச்
செம்மொழி கொண்கண் பாலில் வகையொடுந் தெரித்தான்
வெம்மொழி யாது நின்ற விறலின னபிமுன் னெய்தி [கோவ
யம்மொழி யுரைத்த லென்னென் றடர்ந்துளங் கனன்று
சொல்வான். 35(718)

நம்மைக் காக்கும் மன்னனை நீ இகழ்வதோ?

அன்பொடு நாளுஞ் செந்தே னருங்கனி பாகு முள்ளத்
தின்பொடு முபசா ரத்தி னியல்பொடு மளித்து நன்கின்
முன்பொடு பணியுந் தேய முதிரர சிவரை நிந்தை
வன்பொடு நகைத்த லென்கொல் மதியின்றி மறுத்த
லென்னே. 36(719)

வீரமுந் தகையுங் கொண்ட வேந்தனே யுள்ளத் தன்பாற்
சீரணித் தெம்மை நின்னைச் சிறப்பொடும் படைத்து மாறு
தீரமுற் றுணவும் நல்கு மித்திற முணர்கி லாயென்
றூரமுற் றுரைத்தான் வள்ளற் கருஞ்சினங் கொண்ட தன்றே. 37(720)

அறிவிழந்தீர் என ஆசரை நபி சினத்தல்

பன்னிரை யலைந்துங் கண்ணிற் பார்வைகேள் வியும லைந்துந்
தன்னிலை யலைந்துஞ் சென்னித் தடவுட லலைந்தும் வாயிற்
புன்னுரை கிழடு கொண்டும் புந்தியிற் கேடு கொண்டு
மென்னிலை புலம்பா நின்று யெனநபி கனன்று சொன்னுர். 38(721)

கொதித்தெழுந்த ஆசர் மன்னனிடம் ஓடுதல்

சொற்றசொல் லுணர்ந்து தாதைத் துணைவிழி கனல்க டுவ
முற்றவெஞ் சினத்திற் றூம மூரிநெட் டுயிர்த்துக் காந்தின்
மற்றொன்று முரைத்தா னல்லன் மனவயி ரத்தி னோடிக்
குற்றொன்று மன்னன் பாதத் திறைஞ்சிக்கை கூப்பி நின்றான்.
39(722)

ஒன்று சொல்ல வந்தேன், கேட்டருள்வீரோ?

எனைப்படைத் தினிநிற் காக்கு மிறைவனே பெருத்த செல்வந்
தனைப்படைத் திருந்த கோவே தம்மிடத் தொருசொல்
லன்பான்
மனப்படுத் திடுகு மென்ன வந்தன னடியேன் சிந்தை
யினைப்படுத் திடுதி ராயி னின்பொருள் விளக்கு கென்றான்.
40(723)

சொல்லும்படி மன்னன் கூறல்

குவிதருங் கரத்தி னின்ற வமைச்சர்கோ மானை நோக்கிப்
புவிதருந் தேர்ச்சி மிக்கு நிறைந்தநின் புந்தி மீதிற்
சவிதரும் பொருள்க ளெல்லாந் தாங்கிடா துரைத்தி யென்று
னவிதரு நரகம் புக்கி யரவின்வாய்ப் படுவ னன்றே. 41(724)

கேள்விப்பட்டு அஞ்சியவன் என் மகனுகப் பிறந்துளான் எனல்

கண்டிடுங் காட்சி யாலுங் கணிதவர் விளக்கத் தாலும்
பண்டொரு புதியோன் றோற்று மெனவுரைப் பான்மை
யென்ன
மீண்டுறு மென்றன் பாங்கின் மேவுறு மிவணில் வண்மை
கொண்டொரு சிறுவன் பின்னுள் குலங்கெட வந்த
[தென்றான். 42(725)

கொதித்தெழுந்த மன்னன் விளக்கம் கேட்டல்

என்மக வென்னு மாற்ற மிருந்தழற் பொங்கும் வங்க
நன்முகங் கொண்டு காதி னஞ்சொடுஞ் சாய்த்த லென்னப்
பன்முகங் கொண்டு வெந்தீப் படர்ந்தது சீற்றந் தன்னாற்
கொன்முகக் கண்கள் சேந்து கொதித்தழற் பொழியு மன்றே.
43(726)

வஞ்சக மனத்திற் கோடி வளைந்திரு புருவ நெற்றிக்
குஞ்சிடந் தடவ வெய்யோன் குணமென முகமுஞ் சேந்துப்
புஞ்சவெங் கவசங் கீறிப் புறந்தரு முரோம மெண்கின்
வெஞ்சினம் போன்று மாக்கை யிருந்திடும் விடுக்கு மன்றே,
44(727)



பேருடற் றுடிக்க மீசை வெடுவெடப் பெரிது செங்கை
யீரடி புடைக்க வாயி னெயிற்றொடு மதர மெல்லாஞ்
சோரியிற் பறக்க மூச்சுந் தொடர்ந்துநெட் டுயிர்க்கத்
தொட்ட
வோரணி விரலுந் தீய வுள்ளிருண் டெழுந்த சீற்றம்.
45(728)

கருமுகி லென்னுங் கண்ணுங் கடிமயிர் வேர்வைத் தாரை
யுருமெனக் கனைத்து வெய்ய வொள்ளறு கென்னத் தாவிப்
பொருவரா மவுனம் பற்றிப் புன்மையில் வளர்ந்த மெய்யான்
வருமெதி ரெரியி னோக்கி யாசர்பால் வழுத்து வானே.
46(729)

அணித்துறுந் தகுதி யற்றற் கடுத்ததென் றுன்ப நின்பாற்
பிணித்தது கொடியா யங்ஙன் பிறந்தவவ் வாய்மை மேலுங்
கணித்திடு முறையிற் றேர்ந்த கருத்தற மீட்டு நன்கிற்
பணித்திடு விரிவி னென்றான் பணிக்கனே பணிந்து
[சொல்வான். 4'(730)

என் மனைவி பெற்றவனல்லன் என ஆசறு கூறல்

கலிநிலைத்துறை

நுமக்க ரும்பணித் தொழும்பியாய் நூலென நுகப்பி
னெமக்கு றுந்திருத் தேவியே யிருமையி னகத்திற்
றமக்க ணித்துற வின்றவ ளல்லளத் தகுதி
நமக்கி யன்றில வவட்குமே நன்குற வுணரால். 48(731)

எங்கிருந்தோ ஓர் அழகிய பாலகன் வந்தான்

வான்ற லத்துடு வினங்கொலோ வழிகதி ரமுத
மீன்ற லப்பதி விதுகொலோ வெய்யவன் றானோ
யான்றெ குத்திடற் கரியவன் சுடரென விளங்கிக்
கான்ற பேரழ கொழுக்கினிற் கடியகத் தடைந்தான்.
49(732)

தனித்தவன் இறைவன், நல்லவன் அவனே என்றான்

இனிய தேனினு மதுரமே யிசையொடு பொழியுங்
கனியு மாமொழி வேம்பெனக் கருத்தொடு மறைவன்
றனிய னுயக னொருவனுண் டவனுமர் நல்லவன்
மனித ரியாவையு மமைத்தவ னெனவழங் கிடுவன். 50(733)

உம் வழி தவறு நேர்வழிக்கு வருக என்றான்

கண்ட பேர்கடஞ் செவிச்சுடுங் கனலெனக் கதித்து
மிண்டு கூடிநீர் பற்றிய வழிவெறி துடைய
வண்டி டாதென தருங்கதி யளிக்குநன் மார்க்கந்
தெண்டு கொண்டுளங் கொண்மினென் றறைகுவன்
[சினத்தும். 51(734)

மரம், செம்பை வணங்குவோர் நரகடைவராம்

இலங்கு நன்மணி யலங்கலம் புனைந்தெழி லனைத்துந்
துலங்குந் தெய்வங்கண் மரமெனத் தூடணித் தருங்கல்
விலங்கு செம்பென நகைத்ததை விலக்கினோர் நரகத்
தலங்க டூர்த்திடற் குரியவ ரென்னவுஞ் சாற்றும். 52(735)

தான் அஞ்சியவன் அவனே என மன்னன் உணர்தல்

இன்ன பான்மைய னென்றலு மிறைநுமு றூதன்
முன்ன நாட்கன வியற்கையுங் கணிதவர் மொழியு
மன்ன பான்மைய னவனன்றி வேறின்று பகையி
னொன்ன லானென வுரைத்துமீண் டுவனெதி ருரைப்பான்.
53(736)

உன்னிடம் என்று வந்தான் என வினவல்

அழிகொள் வானழ கொழுகிய வரியவச் சிறுவன்
மொழிகொள் வாய்நின திடத்தினின் முன்னரெத் துணைநாட்
கழிகொள் வான்வர வரையறுத் துரைகெனக் கணித்தான்
பழிகொள் வானடி தொழுதன னயர்வொடும் பணிக்கன்.
54(737)

மூன்று வாரம் முன்பு என, மன்னன் சினத்தல்

சித்தி ரத்துருப் பெற்றன னச்சிறு மகவென்
கத்த நற்றலத் தடைந்துமுத் திங்களுந் தொலைந்த
தித்தி றத்திகல் கொண்டியா னிருந்தன னென்றா
னெய்த்த லத்தெரி நீர்விழுந் தெனவிறை சினத்தான்
55(738)

இதுவரை கூறாததேன்?

சொல்லும் பேரழ காளனுந் தொடர்தர வன்மைப்
புல்லு நோக்கியு மித்துணை நாள்பல போத
மல்லு மாதபத் தானுமன் னோனறைந் திடுதற்
கொல்லும் வண்ணமீங் குரைத்திடா தென்னென
[வுருத்தான். 56(739)



உம் பெருமையுணர்த்தினேன், அவன் கேட்கவில்லை

அலரும் பூந்தொடை யரசர்க ளடிதொழுந் திறத்துப்
பெலவ நின்னணி பெருமையு மடிமையுள் ளறிய
நிலவுஞ் சொற்படி வணங்கிட நினைவினைத் திருத்தற்
குலவி நின்றனன் யானவ னொருஉநிலைகொண்டான். 57(740)

அதனாலே வந்து சொன்னேன் எனல்

என்சொற் கேட்டிடி னன்றஃ தில்லெனி னிறுவுந்
தன்சொற் கேட்பநும் முழையினிற் சாற்றுகு மென்ன
நன்சொற் காக்கில னாயில னாதலி னவின்றே
னென்சொற் காக்குக வேண்டிய கருத்தொடு மென்றான்.
58(741)

சிறுவரைப் பற்றிக்கொணர வீரர்களை அனுப்பல்

என்ன கத்துள னாக்கிய தண்டனை யியைய
நின்ன கத்துள னெனுமொழி நிருபர்கோ னறிந்துத்
துன்ன கத்துறும் வீரர்கள் சிலர்முகத் தூம
மன்ன கத்தொடும் விளித்துவன் வவ்வுதி ரென்றான்.
59(742)

நபி இபுராகீம் அரசன் முன் சேர்க்கப்படல்

வெய்ய வெங்கதிர் வாளினர் வேலினர் விரைந்து
பொய்யன் சொற்படி யாசர்தன் புன்மனம் போல
மையின் மாளிகை யனையணி மருங்கினி லுற்ற
வையன் றன்கரம் பற்றினர் கொணர்ந்தன ரருதின். 60(743)

அழலுங் கண்ணினர் பொருநர்க ளதிபர்மற் றமைச்சர்
விழலின் புந்தியவ் வாசறும் வீறொடு நிற்பத்
தழலும் பொன்மணி மோலியுந் தழங்குறத் தவிசிற்
கழலுங் கண்ணினன் முன்னுற விடுத்தனர் கயவர். 61(744)

வெம்மை நீக்கிய கருணையின் விழிகளும் வெண்சீ
ரம்மை யாக்கிய விதுமுகத் தழகுமாண் டிரவிற்
செம்மை யாக்கிய மேனியின் சிறப்பு மேற்சிறந்து
மெய்ம்மை யாக்கிய வாண்டகை மேவலன் றெரிந்தான்.
62(745)

ஆண்டகை சிறைக்கு அனுப்பப் படல்

சவையின் மாக்கடந் தடமுகத் தாமரை நாப்பண்
அவைய வத்திறை மதியென வழகுள முணர்ந்து
கவைகொ ணெஞ்சினன் கனவினிற் கண்டதுந் தேர்ந்து
நவையு றும்படி யிருத்தின னஞ்சிரு ளகத்தே. 63(746)

துன்று மன்னவர் நோக்கியிச் சிறுவனைத் தொடர்ந்து
சென்று நஞ்சிறை சாலையிற் சினத்தொடுங் கொடுபோ
யின்று காவலிற் படுத்திடு கென்றன னிதய
நின்று கும்பிய செந்தழல் விழிநிவந் திடுவான். 64(747)

வன்ம னத்தின ரழலெரி கண்ணினர் வடிவேற்
புன்ம னத்தினர் மருங்கினிற் சூழ்ந்தனர் பொறையே
மன்ம னத்திற சூலொளி தயங்கிய வள்ளற்
றன்ம னத்தயர் கொள்ளவுந் தாங்கொடு போந்தார். 65(748)

கதிரவன் மறைவும் செவ்வானமும் குறித்து நின்றவை

படர்ந்த வீரியர் புன்மையும் பழியுமே வேண்டிக்
கடந்த நாயகர்க் கொடுஞ்சிறை சாலையுட் காப்பிற்
தொடர்ந்து நின்றனர் பாதகர் நோக்கிடாத் தோற்றத்
தடர்ந்த வெய்யவன் கண்முகிழ்த் தேகின னன்னே. 66(749)

தீங்கின் மன்னவன் முகமலர் கூம்பவுஞ் செறிந்த
பாங்கி னெங்கனும் வல்லிருள் சேரவும் பகைவ
னூங்கு நையவு மாண்டகை யறையிடத் தடைந்த
தோங்கும் வெய்யவன் மேற்றிசை புகுந்தன னுடனே. 67(750)

என்னை யாண்டரு ணபியொளி விலங்கிய நயினார்
தன்னை வெஞ்சிறை சாலையுட் படுத்திய தரத்தால்
நின்னை யும்புடை சூழ்பவர் நினதுரைக் கிணங்கு
மன்னை யுஞ்சுடு நரகெனச் செக்கர்வான் பிறங்கும். 68(751)

மௌவல் புன்னகை நகைத்திடப் பறவைவன் பறையின்
கவ்வை மீக்கெழ வுடுவினந் தெயிறது கறித்து
ளெவ்வ முற்றவ நின்னிட மென்னிட னென்னத்
தெவ்வ ரொத்தது மாலையுஞ் சினக்குறிப் புடனே. 69(752)

சந்திரன் தோற்றம் உணர்த்தியவை

வன்ன மன்னபி திருமுன நிற்பைநின் மனமு
மன்ன நின்னல ரன்னனங் குவிதரச் மலரி
னென்னின் முன்னரி னிருக்கிலே னத்துணை யன்றிற்
சொன்ன வாசக முணர்த்தவுந் தோற்றினன் சோமன் 70(753)



செறிந்த வல்லிருட் படலங்க டிசைதிசை போத
வெறிந்த வெண்கதிர் பரப்பிமன் னவன்செயு மீனம்
பறிந்து சென்றற நன்னபி புகழ்படர் வனபோ
லறிந்த பேருள மெனவிது வானகத் தமர்ந்தான். 71(754)

அடுத்த காலை முழங்கிய முரசு உணர்த்தியது

வரிசை நாயக முகம்மது திருவொளி வளரு
முரிசை நன்னபிக் கிடர்செயு மொன்னலன் வாழ்வு
மரசு நெக்குறக் காலம்வந் தடுத்ததென் றறிய
முரச டித்தன வாரண மொத்தன முழக்கம். 72(755)

செங்கதிரின் தோற்றம்

வளர்ந்த பூந்தருப் புள்ளினஞ் சிலம்பவும் வனசக்
குளிர்ந்த வெண்முகை யவிழ்தரக் குரைகட லொலிப்பத்
தளர்ந்தி டாதுபல் விலங்கின மாக்களுட் டளிப்பத்
துளிந்த செங்கரத் தாதவன் றேத்தின னன்றே. 73(756)

அரியாசனத்தமர்ந்த மன்னன் உரைத்தது

தென்னு லாங்கதி ருதித்தபின் செழுநவ மணியின்
மின்னு லாவிய வரியணை மீதில்வந் திருந்தா
னென்ன லார்பல ரணித்துறு முவர்முக நோக்கிப்
பொன்னு லாமுடி மன்னவ னிவையன புகல்வான். 74(757)

நகரை அலங்கரிக்க மன்னனின் ஆணை

அழகு லாவிய மண்டப மியாவையு மணியிற்
செழுமை யாக்குமின் சித்திரத் தலங்கரித் திடுமின்
குழுவு லாநம தணிபெரும் படையெலாங் குழுமி
யொழுகி யூபங்கள் வகைவகை யுஞற்றிடு மொருங்கின் 75(758)

சமரிற் சோட்டினம் பல்பல வணிதரித் திடுமி
னமரி னாகிய படைக்கலத் தகங்கடுப் புடனே
கமரி வெஞ்சினத் திறத்தொடுங் கரிபரி யிரத
முமரி னாருமி னென்றன னொளிர்முடி யரையன். 76(759)

வந்து குழுமிய மக்கள் வெள்ளத்தின் வருணனை

வீர மன்னவ னறைதலு மாளிகை மேன்மே
லார மன்னவ ரலங்கரித் திடுவதற் கியன்றார்
சூர மன்னவர்க் கறிமுர சடித்தனர் சுயத்திற்
றீர மன்னவ ரெழுந்தனர் திரட்படை யுடனே. 77(760)

வான மண்டலத் தளவிவெம் மனமென வேகத்
தான மண்டலத் தைங்கதி யுடனதன் சாரி
யான மண்டலத் தரிமிசை யாயுதத் தோடுங்
கான மண்டலத் தோளினர் கணக்கின்றி யெழுந்தார். 78(761)

சங்கு போனற வுகிருரற் றடத்தவன் கால்கள்
திங்கள் வண்பிறை யெயிற்றினிற் சோரியே சிவப்பப்
பொங்கு செந்துகிர் போன்றது சிறுவிழி பொழியு
மங்கு ருரையின் கவுட்டுள வெற்பினர் மலிந்தார். 79(762)

சிவந்த பொன்மணிக் கலசமு முத்தினஞ் செறிந்து
நிவந்த வெண்ணிரை யெண்ணிரைக் கொடிகளு நெடிய
வுவந்த வெஞ்சின மன்னவ ரொளிர்பரு தியினே
குவிந்த பொன்னெடும் வெளிப்புறங் குரவையி னூர்ந்தார். 80(763)

அகத்து மப்புறந் தன்னினுந் தீய்தரு மழலிற்
றெருகுத்த வெஞ்சின மள்ளர்கள் சுலவுநீ ரென்ன
வகுத்தி டாதுபல் லணியொடு மலிபடைக் கலத்தின்
மிகுத்த டர்ந்தன முரசினந் தாக்கொடு மேவ. 81(764)

கதிர்வொள் வெண்மதிக் குடையினர் கற்றையங் கவரிப்
பிதிர்கொள் கேதனத் துடையவர் பீலியு முடையார்
முதிர்கொள் வெஞ்சின நெஞ்சினர் மூரிவன் றிறத்தா
ரதிர்கொள் மாமுர சுடையவ ரணிபல வுடையார் 82(765)

வில்லும் வெங்கணைக் கரத்தினர் வேலுடை வாளார்
கல்லு மங்கவ ணுடையவர் கத்திகத் தரியார்
சொல்லும் பந்தமு முடையவர் சொட்டைபட் டயத்தார்
மல்லு மற்புய வயவர்கள் மலிந்தன ரன்றே. 83(766)

வெள்ளம் வெள்ளமா யணியொடு மெண்டிசை மேவிக்
கள்ளங் கள்ளமாய்க் கடிபறை முரசொடுங் கதித்துத்
தள்ளுந் தள்ளுமென் றரிகரி தடத்தொனி யெழுப்பி
யுள்ளு முள்ளும்வெஞ் சினத்தொடு மூர்ந்துநின் றனரே. 84(767)

தெனுது வெள்ளத்தி னூர்பவர் வடக்கின்கீழ் செல்ல
வனுது கீழ்த்திசை மேற்குற வக்கினித் திசையின்
முனுது மேவுற மேற்கினர் முன்னுறுங் கிழக்கா
ரினுது நாப்பணிற் பேரியோ டெதிரெதி ருறவே. 85(768)



வடக்கி னின்றவர் தென்கிழக் காகவும் வடக்கீழ்த்
தடத்தி னின்றவ ராங்குற வக்கினித் தலத்தார்
வடக்கின் மேவுற மேலுறு நடுவினர் மருங்கார்
தொடுத்து நின்றெதிர் பொருந்தொழில் சூத்திரத்
தமர்வார். 86(769)

நின்ற தோர்திசை நான்கணி தன்னிலை மேவத்
துன்று வெம்பரி யைந்திரி தொடுத்துமா ருகச்
சென்று சென்றுமட் டிகிரியிற் றிரிக்குநற் சாரி
யன்று வன்றிறத் தமரின ரவ்வழி யமைந்தார். 87(770)

நபியைக் கொண்டுவர மன்னனின் கட்டளை

சிறந்த மாளிகை சித்திரத் தலங்கரித் ததுவு
மிறந்த மன்னவர் சமரினத் தியல்பொடு நிற்கும்
பிறந்த வண்ணமக் கயவரின் வஞ்சினப் பெருமா
னறிந்து நன்னபிக் கொணர்கென மறவரி னறைந்தான். 88(771)

நபிநாதர் மன்னன்முன் கொண்டுவிடப் படல்

எழுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

கொடுவரிக் குலங்கள் போன்றவெவ் வீரர்
குழுவொடும் பற்படை யேந்தி
யிடிதரு முழக்கி னடர்ந்துவன் சாலை
யிடத்தினி னேகிவண் ணிலவின்
வடிவுறும் வதன முகம்மதி னொளிவு
மலர்தரு நபியினைக் கூட்டி
யிடனற நெருங்குங் களத்திடை நாப்ப
ணியல்பெறக் கொணர்ந்தன ரன்றே. 89(772)

வெள்ளெயிற் றதரங் கவ்விநிற் பவருஞ்
செவ்விழி யழலுக நிற்பார்
தள்ளிநிற் பவரும் பரிகரி யிரதஞ்
சார்ந்துநிற் பவருமார்த் தடர்ந்தே
யொள்ளொளி விரிக்கும் படைசுழற் றுவரு
மிருடரும் பரிசைதட் டுவருங்
கள்ளம்பற் றினரு முறுக்கிநிற் பவருங்
கடந்திறை முன்னரின் விடுத்தார். 90(773)

அவையில் நின்ற நபியின் தோற்றம்

மந்திரி புரோதர் நட்பினர் தலைவர்
மருத்துவர் கணிதர்நா வலவர்
தந்திரர் சுற்றந் தழியின ரெவருந்
தணப்பிலா தருகினிற் சூழ

வந்தரத் திடியின் முரசதிர் வெள்ள
மளவிடா தணியணி நெருங்கச்
சந்திரர் கோடி விளக்கிய தவிசின்
மன்னவன் றன்முன நின்றார். 91(774)

மயிர்செறி மறியிற் கொருபுலி யெனவு
மதகரிக் குழுவினுக் கிடையே
யயிர்செறி யெயிற்று வெவ்வெரி யேற்றி
னடர்தருங் குருளையைப் போன்றுஞ்
செயிரறு மென்கோன் கதிரவர்கோடிச்
சிறந்தன நின்றிரு மருங்கு
மயர்தரச் சூழ்ந்தோர் தம்முக நோக்கி
யழகொழு கமுதவாய் திறந்தார். 92(775)

**நீவிர் வணங்குவது எதனை என நபி கேட்டலும் சிலையை எனலும்**

பற்படைக் கலத்தின் முன்னணித் துற்றீர்
பயன்பெற வனுதின நீவி
ரற்பறை மனத்தின் வணங்குவ யாவை
யறுகுமியா மியம்புதி ரெனலுஞ்
சொற்பயி னயினு ரணிமுக நோக்கித்
தூமலர் புனைதருஞ் சிலைகண்
முற்பயி னவங்கொ டெய்வமே யன்றி
முயற்சிவே றின்றென விசைத்தார். 93(776)

**சிலைகளின் சக்தியின்மையை விளக்கிய நபி**

சாற்றுமம் மன்னர் தம்முக நோக்கித்
தண்மலர் மாலைகள் புனைந்தாற்
றேற்றநோக் குறுமோ மணநுகர்ந் துறுமோ
சுவைபல சுவைத்திடுங் கொல்லோ
மேற்றுயி லேற்று மேற்றிடா திகழ்ச்சி
வேண்டுமோ வினிதொடு முரைக்கும்
போற்றலுஞ் செவியிற் கேட்குமோ வறிவும்
புகரற விளக்குவ வுளவோ. 94(777)

பன்மலர் குவித்து வணங்குவர் தமக்குப்
பயன்பல தருவன வுளவோ
நன்மனங் கொள்ளார்க் குடல்வினை யிவையி
னலிவுற வருத்துவ வுளவோ



இன்மையு மின்று மற்றவு மின்று
விதனையுள் ளிருத்துவ தென்னென்
றன்மையி னென்கோன் வினவிய சொல்லே
யவர்முக மலர்க்கலர் சசியே. 95(778)

அரியநற் றவத்தி னின்றவர் முன்றோ
ரழகொடு மெடுத்திடு முறைமை
பெரியதென் றுணர்ந்தோம் பயிற்றிய வழக்கப்
பேரினை மறத்தலென் னென்னத்
தெரிதர வுரைத்தார் முன்னிலை யானோர்
தேற்றிலார் நோக்கிநீ வீர்கள்
வரன்முறை கொணர்ந்த சிலையெலா மெற்கு
மருவிலாப் பகைமைய வன்றே. 96(779)

சென்னிறத் தழலிற் செலுத்துநீ வீர்கள்
சேர்வதும் பிற்றையிற் றேற்று
மன்னவக் கொடிய வன்சிலை வணங்கற்
காயினோர் தமக்குமொன் றுரைற்
புன்னிலை கொண்ட பகைநிலைத் துளவாற்
பொருந்துவா ரெனக்குறு மருவார்
தந்நிலை கொண்டீர் முன்னிலை கொண்டீ
ரெனநபி சாற்றுவ ரன்றே. 97(780)

**ஏக இறைவனின் பெருமையை விளக்குதல்**

மனக்கச டுடைய நீவிரும் வன்கண்
மரத்துரு யாவுமே பகையா
லெனக்கொரு கருத்து னுளனவ னியல்பே
யிவைதர வென்றனைப் படைத்துத்
தனக்குறு நேர்மை வழியினி னும்போற்
றரியலர்க் குளத்தயர் வில்லாக்
கனக்குறும் படியே நடைகொளத் திருத்துங்
காப்புடைக் காவல னன்றே. 98(781)

காட்டகத் திடத்தும் வெற்பிடந் தனினுங்
கடலிடந் தன்னினும் யாண்டும்
வீட்டகத் திடத்தும் பசியறிந் ததற்காம்
விரிசுவை யமுதமா ருண்டி
யூட்டுதற் கியற்றுங் காரண னன்றி
யுறுபிணி நீக்குதற் குரியோன்
மாட்டிறந் திடுகி லெழுப்புதற் குரியோன்
மனத்தவி சகன்றிடா தன்றோன். 99(782)

பூவினின் யானோர் புன்சிறு பாவம்
புந்தியற் றியற்றிடி னுளை
யாவியின் கணங்க ணிறுவித்தண் டனையே
யாக்குமத் தகுதியிற் பொறுக்குங்
காவல னென்ன வாவல்வைத் திருக்குங்
கருத்தனென் றவருளந் தியங்க
மேவிய முறையின் விளக்கித்தன் சிந்தை
வியப்புற விரங்கிநின் றிரப்பார். 100(783)

ஏகநாயகனிடம் நபி இறைஞ்சுதல்

ஆதியே துவக்க மறிகிலாப் பொருளே
யருமையே பெருமையே விளங்குஞ்
சோதியே பொறியிற் றோற்றமே தோற்றாத்
தூயனே நேயனே வணங்கு
நீதியே யறிவே மருவிய நலனே
நித்தனே கத்தனே கருணை
யீதியே சிறந்த வறிவொடுந் தெளிவு
மிடைவிடாப் பேரின்ப மன்னே. 101(784)

அணிபல சிறந்து நெறிவழா தாழுகு
மருமக வொன்றென தியன்ற
கணிமர பதனிற் றிசைதிசை படர்ந்த
மன்பதைக் கணங்கள் பிற்காலந்
திணிபவத் தடையா நேர்மையிற் சேர்க்குந்
திருமறை யுறையுளாய்த் தோன்றப்
பணிதரும் பொருளே யுரியநா யகனே
பண்புறுங் கிருபைசெய் வாயே. 102(785)

தேனனி மலர்க்கரத் தண்டுளித் திவலை
செறிதரும் செழும்பதி சுவனத்
தானந கீமென் றியன்றநற் கதியி
னழகுடன் வரிசையின் மருவு
மானநன் குடைய மாதவ ருடனே
மருவிநின் பேரின்ப மடையத்
தானவா உலக விநோதனே தகைய
தண்ணளி புரிகுவா யரசே. 103(786)

வரிசைமெய்ப் பொருளே யென்னகத் துயிரே
வல்லமை யறிகொணு தவனே
பிரிசமா யென்னை யீன்றிடுந் தந்தை
பெருமையி னலவழி யியைதற்



குரியவ ராயி னோர்வழி யிமான்
பிறங்கவு முவர்பவம் பொறுப்பா
யரியநா யகனே யென்றினி திரந்தா
ரதன்பயன் விரித்திடிற் பெருகும். 104(787)

நமுறூது நானே இறைவன் எனல்

இவ்வகை யியல்பி னிற்குமெந் நபியை
யிருந்தவி சிறையவ னேக்கிக்
குவ்விட நின்னை யன்பொடும் படைத்துக்
கொண்டுண வுணவுமே யளித்துச்
செவ்விதிற் காக்கு நாயகன் யானே
செப்புறை தனக்குளம் பற்றி
யிவ்வழி யொழுகற் கென்னைமா ருத
லேற்குமோ வெனவின வினனே. 105(788)

உன்னுரை பொய் என நபியுரைத்தல்

வன்மனக் கொடியோன் வளைமுக நோக்கி
மன்னவ நின்னுரை பொய்மை
யின்னன மென்னை நிருமித்து முலகி
லியல்புண வளித்தருள் கின்றோன்
மன்னிலம் வான மற்றுள வெல்லாம்
வகுத்தருங் காவலி னிற்கு
மன்னவ னென்றூர் மதுரமே யொழுகு
மமுதவாய்த் திருநவி யன்றே. 106(789)

நபியின் உத்தரம் கேட்டு அவையோர் மகிழ்தல்

சித்திரத் தமைந்த வவயவத் தழகின்
றெவரீ ரறிவொடும் வெய்யக்
குத்திரத் தவர்கள் மறநிலை யுணராக்
குணத்தொடு மியல்பொடு முரைப்ப
வித்திறந் தெரிந்தோ ரவரவர் கருத்தி
னின்பமு மகிழ்வுமே மலிய
மெய்த்திறத் துடலம் பூத்தன ரிருந்த
வேந்தனே மருங்குநோக் கினனால். 107(790)

ஆசரை நோக்கி மன்னன் உரைத்தது

நெறியொடு வணங்கி முன்னிலை யிருந்த
  நேரில னாசறை நோக்கி
யறிவுளார் மற்றோ ராண்டகை மற்றோ
  ரவரென வுளத்திடை மதித்துக்
குறிகொளு மிஃது குறிகொளா திஃதென்
  றுணர்ந்திலன் கொணர்ந்தநின் புதல்வன்
சிறுவய தணிந்த புந்தியிற் றிறமும்
  தேற்றமு மிஃதென வுரைத்தான். 108(791)

அறியாச் சிறுவனைத் தண்டித்தல் எனக்கிழுக்கு

இம்மொழி யுரைத்தா னிவனென வெண்ணி
  யிசைந்திடுந் தண்டனை கொண்டு
வெம்மொழி மாய்க்கு மவ்வினை புரியின்
  மேதினி யிடத்துறு மரசர்
செம்மலென் றுயர்த்து மன்னவ னறியாச்
  சிறுவனிற் றிறம்பயிற் றினனென்
றிம்மொழி நகையோ டம்மொழி வியப்பி
  னுலவுதற் பயன்கெடு மன்றே. 109(792)

அழைத்துச் சென்று அறிவு புகட்டு எனல்

வீரமுந் திறனு மாட்சியு முயர்ந்த
  வேல்வல வேந்தர்க ளியற்கைச்
சூரமும் படையுந் தகையினர் தம்பாற்
  றொடர்மர பொருதணி வாகை
நேரமுங் குறித்துப் பூண்பதே யன்றி
  நேர்ந்தவர் புறத்தினில் வியத்தற்
காரம தன்று நின்மகன் கரத்திற்
  பற்றுதி களிப்பொடுங் கொண்மின். 110(793)

இல்லகத் தன்பி னணிபெற வைத்திவ்
  விளையவன் றன்மனங் கொள்ள
வில்லகத் தங்கை விறற்படை யவர்கள்
  வீரமு மாக்கமு மியாஞ்செய்



கொல்லகத் தன்மை வகைபல வுரைத்துக்
  கொடுங்கருத் துணர்ந்திட மார்க்கம்
புல்லகத் தியையப் பயிற்றுக வென்றான்
  பொங்கிய வழற்றிரட் கண்ணான். 111(794)

நபியைத் தன்வழி கொணர ஆசரின் முயற்சிகள்

இசைந்தமன் னவன்சொற் கிணங்கிய வாச
  றெம்மிறை திருக்கரம் பற்றி
யசைந்தசைந் தாடி யாடியிற் றுரும்பா
  யலைவுறு முளத்தொடுந் தனது
மிசைந்திடுங் குடுமி வெண்மலை யென்னு
  மேனிலை மாளிகை புகுந்து
நிசந்தரு நபியைத் தன்னுரைக் காக்கு
  நியதியி னிருந்தன னன்றே. 112(795)

நுமுறாதைக் கண்ணுற்றபடல முற்றிற்று
ஆகப்படலம் 13-க்கு திருவிருத்தம் 795.

—□—

# 14. உளந்தேற்றுப் படலம்

### நபி இபுருகீம் தவநிலை நிற்றல்

கலிநிலைத்துறை

பன்மை கொண்டுள படைப்புகள் பரிவொடு புகழு
நன்மை கொண்டெழு நபியொளி நவந்திகழ் நயினார்
வன்மை கொண்டுறுந் தந்தைதன் வாய்மொழி கொள்ளாத்
தன்மை கொண்டுறூங் காலையிற் றவம்படர்ந் ததுவே. 1(796)

வஞ்ச மீக்கொளுங் கயவர்கள் மன்னிலை மறுக
வெஞ்ச மீக்கொளு மறிவுட னோர்மையின் விளக்க
நெஞ்ச மீக்கொள வுரைத்திடு நிலையினிற் றகையொன்
றஞ்ச மீக்கொள விருந்தனர் தவநிலை யிருந்தார். 2(797)

### வழியில் செத்த மிருக உடலைக் காணல்

பயந்த பேர்மனை யிருக்குமெந் நாயகன் பலன்க
ணயந்த சிந்தையிற் பதிபுற நன்கொடு முலவி
வயந்த ரும்படி வரும்பொழு தோரிடம் வழீஇய
மயந்த ரும்விடக் கணிபெறக் கண்டனர் வழியே. 3(798)

### பிணந்தின்னி மிருகங்கள் பறவைகள் அதை உண்ணல்

வரிகொள் வெம்புலி யினங்களும் வாய்கொளப் பொருந்தி
யரிதி னுண்பவு மவையன்றிக் கழுகொடு பருந்தும்
பெரிதி னுண்பவுஞ் சம்பினம் பிறங்கவும் பிறிந்துந்
தெரிகி லாதற வழிந்தது நோக்கினர் செம்மல். 4(799)

### செத்தவை மீள்வதைக் காட்ட இறைவனை வேண்டல்

விலங்கின் மேதைகள் விலங்கின திடத்தினிற் செனிப்பத்
துலங்கு நாயக ரியல்பினாற் றேற்றிய வுளத்திற்
பெலன்கொள் வல்லவன் பெருமையைப் பிசகறக் கண்ணா
னலன்கொள் கின்றதோர் காரண நவநிதத் துடனே. 5(800)

புந்தி மிஞ்சிய வுளத்தொடு மிறைவனைப் புகழ்ந்து
சந்த மிஞ்சிய வாண்டகை தன்னுளத் தன்பா
லந்த மின்றிய வல்லவ வழிந்திறந் தவைக
ளெந்த வண்ணமீண் டுயிர்பெறச் செய்குவை யென்றார். 6(801)



### இறைவன் அதை எற்றான்

வரைவி லாதெழு மானந்த வுளத்தொடு வள்ளற்
புரையி லாமொழி யுரைத்தவை மேலவன் பொருந்திக்
கரையி லாவுயி ரடங்கலுங் களிப்பொடு செழிப்பக்
கரைவி லாமதிப் பொடுவிடை யிட்டனன் கணிப்பின். 7(802)

### உம் நம்பிக்கையில் உறுதியுடனில்லையா?

நிறைந்த பல்லுயி ரனைத்தையு நிருமிக்குந் திறத்தா
லிறந்த யாவையு மாவிபெற் றெழுந்திடும் படியே
திறந்த ரும்பதி யெனவுளத் துறுதியே சேர்த்துப்
புறந்த ரும்படி நிற்கிலீ ரோவெனப் புரிந்தே. 8(803)

### உறுதியுண்டு; கண்ணால் காண ஆசையெனல்

இத்தி றத்துள னீயென வெனதுளம் பற்றி
முத்தி பெற்றுற யாவர்க்கு முறைமுறை விரித்தே
னத்தி றத்தினை யென்னிரு விழிகொளற் காவிப்
பத்தி யுற்றன னென்றனர் மேனிலை பயின்றார். 9(804)

### நான்கு பறவைகளை அறுத்து துண்டுபடுத்தி கலந்திடுக

நன்று நன்றென துபர்வினை காண்கநீ நயந்து
நின்ற நின்றநற் பக்கிகள் நான்கினை நேடிச்
சென்று கொண்டறுத் தருந்துணி யாக்கிப்பின் சேர்த்துத்
துன்று மொன்றுபோற் றொகுத்திடுந் துன்புறா தன்றே 10(805)

### துண்டங்களை வெவ்வேறு மலையுச்சிகளில் வையும்

கலந்த யாவையுங் கொடுநெடுங் கிரிக்கணந் தோறு
நிலந்த யங்குற வைத்திடு நினதுளம் பொருந்தப்
புலர்ந்த பட்சியின் சிரங்களுங் கண்ணெதிர் பொலிக
நலந்த ரும்படி நோக்கியே நவிற்றுதி மற்றே. 11(806)

### தலைகளை எதிர்வைத்து உயிர் மீண்டு வருக என்றுரையும்

படைத்த ளிக்குமெந் நாயகன் பதிவுறுந் திறத்தி
னெடுத்த வுத்திரத் திவணடைந் திடுகவென் றெதிர்நின்
றடுத்து ரைத்திடி லாண்டுவந் தடைகுவ தறிக
திடத்தி னின்னுளத் தென்றன னுளந்தொறுஞ் சிறந்தோன். 12(807)

### புறா, காக்கை, மயில், கோழி நான்குமெடுத்தனர்

வல்ல நாயகன் மெய்மொழி யானந்த மல்கப்
புல்லு மேனிலை வள்ளலுந் திருமனப் புகழ்வின்
மெல்ல வண்சிறைப் புறவொடு கொடிமயில் வேக
மல்லுங் குக்கிட நான்கினை யெடுத்தனர் வசத்தில். 13(808)

தலை தவிர பிற துண்டங்களை ஒன்ருக்கிக் கூறு வைத்தல்

பக்கி நான்குமொன் ருவரப் பயில்சிரம் வேருய்த்
தொக்கு வெண்சிறைத் தசைமுத லியாவையுந் துணிசெய்
தக்க ணத்தினிற் றிசைபட ரருங்கிரி சிகரப்
பக்கல் வைத்தனர் விரவிய பொருள்பல வன்றே. 14(809)

இறைவன் கருணையால் உயிர்பெற்று மீள்க எனல்

தலைக ளுன்குமுன் னணித்துறத் தவநிலை நயினர்
கலைக ளாலுணர் வரியவன் கருணையம் பொருட்டால்
மலைகண் மேலுறும் பறவைகா ளுயிருடன் வருமென்
றுலைவி லாமொழி யுரைத்தனர் நபியிபு ருகீம். 15(810)

பறவைகள் முழு உருவுடன் மீண்டு பறந்து செல்லல்

நன்ன யத்துறும் வள்ளறன் றேமொழி நவமே
மென்ன யத்தொடு மாண்டகை வலுமையு மேவிப்
பன்ன யத்தொடு வெற்பிடம் படர்ந்துறும் பலவுந்
துன்ன யத்தொடு வகைவகை தொந்தமுற் றனவே. 16(811)

என்பு மன்னியும் பின்னியு நரம்பின மெவையும்
பின்பு மேதையுஞ் சோரியும் பெய்தரப் பிறங்கித்
தன்பு றத்தினிற் றாவிகள் தைவரப் பொலிந்தே
முன்பு முன்னிய சிரத்திடை முறையொடு மடைந்த. 17(812)

பட்டு நின்றவச் சிரங்களி னுடல்படப் பொருந்தி
விட்டு நின்றதஞ் சிறைகளை விழிகொள விரித்து
முட்டு நின்றபல் வினையொடு முறைமுறை யெழுந்துக்
கிட்டி னின்றுயர் பறந்தன பறவைகள் கெழுமி. 18(813)

வல்லவனைத் துதித்து வள்ளலைப் புகழ்ந்து அவை செல்லல்

வண்ண வொண்சிறைக் கண்களால் வள்ளலை நோக்கிப்
பண்ணி யன்றரும் வாய்கொடு பற்பல புகழ்ந்து
வெண்ண முற்றிய வல்லவன் றனைத்துதித் தேகந்
துண்ணென் றேதையிற் போயின பக்கிக ளொருங்கே 19(814)

இறைவனின் அளவற்ற ஆற்றலைப் புகழ்ந்து இல்லந்திரும்பல்

பிரிந்தி ருந்ததுண் டொன்றதாய்ப் பின்னுநல் லுயிர்கொண்
டிரிந்தெ ழுந்துயர் காரணப் புதுமையி னிதயம்
புரிந்த ழுந்திய வானந்தப் புணரியின் மூழ்கித்
தெரிந்தி லாதுட லவசமுற் றனரணிச் செம்மல். 20(815)



கண்ணிடத் தினுமப் புறத்தினு முறுங்கணிப் பில்லா
வெண்ணி டத்துயிர் கண்டுளங் களிப்புற வின்பந்
தண்ணி டத்தொடுந் தருந்திரு வல்லமை தாங்கு
மண்ண னின்னய மளவிட லரிதென வியந்தார். 21(816)

போற்றிப் போற்றியுள் ளடங்கிடா மகிழ்வொடு புகழ்ந்துச்
சாற்றிச் சாற்றிநின் றடிபெயர்த் சுர்க்கமுந் தகையுந்
தேற்றித் தேற்றிய சிந்தையி னபியிபு ருகீ
மாற்றி யாற்றித்தன் ருயக மடைந்தன ரன்றே. 22(817)

உளந்தேற்றுப் படலம் முற்றிற்று.

ஆக படலம் 14-க்கு திருவிருத்தம் 817.

# 15. விழைவாடிய படலம்

படலச் செய்தி

*அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்*

திருக்கறுஞ் சிந்தை வள்ளற் றிருநபி யொளிவு பூத்துப்
பெருக்கிய கார ணத்திற் பிறந்தணி யிபுறா கீமு
முருக்கள்கொண் டேகி யாரு முழறர வியற்கை தோன்றத்
தெருக்களின் விழைவா டுற்ற சிறப்பினி தியம்புவாமே.
1(818)

ஆசறு போதனையும் நபியின் மறுப்பும்

கொழுந்தெரி யழற்கண் மன்னன் கூறிய வாய்மை மாறா
தெழுந்திடு மாச றென்னு மீன்றவன் பலகால் வஞ்ச
மழுந்திய மொழியிற் றேற்றி யருமையிற் றிறமுங் கூறித்
தொழுந்தகை பயிற்றா நின்றா னன்னதே தொலைத்து நின்றார்.
2(819)

ஆசறு சிலைகள் செய்து மகனிடம் பேசல்

இந்நிலை நிகழுங் காலத் தெழின்மரத் துணியிற் சீவி
மின்னவ மணிக டாக்கி மென்மையின் வண்ணம் பூசிப்
புன்னிலை யாளர்போற்றும் பொருவராச் சிலைகள் செய்து
மன்னிலை யாச றெங்கண் மணிநபி நோக்கிச் சொல்வான்.
3(820)

மைந்தரின் கடமை இன்னதெனல்

நின்னுடன் பிறந்து நின்ற நினக்குறுந் துணையி னின்ற
வன்னவ ருடனே போந்தி யானதன் மேன்மை பூண்பான்
மன்னக ரார்த வத்தின் மனத்தொடு மவர்செய் யாக்கந்
தன்னையுந் திறத்தின் செய்தற் றகையவென் மைந்தர்க்
[கென்றான். 4(821)

நான் இழித்துப் பேசும் சிலைகளை நானே விற்பதா?

மரத்துறுஞ் சிலையி ரண்டு மதிப்பொடும் விற்றி யென்ற
தரத்துறு மவனை நோக்கிச் சகத்தினி லியாண்டுங் கொள்ளாப்
புரத்துள வென்ன நிந்தைப் புகன்றவை நகைக்கும் யானே
கரத்தினிற் பற்ற லென்னே யென்றனர் கலைவல் லாளர்.
5(822)

என் பெயர் விளங்க சொன்னதைச் செய் எனல்

என்னிடத் துதித்த தானு மென்பெயர் விளக்க லானு
மன்னிடத் தீன்றான் வாய்மை மறுத்தில னென்ப தானு
நின்னிடத் திருந்த நிந்தை வேறிட நிலையா தானு
மன்னதே புரிக வென்றா னதற்கிவ ரிசைந்து நின்றார். 6(823)

உடனிரு சிறுவர் சிலைகளைத் தூக்கி வரல்

சிற்றுரு விலையுங் கூறிச் செறிவிலை பெரிதிற் கோதி
மற்றிரு சிறார்கைக் கீந்து மருங்கொடும் போதி யென்றான்
குற்றமுற் றிருந்த சிந்தை கொண்டிடுந் தாதை நோக்கி
நற்றவ நயினார் பூத்து நறாவழி மொழிகள் சொல்வார்.
7(824)

உம்மைக் காத்து உணவளிப்பவையா இவை எனல்

அருமையிற் படைத்த தென்று மருணல முடைய தென்றும்
பெருமையிற் காப்ப தென்றும் பேருண வளிப்ப தென்று
முரிமையின் வணங்கு நீவி ருவந்தவை யிதுகொ லென்றா
ரிருமையுந் தகுதி பூண்டா ரெதிரவ னஃதென் றானே.
8(825)

உங்கள் மன்னனின் சிலை ஈன்றவை எத்தனை எனல்

வலத்தினி னுவந்த நுங்கள் மன்னவன் வணங்குந் தந்தந்
தலத்தினி னிவைபோற் றெய்வ மெத்துணை தரித்த வென்று
நலத்துடை நபியுங் கேட்ப நஞ்சகம் புழுங்கி யொண்க
ணிலத்துடை மலரி னாக்கை விடுப்பொடு மிசைக்க லுற்றான்.
9(826)

எம் தெய்வத்தை இகழ்கிறாயா எனத் தந்தை சினத்தல்

நன்குட னிறைஞ்சு மெங்க ணவந்தருந் தெய்வந் தம்மை
வன்கொள வெதிரி னின்று வழிகொளா திகழா நின்றாய்ப்
புன்கொளிவ் வாறு செய்யிற் புந்தியி னின்னை யானு
மன்கொளக் கணியே னென்றான் சிற்பநூல் வல்ல னன்றே.
10(827)

இரு சிறுவரும் தொடர வீதி புகுதல்

சில்வினை மாக்கள் பற்றுஞ் சிலையஃ திரண்டுஞ் சீறார் [பின்னே
சொல்வினைக் கியைந்து நின்றார் துணைக்கரத் தளித்துப்
யொல்வினை கொண்டு நிற்ப வுடையவன் கருணை வள்ள
னல்வினை கொண்ட சிந்தை நபியுமே யெழுந்தா ரன்றே.
11(828)

ஈன்றவ ரறைந்த வாய்மைக் கிணங்கலே யிணக்க மென்னுஞ்
சான்றவர் முறைமை யோடுந் தபதியன் முறைமை கொண்டு
மான்றவர் முறைமை யோடு மருகினி லிருவர் சூழத்
தேன்றரு மலங்கற் றிண்டோட் டிருநபி வீதி புக்கார். 12(829)

### பயன் எதுவுமே இல்லா இச்சிலைகளைக் கொள்வாருண்டோ?

சுடுஞ்சிகி யனைய நாளுந் தொழுபவர் நாட்டந் தேற்றி
விடுஞ்சில பயனு மின்று வேண்டிலார் தயங்க வேதோ
ரடுஞ்சில துன்ப மீய்த லதற்கின்று மரத்தி னுக்குங்
கொடுஞ்சிலைப் பொருளின் மாற்றிக் கொள்ளுவா
ருளரோ ஒஒஒஒவென்றார். 13(830)

கண்ணுண்டு துண்ட முண்டு காதுண்டு வாயு முண்டு
பண்ணின்று முகத்த லின்று படலின்று தோற்ற மின்று
வண்ணுண்டு கைகா லுண்டு வழியெறும் பேனுந் தட்டா
மண்ணுண்டு போகும் பாவை வாங்குவா ருளரோஒஒஒஒ
வென்றார். 14(831)

### குளத்தில் முக்கி மண், நீருண்ணக் கூறி அடித்தல்

தெருவிடந் திரிந்து வள்ளல் சிறாரொடு மவணிற் பூத்து
மருவிடுங் குளத்திற் றாழ்ந்து வன்சிலை நோக்கி மண்ணும்
பெருவயி றார வுண்டு மிடத்திடம் பிடியா திந்நீர்
பருகிடு பருகு கென்னப் பதங்கொடு தாக்கி நின்றார். 15(832)

### ஈரச்சிலைகளை புழுதியில் போட்டு இழுக்க வைத்தல்

சுனைத்தடத் தழிந்த மேனி துவைத்தரும் பூழ்தி யாக்கி
யினத்தடக் காலிற் றாம்பா லிறுகுறப் பிணித்துப் பாலின்
வளத்துடை யவர்கைக் கீந்து வழியிடை யறிவி லார்சொல்
லனைத்துமே யிழுப்புண் டென்ன வவச்சிலை யீர்த்துப்
போந்தார். 16(833)

நிரைமணி மாட மோங்கு நெடுந்தெரு விடங்கள் பூழ்தித்
தரையிடம் வண்ண மாறத் தடச்சிலை யீழ்த்துப் போத
விரைசெறி குழலினாரு மேவுமா டவரு நோக்கிச்
சிரசிடை கரங்கள் வைத்துத் தெருமந்து புலம்பு வாரால்.
17(834)

### மக்கள் வருந்தி அஞ்சிப் புலம்பல்

நன்னெறி தெய்வ மென்பார் நலிவுற லென்கொ லென்பார்
இந்நெறி பயனே தென்பா ரெய்தலே திவணி னென்பார்
மன்னெறி யழியு மென்பார் மாயமோ வேறோ வென்பார்
தந்நெறி தெரியா நிற்பார் தாரைநீ ருகுத்து நிற்பார்.
18(835)



தந்திர மிதுகொ லென்பார் சாமியின் கோல மென்பார்
நந்தர மெஃதோ வென்பார் நலவிழி முகிழ்த்துப் போவார்
அந்தரக் கரும மென்பா ரடர்தருங் கோட்டி யென்பார்
மந்திரி மகனே யென்பார் மற்றொரு மகனன் றென்பார்.
19(836)

பவமது சூழு மென்பார் பண்ணிய வாசர்க் கென்பார்
நவமது போங்கா லென்பார் நமரழிந் திடுநா ளென்பா
ரவரவ ருழலா நிற்ப வாவணத் திடத்திற் சேர்த்திக்
குவிதர முன்னர் நின்றார் கொற்றமே நின்ற வள்ளல்.
20(837)

### கிழவன் தோன்றி சிலை ஒன்று விலைக்குக் கேட்டல்

கோலிய குரைப்புங் கோலுங் கொண்டதோர் கரமு
[மோர்கை
நாலியற் றிரைவு மேனி நடுக்கலும் விடுப்புங் கண்கள்
மாலொடு மயக்கஞ் சற்றே வாயினீ ரொழுக்குங் கூனு
மேலொடு முன்ன ருற்றான் விருத்தனே யருத்த மில்லான்.
21(838)

நிரைத்தபல் லழிந்த வாயி னீரொடுங் குழறா நின்று
விரைத்தடப் புயத்து வள்ளல் விரிமதி முகத்தை நோக்கித்
தரைத்தலத் திருந்த வண்ணத் தடந்தருந் தெய்வ
[மொன்றென்
பரத்தினி லளித்தல் வேண்டும் பதிவிலை யளிக்கு மென்றான்.
22(839)

### நிந்திக்கக் கொணர்ந்தேன், விற்கவன்று எனல்

வினவிய கிழவ னோக்கி விலைப்படும் பொருளிற் கின்ன
வனமலிச் சிலைகள் மாற்ற வந்தவ னல்ல னிந்தை
மனதுறச் செய்யா நின்றேன் வணங்குவா னல்ல னென்றார்
கனவினு மோர்மை மாறாக் கருத்துடை நயினா ரன்றே.
23(840)

### சிறுவர்களிடம் அன்பொழுகப் பேசி கிழவன் சிலை வாங்கல்

இன்னவா சகத்தின் கோமா னியன்முகம் விடுத்து மற்றும்
பின்னணி சிறுவர் தம்பாற் பிரியமுற் றடைந்து நன்கிற்
சொன்னதோர் பொருளு மீந்து துதித்துக்கை விடுத்து
[வண்ணந்
துன்னுமோர் சிலையை வாங்கித் தோளின்மேற் கிழவன்
[கொண்டான். 24(841)

தாங்காமல் கீழேவிழக் கழுத்தொடிந்த சிலை வேண்டாமெனல்

ஊன்றிய தடியிற் பற்றுங் கையின னுழன்று வண்ணந்
தான்றவச் சிலையுங் கொண்ட தாக்கினா லாக்கை யாடி
யேன்றிடா தடித்து வீழ்ந்தே யிதின்கழுத் திற்ற போதே
சான்றவ னெடுத்து மீண்டான் றண்முகச் சிறுவர் பாலே.
25(842)

வழக்காடி நின்ற வயோதிகன்

முதிர்ந்தவன் விருத்த னென்றோ முயற்சியற் றிருந்தா னென்றோ
வெதிர்ந்திடிற் றகர்ப்போ மென்றோ வேகிடிற் போது மென்றோ
பொதிந்திடு மூறு பட்டுப் பொருந்திலாத் தெய்வ மென்பால்
வதிந்திட விற்றி ரென்ன வழக்கொடு மிகலி நின்றான்.
26(843)

ஆசர் கிழவனுக்கெதிராய்த் தீர்ப்புக் கூறல்

திரைத்திடு மெய்யன் வன்பிற் சிறாரொடு மிகலா நிற்பத்
தரத்தொடு மிவர்க ளந்தத் தலம்விடுத் தாசர் பாலிற்
கரத்தொடும் பற்ற லோடுங் காரிய மறையக் கேட்டுப்
பரத்தொடு மொரூஉவச் செய்தான் பாவமே மருவா நின்றான். 27(844)

ஒரு கிழவி வந்து சிலை விலைக்குக் கேட்டல்

விடுவிடுத் துடல மேனி மிகுதிரை வாட்டிற் கால்கை
கடுகடுப் புடனே நெஞ்சங் கனைப்பொடு நடந்த காலைப்
படபடப் புடனே யூன்றுந் தடியினிற் பதுங்கி நொய்ய
மடிமடிப் புடைய பையின் விருத்தையென் றொருத்தி வந்தாள். 28(845)

காரியத் துறையி னிற்குங் கருத்தணி யிபுரு கீமே
சீரியத் துறையி னின்ற செறியலங் காரங் கொண்டு
பேரியற் றெய்வ மேன்மைப் பெலனுள தொன்று தேர்ந்து
நேரியல் விலையின் மாற்று மெனவவ ணிகழ்த்தி னாளே.
29(846)

சிலை ஒன்றே உண்டு, பிளந்தால் விறகாகும் எனல்

சுருங்கிய வலிப்பிற் பின்னுங் கன்னமூந் துணைவா யாடு
மருங்குறும் விருத்தை நோக்கி வண்ணவிச் சிறிய தன்று
பெருங்கனச் சிலையிற் கொண்டு பிளந்திடிற் குறைவி லாது
நெருங்குபு விறகு மன்னு மெனநபி நிகழ்த்தி னாரால்.
30(847)



எரித்தற்கு அன்று வணங்கிட என கிழவி கூறல்

நன்னபி முகத்தை நோக்கி நாயக வரிசை யுள்ளீ
ரின்னவித் தெய்வம் யானே வியல்பொடும் வாங்கு மேது
துன்னிய சுவையி னுண்டி சுல்லியிட் டெரித்தற் கன்று
மன்னிய கருத்தி னோடும் வணக்கமே புரிதற் கென்றாள்31(848)

தன் பழைய சிலை களவுபோனதென அவள் கூறல்

பூமலர் மிலைந்த மாலைப் பொன்னொடும் வயிரத் தோடு
மாமணி பதும ராக மற்றொடு மணிந்து செல்விக்
காமர்பட் டாடை யெல்லாங் கனக்குறத் தெய்வ மொன்றெ
னாமமே மருது வைத்து நாட்டமே யிணைக்கி நின்றேன்.
32(849)

அருமையி னிருந்த தெய்வ மதனையே வழிபார்த் துற்றுக்
கருமையி னெவரோ புன்மைக் களவது கொண்டு போந்தா
னிருமையுந் தகையு மென்ற னியல்புமே குறைந்த வாற்றா
லொருமையிற் றெய்வ மொன்று வேண்டியே யுவப்பின் வந்தேன். 33(850)

கருத்தொடு விலையிற் கொண்டு கண்ணகங் களிப்ப நன்கிற்
பொருத்தமுற் றிறைஞ்சி மேன்மைப் போற்றலே கொண்டே
லருத்தமுற் றப்பாற் போந்த வருந்துகிற் பலவு மீளத் [னாகி
திருத்தமுற் றருளு மென்னச் சிந்தையின் மகிழ்ந்து வந்தேன்.
34(851)

தன்னைக் காக்கத் திராணியற்றது அச்சிலை எனல்

என்றவண் முகத்தை நோக்கி யிசைதரு மவ்வாய் நாளுந்
துன்றரும் வணக்கம் பற்றுந் துதிதருந் தெய்வம் பூண்ட
தன்றுகிற் பலவும் பேணாத் தகையெவ னவருஞ் சாரஞ்
சென்றழி வுறுமோ வென்னத் திருநபி மறுத்துஞ் சொல்வார்.
35(852)

நபி கேட்ப, தான் ஏதும் பயன் காணவில்லை என கிழவி கூறல்

அணிதருங் கருத்துட் கொண்டு வணக்கமே யரிதிற் செய்யுங்
கணிதருங் காலம் போந்த கணக்குண்டோ வேறும் பற்றும்
பிணிதருந் தெய்வ முண்டோ விருத்தியே பிரித்தி யென்றார்
மணிதரு நயினார் பூத்த மதிமுக வள்ள லன்றே. 36(853)

எங்களின் குலத்துக் கேய்ந்த விருந்தெய்வ மிஃது மற்றுந்
துங்கமுற் றுயர்ந்த மன்னர் துணைப்பதம் விளக்கா நிற்பச்
சங்கையி னுமுறா தென்னுந் தலைவனு மளவில் கால
மங்கிடா திறைஞ்சா நின்றேன் மனத்தொடு மென்று சொற்றாள். 37(854)

வரைவின்றி நின்ற காலம் வணக்கமே முயற்சி யாகி
யொருவனன் றிருவர் கொண்டு முளத்தினீ நினைத்த வண்ணந்
தருபய னுளவோ வென்முர் தவப்பய னுடையீ ரொன்று
மருபய னறியேன் கேட்ட வாயுமே சலித்த தென்முள். 38(855)

ஏக இறைவனை நம்பி வணங்க நபி கூறல்

மெய்யுறு முறுப்பின் கூற்றால் வீறெடும் வணக்கங் கொண்டுங்
கையுறும் பலனில் லாதாற் கடும்பவக் கேடு சுற்றும்
பொய்யுறுந் தொழில்க ணீக்கும் புந்தியிற் றெளிக்கு மேன்மைச்
செய்யுறு மொருவன் வல்லத் தெய்வம்யாம் விளக்குங் கொல்லோ. 39(856)

அன்னநா யகனை நெஞ்சி னன்பொடும் வணங்கா நின்று
னின்னிடந் தொடருந் துன்பம் நேர்ந்திடா தகலும் வண்ணப்
பொன்னவ மணியின் சோதி பொற்பதி நன்கி னெய்து
மின்னருள் பெறுவா யென்று ரிசைவளர் நபினு ரன்றே. 40(857)

கிழவி நேர்வழிப் படலும், அச்செய்தி பரவலும்

வள்ளனன் னபியை நோக்கி வரிசையீர் நுமது செஞ்சொ
லுள்ளதே லெடுத்த தெய்வ மியாவினு முயர்ந்த மேன்மை
நள்ளுறை நாத னன்ன நயன்பெறத் தோற்று நும்மிற்
றள்ளுறுப் பெரியோ னென்முள் சார்பினிற் பெருமை பூண்டாள். 41(858)

வளம்பெறு நுந்தம் வாய்மை வண்மையி னுண்மை [யென்னக்
குளம்பெறும் வாயி னவ்வைக் கூறினள் கூற லோடு
முளம்பெறு மொருவ னியாரு மொப்பெடுத் துரைக்கக் கூடா
தளந்திடாச் சூழ்ச்சன் மிக்கோ னவனென விளக்கி னுரால். 42(859)

இருமனத் துடையா ளின்ன வாசகத் திசைந்து நின்றே
யொருமனத் துடையா ளாகி யுவப்பொடும் போத லுற்முள்
பெருமனத் துடைய வள்ள லன்பொடும் பெரிதி னுற்முர்
திருமனத் தெழுந்த வாய்மை செறிநகர் படர்ந்த தன்றே. 43(860)

விழைவாடிய படலம் முற்றிற்று.
ஆகப் படலம் 15-க்கு கூடிய திருவிருத்தம் 860.

# 16. சிறையிடு படலம்

நமுறாது ஆணவங் கொண்டிருத்தல்

கலிநிலைத்துறை

பொன்ன நன்மணி துலங்கிய பொற்புயத் திரத்தின்
மன்னர் மன்னவன் புன்மையங் கருத்தினன் வளங்கொண்
மின்னு மாசனத் தியாவரும் விருப்பொடும் சூழத்
தன்னி னேக்கொடுந் தகையொடு மதத்தொடு மிருந்தான். 1(861)

நபியின் பெருமை பொலிந்தது

தெரிந்த நூன்முறை மந்திரர் திறத்தயில் வீரர்
பரிந்து பாங்கொடு பந்தனை புரியவும் பாரிற்
றிரிந்து நாடொறு மியன்முறை செப்புவர் செப்பப்
புரிந்த நாயகன் கருணையார் தகுதியும் பொலிந்த. 2(862)

நபியின் போக்கு அறிந்து மன்னனின் அச்சம்

வன்றி றத்தருஞ் சிலையது மாற்றிய முறையும்
புன்றி றத்துள விருத்தையும் புகழ்நிலைத் ததுவு
முன்றி றத்தநன் னபியவர் முயற்சியும் விரித்தார்
தன்றி றத்துடை மன்னவன் கேட்டுளந் தழன்முன். 3(863)

அவன் ஏவியபடி நபி கொணரப்படுதல்

கனன்று காவலன் முன்னுறுங் கதிரயில் வலத்தார்
சினந்த பேரொடும் போந்தவன் செயலறப் பிடித்து
மனந்த யங்குறக் கொணர்கென வறைந்தனன் வாய்மை
நனந்த பேரகன் முண்டகை நபியினைக் கண்டார். 4(864)

வஞ்ச நெஞ்சினர் மருங்கினில் வளைந்துநன் னபியைப்
புஞ்ச நஞ்சுறை மன்னவன் பொலிமுகத் தெதிரே
மஞ்சி னஞ்சிறு முடியென வார்த்துவந் தடரா
வெஞ்சி னஞ்செறி புலியென விடுத்தனர் சூழ்ந்தே. 5(865)

உன் ஏகநாயன் செய்யக் கூடியது என்ன?

முன்ன ணித்துறு நன்னபி திருமுக நோக்கி
யென்னி லத்தினு மியாவர்தம் மிடத்தினு மெழில்சேர்
மன்ன லத்துடை தெய்வங்க ணகைத்தலு மதியா
நின்னி டத்தொரு நாயனுண் டெனநிகழ்த் தினையால். 6(866)

ஒருவ னுண்டென வேறென வுரைக்குநின் னுரித்தாய்
மருவி நின்றவன் வல்லமை மாட்சியிற் றிறத்த
லருமை யாம்வினை யெவ்வினை யியற்றுவ னவன்பால்
கருமை யாகிய தெவனெனக் காவலன் கேட்டான். 7(867)

ஆக்கவும் அழிக்கவும் வல்லவன் என் நாயன் எனல்

திருத்து வேதமும் பற்பொரு ளறிவினுந் தெளியா
தருத்த நாயக னருமைய னடர்படுந் தோற்றம்
பொருத்துஞ் சீவனி னிறந்திடா திறந்திடப் புகழின்
குருத்துப் போன்றவை மிழைத்திடச் செய்பவன்
குணத்தான். 8(868)

அவ்வித சக்தி எனக்கு மட்டுமே உண்டு

என்று நன்னபி யிசைத்தலு மிசைதராக் கயவ
னன்று நன்றவை நானிலத் துடையவர் நனியே
துன்றி டும்படி யிருவினைச் சுயத்தினி லியானே
யன்றி வேறிலை யியற்றுவ லெனவறைந் தனனே. 9(869)

எப்படிச் செய்வாய் விளக்கு என நபி கேட்டல்

மன்னும் வஞ்சக னேக்கியம் மாநிலந் தன்னி
னென்ன வாறிறந் திடுந்திற னிறந்தவை மீண்டு
மன்ன வாறெழுந் துறும்படி யியற்றுவை யதனை
யின்ன வாறென விளக்குதி யென்றன ரிறசூல். 10(870)

கொலைஞனை விடுவிப்பேன் பழியிலாதவனையும்
படுகொலை செய்வேன்

எனக்கு ளாஞ்சிறை சாலையி னிடுக்கணுற் றவரிற்
கனக்கும் பாதகக் கொலையது கண்டவ னுயி
ரினக்கு ழாங்கண்முன் னிறப்பவ னிவனென விசைத்து
மனக்கு நேரொடு மாயுளும் வகுக்குயான் கொன்னே.
11(871)

நீர ணிந்தவிப் புவியினி னிலைவினை யெவையும்
பார ணிந்தில னுயினப் பழியிலான் றன்னைச்
சூர ணிந்துண வுயிர்விடத் துணித்திடுந் தொழிலுந்
தார ணிந்தவ னியானல தில்லெனச் சாற்றுன். 12(872)

அதுவும் என் இறைவன் நாடியிருந்தால் மட்டுமே நடக்கும்

செறியும் பற்பல வுறுப்பினிற் பழுதுறச் செய்து
பறியு மாவியத் தொழிலினை நீமறை பயிலா
நெறியி னென்னிறை நிருமித்த போதினும் வடுவுங்
குறியு மின்றியே சாம்படி முடித்திடுங் குணத்தான். 13(873)



கதிரவனை நடத்துபவனும் அவனே

இறந்த வாக்கைமண் ணிலத்திடை யழிந்ததே யெனினும்
மிறந்த வாக்கையின் றிறத்தொடும் பெரிதுற வாவி
நிறைந்தி டும்படி பிழைத்திடச் செய்பவ னெடுவா
னுறைந்த செங்கதி ருதித்துமே லோட்டுவ னவனே. 14(874)

முடிந்தால் நீ அதை எதிர்த் திசையில் நடத்திக்காட்டு

'குலவுங் காரண மஃதெனக் குடதிசை போந்த
விலகு செங்கதிர் கீட்டிசை மீட்டியுன் றிறமும்
வலமுங் காண்குவ மன்னவர் மன்னனீ யென்முர்
நிலவும் வெட்கிய மதிமுக நேரலர்க் கரியே. 15(875)

நான் யாரென அறிவாயா?

வரிசை மிக்குறுங் காரண வள்ளலை நோக்கி
யரசின் மிக்குறுந் திறத்தின னுடையல ருயிரை
யுரசும் வேல்வல னியானென வுணர்ந்தனை நீயென்
றிரச மற்றபுன் சொல்லொடும் வினவின னேந்தல். 16(876)

காட்டில் இடைச்சியொடு கன்ஆனின்
வலுப்புணர்ச்சியில் கருவானுய்!

கேட்ட மன்னவன் கிளர்முகங் கனலெறி வதுபோற்
காட்டிறுச் சியைக் கைமையிற் கடிதினிற் பிடித்து
வேட்டை யுற்றவன் புணர்தலின் மேவினன் புன்மைக்
கூட்ட முற்றகன் ருன்றருங் கோளக னீயே. 17(877)

இபுலீசினுல் வழிகெடுக்கப்பட்டு நற்பேறுகள் இழந்தவன் நீ

முன்னர் பொற்பதி தந்தைதாய் முயனிலை கலைத்துப்
பின்னர் பாவியென் றுறுமிபு லீசுபே தகத்தின்
மன்னு நின்குழு மற்றுளர் மருடர மயக்கந்
துன்ன நின்றுளங் கலங்கினை நயந்தொலைத் தனையே. 18(878)

வாரி யாடையி னுலகுறை மானிடர் தம்மிற்
பேரி யானளிப் பவனுமியான் பிறப்படுத் திடுகுஞ்
சீரி யானிறை யவனுமியா னெனச்செய லழிந்து
பூரி யானென நின்றனை நீயெனப் புகன்ருர். 19(879)

கோபத்தினுல் கொதித்த மன்னன் நபியைச்
சிறையிடச் சொல்லல்

எங்க ளுயக ருரைத்தலு மெரியழ லுருகும்
வங்க மேயிரு செவிவழி புகுந்தன மனத்துட்
பொங்கு வெஞ்சினங் கொதிதர விழிபுரை வழிந்து
தங்கு வெம்புகை யெழுந்தது சோரியின் ருரை. 20(880)

உரம்பி றங்கிய புயமயி ருடலெலாம் பிறங்கத்
தரம்பி றங்கிய வெயிற்றின முகந்தழற் பிறங்கக்
கரம்பி சைந்தகங் கடுகடுத் ததிகநெட் டுயிர்த்துப்
பரம்பி றங்கயின் மறவரைப் பார்த்தனன் வயவன். 21(881)

வீரரீ சுற்றுற மற்றவர் சுற்றுற வெறுக்குங்
கோர முற்றுறு மாண்டகை யென்பதுங் குறியா
தார முற்றிவ ணுறைந்திடு மஞ்சுத லற்றேன்
சூர மற்றிடப் பற்றுதிர் சுடுஞ்சின முற்ற. 22(882)

நீட்டி நின்றவன் கரங்களை நெடுங்கழுத் திறுகப்
பூட்டி வன்கயி றொன்றுறப் பொருத்திறக் கட்டித்
தாட்டி றத்தையுங் கொடுந்தளை வருந்துறத் தளைந்துக்
கூட்டி வெஞ்சிறை யிடுமினென் றிசைத்தனன்
கொடியோன். 23(883)

நபியைக் கட்டி சிறைக்கிழுத்தேகினர்

மஞ்சி டித்திடு மிடியென வன்மனத் துரப்பி
வெஞ்சி னத்தவர் புடைபரந் தரியமே லவர்தங்
கஞ்ச மொத்தசெங் கரங்கழுத் திறுக்கியுங் கால்க
ளஞ்ச லுற்றிடத் தளைதளைந் தடர்த்துப்போ யினரால்.
24(884)

நபியின் தாய் அவுசா செய்தியறிதல்

மனக்க டுந்திற மறவர்கள் சூழ்பவர் மதிக்கு
மினக்கு ழூஉபல வாய்திறந் திரங்கிட வுலக
மெணக்கும் நாயகர் தமைக்கொடுஞ் சிறையிடு மறைமுஞ்
சினக்கு டன்படற் றுயவு சாதெரிந் தனளே. 25(885)

நபியை வழியில் கண்ட தாய் புத்திமதி கூறல்

உள்ள மீதினி னினைவின்றி மெழுகென வுருகிப்
பள்ள நீரெனத் ததும்பிய விழிவழி பனித்துக்
கள்ள ருமனக் கயவரிற் கொடுமையுங் கணித்து
வள்ள லாகிய நபியொடு மன்பொடும் வழங்கும். 26(886)

நீத வான்மதி வலியின னிருபர்க ணிருபன்
போத வானியற் றண்டமே புரிதடத் திறத்தின்
காத வானென நாடொறு நின்கருத் தறியத்
தீத லாதுரை யன்பொடுந் தெரித்திலென் கொல்லே.27(887)



நவிலு நின்னுரை நோக்கிடி னலிவுறு மெனவு
மவிரும் பொன்முடி மன்னவற் கஞ்சிடு கெனவுந்
தவிரு மித்தொழி லென்னவுஞ் சாற்றிலென் கொல்லே
குவியு மென்வயின் குடிவருங் கோமழ வென்றாள். 28(888)

என் இறைவனின் பெருமையை பின்னர் காண்பீர்
என நபி கூறல்

என்னை யன்பினிற் காப்புடை யிறையவன் மகிமைப்
பின்னை யன்பினிற் காண்பைநின் பீடது மல்க
வின்னை யென்னைநீ யுரைத்திடா நின்றையிவ் வாய்மை
யன்னைஇ வாய்முகிழ்த் திடுகவென் றறைந்தனர் நபியே.
29(889)

சிறையதிபனிடம் சேர்ப்பிக்கப்பட்ட நபி

பின்னர் வஞ்சக ரார்ப்பினிற் பீடையிற் கொடிய
முன்னர் நின்றவெஞ் சாலையின் முரணொடும் புகுத்தி
யன்ன வாயிலிற் காப்புடை யதிபன்பா லளித்தார்
துன்னுங் காரறை புகுந்தனர் சுடரெனு நபியே. 30(890)

சிறையதிபன் நபியின் தோற்றம் கண்டு மகிழல்

நிறையுந் தண்ணளி விழிகளு நெடுஞ்சரத் தியல்புங்
குறையும் பாவநற் றெரிசன மதிமுகக் குறிப்பு
மறையு மாமொழி மதுரமு மாதவர் நோக்கிச்
சிறையின் சாலையிற் சேவகர்க் கதிபதி மகிழ்ந்தான்.31(891)

அவன் காட்டிய அன்பால் நபி சுகம்பெற சிறையிருத்தல்

மதிக்கு நாயகர் வடிவமே வளந்தரும் போதாய்ப்
பதிக்கு நின்றவன் முகமுகம் பதுமமா யலரக்
கதிக்கு நன்குடன் கருணையே கணித்திடற் கணித்தான்
றுதிக்கும் வல்லவ னபியவண் சுகம்பெற விருந்தார்.32(892)

இறைவன் உத்தரவால் சிபுறீல் சிறைக்குள் வரல்

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

புவிமுத லெவையும் போற்றும் பொருவருக் கருணை வல்லோ
னவன்ரு ளுத்த ரத்தி னழகுலாச் சிறையின் மிக்க
வவிரொளி சிபுறீ யீலவ் வடுஞ்சிறை சாலை புக்கி
நபியிடந் தனது மேன்மை நயம்பெறுஞ் சலாஞ்சொன்
னாரால். 33(893)

### இறைவனின் செய்தியை சிபுறீல் எடுத்தியம்பல்

அரியமெய்ப் பொருளிற் கெட்டா தாண்டகை நுமக்கு வெற்றி
விரிதருஞ் சலாமுஞ் சொல்லி வேண்டிய தகுதி யாவும்
பரிவுற வருள்க வென்னப் பண்புடன் விடுத்தா னென்று
கருமையிற் செங்கண் வானோர் கருத்தனார் கழறு கின்றார்.
34(894)

கொடியவர் செய்கை மிக்கக் கோளுடை யேனு முள்ளம்
படிதரும் பொறுமை நன்கே பதித்திடி லதற்கா மேன்மை
நெடிதுறு மாத லானே நீருமெய் யுள்ளந் துன்பா
திடிபடுஞ் சொல்லிற் பேணு மிருதய நிலைமை மன்னே.
35(895)

உள்ளகந் தயக்கங் கொள்ளா துணர்வொடு நிலைத்து நிற்க
வள்ளலே கொடிய னோவின் மருஞ்சிறை சாலைத் துன்பந்
தள்ளியே வெளியின் வஞ்சன் றன்னையும் வெல்லு மாட்சி
நள்ளுறை தகுதி யாவு நலம்பெற வருள்வே னென்றான்.
36(896)

### சுவன நாட்டு உடையும், உண்டியும் அளித்தல்

இறையவ னுரைத்த வாய்மை யினையன விளக்கி வண்ண
நிறைதருந் துறக்க நாட்டி னிவர்தருஞ் சுந்து சென்னு
மறைதரும் பட்டினாடை யணிபெற விரித்துப் பின்னர்க்
குறைவிலாப் பசும்பட் டாடைக் குணங்கொள வுடுத்தி னாரே.
37(897)

பனுவலே செய்வோன் றுன்பம் பற்றறுஞ் சிந்தை போன்று
மனுநெறி புரிக பீபு முகம்மதின் கருத்துப் போன்று
மினியதூ யாடை மீதி லெழின்மணிச் சுடரிற் பூத்த
நனிபுக ழுலவுங் கோமா னபியவ ரிருப்பச் செய்தார்.
38(898)

புதுமண மருது தூயப் புகழவர் மேன்மை போன்று
மதிவிதச் சுவனநாட்டி னுண்டியு மரிய வின்ப
மதுரமே யொழுகுந் தீம்பா கமுதமு மணிப்பொற் றட்டி
னிதமுற நபிமுன் வைத்தே சிபுரியீ லினைய சொல்வார்.
39(899)

### சிபுறீல் கூறிய நல்லுரைகள்

தன்னுடற் படுத்தும் புன்மை தனிலகந் தொடர்ந் திடாது
நன்னிலை கொண்டு மிக்க ஞானமே மோனம் பற்றி
யெந்நிலை கொண்ட பேர்க்கு மிருமையும் பயத்த வாதன்
முன்னிலை பொறையின் மாட்சி முயற்சியே வேண்டு மன்னே.
40(900)



வன்மமே மனத்திற் கொண்ட வஞ்சகர் மாறு பாட்டிற்
புன்மதி யாளு கின்றோர் புடைத்திடுங் கொடுமைக் கெல்லாந்
தன்மமே கோலி நின்றார் தவம்பெறு நபியாம் நூகு
முன்மகி தலத்தின் வல்லோன் முறைமையே சிறந்த மன்னே.
41(901)

சோரியே மாரி யென்னச் சொரிதர வடித்த போதுஞ்
சீரியல் கூதென் றோதுந் திறனபி தானும் வன்பரி
போரினுஞ் சாலி கென்னும் புனிதரும் பொறையின் மாட்சி
நேரிலை வியந்து நின்றார் நியதியே வியந்த கோவே. 42(902)

முன்னுறு நபிமார் கொண்ட முரணுறுந் துன்புக் கெல்லாந்
தன்னுறும் பொறையே மேன்மைத் தவத்தொடு நின்றார் நீரு
மன்னுறுந் தகுதி யேய்தல் வரிசையிற் சிறந்த தாமா
னன்னயத் துள்ளங் காத்த னவநிதங் காக்கு மன்னே. 43(903)

அறிவினிற் குணத்தின் மேன்மை யாற்றினி னன்மை தன்னி
னெறிபடு முன்னோர்க் கீந்த நேர்மையி னிரட்டி யாகக்
குறிபடா வொருவ னாயக் கொற்றவ னன்பின் மிக்கால்
செறிதர வருளிச் செய்தான் செழுமனங் கொண்ட
கோவே. 44(904)

### இரவெலாம் இறைவணக்கமும் பகலெல்லாம் சத்தியப் பிரசாரமும்

இனையன மேன்மை கூறி யெழிறருஞ் சிபுரி யீலுந்
தனதுறுந் தானம் போந்தார் தவத்தினிற் சிறந்த கோமான்
மனநிலை மகிழ்ச்சி யோடு மவன்றனை யின்றி நன்கிற்
றனிநிலை வணக்கங் கொண்டார் தகுமிராக் கால மன்றே.
45(905)

வானுறு முடுவுந் தூய வண்ணிலா வொளியுஞ் செய்ய
பானுவின் கதிரு மொவ்வாப் பருமணிச் சுடரின் மிக்கத்
தானவன் கருணை பூத்தத் தண்ணொளி வொன்றும் வள்ளல்
கானலர் சிரமாட் டுற்றுக் ககனள விலங்கா நிற்கும்
46(906)

சொல்லருந் துறக்க நாட்டிற் றாயமு தினிதி னுண்டு
நல்லிய லுளத்தி னன்பா னகுமொளி விரவி னெல்லாம்
புல்லிய வணக்கத் தோடும் புகழொடு நிலைத்துப் போதி
னில்லுறை யவர்கட் கேற்ப விறைநல முரையா நிற்பார்.
47(907)

காரணப் பொருளா யாருங் கணித்திடா வல்ல மேன்மை
யாரணப் பொருளிற் கெட்டா தரும்பொரு ளாகி யெங்கும்
பூரணப் பொருளாய் நின்ற வொருவனைப் புந்தி கொண்டார்
வாரணப் புவியி லியாவும் வழிகொண்டு நிலைக்கு மன்றே.
48(908)

கருத்தினிற் படர்ந்த பன்மை கலைப்பிணி யெழுந்த நாட்டப்
பொருத்தமே யொதுக்கி மாறாப் புகழினல் வணக்கங் கொள்ளா
ரருத்தமே யின்றி யாரு மடர்தர நகைப்ப வெந்தீ
யுருத்தவன் னரக மேய்ந்த யுறுவிற குடன்பட் டாரே.
49(909)

தகையுறு மிறைவ னென்னத் தங்கத்தின் முதல மற்றுந்
தொகையுறு முருவம் பற்றித் துதித்துநின் றதனை யொன்று
மிகையின்றி மிடியு மின்றி வீண்டொழிற் செய்த பேர்கள்
பகையொன்றி நரகச் செந்தீ நாவொடும் பயில்வ ரன்றே. 50(910)

வேறின்றி யொருவ னென்று விளங்கிய வினையே செய்து
கூறின்றி நடக்கை யாவுங் கொற்றமே பெற்றி டார்க
ளாறின்றி யடர்ந்த கானத் தரும்விலங் கிடத்திற் பட்ட
பேறென்றிக் கும்பி யம்பிப் பிதிர்ந்துடைந் தாழ்வ ரன்றே. 51(911)

வஞ்சமே செய்த கோல வழியினை யொருவி நேர்மை
நெஞ்சமே கொண்ட வன்பர் நிறைபுகழ் புகழ்ந்த தாலோ
நஞ்சமே போக்குந்தூய நல்லரு ளுளும் பெற்றுக்
கஞ்சமே முகத்தின் மின்னார் கலந்தணி கதிகொள் வாரே.
52(912)

வறிதினர் வழியி லார்மெய் வாட்டினர் குருட்டி னரும்
பிறிதிலார் நோக்கே நோக்கே பெறும்படி தான மேன்மை
யுறுதியார் முதலிற் கோடி யுதவுமு திபத்தின் செய்கை
பெறுதிரே லழகு பூத்தப் பேருல கிருந்தீர் மன்னே. 53(913)

மனத்துறு மதிப்பினின்ன வண்மையி னின்றார் சொர்க்கந்
தனைத்தன துறுதி கொள்வா ரெனவிரு வினையின் றன்மை
யினைத்தெனச் சிறையினர்க்கே யெடுத்தெடுத் தியம்பா நின்றா
ரனைத்துல குயர்த்தும் வல்லோ னருணபி யிபுறா கீமே.
54(914)

சிறையிடுபடல முற்றிற்று.
ஆகப்படலம் 16-க்கு திருவிருத்தம் 914

# 17. இறந்தவரெழுந்துயர் படலம்

### சிறையில் அறிவிலி ஒருவன் கேட்ட கேள்வி

எழுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

வன்மனக் கயவ னிடுஞ்சிறை சாலை
வளம்பெறு நந்நபி யொளிவின்
முன்மதி விரிக்கு மெழின்முனி வள்ளன்
முயற்சியின் வணக்கமே யிணங்கி
நன்மதி பிறக்கும் படியவ னறிவே
நவிற்றிடுங் காலையி னொருவன்
புன்மனக் கடியோன் விறலொடு மெழுந்து
புந்தியிற் களிப்பொடும் புகல்வான். 1(915)

### உம் இறைவன் சிறையினின்று விடுவிக்க வல்லவன் அல்லனோ?

தகைதரும் பெருமை வளரிபு றாகீந்
தானவ னொருவனைப் பொருளின்
வகைதரு மென்ற றுயனென் றவனின்
வளமையே யளவிடா திவனின்
மிகைதர வெவர்க்கு நகைதர வுரைத்து
விளக்கலே தொழிலென நின்றீர்
பகைதரு மின்ன சிறைவிடுத் தும்மைப்
படுத்துவ னல்லனோ வென்றான். 2(916)

### பொறுமையால் பேறு பெறலே என்விருப்பம்

சொற்றவ னுக்கிக் கேட்டியிச் சிறையைத்
தொலைத்திட லவற்கரி தன்று
வெற்றியுந் தேற்ற மேன்மையுந் தகைய
வேண்டியே யெனக்குமுன் னிருந்த
நற்றவ நபிமார் கொண்டிடும் பொறையே
நயனுற யானுமுள் ளுவந்து
பற்றுத லெடுத்தேன் பற்பல தவங்கள்
பத்தியின் பாரரை யன்றோ. 3(917)

**மதுர உணவு கொணர்ந்தும்மை மகிழ்விப்பவர் யாரோ?**

அரியவல் லவன்பா லினையவிச் சிறையை
    யகற்றுதல் வேண்டினே னென்னி
னுரியவ ரெவர்க்குந் தோற்றிடா துடனே
    யொருஉநிலைப் படுத்துவ னென்னத்
தெரியநன் னபியே யிசைத்திட மகிழ்ந்தான்
    செறிதருங் குழுவின்மற் றொருவன்
பெரியவர்க் குவந்த கருணைய ரென்னப்
    பிரியமுற் றெழுந்துநின் றறைவான். 4(918)

வளநனி யுடைய மாதவ இவணின்
    வந்தநாட் டொடுத்தொரு போதுந்
தளர்நனி யறியே மகிழ்ச்சியே கண்டேந்
    தாவறுஞ் சுவைமணத் துண்டிக்
குளநனி மதுர பாநமு முன்னர்
    குறைவிலா திருப்பவுந் தெரிந்தே
மிளநனி முதியோ ரொருவரு மிங்ங
    னெய்தவு மறிகிலேன் மன்னே. 5(919)

**எவரையும் படைத்துக் காக்கும் இறைவனே தருகிறான்**

இன்னமு திவணி னுவந்தளிப் பவர்கள்
    யாவரியாங் குளரென வினவி
மன்னவர் மன்னர் வரிசையிற் சிறந்த
    மகத்துவ நன்னபி நோக்கி
நின்னையு மென்னை யாரையும் படைத்து
    நிலைதரு மென்றனு யகனே
மன்னிய கருணை தன்னொடு மேன்மை
    வகுத்திடற் கீந்தன னென்றார். 6(920)

**அறபி இளவரசன் அண்ணலிடம் உரைத்தது**

மீண்டுமக் கொடிய சிறையுறை பவரில்
    வேறுமோ ராண்டகை யெழுந்து
தேண்டருந் தவத்தின் மேற்றுறை யுலவுஞ்
    செம்மலே யம்புய நறுந்தேன்



பூண்டமண் டுகஞ் சிதறிய வனஞ்சூழ்
    பொலிகின்ற செல்வமே மலிந்த
காண்டரு மறபி தேயத்தி னுள்ளார்
    காரெழுங் காவலன் றோன்றல். 7(921)

**என் மூன்று சகோதரர் மூவ்வேறு சிறைகளில்**

என்னுடன் பிறந்தார் மூவருண் டவரு
    மிருந்திற வீரமே யுடையா
ரன்னவ ருடனே யானுநற் செல்வத்
    தாக்கமே கொண்டுறுங் காலம்
புன்னிலை யிருந்து நன்னிலை மறந்த
    பூபதி யெனுநுமு றாது
மன்னிய சினங்கொண் டெமரையும் பிடித்து
    வளநக ரதனையு மெடுத்தான். 8(922)

நரபதி குமரர் நால்வரி னொருவர்
    நனிபொழு தெழுந்திசை மற்றோர்
எரிகதி ரிறங்குந் திசையின மொருவ
    ரெமனெனும் பெருந்திசை யென்னை
விரிகதி ருதைய நாயக வரசே
    வினையினிச் சிறையிடை யிருப்பப்
பரிவருந் தளையிற் காவலிற் றிறத்திற்
    படுத்தினன் யாரையு மன்னே. 9(923)

**அம்மூவரையும் உம்மிறைவன் இங்கு வரச்செய்வானா?**

திசைதிசை சிதறு மூவரு மென்பாற்
    செறிதர வன்னவ ருடனே
பசைதரக் கண்டு நன்மொழி யுரைக்கும்
    படியிவ ணழைத்திடுந் தகைய
மிசைதருந் திறமை நும்மிடத் திருந்த
    மேலவ னுளன்கொலோ வென்ன
விசையவிற் படையான் வினவலு நபியு
    மிகையொடுங் கூறுவ ரன்றே. 10(924)

**இயலும் என நம்பிக்கை கொள்வாய்**

மூவருந் தெரிவா னுட்டமே யுளதேல்
    முயற்சியா லுறுதியுண் டாகி
னீவழங் கிடுமத் திறமையு மேலு
    நிலைதருந் தகுதியி னிறைவன்

பாவிய புகழிற் பண்பொடு மிரந்து
பரிவொடுங் கேட்டிவ னழைக்கும்
பூவுள ரெவரு மரிதரி தென்னப்
புந்தியிற் பூப்பயா மென்றார். 11(925)

நபிநாதர் தொழுதிரத்தல்

பூந்தடத் தறபி யருந்திசை யதிபன்
புந்தியன் மகிழ்ந்துடல் களிப்ப
வேந்தலை யியற்றுங் காரணங் காண்டு
மென்னலு நன்னபி யுவந்து
தேந்தரு மதுர நீரினி லுலுவுஞ்
சிறப்பொடுஞ் செய்தணி யுடனே
மாந்தரி னுப்ப ணிரண்டிறக் காத்தும்
வணங்கிவண் கரமுயர்த் தினரே. 12(926)

காரணப் பொருளே யளவிடற் கரிய
காட்சியி னுலவுநா யகனே
வாரணப் புவியி னிவனொடும் பிறந்த
வளங்கொளுந் திறத்தினர் காப்பத்
தாரணத் திருவர் குடகுண திசையார்
தகையொடு மிவ்விடத் தெவரும்
பூரணத் தாக்கம் பெறவருள் கென்னப்
புனிதநன் னபியிரந் தனரே. 13(927)

இரு சகோதரர் இறையருளால் வந்து சேரல்

வரிசையிற் சிறந்த நாயகர் பொருட்டால்
வல்லவன் கருணையே புரிய
வரிசிகிக் கனலி யெழுபடு திசையின்
வளைந்தணி காப்பையுங் கடந்து
பிரிசமுற் றுள்ளந் தேற்றமும் பிறங்கப்
பெருமையி னிருவருங் காயப்
பிரிவழி யூடே சிறையறை யிறங்கிப்
பேதக மின்றிநின் றனரால். 14(928)

இளவரசனின் மகிழ்ச்சியும் பிற கைதிகள் புகழ்தலும்

கண்களே முதல வினவுறுப் பொன்றுங்
களங்கிலா தழகொழு கிடலும்
வண்களே சிறந்தவ் விருவரு நிற்ப
மதித்துடன் பிறந்தவ னவணிற்



றிண்களே யுளத்தின் மற்றவர்கண்டு
திகைத்தரும் புதுமையென் றுணர்ந்து
மண்களே புரப்போ ரியாரையுங் காக்கு
மாதவ ரிஃதெனப் புகழ்ந்தார். 15(929)

செய்தியறிந்த நமுறூது வந்தோரை வரவழைத்தல்

இவ்விடத் தெழுந்த காரண மனைத்து
மியல்பொடு மறிந்தனன் கசடத்
தெவ்வமுள் ளுறைந்த வயனுமு றூதன்
சேவகர் சிலர்விழித் தவரை
யவ்விடம் பெயர்த்திங் கடைதிரென் றனுப்ப
வயிலணி வலத்தினர் சிறைவீ
டொவ்வறப் புகுந்து புதியவர் தம்மை
யுரனிடங் கொண்டுவந் தனரே. 16(930)

உம்மை விடுவித்து இங்கு கொணர்ந்தது யார்?

முன்னணித் துற்ற விருவரை நோக்கி
முற்றிய விறற்படு நீவிர்
வன்னவக் கரும்பொற் கால்கரத் தளைகள்
வளைபல நொறுங்கிடச் செய்துந்
துன்னிய காப்பி னிடைவெளிப் படுத்தித்
தொலைவிலாத் திசைபல தொலைத்துப்
புன்னலி சிறையிற் கொணர்ந்தவர் யாவ
ரென்றனன் பொங்கழற் கண்ணான். 17(931)

நபியின் இறைஞ்சலை ஏற்ற இறைவனின் ஆணையால் எனல்

அருமையிற் படைத்து நல்லுண வளிக்கு
மாண்டகை யொருவனெம் மரசன்
பெருமையிற் சிறந்த நபியிபு றாகீம்
பிரியமுற் றிரந்திடு மியல்பாற்
கருமையிற் றளைகள் பொடிபடச் செய்து
காரணத் தொடுமெம ரெம்பிக்
குரிமையி னிவணிற் கூட்டின னென்று
ரொருவழி யிருவரு மன்றே. 18(932)

ஆசறு மகனின் மந்திரவித்தை இது என ஒருவன் உரைத்தல்

இவருரை மொழிகேட் டரசணி யுள்ளத்
தெழுந்தட ராய்தலை கொள்ளப்
பவமுறு நுமுறூ தப்பொழு தவனைப்
பற்றிய பெயர்களி னொருவன்

கவருறுஞ் சூழ்ச்சக் கருத்துடை யாசர்
கான்முளை யறிந்தமந் திரத்தின்
செவிதரும் விந்தை யிஃதென வுரைத்தான்
சிந்தையிற் சிந்தனை யொழியான். 19(933)

மந்திரவாதிகளையழைத்து இதுபோல் மூன்றாம்
சகோதரனை வரச் செய்யும் எனல்

தந்திரத் துரைத்த மொழியினை யுணர்ந்து
தலைவனுந் தன்குழு வினரின்
மந்திரம் பயின்ற விந்தையர் தம்மை
மருங்கினி லழைக்கவென் றறைந்தா
னிந்தவல் வினையிற் றிறத்தினர் பால்போந்
தெறிமணி யயிலினர் விளிப்ப
வந்தன ருவந்து பொற்கழ லிறைஞ்சி
மலர்க்கரங் கூப்பிநின் றனரே. 20(934)

எதிரினி னிற்கும் விந்தயர் நோக்கி
யிதயநீ ருணர்தர வின்றோ
வதிதருஞ் சிறையின் மாட்டிய போதும்
வன்மனத் திறத்தி புருகீம்
பதிவுறுந் தனது சூனிய வலத்தாற்
படுகதி ரெழுதிசை யிருந்த
முதிர்வலி யிருவர் காப்பினை விலக்கி
முன்னரிற் காண்டக வழைத்தான். 21(935)

திறத்துடை நமது காவலிற் கிடந்த
செம்மலின் புதல்வரிம் மூவர்
பிறத்தகு மனுச னொருவ னுண்டின்னம்
பெலனறக் கொடுஞ்சிறை யெமனின்
மறத்தொடு மென்ற னாணையி னிருப்ப
வைத்தன னவனைநுந் தொழிலாற்
புறத்திபு ருகீஞ் செய்தவை போன்று
மறைத்திரென் றிசைத்தனன் புல்லன். 22(936)

எம்மால் இயலாது, அவரே இதையும் செய்யக் கூடுமெனல்

கடக்கரி யனைய மாற்றல ருடலூன்
கழீஇயவா யயில்வலத் துடைய
தடப்புய வரசே செய்வினை யுடையார்
சாற்றுமிக் காரியம் புரியார்



கடக்கருங் காப்பி னிருப்பவ ரவரார்
கைப்படு மெண்வினை யுடையா
ரிடத்தினி னுளதே லிவைபல முடிப்பா
ரென்றனர் மந்திரத் தவரே. 23(937)

நமுறூது கூப்பிட்டனுப்ப நபி அங்கு வந்தனர்

மன்னிய புன்மை மலிநமு றூது
மருங்கினர் விளித்துநஞ் சிறையிற்
றுன்னிய காப்பி னுறுமி புருகீந்
தோன்றலைக் கொணர்கவென் றுரைப்ப
வன்னவ ரோடி விரைவொடு மழைப்ப
வாண்டகை யினிதொடு மெழுந்துப்
பன்னருஞ் சிறப்பிற் களங்கின மறுத்துப்
பயின்மணி விளக்கென வந்தார். 24(938)

எமன் பதிச்சிறையிலுள்ள மற்றொருவனையும்
வரச் செய்யும் எனல்

கலிவிருத்தம்

வன்பனன் னபிமதி வதன நோக்கிநீர்
முன்பன தொக்குறு மூவர் சோதர
னின்புறு மெமனெனு மிடத்தி னானையு
மன்புறும் படியிவ ணழைத்தி யென்றனன். 25(939)

நபி கேட்க, அவன் இறந்துபோனதை இறைவன் அறிவித்தல்

நயனுறு நாயகர் நனிதி னங்ஙனம்
பயனுறுங் காவலன் பாலினங் கையேந்
தியலொடு மினிதொடு மிரந்த காலையி
லயலறி யாதிறை யறிவித் தானரோ. 26(940)

வஞ்சக னோக்கிநின் வலிய காவலி
னஞ்செனுங் கொடுமையி னெமனி னாளிரத்
துஞ்சின னவணிடந் தொட்ட பூமிசை
மஞ்சினி னடக்கினா ரென வழங்கினார். 27(941)

பிரேதத்தையாவது இங்கு வரச் செய்க எனல்

நன்றுநன் றுவந்தநின் னாயன் பாலினிற்
பொன்றின வன்னவன் பொதிந்த தாயினு
மின்றிவண் டரும்படி யிரந்து கேட்டியென்
றொன்றிய கபடனி யுளத்த னோதினான். 28(942)

நபி மீண்டும் வேண்ட கபுறு வந்து சேர்தல்

மாட்டிய கொடியவன் மவுலக் காரணம்
பூட்டிய நாயகர் புகழ்ந்து நண்புட
னோட்டிற வல்லவ னிடத்தி னங்ஙனங்
கேட்டனர் கெஞ்சின ரிரந்து நின்றனர். 29(943)

இரந்திடுந் தன்மையா லெமனி னவ்விடம்
புரந்தருங் கபுறினைப் பூமித் தாழ்வினே
நிறைந்தவர் காண்குறு தெடுத்து நேரலன்
றிருந்திய வில்லின்முன் செறித்த தாமரோ. 30(944)

அதை மூன்று சகோதரர்க்கும் நபி அறிவித்தல்

முன்னுறு மூவரின் முகத்தை நோக்கியே
மன்னவன் மாளிகை முன்றின் மாண்டிடு
மன்னவன் கபுறவ ணக னிலத்தினின்
மன்னின வெனநபி வழங்கி னாரரோ. 31(945)

இறந்தவன் உயிர்பெற்றெழச் செய்யக் கோருதல்

அன்னவ ரப்பொழு தரச னோக்கியே
யின்னவ ரிசைத்திடு மிவையு முண்மையே
லன்னவன் வெளியுற வரிய வல்லவன்
றன்னிட மிரந்திடுந் தகமை பூண்கவே. 32(946)

வெள்ளிடை வருவனேல் விழியி னோக்கியவ்
வொள்ளிய குறிப்பினை யுவந்து தன்னொடும்
விள்ளரும் வாசகம் விளக்க வேண்டுமென்
றள்ளிலை வேலினு ரறைந்திட் டாரரோ. 33(947)

நபி அங்ஙனமே இறைவனை வேண்டுதல்

உரைத்திடும் வாசக முணர்ந்து நன்னபி
கரைத்திடு நீரினிற் கழீஇ யுறுப்பெலாந்
தரத்தொடு மீறிறக் காத்துத் தக்கவன்
புறத்தினி லிறைஞ்சினர் பூர ணத்தினே. 34(948)

பின்னர்தந் திருக்கரம் பெரிதி னேந்தியே
துன்னிய வுயிர்நிலை சூத்தி ரத்தினே
மன்னிய வல்லவ மாண்ட வன்றனை
யின்னிலந் தருகவென் றிரந்து நின்றனர். 35(949)



நெருப்பாலான மனிதன் குழியினின்று வெளிவரல்

நலம்புரி மாதவர் நனி துவ்வாவினுல்
கலம்புரி வனிதையர் கருவி னேவினே
புலம்பியு முனக்கமும் பொலியப் பூமக
ணிலம்பிரிந் திடவயி னெரிந்த போலவே. 36(950)

எரியும் மனிதனைக் கண்டு நடுங்கினர்

வெடித்திடும் நிலத்திடை யெரியும் வெவ்வழ
லடுத்திருந் தவர்பல ரழல வோருரு
வெடுத்தன விழியொளி யெறிய வன்னவன்
றுடித்துயர் வெளிப்புறந் தோன்றி னனரோ. 37(951)

உயர்சிரத் துச்சியி னெழுகுந் தீயுட
லியல்பத வுறுப்பெலாம் படர்ந்து துன்னவே
வயவனு மற்றுளர் கண்டு மாமன
மயர்வுற நடுங்கின ரஞ்சி னாரரோ. 38(952)

சிலை வணக்கத்திற்குக் கிடைக்கும் தண்டனை
இதுவென அவன் கூறல்

சூழ்தரு மன்னவன் சுற்று நோக்கியே
தாழ்தரும் வன்சிலைத் தாழ்ந் திறைஞ்சியே
வாழ்தரும் பெயர்க்கிவை வழங்குங் கூலியென்
றாழ்தர வெழுந்தவ னுணரக் கூறினர். 39(953)

கருவூலக் காப்பாளர் பகுருமின் பரவசம்

கலிவிருத்தம்

இன்ன காரண மியாரு நோக்கினு
ரன்ன காலையி னரசன் பொன்னிதி
துன்னு சாலையிற் றேற்றுங் கத்தனு
ரின்ன பேர்பகு ருமெ ழுந்தனர். 40(954)

இபுருகீம் நபியே என் தலைவர்

தன்னின் மெய்யினிற் றரித்த வாடைகண்
மன்னன் முன்னரே வாங்கி வீசியே
யென்னி னுண்டகை யிறைவ னன்னபி
யென்ன வுள்ளமுற் றிதயம் பூண்டனன். 41(955)

அவர் பக்கம் அனைவரும் வருக என முழங்கல்

தீங்கி னுட்படுஞ் செய்கை யுள்ளநீ
ராங்கு நீந்தியே யண்ண னன்னபி
யோங்கு மேனெறிக் குள்ள முற்றெனின்
பாங்கின் வம்மெனப் பரிவிற் கூறினன். 42(956)

மன்னன் சினந்துரைத்தது

இன்ன வாசக மிசைத்த போதினின்
மன்ன னுள்ளமு மன்னு செந்தழற்
றுன்னு கண்களா னோக்கித் துன்புறு
தன்ன வீரனோ டறைகு வானரோ. 43(957)

இபுருகீமின் சூனியம் உன்னையும் பற்றியது

என்னி டத்துறு மினிய நன்னிதிப்
பொன்னி டத்தினுய்ப் புந்தி போதவே
யுன்னை யின்னவற் குரிய சூனியந்
துன்னி யின்னலே தோற்றி வித்ததே. 44(958)

உன் ஆவி என் கைவசம்

ஆள டாவுன தாவி நைந்திடக்
கோள டாவரக் கொண்டு நின்றையென்
வாள டாவுள வல்லு டர்ப்படு
நாள டாவென நஞ்ச னோதியே. 45(959)

இவனைக் குத்துங்கள், பற்றுங்கள் என மன்னன் ஆணையிடல்

சுற்று நின்றிடுஞ் சுத்த வீரியர்
முற்றும் வெந்தழன் முன்ன நோக்கியே
குற்று மின்னவன் கொண்ட வீறுடும்
பற்று மின்னெனக் கோளன் பன்னினன். 46(960)

பகுரும் ஆவேசக்குரல் எழுப்பல்

மன்னவன் சொல்லினன் மாதி ரப்புயத்
தொன்ன வார்தொடர்ந் தொக்கல் சூழ்தர
நன்ன யப்பகு ருமென் றேதிய
சொன்ன மாதவன் றொனி யெழுப்பினன். 47(961)

வீரர்கள் அஞ்சி அகலல்

வாரி யோதையும் வாரி யுண்டெழு
மாரி யோதையு மயங்க மாநில
மேரு மாடவே விண்ட வோசையி
னியாரு மாடியே யகல நின்றனர். 48(962)



பகுருமின் அறவுரை

பின்னர் நன்னபிக் குரிய பேறுளார்
அன்ன மன்னவ னங்கம் வேகவே
யென்ன கேடுனக் கெய்திற் றுள்ளகத்
துன்னி நோக்கெனு மற்று மோதுவாம். 49(963)

பாரி டத்தினி லெவரும் பார்த்திடாச்
சீரி டத்துள செற்று நின்றவன்
சாரி டத்துயிர் சார்ந்து நின்றிடுங்
கார ணத்தினைக் கண்டி லாய்கொலோ. 50(964)

இன்ன காரணத் தீடு முண்டுகொல்
வன்ன மன்னவ வென வழங்கலு
மன்ன காலையி னுவக சூழ்தருந்
தன்ன மைச்சர்பாற் சார்பி னோக்கினன். 51(965)

இவனைத் தண்டிக்க தக்க வழி சொல்லுமென மன்னன் கேட்டல்

மற்கு றித்திடு மின்ன மாறுடைச்
சொற்கு றித்தவன் றுஞ்சு தற்குள
பற்கு றித்திடு மென்னப் பார்த்திபன்
றற்கு றிப்பினிற் றுன்வி னுவினன். 52(966)

தண்டனை காண்போருக்குப் பாடமாக அமையவேண்டும்

கண்ட பேர்களுங் காட்டு நஞ்சொலே
கொண்டு நின்றிடுங் கொடிய வேதனை
மீண்டு செய்திடல் வேண்டு மென்னவே
யண்டர் கோன்முன்னோ ரமைச்ச னோதினன். 53(967)

எவரு நோவினைக் கிணங்கி டார்தர
லுவரி சூழ்புவிக் குரவர் நீதமே
யவரு ளாமென வறையக் கேட்டபின்
கவரு லாமனக் கயவ னோர்ந்தனன். 54(968)

நபியையும் தோழரையும் பிடித்துக் கட்டச் சொல்லல்

வெய்ய வீரியர் வீறி னோக்கியே
யையர் நன்னபிக் காபி னோரையுஞ்
செய்ய பொற்கரு கூலச் சீரனுங்
கையிற் பற்றுதி ரெனக் கவன்றனன். 55(969)

இடியி டித்தெழு வுரறி யாவரும்
படித லத்திசை பதறி யாடவே
கடிது சென்றவர் கவசம் பூண்டுகைப்
பிடிபி டித்தனர் பெருமை யோர்களே. 56 970)

கயிறுகளால் பிணைத்தனர்

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

நன்னபி யின்னுரை கொண்டவர் தங்களை நஞ்சக
நெஞ்சுடைய
மன்னவன் முன்னரின் வன்பொடு பொன்பிறழ் மண்டழுண்
மண்டலமேற்
பின்னுற வொன்னலர் தள்ளின ரள்ளினர் பிற்கர மற்பதமே
மன்னுற வின்னலின் முப்பிரி யொப்புற மாறி யிறுக்கினரே.
57(971)

வெயிலில் வீழ்த்தி மார்பில் கற்களையேற்றுதல்

வண்ண முகத்தின் விரிச்சி கனிற்கதிர் வன்னியி னிற்பொலிய
திண்ண மிகுத்தவம் மன்னவன் றண்ட மதிற்செலும்
வன்மையினுன்
கெண்ண முளத்தக ருங்கலெ டுத்தறி வின்னிசை கல்லுரமேன்
மண்ணி லழுத்த விருத்தினர் சற்று யனத்தி னிரக்கமிலார்.
58 972)

கொடுமைகள் அவர்களைத் தீண்டவில்லை

மண்டல முங்கதி ரும்பிற மும்முக மும்மலர் தண்கொளவே
திண்டரு வன்கல தன்கன மின்றிய செங்கரமுங் கழலுங்
கொண்டிடு துன்பம தின்றும னந்தனி லுங்குண மன்னுறவே
யண்டர்க ளஞ்சவு மன்பொடு நன்னிலை யண்டினர்
[நின்றனரே. 59(973)

நிலத்தி னிருத்தி வளர்த்தி யுரத்தி னிலைத்தகு வட்டதனுற்
றலத்தி லுறுப்பி லசைத்த லகத்தி லசைத்தற மக்கிலதாய்
நலத்த தெனத்த னுளத்தின் மிகுத்த நடுக்கமு முற்றிடவே
கலத்தின் மருத்தி னலைக்கு டெறித்த கருத்தரி
[ஞெத்தனனே. 60(974)

மயங்கிய மன்னன் தன்னை வழிப்படச் சொல்லல்

மயங்கிய மன்னவ னன்னவ னின்சொல் வழங்கிய மாறுடையீர்
கயங்கிடு வன்கல ருங்கன மின்றி யுளங்களி கொண்டுடலே
வியங்கொள நன்கருள் கின்றவ னென்னுரை விண்டுமு
[னின்றநிலை
சயங்கொளு மென்றனன் பின்னறி வுந்திய சாமிய
[ரோதுவரால். 61(975)



அத்தண்டனைகளை அவனே அனுபவித்துப் பார்க்க
பகுரும் அறை கூவல்

வென்றியின் வல்லவன் றன்சின முங்கிய மேலில
[வீணனெடாஅ
நன்றுநி லந்தனில் வந்து விழுந்திடு நானுன தாருரமேல்
வன்றிற வன்கலு றும்படி செய்குது மாநிலை பாரமதே
யின்றில தென்றிவ ணின்புறி லுண்மைய தென்றனர்
[பொன்றலைவர். 62(976)

அவர்களை நெருப்பிலிட்டுப் பொசுக்க மன்னன் ஆணையிடல்

ஓதலு மாதுரை யேதுறு தீதென வுள்ளம துள்ளழலாய்க்
காதுறு வாதினன் கோதொடு வேதியின் கையினர் தம்முடனே
யீதுறு வேதனை யார்தமை யூதிய வெவ்வரி யெவ்வமதாற்
சாதகை மீதறி போதுற வாதொழில் சார்குதி ரென்றனனே.
63(977)

வெந்தழலில் பகுரும் முதலியோர் வெந்து சாம்பராதல்

அப்போ தத்திர கைத்திறர் சுற்றினு மங்கியி னிந்தனமே
யொப்புற மிக்கி னடுக்கி யதற்கிடை யுண்மையர் தங்களகம்
வெப்புற விட்டு நிரைத்தனர் மெய்த்தசை வெந்துக
[ரிந்தவனே
செப்புறு சிற்றுக ளொத்து மருத்தொடு சென்றது நின்றதுமே.
64(978)

மேகம் ஒன்று தோன்றி அமுது சொரிந்த தண்ணீரால்
உயிருருப் பெறல்

வெஞ்சின வங்கி யெரிந்த தலந்தனில் வென்றியி னின்றவனுல்
மஞ்சின மொன்று நிறங்கொள் பளிங்கியின் வந்து ககன்குலவி
அஞ்சொல் விளம்பி புலம்பி யழுங்க னரும்புனல் சிந்திடலும்
பஞ்சு பறந்தவ ரங்க நிறைந்தவர் பண்பி னெழுந்தனரே.
65(979)

இறைவனைப் புகழ்ந்து அரசனை எச்சரித்தல்

கொண்டல் படர்ந்து பொழிந்த சலங்கொடு நுண்டுகள்
[பிண்டமதாய்
விண்டந லங்கொள்க பீபுமு கம்மதின் வெண்புக
[ழின்குணமாய்
மண்டிய வங்க நிறைந்துயிர் துன்றினர் வன்றிற லின்பெரியோ
னண்டர்கள் முன்னர் புரந்தருள் செய்தவ னென்றுபு
கழ்ந்தனரே. 66(980)

எங்களை நன்கொடு பன்னரு காரண மிவ்வுல கந்தெரிய
விங்ங னியற்றிய வல்லவன் வெஞ்சின மென்னு நெடுங்கடலி
னங்க மழிந்துழல் கின்றனை பாதக அஞ்சுதி யஞ்சுதியென்
றுங்குறு மன்னவ னிந்தைய றைந்தனர் மாநவ முற்றவரே.
67(981)

மன்னனின் திடுக்கமும் மயக்கமும்

நவந்தரு கின்ற பெருந்தகை கண்டவர் நன்கினு ளங்கொளவீ
தவஞ்செய லன்றென வும்புதி தென்று மலர்ந்து மகிழ்ந்தவர்க
ளுவந்திட நண்பதி வஞ்சக னெண்சுடு வங்கி யினும்பகையோ
ரவிந்தில ரென்கொலி தென்றக மெண்ணி யலைந்தவன்
குன்றினனால். 68(982)

மீண்டும் சிறையிலிட்டு வாட்டச் சொல்லல்

அயர்ந்து மயங்கிய மன்னவ னன்னவ ரந்நபியுந் தொடர்பிற்
பயந்திடு மென்றரு வன்சிறை யின்குழி பம்பிடல்
[வம்புசெய்மின்
வயந்தரு மைந்தர்க ளென்றுரை விண்டிட வன்றிற
[லின்படையார்
சுயந்தக கன்றி னினங்கள் வளைந்து கடிந்து படர்ந்தனரே.
69(983)

விஷ ஜந்துக்களினிடையே விட்டனர்

நச்சினு யிர்ப்புயர் பற்களு ரத்திடு நக்கெழில் சுட்டிபின
வச்சிர கட்செவி மற்றுடல் பட்டிடில் வற்புறு மக்கியெனு
விச்சையி னிற்பொறி கொட்டு கொடுக்கின் விரிச்சிக
[மொய்த்தளவில்
குச்சித விச்சிறை யிற்புக வைத்தனர் கொற்றவர் மற்றவரே.
70(984)

நச்சரவ முதலியவை நபிபெருமானாரிடம் சரணடைதல்

செஞ்சுடி கைத்திற நஞ்சறை யுற்றவை திண்சிறை யிற்பயிலு
மஞ்சுட ரொத்தவர் கண்டு நடுக்கி னகன்றுற மிக்குடனே
கஞ்ச மலர்ப்பத தஞ்சமெ னச்சரண் கங்கொளு மிச்சையினே
வஞ்ச மெடுத்தெறி நன்றிறை செய்த்தகை வண்டவழ்
நற்றவமே. 71(985)

சொர்க்க உணவுண்டு, வணங்கி, நாற்பதுநாள் கழித்தல்

இன்னபெ ருஞ்சிறை தன்னிடை நன்கி னிருந்தனர் துன்பறவே
பன்னரும் வல்லவ னண்பி னிறங்கிய பண்டமு துண்டியுமே
துன்னின ருண்டு மகிழ்ந்தணி நந்நபி துங்கமுறுஞ் சதுபான்
மன்னு தினம்பெற வன்னவ கன்றவை வண்பி னியம்புதுமே.
72(986)

இறந்தவரெழுந்துயர் படலம் முற்றிற்று.
ஆகப் படலம் 17-க்கு கூடிய திருவிருத்தம் 986.

# 18. சிறைமீட்டுப் படலம்

## படலச் செய்தி

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

வானா டுறைவோர் நிதம்பரவும்
வரிசை நயினார் கொடுஞ்சிறையிற்
றேனா ரமுத முண்டுவந்து
செவ்வி மகுமூ தொளிவதனாற்
கானார் புயத்து மறக்கயவன்
கருத்துட் டிகைப்ப வன்னையினாற்
றீனோ ருடனே வெளிமீண்ட
செயற்கை விளக்க வுரைக்குதுமே. 1(987)

துயருற்ற அன்னை மன்னனைக் கண்டு உரைத்தவை

கொடிய வரவக் குழுவுலவுங்
குற்ற முயர்த்த சிறைசாலைக்
குடியி னிருப்ப வெங்கோமான்
குணமும் வடிவு மலர்மொழியு
நெடிது நினைந்து காட்சியினே
நெஞ்சம் விழைவி னீன்றளித்தத்
தொடியி னியாழின் முன்கரத்துத்
தாயார் துயர முற்றினரே. 2(988)

தேடும் பொருளிற் சிறந்தவெல்லாந்
திறத்தி னிலைத்த லுலகமெனல்
பீடும் பெருமை யுறுந்தனையர்
பெற்றி யுளர்பால் வரமன்றோ
ஈடு முடைய வன்னையிடங்
காத லுரைக்கு மியல்பிதனால்
வாடு முள்ளம் வேட்கையினான்
மாதா வெழுந்தார் மதிப்புடனே. 3(989)

கனியி னியன்ற திருமகன்மேற்
கருத்திற் சிறந்த வன்னையவர்
துனியி னகங்கா ரத்திறலிற்
றோற்று நுமுறா தெழின்மாடம்
வனையின் முன்றி லுறும்வீர
ராசர்மனைவி யாதலினா
னினைவில் விலக்கா நிலைகொண்டார்
நிவரா சனத்தின் முன்னானார். 4(990)

வன்மை யிலேவேன் மறவர்பலர்
மதியின் மிக்கா ரணிநிற்பத்
தன்மை யுளத்தில் வேறுமொரு
தலைவ னேதென் றுணர்ந்துயிர்க்கும்
பன்மை யுயிர்ப்பி னிழையணியார்
பாங்கிற் கவரி யிருமதியிற்
புன்மை யுடையோன் கதிர்மகுடம்
பொலியத் தவிசிற் கண்டனரே. 5(991)

இலங்குந் தானை யினையொதுக்கி
யிதைய நடுக்குற் றணிமயிலி
னலங்கொண் டிறைஞ்சிக் கையொன்று
நனிவாய்ப் புதைத்து மற்றொருகை
விலங்கா திணைத்து மணிவிளக்கின்
விரிந்த சுடர்போற் கலனெறிப்ப
வலங்கொ ணயினர் திருவனையார்
மன்ன னேக்கி யியம்புவரால். 6(992)

அறியாச் சிறுவன் பிழை பொறுத்து கருணை காட்டவேண்டுமெனல்

மறத்த லுடையா ருள்ளகத்தை
வாங்கி வணக்கு மதியூக
மறத்த லுடையா ருள்ளகத்தை
வாங்கி வணக்கு மதிசிலையீர்
திறத்த லுடையீர் மன்னவர்கள்
சிறத்த லுடையீ ரடியவள்யான்
புறத்தி லுரைப்பான் புகுந்தனனும்
புந்திக் கியைய வேண்டுவதே. 7(993)

ஒலிக்குந் திரைசூ ழுலகதனி
லுள்ளா ரெவர்க்கும் பேர்விளக்கங்
கலிக்கும் புதல்வ ராதலினுற்
காத லுளத்தே மலிந்ததனுற்
பலிக்குந் தவத்தின் பேறதனுற்
பயந்தவரிய வென்மகன்பால்
வலிக்கும் வாஞ்சை யளவிலவாய்
வளரும் பெருக்கா யுளத்தூடே. 8(994)

மதியொன் றறியாச் சிறுவயதான்
மகிமை யிவையென் றுணராதாற்
பதியி னீதந் தெரிகிலதாற்
பயிலுந் தனது சொற்கொண்டே



திதியி னிருந்தா னுதலினுற்
சிறியா ளிடத்தி னற்கருணை
நிதியி னருள மகன்பிழைக
ணீரே பொறுத்த னீர்மையதே. 9(995)

தொண்டு வேண்டி நின்றவடன்
றேன்றல் வேண்டன் முறையன்றே
கொண்டல் வேண்டும் பயிரதுபோல்
கொடியாள் வேண்டும் பயனருள்க
மீண்டு வேண்டுஞ் சிறைவிடுத்து
மீட்ட வேண்டு மெனநயினர்
பண்டு வேண்டுந் தவத்தோடும்
பயந்து வேண்டு மனையுரைத்தாள். 10(996)

அவர்கள் அழிந்திருப்பர் என மன்னன் உள்ளூர நினைத்தல்

இனிதிற் றூழ்ந்து பெண்மையின
ரிசைக்கு மொழியு முட்படுத்தித்
தனது கொடிய தெறுக்காலுந்
தாவுங் கடுநெட் டுடற்பாந்த
ளினமு மதனி னிருந்தவர்க
ளிறப்பே திறத்த லெனத்துணிந்து
மனது குளிரப் பொன்னலங்கல்
வரைத்தோட் டிறத்தா னறைகுவனுல். 11(997)

கைதிகளை அழைத்து வரப் பணித்தல்

உரையி னியையா திருந்தவர்க
ளுடனே யிபுரு கீந்தமையும்
வரைவு கடத்திக் கொணர்ந்திரென
வயவ ருடனே பணித்திடலும்
விரைவி னிவர்போந் தருஞ்சிறையின்
விளங்கு மவரை யழகொழுகுந்
தரையி னுடுவுந் தண்மதியுந்
தவழ்ந்த தெனவே சொடுவந்தார். 12(998)

மன்னன் கைதிகளின் மலர்முகங் காணல்

காலை மலர்போற் றிருமுகமுங்
கருணை வழியுஞ் செழும்விழியும்
வேலை மணிபோ லொளிருடலும்
வீறு படர்ந்த நெடுங்கரமு
மாலை மதுரச் சாறெழுகு
மணிகொள் வாயுந் தெளிவுடனே
சாலை யிலர்போற் றீனேருந்
தவத்தார் தமையுங் கண்டனனுல். 13(999)

### சிறையில் உங்களுக்கு உணவு அளித்தவர் யார் எனக் கேட்டல்

துயர மணுகா வெழினோக்கித்
தோற்று முளத்திற் றியக்கமுற்று
வியனி னிஃது புதுமையென
வேங்கை யிடத்த வுழையெனவே
கயவ னடுங்கித் திருநபிமுன்
கடிய சிறையி னுமர்க்குணவும்
பயனு மளித்து நாடோறும்
பண்புற் றடைவா ரெவரென்றான். 14(1000)

### சர்வ வல்லமை படைத்த எம் இறைவனே!

நிந்தை யகத்திற் பிறந்துவஞ்ச
நிரையி னிணங்குங் கொடியையடர்
எந்தை முதலோர் பல்லோர்க்கு
மியல்பி னியற்கை செயற்கையுறத்
தந்து படைத்துப் புரந்தருளுந்
தகையி னெனது பெருநாய
னிந்த வரிசை பெறநாளு
மினிய வமுதந் தந்தனனே. 15(1001)

### அவனை வணங்குவோர் பேறு பெறுவர், மாறு செய்பவர் நரகாழ்வர்

திருந்துங் கருத்தா லறிவாலுந்
தேடற் கரியோ னவரவர்க
ளருந்துங் கருத்தா முதற்பலவா
யாளுங் கருத்த னின்கொடிய
வெரிந்த கருத்த ரெரித்திடவெண்
ணீறி னியைந்த வுடற்காவி
சொரிந்த கருத்தா நற்கருத்தத்
தூயோன் றொழுதார் கதியுடையார். 16(1002)

புவன முடையோன் கோலணியன்
போற்ற லணிய னவமணியன்
பவன முடையோ னழலறல
னனிதிற் படைப்போ னினிதளிப்போன்
கவன மிலவ னின்பதுன்பக்
களிப்பு நயப்பு மில்லவனா
மவனை யிறைஞ்சார் கொடுநரகத்
தரியை யிறைஞ்சி மாழ்பவரே. 17(1003)



### இத்தனை புதுமைகள் கண்டும் நீ திருந்தாதது உனக்குக் கேடே

சிறத்த லுடைய வல்லவன்பாற்
சிறிய தொண்ட னியானெனவே
மறத்த லின்றி யுரைவிளங்கும்
வாய்மை யுரைத்தி யினையபெருந்
திறத்த புதுமை நீகண்டுந்
திருந்தா துள்ள மெவனெனினி
னிறத்த கெடுதி வந்தடுத்த
தெனவே நபியு மவற்குரைத்தார். 18(1004)

### மன்னன் மாற்றுத்திட்டம் தீட்டுதல்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம் [வேறு]

திருநபி மதுர வாய்மை செப்பலும் வேம்பிற் கொண்டு
பெருநெருப் பழன்ற தென்னப் பேதகத் துள்ளம் வெம்பி
யிருவிழி யரக்கிற் சேப்ப வெழுந்தநெட் டுயிர்ப்பி னோடுங்
கருமனத் துடைய நஞ்சன் கருத்திடை யாய்த லுற்றான். 19(1005)

பிணித்திடுந் தொடர்புங் காவல் பெற்றிடுஞ் சிறையுஞ் [செவ்வூண்
டணத்தலு மினைய வெல்லாந் தனக்கொரு பொருட்டி [லாதாற்
கணத்திடுங் கொடுமை வேறுங் கணித்தலே கணித்த லென்னா
நிணத்தடக் கதிர்வெள் வேலா னினைத்தொரு பாவம் பூண்டான். 20(1006)

### அவர்கள் மீது கொடிய மிருகங்களை ஏவல்

வெவ்வழ லுகுத்த செங்க ணகாயுத வேங்கை வீரஞ்
செவ்வறு கரட கும்பஞ் சிறுவிழி நெடுங்கை வெற்பு
மெவ்வமுற் றேக்கு நீண்ட வயினெரி ஞமலி யாவு
மொவ்வறு நபிபான் மன்னன் வேதனை யுஞற்ற விட்டான். 21(1007)

### இறையாணைப்படி அவை நபியின் பாதம் பணிதல்

படர்தரும் பூத மைந்தும் பயிற்சியோ ரேழுங் கொண்டு
தொடர்தருந் தோற்ற மெல்லா மொன்றெனத் தொகுத்த [வள்ளற்
கிடையினில் விகார மின்றி யிருந்ததால் வீர மொய்த்தக்
கடைவிலங் கொருவ னாணைக் கருத்தொடு மொரீஇய வன்றே. 22(1008)

### நபியின் தந்தை ஆசரிடம் அரசன் கூறியது

கொடியவல் விலங்குஞ் செம்பொற் குளிர்மலர்ப் பதத்தை
[நோக்கி
யடிமையி னிறைஞ்சா நிற்ப வாண்டகை மேன்மை கண்டு
படியிடந் தீங்கி ஞூப்பண் படிறொடு மாழ்ந்த பாவிக்
கடியின ஞசர் தோற்றங் கண்ணுற்று மொழித லானன்.
23(1009)

### என் பேச்சைக் கேட்கும்படி உன்மகனைப் பயிற்று

இயல்பினெம் மமைச்சர்க் கேற்ற விறையென நின்று யாலே
வயனுறும் வீர மேன்மை வாழ்தருஞ் செல்வத் தன்மை
நயனுற வச்சத் தோடு நயப்பொடு மெடுத்துக் காட்டிப்
பயனுற நஞ்சொற் கேட்பான் பயிற்றுக நின்சேய்க் கன்றே.
24(1010)

### அவனுக்கு உயிர்ப்பிச்சை தந்து உன்னிடம் அளிக்கிறேன்

நீருவந் தளித்த மைந்த னிலைதருங் காரம் வீரம்
பேருவந் திருத்த லெல்லாம் பிறங்கிய விளக்கிற் செய்யா
நீருவந் தனனச் செய்கை நீடிய கைமை யென்ன
யாருவந் திடுங்கொல் யானே யறிந்தன னின்று மன்னே.
25(1011)

ஆதலி னவனு மென்பான் மலரடி விளக்கு மிக்கோர்
காதலி னிணங்கி யாம்சொல் கருத்தொடுங் கொள்வ னன்னச்
சூதினி தியன்ற வஞ்சச் சூனிய மியாங்கொண் டேமால்
போதுமே போதா தன்றே புவனத்தி னுழி யாற்கே.26(1012)

மற்றுமாண் டகையின் வீர மாண்பினிற் றிறத்தி னுள்ளப்
பற்றுமாண் டருளின் மிக்கோன் பரவைமா நிலத்தார்
[போற்றுங்
கொற்றமே பெற்ற வின்ன குமரனன் கொடையி னும்பால்
வெற்றியி னளித்தே னென்றுன் வீட்டினை யழித்த வஞ்சன்.
27(1013)

### அவனுக் கிணங்கி நடந்தால் இபுருகீம் பெறக்கூடிய பேறுகள்

வண்மையிற் றவத்தின் மேன்மை வரிசையீ ரெனது மாட்சிற்
றிண்மையிற் றகையிற் கொண்ட செய்கையின் பெருமை
[பூண்பா
னண்மையின் மிக்க செம்பொ னருநிதி கைக்கொண் டன்பி
னுண்மையி னவையின் வேண்டு மொருவனிவ் வலத்தான்
[மன்னே. 28(1014)



தேருலாஞ் சேனை நம்மாற் சிறப்பினிவ் விறலின் மிக்கார்
சீருலாந் தகையி னுற்றுற் றிருந்தல ரெவருங் கொண்ட
பேருலா முரணுந் தேய்த்துப் பிரியத்தி னெனையே வாழ்த்த
நேருலா நமரிற் சேர்க்கு நெறியுலா மகிமை கொள்வாம்.
29(1015)

தீவினை கடக்கும் வங்கஞ் செறிபிணி நீக்கும் பண்டம்
யாவரும் வழியி னெய்து மியலகங் கார மென்ன
மேவிடின் மன்னர் யாரு மருங்கினில் வேண்டி நிற்பக்
காவலென் றுலகங் கொள்ளுங் கனதியே யளிப்பன் மன்னே.
30(1016)

பொன்னொடு மணியே மற்றப் பொருவிலா வுடைமை
[யெல்லாந்
தன்னொடுந் தகுதி கொண்டு தானென விருந்தா லன்ன
மன்னொடும் வேண்டு மேன்மை வருவதற் கைய மின்று
லென்னொடு நிகரி லாதிவ் வேழுல குஞற்று மன்னே.31(1017)

### மகளையுந் தந்து தலைமைப் பதவியுந் தருவேன் எனல்

காரினுங் கரிய கூந்தற் கனியினுங் கனிந்த செவ்வாய்
பாரினுங் கிடையா தின்பம் பயிறரும் போக பூமி
நாரியர் திலக மென்ற னயத்தினன் வந்த நங்கை
சீரியல் வதுவை வேட்பான் செய்துமன் னவருக் கன்றே.
32(1018)

சூழ்தருமதியின் மிக்கார் துணைதரு மமச்சர்க் கெல்லா
மாழ்தருங் கருத்தின் வல்ல வாண்டகை யாக்கு மின்ன
கேழ்தருந் திறத்தான் றன்னைக் கிருபையிற் கோடி யென்னத்
தாழ்தரு மரசன் சொற்றுன் ததபணி யாசர் செய்தான்.
33(1019)

### தந்தையுடன் நபி வீடுவரல்

மன்னவ னுரையின் மேன்மை மனமகிழ்ந் தரிய வின்பந்
தன்னினை வுடைய வெங்கோன் றம்மையே கூட்டி வண்மை
யின்னயிற் றந்தை செல்ல வின்னிசை மதுர முண்ட
நன்னயத் துடையார் போத நபியவர் போயி னரால்.
34(1020)

### வழியில் கண்ட கூட்டத்தினருக்கு போதனை புரிதல்

உடன்படுந் தந்தை யோடு முவப்பொடும் போதுங் காலை
யிடம்படு மவ்வூர் நாப்ப ணியல்வளங் கொண்ட வேந்தர்
தடம்பெறு மணிக பீபு முகம்மதி னகத்துட் டங்கு
நெடுந்தகை யணிந்த பாத நிலைகொண்டு புகல்வ ரன்றே.
35(1021

பெரும்பதி யிடத்தி னுற்றுப் பீடணி வீடில் லாது
கரும்பதி புகுதா நின்ற கதியறு கணங்கா அள் வல்லோ
னரும்பொருட் கலிமாச் சொல்லி யதன்பய னுணர்ந்து [நெஞ்சந்
திருந்துமின் புன்மை நீத்துத் தேடுமின் மேன்மை யாவும்.
36(1022)

நல்வழி யொழுகி ரென்னி னன்னபி மார்கள் மாற்ருர்
புல்வழி கொண்டார் போலும் பொருவழி நுமர்கட் கெய்திப்
பல்வழி கொள்வீ ரென்னப் பயனுணர்ந் துள்ள மஞ்சி
நில்வழி கொண்டே னென்ருர் நெறிவழி கொண்ட கோமான்.
37(1023)

நபிவழியில் சேர மக்கள் மறுப்பு

வன்றிறற் கயவ ஞரார் வண்மைநன் னபியை நோக்கி
முன்றவ மென்ன வஞ்ச மொழியொடும் வந்தார் போலு
மின்றிவ ணீரு மெய்தி யெடுத்துரை விளக்கா நின்றீர்
துன்றுமிம் மரபி னியாங்க டொடர்கிலேந் தொடர் [கிலேமே.
38(1024)

தந்தை ஆசறு மீண்டும் துன்பம் தேடாதே எனல்

குழுவினர் வஞ்ச மென்னக் குறித்திடா நின்ரு ரங்ஙன்
வழுவுறுந் தந்தை யென்போன் வண்ணிலா முகத்தின் வள்ளன்
முழுமணி யனைய வென்றன் மொய்தவப் பலனே யீன்ற
செழுமணி மகவே வேறு சிந்தனை செய்ய லானே.
39(1025)

தடங்கட லுடுத்த வையந் தனக்கொரு பொறியிற் ருேற்றி
யிடங்கொளு மரசன் கோபத் தெரியழ லதனுற் றீத்து
விடங்கொள வருத்தஞ் செய்வ னென்னமீ தயரு மச்ச
மடுங்கருத் தின்று கொல்லே போலுமவ் வியல்பு நன்றே.
40(1026)

நின்னையீன் றெடுத்த வாயு மியானுநீ ரியற்றுங் குற்றந்
தன்னையே பொறுத்தி யென்னத் தகுவன வுரைத்துக் கெஞ்சி
மன்னையே வேண்டி மீட்ட வருத்தமே கண்ட தின்ரே
வென்னையிவ் விஞேதங் கோட லியல்பன்று பயந்த மைந்த.
41(1027)



இறைவன் காக்க வல்லவன் என நபி கூறல்

மன்னவன் கடுமை நீத்து வருமென வழங்கக் கேட்டு
நன்னபி நந்தை நோக்கி நஞ்சினு மிருண்ட நெஞ்சா
னன்னவ னன்று முன்னு மாண்டிடுந் தகையன் வல்லோ
னின்னனங் காவா நின்ரு னியாண்டினு மேலு மன்றே.
42(1028)

தன்னகம் வந்து சேர்தல்

தாயுவந் தினிதிற் போந்த தம்மகந் தந்தை யோடுஞ்
சேயுவந் தினிதிற் புக்கித் திருமனத் துண்மை வள்ளல்
கூயுவந் தெவரு மார்க்கங் கொள்விப்பான் ஞெழிவி னேடு
மாயுவந் திருந்தார் கேளார்க் கடைந்தவா றிப்பாற் கேண்மின்.
43(1029)

சிறைமீட்டுப்படல முற்றிற்று
ஆகப்படலம் 18-க்கு திருவிருத்தம் 1029.

—□—

# 19. பகைவர்க்கிலம்பாட்டுப் படலம்

## படலச் செய்தி

கலிவிருத்தம்

தம்மகத் திலங்கிய தவத்தி ஞயகர்
செம்மகத் திணங்கினர் சீர்மை கொள்ளவும்
வெம்மகத் துடையவர் வெறிதிற் சிக்கியே
பம்மகத் தவரிலம் பாடு கூறுவாம். 1(1030)

நற்செயல்களால் மக்களை நேர்வழிக்கழைத்த நபி

காரணத் தகையினுற் களிக்குந் தன்மையாற்
பூரணப் புகழினுற் புகலு நேர்மையா
லாரணப் பொருளினு லவனே யெண்ணுற
வூரணித் தவர்நபி யுளுற்றி நின்றனர். 2(1031)

கொடுமைகளால் அதைத் தடுத்து வந்த மன்னன்

வீரத்தாற் கொடுமையால் விறலின் வீக்கத்தாற்
கோரத்தாற் றண்டத்தாற் கூறு பாட்டினு
லாரத்தி னபியுரை யாகம் பூண்டிடா
தூரத்தார் மன்னவ னெருவிப் பானரோ. 3(1032)

நல்வழி யாரையு நபிய ழைத்தலும்
பல்வழி பகையவன் பண்பிற் சேர்க்கலுஞ்
சொல்வழி யடங்கிலாற் றுதித்திந் நேரர்க்கடுங்
கொல்வழி விடுகெனக் கூற்றி னின்றனர். 4(1033)

திருந்திடாத் தீயோரை தண்டிக்க நபி வேண்டுதல்

மேனெறி யொழுகிடார் கீழ்மை யெய்துறத்
தீநெறி யருள்கென நாளுந் தீனெறித்
தூநெறி வள்ளலார் துதித்த வண்மையாற்
கோனெறி கொற்றவ னடாத்தன் மேயினன். 5(1034)

பஞ்சம் தொடங்கியது

தகையறு நகர்கவு தாரிய் யாவுறு
மிகையறு பவரீசெயும் விகற்பத் தண்டமே
தொகையறு நாயக னெழிலி தோற்றிடா
வகையறு பஞ்சமே வழங்கி னனரோ. 6(1035)



நிலத்தெழுங் கூழின நீர்மை குன்றவே
குலத்தெழுந் தகைபல வேறு கொள்ளவே
நலத்தெழு பொருளது நவைக டுன்னவே
சலத்தெழு குயினிழ றருத லின்றியால். 7(1036)

பஞ்சம் வந்துற்றதன் காரணங்கள்

பூதகக் கொடியவன் பயிற்றும் புன்னெறிக்
காதகக் கொடியதீக் கணங்கள் யாரையுந்
தீதகத் தாக்கிப்பின் செழீஇய வான்புயன்
மீதகத் தெரித்ததே வேறு முண்டரோ. 8(1037)

மறவரின் கொடுமையா லறுதி மாறலாற்
றெறுகொலை களவினுற் சினத்திற் காமத்தா
லுறுதியின் றியுங்குடி கள்ளி னூக்கத்தால்
வெறிதுவந் தும்புயல் விலக்கிற் ருமரோ. 9(1038)

காயழன் மன்னவன் கருத்தை நோக்கியோ
சேயிழை மாதர்கள் செய்கை நோக்கியோ
தூயவர்க் கவர்புரி தோற்ற நோக்கியோ
மீயுயிர் குயின்குழாம் விலகி நின்றதோ. 10(1039)

நிராகரிப்போர் மீது பஞ்சம் தாக்குதல் தொடங்கியது

படர்நிலக் கூழெலாங் கரிந்து பாவியர்
தொடர்நிலை யலைவுறத் துயர மேல்வரத்
தடநிலைப் பெயர்தரத் தன்மை குன்றவே
யடர்நிலை மாறல்வா னுக்கிற் றன்றரோ. 11(1040)

சகத்துயர் மேன்மையுந் தத்தம் வீரமு
மகத்துய ராண்மையு மடருங் கோரமுஞ்
சுகத்துயர் செல்வமுந் துய்த்துக் காபிர்மே
னகத்துயர் புலியென நடந்த பஞ்சமே. 12(1041)

பஞ்ச நிலையிலும் கண்ட ஊற்றும் வெள்ளமும்!

பிறர்பொரு ளவாத்திரைப் பிரிவு மீனின
மறனுயர் கொலைத்தொனி வஞ்ச மைம்பொரு
ளறநிலை யழித்திடு மாக்க மூற்றுள
வெறுமையின் வெள்ளமே விரைந்த டர்ந்ததே. 13(1042)

### பஞ்சத்தின் கொடிய ஆட்சி

உழவர்க டொழிலற வுயருஞ் செல்வத்தார்
கிழவர்க டொழிலறக் கிருபை யுற்றவர்
விழவுறுந் தொழிலற வேறு வேறதா
யழைகுவர் நெறிபல வகன் றகன்றரோ. 14(1043)

கைவரு நேமமுங் கருத்திற் பன்மையுந்
தெய்வமும் பூசையுஞ் செய்யு மந்திரம்
பொய்வரு நெறிபல பொசித்தவ் வூரினர்
நொய்வரும் பஞ்சமா நூறி நின்றதே. 15(1044)

எடுத்தவர் தம்பொரு ளேத்தம் யாவையுங்
கெடுத்திழி தொழிலொடுங் கேட்டி டாதடர்
தொடுத்திடும் வீரருந் தூன்ன வஞ்சகம்
படுத்திடும் வெறும்பதி பதிவு கொண்டனன். 16(1045)

மாலுறுஞ் செல்வத்தார் மறுகு தோறினு
நூலுறுங் கணிதத்தார் நொதும லாளர்பால்
வேலுறுங் கரத்தினர் விதவை பாங்கினிற்
கோலுற மருளுற விரப்புங் கொள்வரால். 17(1046)

உண்பன தின்பன வொன்று மின்றினற்
புண்படு முடலினர் பொசிப்புக் கேக்கமுற்
றண்படு நட்பென வடருந் தீமையின்
கண்படும் பாதகன் கையி னுடரோ. 18(1047)

நிலத்தினிற் பாசிலை நிறுவு மாமரக்
குலத்தினிற் சாய்பவர் குறிஞ்சி புக்குவார்
சலத்தினிற் றிறத்தினர் தணப்பின் மாதராற்
செலத்தகா வெஞ்சுரஞ் சிதைய நிற்பரால். 19(1048)

### நீர்மையும் காய்ப்பும்!

அருமையி னீன்றிடு மணிகொண் மக்களும்
பெருமையும் குலைதரப் பிறரிற் றூங்குமா
லுரிமையும் பகையவர் கொள்ள வோடினர்
கருமையும் வெறுமையின் கடிமை நீர்மையே. 20(1049)

பான்முலை கண்டிலார் பாலர் காண்டலுந்
தான்மனங் கலங்குறத் தாய ரேங்குமே
மான்மறி விலங்கின மறித்தும் புல்லொடுங்
கான்மரச் சருகெலாம் பசியிற் காய்ப்பரால். 21(1050)



### சிலர் நபியின் பக்கம் சென்று சேர்தல்

புறநகர் நோக்கினர் சிலர்கள் பொற்பற
மறநிலை நோக்கினா சிலர்கள் மாண்டன
ரறநிலை நோக்கினர் சிலர்க ளாக்கமுற்
றிறைநபி யுவந்தன ரினிதி னுமரோ. 22(1051)

### பல்வகை தானியங்கள் சேர்த்துப் பதுக்கிய மன்னன்

நிலத்தினிற் பசுமையே நிலவி லாததால்
சலத்துடை யவர்படுந் தயக்க மானடர்
குலத்திடைப் பழிகொலோ கொடிய வஞ்சகன்
மலத்திடை மாழ்தரு மனத்தி னேகொலோ. 23(1052)

நகரது கரிசத்தி னலிவு கொள்ளவே
வகைவகைத் தானிய மலைக ளாமென
வகநிலை யறையிட மனந்தஞ் சேர்த்தனன்
பகையென முளைத்திடும் பாவ மன்னவன். 24(1053)

### தன்னை வணங்கினோர்க்கு மட்டும் தானியம் அளித்தான்

குவிதர நிறைதரு மரியிற் கோளகன்
சவிதருங் கழறெழுந் தகையி லார்க்கெலா
மவிதர வளித்தலே யன்றி மேன்மையி
னவிதரு மவர்க்கவை நல்கி லானரோ. 25(1054)

### நபி இபுருகீமிடம் தோழர்களின் முறையீடு

உள்ளகங் குலைவுற வுடல மாடுறத்
தள்ளக மாதவந் தன்னி னின்றுவ
ரெள்ளரும் பசியினு லேங்கி யேங்கிநம்
வள்ளலின் முறைமுறை வழங்கி னாரரோ. 26(1055)

### தோழர் சூழ நகருக்கு வெளியே நபி ஏகுதல்

தாவருந் தகுதியின் வழியிற் சார்ந்தவ
ராவியி னுடலென வரிதிற் சூழ்தர
நாவலர் புகழ்தரு நபியு மந்நகர்
பாவரண் புறத்திடைப் பரிவிற் போயினர். 27(1056)

### மணல் குவியல் ஒன்றை அங்கு கண்டனர்

வெண்ணில வழிதரும் பணில மேமணித்
தண்ணில வொடுந்திரை தாவு மெக்கரின்
விண்ணில வமுதமே விளங்கிற் றென்னவோர்
மண்ணில வுங்குவை வள்ள னோக்கினர். 28(1057)

அதை உணவுக் குன்ருக்கித் தர நபி இரந்து திற்றல்

குவிதரும் புளினமே யருகிற் கொற்றமேய்
நபியிறை யவன்றனை நனி திறைஞ்சியீ
தவியென வாக்கிநின் னருளி னீகெனச்
சுவைமொழி யொடுந்துதித் திரந்திட் டாரரோ. 29(1058)

அதை ஏற்று இறைவன் அவ்விதமே ஆக்கினன்

உட்பொரு ளுணர்த்திடு முடைய நாயக
னட்பொடு நபிதுவா நனிதிற் செய்ததாற்
கட்புல னடங்கிடாக் கார ணத்திடர்
மட்பொரு ளுண்டியின் வகுத்திட் டானரோ. 30(1059)

நம்பிக்கையாளர் பசிதீர்ந்து பொலிந்தனர்

நன்னெறி யொழுகிய நரர்க ளியாவருந்
தந்நெறி நபியவர் தகைய மேன்மையாற்
றுன்னெறி பசியது தோற்றுந் தோறுமம்
முன்னெறித் திடரிட மொய்த் திருப்பரால். 31(1060)

அவரவர் கருத்திடத் தாக்கங் கொண்டிடச்
சுவையுறு முண்டிக டொக்க வன்பொடு
நவையற வுண்குவர் நனிதின் மேன்மையிற்
றிவமிளி ருடலொடுந் திரிவர் சீரியோர். 32(1061)

மன்னனை வணங்கியுண்டோர் மெலிந்தனர்

நல்வழி மாறினோர் நஞ்ச வஞ்சகன்
செல்வழி யிணங்கியே செய்ய பொற்கழற்
புல்வழி வணங்கிமுன் பொலியு முண்டியிற்
சில்வழி யேற்றவர் திரிகு வாரரோ. 33(1062)

மேதகை யாளர்கண் மேட்டி னுண்டியே
சாதகங் கொண்டனர் சமய பேதத்தார்
தீதக னிடத்துண வாங்கித் தீதின
ராதகங் குறைதர வழிந்த வீரமே. 34(1063)

பதுக்கிய தானியம் குறையவும் மன்னன் கவலை

குடியினர்க் களிடத்திடக் குறைந்த தானியங்
கொடியவன் சேர்ந்ததா குலத்தி னோர்க்கன்றி
யிடமினி தில்லையா லேக்க முற்றுள
முடைதரக் கவலையி னுயிர்த்திட் டானரோ. 35(1064)



மன்னனிடம் உணவு கிட்டாமல் மக்கள் நபியிடம் சென்றனர்

உண்டியுங் குறைந்ததா லூரி னுற்றிடு
மிண்டுளர் நபியிட மேவித் தாம்படும்
பண்டியா லருங்கலி மாவும் பற்றியே
தொண்டினிற் பலருறத் துளங்கு மன்னனே. 36(1065)

மார்க்கமுங் கொண்டுள மகிழ்வுங் கொண்டுட
லாக்கமுங் கொண்டுண வரிதிற் கொண்டனர்
பார்க்குநங் குடியின ரென்னும் பன்மொழி
கேட்குமச் செவிசுடக் கெழுமு மன்னனே. 37(1066)

கஞ்சி ஊற்றத் தொடங்கிய காவலன்

உண்பொரு ளுண்டவ ணிவணு ளார்க்கெலாந்
திண்பொரு ணிரப்பெனக் கூறிற் செய்தியால்
மண்பொரு ளின்றிக்கை யரிகொள் வாரெனப்
புண்புகும் வேலெனப் புழுங்கு மன்னனே. 38(1067)

அதுவும் குறைய மன்னன் மனங்கலங்கினன்

புந்திய ரறிவினர் பொருவு மாக்கத்தார்
சிந்தையின் மகிழ்வினர் சேர்ந்த பேரென
வந்தியுங் காலையு மலையு முண்மரு
ளுந்தின ரெனவுடற் சாம்பு மன்னனே. 39(1068)

சுருங்கிய கூழினுற் றொடர்ந்த பஞ்சத்தான்
மருங்கினர் தணத்தலான் மதியி லாததாற்
கருங்கரி யுண்டிடுங் கனி விளத்தினே
யிருந்தனன் மன்னவ னணையி னீடிலா. 40(1069)

மணற்பையுடன் மன்னனருகில் நபி செல்லல்

கலிவிருத்தம் (வேறு)

மருவாத வழிகேடன் மனமீது கவலை
யுருவாக வணைமீதி னுறுகாலை யொருநா
ளருளோடு நபிநாத ரரியோன்மு னுதவும்
வருமூணின் மணன்மேடு மகிழ்வோடு மடைந்தார். 41(1070)

அணிதோளி னுறுசோலி யதன்மீதி னிறைய
மணியேயு மண்லேபெய் துளமேய மகிழ்வின்
கணியாத புகழோடு கருதாவ லரச
னணிபீட மருகாக நபியேகு மளவே. 42(1071)

என்னென்று அவன் வினவ இறைவன் தரும் உணவு எனல்

வலத்தோர்க ளணித்தோடு மறத்தேய கயவன்
றலத்தேகும் வரத்தோர்க டவத்தோரை யருகி
னலத்தோடு விளித்தேயி னயச்சோலி யதனுள்
பலத்தாய பொருட்டோது பணித்தோது மெனவே.
43(1072)

குறிக்காது நிலைத்தோன்மெய் குணத்தாதி மகிழ்வின்
மறிக்காது நலத்தோடு மதித்தோது மெமரும்
வெறுக்காது பசிக்காக வியப்போடு முணவே
நிறுக்காது கொடுத்தாளு நிகழ்த்தாத வுணவே. 44(1073)

மன்னன் அள்ளியது மணலாக, நபி எடுத்தது உணவாயிருத்தல்

ஈதென்று நபிசொல்ல விருசிந்தை யரையன்
ஆதங்க னெகிழ்கென்ற வளவன்பின் விடவே
கோதொன்று கரமுங்க விறல்கொண்டு பிடியின்
மீதள்ளி யதுகண்டு வெருவுண்ட பொழுதே. 45(1074)

இலவின்கண் மலரென்ன வெழில்செய்ய மணலாய்
நலவங்கை யுறமுன்ன நபிதங்கள் கரமே
வலமுங்க வினிதள்ளி வலியின்மு னரையன்
குலமஞ்ச வணியின்ப முறக்கொண்டு மளித்தார். 46(1075)

உணவு கோதும்பு கனியாயிருத்தல்

நீதஞ்செய் நபிசெங்கை நிறைகின்ற வஃதே
வாதஞ்செய் மணியென்ன வளமுண்டு மதுரக்
கோதும்பு கனியன்பின் குணமல்க கயவன்
சேதஞ்செய் விழிகொண்டு தெரிகின்ற பொழுதே. 47(1076)

நபிக்கும் தோழர்க்கும் நாயன் அளித்த உணவென
அதில் எழுதப்பட்டிருத்தல்

வரமுற்ற நபிகத்தர் மனமெய்க்க விவர்க்குந்
தரமுற்ற மதிமிக்க தகைபெற்ற வெவர்க்கு
முரமுற்ற வொருசுத்த னுதவித்த வுணவென்
றரிதுற்றி டுமெழுத்தை யவைமொய்ப்ப வுணர்ந்தான்.
48(1077)

மாய வஞ்சனை புரிந்தனை

பொறிகொண்ட நெறிகண்டு புனைவஞ்ச மனத்தா
னறிகின்ற நபிமுன்பி னடர்கின்ற வெமரை
வெறிகொண்டு முளமுன்றன் விரிவஞ்ச னையினே
சிறைகொண்டு நிலைநின்று திரிகொள்ள முடித்தாய். 49(1078)



எனைவிடுத்து உன்பக்கம் வந்தோர் அலைந்து திரிவர்

எடுத்தென்றன் வசத்தன்ப ரினத்தென்சொ லதனை
விடுத்துன்றன் புறத்தண்டும் விதத்தொன்றும் புணராத்
தடுத்திங்ஙன் மறத்தங்கந் தடத்துந்து முரணுற்
படுத்தும்புன் செயற்கொண்டு பலத்தெங்குந் திரிவார்.
50(1079)

இந்நகர் விட்டு அகல்க, இல்லையேல் கேடு வரும்

ஆளுந்து நின்சேனை யவரோடு மென்றன்
கோளுந்து நகர்நீந்தி நீகொண்ட நிலையின்
மீளுந்திண் சிலைவீர விறல்வேந்த னென்சொற்
கேளும்பின் னிலையாகில் வருகேண்மை யுணர்மின். 51(1080)

இந்நகர் விட்டு நீங்கோம் என்று நபி உரைத்தல்

வலிவீர னுரைசெய்ய வண்மைக்கு மேக
நலிமேவு நலிவின்றி நவமேவு கையார்
சலியாது தகையோடு மென்னோடு முறுவார்
மலிவோடு நகரீது மதியோடு மகலேம். 52(1081)

என் மூதாதை நூகு நபியின் சந்ததி வாழும் ஊர் இது

உலகாடை யெனும்வாரி யொருவங்க மதனு
லலகாய வுயிர்யாவு மரிதாளு மென்ற
னலனேய மூதாதை நனிதீயு மரபிற்
குலனுரு முறையானென் குடிகொண்ட நகரம். 53(1082)

உன் தந்தையை அநியாயமாய்க் கொன்று ஆட்சியிலமர்ந்தாய்

மனவஞ்ச மதுகொண்டும் வலிகொண்டு முன்ற
னினம்வந்த முதுவன்பி னுடுதந்தை கவுரத்
தனதென்று மவன்சென்னி தனைகொண்டு பின்ன
ரெனதென்று நினைவுண்டு மிவணின்றை யெனவும். 54(1083)

இப்போதாவது நேர்வழிப்படு

மதமீறு மொழியாவு மனமீதி னியையாக்
கதமீறும் வழிநீங்கி மிகுகா ரணமுமாய்
அதிநேய வருளாதி யவனென்று முறுதி
விதிபூண்டி யிப்போதில் விறல்பூண்பை வயவ. 55(1084)

### பொய் வழியிலேயே நீ நின்றால் உன்னை அழிக்கும்படி இறைவனைக் கேட்பேன்

மெய்ப்பாதை புக்காது வீறுற்று நிற்கிற்
பொய்ப்பாதை நிற்பார்க ளுன்சேனை பொலிவுங்
கைப்பாக நின்னோடு காணாது மாழ
விப்போது வல்லோ னிடத்தே யிரக்கும். 56(1085)

### நமுறூதின் கோபமும் சோகமும்

இவ்வாய்மை யென்கோ னெடுத்தோத வஞ்சந்
துவ்வாளன் வெங்கோப முஞ்சோக முற்றே
யொவ்வாது புன்செய்தி யோடுங் கடுப்பின்
வெவ்வாறு கொண்டான் மறத்தால் விதத்தால். 57(1086)

### நபி இபுறாகீம் தமது இல்லம் திரும்புதல்

சொன்மைக்கு மஞ்சிற் றுளங்கேறி னேனன்
வன்மைக்கு மண்டத்து வன்சோதி யென்னப்
புன்மைக்கு மஞ்சத்துப் புன்றீமை யின்றி
நன்மைக்கு நெஞ்சுற்று நின்றார் நடந்தார். 58(1087)

புவியாவு நசையாக வருகின்ற புனித
நபியார்த முளமீது நயமே விளக்கிப்
பவமோடு முறுவேந்தி னதுபன்னு மனுவா
சவிபோக வனைவீடு தனின்மே யிருந்தார். 59(1088)

பகைவர்க்கிலம்பாட்டுப் படல முற்றிற்று.
ஆகப் படலம் 19-க்கு கூடிய திருவிருத்தம் 1088.

—○—

# 20. காமரத்தாக்கிய படலம்

### பஞ்சத்தினால் வாடிய மக்கள் மன்னன் முன் செல்லல்

கலிவிருத்துறை

வெய்ய வெங்கதிர் வேலுடை வீரர்கள் சூழச்
செய்ய பொன்மணித் தவிசிடந் திருந்தல னிருப்பப்
பொய்யி னின்றவந் நகரினர் பசிபொறி யதனு
லுய்ய வேறின்றி யுடைந்தன ருடலொடு முளமே. 1(1089)

கண்ம ருண்டனர் நெஞ்சக மருண்டனர் கருத்து
ளெண்ம ருண்டனர் தந்நிலை மருண்டன ரிரிந்துப்
புண்ம ருண்டவர் போன்றவ ரிரைப்பொடும் புன்மை
யுண்ம ருண்டமன் னவனிடத் துற்றவர் தொழுதார்.
2(1090)

### மாறுபட்டவர்கள் சுகித்திருக்க நாங்கள் சாகிறோம்

நமக்கு மாறுரை நபியென வந்தவர் நவின்ற
சுமக்கு மென்சொலி னின்றவர் சுகமது படரத்
தமக்கு நண்பொடு மூண்டியே தணப்பிலா துவகை
சுமைக்கு மாக்கமே கொண்டுறக் கண்டன மியாமே. 3(1091)

வருந்து மாக்கையின் வறுமையங் கடலிடை மாழா
திருந்தி யாதொன்றுங் கேட்கிலே மிருவிழி கொண்டும்
பொருந்தி லேமிஃ தெமர்செயும் பொருபலன் கொல்லோ
விரிந்த வெங்கதிர் வேல்வலத் தரசநும் விறலே. 4(1092)

### தொடர்ந்து உணவளிப்பின் உம்மைத் தொழுது வருவோம்

நாளு நண்பொடு நறுமுண வினிதொடு முண்பா
ளுளுந் தன்மையின் மிக்கொடு மளித்திரே லன்பின்
கோளுந் தந்திடா துங்கழ ளுழுகுவங் குறியின்
மீளுந் தாவருந் தகுதியிற் பிசகின்றி மேமே. 5(1093)

### உணவு தராவிடில் நபிவழி சென்று நலம் பெறுவோம்

அன்றி நல்லுண வருகுமே லாண்மையிற் றிறத்த
வென்றி மன்னபி யுரையினை வியப்பொடும் பெற்று
நின்று மேன்மையி னடைகுவ மென்றனர் நிரையார்
துன்று மன்னவன் கேட்டன னயர்ந்தனன் றுளங்கி. 6(1094)

மன்னன் வெகுண்டு ஆசறைக் கொணர்க எனல்

வெஞ்ச முற்றன னுரறினன் வெள்ளெயிற் றதரம்
பஞ்சி னற்றன முகஞ்சிலிர்த் துடலமும் பதற
நஞ்ச ழற்பொறி யுகவிழி நணுகினர் விழித்து
நஞ்சொ லாசறைக் கொணர்கென நவின்றனுப் பினனே. 7(1095)

ஆசறு வந்தனன்

வேக மன்னவன் றூதுவர் விரைந்தனர் விழைவின்
யூக மன்னவற் குரைத்தனர் நடுக்கொடு முடனே
யேகி யன்னவன் றிருக்கழ லினிதொடு மிறைஞ்சிப்
பாக மன்பொடுங் கரமிணைத் திருந்தனன் பரிவின். 8(1096)

உன் மகன் மக்கள் மனம் கலைத்து இடர் விளைக்கின்றான்

நின்ன வத்துடை மகனிபு ருகிமென் னிலையின்
மன்ன லத்தினர் கருத்தது கலங்குற மலைவு
மின்ன லுங்கொடுத் திருந்தன னிடர்பல விளைத்துப்
பன்ன லத்தின ரியாரையும் படுத்தினன் றன்சொல். 9(1097)

உனக்காக இதுவரை பொறுத்தேன்

என்னி லத்தினி லியாவர்க்கு மிறையென விருந்த
நின்ன லத்தினை நின்றெழில் வியப்பினை நின்றன்
மென்ன லத்தினை நோக்கியே பொறுத்தனன் வேறுந்
தன்ன லத்தினை வாங்குத லரிதன்றென் றனக்கே. 10(1098)

அவனை யழிப்பது எனக்குப் பெரிதன்று என உணர்வாய்

போத மேமுதற் றுணைபல பொருந்திய மன்னர்
நீத மேயென முறைநெறி நோக்கினே னெஞ்சிற்
காத மேகொடு கோறலே வலிதன்று கருத்தி
னீது நன்குணர் கென்றன னிருமனக் கயவன். 11(1099)

என் சொல் கேளாது பயனற்றுப் போனவனை எப்படியும் செய்க

மணிகொள் பொற்புய மன்னவன் செழுங்கழல் வணங்கி
யணிகொ ளாண்டகை வல்லவ வரியவென் மகவைப்
பணிகொண் டென்பணி கொண்டிலன் பண்புளங் குறியாத்
தனல்கொண் டேன்வெறுத் தகன்றது தகையவென்
மனமே. 12(1100)



என்சொற் கேட்டில னென்பயன் றருகுவ னிவனால்
வன்சொற் கேட்டனன் வடுவது வளர்ந்தது மன்னே
நின்சொற் காக்குக நிலைத்தில னாகினின் னரசிற்
புன்சொற் காண்கிலா தியாதெனும் பொருந்துறச்
செய்மின். 13(1101)

எமக்கு நற்பயன் கொடுத்தவ னன்றிய னகரார்
தமக்கு மப்படி யியற்றுவன் றகையில னதனா
னுமக்கு ளங்கொள வன்றே னுவன்றிடுந் தண்டஞ்
சமைக்க வென்றனன் வினையிலாத் தபதிய னன்றே.
14(1102)

மனத்துள் விரோதம் வளர, பெருநாள் ஒன்று வந்தது

கேட்டு மன்னவன் வயிரமே கிளைதர மனத்துட்
பூட்டி நின்றனன் சிலபகல் கழிந்தன புதிய
நாட்டி னன்னக ருளர்க்கெலாம் பெரியநா ளடுத்து
வேட்ட முற்றிட வந்தது மகிழ்ந்தனர் வியந்தார். 15(1103)

நகருக்கு வெளியே சென்று சிலைவணக்கம் செய்தனர்

இயல்பி னாண்டினிற் கொருவிசை யெதிர்த்திடி லெவரும்
பயிலு மேன்மையி னகர்ப்புறம் பரிவொடும் போந்து
முயலி லாப்பல பொழுதுற்று முறைமுறை தெய்வத்
தயல்கு லாவிநன் கிறைஞ்சுத லாக்கமே கொண்டார்.
16(1104)

மன்னனும் அமைச்சரும் மக்களும் புறநகர் போயினர்

அன்ன மேன்மையி னப்பொழு தந்நக ருறைவோர்
பொன்ன மாமணி பணியொளி புரடரப் புதுக்கிச்
சொன்ன நற்றுகில் பற்பல வுடுத்தெழி றுலங்கு
மின்ன றுஞ்சிய வூர்தியி னெழுந்தனர் வியந்தே. 17(1105)

பொழியுந் தாரையின் மதமலை நெருக்கொடும் பொருவுங்
கழிவி லாத்திறக் கவனவெம் பரிவளி கடுப்ப
வெழில்கு லாமணி யிரதமு மிருஞ்சினத் துழவர்
குழுவுஞ் சூழ்தர வெழுந்தனன் கொடிய மன்னவனே.
18(1106)

செய்கை நோக்கிய வமைச்சர்க டேர்ச்சியிற் றுணைவர்
பொய்கை நோக்கிய தன்பதி பொருதள பதியு
மெய்க ணோக்கிய வணியொடு மிகையொடு மெழுந்தார்
கைக ணோக்கிய கொடியொடுங் கவிகையுந் துன்ன. 19(1107)

சீத வெண்புனல் மஞ்சன மாடியத் தெளிவிற்
கோத றுந்துகிற் புனைந்துபொற் பணிபல கோடிக்
காதும் வேல்விழி யஞ்சன மெழுதிவண் கலவை
போத வாடையி ஞரியர் பொலிந்தன ரன்றே. 20(1108)

கலம்பு னைந்தெழி றுளங்கிய கதிர்மணி வயிரத்
துலம்பொ ருந்திறற் புயத்துடை யொளிரயில் வலத்துப்
பலம்பெ றுந்திருக் குமரர்கள் பல்லவர் சிவிகைக்
குலம்பி றங்கின மதியென வெழுந்தனர் குழுமி. 21(1109)

முதியோர் தவிர்த்து அனைவரும் போக, ஆசறு மகனை அழைத்தல்

தளர்ந்தி ருந்திடு நடையிலா விருத்தர்க டவிர
வளர்ந்த நல்லெழிற் குழவியே மலர்க்கரத் தணைத்தா
ரிளங்கு றித்திடும் பல்லவ ரெழலும் பின்ஞசரி
வளங்கு றத்தரு மகனையும் வினவினர் வழியால். 22(1110)

மனமில்லை, பிறரொடு செல்க என நபி கூறல்

மனந்தி ருத்தமே யுளவெனில் வருகுவ னஃதி
னினந்தி ருந்தில வாகையி னலிவிருந் தவனுத்
தனந்த னித்திருந் தனனிவ னவரொடுந் தகையிற்
சனந்த ளத்தொடுஞ் செல்கநீ ரென்றனர் தவத்தார்.
23(1111)

நகர் நீங்கி மதிலுக்கப்பால் போனவர்களின் வருணனை

செழீஇய மாமணி யாரங்க டிரட்புயம் புரளக்
குழீஇய பேரொடு மாசறுங் கூடின னதிருந்
தழீஇய தண்ணமு முழவுமே திசைதிசை தழைப்ப
வழீஇய மன்னொடும் பெரும்படை வலத்தொடும்
பெயர்ந்தார். 24(1112)

வேன்ம ருண்டனர் வெங்கணை மருண்டனர் வில்லின்
கான்ம ருண்டனர் கான்மருள் வாம்பரி கதத்தார்
பான்ம ருண்டவந் தேமொழிப் பாவையர் சிறந்த
மான்ம ருண்டகண் புருவமு மலிகின்ற மறத்தால். 25(1113)

இருபு றத்தினுங் கற்றைக ளிடையொளிர் மதியின்
றிருமு கத்துவெண் சாமரை நாரியர் செழுங்கைக்
கருமு கைத்தரு மம்புயங் கடுப்பவக் கயவன்
பொருமு கத்தொடு மதத்தொடும் போந்தன னன்றே.
26(1114)



மன்ன ரோரணி மந்திர ரோரணி மறத்திற்
றுன்ன ரோரணி சேவக ரோரணி துதிக்கு
மன்ன ரோரணி குமரர்க ளோரணி மடவார்
பின்ன ரோரணி திசைதிசை பிறங்கிட வன்றே. 27(1115)

செய்ய தாமரை செங்கழு நீர்செழும் பான
னெய்ய முப்பழங் கமுகொடும் பனையொடு நுவன்ற
ன்வய தெங்கிள நீரணி வாழைக ளினைய
தைய லாம்பொழிற் றண்டலைத் தலைவர்போ யின்றூர்.
28(1116)

கலவை துன்னிய மார்பணி கதிர்முத்த வொளிவா
லுலவு பொற்கொடி யவர்விழி மலர்தர வுரத்தி
னிலவு மன்னவர் செம்முக விழிநிலை கொளலுஞ்
சலச வண்கர மலர்தரப் புதைப்பர்நாண் டகையார்.
29(1117)

கருங்கண் வேலொடுங் கணையொடுங் கருங்குடித் தனுவு
மருங்கு நற்கொடி யானனங் கவிகைவண் டனங்கள்
பொருங்கை யானைமென் னடைபரி புனைந்திடுந் தானை
யொருங்கு.பேரணி மன்னவ ரொத்தனர் மடவார். 30(1118)

மன்ன னேமுத லனைவரு மாநகர் விடுத்துப்
பொன்ன நீண்மதி லப்புறம் பூம்பொழிற் புகுந்து
நன்ன றும்படு மாந்திநட் புடையவர் புடைய
வின்ன னீத்தன மென்றவ ணிருந்தன ரன்றே. 31(1119(

இபுருகீம் நபி கோயிலுக்குச் செல்லல்

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

வரத்தினிற் றகைய மிக்கோர் மனதினை விடத்தி னுற்ற
திரத்துடை முகம்ம தம்பொற் செழுமணி முகத்து வள்ளற்
றரத்துட னெழுந்து நெஞ்சிற் றருக்கொடுங் குபிரர் போற்று
மரத்தவ னபண மொய்த்த மாளிகை யிடத்திற் புக்கார்.
32(1120)

சிலைகள் முன்பு தின்பண்டங்கள் படைக்கப்பட்டிருந்தன.

பன்மணி யிலங்க வண்ணப் பட்டுடை மிளிர வாசச்
சின்மலர் களபம் வீசத் தீபமும் விரியல் செய்ய
பொன்மணிச் சிலைகண் முன்னர் புதியபோ சனம்பா றேனெய்
வன்மணக் கனிகள் யாவும் வைத்தவ ணிருப்பக் கண்டார்.
33(1121)

சிலைகளை எள்ளி நகையாடினர்

கொடியவ ரிருந்தி லாரோ குறித்துமை யிறைஞ்சி லாரோ
மடிதர விணங்கி லாரோ வாய்வையா தென்கொ லுண்டி
நெடிதுற நோக்கா தென்னே நேர்ந்திடுங் கெடுதி யென்னே
விடுதிவிட் டேகா தென்னே யெனநபி விளைதஞ் செய்தார்.
34(1122)

உம்திறங் காண்கிறேன் என மழுவைக் கையில் எடுத்தல்

தன்னறி வில்லா ரென்னத் தம்முணர் வில்லா வண்ண
மின்னணி சிலைக ணிற்ப வேறொன்றுங் கருத்துட் கொள்ளா
தென்னை நுந் திறங்கள் காண்டு மெனநபி மருங்கு நோக்க
வன்னவா லயத்திற் பண்டத் தறையினோர் மழுகைக்
[கொண்டார். 35(1123)

சிலைகளை சின்ன பின்னப் படுத்தினர்

காலொன்றுங் கையு மொன்றுங் கண்ணொன்றுங்
[காது மொன்று
மேலொன்ற மாறின் மாற்றி வேற்றற வாஞ்சப் பூண்கள்
பாலொன்றும் படியி னுக்கிப் பறிதலை யுடைகள் செய்து
மாலொன்றுஞ் சிலைகண் மற்ற வடிவத்திற் பிளந்தா ரன்றே.
36(1124)

பெரிய சிலையின் தோளில் மழுவைச் சாத்திவிட்டு வெளியேறினர்

சிற்றுரு வினங்க ளெல்லாஞ் சிதைத்துவெண் டொடையல்
[பூண்ட
மற்றொரு பெரிய பாவை மணிப்புயத் திடத்தி னூடா
துற்றுற மழுவுஞ் சாத்தி யுணவினைக் காலி னெற்றி
நிற்றகை தீபந் தள்ளி நிலைதவிர்த் திறைவர் மீண்டார்.
37(1125)

விழா முடிந்து வந்தவருள் சிலர் கோயிலுள் வந்தனர்

வென்றியி னயினூர் மேவும் விறன்மனை யடைந்தார் பின்னர்
வன்றிற லுடைய தீயோர் வனப்பொழி லுகர்ந்து செவ்வி
துன்றிய பெருநா ணித்துச் சுடர்முடி மன்ன னோடுஞ்
சென்றணி நகர்த்தி யாருந் திருமனை யிடம்புக் காரே.
38(1126)

சத்தியுங் கருத்துங் கொண்டு தாழ்தரும் பகைவர் தம்மிற்
சித்தமுற் றரிய கோயிற் சிலர்வந்து புகுந்தா ரங்ஙன்
வைத்திடு முணவுந் தெய்வ வடிவிழி கோல மியாவும்
பத்திய வெகுளி யோடுங் கண்டவர் முகிழ்த்தார் பார்வை.
39(1127)



இவ்வித அட்டூழியம் புரிந்தவர் இபுறுகீமே எனத் துணிந்தனர்

காரதி ரிடிவீழ்ந் தென்னக் கடலிட மாழ்ந்தா ரென்னச்
சீரதி ரகத்தி னஞ்சித் திகைப்பொடும் வெளியி னுற்றுப்
பேரணி யிலங்குந் தெய்வம் பிரிதர வின்ன நிந்தை
யாரவவ் வனீதங் கொண்டா ரெவரென வவரே
[யோர்ந்தார். 40(1128)

வான்படர் பனியிற் றிங்கள் வழிபடு மிருவி தென்னத்
தான்படுந் தகையி னுளுந் தருக்கொடு புறங் கணிக்குங்
கோன்படுங் கோட்டிக் கெல்லாம் வயிரமே கொண்ட வீர
மான்படு மிபுறு கீமே மனத்துணி வென்ன வாய்ந்தார்.
41(1129)

உளங்கலங்கி மன்னன் முன் சென்று முறையிட்டனர்

கலங்கிய வுள்ளத் தூடுங் காரணத் துணிவு கொண்டு
துலங்கிய முத்தி னூரந் திரண்டதோட் டிறத்து மன்னர்
வலங்கொளு மவையின் வஞ்ச வயவன்முன் னிவர்கள் நந்தங்
குலங்கொளுந் தெய்வ மின்னோன் கொடுமையே செய்தா
னென்றூர். 42(1130)

இபுறாகீம் நபியைப் பிடித்துவர மன்னன் கட்டளை

அருகினின் மன்னன் சூழ்ந்தோ ராக்கமுற் றெவருங் காண்ப
வருநமர் கொடிய தண்ட வாதமே பேதங் கொள்ள
வெருவுற வுளமு மீதே விறலென மதிப்பா னுகப்
பெருமிபு றுகீந் தன்னைப் பிடித்திவண் கொணர்மி
னென்றூர். 43(1131)

மன்னன் முன் நபி நிறுத்தப் படல்

செங்கதி ரிலைவே லேந்துஞ் சீற்றத்தா ருருமிற் பொங்கி
வெங்கணை விசையிற் போந்து விறனபி யென்னுந் தூய
திங்களைத் தொடர்ந்து ஞாயத் தொகுதியி னரசன் றூங்கர்
பங்கய முகத்தார் முன்னர் பரிவொடும் விடுத்தா ரன்றே.
44(1132)

எம் தெய்வப் படிமங்களைச் சிதைத்தவன் நீதானே?

எழிறரு மெமர்க டேவ ரிருந்தவா லயத்திற் புக்கி
யழகுறுஞ் சிறிய பாவை யனைத்தையுஞ் சிதைத்து வன்பின்
மழுவுமூ துருவத் தோளின் வைத்தல்நின் றிறங்கொ லென்ன
வழுவுறச் சூழ்ந்த வீர மன்னவர் வினுயி னூரால். 45(1133)

சிறுசிலைகள் தன் பெருமைக்கு இழிவு என பெரிய சிலை நினைத்திருக்கலாம்!

பெருமையென் றுவந்த தானும் பிறிதின்றென் றுன்ன லானு
மிருமையென் றியம்ப லானு மிதன்றொழில் முயற்சி யானுங்
கருமையி னின்ன நிந்தைக் கருத்தொடும் அஆஅ யாவ
ரருமையிற் செய்மன் வல்லா ரறிமின்க ளுணர்வி னன்றே.
46(1134)

யாருமில்லாச் சமயம் பார்த்து இச்செயல் செய்திருக்கும்

வலத்துரு பன்மை கொண்ட வரன்முறை யதனுற் றற்குக்
குலத்துடை நீவிர் செய்யும் பரிசது குறையென் றெண்ணித்
தலத்தினி லெவருங் காணுத் தருணமோர்ந் தின்ன நிந்தை
சலத்தொடு முதிய பாவை மழுவினுற் றகைய வன்றே.
47(1135)

யார் செய்தது எனப் பெரிய சிலையையே கேளுங்களேன்

அன்றியச் சிலைக ணீவி ரன்புற வியம்பு மாகி
னின்றவிக் கொடிய கோல நகையது நிலைக்கச் செய்த
வன்றிற னியாவ னென்ன வழியொடும் வினவிக் கேண்மி
னென்றெதிர் கடாயி னூர்நம் மிருதயத் திருந்த கோமான்.
48(1136)

விடைகூற வழியின்றி அவர்கள் மயங்கல்

நயத்தொடும பயத்தி னேடு நபியவர் கடாவிற் கங்ஙன்
வயத்துடை யவர்கள் வேறு மறுமொழி வினவற் கேலாக்
கயத்தொடுங் களிறுங் கொப்பங் கலங்குற வீழ்ந்ததென்ன
மயத்தொடுந் தத்த முள்ளே மாழ்கியே யாய்தல்
கொண்டார். 49(1137)

நாம் கேட்டாலும் நமக்கு விரோதமான விடை கிடைக்குமோ என எண்ணல்

விளக்கிய கணத்திற் றுமே விரிவுல கெவருங் கேட்கி
னளக்குறு மநீதங் கொண்டோர் நீவிர்க ளன்றி யாமோ
களக்குற நின்றோ மென்னத் தத்தமே கலங்கா நிற்பத்
துளக்குவார்க் கிடையிற் சென்னி கோட்டுவார் சோர்ந்த
சொல்லார். 50(1138)

அச்சிலைகள் பேசுவதில்லையென அறிந்து தானே நீ பேசுகிறாய்

முன்வருங் கணத்தார் பின்னு முரனொடு மியாங்க ளுளும்
பொன்வரும் பணிகள் பூட்டிப் பூவொடும் வணங்குந் தெய்வந்
தன்வரு மொழியு மின்று தானுமே யுரைக்கா தென்ன
வின்வரு முளத்திற் கொண்ட வியல்பினீ யிசைத்த தன்றே.
51(1139)



தனக்குறும் இன்னலைத் தவிர்க்க முடியாததை வணங்குவதேனோ

உட்புல னுகர்ந்த வண்ண முரைத்தனை யன்றி வேறுங்
கட்புல னன்றென் றன்னோர் கருத்தொடுங் கழற வள்ள
லட்படு மின்ப துன்ப மதன்றிறஞ் செய்யா தென்னிற்
பட்பட நீவிர் தாழும் பாவினை யென்கொ லென்றார்.52(1140)

மனத்தில் வஞ்சகங் கொள்ளல்

நாயகர் வினவு மேன்சொ னயனுறுங் கடாவின் றுலு
மேயவித் தகையி னுண்மை வேறென வுணர்த்த லானுந்
தீயவச் சிலைக ளென்ன நெகிழ்ச்சியே திறத்த லானுங்
காயழ லுளத்தார் வஞ்சங் கருத்திடை நிறைந்த வன்றே.
53(1141)

இவன் செய்த தீச்செயலுக்கு இவனைத் தீயிலிடவேண்டும்

திரண்டவர் பணிந்து மன்னன் றிருமுக நோக்கி யின்ன
முரண்டர மொழியு மாற்ற முற்றலா னிவன்செய் கோலம்
விரண்டரு மெவர்க்குங் கேட்ட செவியுமே வேகு மந்தோ
விரண்டரு வதனு னுமு மெரியிடம் படுத்தல் வேண்டும்.
54(1142)

கண்களுந் தீயக் கேட்குங் காதருந் துணையுந் தீய
மண்களுந் தீய நெஞ்ச மதியதுந் தீய வுள்ளத்
தெண்களுந் தெய்வந் தீய வவ்வினை செய்தோன் கைவாய்
வண்களுந் தீய்த்த னுளு மானமே மலியு மன்னே. 55(1143)

கைசத்து என்பவன் இவ்வாறு கூற மன்னன் இசைதல்

புடையினுன் கைசத் தென்னும் பொருப்பினி னினத்த
வன்மை
மடையனுர்க் கதிப னின்ன வாசக முணர்த்த மன்னன்
கடைபடு முளத்தி னீதே கருத்தென மகிழ்ந்து வேகத்
தடையல ரெரிக்குஞ் சுல்லி யதனையே கொணர்மி
னென்றுன். 56(1144)

மாபெரும் அடுப்பொன்றில் தணல் நிறைத்தனர்

நன்னிலை யுணராப் பாவி நண்ணிய சிந்தை யுற்றப்
புன்னிலை யென்ன மாசிற் பொதிகருந் தாதி னுக்குங்
கொன்னிலை காம ரத்திற் கொழுந்தழ னிலைரத்து முன்னர்
சொன்னிலை யென்ன வைத்தா ரவருளஞ் சுடுதற் கன்றே.
57(1145)

கோமான் நபியின் கால்கை கட்டி அடுப்பில் போட்டனர்

கொழுந்துவிட் டெரியுஞ் கல்லிக் குழியிடை மன்னன் சொற்போ
லெழுந்தகை யெந்தங் கோமான் கால்கர மிணைத்துக் கட்டி
யிழிந்தகை வினையா ரேந்தி யடர்தர வெறிந்தா ரென்னி
லழுந்திய துன்பம் பற்றி யாவரே யவலங் கொள்ளார். 58(1146)

சுடமறுத்த நெருப்பும் மதியிலார் மயக்கமும்

காண்டகாப் பொருளின் வல்லோன் காரணத் ததனுற் செந்தீத்
தீண்டிடாத் தழலாத் தண்ணந் திகழ்தர நயினூர்க் கின்னல்
பூண்டிடா திருப்பக் கண்டு புதுமையிற் புதுமை யென்ன
மாண்டிடுஞ் சிந்தை கொண்டார் மயக்கமே கொண்டா ரன்றே. 59(1147)

இபுருகீம் நபி மீண்டும் சிறையிடப்படல்

அழற்குழி விடுத்து நீக்கி யடர்தருங் கொடிய மன்னன்
கழற்குழி யனைய வெய்ய கடுஞ்சிறை சாலை தன்னின்
மழக்களி றனையான் கொண்டு வைக்கவென் றுரைப்ப வீரர்
பழக்குமவ் வாறு செய்தார் பார்த்திபர் காப்பி னுற்றூர். 60(1148)

காமரத்தாக்கிய படலம் முற்றிற்று
ஆகப் படலம் 20-க்கு திருவிருத்தம் 1148.

--○--

# 21. சுவாலய மெறிந்த படலம்

மன்னன் தன் அவையினரிடம் கூறியது

கலிவிருத்துறை

பொன்ன மாமுடி மன்னவன் பொறியழல் விழியின்
மின்ன நன்மணி யாசனத் திருந்துவெவ் வயின
மன்னி நின்றிடும் வீரியர் மந்திரர் வலத்திற்
றுன்னி நின்றவர் நோக்கியே யினையன சொல்வான். 1(1149)

இபுருகீமின் திமிர்தீர வழி கூறுங்கள்

திறத்தி னின்னவ னழலிடுஞ் சுல்லியுந் தீயா
மறத்தி னின்றவ னுக்கமு மூக்கமு மதமும்
புறத்தி னேகமற் றொருபெருஞ் சூழ்ச்சியே பொருந்தக்
குறித்துக் கூறுமி னீரென வினவினன் கொடியோன். 2(1150)

அவையோர் கூறியது

உரைத்த மன்னவ னியாவரு மெழுந்தொளிர் கழலிற்
சிரத்தி னுற்றெழு திருகரங் குவித்துமுன் றிருந்த
தரத்தின் வஞ்சனைச் சூனியத் தியன்முறை தகையோன்
கரைத்தி ரங்குவான் சூழ்ச்சியீ தெனக்கழ றுவரால். 3(1151)

ஆழ்ந்த அகன்ற பெருங்குழி வெட்டி மதிலமைக்கவும் வேண்டும்

வல்லு ரத்தினர் நிலமகழ் பவர்மலிந் தாழ்ந்த
செல்லு ரத்திடுந் தாவருங் குழியொன்று திருத்தி
மல்லு ரத்தநீண் மதிற்புற நான்கினு மியற்றிச்
சொல்லு ரத்தினுஞ் சுடுந்தழ னிறைத்திடல் வேண்டும். 4(1152)

இறுக்கிக் கட்டி அதில் எறிந்தால் எரிந்து படுவன்

பரந்த செந்தழற் குழியிடை பரிவுடற் றளரப்
புரிந்த முப்புரிக் கயிற்றினி லிறுக்கிவன் புடைய
வெரிந்தி டும்படி யெறிந்திடி லெடுத்தமந் திரமுந்
தெரிந்த சூனியந் தேய்தர வவனுந்தீய்ந் திடுவன். 5(1153)

மன்னன் அதை ஏற்க, பெருங்குழி தோண்டல்

என்று கூறலு மன்னவ னெழின்முடி துளக்கி
நன்று நன்றென வுரைத்தன னவையொடும் பணித்தான்
சென்று வன்றிறக் கொட்டினுல் வெட்டிமண் செறித்தே
துன்றி நின்றகழ் வார்பெருங் குழிதுலக் கினரே. 6(1154)

### பகைவர் வெட்டிய படுகுழியின் பரிமாணங்கள்

அகலத் தாழ்வினி னீளத்தி னிருதலை யடுத்துப்
புகலும் வன்றொனி செவிகொளாப் போக்குள வருகிற்
சிகர மால்வரை யெனத்திசை நான்கினு மாண
நிகரி லாதெடுத் துயர்த்தினர் நேரல ரன்றே. 7(1155)

### அனைத்து மக்களும் விறகு சேகரித்துக் கொணர்ந்து கொட்டினர்

சலங்கொ ளந்நக ராடவர் நாரியர் தாமும்
விலங்கி னங்களு மிந்தனக் குவைகொண்டு மேவான்
றுலங்கும் பொன்முடி மன்னவன் பணித்தனன் றொடர்பிற்
குலங்கள் யாவுமே யிவ்வினை கூடின குழுமி. 8(1156)

### ஏகத்துவ வழிநின்றோரும் கழுதை தவிர பிற விலங்குகளும் ஒத்துழையாமை

வல்ல நாயகன் மகத்துவ மதித்திடு மவரும்
புல்லும் வேசரி யன்றிமற் றொழிந்தவை பொருந்தா
தல்ல லோடு மொருஉநிலை யாயின வவன்சொற்
கொல்லு மாந்தரு மஃதுமே யுவப்பொடுஞ் செய்த. 9(1157)

வேச ரிக்குல மடங்கலு மஃதியன் மிகையக்
காசு றும்பல ரிவ்வினை முயறரக் காணோய்
மூசு கின்றதின் விறகிடு நேர்ச்சைமூ தவ்வை
யேசு கொண்டதே தொழில்கொளு மினையவன் மனமே. 10(1158)

### குழியை விறகினால் நிறைத்த கயவர் கூட்டம்

வஞ்ச முற்றவர் பற்பல வங்கிடர் பருவத்
தெஞ்சி நின்றவர் சிறுவ்ர முதன்மனத் தெரியாற்
புஞ்ச முற்றவே யிந்தன முறைமுறை பொலிய
வஞ்ச லற்றிட நாடொறுங் குழியது நிறைத்தார். 11(1159)

வழியு வந்ததால் வஞ்சக முவந்ததால் வசனத்
திழிவு வந்ததா னேர்ச்சை யுவந்ததா லேந்தல்
மொழியு வந்ததா னரக முவந்ததான் முயற்சிப்
பழியு வந்ததாற் பலவிற குவந்தனர் பகையர். 12(1160)

வன்றி றத்தினிற் கயவர்கள் மரபினி னயினார்
துன்றி நின்றநற் கருணையே யொதுக்கிப்பற் றுயரஞ்
சென்று நிற்பவெஞ் சினமது விடுவ தற்காக
வன்று செந்தழற் குவிவிற கதனிடந் தெறித்தார். 13(1161)



### கொழுந்து விட்டெரிந்த குழியின் வருணனை

தீங்கி யற்றிய வஞ்சகர் செறிகுல மதனி
லோங்கி நாடொறு முறுபவம் படர்வது போன்று
மாங்கு கட்டையின் குவையிட மடங்கலுங் கனலி
யூங்கி யார்ப்பினிற் கிளைத்தது திசைதிசை யொளிர. 14(1162)

கருத்தி லார்மனச் செழுமையு முகமது களிப்பும்
பொருத்து மாட்சியின் விழுமமும் பொருளுறு மவிப்பும்
வருத்துந் தீங்கென வன்னியே வருவிற கீர
மருத்தி னோடெடுத் தகட்டிட மாட்டிய தன்றே. 15(1163)

எழுந்த நாயகர் வண்மையி னிரப்பினா லிறையோ
னழுந்த விட்டவெங் கரிசத்தி னடையலர் வயிற்றிற்
கெழுந்தி டும்பசி யென்னவே கிளருடல் வாடக்
கொழுந்து விட்டது செந்தழல் விறகிடுங் குவையின். 16(1164)

பரந்த வெந்தழ லடையலர் குலங்கெடப் படையா
னிரந்த ரன்னிடுந் தண்டத்தி னெடுங்கொடுங் கும்பி
யிரைந்த மிழ்த்துமிவ் வாறென விடுந்தொனி யெழுப்பி
விரைந்த லர்ந்துயர் படர்ந்தது வெள்ளிட மன்றே. 17(1165)

மனக்க ணஞ்சுடை மாற்றலர் மதியொடு மனையி
னினக்கண் வன்பற விடுமழ லெரிந்தது போலக்
கனக்கு றும்பெருங் கட்டிய கட்டைகள் கதித்துத்
தனக்கு றுந்திசை விளக்குறத் தழல்விளங் கியதே. 18(1166)

எழுந்த செந்தழற் பொறியினங் ககனிட மெல்லாங்
கொழுந்து லாவுத லெரிதருங் கதிரவர் கோடி
யிழிந்த காபிர்க ளுறும்வலி யிழந்தின மேவா
தழிந்து போங்குறி காட்டவந் தடைந்தன சிவணும். 19(1167)

விசைகொண் டம்பரத் தெழுந்துயர் பறந்திடு மென்பு
ளசைகொண் டப்புறந் தெரிந்திடி னதனுடல் வெந்து
மிசைகொள் சாம்பரி னீறெழுங் காந்தியின் மிக்க
வசைகொண் டார்மன மென்னெழுந் தழலது வகைநா. 20(1168)

நீரி டத்தடைந் துள்ளகத் தெடுத்துமந் நேரே
பேரி டத்தினிற் பொறியது முருமுமே பெற்ற
தோரி டத்தினு மோய்விலா தினமுள வச்சங்
காரி டத்தினி லக்கனற் கொழுந்தெழுங் கதத்தால்.
21(1169)

அதனால் மேலும் தகித்த கதிரவன்

மருங் கணைத்தணி மதிலினா னடுவிட மலர்ந்து
வருங்க னற்கொழுந் துடன்கலந் துடலமும் வடிவு
மெரிந்த சோதியி னியாவர்க்கு மினமிக வெதுப்பம்
புரிந்து நின்றன னாதப னெனும்பெயர் பொலிந்தான்.
22(1170)

சந்திரனுக்கேற்பட்ட கதி

வான நன்சுட ரெனும்பெயர் வண்ணமும் வடிவும்
தான கன்றணி யுடலமும் வெளிர்த்தனன் றலத்தி
னூன முற்றிடக் கரிந்தனன் வலப்புற மொதுங்கித்
தீந வைக்குமே யினமினந் திருகுவன் விதுவே. 23(1171)

அதனால் வானம் வெந்து பொரிந்ததோ எனத்
தோற்றும் உடுக்கணம்

வெய்ய செந்தழற் குணத்தினாற் றினகரன் மேம்போ
தைய முற்றிர வலர்தரு முடுவின மழலான்
மெய்யி டத்தினிற் றயக்குற வானிடம் வெந்து
துய்ய வண்பொரி பொரிந்ததோ யாதென்கொ றோற்றம்.
24(1172)

ஆகாய கங்கை மறைந்தது, பறவைக்குலம் அஞ்சிப் பறந்தோடின

மாநி லத்தெரி செந்தழ லிடைவருந் தூமம்
வான கத்திட நோக்குவ நடுவழி கங்கை
தான கத்திடற் குரினுவ போன்றதாற் றயங்கிப்
போன தின்னமு மென்கொலோ தெரிந்தில பூவில். 25(1173)

அலர்ந்த தீப்பொறி யழற்றலா னருஞ்சிறைப் பறவைக்
குலங்க ளப்புறந் திசைதிசை குலவிய வொலியே
சலங்கொள் வஞ்சக னொடுந்தளம் யாவுமே தரியா
தலங்கி டுந்திற மிஃதென வறைந்திடன் மானும். 26(1174)

மூன்று நாள் எரிந்த செந்தழல்

வான முந்தரை தொடவரு மேரென வளர்ந்த
தீன னுள்ளகத் தொல்குவா ரெனப்பல ரொதுங்குங்
கானல் கொண்டசெந் தழலொரு மூன்றுநாள் கழிய
வான வெவ்வழற் றிரள்விழி யணிகவா தருமே. 27(1175)



வெப்பந் தாங்கி எப்படித் தன்னுவோமெனத் தவித்தனர்

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

செந்தழ லாய பின்னர் செருகிய வஞ்ச நெஞ்சார் [யேந்தி
கொந்தலர் மணிப்பொற் றோளின் கொற்றவர் தம்மை
யுந்திய மதிலின் ஞாங்க ருள்ளுறத் தள்ளு மியாமென்
றந்தமி லுரைப்பப் பின்ன ரவர்களே யாத லுற்றார்.
28(1176)

இபுலீசு உதவ வந்தான்

செயற்கையே வலிய மற்றுஞ் செவ்வழல் வலிய தன்னி
னியற்கையே வலிய நாங்கொ ளியலுடன் மெலிய வாலே
நயக்கவிவ் வினையிற் செய்த னமக்கரி தென்ன வேங்கித்
தியக்கமுற் றிருக்குங் காலைத் தீத்தொழி லாள னுற்றான்.
29(1177)

வந்த இபுலீசின் தோற்றம்

பையிடந் தரித்த வேதும் படர்நரம் பெழுந்து தேய்ந்த
மெய்யிடந் தரித்த போர்வை மீறிய தாடி யோடு
மையிடங் கண்டத் தோடுங் கனைப்பொடு மார்ப்பி னோடுங்
கையிடங் கோலி னோடுங் கண்டன ரவனை யன்றே.
30(1178)

ஏன் இந்த வாட்டம் என அவன் வினவுதல்

கூடினீர் குழியிற் செந்தீக் கூட்டினீ ரின்ன விந்தை
நாடினீர் தயங்கா நின்றீர் நண்ணிய வாய்த லோடும்
வாடினீ ரென்கொ லென்ன வஞ்சகன் வினவச் சிந்தை
கோடினார் மன்னன் மற்றோ ரினையன கூற லுற்றார். 31(1179)

தமக் கேற்பட்ட தயக்கத்தைப் பகைவர் உரைத்தல்

செய்திடுங் கோட்டிக் கேற்றத் திறமிலை தென்னத் தேறிக்
கைதிறஞ் செலுத்தா நின்றேங் காவலிற் படுத்தா நின்றே
மெய்தியங் காது நிற்பக் குழியிட மேவி யன்னோன்
பெய்திரங் காணே மென்னப் பேதகங் கொண்டே மென்றார்.
32(1180)

பொறி ஒன்று செய்து தொலைவில் வைத்து தட்டிவிடச் சொன்னான்

எரிசினக் கொடியோன் பின்ன ரெதிர்த்திடா தப்பா னின்று
விரியழற் குழியி னுப்பண் வீழ்த்திடற் குரிய சூழ்ச்சித்
தெரிதராப் பொறியொன் றாக்கிச் சீரிடந் தேய்த்தார்க் கீந்து
பரிவுட னிதனாற் றட்டு மெனவுரை பணித்தா னன்றே.
33(1181)

பதினாறு வயது இளைஞர் இபுருகீமிடம் பாதகர் சென்றனர்
பாதக னிபுலீ சென்னும் பாவியே செய்த சூழ்ச்சிக்
காதகங் கொண்டோர் பக்கங் களிப்புற நிறுவிப் பின்னர்
வேதகங் கொண்டோ ரீரெண் விளங்கிய வாண்டின் செவ்விப்
போதகங் கொண்ட கோமா னுறுஞ்சிறை சாலை புக்கார்.
34(1182)

ஆடை களைந்து கரங்கால் கட்டிக் கொணர்ந்தனர் தீயோர்
தலைதருங் கையி ரண்டுந் தண்டருங் காலி ரண்டு
மலைதருந் தளைகள் பூட்டி யாக்கையிற் போர்வை நீத்து
நகைதரு மமணராக நானில நடுங்க வார்த்துப்
பகைதரு வார்கள் கொண்டு வந்தனர் பண்பு ளாரை.
35(1183)

பொறியில் பொருத்திய நபியின் நிலைகண்டு உயிரினம் அலறின
வென்றியி னயினார் தம்மை வெந்தழல் மாட்டி னூட்டுந்
துன்றிய பொறியி னிட்ட கட்கமேற் றுலங்குஞ் சோதி
யொன்றென விருத்தல் செய்தா ருலகுறு முயிர்க ளெல்லா
மன்றுதந் நினைவு மாறி யலறிவீழ்ந் தேங்கிற் றம்ம. 36(1184)

வானுறு மமரர் மிக்கோர் மாதவர் மனுடர் வல்லோர்
கானுறும் விலங்கு புட்கள் கயத்துயி ரூர்ந்த செந்து
தானுறு தாப ரங்க ளாக்கையே தளர மாரி
சோனையின் முழக்க மென்னச் சோர்தர வழுத வன்றே.
37(1185)

இறைவனிடம் அழுது முறையிட்டன

மன்னிய வுயிர்கட் கெல்லா மனத்துய ரகற்றி மேன்மை
நன்னிலை கொள்வா னாக நாயக னுவந்த தூதா
யின்னிலத் துதித்த வள்ளற் கீதென்னென் றயர்ந் தியாவுந்
தன்னிலை கொண்ட வல்லோ னிடத்தினிற் சாற்று மன்றே.
38(1186)

கருத்துறும் பிரிவி னின்ற கணித்திடா நினைவிற் கேனும்
பொருத்துதற் கரிய வல்லோய் நின்னருள் பொதிந்த தூதர்
வருத்தமுற் றழுங்க வெந்தீ மாழ்குறத் தருண மாய
திருத்துமிக் கோட்டி நீயே தெரிந்திருக் கின்ற தென்கா.
39(1187)

நின்னுரை யெமர்கட் கன்பி னிகழ்த்திநனை யாகி லன்ன
பொன்னெறி னபியை வெந்தீப் புறத்தினிற் படுத்தி டாது
நன்னிலை மீட்டுமி யாமென் றுயிர்பல நவிற்ற வானங்
கன்னிலை புவிமற் றெல்லாங் கரைந்தொலி யெழுப்பு
மன்றே. 40(1188)



நாங்கள் உதவட்டுமா என, அவர் உங்களிடம் கேட்டால்
செய்க என்று இறைவன் கூறல்.

படர்ந்தபல் லுயிர்க ளேக்கிப் பாரிட நுமர்கள் பாலி
னடர்ந்தவக் கோட்டி நீக்கற் கரியதோ ருதவி வேண்டிற்
றடம்பெறத் தகுதி யோடுஞ் செய்கவென் றன்பா லாகி
னிடம்பெற வியற்று வென்ன விறையவ னருளிச்
செய்தான். 41(1189)

வானவர் மீக்காயில் தீயவிக்க நபியின் விருப்பம் கேட்டார்

மலையெனப் புரளுந் துய்ய மணிநிரை திரையின் வாரி
நிலைபெற வதிகா ரத்தி னின்றிடுந் தேவர் பின்னர்
கலையென வளருஞ் செவ்வி கதிர்முக வள்ளன் முன்னர்
மலைவற வடுத்துப் போற்றி மதிப்பொடுங் கூற லுற்றார்.
42(1190)

உம் உதவி தேவையில்லை என நபி உரைத்தல்

செறிதருங் கொடிய செந்தீத் திரளின மன்னன் வீரம்
பறிதர வவிப்பல் யானே பண்பொடு நுங்க ளுள்ள
நெறிதரப் பணித்தி ரென்னி னெனவவர் நிகழ்த்த லோடு
மறிதர நின்பா லூட்டம் வேண்டிலே னல்ல னென்றார்.
43(1191)

வானவர் இசுருபீல் அனுமதி வேண்டல்

திசைதருங் கிரிக ளெல்லாந் திரித்துமண் டுகளிற் பம்மும்
விசைதரு மாரு தத்தின் வேந்தணி யமரர் பின்னர்
நசைதரு மெந்தங் கோமா னணிமுகத் தெதிர்ந்து போற்றி
யசைதருங் கண்ணீ ரோடு மருமையிற் கூற லுற்றார்
44(1192)

கார்ப்படுஞ் சிந்தை வஞ்சங் கணித்திடாக் கயவர் செய்த
தீப்படுந் திரள்கள் மண்டு செனக்கக னிடத்தி னெங்கு
மார்ப்பினும் பறக்கச் செய்து மடிகடம் பணியுண் டாமால்
பூப்படும் புகழீ ரென்னப் புந்தியின் வினவி னாரால். 45(1193)

உம்மிடம் உதவி கோரவில்லை எனல்

நின்னிட முதவி வேண்டி நின்றவ னல்லே னென்ன
வன்னவ ரொருவ வெங்கோ னுண்டகை யிடத்திற் றுன்பப்
புன்னிலை யொன்னார் வேந்தன் பொன்றவே யுவகை வென்றி
நன்னிலை யுவந்து கேட்கு நாட்டமே கொள்ளா நின்றார்.
46(1194)

### யார் கேட்டும் இணங்காதபோது, பொறியைப் பிடித்தமுக்கினர் வானோர்

பற்பல வுயிர்க ளெல்லாம் பரதவித் தினிதிற் கேட்ப
நற்பல னுகர்ந்த வள்ள னுங்கள்பா னாட்ட மில்லென்
றற்புட னிறையோன் பக்க லாக்கமே கொண்டு நிற்பப்
பொற்புட னமரர் சூழ்ந்து பொறியினைப் பற்றி நின்றார். 47(1195)

### பொறி இயங்காதது கண்டு கலங்கி நின்றோரிடம் இபுலீசு வருதல்

வன்மனக் கயவர் கொண்ட மாற்றருஞ் சூத்தி ரத்திற்
கொன்மரப் பொறிமுற் றட்டக் குழீஇயவா னவர்க டம்மாற்
புன்மர மெழாது கண்டு புந்தியற் றயர்ந்து நஞ்சந்
தின்மன மயங்கா நின்றார் தீத்தொழி லாள னுற்றான். 48(1196)

### பருவப் பெண்கள் பதின்மர் பொறியருகில் நின்றால் அது இயங்கு மெனல்

நெறியது பிசகி டாது நிலைகொள வுவந்து நின்றீர்
பொறியது சூத்தி ரங்கள் பொற்புட னெழுப்ப வேண்டி
னுறுதுகி னீத்துச் செய்ய வொண்டொடிப் பருவ மாதர்
செறிமயிர் பூப்ப விங்ஙன் பதின்மர் சென்றுலவ
வேண்டும். 49(1197)

### பத்துப் பாவையர் அவ்விதமே வர பொறி விடுத்து அகன்றனர் அமரர்

குலைதலை யுடனுஞ் செவ்விக் குணத்தொடு மாடை நீத்த
முலைமலை யுடனுஞ் சூழ்ந்து மொய்த்திடி லெடுத்த விந்தை
நிலையலை யாதென் றோத நேரலர் மன்ன னோர்ந்து
கலையுலை யாளன் சொற்போற் காரிகை சேக ரித்தான். 50(1198)

காரெனப் படர்ந்த கூந்தற் கனமலை யென்னச் சொற்க
நேரெறும் பூர்ந்த மாசி ரேகையு நிவர்ந்த வாடைப்
பாரெனக் கொடிய வுள்ளப் பாவையர் பதின்மர் சூழ்ந்தார்
சீரெழி லமரர் நோக்காச் செறிபொறி விடுத்துப்
போந்தார். 51(1199)

### தீயில் போய் விழாமுன் சிபுரியில் கேட்டது

மன்னிய வெறிய சிந்தை மாற்றல ரார்ப்பி னோடும்
பின்னரச் சூத்தி ரத்திற் பெருமரந் தீண்டுங் காலை
நன்னபி பறிந்து காய நனிநிலா மதிய மென்ன
வன்னியி னுந்தா முன்னர் வந்தனர் சிபுரி யிலே. 52(1200)



### மனத்தின் நாட்டமென்ன என, இறையுதவி யன்றி வேறெதன் பாலும் அன்றென நபி சொலல்

வண்மையங் கரத்தின் கோவே மனத்திடை பற்று நாட்ட
மெண்மையி னெவையி னென்ன வினிதொடும் வினவுங் காலை
யுண்மையி னிறைபா லன்றி யொருவர்பா லுதவி வேறு
மண்மைய னல்லே னென்றா ரவருமுள் ளுவந்தா ரன்றே. 53(1201)

### உன்பால் வரும் என் தூதரைக் குளிர்ந்து தாங்கு என நெருப்புக்கு இறைவனின் ஆணை

வானக மிரங்க வான மன்னுயி ரிரங்க நீர்சூழ்
மாநக மிரங்க மேவு மற்றுயி ரிரங்க வெங்கு
மானபே ரொலியி னோடு மாண்டகை தழலி னுப்பண்
மேனனி தெய்துங் காலை வல்லபன் விளம்ப லுற்றான். 54(1202)

என்னவத் துலவுந் தூத ரினிதுடன் வரிசை யோடு
நின்னகத் தெய்தா நின்றார் நேர்தரு முடலிற் கேய்ந்த
நன்னயத் தெழிலிற் றண்ண னனிகொடுத் தேந்தி யென்ன
வன்னியு ளுவப்பக் கேட்டு மகத்துவம் படைத்த தன்றே. 55(1203)

### நெருப்புக் குண்டத்திலிறங்கிய நபியின் தோற்றப் பொலிவும் பெருமையும்

நடுவணி யழிவி லாது நவமணி மஞ்சம் பக்கத்
தெடுமணி முடியின் வானோ ரெண்ணிலர் மொய்ப்ப வண்ணந்
தொடுமணி முகத்தின் மற்றோர் வலப்புறந் தோற்ற வள்ளல்
விடுமணி கதிரிற் பூத்து விளங்குறப் பீடத் துற்றார். 56(1204)

தண்ணமே கொண்ட வன்னித் தடாகமே கொள்ள வானோர்
பண்ணமே கொள்ள நாப்பண் பாவலர் புகழுஞ் சீர்த்தி
வண்ணமே யணி கபீபு முகம்மதின் கருத்தின் வள்ள
லெண்ணமே கொள்ளா தெங்கு மெழில்கொள விருந்தா
ரன்றே. 57(1205)

நாயக னுரையி னானு நன்னபி மேய வானுந்
தூயதோர் மகிமை யானுந் தோற்றிய மகிழ்ச்சி யானுங்
காயழற் குணமே நீங்கிக் களித்துடற் செழித்த தென்றா
னேயமே கொண்ட பேர்க டகுதியார் நிகழ்த்த வல்லார். 58(1206)

### அதில் தோன்றிய சோலை யழகின் வருணனை

வஞ்சித்துறை

இந்தனங் கனன்றதீ
நுந்தனந் தகந்தமே
சிந்தநந் திடாநிரை
சந்தனந் தருக்களே 59(1207)

திரையெறிந்த வாவிகள்
கரையெறிந்த மாமணி
நிரையெறிந்த சோதியின்
விரையெறிந்த நீலமே. 60(1208)

தண்பலா வரம்பையுந்
தண்பலாவு மாழையுஞ்
சண்பகஞ் சந்தானமுங்
கண்பகஞ் செறிந்தவே. 61(1209)

அகரலர்ந்த மந்தர
மகிழலர்ந்த வேங்கையு
நிகரிலாது வாடையே
தகரவாருந் தென்றலே. 62(1210)

தேனுகுத்த வாழையிற்
றீனுகுத்த வண்கனி
கோனகத்து ளார்பெறு
மானமொத் திலங்குமே. 63(1211)

முல்லையுமத கன்புற
மல்லிகையின் றண்மலர்
நல்லுணர்வி னறிவெனுச்
செல்லுமதுர வாடையே. 64(1212)

வஞ்சித்துறை [வேறு]

செறிந்த வாவிகண்
மறிந்த கெண்டைமொய்த்
தெறிந்த தாமரைக்
கறிந்த தேன்களே. 65(1213)



வளங்கொ ணுயக
ரிளங்கொள் பூம்பதம்
விளங்கு மேம்புகழ்
துளங்கும் வண்டினம். 66(1214)

வஞ்சித்துறை [வேறு]

கார ணந்தரு
மேர ணிந்தவர்
பூர ணப்புகழ்
வேர ணித்தருவே. 67(1215)

தெங்கி னந்தரு
பைங்கு ரும்பைக
ளங்கை முன்கொளு
மிங்கு னென்றலேமே. 68(1216)

வண்டி னத்தொனி
வண்டி னத்தொலி
முண்ட கத்தொடு
முண்ட கத்தொடுமே. 69(1217)

கோவை யங்கணி
கோவை யங்கணி
பாவை யங்கொடி
வாய்வ யங்கிடுமே. 70(1218)

### நபிபெருமான் அதனடுவே கொலு விற்றிருந்தனர்

பூவ லர்ந்திடு
காவ கந்தனில்
தேவர் சூழ்தரக்
கோவி ருந்தனரே. 71(1219)

சுவாலயமெறிந்தபடல முற்றிற்று
ஆகப்படலம் 21-க்கு திருவிருத்தம் 1219

—□—

# 22. நமுறூது போர்புரிப் படலம்

இபுருகீம் எரிந்து போனதாக எதிரிகள் நம்பினர்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

வரிசைபெறு மாதவத்தின் வள்ளலணி யினிதுடன்பூ
வனத்தி ருப்பண்
பிரிசமுட னிருப்பமனக் கசடுநிறை குபிரினத்தார்
பெரிது பூப்ப
வுரிசையொடு முடலுயிரு மாண்டரவே பகையணங்க
தொழிய வெந்தி
விரைசினதென் றுறக்கயவன் கருத்தாய்ந்து மறுதினத்தின்
வியந்தா னன்றே. 1(1220)

மேன்மாடத்திலிருந்து மன்னன் கண்ட காட்சி

தரளவெழின் மலர்மாட மேனிலையி னேறியெரி
தவழா நின்ற
திரளகழி நோக்கவணி தண்டடத்தின் மலரன்னஞ்
செறிந்து பாடத்
தெரிவருபைந் தளிரடவி நறுங்கனிக ளுகுப்பவளி
திருத்து மோதை
மருளலக்குங் கொடியையென மல்குவன மலியமண
மதிப்பக் கண்டான். 2(1221)

பலர் சூழ நபி வீற்றிருக்கக் கண்ட மன்னனின் மனக்கிலி

தண்டலையி னிடையழகி னவமணிக ளொளிவலைத்துந்
தழங்க வொன்றாய்க்
கொண்டணியிற் சட்டமதிற் செய்யதுகிற் கானிறுவிக்
குபேர னென்ன
வண்டருபன் னூலிழைத்து மரகதத்தின் கதிர்த்துகிலின்
வண்ணப் பாயல்
எண்டிசையும் விளக்கியவிண் மணியருக்க னெனநபியு
மிருப்ப வன்றே. 3(1222)

அழகொழுகு மதிவதன மொழிமிளிர்ப்ப வண்ணமல
ரணிகொ ளாக்கை
யெழிலுடையோ ரொருவர்வலப் புறமிருப்ப விடையிடைபின்
னணிகண் மொய்ப்பத்
துழனியெனு மியமொலிப்ப மணிவாயிற் றகபீகுஞ்
சோரா தாரிப்ப
வழனிறைந்த மனக்கயவன் பேதகங்கொண் டயர்ந்துமிகப்
புதுமை யுற்றான். 4(1223)

எறிந்தது ஒருவனையோ பலரையோ? என வினவல்

கண்டவுளங் கவலையொடுஞ் சுவாவயத்தின் கருத்தர்தமைக்
கடிதிற் கூவிக்
குண்டமுன்ற பெருநெருப்பி னீவிர்முனம் படுத்தும்விறற்
கொடிய வண்ணத்
திண்டிறலி னொருவன்கொலோ பலர்கொல்லோ
தெரித்தி ரென்றான் [வாய்ந்தெமக்குத்
புண்டரிக நறும்பாகு வெறும்பாவி குறும்போடு
பொசித்த கோளன். 5(1224)

ஒருவனை மட்டுமே எனல்

செங்கமலக் கரங்குவித்து நிலந்தாழ்ந்து வலத்துடைய
செம்மல் கேண்மோ
பொங்கழலி னங்கெழுந்த புதியவழி மமதையுறும்
புதியோன் றன்னை
யிங்கெறிந்த தன்றிபிற ரெவர்களுமியாங் கண்டனமல்
லேமென் றோத.
விங்குலிக விழியார்மு னங்கமல மால்கொண்ட
விறைவன் சொல்வான். 6(1225)

அனைவரும் மாடியினின்று பார்த்து அதிசயித்துக் கலங்கினர்

செழுந்தழலி னடுவிருக்கு மன்னவன்றன் பின்னணியாய்ச்
செறிந்த மாக்க
ளெழுந்துமகத் தொடுசபத்தி னெருங்கியதென் கொல்லெனவே
யனைவ ரும்போய்
எழுந்தமணி மண்டபத்தி னிடையுற்று மதியாதவ்
விடத்தின் மேய
கொழுந்துலவுங் காரணங்கண் டதிசயித்து மனங்கலங்கிக்
குனியா நின்றார். 7(1226)

மதிலருகில் சென்று நன்கறிந்துவர மன்னன் ஏவல்

பொற்றடத்து மணிமஞ்சம் பொலிந்தவனை வலத்தினனைப்
புடை யினுரைச்
சுற்றிருந்த மதிலருகிற் பொறிபுறத்திற் சென்றிருகண்
டோற்ற நோக்கிக்

குற்றமறக் குறித்திவணி லடைதிரென மன்னவன்சொற்
கொண்டு போனார்
மூற்றலத்தி னினிதினின்று தெரிந்தனர்வண் ணிலைதவறு
முறையே போல. 8(1227)

பார்த்து வந்தவர் உறுதிப்படுத்த மீண்டும் போய்
அவர்களைக் கூப்பிட மன்னன் ஆணை

தாந்தெரிந்த வியப்பதனை மன்னவன்பா லவருவந்து
சாற்றக் கேட்டுப்
போந்தவணி லலங்காரம் பலகொண்ட வினைத்தோரைப்
புறத்தி னெய்தச்
சார்ந்தழைத்திங் கடைதிரெனப் பணித்திடலு மன்னவன்
றாளில் வீழ்ந்துப் [பொற்
பூந்தரத்துக் கரங்குவித்து மதியறியாக் கயவர்பல
புகல்வ ரன்றே. 9(1228)

தீச்சுவாலைகளின் அருகே யாம் நெருங்குவது எப்படி?

மனவலியின் றிறத்தாலு மதிவலியின் மறத்தாலு
மன்னுஞ் செந்தீ
யினவலியி னுவவையே யெவர்தடுப்பா ரதற்கருகி
லியாரு மெய்தாச்
சினவழிய வக்குழியின் னாங்கர்சென்று மேயவர்கள்
செவியிற் கேட்பத்
தொனிவலியி னெவ்வாறு விளிக்குதுமியா மென்றுரைத்தார்
சுதத்தி னாரே. 10(1229)

மன்னன் கட்டளைப்படி இயன்றவரை நெருங்கி
குரலெழுப்பி அழைத்தனர்

அரியினத்தா லடற்கரிதா லவணைடையா தீங்கணித்தி
னார்ப்பி னோடே
யெரியிடத்தி னிருந்தானை விளிமினென மன்னவன்சொல்
லினிதிற் கொண்டு
வரியிடத்த வளிமுரலுந் தண்டாம விபுறுகி
மதியின் மிக்கோய்ப்
புரியிடம்விட் டிவண்மீண்டி யெனவழைத்தார் வஞ்சினத்தார்
பொங்கி யன்றே. 11(1230)

வெளிவந்த வள்ளலை வேந்தனிடம் அழைத்துச் சென்றனர்

அறிவிலங்க வுளமிலங்க மதியிலங்கத் துதியிலங்க
வலர்ந்த வாயும்
வெறியிலங்க மலரிலங்கப் புயமிலங்கக் கொடையிலங்க
விளங்குங் கையுங்



குறியிலங்க விழியிலங்க மதியிலங்க முகமிலங்கக்
கொற்ற வள்ளல்
பொறிவிலங்கிப் பொழிலிலங்குந் தலம்விடுத்து
புறப்பட் டாரே. [வெளிப்புறத்திற்
12(1231)

வான்றுலங்கு மதிமுயலிற் றேய்க்குமுயர் சிகரவரை
வண்ணப் பொற்றோட்
டான்றுலங்க வருநபியை யழற்றுரங்க மிகையுடையார்
தருக்கிற் கொண்டு
மான்றுலங்கும் விழிமயிலார் மனத்துளக்க மெழுப்பாத
மதிக்கும் பண்ணைத்
தேன்றுளங்குஞ் செவியிடத்திற் றயங்குமனன் றவிசின்முன்னர்
சேர்த்து நின்றார். 13(1232)

உன் மாய வித்தை எவரையும் மதிமயக்கும்
என மன்னன் கூறல்

திருநயன முகமதியின் செம்மனபி தமைநோக்கித்
திறத்தின் வித்தைப்
பொருமயக்க நீரியற்று மந்திரத்தின் கைமையது
புவியின் யார்க்கு
மருளுறுத்தும் புதுமையுள பலவிதத்தும் வன்மையுள
வசங்கொண் டாக்குந்
தெருளுடைத்துத் திகைப்புடைத்தென் றனுதினமுஞ்
செப்பி னானல். [சூதியன்றோன்
14(1233)

மந்திர மாயமல்ல, என் கர்த்தனின் கருணை என நபி கூறல்

மதிமயக்க மருண்மையன்று மந்திரங்க ளன்றுநின்றன்
மனத்திற் றெக்கப்
பொதிமயக்க நீபுகன்றை யொருபோது மழியாது
புதிய நாயன்
கதமிகைக்குந் தீக்குழிகள் வனமாக்கக் கருணையெனுங்
கலன்கள் பூட்டி
விதவிதத்தின் சிறப்பாடை புனைந்தளிக்கு மகிமையது
வியப்புத் தானே. 15(1234)

அருகிருந்தோர் எவர் என மன்னன் வினவல்

வரிசைபெறு நன்னபியிவ் வாறுரைப்ப மன்னவனு
மறுத்துச் செந்தீ
நிரைசெய்குழி யதனிடையி னிலவதியு மதிவதன
திவரு மெய்யி

ணரசியலி ஞெருவனின்றன் வலத்துடையன் யாவன்பின
ரணியாய் மேவத்
திரைசெய்கட லனையவர்க ளியாவரெனக் குரைக்கவெனச்
செப்பி ஞனல். 16(1235)

எனக்கு இறைதோழன் என்ற பட்டத்தைத்
தெரிவிக்க வந்த அமரர் எனல்

நிரைநிரையிற் பின்னணிக ளுயரமர ரழகொழுகு
நியதி கொண்ட
வரையனைய புயத்துவலப் பாங்கிருந்தா ரவரிலுளார்
வரிசை யோடு
மரியவன்றன் பணியதனு னவனுவந்த தோழனெனுங்
கலீலென் றென்னைத்
தெரிதரநன் குவந்துகொள்வா னடைந்தனரென் றணிநயினர்
செப்பி னரால். 17(1236)

கேட்ட நமுறூதின் நெஞ்சம் நடுங்கியது
கலிவிருத்தம்

சொன்னிலை யுணர்வொடுஞ் சோர்ந்து நெஞ்சகம்
பன்னிலை சிந்தனை படர்ந்து பேதகந்
துன்னிலை கொண்டராஅத் துய்க்குந் தேரையிற்
புன்னிலை கொண்டனன் புந்தி யற்றனன். 18(1237)

அவர்கள் அமரர் என்றும் அவர் தம் இறைவன்
உண்டெனவும் நம்பினன்

தீங்குறு மிடியொலி தியங்கரா அவென
வேங்கினன் கலக்கமே யெடுத்த மன்னவ
ஞங்கவ ரமரரென் றறைத லாலிறை
யூங்குள னெனவுளத் துணர்வு கொண்டனன். 19(1238)

உன் இறைவனையே நான் அழிப்பேன் என
அவன் கூளுரைத்தல்

கொண்டவ னன்னபி நோக்கிக் கொற்றமு
மிண்டுனக் களித்திடு மிறையி ஞயகன்
றிண்டிறற் றகுதியுஞ் சிதைத்துச் சேனையோ
டண்டவன் றன்னையு மழித்து மியாமென்றான். 20(1239)

உன் திறத்தைப் பார்ப்போம் என்று நபி தம் அகம் மீளல்

வன்றிற ஞயகன் வதைத்து வாய்மைய
நின்றிறம் பின்னரி னினைக்கு மென்னவே
பொன்றிகழ் மணிமுடி பூமன் விண்ணவை
நின்றவர் தம்மனை நிகரி னெய்தினர். 21(1240)



கொடை நாயகர் நினைவுகூரப்படுகிறார்

வானவர் வாழ்த்தொடு மனுடர் வாழ்த்தொடுங்
கானவை வாழ்த்தொடுங் கடிகொ டம்மனை
மானனி கபீபு முகம்ம தின்மகிழ்
தேனகு வாழ்த்தொடுஞ் செம்ம லெய்தினர். 22(1241)

சதுர வடிவில் விமானமொன்று அமைத்தான்

வஞ்சகன் மந்திரர் வழங்கும் யூகியிற்
புஞ்சகங் கொண்டொரு புதிய நான்கங்கப்
பஞ்சர மமைத்திரு புறத்திற் பார்வையிற்
கஞ்சிறு வாயிலு மணியிற் செய்தனன். 23(1242)

மேலும் கீழும் நோக்க இருவாயிலுடன் நான்கு
தூண்களும் நாட்டினன்

விண்ணக நோக்குமேல் வாயல் வன்றிற
மண்ணக நோக்குங்கீழ் வாய லின்றலை
நண்ணுநாற் கோடியிற் கால்க ணட்டிய
திண்ணுறுந் தரங்கத்தூண் செறியத் தாக்கினன். 24(1243)

தூண்களினடியில் பட்டினி போடப்பட்ட
ராட்சசக் கழுகுகள் கட்டப்பட்டன

மேற்றலை யூன்றுணி விளங்குங் கீழ்த்தலை
நாற்றலை யிடத்தினின் மூன்று நாளிரை
யேற்றலை யின்றிய சகுந்த நான்கினை
யாற்றலை யரையொடுஞ் சேர்த்துக் கட்டினன். 25(1244)

தூண்களின் மேனுனியில் பெரும் மாட்டிறைச்சித்
துண்டங்கள் பிணைக்கப்பட்டன

வாயிடந் தீண்டிடா நான்ற வள்ளூரந்
தீயிடங் கொண்டிடுங் குடினை தேட்டமுற்
றூயிட மிருப்பவக் குடம்பை யுள்ளூற
மேயிடம் வியன்மணி விருப்பின் மேயினன். 26(1245)

ஆயுதங்களையும் குவித்தான். அமைச்சன் ஒருவனைத்
துணை சேர்த்தான்

வில்லொடுங் கணையொடும் வேலுந் தண்டமு
மல்லொடும் பல்படை கொண்டு மாமதிச்
சொல்லொடு மமைச்செனுந் துணையிற் சேர்த்தனன்
செல்லொடு மிடியெனச் சினக்கும் வன்மையான். 27(1246)

மேலே காணும் இறைச்சித் துண்டங்களை அடையும்
ஆவலில் கழுகினம் பறந்தன

உட்புகுந் திருவரு முவப்பி னீரிடப்
பெட்பொடும் வாயில்கள் பெட்பிற் சாத்தலு
மட்படும் பசியினிற் றூங்கு மஞ்சிறைப்
புட்படுந் தொனியினுற் பொருக்சென் ருர்த்தவே. 28(1247)

உடன் விமானமும் எழும்பி உயர்ந்தது

மருவிழி திறத்தலுந் தரங்க மாட்டிய
குருதியந் தசைதனை நோக்கிக் கூர்ந்திய
லிருசிறை கோட்டலு மிரையின் வாஞ்சையா
லொருநிலை நான்குமே பறந்து யர்ந்தவே. 29(1248)

வானவெளியில் மேலும் மேலும் உயர்ந்தன

நான்றுறுந் தசையினு னுன்கு பாறுமே
யேன்றுறு சிறகொடுங் குடம்பை யேகுதல்
வான்றவ ழணிவரை வான்ப றந்திடல்
போன்றது கட்புலன் போதும் பாதையே. 30(1249)

மன்னன் சொற்படி கீழே நோக்கிய அமைச்சன் பூமியை
சிற்றூர் போல் காணல்

அகல்விசும் பெழுதலு மகத்தி னுக்கமுற்
றிகலுறு மன்னவ னிருந்த மந்திரன்
முகமது நோக்கிக்கீழ் மூடுந் தாள்விடுத்
தகிலங்கண் ணுறுதியென் றறைந்திட் டானரோ. 31(1250)

பணிதரு முரையொடும் பற்றுஞ் சிந்தையன்
பணிதருங் கதவினை நீக்கிப் பார்த்தலு
மணிதரு கடல்புடை யகில மியாவுமோர்
கணிதருங் குறுச்சியிற் றேற்றக் கண்டனன். 32(1251)

மேற்கதவு வழி மேல் நோக்கியபோது
ஆகாயம் மட்டுமே தோற்றுதல்

மண்டல மியாவுமோர் பொழிலின் மானமாய்
மண்டலத் துளவென மருங்கி னுற்றவன்
விண்டனன் விளங்குமேல் வாய னீக்கியே
விண்டல நோக்கென வேந்தன் கூறினுன். 33(1252)



மேற்றிசை வாரியை விளங்க நீக்கியே
தோற்றுறு மளவுவான் றுலங்க நோக்கிவெவ்
வேற்றட மன்னவ மேய மானமே
யாற்றலி னுளவென வமைச்சன் கூறுவான். 34(1253)

இன்னும் பூமியின் அண்மையிலேயே இருப்பதாய் உணர்தல்

நிலத்திடை தோற்றிய வரையி னேருற
வலத்துடை மாகமே வடிவங் கோடலாற்
பெலத்துடை நாமினம் பெரிய மாநிலந்
தலத்தினே மேயனந் தருக்கி னென்றனன். 35(1254)

மாநில மறைந்தில மாக மானமுந்
தானது குறைந்தில வாத லாற்றட
மேனிலைக் கீழ்நிலைக் கதவஞ் சேர்த்துகென்
றுனமன் னறைதலு மமைச்சன் பூட்டினுன். 36(1255)

மறுநாளும் பார்க்க பூமி மறைந்து புகைமண்டலமாய்த்
தெரிய ஆகாயம் அப்படியே இருந்தது

திங்களங் கடவுளைச் 'சினத்துப் பந்துறப்
பங்கெழுந் தனனெனப் பரவிப் பஞ்சரங்
கங்கெழும் விசையினுற் காய மற்றநா
ளங்கெழுந் துயர்ந்ததூங் கழிய மன்னனே. 37(1256)

றென்னல்சொல் முறைமையி னேருங் கார்ப்பினைச்
சன்னலி னுக்கெனத் தலைவன் கூறலு
மின்னலா னுயர்வழி யிழ்த்த போதினி
லுன்னலர் வானக மொருங்கு கண்டனன். 38(1257)

விரிதலுங் குறைதலு மின்று விண்ணெனத்
திரிகிய கீழ்த்தலைத் திறந்த காலையிற்
கருகிய மன்னவன் கருத்துப் போற்றரை
பெரும்புகை பிறங்குற வமைச்சன் கண்டனன். 39(1258)

இருதலை நோக்கிய வியல்பு மன்னவன்
தெரிதர வுரைத்துப்பின் றிறந்த வாயல்கள்
மருதலி னடைத்தனன் மந்தி ரத்தினுன்
வெறுதலிற் கழுகினம் விரையு மேலுமே. 40(1259)

### கழுகுகள் பசியால் சோர்ந்திட விமானம் விழுமுன் அமரர் வந்தார்

காரணப் பெரும்புகழ் கருத்த னுடைய
பேரணி வியல்பள வாகிப் பெற்றுறு
மேரணி வலியிழந் திறகு சோர்ந்திடல்
சேரணி மூன்றுநாட் டிகைத்த பாறரோ. 41(1260)

கோடியின் கழுகது குறைய வாக்கமும்
பாடியல் சிறகறப் பாரின் வீழ்தலிற்
சாடுமுன் னமரரி லொருவர் சார்ந்தெடாஅக்
கேடுனக் கெவனெனக் கிளர்த்து வாரரோ. 42(1261)

### விமானத்தில் எங்கு செல்கிறாய் என வானவர் வினவல்

சித்திரஞ் சூத்திரந் திருத்திப் பஞ்சரம்
பத்திரம் பல்படைப் பதனத் தோடுநீ
யெத்தலத் தேகுத லியைந்து நின்றனை
மித்திர வெனவவர் வினவி னாரரோ. 43(1262)

### நீர் யார் என மன்னன் கேட்டான்

ஏகிய திசையினி லெதிர்ந்து தோற்றிடா
மாகவெள் ளிடையினின் வந்து சாவுத
லோகையி ரியாவர்நீ ருரைத்தி ரென்றனன்
சேகது கருவொடுஞ் செனித்த தீயனே. 44(1263)

### அனைத்தும் படைத்துக் காப்பவன் ஏக இறைவன்

காலது நிலையிலாக் ககனஞ் சூழ்ந்ததோர்
பாலது புவிமுதற் படைப்பி யாவையு
மேலது கொள்ளவே விருப்பி னாக்கிய
வாலது சேதன வரிசை யாளனே. 45(1264)

### நபி இபுருகீமைத் தோழராய்க் கொண்ட அவனின் வானவருள் ஒருவர் நான் எனல்

அன்னவ னன்னபி யழகு பூத்தமெய்
துன்னிய சுயத்திபு றாகிநட் பொடு
மின்னரு ளாண்டவ னினிது வந்தவான்
தன்னவர் தமிலுள னென்னச் சாற்றினார். 46(1265)



### அந்த இபுருகீமைக் காத்த இறைவனை அழிக்கவே வந்துள்ளேன் எனல்

நின்னுறு தகையின னெருப்பின் மாய்ந்திடா
தன்னவ னுண்டகை யவனை வன்றிறத்
தென்னரும் படையினா னிரியல் செய்வதற்
கின்னன மடைந்துமென் றிறைவன் கூறினான். 47(1266)

### இவ்வான வெளியின் பரப்பு எவ்வளவு என்று அறிவாயோ எனல்

கூறிய கயவன்முற் குணங்கண் மாறிய
வேறுறும் படிறுளாய் விரிந்த முற்கக
னீறுநின் னிதற்கிடை நீட்சி யெவ்வள
வாறுள வறியுங்கொ லெனவி னாவினார். 48(1267)

### தெரியாது, ஆனால் வானம் உயர்ந்ததே

வல்லவன் கருணையார் வதன நோக்கியிவ்
வெல்லையு னுளவென வெற்குக் காட்சியிற்
கொல்லிய தின்றரு முயர்ந்த வானெனச்
சொல்லினன் கயவன்முன் சொல்கின் றாரரோ. 49(1268)

### பூமிக்கும் முதல் வானுக்குமிடையே ஐந்நூறாண்டு பயணதூரமுண்டு

நீரலை யுலகிற்கு நிவரும் வானிற்குந்
தூரம துணர்ந்திடிற் றொகையைஞ் ஞூறியாண்
டாரிய வழியுள வதனிற் செல்குவா
னியாருள வீறுள னெவனு மின்றரோ. 50(1269)

### இடையே பல திரைகளுமுண்டு, கடந்து செல்ல வல்லவன் யார்?

தொகையுறு மியாண்டினிற் றொடர்ந்த சேட்கிடை
மிகையுறுங் காரண மேவும் பற்றிரை
வகையுள வவையினன் வண்ண மென்றுணர்
தகையின னவனன்றி யாவர் சாற்றுவார். 51(1270)

### அமரர் உரை கேட்டஞ்சி விமானம் விட்டு வீழ்ந்தனன் அமைச்சன்

இம்மொழி வானவ ரிசைப்பக் கேட்டுளம்
பொம்மென வைம்பொறி யொடுங்கிப் போதமற்
றம்மதி வாயலி னடித்து மாநிலங்
கம்முற வீழ்ந்தனன் கழிந்த மைச்சனே. 52(1271)

பகைவனின் முடிவு

நிதியுடன் செல்வமு நிலைத்த மாடமும்
பதியுமே யிழந்தவன் பகைமை கொண்டதோர்
மதியுடன் மந்திரி வலமி ழந்துதன்
றிதியிழந் திடற்கொரு சிநதை தேறினான். 53(1272)

வானை நோக்கி அம்புகளை சரமாரியாய்ச் செலுத்தினன்

தனித்தவ னாயுமுள் வயிரத் தாக்கினாற்
கனத்திடி யெனமிகக் கனன்று வன்மையின்
மனத்தொடுஞ் சிலையினை மலர்க்கை யேந்திவான்
றொனித்திட நாணொலி துளக்கி னானரோ. 54(1273)

என் பகைவனின் தலைவனே, உன்னை இவ்விதம்
அழிப்பேன் எனல்!

என்னுரைக் கிணங்கிலா னெரியில் வெந்திலா
னன்னவன் றலைவனோ யடர்ந்து நின்னையா
னின்னனங் கோறுவேன் விரைந்து வெங்கணை
யுன்னதத் தெய்தன னுலவுங் கோளகன். 55(1274)

இறையாணையால் இரத்தத்தில் தோய்ந்து அம்புகள்
திரும்பி வந்து விழல்

அரியவ னருளினா னமரர் மாற்றருஞ்
சொரிதிரை யிடத்தினிற் றுவைத்து வெங்கணைக்
கரிதரு முளத்தினான் காண மேவிய
புரிதருங் கூட்டின்மேற் பொருந்த வீழ்த்துவார். 56(1275)

கண்டு அவன் பெருமை கொள்ளவும், சூறுவளி தோன்றி
விமானத்தை வீசி எறிந்தது

வருகணை யனைத்தையு நோக்கி வன்மனம்
பெருமையின் மகிழ்தரும் பெயர்ந்த தோர்வளி
யரையனுங் கொண்டவக் குரம்பை யங்ஙனந்
திரிதரத் திரித்தது சினத்தின் வீசிற்றே. 57(1276)

கடலில் போய் விழுந்தது

எண்டிசைக் கிரியகந் துளங்க வெங்கணு
மண்டிய தருவின மலரிற் போதரத்
திண்டரு நிலமது குலுங்கத் தீயவன்
கொண்டதுங் குரைகடல் குட்டம் வீழ்ந்ததே. 58(1277)

அவனைக் கரை சேர்க்க காற்றுக்கும் கடலுக்கும்
கட்டளை பிறந்தது

வேகவெவ் வளியுள மிகைய வெண்டிரைச்
சாகரந் தகைகொளத் தமக்கு நாயகன்
பாகவிக் கொடியவன் பதனத் தாக்கிநீள்
சேகறுங் கரையிடஞ் சேர்த்தி ரென்றனன். 59(1278)



கரையில் ஒதுங்கினான்

வல்லவ னுரைப்படி வாரி வாயுவு
மெல்லவப் பஞ்சர மீதிற் றாழ்ந்திடா
தல்லலி னருங்கரை யதனிற் சேர்த்தன
புல்லிய துன்பத்தின் பான்மை போன்றனன். 60(1279)

நொந்து உருமாறி, மெலிந்து சென்று
அரியணையிலமர்ந்தான்

காண்டிடா வெளியிடைக் கண்ட தண்டத்தின்
மாண்டிடா வகையினான் மயிரு மாக்கையும்
பாண்டியைந் தாக்கமுங் குன்றிப் பல்பிணி
மீண்டவன் போன்றது விடுத்து மீண்டனன். 61(1280)

குடம்பைவிட் டெழுந்தவன் கோண மெங்ஙனு
முடம்பொடுந் துயரொடு முற்றி யாவர்க்கு
மிடம்படா தேகிமுன் னியைந்த வந்நகர்த்
தடம்பெறுந் தவிசினிற் சார்ந்திட் டானரோ. 62(1281)

மாறிய உருவங்கண்டு அவன் தம் மன்னனென
ஏற்க மக்கள் மறுத்தல்

மேலுறுந் திரையொடும் வேறு வண்ணமும்
பாலுறு நரையொடும் பயமி லாமலர்
சாலுறு முகத்தொடுந தளர்ந்து நின்றதால்
வேலுறு மிறையென்று ளெவரும் வேண்டிலார். 63(1282)

தன் பேச்சு முதலான திறமைகளால் தானே
நமுறூது என நிறுவுதல்

சொல்லிய திறத்தினாற் சுயத்தின் யூகத்தாற்
பல்லிய லறிக்கையாற் படையின் மாட்சியா
லல்லியன் மேனியா னரச னென்றுணர்ந்
தெல்லையி லவரெல்லா மிறைஞ்சிச் சூழ்ந்தனர். 64(1283)

மக்கள் ஏற்றுக் கொண்டபின் பழையபடியே
ஆளத் தொடங்கினான்

குடிகளுங் குழீஇயின கூழுந் தன்படை
யடிகளென் றிறைஞ்சின வமைச்சர் பண்பினர்
முடிகளின் வணங்கினர் முதிர்ந்த தீமைய
னெடுமதி னகரிடை நிவந்து மேயினான். 65(1284)

நமுறூது போர்புரிப்படல முற்றிற்று
ஆகப்படலம் 22-க்கு திருவிருத்தம் 1284

# 23. நமுறூதழிவுண்ட படலம்

### விமானத்திலிருந்து வீழ்ந்த நமுறூதின் வெறுமை நிலை

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

செயத்தகா மேன்மை வேண்டிச் சேணடைந் துள்ள நொந்து
பயத்தொடுங் கயத்திற் சிக்கிப் பாடுபட் டெழுந்து மன்ன
னயத்திடை யுற்ற நீரி னழுங்கினன் மணிப்பீ டத்தின்
வயக்களி றுண்ட வெள்ளிற் கனியென மாள்கி ருந்தான்.
1(1285)

### அவன் பட்டபாட்டை அறிந்த நபி பார்க்க வந்தது

பாடுபட் டுழன்று மன்னன் பன்மணிப் பீடத் துற்று
மோடுபட் டிருக்குந் தன்மை முற்றவே யுணர்ந்து வள்ள
லீடுபட் டவனைக் காண்பாக் கெனவுவந் தெழுந்து சூழ்ந்த
நீடுபட் டிருந்த சங்க நிரைபடப் புக்கி னுரரால். 2(1286)

### என் இறைவனின் வல்லமையைக் கண்டாயல்லவா என வினவல்

தேர்ச்சியிற் றுணைவர் மற்றுஞ் சேனையர் கத்தர் மன்னர்
சார்ச்சியி னுப்பண் வெவ்வேற் றலைவனு முளத்தின் மிக்கால்
நேர்ச்சியின் முகத்துக் கஞ்ச நிரையிடை நிலவு கான்று
சேர்ச்சியின் வந்த திங்க ளெனநபி திகழ்ந்து சொல்வார்.
3(1287)

மறத்துறை நின்றாய் நாளு மாதவ முயல்வா னுக
வறத்துறை விளக்கு மென்ற னுண்டகை தகைய வல்ல
திறத்துறை நின்றன் சிந்தை தோற்றுவா னெவ்வா றுகப்
புறத்திறங் கண்டா யென்னப் பொறித்திட வினவி னுரரால்.
4(1288)

### உன் இறைவனை என் அம்புக்கிரையாக்கியே மீண்டேன்

செற்செவி யுணர்ந்து புந்தி தெளிவிலன் படுபா டுன்னு
தற்செறி மனத்திற் கொண்ட வயிரத்தா லறையு நின்றன்
றற்செறி யிறைவ னுவித் தாவியென் சரமே யுண்ட
திற்செறிந் துற்றேன்பின்னர் சரதமீ தென்று சொற்றான்.
5(1289)

### இறைவனுக்கு உடலோ அவயவங்களோ இல்லை என்பதறியாது பிதற்றுகிறாய்

செறிதரு மவய வங்கள் செயற்கையு மியற்கை தானுங்
குறிதர வுணர்ந்துகோடல் தன்குணந் தெரிதல் கொண்ட
வறிவுமே நின்பா லின்று லாண்டகை யவனைக் கொன்றே
னெறிதர வென்னு நின்சொ னிலையன்று புதுமை யாமே.
6(1290)



### என் இறைவன் வலிமை காண என்னுடன் போர்புரி என நபி கூறல்

எனக்குறுந் தகுதி தந்த வியல்புறும் வல்ல நாயன்
றனக்குறும் வண்மை யெம்மோர் சாற்றுதற் கரிய காண்டும்
நினக்குறுஞ் சேனை யோடு நெடுங்களத் தமரின் வெம்போர்
முனைத்திறம் புரியி னென்றார் மூவுல குயர்த்துங் கோமான்.
7(1291)

### உன் இறைவனை வென்ற என் திறம் காண நீயும் உன் சேனையோடு வா என மன்னன் உரைத்தல்

நின்றுணை நாயன் றன்பா னெருங்கியே யாரு மெய்ப்ப
வென்றியே கொண்ட யானென் வீரமே காண வேண்டிற்
றுன்றுநின் சேனை யோடும் வருகெனத் துணைக்கண் சேப்ப
வன்றிற லரசன் சொற்றான் வள்ளலு மகிழ்ந்து போந்தார்.
8(1292)

### போர்க்கெழ மக்களுக்கு முரசறைந்து அறிவிக்கச் செய்தான்

வெஞ்சின மதத்த மன்னன் வீரருக் கறிக்கை செய்வான்
குஞ்சரத் தெடுத்த பேரிக் குணில்கொளப் பணித்த லோடும்
வஞ்சகத் தெழுந்த சிந்தை வள்ளுவர் தெருக்க டோறு
மஞ்சிடித் தார்த்த தென்ன மலிதர முழக்கி னுரரால். 9(1293)

### கேட்டு வீரர்கள் கடலெனத் திரண்டனர்; காரிகைகளும் வந்தனர்

ஒலிதரு முரசங் கேட்டு வீரிய ருளத்து வைத்த
மலிதருங் கொடுமை யோடு மணிப்புயம் பூரிப் போடு
நலிதரும் படைக ளோடு நஞ்சழல் சீற்றத் தோடுங்
கலிதருங் கடலின் வந்தார் காரிகை யவரு மன்றே. 10(1294)

### போர்க்கெழுந்த நமுறூதின் படைகளின் வருணனை

கருத்துறும் யூக மைந்தர் கணிதவர் தேர்ச்சி வல்லோர்
பொருத்துறு நட்டார் பற்றார் போற்றுறும் பதிகள் சூழ
வருத்தமே கொள்வார்க் கீதே வழியென நரகத் தேகற்
குருத்தொடுந் தூத னென்ன வுவந்திறை யெழுந்தா னன்றே.
11(1295)

பேரியுந் தவிலுஞ் சின்னம் பீலியு முழவுந் தண்ணம்
வாரியின் முழக்க மென்னே வாய்விடு மொருவன் றன்னை
நேரொடும் பணிதி ரென்றே நிலைகொளீ ராகி னின்னே
வாருமென் றார்ப்பிற் பாய்மா வளைமுக நோக்க வன்றே.
12(1296)

வேம்பரி யனந்தங் காரின் வெற்பின மனந்தம் வன்னப்
பைம்பொற்றே ரனந்த முத்தின் பாண்டில்க,ளனந்தந்
பம்பிய குடை யனந்தம் படர்கொடி யனந்தஞ் சாப[தண்ணம்
மம்பின மனந்தஞ் சீற்ற மனந்தமே கொண்டா ரன்றே.
13(1297)

மனத்திடை யுன்னு முன்னர் வான்றிசை பறக்கும் பாய்மா
வினைத்தென வளவி லாது மள்ளர்க ளிரைப்புந் திண்ண
வனத்தடக் களிறுஞ் சேனை மறிதிரை முழக்க மச்ச
மனைத்தையுங் கொண்ட வெள்ள மணிநகர் படர்ந்த தன்றே.
14(1298)

வானக மறைத்த நீண்ட வன்கொடி குடை மறைத்த
மானவர் பாத நுண்டூ சிருடர மறைப்பக் கையி
னூனகு குந்தங் கோணங் கட்கமோ டம்பு பாலந்
தாநகு கதிர்க டோற்றத் தளத்தணி சென்ற தன்றே.
15(1299)

பந்தமே யிட்ட வாயும் பாவமே யிட்ட நெஞ்சுந்
தந்தமே யிட்ட வொட்டந் தழலதே யிட்ட கண்கள்
கந்தமே யிட்ட மற்றேருள் கறுவதே யிட்ட துண்ட
மிந்தமேற் குறிப்பல் லாது வேறிலாக் கயவ ரன்றே. 16(1300)

கண்ணெனுங் கணைகொண் டாருங் கடுவெனு மயில்கொண்
[டாரும்
பண்ணெனுங் குழல்கொண் டாரும் பருந்தலை யலைகொண்
[டாரும்
வண்ணருந் தானை கொண்ட வளர்மதி குடையிற் றுண்டத்
தெண்ணறும் பெண்மான் கூட்ட மெழுந்தது பெருமா னேடே
17(1301)

எழுபது தோழரொடு போருக்கெழுந்த நபி

நன்னெறி வழியி னின்று நாவலங் கொண்டு மிக்கிற்
றந்நெறி தகைமை பூண்ட தவத்தெழு பதின்ம ரோடு
புன்னெறி நீத்தெ ழுந்து பொழிகதி ரென்னும் வள்ளன்
முன்னெறி கொண்டு பேரி முழக்கொடும் போந்தா ரன்றே.
18(1302)

கையில் சபமணியும் வாயில் கலிமாவுமே
கொண்ட அதிசய அணி

சருவந்தக் குடையுங் கையிற் சபமணி வேலு மெய்யிற்
பொருமந்தக் கவசத் தோடும் புதுமத யானை முன்னர்
வருமொழிக் கலிமா மாவும் வானவர் கொடி மாராயந்
தருமிந்த வென்றி வல்லோன் றயையணி கொண்டா ரன்றே.
19(1303)



அச்சிறிய குழுவை கொலைவெறியோடு எதிர்த்து
நின்ற நமுறூது

நிலைதருங் கொடியும் வெற்றி முரசமும் நிவர வள்ளல்
கலைதரு மறிவின் மிக்க கணத்தொடுங் கவலை யுற்றார்
மலைதர வுள்ள மஞ்ச வாணிடி முன்னிற் றென்ன
வலைதரு மரண் புறத்தே யடைந்தணி யணியி னின்றார்.
20(1304)

ஆடவர் மடவா ரின்ன வளவெனுங் கணித மில்லார்
நீடரு நகரின் வாய வீர்மடை திறந்தா லென்னப்
பாடுறுஞ் சபதத் தோடும் பாவரண் புறத்தி னெய்திக்
கோடுறுங் குபிரர் மன்னன் கொலையின்மேற் கருதி நின்றான்
21(1305)

எழுபதின்மரிலும் பெண்கள் விலக்கப்பட்டனர்
மேகம் ஒன்று தோன்றியது

பாதகன் கணத்தி னேடும் பந்தமே கொண்டு நிற்ப
நீதநன் னெறியோர் நோக்கி நிவர்தரு மின்ன லோடுஞ்
சீதமைப் புயலின் மானூர் செறிதரப் பொரத்த காவெண்
றோதலி னிவரு நிற்ப வொருகுயின் றேற்று மன்றே.22(1306)

நபியின் ஏவலுக்கிணங்கி கயவர்களைச் சூழ்ந்தது மேகம்

உள்ளகத் துறைந்துந் தோற்று தொருபொரு ளாய
[வல்லோன்
றெள்ளகத் தேவல் கொண்ட தேவருங் கரிய வண்ணங்
கொள்ளகத் தெழுந்த மேகக் குழுவினைப் பணித்தார் பின்னர்
கள்ளகத் தவரை யெல்லாங் காலினுற் சூழ்ந்த தன்றே.
23(1307)

மின்னல் மின்னி இடியிடித்துக் கலக்க கொசுப் படை
வெளிவந்து தாக்கியது

மின்னெனுங் கண்க ளேக்கி விரிந்தவா யிடியே கூவித்
தன்னர சென்ன நீர்சூழ் தரணியே வளைந்து மாறு
மொன்னல ரிவரென் றுய்ந்து வலியுறு மசக முற்றப்
பன்னுனிப் படைக்கு ழாங்கள் விடுத்தனன் படர்ந்த வானன்.
24(1308)

கொசுவின் கூட்டம் நமுறூதின் வீரர்களின் இரத்தங்
குடித்து ஆண்மையை அழித்தது

எண்டிசை படர்ந்த மேகத் திடைவரு மசகக் கூட்ட
மண்டிய கயவ ராக்கை யடங்கலு நிறைந்து கூரின்
மிண்டியற் றந்தங் கொண்டு வேணவை நெய்த்தோ ருண்ணத்
திண்டிற லாண்மை வீரஞ் சென்றழிந் தேங்கி னாரால்.
25(1309)

பலர் மாள எஞ்சியோர் அஞ்சியோடினர்

காரினம் பொழியுந் துள்ளல் கள்ளமே யுடையார் கைக்கொண்
டோரிட மன்றி யெங்கு முரப்பொடுங் கடிப்பிற் றட்டும்
பேரிடத் தோடு மாண்டா ரெண்ணிலர் பிரிந்து மற்றோர்
சேரிட நடுக்கி னோடுந் தெரிந்துழன் றலைவா ரன்றே. 26(1310)

கொடை நாயகரின் சிறப்பு பேசல்

இயலணி யிசுமாயீல் சொல் லியைபப்துல் காதி றென்போர்
வயமுறுந் துணைக பீபு முகம்மதின் கிருபை கொண்டோர்
பயனுற வெறுமை நீங்கும் பான்மையொத் தெழிலி பெய்த
மயனுறுங் கொதுகிற் காற்றா மருவல ரிரிந்தா ரன்றே.
27(1311)

நபிக்குத் தீ வளர்த்தோர் தம்மைக் கொசுகிடமிருந்து
காக்க தீ வளர்த்தனர்

செந்தழ னபியார்க் கென்றார் தீவினை யாள ரஞ்சி
மைந்தழிந் தவரு மற்று மனையிட மறுகு கான
முந்தினர் சிலர்வெந் தீயே யுவப்பொடுந் தேண்டித் தேண்டித்
தந்தமர்க் கெல்லாங் காண்பான் றவக்கமுற் றொளித்தா
[ரன்றே. 28(1312)

என்ன செய்தும் தப்ப முடியாது நிலைகுலைந்த எதிரிகள்

உள்ளறை புகுந்துஞ் செந்தீப் பொலிவுற வொருங்கு பெய்துந்
தள்ளுறாப் புகையிற் றத்த மறைதலே தாக்கு வேந்தன்
கொள்ளுமே னகாய கத்தின் கூரொடு மசகக் கூட்ட
மள்ளிய வுயிர்கள் வாய்கை யலைக்குலை கொள்வ ரொன்னார்.
29(1313)

கொசுக் கூட்டத்தின் தாக்குதலுக்கஞ்சி மன்னனும் ஓடினான்

வெம்படை யெறிந்து சென்னி விளங்குபொன் முடியுந்
தாழ்த்துச்
செம்படை விடுத்துக் கால்கை திடுக்கொடு நடுக்கல் கொண்டு
கும்பிய சீற்ற மாற்றிக் கைமையிற் குனிந்து பின்ன
ரம்புயன் மசகத் தாக்கி னரசனு மோடி னானால். 30(1314)

படைப்பினம் அனைத்தும் வாழ்த்த வெற்றி
வாகை பூண்டு திரும்பிய நபி

வானுறு மமரர் வாழ்த்த மருங்குறுந் தவத்தோர் வாழ்த்தக்
கானுறும் விலங்கும் புள்ளுங் கனிதமி லுயிர்கள் வாழ்த்த
மானமுந் திறமு மாண்மை மைந்துடன் வாகை பூண்டு
தீனெனு முழக்கத் தோடுந் திருநபி யகத்திற் புக்கார்.
31(1315)



மன்னன் மனைபுகுந்து தாளிட்டு திரைகளுக்குள் புகுந்து
சிந்தனையில் மூழ்கிக் கிடந்தான்

பயத்தொடும் வெருண்ட பஞ்ச பாதகன் மனையுட் புக்கி
வயத்தொடுந் தாள்க ளிட்டுக் காப்பொடு மருங்கி னூடை
யயற்றிரை வீழ்த்தி மஞ்சத் தணைமிசை மாழாந் துற்ற
வியன்முகட் டிருகண் ணோக்கிக் கிடந்துளம் வினவா நின்றான்.
32(1316)

பற்பல காப்பி னோடும் பருவர லுளத்தி னோடு
மெற்பற வுருக்குந் துக்கத் தெறுழ்ப்புலி தாக்கி னோடு
முற்படு நினைவு மாறி மொய்த்திடுஞ் சில்லா னாய்தல்
தற்படு நினைவின் மன்னன் றகைகுறி காட்டிற் றன்றே.
33(1317)

இறைவனின் ஏவல்படி கொசுகொன்று
உள்ளே புகுந்து விட்டது

அருபமுஞ் சுருப மென்று மளக்கரு மொருவ னாட்டும்
பருவமே யன்றி வேறும் பாவினை யுண்டோ வாலே
திருவுரைப் படியே துள்ளித் திரைபல நீத்துக் காலன்
மருவுடன் செய்ய றொன்றாண் மசகொன்று புகுந்த தன்றே.
34(1318)

அரசனை அலைக்கழித்த சிறு கொசு

பொறித்திடுங் கரிய புள்ளி புனைமணி முத்துந் துப்பு
மிறுத்தென நுன்றாள் வன்ப லிரையரு ளிறைவா யென்னத்
திறத்தொலி யுலங்கு மன்னன் செறிதருந் தாடி மொய்ப்ப
மறத்தொடுங் கையி ரண்டு மல்குறப் புடைத்தா னன்றே.
35(1319)

பறிதரு மனத்திற் றட்டும் பாங்கொடும் பறந்து மீண்டு
நெறிதரா வஞ்ச முன்னி நிகழ்த்திய வாயென் றோர்ந்து
கறிதர வதர மொய்ப்பக் கயவனு மசகங் கண்டு
மறுதரம் புடைத்தான் கையின் மல்கிடா திரைந்த தன்றே.
36(1320)

மூக்கினுள் புகுந்தது

செந்நிறக் குருதி நாற்றஞ் செறியெயிற் றிடியி னோதை
மன்னிறக் கரிய வேக மலையின மணிகண் மாய்க்கு
நின்னிறத் தகைய வீர நிலையினைக் காண்ப லென்ன
மென்னிறக் கொதுகு மன்னன் றுண்டத்துண் மேயிற் றன்றே.
37(1321)

மூளைக்குச் சென்று இடைவிடாது அரித்துண்ணத் தொடங்கியது

பற்பல நிந்தைக் கேற்கும் பயிற்சியிற் கருத்துக் கொள்வான்
விற்பனத் துறைந்த மூளை மென்சுவை யுண்பா னுக
வற்பற வரிக்கு நில்லா தானந்தம் பாடு மன்னன்
றற்படும் பாடுஞ் சொல்லித் தாக்குமம் மசக மன்றே.
38(1322)

மன்னன் மயக்குற்றான்

ஊர்தரச் சென்னி யுள்ள முளறரக் கொடுங்கோற் பற்றம்
பேர்தர வாயும் பன்மைப் பெலனற வீக்க வீரஞ்
சூர்தரக் கருத்துங் கண்ணுந் துடிதரச் சோம்பல் மாய்தற்
சேர்தர மயக்கங் கொண்டான் றீவினை மயக்கங்
கொண்டோன். 39(1323)

நாற்பது நாள் தொடர்ந்து மூளையை அரித்தது

கைப்பொருள் கிட்டி டாது கருப்பொருள் கிட்டி டாது
மொய்ப்பொருள் கிட்டி டாது வேணுணல் கிட்டி டாது
நைப்பொருள் கொண்டு தாவா நபியவர் மகிமை யுன்னுப்
பொய்ப்பொரு ளாள னுற்பான் போதொன்று மிறங்கா
தெய்த்தான் 40(1324)

கொசு குடையும் வேதனை தெரியாதிருக்க தன்
தலைமீதடிக்க மன்னன் கோருதல்

ஊனொடு முறக்க மில்லா னுறுந்தம ரமைச்சர் மன்னர்
மானொடு மிருந்தோர் நோக்கி யரிப்பது சிரத்தா லென்னுற்
கோனொடுந தாங்குந் தன்மை குன்றின கோதற் றீப்பான்
பூனொடுங் கருதி நுங்கள் கரங்கொடு புடைமி னென்றான்.
41(1325)

அரி : தல் மேலும் அதிகமாதல்

மன்னிய குபிரர்க் கெல்லா மன்னவ னென்னுந் தீயன்
பொன்னணி சிரத்திற் கையாற் புடைத்திட வொதுங்கு மூளைத்
துன்னிட வுண்டி யென்னச் சுட்டலி னுணர்ந்து துள்ளன்
முன்னினெண் மடங்கிற் சுற்று முரனொடு மரித்த தன்றே.
42(1326)

என்ன செய்தும் அரிப்பு அடங்காமல் இரும்பால்
தாக்கச் சொல்ல மண்டை பிளந்தது

அதிகரித் திட்ட பின்ன ரரியதன் றூலங் கொண்டும்
பதிசிரத் திட்ட போதும் பரபரப் படங்கி லாதான்
மதியற விருப்புத் துண்ட மருங்கினர் புடைப்ப தாலே
சதிகொடும் பாவி மண்டைத் தாக்கினர் பிளந்த தன்றே.
43(1327)



அத்துடன் தீவினை அனைத்துஞ் சிதைந்தது

வஞ்சகஞ் சிதைய மன்னும் வன்மமுஞ் சிதையத் தீமைப்
புஞ்சகஞ் சிதைய வீரப் பொருவலஞ் சிதைய வாம்பொய்
நெஞ்சகஞ் சிதைய மண்டை நெறியொடுஞ் சிதையக் காபிர்
தஞ்சமுஞ் சிதைய வேந்தன் றளத்தொடுஞ் சிதைந்தா
[னன்றே. 44(1328)

குஞ்சுகளோடும் வெளிப்பட்ட கொசு நபிக்கு
வழிப்படார் நாசமுறுவர் எனல்

மாறிய கருத்தன் கொண்ட மண்டையி னிருந்த வன்மை
மீறிய கொதுகு பார்ப்பின் மிகையொடும் வெளியி னுற்று
காறிலா திறைவன் றூதர் கணித்திடார்க் கின்ன துன்ப
மூறிய வினையிற் சேர்ப்பா னெனவுரை விளக்கிற் றன்றே.
45(1329)

இறைவனைப் போற்றிப் பறந்து சென்றது கொசு

மேவிய வுயிர்க்கு மெட்டா மேலவன் றகுதி யாவர்
பாவியன் றுரைக்க வல்லா ரெனப்பரி வுடனே போற்றி
நாவிய லினிது மேன்மை யிசையொடு நவிற்றித் துள்ளி
யாவலிற் பறந்து போந்த வருஞ்சிறை மசக மன்றே. 46(1330)

ஊரில் பூகம்பம் ஏற்பட்டது

மேனபி வாய்மை நீத்த விதத்தினுற் றேற்றுந் துள்ள
போனவிக் கொடுமை யானு மவரவ ரிறுமாப் பானுந்
தானவன் றனக்கு மாறுந் தன்மையா னவ்வூர் தன்னை
யீனமுற் றலையச் செய்தா னிறையவ னோடு மன்றே. 47(1331)

ஊர்விட்டோடினர் பலர், இருந்தோர் கடும் பிணிக்காளாயினர்

நேர்மையின் வல்ல நாய னெறிவராக் கயவ னோடும்
பாருமே யலைந்த வாற்றுற் பாவிய ருள்ள மஞ்சி
யாருமங் கிருத்தற் கேலா திழிவொடும் பற்பற் றேய
மூரும்வெம் பிணியி னோடு முழலொடு மிருந்தா ரன்றே.
48(1332)

சிலர் நபிபால் வந்து ஈமான் கொண்டனர்

வாடினர் சிலர்புன் னோயால் வருந்தினர் சிலர்பன் னுட்டி
லோடினர் சிலர்செந் தீயி னுற்றனர் சிலர்பின் வண்மைத்
தேடினர் சிலர்வந் தன்பிற் றிருநபி பாதந் தன்னிற்
கூடினர் சிறப்பி னீமான் கொண்டனர் சிலர்க ளம்மா.
49(1333)

இபுறாகீம் நபியின் தந்தை ஆசறின்
சகோதரர் ஆறானின் மக்கள்

வரிசைநன் னபியின் முன்னோன் வன்றிற லாறா னென்னு
மரசரின் மைந்தர் மிக்க வறிவுளம் பூண்ட சிந்தை
விரைசெறி புயத்து லூத்தென் றணிவிலை பெயரின் வள்ள
லூரிசையி னீமான் கொண்டு மேனிலை யுவப்பி னின்றார்.
50(1334)

மகன் லூத்தும் மகள் சாறாவும் வந்து ஈமான் கொள்ளல்

வலத்துடை யாச றென்னு மந்திரன் றுணைவன் வண்மைத்
தலத்துடை யாறான் றந்த தவத்துறை சாறா வென்னும்
நலத்துடை மாது மேன்மை நவத்துறை நபிபாற் புக்கிக்
குலத்துடை நெறியி னீமான் கொண்டனர் சிறப்பி னன்றே.
51(1335)

நமுறூ தழிவுண்டபடல முற்றிற்று
ஆகப்படலம் 23-க்கு திருவிருத்தம் 1335
முதலாவது இயற்கையங் காண்டம்
முற்றுப் பெற்றது.

இரண்டாவது

# செயற்கையங் காண்டம்

## 24. கடிமணப்படலம்

படலச் செய்தி
அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

மாதவ முயன்று நின்று வண்மையந் தகுதி பூண்ட
சீதவெண் மதிய மென்னத் திருப்புக ழிபுறா கீந்தம்
பூதலக் கணியின் வாய்ந்த புதுமண முடித்த வண்ண
மீதென விசைக்க லுற்றா மியல்பினா லிசையி னன்றே.
1(1336)

நமுறூது அழிந்த பின் தலைமையேற்ற நபியின்
பக்கம் சாறா சார்தல்

புன்மனக் கயவன் சேர்ந்தோர் பொன்றிய பின்ன ரவ்வூர்
தன்மனக் கியன்ற மேன்மைத் தலைமையி னயினா ருற்றார்
நன்மனங் கொண்டு பல்லோர் ஒழுகிய நயத்தின் மிக்கத்
தென்மனங் கொண்டு நின்றார் திருமயில் சாறா வன்றே.
2(1337)

சாறாவின் அறிவும் அழகும்

அறிவணி வித்தின் யூகப் பணர்மதி யதனி னெங்குஞ்
செறியிலை பயனென் றோதுந் தேனொடு நெறியின் வாடை
நறியமே லருளின்பூவி னவநிதத் துதித்த வண்ணங்
குறிபடா தொளிருஞ் செம்பொற் கொம்பென விளங்கும்
[பூவை 3(1338)

நபி மார்க்கத்தில் தீவிரமாக ஆழ்ந்து இறையருள்
பெற்றார் சாறா

விரிதரு மறிவின் மிக்க விளக்கொளி யனைய வள்ளல்
புரிதரு மார்க்கச் செந்தேன் பொலிதரப் பருகி யுள்ளந்
தெரிதர வாக்கங் கொண்டு சீருருப் பெற்றபூமா
னிரிதராக் கருத்தின் வல்லோ னியைதருங் குணபா டுற்றார்.
4(1339)

கன்னி சாறா ஆசைக் கடலில் மூழ்கினார்

திரைசெறி யரவ நீர்சூழ் திண்புவி யிடத்திற் பூத
விரைசெறி யாக்கை யெல்லாம் வேண்டுவ வின்ப மன்றோ
கரைசெறி யாத வாசைக் கடற்கடப் பாரு மின்றா
லரசிளங் கன்னி யுள்ளத் தருநினை வெழுந்த வன்றே. 5(1340)

சாருவின் உள்ளத்தில் நபி இபுருகீம் வீற்றிருத்தல்

பேரருள் சுரந்த கண்ணும் பிரிவிலா வறிவின் செவ்வாய்
சீரழ கொழுகுந் திங்க டிருமுக வடிவுஞ் செவ்வி
மேரள வியந்த பொற்றேள் விளங்குசெய் கரங்கள் கொண்ட
தோருரு வள்ளல் போலு மொண்டொடி யகத்தி னுற்ற.
6(1341)

பல்வகை யறிவு கால்விட் டெழுந்துபண் புலவுஞ் சிந்தை
நல்வகை மிகைப்பச் செவ்வி நறியதிண் களிற்றின் வள்ளன்
மல்வகை யழகின் கோடு வளர்ந்துதாக் குற்ற வாற்று
லொல்வகை காண்கி லாது கருத்திடத் தணர்ந்தாள் பூமான்.
7(1342)

காதல் முற்றியதால் கருத்திழந்து மெலிந்த பூவை

உள்ளிடை யெழுந்த கோல முணர்வொடு நில்லா தெங்கும்
வெள்ளிடை யுருவங் காட்டும் வேட்கையிற் சோக முற்றுத்
தள்ளிடை யரிதா லியாதுந் தனக்கென வேண்டி லாது
புள்ளிடை தருவி லாது மயங்கல் போன் மயங்கும் பூவை.
8(1343)

பான்மது விருப்பி லாது பன்மொழி செவி யிடாது
மேனகை யணிந்தி டாது வேறென்று முளத்தி டாது
மான்விழி புறங்கா ணாது மதியொரு வழிப டாது
கான்மலர் குழலி டாது கருதலே யிடைவி டாதே. 9(1344)

விரைமலர் மறந்து கண்கள் விளங்குமை மறந்து பூண்க
ணிரையணி மறந்து கிள்ளை நிகழ்த்துரை மறந்து பந்து
மரைமலர் மறந்து தொட்டின் மலரணை மறந்து கொண்ட
வரையரை நினைந்துநீண்ட வுயிர்ப்பொடு மயர்ந்தார் பூமான்.
10(1345)

சாருவின் நிலை கண்டனர் பாங்கியர்

நீரின்றி நின்ற தண்டே னிறைமலர் வதனம் பைம்பூண்
சீரின்றி நின்ற தன்மை செருங்குழ லலரி லாது
வாரின்றி நின்ற கோல மனமின்றி நின்ற வண்ணங்
காரின்றி நின்ற மின்னைக் கண்டனர் பாங்கி மாரே. 11(1346)

எதனை வேண்டி உருகுகின்றனை எனத் தோழியர் வினவல்

சுனைமலர் வேண்டி யேபொற் றொடைபிற வேண்டி யேநற்
புனையிழை வேண்டி யேயெப் புகழினை வேண்டி யேயெம்
மனநினை வேண்டி யின்ன வாட்டமுற் றயர்ந்தாய் வண்ணந்
தனதெழிற் சிறந்தாய் மின்னே சாற்றுக வென்னக் கேட்டார்.
12(1347)



இவ்வுலகிலும் சொர்க்கத்திலும் நல்வாழ்வு தரவல்ல
இபுருகீமை விரும்புகிறேன் எனல்

நிலத்திடை நின்ற வாழ்க்கை நிலைபெற மற்றுஞ் சொர்க்கத்
தலத்திடை யுவந்த வாழ்க்கை தன்னையே யளிக்கு மெய்மை
வலத்துடை நயினர் செவ்வி மதுரமே வேண்டி யுள்ள
நலத்தொடு நின்ற தென்றூர் நவமணி முறுவற் பூவை.
13(1348)

பாங்கியொருத்தி நபியிடம் தூது செல்லல்

சொற்றகு மறிவென் றுன்னித் தோற்றிடா துரைப்பக் கேட்டுப்
பொற்றகை மடவா ராய்ந்து புகழ்நபி யிடத்திற் றூதொன்
றுற்றுற விடுப்ப வந்து தூய்மல ரொளிருந் தண்டா
ணற்றுறை யென்னப் போற்றி நவம்பெற மொழிய லுற்றாள்.
14(1349)

உம் தந்தையின் துணைவர் ஆறுனின் மகள்
உம்மை விரும்புகிறாள்

நூனயங் கொண்ட கோவே நுந்தைக்குத் துணையி னுய
மேனயங் கொண்ட வாறூன் வேண்டிய தவத்தின் வந்த
மானயங் கொண்ட கண்ணி மனதிடை நுங்கள் வண்சொற்
றேனயங் கொண்டு நேர்மைச் சிறப்புளங் கொண்டா ரன்றே.
15(1350)

கருத்திடை யெழுந்த நாட்டங் கவலையிற் செல்கி லாது
பொருத்துநல் லறிவு காட்டும் புகழ்நெறி கொண்ட பூவை
யருத்தம்வே றின்றி நும்மா லகங்கொடு நின்றா ரென்னத்
திருத்துமிவ் வசனங் கேட்டுத் திருநபி யாய்த லுற்றார்.
16 1351)

அவ்வகையில் இறைநாட்டம் எதுவோ என்றெண்ண,
சிபுறயீல் வந்தார்

உள்ளநோக் குற்ற காலை யொப்பிலான் றப்பி லாத
வெள்ளநோக் குற்ற வன்பால் விடுத்தலு மளவி லாது
நள்ளநோக் குற்று ணந்த நனிதருஞ் சிபுரி யீலும்
வள்ளலைக் குற்றார் கொண்ட சோபன வரிசை யோடே.
17(1352)

இறைவனின் சலாமும் சோபனமும் கூறல்

புகழ்புக ழடங்கி லாத புதியவன் சலாமுங் கூறி
மகிழ்மகிழ் பெறுக வுள்ள மலிதரு மின்ப மல்க
வகழக ழளவி னீர்சூ ழம்புவி யறமுஞ் சொர்க்க
நிகழ்நிக ழறமுங் கொள்க சோபன நீவிர்க் கென்றே.
18(1353)

கன்னி சாருவை அவர் மணக்க இறைவன் கூறிய சோபனம்

துன்னிய சினைப்பூஞ் சோலைத் துளிநறு வொழுகுங் கூந்தன்
மின்னியன் மருங்குற் செவ்வி மேனகை சாரு வென்னுங்
கன்னியை யுவப்பி னின்பக் கடிதொடை புனைந்து கோடி
ரென்னவே தல்லோன் சொற்ற சோபன மிஃது மன்னே.
19(1354)

சாருவின் விருப்பத்தை மறுக்காதீர் எனக் கூறி
வானவர் ஏகல்

வேதநீர் கொண்ட மெய்மை விளக்கநீர் கொண்ட வாற்றுற்
போதநீர் கொண்ட வன்பிற் புந்தியே யியற்கை யேமெய்
நீதமே கொண்டா ரன்ன நேரிழை யுரைம றுது
சாதமே கொள்க வென்றுஞ் சாற்றிவிண் ணமரர்
போந்தார். 20(1355)

இறையாணை பிறந்ததும் திருமணத்திற்கு நாள் குறித்தல்

பன்னருஞ் சொற்கேட் டின்பம் படர்ந்துள மல்க வென்கோன்
முன்னருந் தூது நோக்கி முறைமையின் வரிசை யோடுங்
கன்னியை மணமே செய்துங் கடிமணப் பந்தரிட்டு
நன்னிலை யியற்று கென்ன நாணிலை குறித்தா ரன்றே.
21(1356)

மரியாதைகளுடனும் நற்செய்தியோடு தூதியர் திரும்பல்

வெடிதரும் பஞ்ச வாச மடையிலை வெண்பூ ரத்தி
னுடன்மருங் கவர்க ளீந்து மணநிறை யுவட்டுந் தன்னுற்
கடிதருங் கலவைச் சேறுங் களிகொளப் பூசித் தண்பூந்
தொடையொடும் விடுப்பத் தூதுந் தொடையொடும்
போந்த தன்றே. 22(1357)

நற்செய்தி பெற்ற நங்கையின் இல்லத்தார்
ஏற்பாடுகள் துவக்கல்

தூதியர் தையற் கோதித் துணர்பல களித்து மிக்க
வேதியர்க் கறிக்கை யாக்கி விருப்பொடு முற்றார் பின்னர்
சோதியிற் சிறந்த பந்தர் துலக்குற மணிக டம்மாற்
றுதியன் மலர்க ளாலுந் தடங்கொள வனைந்தா ரன்றே.
23(1358)

பந்தலை அலங்கரித்தனர்

சிறப்பணி யாடை கொய்து செம்மணி மாலை தூக்கி
நிறப்பணி பலவுஞ் செய்து நீள்கமு கலரும் பாளை
யுறப்பணி குடங்கள் முன்றி லொளிரலங் கரித்த பீடம்
பிறப்பணி யென்ன வன்னே பிறங்கிட வியற்றி னாரால்.
24(1359)



மணமகன் உலாச் செல்ல வீதிகளை அலங்கரிக்க நினைத்தல்

அவ்வலங் கார நிற்ப வாண்டகை யிபுறு கிழுஞ்
செவ்வலங் காரத் தினோர் திருமுக நோக்கி நீவிர்
தெவ்வலங் கார மாய்ப்பான் சிறப்புறத் திருவு லாவிற்
கொவ்வலங் காரம் வீதி யுளுற்றுக வென்னச் சொற்றார்.
25(1360)

வீதியலங்காரஞ் செய்ய வேண்டி முரசறைதல்

கலிவிருத்தம்

கடிமாலைகள் மிகவாடையின் களிறேயெடு முரச
மடிமாலையின் பகையானவர் மனமாழ்குற வணியின்
வெடிமாலது தவழ்மாளிகை நிரைவீதியி னுலவி
யிடிமாலென வதிராவடி யிடுவாரவை வினையார். 26(1361)

நபியாருரை வழிமேவிய நரர்காளணி நெறியே
குவியாயருள் பெறுவீர்கதி குடியாம்வினை பெறுவீர்
புவியாமிகை பெறுவீரியல் புனைவீரயல் மனையீர்
தவியாதெழில் கொளுவீரிசை தறுகாதுள மகிழ்வீர்.
27(1362)

நமர்நாயக நபியார்மயி னனிநாயகி சாரு
வுமர்மாமன மகிழ்வாய்மண முறுநாளை யுலாவிற்
கெமரா லுரை யரிதாமணி யினமாளிகை வீதி
நுமரோடெழில் புரிவீரென நொடிபோடடி யிடுவார்.
28(1363)

பல்வகை அலங்காரங்களின் வருணனை

கடலோதையி னுடலோடக மிகவேகளி யாலே
யடலேபெறு நெறியோர்வள மணிமாளிகை யதின்மீப்
படலேயகில் புகையேகழி பனிமாமலர் மணியே
மடலேதெரு வெறிவாரெழில் வனைவாரணி புனையார்
29(1364)

தொடர்பாலல வடர்பாலல தொகுமூடலி னெறியு
மடல்வார்மலர் புறமேதரு மடவார்மணி மாடஞ்
சுடர்வார்மணி தெளிநீளுடு மதிலோமதி சுடரோ
படர்வார்துகிர் கொடியோவெழில் பணியேயணி குவரால்.
30(1365)

சந்தும்பரி மளமுங்கொடு தவழ்கந்துறு பொடியுங்
கொந்துங்கொள வறையெங்ஙனு மெழுகுங்குளிர் வாச
முந்துங்குழ விடுதண்புகை யுயர்துண்டகி லோடு
முந்தும்புயன் மணமுங்குற முரணுங்கக னெல்லாம். 31(1366)

நிரையாய்பல வகையாமலர் நெடுவானள வுறவே
வரையாமென வெழில்காவண மணிவாயலி னெதிரே
யரிதோரண மிசைகேதன மணியாய்நடு வாரும்
பெரிதாடைக டிரைகோலமு மருகேபெற விடுவார். 32(1367)

நாகங்கரு நாகங்கடி நாரந்தமு மாவும்
பூகங்கள சோகஞ்செறி பூவின்குலை வாழைப்
பாகங்கதிர் தூணின்புற மாகும்படு சோலை
மேகங்கக னுமென்றுயர் மேவுந்தெரு வன்றே. 33(1368)

பொற்பாலிகை யிற்பூவொடு பொற்பார்நிறை குடமு
நற்பாளையெ யிற்சோதி நடுப்பாநில வெனவே
முற்பாயத லைப்பானிரை மொய்ப்போதொடு பனிநீர்
தற்பாளித வச்சேறு தெளிப்பாதல னெவணும். 34(1369)

நிலைநாட்டுவர் வளைபூட்டுவர் நிரைமோட்டணி நிரைவார்
கலைசூட்டுவர் தொடைநாற்றுவர் கடியூட்டுவ ரணிகள்
பலவாக்குவர் நனிவீட்டெதிர் பதிவாக்குயர் பந்தர்
நலவாக்குறு மதிபூத்திடு நவமீக்கொளு முதியோர். 35(1370)

புடைவார்மல ரினமேமிகு புனல்வாவிகள் கமழக்
குடைவார்பணி யணிவார்புகை குழன்மீமண மிடுவார்
படைவாள்விழி யெழிலாடமை வரைவார்பல கோலத்
துடையாரன நடையார்குயி லுரையார்கடி விரையார்.
36(1371)

இசைபாடுவர் நடமாடுவ ரெழிலாகைகள் வருவார்
நசைபாடுவர் விளையாடுவர் நவமாமயி லனையார்
பசையாடவர் பொடிவாடைகள் பனிநீரொடு மெறிவார்
விசையாடிய கொடியோடிய வெளிமாளிகை யதரே.
37(1372)

அறிவிற்றெளி தவமிக்கவ ரகமெய்ப்புற நிதியஞ்
செறிவுற்றிடு பொருள்பற்பல கொடைசெப்புற வருள்வார்
நறிவிற்றிசை மணமொய்த்தலர் நகையற்புத வடிசில்
கறிவித்தையி னமுதத்துரை யொடுகட்டளை யிடுவார்.
38(1373)



பாலுங்கனி பாகுங்குள மும்பண்புறு தகையே
சாலும்பிரி வார்நன்கொடு தஞ்சிந்தையி னுறவாய்க்
கோலும்பல கோலங்கொடு தண்பந்தரி னுலவார்
நாலுங்கர நாகம்பிடி நண்பொன்றிய வெனவே. 39(1374)

மணிபந்தரின் மணமுந்தொடை மலர்சிந்திய மணமுந்
திணிமைந்தர்கள் புயமுங்கிய கலவஞ்செறி மணமு
மணிசுந்தர வதர்சிந்திய மணமும்பல வலருங்
கணியின்றிய தெருவெங்ஙனு மெழில்கண்கொள வன்றே.
40(1375)

### மணமகனை அலங்கரித்த சிறப்பு

கலிவிருத்தம் [வேறு]

பேரிய தெருவணி பிறழ நல்லொளி
சீரிய மணியினுஞ் சிறந்த சித்திர
நேரிய லியற்றிய பின்னர் நீதியி
னூரிய நபியக மன்பு கூர்ந்தனர். 41(1376)

வரிசையின் மாதவர் வாழ்த்திச் சோபனத்
தரசிய னபியினை யலரி யேய்ந்தபோற்
றுருசிடத் திருத்தித்தன் குபேர னிற்புனற்
சிரசுடன் மஞ்சனஞ் சிறப்பி னூட்டினர். 42(1377)

மின்னெனப் புரள்வடி மேனி மேம்புனற்
பொன்னெனத் துகிலினாற் புலர்த்திச் செஞ்சுடர்
தன்னென மலர்ப்பதத் தவத்தி னர்க்கரை
வன்னநற் கவசமே வணிந்திட் டாரரோ. 43(1378)

அணிதருஞ் செழுங்கதி ரமுத மள்ளியே
கணிதருந் தெளிவினாற் பாவின் கண்கவர்
இணிதரு மெழிலொடுஞ் சிறந்த சென்னியின்
மணிதருஞ் சருவந்த மவுலி சூட்டினர். 44(1379)

மலர்தரு மணத்தொடு மதியின் சோதியுங்
குலவிய பேரெழில் கொண்டு மாற்றலர்
புலர்தர வுள்ளமுங் கண்ணும் போர்த்தணி
யலர்தருங் கவசமெய் யணிந்திட் டாரரோ. 45(1380)

ஒன்னல ரூனுகர்ந் தொளிருஞ் சூன்முகின்
மின்னலர் குற்றுடை வாளும் விண்மணி
யின்னல ருதரபந் தனமு மேற்றலர்
வன்னலர் கச்சையு மருங்கு வீக்கினார். 46(1381)

வெண்கிரி யிடையெழில் விரிந்த தாரகை
விண்கண முலவிய வென்ன வேந்தர்கோன்
றிண்கிரி புயத்திடை சிறந்த வாரமுங்
கண்கவ ரழகொடுங் களிப்பிற் சூட்டினார். 47(1382)

சேகறு மாதவ னென்னுஞ் செம்மணிப்
பாகம தணிபெறப் பதும மாமணி
மாகதிர் மிளிர்தரும் வாகு வந்தன
மோகையந் தோளிடை யொளிரக் கட்டினார். 48(1383)

பொழிகதிர் வச்சிரப் பொருப்பு மீதினி
விழிதரு மருவியி னெழில்கொள் மற்புயம்
வழிகதிர் மணியின மன்னு லாசமு
மெழிறர வியல்பொடுந் தாங்கி னாரரோ. 49(1384)

நறுமணக் கலவையு நனிதிற் பூசியே
செறிமணத் தலர்த்தொடை புனைந்து சீரியோ
ரறிமண வாழ்த்தொடு மரும்பொ னாடைகள்
பெறுமணக் கொடையினாற் பேணி னாரரோ. 50(1385)

மணமகன் குதிரைமீதமர்தல்

சித்திரத் தணியினஞ் செறிந்து கிண்கிணி
சத்தமிட் டடிமயி னடனத் தாவிய
வுத்தம மா:மிசை யுவந்த சோபனக்
கத்தரும் வாழ்த்தொடுங் களிப்பி னேறினார். 51(1386)

வீரர்கள் நெருங்கிச் சூழ்ந்தனர்

நெடுங்கடைக் கண்ணியர் குரவை நீள்குழல்
விடுங்களி யிசையொடு மிசைய வுள்ளமே
யடுங்கதி மாவினி லணியிற் றேட்டுனை
கொடுங்கதிர் வேலினார் குழீஇயி னாரரோ. 52(1387)



வாத்தியங்களும் யானைகளும் வந்து சேர்ந்தன

பேரியுங் காளமும் பீலி தண்ணுமை
தூரிய மிடக்கையங் கடலுந் தோன்றின
சீரியர் பலருறுஞ் சிறந்த மும்மத
மாரியி னருவியம் மலையுந் தோன்றின. 53(1388)

ஊர்வலம் சென்ற சிறப்பு

சொரிகதிர்ப் பந்தநற் பொழுதுந் தோன்றின
விரிகதிர் வெண்ணிற மதியந் தோன்றின
புரிநறுங் கொடிகடூய் புயலுந் தோன்றின
சரியொளி தரளத்தா ரகையுந் தோன்றின. 54(1389)

வரிசையர் வாழ்த்தொடு மிசையின் மாண்பொடும்
விரசிடுஞ் சாமரை வெண்பொற் றூசொடும்
பரசுநீர் சிவிறியிற் பல்லர் சூழ்தரு
மரசருங் குரகத மவண டாத்தினார். 55(1390)

குங்கும மேனியர் குலவு மாரத்தார்
தங்கநற் கடகத்தார் தவழ்வெள் ளாடையார்
பொங்கழ லயிலினார் புந்தி மைந்துளா
ரிங்கித வூர்திக ளினை நடாத்தினார். 56(1391)

கவிகையர் கதலியர் கவரி யாளர்வெண்
சிவிகையர் பற்பல விருதின் சீரியோ
ரவிரிழை யிலங்குற வண்ண னன்மதி
சவிதருங் கணமெனச் சார்பிற் போதவே. 57(1392)

திசையெலாஞ் செறியதீ விகையி னுப்பணோர்
நசையெலாந் தருந்துரை நவநி தத்தொடும்
பசையுளா ரார்ப்பொடும் புதிய பன்னிழன்
மிசைதருந் தெருவுலா மிகையிற் போதவே. 58(1393)

பேரறி வுளத்தெழும் பெற்றி காண்டகாச்
சீரறி வாண்டகைச் சிறப்புக் காணவே
நேரணி மாளிகை வீதி நீடிசை
காரணி குழ்லினார் கணங்கள் மேயவே. 59(1394)

வேதிகை யிடத்தினும் வீதி ஞாங்கரும்
போதிகைத் தூணினும் புறத்துச் சாளரத்
தாதகை யிடத்தினு மமுத வெண்டிரை
மேதகை துகிர்க்கொடி விளங்க லாயினார். 60(1395)

### மணமகன் உலா கண்டு எழுவகைப் பருவமாதர் மயங்கல்

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

கருக்கொடுங் கொழுந்து லாய கருங்கொடித் தனுவிற் பூட்டி
முருக்கிய நயன வம்பே மொய்த்தன திசைக ளெங்கும்
அருக்கனிற் பொலியும் வள்ள லணிபுடை பாங்கர் கண்க
ளுருக்கொளுங் கணைக ளோடி யறுத்தறுத் தொதுக்கு மன்றே.
61(1396)

பணியணி யாடி நோக்கிப் பார்த்திப ருருவ நோக்கி
மணியணி யணியாஅ நின்று சித்திர வடிவ மொத்தும்
கணியணி விழியில் வைத்துக் காண்டலே பாராட் டுற்று
மணியணித் தணைந்தா ரென்று மரிவையர் திகையா நின்றார்.
62(1397)

தூசணி யுடலும் வல்லின் சொற்கத்தி னடியிற் றந்தம்
பாசணி யாது முற்றும் படர்ந்திலா நகையிற் சற்றே
கூசணி விழியி னின்ன கோலமே விருப்பு நெஞ்சு
மாசையங் கொழுந்திற் பேதைச் செவிலிய ரமர்த்தா
நின்றார். 63(1398)

செவ்வரி படர்ந்த கண்ணுஞ் சித்திர வுடையும் பைம்பூ
மவ்வலங் குழலு மெய்யின் வாடையுஞ் விளத்தின் கொங்கை
நவ்விய வியப்பும் போக நாட்டிய கருத்து மென்போ
லவ்விளங் குருசி லேகொ லென்பரப் பெதும்பை மாரே.
64(1399)

தானெனு மதர்த்த கண்ணு முள்ளமுந் தடங்கொள்
கொங்கைத்
தேனெனு மொழியிற் றாங்கா விகாரத்தின் றிரிவுங் கையிற்
கோனெழு மூடன் மாற்றும் பைங்களிக் குணமுங் கொண்டு
வானெனுங் குழல்சாய்த் தெங்கு மங்கையர் பல்லர்
மொய்த்தார். 65(1400)

பார்த்திபர் நோக்கி நோக்காப் படியினை நோக்கி ஞாங்கர்
கூர்த்துடன் சினத்து நாணிக் குளிர்நகை சற்றுங் காட்டி
வேர்த்ததென் றுடலிற் கொண்ட விரகத்தின் பரிசஞ் சாற்றி
வார்த்தபொன் னிழையார் நோக்கு மடந்தையர் சிலர்க
ளம்மா. 66(1401)



கரணத்தி னுறுப்பி னின்ற கருத்தொடுந் தெரிந்த விந்தை
தருணத்தி னபிந யத்தின் சாடையுங் குழவி கொண்டா
ரருணத்து மொழியி னோசை யாக்கமு முயிர்ப்பு மாறா
வருணத்தின் விகாரம் பூண்டார் மருவிழி யரிவை மாரே.
67(1402)

தெரிதரக் கலவி யின்பஞ் சீர்தரப் பயிற்றா நிற்கு
முரிதருஞ் சிந்தை மீதிற் கனவொடு முணருங் காட்சிப்
புரிதரும் பல்கா லெண்ணம் பொலிதர வாய்தல் கொள்ளுஞ்
சொரிமதுக் குடத்தின் கொங்கைத் தொய்யலின் றெரிவை
மாரே. 68(1403)

தாந்தரு மக்கட் கேற்பத் தன்மையு முணர்ந்து முன்னர்
போந்தவை நினைப்பு மாற்றும் பொருந்திய சங்க சார
மாய்ந்துளத் திரிவும் வாழ்த்துஞ் சிருள்மொழி யனைத்துங்
கேட்டு
ளேந்துநன் மகிழ்ச்சி பற்றும் பேரிளம் பெண்க ளன்றே.
69(1404)

### ஊர்வலத்தின் பிற சிறப்புகள்

சிறப்பணி கணங்க ளுப்பண் செல்கின்ற வள்ளல் செவ்வி
திறப்பணி கோலங் கண்டு நிவர்மனக் களிப்பிற் போற்றி
யுறப்பணி சாறா வன்னு மொண்டொடி தமையும் வாழ்த்தி
மறப்பணி யாது நின்றார் வளர்பெரு மிதத்தி னாரே.
70(1405)

வெண்டிரைத் துகிர்க்கொம் பென்ன விளங்குமா ளிகையின்
மானார்
கண்டடங் காத மோகக் கருத்தொடு மறிக்கும் வாட்கண்
வண்டினந் தொடர்ந்த செந்தா மரைமுக வள்ளல் சுற்றுந்
தெண்டிரைக் கணங்க ளாடுந் தெருவணி யுலவு மன்றே.
71(1406)

வரிசையே மிகைப்ப மன்னு மாதவ மிகைப்ப யார்க்கு
முரிசையே மிகைப்ப வென்றி யுலவுசீர் மிகைப்ப வெங்கு
முரசிய மிகைப்ப வானோர் மூதுரை மிகைப்பச் செவ்வி
யரசரு மழகு பூத்த வணிதரும் பந்தர் வந்தார். 72(1407)

### மணப்பந்தலடைந்து இறங்கி பீடத்திலமர்த்ல்

பொற்கதி ரெறிக்கு மின்னார் பொங்கிய குரவை யோடு
நற்கதிர்த் தீபத் தோடு நனிதரும் வாழ்த்தி னோடும்
விற்கதி ரயினி நீரும் விளங்குமா லத்தி வாங்கச்
சொற்கதி யமுத வள்ளற் றுரகத மிறங்கி னாரால். 73(1408)

வெடிதரும் பனிநீர் தன்னால் விரிமலர்க் கழல்க ழீஇவெண்
கடிமலர்த் துகிலிற் செவ்வி கான்மல ரதனிற் சிந்தும்
பொடிமலர்ப் பாயன் மீதிற் புகழ்பெற நடத்தி வண்ணங்
குடிதரும் பீட மீக்கண் குரிசிலையிருப்பச் செய்தார். 74(1409)

### மணமகளை அலங்கரித்த மாண்பு

கலிவிருத்தம்

பூணலர்ந் தொழுகுசோதி மென்கொடிகள் போர்ந்துசீர்
வேணலர்ந் தொழுகுசீத வொண்புனலின் மேதகை
நாணலர்ந்த மயிலாரை மஞ்சன நலம்புரிந்
தியாணர்சிந்து முடலீர முந்துகி லியைந்தனர். 75(1410)

சோதிவெய் யவனெனுஞ் சிறந்தவுட றாயவெண்
கோதறுஞ் சசிவழிந்த மென்கதிர் குலாவுதூ
சாதணிந்து நறுகார் நிறங்குளி ரகிற்புகை
மீதலர்ந்த வெடியோதி யிற்சிகழி வேய்ந்தனர். 76(1411)

நாறுதேந் தொடைமிலைந்து வெண்கதிர் நறும்பிறை
மாறுபன் மணியலர்ந்த வண்பொழுதும் வந்தபோ
லாறுசுட் டியருகே திருத்தியொளி ரம்பொனின்
மீறுமின் கருமுகிற் பிறந்தன விளங்கவே. 77(1412)

வானெழுந்து மிளிர்கீழ் வளைந்தபிறை வாயெலாந்
தூநலங் கிளர்கணங்கொள் வண்மணி துளங்கவே
மேனலந் தகையபட்ட முங்கதிர்செய் மென்சுடர்
மானுமந் திலதவா னுதற்குவமை வாய்ப்பதோ. 78(1413)

வேலும்வெங் கணையுமாலும் வென்றவிழி மீதினை
கோலுமஞ் சனம்வரைந்து பைம்புருவ கோடியிற்
காலுமஞ் சுடர்விரிந்த செஞ்சுடிகை கண்பதித்
தேலுமின் குழைகள்வண் குழைக்கழ கியற்றினார். 79(1414)

பொங்குமங் கையர்களங் குலின்குரவை புஞ்சமே
லங்கெழுந் தெனவலர்ந்த பொன்றொடை யதன்றொடர்
திங்கள்வெண் டரளமுஞ் சிவந்தமணி செஞ்சர
மிங்கிதம் பெறவணிந் திலங்கும்வரை யின்களம். 80(1415)

நேர்திரண்ட வெழில்வேயி னுஞ்செழிய நீர்மையின்
சீர்திரண்ட வணிதோ ளணிந்துபல செஞ்சுட
ரேர்திரண்ட சரியின் குலம்பதி யியாமென
வார்திரண்ட முனநன்கை கங்கண மணிந்தனர். 81(1416)



கோதறும் பசியதா தலர்ந்தமலர் கோமழப்
போதெனுங் கரம்விரற் கிடுந்தகைய பொற்புறு
மோதிரங் களுமிகுந்த வாழ்த்தொடு முதன்மையா
லாதணிந்து நெறிவாங்கி னாரிவை மாரரோ. 82(1417)

செய்யபொற் கதிர்விரித்த பாடக சிறப்பினோ
டையகிண் கிணிசதங்கை நூபுர மணிந்தரு
நொய்யசெம் பவளமென் கொடிச்சிறிய நுண்விரற்
கையமின்றி யொளிர்வெண்மை யம்பணி யணிந்தனர்
83(1418)

மிக்கலர்ந்த மணமுந் திமிர்ந்துநறு மென்மலர்
தொக்கவண் டொடைமிலைந்து நன்மணிக டுன்றிய
தக்கமே கலைதிருத்தி யைம்பொனெழி றுங்கிய
நக்குநன் கதிரிறுக்கி னாரரைய ஞாணினை. 84(1419)

### ஆலத்தியெடுத்து கடத்தி வந்தனர்

பொற்கொடிக் கழகுசெய்து நன்னதி பொலன்றொடை
வற்கநற் கொடையளித்து வெண்டுகில் வளந்தர
வற்குடித் தலைசுழற்றி வாங்கியபி னலாத்தியு
மக்கணத் தினிலெடுத் துளக்களி யடைந்தனர். 85(1420)

வெண்ணிறக் கவரியிரு மருங்கிட விரிந்தபூந்
தண்ணிறத் தொடையல்கலவை கோடிகமுந் தாங்கினார்
வண்ணிறத் துணரினணி மலர்க்கிடை மருங்குளார்
பண்ணிறக் குரவையொடு நடத்தினர்கள் பாவையே.
86(1421)

### அலங்கார பீடத்தில் அமர்த்தினர்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

பல்லியங் கறங்க வூதும் பண்ணது மிழற்ற யாருஞ்
சொல்லிய மிசைப்பப் பூத்த துணர்மல ரென்னும் பூவை
நல்லிய லலங்கா ரத்தி னவமணி பீடத் தென்கோன்
செல்லியன் மின்னி னைப்பச் சீர்பெற விருப்பச் செய்தார்.
87(1422)

### நபி சொன்ன முறையில் மணவினை நிகழ்த்தினர்

செறிதரு மறிவின் மிக்கோர் சீர்மையிற் களித்து முன்ன
ரறிதரு நபிதஞ் சொற்போ லருமண முறைமை நாட்டிக்
குறிதரா விறைவற் போற்றிக் கொண்டலின் றொடையல்
சூட்டி
நெறிதருங் குரவை யோடும் வாழ்த்தலும் நிலையா நின்றார்.
88(1423)

மணமக்களின் கைகளை இணைத்து விட்டனர்

வரழ்தருங் கதிர்வெண் டிங்கள் வகைதருங் கணங்கள் போன்றுஞ்
சூழ்தரு முயிர்கள் போற்றுந் துதியொடும் வாழ்க நாளுங்
கேழ்தரு நபிதம் மங்கைக் கிடைப்பமா தரின்கை சேர்த்து
மீழியின் முதியோர் வாழ்த்தி வீறுற வளித்தா ரன்றே. 89(1424)

வாழ்த்தொலிகள் முழங்க மணவறை சேர்ந்தனர்

வானவர் வாழ்த்த வல்லோர் மானவர் வாழ்த்த மானார்
தீனவர் வாழ்த்த வென்றி செயமுர சொலிப்ப வள்ளல்
மானவ மணிக பீபு முகம்மதின் மனத்தின் செவ்வி
யானநன் மணமே பூத்த வறைமயி லோடும் புக்கார். 90(1425)

இருவரும் உவகை பூத்திருத்தல்

தேனொடுஞ் சுவையு மின்னுந் திருவொளி மணியு மென்ன
வானொடும் புவியும் போற்றும் வள்ளலு மகிழ்வு பூப்ப
மானொடு கணையு மாவு மறிகுறி வகிர்த வில்லாத்
தூநறை மலர்வண் கூந்தற் றோகையோ டோகை பூண்டார். 91(1426)

கடிமணப்படல முற்றிற்று

ஆகப்படலம் 24-க்கு திருவிருத்தம் 1426.

# 25. நகர் நீங்கு படலம்

படலச் செய்தி

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

மனநிலை மருது நின்று வஞ்சக னியற்றுந் தீமை
யனனிலை யிடத்திற் றண்ணத் தளியொடு மிருந்த கோமான்
கனநிலை கொண்டு புல்லோர் கணநகர் நீத்து மேன்மை
யினநிலை சாமின் றன்பா லெழுந்தவா றெடுத்துச் சொல்வாம். 1(1427)

வெற்றூராய்ப் போன கவுதாரிய்யாவை
விட்டு நீங்கப் புறப்படல்

மாறுபட் டிருந்தோர் தீங்கின் மலைவுபட் டழிந்து பல்லர்
வேறுபட் டலையா நின்ற வெறும்பதி கவுதா ரிய்யா
கூறுபட் டொழிய வென்றி நெறிகொண்ட வெந்தங் கோமான்
றேறுபட் டிருந்த மேலோர் திரளொடு மெழுந்தா ரன்றே. 2(1428)

மனைவி சாரு, அவர்தம் சகோதரர் லூத்துடனும்
நபி எழுந்தனச்

மேற்றகை வளர்ந்து பூத்த மென்கொடி தேவி யோடு
மாற்றலி னறிவின் மிக்க வருமையின் லூத்து முண்மைப்
போற்றிய தீனி னல்லோர் புகழ்தருங் குழுவுந் துய்ய
கோற்றகை நபியும் வல்லோ னருளொடுங் குழீஇயி னாரால். 3(1429)

பதி பல கடந்து கீருன் என்னும் ஊருக்கு வந்தனர்

குலைதரு நகருஞ் சூழ்ந்த குடியெனும் பாலை நீந்தி
யலைதருந் தடமுந் துன்னு மடவியும் பொழிலும் வான்ரு
மலைதரு மிடமு மற்றும் வனம்பல கடந்து பின்னர்
நிலைதரு கீரு னென்னு நெடும்பதி புக்கி னாரால். 4(1430)

இறைநெறியை அப்பதியினர்க்கு விளக்கி நேர்வழிப்படுத்தினர்

செழுமல ரிடத்த நுண்டேன் செறிதரு மளியி னன்பால்
குழுமலி யவர்கள் போற்றக் கொற்றமே பயிற்சி யுற்று
விழுமிய பொருளின் மெய்ம்மை விளங்கிய வறிவு மியார்க்கு
மொழுகுற விளக்கிச் சின்னா னாற்றனா ரிறசூ லன்றே. 5(1431)

### வானவர் சிபுறயீல் "வகி" கொண்டு வரல்

தீங்குறும் புன்மை நீத்துத் தீனெறி யுலகி னுள்ளார்
பாங்குறுந் தகைய வன்பிற் பணிவிடை புரியா நிற்ப
ஆங்குறு மெந்தங் கோமா னவரிட மிறையோன் சொல்லான்
ஞாங்கரி னொகியோ டுற்றார் நாகத்தார்க் கதிப ரன்றே.
6(1432)

### லூத்து நபியை விரைவில் வேறு நகர்க்கனுப்புக

அரிதுணர் வரிசை வல்லோ ரளவிடற் கரியோன் செவ்வி
பெரிதுணர் சலாமுங் கூறிப் பெட்புறு முவகை யோடுந்
தெரிதரு லூத்தென் றோதுந் திருநபி யிறசூல் தம்மைக்
கரிதின நகரிற் கெய்தக் கடிதினிற் பணிக்க வென்றான்.
7(1433)

### லூத்து நபிப் பட்டம் பெற்றதை நபி இபுருகீம் அவர்க்கறிவித்தல்

வல்லவ னுவகை வாய்மை வானவர் வழங்கிப் போதச்
சொல்லுறழ் கொடைக்கை வள்ளல் செப்பருங் களிப்பி னோடு
நல்லுணர் வென்னும் வங்கம் நனிதினாற் புன்மை வாரிச்
செல்லுநற் றிறத்த லூத்தின் றிருமுக நோக்கிச்
சொல்வார். 8(1434)

செவ்விய நெறியிற் றுன்னுஞ் சீரிய கருத்தி னோடு
மவ்விய மகற்று மேன்மை யணிநிலை யுடைய ராகி
யெவ்விய றனினு மொன்றி னியல்பொறி யடக்கும் வல்ல
அவ்விய னபியின் பட்ட மருளின னும்பால் வல்லோன்.
9(1435)

### இபுலீசின் வழி நடக்கும் மக்கள் வாழும் சத்தூம் நகர் செல்வீர்

பிற்புற நயந்து வஞ்ச பேதகத் திபுலீ சென்னுந்
துற்புறன் வழிபா டுற்ற தொகுமன வறிவி லார்மொய்த்
தற்பறுங் கொடிய சத்தூ மைந்நக ரதனிற் செல்லுஞ்
சொற்பெறு மிறசூ லென்னுந் தூதெனுந் தகையு மீந்தான்.
10(1436)

### அதை மையமாகக் கொண்ட ஐந்து நகரினைத் திருத்துக

நீங்கிய கருத்தின் வல்லோ னீர்கொண்ட நிலைமை நோக்கி
யோங்கிய புகழ்ச்சி யோடு முனாற்றிய தகையிற் பண்பா
லாங்கடைந் தைந்து பேரூ ரதனிடை யுறுவார்க் கெல்லாந்
தீங்கினை நீத்தற் காய திருமொழி விளக்கா நிற்பீர். 11(1437)



### கயவர்களைக் கதிபெற அழையும்

உள்ளகத் துணர்வி னானு முணர்வெழுங் காலி னானுந்
தெள்ளகத் தகுதி யானுந் தேடரும் பெரியோன் றன்னை
யெள்ளகங் கொண்டு நாளு மிறைஞ்சுவான் றகுதி யோடே
கள்ளகங் கொண்டார் தம்மைக் கதிபெற விளிமின் மன்னே.
12(1438)

### பாவிகள் நரகத்துழல்வர் என எச்சரியும்

'உவந்திடங் கிடந்தார் வண்ணத் தொளிரிடங் கொள்வார் வஞ்சப்
பவந்தருங் கொடியார் வன்னித் திருகையிற் படுத்தித் 'தேவர்
நிவந்தகைத் தண்டத் தாக்கி னெரிதருங் கும்பி மாழ்வா
ரவந்தனி லுழலற் பீரென் றாண்டகை தண்டஞ் சொன்மின்.
13(1439)

### கொடிய பாவி நமுறூதுக் கேற்பட்ட கதியைச் சுட்டிக் காட்டுக

தேக்கிய செல்வந் தன்னாற் றிறத்தினின் மிகையி னின்ற
ஊக்கவ னுமுறூ தோடு முடன்றவர் தமக்கு மன்னுந்
தீக்கடு வினையு நோயுஞ் செனித்திடுந் துன்பந் துன்னிப்
போக்கிய வேதுந் தோற்றப் புகன்றவர்க் குணர்த்திர்
மன்னே. 14(1440)

### அன்புடன் விடை கொடுத்தனுப்பினர் நபி இபுருகீம்

இனையன பலவுங் கூறி யின்புட னுவந்து போற்றி
நனைதருந் தொடையின் பொற்றோ ணயனுறப் புல்லி மோந்து
புனைதரு மகிழ்வி னோடும் போதர விடுத்து வள்ளல்
வனைதரு மறிஞோர் வாழ்த்த வரிசையி னிருந்தா ரன்றே.
15(1441)

### அந்நகரை ஆள நல்லோர் சிலரை நியமித்து மனைவியுடன் நகர் நீங்கல்

அந்நக ரிடத்திற் றொக்க வறிஞரிற் சிலர்க டம்மை
நன்னபி நெறிவ ழாது நனிபெற நடாத்து கென்னத்
துன்னிட விருத்திப் பின்னர் துணைதருந் தேவி யோடுந்
தந்நயங் கொண்டு போந்தார் புண்ணியந் தழைப்ப மாதே.
16(1442)

### அண்ணல் நபியும் துணைவியாரும் வழி நடந்தனர்

வண்ணவாய்ச் சிறகர் புள்ளி வண்டின விளரி யோடும்
பெண்ணவாய்ச் சிறந்த பச்சைப் பிதிர்சுகத் துத்தத் தோடுங்
கண்ணவாய்ச் செழித்த மஞ்ஞை களித்திருந் தாட மெய்ம்மை
யண்ணலுந் துணையுங் காரு மலர்ந்தயி னொத்துப்
போந்தார். 17(1443)

பல்வகை நிலங்களுங் கடந்து சென்றனர்

தேனணி வனசப் போதிற் செறியரும் பொலன்செய் யன்ன
மானணி யிசையின் றேற்ற மானவர்க் கன்னாய் நுங்க
டுய்நனி செய்ப பாதந் தொகுநடை யிவைகண் டுற்றத்
தீநனி நீங்கி யார்க்குஞ் செம்மையாற் செழித்தே மென்னும்.
18(1444)

பண்ணலங் கனிந்த தீஞ்சொற் பாவையர்க் கமுத மன்னார்
கண்ணலங் கண்டு கூவுங் கருங்குயில் வாயெ ழாவா
முண்ணலப் பழன மெல்லா மொருங்கினிற் கிளைக்கு மேன்மை
யண்ணலு முடலி ரண்டி னாருயி ரொன்றிற் சென்றார்.
19(1445)

பழனமும் பழனஞ் சூழ்ந்த படுபொழில் பொழிலி னாப்பண்
விழைநிரை நிரையி னாப்பண் வியன்குடி குடியின் வீர
ரழனில நிலத்தி னான்கு டரும்புகை புகையின் மேகஞ்
செழிவரை வரைவு நீந்தி யொன்றினி லொன்றிச் சென்றார்.
20(1446)

வான்றவழ் நாகஞ் சுற்றும் வளைமதி லுடுத்து வீங்குங்
கான்றவழ் வசந்த நாடுங் கடிபொழில் பழன வாவித்
தேன்றவழ் சலச வன்னச் சிலம்பொடு சிலம்பும் பாண்செய்
மான்றவழ் விழியார் பூத்து மகிழ்தரு நகரங் கண்டார்.
21(1447)

மிசுறு நகரஞ் சென்று சேர்ந்தனர்

நெறியது வரிசை வள்ள ளிறங்கொளு மும்பல் போன்று
நறியது சிறந்த மேன்மை நாயகி பிடியி னொத்துக்
குறியதன் பான்மை யின்றித் தொழிலினாற் கொற்ற மாக்க
ளறிவது கொண்டு புக்கா ரந்நகர் மிசுறு மன்றே. 22(1448)

அவ்வூர் மன்னன் சாத்தூகு மேல் மாடியினின்று பார்த்தனன்

நல்வழி யுணராத் தீயோர் நனிபுக ழின்றி வன்மைப்
புல்வழி யவ்வூர் போற்றும் புரவலன் சாத்தூ கென்போன்
வில்வழி மணிபீ டத்தின் மேவிய காலை ஞாங்கர்
செல்வழி கொண்டா ரின்ன சிரியோர் தம்மைக் கண்டான்.
23(1449)



அவ்விருவரையும் தன்முன் அழைத்துவரச் செய்தான்

கண்டனன் வலத்திற் செவ்வேற் கரத்தினர் விளித்து வண்ணத்
தண்டரு மலரிற் பூத்தத் தடக்கொடி படர்ந்த செவ்வி
யெண்டரு வனையா ரிங்ங னியல்பொடு கொணர்மி னென்றா
னண்டரும் வள்ள றம்மை யவனிடங் கொடுபோய் விட்டார்.
24(1450)

வஞ்சக சிந்தையோடு நீவிர் யாவர் என மன்னன் கேட்டல்

கற்றையங் கதிரி னோடுந் தண்ணிலாக் கான்ற திங்க
ளுற்றன வல்லி பின்னு முயர்நபி முன்னர் நிற்பப்
பொற்றவி சிருந்த தீயன் புந்தியற் றரிதி னோக்கி
மற்றிலக் கணங்கள் பேணா மன்னவன் கவரிற் கேட்டான்.
25(1451)

வடிவினிற் சிறந்து மேன்மை வண்ணத்திற் சிறந்து நின்றீர்
குடியினிற் சிறந்த தியாண்டு குறித்திடு நாம மியாது
கடிதரு நீவி ரியாவர் களித்தெவண் போத லுற்றீ
ரடவுடன் விளக்கி ரென்றா னண்டகை விளக்க லுற்றார்.
26(1452)

இறை தோழன் இபுருகீம் நபி நான், நமுறூதை வென்றவன்

ஆரணப் பொருளுங் காணா தரியவ னுவந்த தோழன்
வாரணப் புவியிற் போற்று மருநபி யிபுரு கீமாங்
காரணத் துடனே வந்த புன்னகர் கவுதா ரிய்யா
பேரணித் தரச னோடும் பேரிகல் செய்தோ னியானே.
27(1453)

இப்பெண் யாரென சாத்தூகு மன்னன் வினவினன்

என்னொடு மெதிர்த்து மென்ற னிறையொடு மெதிர்த்து மாறாய்த்
தன்னொடுஞ் சேர்ந்து மாண்டா னென்பதுந் தகையிற் சாற்ற
மன்னவ னுணர்ந்து சிந்தை மயக்கத்தி னபியை நோக்கிப்
பொன்னணி யாவ ளென்றான் புல்லிய விகாரத் தானே.
28(1454)

ஒன்றுவிட்ட சகோதரி, ஈமான் கொண்டோர்
உடன்பிறப்புகள் என்பதால் என் சகோதரி எனல்

தேனணி தொடைமு தாதை தோன்றல்சி றத்தன் பெற்ற
மானணி யாத லானு மார்க்கத்தி லெவர்க ளேனு
மூனறு முடன்பி றப்பென் றுயர்முறை யானும் வள்ளல்
பானலங் கண்ணி யென்றன் பயன்சகோ தரியென் றாரால்.
29(1455)

### சாறா மீது மன்னன் மையல் கொள்ளுதல்

முன்னர்கண் டுள்ளத் துற்ற மோகத்தா லினைய வாய்மைப்
பின்னர்கண் டாக்கை வேறு போதகம் பெறு வானாகத்
தன்னிலை திரிந்து துன்னு மின்னலிற் றளர்ந்து விம்மி
மன்னிலை மறுத்த பாவி மானனார் மையல் கொண்டான்.
30(1456)

### அவளை எனக்கு மணமுடித்துத் தருக என மன்னன் கேட்டல்

வான்கதி ரமுத மன்னி வழிநிலா முகத்தி னன்ன
தேன்கனி மதுரத் தீஞ்சொற் சேயிழை வதுவை செய்தென்
கோனலஞ் செழிப்ப மாறாக் குழுநிதி செழிப்ப நண்பின்
மாநலத் தருளு கென்றான் மனமது மருள்கொண் டானே.
31(1457)

### சாறாவைக் கவர தன்னைக் கொல்வான் என எண்ணி மாற்றிச் சொன்ன நபி மீண்டும் சொன்னது

கொடுங்கொலை புரிந்து தங்கைக் குலக்கொடி கவரு மென்ன
நெடுங்கொடி படர்ந்த வென்றி நிருமலர் மறைத்துக் கூற
வடுங்கருத் துடைய செவ்வே லரசனு மின்ன வாய்மைக்
கடுங்கருத் தறையக் கேட்டுக் காரணத் துரைப்ப ரன்றே.
32(1458)

### அவள் சம்மதத்தை நீரே கேட்டுக் கொள்ளும் எனல்

கண்கவ ரழகு பூத்துக் கான்றபொற் பணிகள் செய்ய
தண்கதி ரென்னு முத்தந் தவநிதி யுடைய ரேனுந்
திண்கதித் தலருந் தண்டார் திறற்புய வலிய ரேனு
மண்களி மன்ன ரேனு மணமன மியையா ரன்றே. 33(1459)

எத்திறத் துடையா ரேனு மியைமன முடையா ரல்லா
ரித்திற மிவர்பாற் கொண்ட வியல்பது மேன்மை யென்னி
லத்திற நீரே கேண்மி னென்றரு நயினார் செப்ப
வைத்திறக் கதிர்வேன் மன்னன் வழீஇயதோர் வார்த்தை
சொல்வான். 34(1460)

### நீ தர மறுத்தால் நானே கவர்வேன் எனும் உரைகேட்டு இருவரும் வெளியேறல்

என்னிடத் தினிதின் வேட்கு மியைமணத் தருள்கி லாதே
னின்னிடத் திருந்த பூமா னேர்கெட வவனா யத்திற்
றுன்னிட வடர்ந்து கோடு மியாமென மன்னன் சொற்றான்
பின்னொரு மொழியி டாது பெயர்ந்தன ரிருவ ரும்மே.
35(1461)



### பள்ளியறை சென்றான்; சாறாவின் மையல் மேலிட்டது

தவிசிடம் விடுத்துச் செவ்வி சமையமண் டபத்திற் புக்கி
யவிர்மணி பணிகள் பூண்டு மீறிய வாக்கத் தோடும்
புவிமலி யிழிவின் சிந்தைப் புல்லவன் காட்சி யெங்கும்
பவியுருத் தோற்றத் தெய்த்துப் பாவினை யொழிந்தா
[னன்றே 36(1462)

### மன்னன் ஆணைப்படி வீரரும் தாதியரும் சாறாவைப் பற்றிக் கொணர்ந்தனர்

தன்னகத் திருந்த வீரர் தாதியர் விடுத்து நீவிர்
மின்னிடத் திருந்த பெண்மான் விரைவொடு பற்று மின்க
ளென்னலு நரக மெய்து மின்னலின் வினையார் போந்து
சென்னல னியற்றுங் கோமான் றேவியை வளைந்தா
ரன்றே. 37(1463)

வஞ்சகம் பிறந்த நெஞ்சார் வன்மையங் கண்ணி தன்னிற்
பஞ்சகஞ் சிறந்த பாதப் பாவையோ திமத்தைக் கொண்டு
நெஞ்சகம் பிறந்த நிந்தை நிலைதரும் பாத கத்தின்
பஞ்சகம் பிறந்த மன்னன் படுமுனம் விடுத்தா ரன்றே.
38(1464)

### கலங்கிய இபுறாகீம் நபி இறைவனை இறைஞ்சுதல்

இலங்கிழை பிரிந்த காலை யேங்கியெவ் வினையீ தென்னக்
கலங்கின ரயர்ந்தா ராக்கை காற்றினி லாடி யொத்து
மலங்கினர் நிறங்கண் மாறி மறுகினர் திரண்ட பூதம்
விலங்கின ரிருகை யேந்தி வேண்டினர் நயினா ரன்றே.
39(1465)

### மன்னன் முன் தோன்றி நபி பெருமுழக்கம் செய்தனர்

இரந்திறை யரியோன் பாலி னெடுத்தெடுத் தியம்ப லோடும்
வரந்தைகொ ளரசன் சிந்தை மண்டப மருங்கி னின்றார்
கரந்தருங் கொடியோ ராக்கைக் கலக்கத்தி னடுக்க வள்ளற்
றரந்தருந் தகைகே டென்னத் தாக்கொடு முழங்கி னாரால்.
40(1466)

### தீய நோக்குடன் மன்னன் சாறாவை நோக்கல்

கலித்தெழு மோதை யோங்குங் கடலொருங் குண்ட மேக
வொலித்தலி னொலித்துக் காட்டுங் காரண முணராப் பாவிப்
பலித்திடும் விதியின் றன்மைப் யற்றலா னூழை வன்னித்
தலத்தினி னோக்க லென்னத் தலைவனு மாது நோக்கான்.
41(1467)

உடன் அவன் கரங்கள் சூம்பி கழுத்தில் மாட்டிக் கொண்டன

எம்பெரு மான்கண் போன்ற வெழின்மணிப் பாவை தம்மை
யம்பிரு சிந்தை யுன்னு முன்னரி ழுக்கங் கொண்ட
வம்பிருங் கரங்கள் சூம்பிக் கழுத்திடை மாறி மாட்டித்
தும்பினிற் பிணிக்கப் பட்டான் சூழ்விதி பிணிக்க மன்னன்.
42(1468)

உடல் வலி குன்றி அசைய முடியாதவனானான்

கந்தர மெடுத்து வீசுங் கரமது மல்க மல்குங்
கந்தரங் கந்த ரத்திற் கவிழ்த்தலாற் கவலை பம்மிச்
சுந்தரங் குன்றி வீரச் சுகங்களுங் குன்றி நைந்து
மந்தரந் தாக்குற் றென்ன மாழ்கினன் பாவி யன்றே.
43(1469)

பிறர் மனை விழைவோர் கதி இது எனக் காட்டுவது போலிருந்தது

வாடின விருகண் டெண்ணீர் வடிதரத் ததும்பா நின்றான்
கோடிய புருவ வில்லுங் கூர்விழி யம்புங் கொண்டு
சாடிய தைய லார்கள் பிறர்மனை சளக்குற் றார்கள்
பாடிவை யென்னக் காட்டும் பாவினை கொண்டா னன்றே.
44(1470)

தீவினையேனின் இன்னல் நீக்க நபி இறைஞ்சினாலே
இன்னல் நீங்கும் என உறுதி பூண்டான்

பூங்கொடி யுவந்த மேன்மைப் புகழ்நபி யவர்தம் பாலிற்
றீங்கினை முயன்றே னென்னச் செய்வினை துயரத் தோடு
மீங்கென தின்ன லீக்கு மிறையென விரந்தா லன்றி
நீங்கிடா தென்ன மன்ன னெஞ்சினி லுறுதி பூண்டான்.
45(1471)

என் துன்பங் கண்டும் இரங்காமல் நிற்கிறீரே என
சாருவை அவன் கேட்டல்

இருகரங் கழுத்திற் பூண வெழுமுடல் வாட வுள்ள
மொருநினை வேனுந் தீண்டா துழறரப் பதைப்ப வாவி
மருவுநெட் டுயிர்ப்புப் பூப்ப மயங்கியான் படுமித் துன்பந்
தெரிதரல் கொண்டோ நின்றீ ரெனத்திரு மயிலைக்
[கேட்டான். 46(1472)

அறம் பிழைப்போர் கதி இதுவே. நபி மனைவியைக் கவர
நினைத்த உனக்கு மீட்சி ஏது எனல்

அறநிலை வழீஇயி னானு மடல்பொருள் நிந்தித் தானு
மறநிலை நின்ற தானும் வஞ்சக முயன்ற தானும்
புறநிலை யவாவி னானும் பொய்யுரை யியம்பி னானும்
பிறன்மனை விழைவாற் கென்றும் பிழைபொரான் வல்லோன்
[கொன்னே. 47(1473)



புன்மையே பயின்ற பேர்கள் புனிதமே கருத்துட் கொண்டு
நன்மையே நயப்ப வாக நாயகன் றூத ராகித்
தன்மையே கொண்டு நின்ற தகைநபி மார்க டேவிப்
பன்மையே கொண்டோர்க் கெல்லாம் பண்புறும் அனையா
[ரன்றே. 48(1474)

அரியவ னுரிய பாங்க ரறிவள ரிபுரு கீந்தம்
பெருமனை யுவந்த செல்விப் பெண்ணலங் கனியை வன்பின்
பொருமனங் கொண்டு வவ்வும் புன்மைநோய் படர்ந்த
[வாற்று
னெரிதருந் துயரெவ் வாறு நீங்குதல் பெறுவாய் கொன்னே.
49(1475)

செய்த பிழையுணர்ந்து வருந்தி நபியிடம் சாருவை
வேண்டச் சொல்லல்

நறவலர் சொருகுங் கூந்த லுரியர் திலக மன்னு
ரறமொழி யுரைப்பக் கேட்டு மன்னவ னஞ்சி யஞ்சி
மறநிலை கொண்டு வள்ளன் மனநிலை கொள்ளாப் பாவ
முறநிலை கொண்டு குற்ற மொருங்குறு வினையே செய்தேன்.
50(1476)

நிலைகெடுங் காமப் பான்மை நேர்கருந் தொழிலை யின்னே
குலைதர வொருவி நினைத்தேன மேலுமிக் கொள்கை
[கொள்ளேன்
கலைதரு மவர்தம் மெய்மைக் காவல னிடத்தி னன்பாற்
சிலைதரு நுதலீர் கேண்மோ சிறப்பொடு மிரப்ப வின்றே.
51(1477)

என்செய லதனு லெய்து மிப்பெருந் துயர நீவிர்
மன்செய லிரப்பா ரென்னில் மதிப்பொடுங் கொண்ட
[வல்லோன்
றன்செயற் றகுதி தன்னாற் றண்ணெனுந் தீர்ப்ப னென்னப்
புன்செய லாளன் சொற்றான் பூங்கொடி யுணர்ந்து
[மீண்டார். 52(1478)

மனமிரங்கிய மனைவி சொற்கேட்டு நபி இறைஞ்சுதல்

மலர்ந்தமென் கொடியின் பாவை மாண்புறு மாவி யென்ன
வலர்ந்திட வுள்ள மெய்மை யாண்டகை யிடத்தி னெய்தி
யுலர்ந்தவ னடுங்கிக் கெஞ்சி யுறுதியி னறைந்த வெல்லாம்
புலர்ந்திடா துரைத்தார் யார்க்கும் புகழது நிலைப்ப மாதே.
53(1479)

அகழ்ந்தவன் றன்னைப் போற்று மரும்புவி தன்னின் மிக்க
விகழ்ந்தவன் றன்னைப் பேணு மெழிலுறுங் கருத்தின் வள்ள
னிகழ்ந்தவை யனைத்துங் கேட்டு நெடியவன் புறத்தி னன்பிற்
புகழ்ந்திரு கரங்க ளேந்திப் புந்தியோ டிரந்தா ரன்றே.
54(1480)

சிபுறயில் வருகை

பொறிவழி யெவையுந் தோற்றுப் பொருளவா யுலகமெல்லா
நெறிவழி கொண்ட மேலோ னேர்பெறு மிடத்தி னுண்மை
யறிவழி யொகியே கொண்டு ஜிபுரியீ லடைந்து மேன்மை
குறிவழி நபியை நோக்கி சலாஞ்சொலிக் கூறு கின்றார்.
55(1481)

அவன் ஆட்சியை உம்மிடம் ஒப்படைத்தால்
அல்லாது அவன் பிணி நீக்கான் இறைவன் எனல்

கொடியவன் றகைய செம்பொற் குவைநிதி யரசின் மாட்சி
யடல்பெறுஞ் செல்வ மெல்லா மன்புட னுங்கை யாக்கி
மிடியொடு மவனை நீத்தே வினைப்பிணி தீர்ப்ப னல்லாற்
றொடர்பவ நீங்கா னென்றான் றாயனென் றறைந்து
[போந்தார். 56(1482)

நபி சென்று அவனிடம் கூற இணங்கி,
அவ்வண்ணமே செய்தான்

அரும்பொரு ளிடத்தா னெய்து மாக்கமே நயினார் போந்து
பெரும்பொருண் மன்னன் பாலிற் புகன்றனர் பிரியத்தோடு
மிரும்பொரு ளாய மஞ்சி யினிதொடு மளித்து வெட்கிக்
கரும்பொரு ளழிந்து பாவக் காமமே யொழிந்தா னன்றே.
57(1483)

காஜறத்து என்னும் அழகிய நங்கையை சாருவுக்கு அளித்தான்

கங்குலிற் குழலுந் தூய கதிர்பிறை நுதலுந் தண்ணத்
திங்களின் முகமுங் கொண்ட செழுங்கொடி காஜ றத்து
நங்கையுந் தாயார் பாலி னுட்டிய தீமைத் தண்டஞ்
செங்கழல் வீழ்ந்து போற்றிச் சிறப்பொடு மளித்தா
னன்றே. 58(1484)

அனைத்தையும் நபிக்குத் தந்து துன்பமொழிந்து
அயலூர் சென்றனன்

பயிறரும் படைக்கை வீரர் பதாதியுங் குடியுங் கூழு
முயறரு மமைச்சர் மற்றோர் மொய்ந்நிதிக் குவைநா டெல்லா
மியறர நபிதம் பாலி னளித்தவ னிரிந்து வேற்றூ
ரயறரப் புகுந்தான் றுன்ப மனைத்துமே யகன்ற தன்றே.
59(1485)



நாட்டு மக்களுக்கு நன்னெறி போதித்து நல்லாட்சி
செலுத்தினர் நபிபிரான்

சுற்றிய குழுவி னோடுந் துணையொடுந் தகுதி யோடும்
வெற்றியும் வீறுங் கொண்டு விழைகுடி யொருங் குவப்ப
நற்றவ நெறிந டாத்தி நன்படை மல்க வள்ளல்
கற்றுணர் மார்க்கங் காட்டுங் கதிபெற விருந்தா ரன்றே.
60(1486)

கொடை நாயகர் வாழ்த்து

புகழ்தரும் வகுதை மன்னன் பொருவிலா இசுமா யீல்மெய்
மகிழ்தரு மணிக பீபு முகம்மதி னகத்தி னுறைப்ப
நெகிழ்தர வலர்ந்த பீட நிலைகொண்டு மெய்ம்மை வள்ள
லிகழ்தரா மிகுறென் றோது மிரும்பதி பல்கா லுற்றார்.
61(1487)

நகர்நீங்கு படல முற்றிற்று

ஆகப்படலம் 25-க்கு திருவிருத்தம் 1487.

# 26. இசுமாயீல் நபியவதாரப் படலம்

படலச் செய்தி

கலிவிருத்தம்

நவநித முலவுந் திருநபி நயினு
ரவிரொளி வழகி னரிதொடும் வரவே
புவியிடை யிசுமா யீல்நபி புகழி
னவதரித் துதிக்கு மணியிய லறைவாம் 1(1488)

மிசுறை சிறப்புற ஆண்டு வந்தனர்

திசைதிசை சூலவுஞ் செய நபி யுரையி
னசையது மிகையி னலனொடு மிசுறி
னிசைதர வரசி னியல்பொடு முற்றுப்
பசைதரும் வழியே பயிற்றின ரன்றே. 2(1489)

பின் தக்காரை அரசு நடத்த இருத்தி
குடும்பத்தொடு புறப்படல்

அரசிய னெறியி னதற்குறு தகையின்
முரசிய லொருவர் முறையொடு மிருத்தி
யிரசத மணியி னிருநிதி மிகையக்
குரிசினன் னபியுங் குலங்கொள வெழுந்தார். 3(1490)

சாருவுடனும் காஜறத்துடனும் மிசுறு விடுத்து
சாமில் புகுந்தனர்

காவல னுதவுங் காஜறத் தென்னும்
பூவையு முடைய புகழணி சாருத்
தேவியு நபியுந் திருப்பதி விடுத்து
நாவலர் துதிக்குஞ் சாமினண் ணினரே. 4(1491)

பலவகையிலும் சிறந்த நகர் சாம்

மலரல ரறையுண் மருவிய வன்ன
மலரறை தாவுங் கடைசியந் நலர்கள்
பலரணி யுழவர் பனிமுக நோக்கா
துலவிய வயலி னுயர்நக ரன்றே. 5(1492)

நல்லார் வாழும் அந்நகரில் நபி மகிழ்வுடனிருத்தல்

அறிவினி னிதியி னுண்மையி னனிகொள்
விறலினின் முதியோர் விளங்கிய நகரி
னெறியினி னயினர் நிலைபெறு தகையின்
குறியினி னழகிற் குரிசிட முற்றார் 6(1493)



உள்ளுணர் வுணரு முத்தம நிலையிற்
றெள்ளுணர் வுடனே செழுந்தவ முயல்வார்
கள்ளுண வுடையோர் கனியுண வுணவே
நள்ளுணர் வுடனே நாயக ரிருந்தார். 7(1494)

வானவர் ஜிபுரீல் வருகை

பல்லுயி ரினமும் பண்புள முறவே
சொல்லுயர் வழியுந் துதிதர வுலக
நல்லுணர் வுரிய நபியுறு காலம்
வெல்லுணர் ஜிபுரீல் விரைவி னடைந்தார். 8(1495)

சாருவினால் உமக்கொரு மகவை இறைவன் அருள்வான் எனல்

ஆதியி னருளா லடைந்தவர் வரிசை
வேதியர் நோக்கி விழைவுறு நுமக்கோர்
போதக மென்னும் பெட்புறும் பூவை
யோதிய சாரு வுயர்புறத் தாலே. 9(1496)

தன்னய வரிசை நட்டுறு பொறையிற்
றுன்னிய தகைய துதிநிலை தோன்ற
வின்னன மருள்வா னியைநினை வுற்றே
னென்ன விசைத்தா னம்மிறை யென்றார். 10(1497)

நபியின் மகிழ்ச்சி

உவகை பெருக்கி னின்புட னேதித்
தவநிலை வானோர் தம்மிடம் புக்கா
ரவனியி லங்கு மஞ்சுட ரென்னுந்
திவழொளி மிக்கோர் சிந்தை மகிழ்ந்தார். 11(1498)

மகன் பிறப்பின் அல்லாவுக்குப் பலியிடுவேன் எனல்

மாவரு நன்கின் மகவரு மாயி
னுவலின் வல்லோ னன்பொடு குறுபான்
றேவரு மெய்ப்பச் செய்குது மென்னப்
பாவணி வேந்தர் பராயின ரன்றே. 12(1499)

அமரரின் நன்மாராயத்தையும் தம் சபதத்தையும்
மனைவியிடம் கூறல்

தன்னக மெண்ணித் தாவரும் வள்ளன்
முன்னவ ரன்பின் மொழியுரை மேன்மை
நன்னய மென்சொன் னுரியர் திருமா
னன்னவர் பூப்பா னின்பி னறைந்தார். 13(1500)

மங்கல னன்கோன் வாய்மை யறிந்தே
சங்கை வளங்க டளர்ந்து விலக்கற்
றிங்களி லாது தெருண்ட முதிர்ப்பாற்
றங்குண முன்னிச் சாற்றுவ ரன்றே. 14(1501)

சூதகம் நின்றபின் எப்படிக் கருவுறுவேன்?

கால முதிர்ந்த கன்னிய பூப்புஞ்
சால வொழிந்து தளர்ந்தவ ளாலென்
பாலினி னம்பும் பாலகர் தோற்றுஞ்
சீலம தென்கொல் கண்டிலன் றெரிவே. 15(1502)

இறைவன் சொல்லும் பொய்க்காது

பல்லுயி ரெல்லாம் பண்பி னமைத்துப்
புல்லிய வன்பிற் புரந்தருள் வல்லோன்
சொல்லிய சொல்லுஞ் சோர்வு படாவா
லொல்லையில் காட்சிக் குற்றவை யென்னே. 16(1503)

நான் வழி சொல்கிறேன்

உற்றுண ராது நிறைந்த வுயர்ந்தோன்
சொற்றிடு வாய்மை சுகம்பெற வென்னால்
பெற்றிடு நீவிர் பெருஞ்சுத ரென்று
நற்றுறை பொருளே நவிற்றுது மியானே. 17(1504)

மிசுறு மன்னன் எனக்களித்த கன்னியைத்
தங்களுக்கு உரிமையாக்குவேன்

மன்னிய மூப்பு மற்றுள வாலே
முன்னரி னன்னேன் முற்ற வளிக்கு
மின்னிழை யஞ்சொன் மென்கொடி செவ்வாய்க்
கன்னியை நும்பாற் கைப்பொரு ளாக்கும். 18(1505)

அவளுக்குக் குழந்தை பிறந்தால் அது
என் குழந்தையும் ஆகலாம்

நான்றரு மென்சொ னங்கை யிடத்தின்
மான்றர நீவிர் மாண்புளங் கொண்டாற்
றேன்றரு செவ்வாய்ச் செம்மக வல்லோன்
முன்றர வன்புந் தாவிட லாமே. 19(1506)



அவள் பெற்றால் அது என் கண்மணியாகும்

அன்பி னருங்கோ னம்பொழின் மேனிப்
பொன்பிறழ் தோன்றற் பூவைதந் தாளே
லென்பெரு நன்மை யேய்ந்து சிறந்த
மின்பிறழ் கண்ணின் மேமணி யன்றே. 20(1507)

அவ்வாறு கூறி காஜறத்தைக் கணவருக்களித்தார்

என்ன நலங்கொ ளின்சொ லியம்பி
நன்னய முங்கு நாயக னுக்குத்
தன்னவ ளென்னத் தையலைப் பார்த்தாள்
வன்னனி சாறு மாமயி லன்றே. 21(1508)

இளைய மனைவியான காஜறத்தோடும் நபி இணைந்திருத்தல்

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

முன்றந்த மயிலை சாறு மொழிபல நவிற்றுப் போற்றி
நன்றந்த நபிபா னல்க நாயக னுவந்த மார்க்கத்
தன்றந்த மாதை வேட்டுப் பொறிநுக ரதிசத் தோடு
மின்றந்தக் கடலிற் பூத்து மேதினி யினைய நின்றார். 22(1509)

காஜறத்து கர்ப்பந்தரித்தார்

தாவருஞ் சுவையுந் தேனுந் தன்னொடுங் கலந்த தென்னப்
பாவரும் பொருளுஞ் சொல்லும் பயன்படப் பொதிந்த
தென்னக்
கோவரு நபியும் பெண்ணுங் குணந்தர வின்ப முண்டு
மாவர விருப்ப நாப்பண் மணியொன்று தோற்றிற் றன்றே
23(1510)

காஜரு வயிற்றில் குழந்தை பிறந்தது

தேந்தரு மமுதச் சொல்லிற் சேயிழை காஜ ருதந்
தாந்தருந் தகைய தென்னத் தவநபி யொளிவு பூத்துப்
பூந்தரு மணியி னோடும் புகழொடுந் திங்கள் முற்ற
வேந்தலிற் பிறந்தா ரெங்கு மிசைநிலை பிறப்ப வன்றே.
24(1511)

நபிபெருமானார் முகம்மதுவின் ஒளி நெற்றியில் துலங்க
இசுமாயில் நபி பிறந்தனர்

வல்லவன் றிருத்து நான்கு வண்டலத் திருந்த செவ்விப்
புல்லிய தூவி மஞ்ஞைப் புதுவுரு வமைந்த வள்ள
லெல்லவ னென்னுஞ் சோதி யியைநுத லலர்ந்து வீச
வொல்லையி லழகி னோடு முதித்தன ரிசுமா யீலே. 25(1512)

ஏழைகட்கு அன்னமளித்து இசுமாயீல்
எனப் பெயரிட்டழைத்தனர்

காரண வொளிவி னோடுங் காட்சியி னுறுப்பி னோடும்
பூரணத் தெளிவி னோடும் புகழணி கொண்ட வள்ளற்
காரண நபியும் போற்றி யாதுலர்க் கன்ன மிட்டுப்
பேரணிந் தழைத்தா ரின்ன பிறங்கிய இசுமா யீலே.
26(1513)

அன்னை சாருவும் அன்பு பாராட்டினர்

வரிசைநன் னபிதம் மாவி வடிவென வுதித்த மெய்ம்மை
யரசினை சாரு தாமு மகத்தினிற் களித்துப் போற்றிப்
பிரிசத்தின் முகப்பப் பூத்துப் பெருமணி மலரின் வள்ள
னுரைசெயற் கரிதின் வாழ்வி னியல்பினா னுற்றா ரன்றே.
27(1514)

இசுமாயீல்நபி யவதாரப்படல முற்றிற்று
ஆகப்படலம் 26-க்கு திருவிருத்தம் 1514

# 27. இசுகாக்கு நபியவதாரப் படலம்

படலச் செய்தி

எழுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

நற்றுறை யுலகம் விளக்கிய நயினார்
    நனிபுகழ் படர்தருஞ் சாமிற்
சொற்றுறை யொழுக்குங் காலையி லரிய
    தூயவ னருளினான் மேன்மை
பெற்றுய ரமர ருவகைமா ராயம்
    பெரிதொடு மருவிய பொருட்டாற்
கற்றுறை யிசுகாக் கெனுநபி யுதித்த
    காரணம் வகையொடும் விரிப்பாம். 1(1515)

விருந்தினரின்றி உணவு உண்ணா மாதவர்

பண்ணைவா யரவச் செம்மணி கண்டு
    பயத்தொடு முற்கையென் றயர்ந்து
நண்ணலாக் குருகு திரிதரும் வாவி
    நனிபுடை சூழ்தரு நகரார்
வண்ணவா யமிழ்த மாந்திநின் றுவப்ப
    மதிமுறை செலுத்துநந் நெறியா
றுண்ணிலார் புதிய விருந்தின ரில்லா
    துணாற்றிய மாதவ நயினார். 2(1516)

மூன்று நாள் விருந்தினர் வராமல் பசியோடிருந்த நபி

கன்றினங் காணாச் சுரபியிற் றயங்கிக்
    கருதரும் விருந்தினர் தோற்றா
தொன்றிய வறிவின் ராவுமூன் றுயு
    மொன்றுந்தா னுகர்ந்திடாப் பசியின்
மூன்றினி விருந்தும் வெளிப்படை திரிந்து
    முயற்சியிற் றேண்டியும் பின்ன
ரின்றுணை சாரு விடத்தகம் புகுந்து
    மாண்புட னியனபி யுரைப்பார். 3(1517)

இன்று சமையும், விருந்தினர் வருவர் எனல்

வரிசையிற் சிறந்த தகையுறு மிக்க
    வண்மையி னுள்ளகங் குளிர
வுரிசையி னகத்தி னுண்டொழிற் காய
    வுணவுக ளேதுமுண் டாயிற்

பரிசுடன் சமைக்க வதற்குறும் விருந்தின்
 பண்பினர் நம்மிடம் புகுவா
ரரசியன் மேன்மை வல்லவ னியற்று
 மாட்சிமை யாமென வுரைத்தார். 4(1518)

விருந்தினரை எதிர்நோக்கி நபி வாசலில் காத்திருத்தல்

சொன்னல முணர்ந்து பொன்னலந் திகழுந்
 தோகையு முவகையிற் குளித்துப்
பன்னலச் சுவையிற் றின்னறு முண்டி
 பரிவொடுஞ் சமைத்தலி னுனர்
மன்னல னுடைய நன்னபி வெளியின்
 வருவிருந் தினிதொடுந் தேண்டி
யன்னிலங் காணு தின்னக முன்றி
 லணிபெறும் வேதிகை யுற்ருர். 5(1519)

குதிரையில் வேகமாய் வந்த இளைஞர்கள்

தானவ னிறக்கு மாநல னளிக்குந்
 தகைதருஞ் சுகுபினை யோதித்
தேனவன் பிறக்கு மேனலத் தோடுந்
 திருநபி யிருக்குமப் போதிற்
கானல னதிர்த்து வானகம் பறக்குங்
 கடுங்கணை மனத்தினும் விரைவின்
மாநனி கனைப்பி னுனவத் துடைய
 வாலிபர் சடுதியி னடைந்தார். 6(1520)

அழகு மிளிரும் அதிசய வாலிபர் நால்வர்

மறுவறுந் தெளிவின் குறைவறு மதியின்
 வதனமுங் கருவரை கீரு
நறுமலர் குமுத முறழ்தரும் வாயு
 நனிதருங் கருணையங் கண்ணு
முறுதலைப் பாகுஞ் செறிதரும் போர்வை
 யுடலினிற் சிறந்தெழு மொளிவின்
விறல்புரி விடலைக் குறிதரும் பருவர்
 நால்வரின் விளக்கமுங் கண்டார். 7(1521)

அவர்களை வரவேற்று ஆரத் தழுவி அமர்த்தினர்

வேகவெம் புரவிக் குமரர்க ளேைக்கி
 விரைவினிற் புகுந்தவை யுன்னி
யாகமுங் கருத்துங் கலங்கவுந் திடுக்க
 மடர்தருந் திருநபி நோக்கிப்



பாகினி லினிய சலாமவர் புகலப்
 பண்பொடு மறுத்துரை கொடுத்துச்
சேகறு மலர்த்தார் மார்புறத் தழுவிச்
 சிறப்பொடு மிருத்தின ரன்றே. 8(1522)

சிறப்பு மிக்க நம் விருந்தினரை நன்முறையில் உபசரித்திடுக
என சாருவிடம் கூறல்

கரையது காணு வானந்தக் கடலிற்
 களிப்புடன குளித்துளங் குளிர்ந்து
வரைவிலா வுவகை யொடுந்திரு மனையுள்
 வைகிய மனைவிபா லடுத்துத்
தரையினி லுவமை யுரைப்பதற் கரிய
 தண்ணிலா முகத்தொடும் பருவத்
துருவினிற் குமரர் புதுவிருந் தாள
 ருற்றனர் நால்வர் நம் மகத்தே. 9(1523)

குணத்தினின் வியப்பு மவயவத் தியல்புங்
 குலவிய தகுதியு மென்பால்
புணர்த்திய வன்புஞ் சலாத்தினிற் குறிப்பும்
 பொருவுற நோக்கிடி லறிவின்
மணத்துள முதியோர் நேர்மையிற் ருேற்று
 மாதலின் மாண்புட னீவிர்
தணத்தலி லாது பணிவிடை புரிக
 வென்றனர் தாபத நிலையார். 10(1524)

சாரு இயைந்தனர்

நண்பொடு முரைத்த கொழுநனை நோக்கி
 நன்னிலாக் குழவியி னுதலா
ரண்படு மலர்க ளும்முறை யுளதே
 லருமையிற் பணிவிடை புரிந்து
ளெண்படும் பெருமை பெறுகுவல் யானென்
 றிசைத்தனர் கேட்டுள மகிழ்ந்து
கண்படுங் காட்சி நபியிபு ருகீங்
 கனிவிருந் தளித்திடற் றெரிந்தார். 11(1525)

கன்று ஒன்றறுத்து சுவையாகச் சமைத்து
அடையுடன் பரப்பினர்

நெய்லழிந் தொழுகு நிணத்தசை திரண்ட
 நீண்மருப் பாண்கன்ருென் றறுத்து
வெய்யழற் சூழியிற் பற்பல காய
 மேன்மையி னிவியொண் டுண்டம்

பெய்ததி னுக்கி யெண்டிசை வாடை
வெடிதரப் பின்னரி னெடுத்து
நொய்தரு மடையோ டணிகலத் திட்டு
நூதனத் தவர்கள்முன் வைத்தார். 12(1526)

கணவர் உண்ண, விருந்தினர் உண்ணாதிருக்கக்
கண்ட சாரு கூறியது

புதியவர்க் கரிதிற் பணிவிடை புரிவான்
பூங்கொடி யருமைபி னிற்ப
மதியினன் னயினா ரவரொடு மிருந்து
வண்மையந் திருக்கரங் கொண்டு
துதியொடுந் தின்னா நின்றன ரன்னோர்
தொட்டிடா திருந்தனர் கண்டுப்
பதியெனுங் கொழுநன் மதிமுக நோக்கிப்
பரிவொடுந் தேவிய ரிசைப்பார். 13(1527)

ஏன் உண்ணவில்லை வேறெதுவும் வேண்டுமா என
நபி கேட்டனர்

அழகொடு மடைந்த விருந்தின ரருந்தா
தருகுற வவர்முக நோக்கா
தொழுகுட னீவிர் தின்குவ தென்னென்
றெண்டொடி வினவலு நயினார்
குழகுறு மேனி திருமணங் கமழுங்
குரிசிலி ரெண்மைய னுணவே
விழைவுற வேண்டா தெவணினி வேண்டும்
வியன்பொரு ளெவையெனக் கேட்டார். 14(1528)

மறுமொழி கூறாதிருப்ப, இதையறிந்திருந்தால்
கன்றை அறுத்திருக்க மாட்டேனே எனல்

முற்படும் வினையென் றயர்வொடும் வினவ
முன்னிலை யவர்களொன் றுரையா
வற்பொடு மிருப்ப மனைத்திடத் தடைந்து
மருமையி னுணவுஞ்செய் யாது
சொற்படு விடையுங் கொடுத்தில ரென்கொல்
காரணத் தோற்றமென் றுள்ளம்
வற்படப் பயந்து வண்மையின் மேக
மலர்க்கரத் தாண்டகை யறைவார். 15(1529)

புன்றொழி லொதுக்கும் வினைத்திறங் கொண்ட
புதுமலர் திருவிழி யுடையீ
ரின்றிவை யுணவு கொண்டிலீ ரென்னு
மிக்குறி முன்னுணர்ந் தேனு



னன்றியி னுவந்த சேயினை யீன்ற
நறுவிய சுரபியிற் பிரிய
வன்றொழில் புரியே னென்றுள மிரங்க
வழுத்தினர் முகமனு ருணர்ந்தார். 16(1530)

இறையருளால் நபி மகிழ உயிர்பெற்றெழு என
ஒருவர் உரைத்தார்

பாங்கினிற் சிறந்த நால்வரி னொருவர்
பண்புறுந் தகுதியி னோக்கி
யோங்கிய புரவு வண்மையங் கரத்தா
லுவணுறு மூன்றனைச் சுட்டி
யூங்குயர் புகழின் வல்லவ னருளா
லுயர்நபி களிப்புற முன்போ
லீங்கெழு கென்று ருரைமது சீவ
னைவதிற் புகவெழுந் ததுவே. 17(1531)

அழகிய கன்றாய் உருவும் உயிரும் பெற்று
தாய்ப் பசுவிடம் சென்றது

பொன்னெனத் திகழுங் கோடத னிணையும்
பொலிவிரு பெனும் பரு மேனி
மின்னெனப் பிறழுந் திரண்டெழுங் காலும்
வெங்கரிக் கரமென வயங்க
மென்னியிற் புடைப்பும் வாலதி னடிப்பு
மீறிய வலியெரு தெழுந்து
தன்னலத் தொனியிற் கபிலையா லடைந்து
தாவிய தியலொடுங் குதித்தே. 18(1532)

அதுகண்டஞ்சிய நபி நீவிர் வந்தது எதற்கு எனக் கேட்டல்

மேன்மையி னுடல மாவலின் மோந்து
விகற்பமி லாதணி நாவாற்
பான்முலை கொடுத்துக் குளிர்தர நீவும்
பண்புறுங் கபிலையுங் கன்றுந்
தேன்மொழி நபியார் கண்டுளம் பயத்தற்
செனித்திட வவர்முக நோக்கி
வான்மனந் திடுக்க நீவிரி னுற்றே
னென்றன ரருமையி னன்றே. 19(1533)

உங்களுக்கொரு குமாரன் பிறக்கப் போகும் நற்செய்தி
சொல்ல வந்தோம் எனல்

குறிபடுந் தகுதி நபியெனு மரசே
குணந்தரும் பயப்பட லுளத்தி
னெறிபட நுமக்கோர் பெருநல னலர்ந்த
நிலைதருஞ் சிறுவனை தோற்ற

வறிபடு முவகை நனிகொண்மா ராய
மழகொடு முரைத்திடற் கிவணிற்
செறிபட யாங்க ளடைந்தனே மென்றார்
செழுமணந் திவழ்தரு முருவார். 20(1534)

என் வயது நூற்றிருபது, எப்படி நடக்கும் என நபி கேட்டல்

அணிதரும் பருவம் பன்னிருபதிற்றி
ஞண்டகை யானுட றளர்ந்து
பணிதரும் விருத்த ஞகிய பின்னர்
பரிவுறு மகனின மியல்பிற்
கணிதரும் படிக்கெக் காரணங் கொண்டு
களிப்பநல் லுவகைமா ராயந்
திணிதர வுரைப்பா னடைந்தநீ ரென்றார்
செழுமதி யாளர்க ளறைவார் 21(1535)

இறைவன் மேல் நம்பிக்கையிலாதோருள் ஆகிவிடாதீர்
என அவர்கள் கூறல்

வரிவரு மளிகள் முரலிசை மற்றேண்
மாதவ நும்மிட மியாங்க
ஏருமையி னுவகை யுண்மையி னியல்பா
லதிகவிவ் வாய்மையி னடைந்தேம்
பெருமையி னிறைவன் பற்றுதல் பற்றாப்
பெயரினர் தம்மினு வற்க
விரிதருங் கருணை தாங்கினீ ரென்றார்
வென்றியி னின்றவ ரன்றே. 22(1536)

இறை கருணையைப் பற்றாதோர் அடையுமிடம்
நரகே என நபி கூறல்

உள்ளுணர் வுணராக் காரணப் பொருளா
யுயர்புகழ் வல்லவ னரிய
தெள்ளுணர் கருணை றகுமத்தைப் பற்றார்
தெரிவரு மார்க்கநன் னெறியி
னள்ளுணர் வின்றித் தம்முடல் வருத்து
நரகிடை சேர்த்திடற் குரிய
கள்ளுணர் வுடையா ரென்றினி துரைத்தார்
கடிவிருந் தோம்பிடு மத்தர். 23(1537)

நானோ மலடி, வயதும் தொண்ணூற்றிற்கும் மேல்
எப்படி முடியும என சாறு நகைத்தல்

நடந்தவிச் செய்கை யனைத்தையு முணர்ந்து
பாங்குறு நாரியர் நக்கிப்
படர்ந்தவைம் பொறியுங் குறைதரு மோன்பான்
பஃதியாண் டதிகமுற் றியதா



விடந்தர யாதுங் குறிப்பிலா வந்தி
யானுமென் கருத்தரும் விருத்தர்
தடந்தர விப்பாற் பெறுவதென் னனுஞ்சொற்
றகையுறும் புதுமைய தென்றார். 24(1538)

இறைவலியுணராது இது புதுமையென்று எண்ண
வேண்டாம், பிள்ளைச் செல்வம் பெறுவீர் என
அவர்கள் வாழ்த்தினர்

அளவறும் புகழின் மேன்மையி னின்ற
வாதியின் காரணக் கருத்தை
யுளமதுதெரியா தவனியல் கண்டு
புதுமையென் றுணர்கலை வற்கக்
களவறுஞ் சீர்மை யரியநற் கருணை
கதிபெறுந் தகுதியின் செல்வம்
வளநல நீவிர் பெறுகவென் றுவந்து
வாழ்த்தினர் நால்வரு மன்றே. 25(1539)

மீண்டும் சாறு தம் நம்பிக்கையின்மையை எடுத்துரைத்தல்

முன்னுறு மவர்க ளின்னல னுடையார்
முயறல மிஃதென வுணரா
தின்னுள மகிழ்வு மிடையிடை யைய
மெழுச்சியாற் றற்குணத் தியல்பா
னன்னபி முதுமை வளர்தருங் கரியால் நாயகி
வந்தியென் பதுவே
பின்னரு மொழியா தடிக்கடி யரிதாற்
பேசுதல் கொண்டுறு நின்றார். 26(1540)

உம் இறைவனுக்கு முடியாதது அல்ல பெருமையும்
உண்மையும் உடையோனவன் எனக் கன்றை
எழுப்பியவர் உரைத்தல்

கருநிறக் காளை யெழுப்பிய விடலைக்
காரிகை யணிமுக நோக்கிப்
பருவமு மின்றி மலடியென் றுரைத்த
நும்முரை வல்லவன் றனக்குக்
கருமைய தன்று பெறுபல னருள்தற்
காரணத் தெழிதலர் புகழும்
பெருமையு மறிவி னுண்மையு முடையோ
னவனெனப் பெலனுற வறைந்தார். 27(1541)

அவர்கள் அமரர்கள் என அறிந்து கொண்ட நபி
பூமிக்கு வந்த காரணம் வினவல்

அவரவ ரிருக்கு முருவத்தின் வியப்பு
மருமையி னுணவருந் தாது
நவமது குறிப்புஞ் சாற்றிய வியல்பு
நடக்கையு முற்றறி துணர்ந்து
தவநிலை வழுவா வானவ ரென்னத்
தகையுளத் தறிவினு னுணர்ந்து
புவியிடை யிவணி லடைந்திடு நாட்டப்
புந்தியென் காவெனக் கேட்டார். 28(1542)

ஊத்து நபிக்கு வழிப்படாதோரின் ஊரைக் கவிழ்க்கவும்
உமக்கு மகன் இசுகாக்கு நபி தோன்றப் போவதைக்
கூறவும் வந்தோம்

குலத்தறி வுணரா வல்லவன் கடல்சூழ்
குவ்விடத் தடர்தரும் பாவ
மலத்துடை கொடியோர் லூத்துநன் னபியின்
வழிவரார் நகரினைக் கவிழ்த்த
தலத்தினிற் புகுவான் மற்றுயர் வரிசை
தகுமிசு காக்குமெய்ந் நபியார்
நலத்துமா ராய நும்மிட முரைப்பா
னவத்தொடும் விடுத்தன னன்றே. 29(1543)

அவர் மகனை யஃக்கூபு நபி தோன்றுவார் எனத்
தன்னுருவைக் காட்டினர் சிபுறீல்

இன்னநும் மகன்பா னன்னபி யஃக்கூ
பிசையொடுந் தோற்றுவ ரென்னு
மன்னமெய் யுவகைக் கடைந்தன மியாமென்
றணிதருந் தன்னுரு வெடுத்தார்
பன்னுமத் திறலோர் கண்டெழி னபியார்
பயனுறுஞ் சிபுறியீ லென்ன
முன்னரி னறிந்து மற்றவ ரறியா
திருப்பவு மூதுரை விரிப்பார். 30(1544)

மற்ற மூவர் மீக்காயீல், இசுறயீல், தறுதாயீல் எனக்
கூறி குதிரையிற் போயினர்

இவணுறுந் தகையார் மகிமையின் மீக்கா
யீலிவர் திறத்திசு றுபீ
லவணுறு மன்னே ரணிதறு தாயீ
லணித்துறுஞ் சிபுறியீல் யானே



தவநிலை புரியு மாண்டகை யென்னச்
சாற்றினர் பின்னர்தாங் கொண்ட
நவநிலை புரிவான் குரகதக் காலி
னவையறப் போந்தன ரன்றே. 31(1545)

லூத்து நபியின் பகைவரின் நகரம் கவிழ்ந்த அன்றிரவில்
நபி இசுகாக்கு தாய் வயிற்றில் தரித்தனர்

நாயகன் பணித்த முறைப்படி வானோர்
நாட்டிய தியற்றினர் மெய்மை
நேயநன் குணர்வின் லூத்துயர் நபியார்
மேவலர் கவிழ்ந்தவவ் விரவிற்
றூயமெய்ப் பொருளி னணிதிக ழென்கோன்
சுகத்தொடு மனங்களிப் பேறத்
தாயகந் தரித்தார் வாயக மதுரந்
தருமிசு காக்கெனு நபியே. 32(1546)

மகிழ்ந்து இறைவனைத் துதித்து நின்ற அன்னை சாரு
வயிற்றில் கர்ப்பம் முதிர்ந்தது

உடலணி தளர்ந்த வந்தியென் றுரைத்த
வொண்டொடிக் கருநல முணர்ந்து
மிடலொடு மிறையைப் பற்பல்கால் புகழ்ந்து
மீறிய களிப்பொடு மிருப்ப
வடலணி மணியுஞ் சோரியுந் தசையு
மவயவம் வாயுவு மாக்கத்
திடனுட னுருவம் பெற்றுயர் திங்க
ளெரிதர முற்றிய வன்றே. 33(1547)

நபி இசுகாக்கு பிறந்தனர் வானவர் வந்து
பணிவிடை செய்தனர்

பற்பல குறியிற் காரணந் தோற்றப்
பயன்றருங் கருப்பமு முதிர்ந்து
சொற்பகுந் துணருந் தேமொழி சாறுத்
தூயக நாயகி யரிய
நற்புக ழுலவு மியாவரும் வாழ்த்து
நவமணி யெனுமதிக் குழவிப்
பொற்புட னளித்தார் வானவ ரிறங்கிப்
பணிவிடை புரிதர வன்றே. 34(1548)

இசுகாக்கு நபி பிறந்த அழகும் அற்புதமும்

அழகொடுஞ் சிறந்த விருக்கையுந் திருக்கை
யணிவிர லீட்டிநன் னிலம்பார்த்
தெழிலொடுஞ் சென்னி சுஜூதினிற் றாழ்ந்து
வல்லவ னொருவனென் றுணராக்

குழகொடும் வானத் துயர்த்தியுங் காட்டிக்
குறிமறைத் தியலொடு மொளிவின்
செழுமுக மிலங்கப் புவியிடத் துதித்தார்
திறத்திசு காக்கெனு நபியே. 35(1549)

முகற்றம் மாதம் எட்டாம் நாள் வெள்ளியன்றவதரித்த
மகனுக்கு இசுகாக்கு எனப் பெயரிட்டனர்

வருடமும் பிறக்கு மாதமாந்தெய்தி
வழங்குமா மெண்ணமா சூருப்
புருடநா யகரும் படையுண்ட வெள்ளிப்
புகழுமவ் வாரத்தினு தித்த
மருடரா மதலைக் கணிபெற இசுகாக்
கெனவள நாமமு மளித்துத்
தெருடரு மனையார் மகிழ்ந்துளம் பூப்பச்
செம்மலு மிறைவனைத் துதிப்பார். 36(1550)

தளர்ந்த வயதில் இசுமாயீலையும் இசுகாக்கையும்
எனக்களித்த உன் பெருமையை இறைவா எப்படிப்
புகழ்வேன் எனல்

பன்னிலத் துறையு முயிரினம் புகழும்
பான்மையின் விளங்கிய விளக்க
நின்னிலை யெவரு முணர்வதற் கரிய
நீதியின் வல்லவா யெளியேன்
மன்னிலை தளருங் காலையி லெனக்கு
மாண்புறு மியலிசு மாயீற்
பின்னிலை யிசுகாக் கெனவிரு மணிக
ளருளிய பெட்பையார் வகுப்பார். 37(1551)

ஏழைகளுக்கு உணவளித்தனர் குழந்தை வளர்ந்தது

நாடிய நாட்டம் பெறுவதற் குரிய
நாயகர் வேறொரு பொருளைத்
தேடிய பேர்கள் வழியிலார் பயன்க
டெரிகிலா ரெனமிகப் புகழ்ந்து
வாடிய வெண்மை யாதுலர் சிலர்க்கு
வரிசையி னல்லுண வளித்துப்
பாடியி னயினார் களிப்பொடு முற்றார்
பண்பொடு மகவளர்ந் தனவே. 38(1552)

இசுகாக்கு நபியவதாரப்படலம் முற்றிற்று.

ஆகப் படலம் 27-க்கு திருவிருத்தம் 1552

# 28. பின்குடியை நன்குடியாக்கிய படலம்

படலச் செய்தி

கலிநிலைத்துறை

அரிய நாயக னருளிய வுரைப்படி யணிசெய்
பெரிய மேம்புகழ் நபியவர் பின்வருந் தேவி
யுரிய மைந்தனை யுவந்துயர் வனத்தினில் விட்டுப்
பிரியுந் தன்மையைப் பெருந்தல மேன்மையுந் தெரிப்பாம்.
1(1553)

வளங்கள் மிகுத்த சாம் பதியில் நபிதம் புதல்வர்கள் வளர்ந்தனர்

வெண்ண குங்கதி ரணிவளை விளைசினை யோடுந்
தண்ண றும்படு சலசத்தா ளூர்தரு மோனை
யுண்ண யத்தொடு மலர்துயி லனைத்தட முடுத்த
விண்ண டும்புகழ் சாமிடை வேந்தெனும் நபியே. 2(1554)

தெருளுங் கல்விய ராக்கத்தார் விளங்கிய செல்வ
ரருளுங் காரெனு மயிலுறுங் கரத்தின ரணிசூழ்ந்
திருள றும்படி நல்வர முணர்ந்திட வியற்றும்
பொருள தாநபி புகழெனப் புதல்வர்கள் வளர்ந்தார்.
3(1555)

இசுமாயீல் உயர்ந்தது

கண்ணின் மீதினுங் கருத்தினுங் களிப்புற விளங்குந்
தண்ணின் மாமணி தயங்கிய தவத்திசு மாயீல்
விண்ணின் மாமணி மற்றவர் மேலவ னருளாற்
பெண்ணின் மாமணி வளர்த்திடும் பெருமிதத் துயர்ந்தார்.
4(1556)

ஏழு வயதில் அம்பு எய்யப் பழகினர்

தெளியுஞ் சிந்தையி னறிவொடுஞ் சிறப்பொடும் பலன்கொள்
கவியுந் தேக்கொடு மூக்கொடுங் கல்வியின் மக்க
ளளியி னுலணி மணியுட லாண்டுய ரேழில்
வளியி னுங்கணை யினிற்றொழின் மனமுறை முயன்றார்.
5(1557)

ஒரு குறி நாட்டி இருவரும் எய்தனர்

இலக்க ணத்தொடுங் குறியொன்று மிருவரு நாட்டி
வலப்ப தத்தொடும் பிற்பத மிருபத வணக்கு
நிலத்த மண்டல விகற்பமு நின்றகான் மூன்றும்
பெலத்த கான்மடக் கியநிலை பெயர்தரா துற்றார். 6(1558)

இசுமாயில் எய்த கணை குறிதவறாமல் தைத்தது

கையி னேந்திய கொடுந்தனு கருங்குடி யோடு
மெய்யி னோறென வளைத்தரு நாண்டொனி விளக்கி
வெய்ய வெங்கணை யெய்தலுங் குறிப்பினை மிகைத்த
வையர் பேரொளி நபியிசு மாயிலாண் டொழிலே. 7(1559)

வெற்றி பெற்ற இசுமாயிலை நபி இபுறாகீம் மடியில் வைத்து இசுகாக்கை அருகில் இருத்தினர்

இருவர் செய்தொழி னோக்கிய நபியிபு றாகீம்
பொருவ ராமனக் களிப்பொடும் புகழ்ந்தணி மகவை
யிருகை யாலெடுத் துயர்முக முத்தமிட் டெழிலி
னரிதி னன்மடி மற்றொன்றை யருகிருத் தினரே. 8(1560)

இசுகாக்கு தந்தையின் பக்கத்தில் இருப்பதை அன்னை சாறா காணல்

தேக்கு நல்லறி வென்றியிற் றிருமணி யழகே
பூக்கு நாயகர் மடியுறப் புகழிசு காக்கே
பாக்க ணித்துறுந் தன்மையைப் பயனுறக் கண்டார்
வாக்குஞ் செல்வமு மல்கிய மடமயில் சாறா. 9(1561)

கண்ட சாறா கொதிப்படைதல்

கண்ட போதினிற் கருத்திடை கொதிதரக் கனலிற்
கொண்ட வெஞ்சினந் திருமுக மிருவிழி சேப்ப
மண்டு மாதரின் விகற்பமு மனத்திடை படரத்
தொண்டை வாயிதழ் துடித்திட விடுத்திவை சொல்வார். 10(1562)

மிசுறு மன்னன் எனக்களித்த அடிமைப் பெண்ணின் மகன் மடியிலிருக்க நான் பெற்ற கண்மணி புறத்திருப்பதோ?

கோன ளித்திடுங் கொடுமையாற் றொழும்பெனுங் கோதை
தான ளித்திடு மைந்தனின் றனைமடி மீதி
னியான ளித்திடு மருமணி யருகினி லிருப்ப
மான ளித்திடு விழிகொள வருபய னெவனோ. 11(1563)

அந்த அடிமையை இரத்தம் சொட்டத் தண்டிக்கிறேன் இறைமேலாணை

நன்று நன்றென நகையொடு நகையொடுங் கடுத்து
நின்று வந்தவத் தொழும்பியி னிவருட லதனிற்
றுன்று சோணிதந் துணிபடத் துணிக்குது மேலோன்
வென்றி யாணையி னென்றுருத் தனர்விழை மயிலே. 12(1564)



இளையாளைத் தண்டிக்க வழி காணாதிருந்தனர் சாறா

இயற்கை யாலுமற் றினிதுரை யாலுமெவ் வுறுப்பின்
செயற்கை யாலுமற் றவர்நடை யாலும்பிற் றேவிக்
கயற்கு நோக்குறுந் தண்டனை யாணையே முடிப்பான்
முயற்கள் கண்டிலா திகைத்தனர் முன்வரு மயிலே. 13(1565)

எடுத்த சபதம் நிறைவேற இரு செவியிலும் துளையிட நாயகர் கூறினர்

கருத்த னாணையால் வாய்மையுங் கலைவதாற் கணித்துப்
பொருத்து தற்கொரு சூழ்ச்சியே புந்தியிற் படுத்தி
யிரத்த மூற்றுற விருசெவி துளைத்திடு கென்ன
வரத்தி னாயகர் தேவியர்க் குரைத்தனர் வழியே. 14(1566)

அங்ஙனமே செய்தனர்; செவியில் துளையிடல் ஆகுமாயிற்று

குயிலு மியாழுமே கோடின கோடிலா தின்சொன்
மயிலின் வண்செவி யழகுற வரிதுளைத் திட்டார்
செயலின் மேன்மையிற் றிருமலர் பூங்கொடி சாறா
வியல தேநமர் மார்க்கத்தி னியல்விளங் கியதே. 15(1567)

ஒரு நாள் மைந்தரிருவரும் மல்லுக்கு நின்றனர்

மனத்து றும்பெருங் களிப்பொடு மனைவிய ரிருப்பச்
சினத்த வேல்வல நாயகர் சிறப்புறு மைந்தர்
தினத்தி னோர்தின மிருவரு மிகலொடுஞ் சீறி
வனத்த ரக்குவின் பறமென மற்பொரு தினரே. 16(1568)

அதனைக் கண்ட சாறாவுக்கு கோபம் பொங்கியெழல்

வென்றி மைந்தர்க ளிகலினை நோக்கிமென் கொடியிற்
றுன்று செய்யபொற் றாமரை மலர்ந்தன சிலனு
நின்ற வாண்முக மிருவிழி கோபமே நேர
வன்று நன்னபி முன்னரி னறைகுவர் சாறா. 17(1569)

இரு வேறு கருக்களில் உதித்த மக்கள் ஒரே இடத்தில் இருக்கலாகாது!

ஆர ணப்பொருள் வல்லவ னருளிய நபியாய்க்
கார ணத்துறை யென்னுயிர் நாயக கலந்த
சீர ணித்துறு மொருதலத் திருகருச் செனித்துப்
பூர ணத்தினி னெருக்கென நெருக்குதல் புலனோ. 18(1570)

''யாமும் மக்களும் ஒன்றுபட்டு வாழ இயலவில்லை
இனியானை விரும்புமிடத்துக்கு அகற்றுக''

மனமும் வாய்மையு மொன்றில மனையிஞே ரூரி
னினமு மின்பமு மொன்றில விருவரு மியாங்க
டினமு மைந்தரு மொன்றில வாதலிற் சிந்தை
நினைவி னுங்களுக் காந்தல நீக்குமென் றனரே. 19(1571)

இபுருகீம் நபி மறுமொழி கூறவில்லை

சொற்ற விவ்வுரை கேட்டலுந் தூயவன் மேன்மை
பெற்ற நன்னபி நாயகி யுரைபெய ராதா
னற்ற கும்பொருட் காரண மிஃதென நாடி
மற்று ரைத்திடா திருந்தனர் வருமுறை தெரிப்பாம்.
20(1572)

சிபுரீல் ஒரு புரவியுடன் வந்தனர்

கலிவிருத்தம்

அழியாநிலை யரியோனிய லருளாம்பணி கொண்டு
மொழியாவள மிகுசோலையின் முதிர்சீரிய பொன்னூர்
வழியாவெழி லணிமாவொடு மதிநாயகர் தம்பால்
விழியாமுனஞ் சிபுரீலவண் விரைவெய்தின ரன்றே. 21(1573)

உடலோடுள மகிழ்மேவுற வுடையோனரு ளியதென்
றடன்மேவிய விசைமாருத மதுவோமன மதுவோ
கடன்மேலுயர் ககன்மேல்விழி கதுவாமுனஞ் செல்லுஞ்
சடிலந்தனைச் சமுகங்கொடு தகைநன்குரை செய்வார்.
22(1574)

நபியே, இனிய மனைவி மகனுடன் இதிலேறும் எனல்

மதிதுன்னிய நபியேநவ மகவும்பெறு மனையும்
புதிதுன்னிய கவனந்திரி புகழ்துன்னிய புரவி
யிதுதுன்னிட மிசைகொண்டெழி லிசைசொன்னவை சோரா
ததுதுன்னிட வெழுமென்றன ரவருந்தொடர் தரவே.
23(1575)

உண்டியும் நீரும் கையில் கொண்டு மூவரும் அமர்ந்தனர்

பலசுண்டிய வடையுண்டியும் பருகுந்தகை தெண்ணீர்
கலசம்பதி கொண்டன்பொடு கதிமாமிசை முன்னர்
சலசம்பெறு மணிமைந்தரு மணிதையலும் பிறகே
தலசந்தரு நடுவுற்றனர் நடுவுற்றிடு நெறியார். 24(1576)



சாம் விட்டெழுந்து ஆகாய மார்க்கமாய் சென்றது அப்புரவி

முன்கொண்டவ ருரையின்படி முதிரும்பரின் வழியே
பின்கொண்டவர் தன்கொண்டிடு பேறெங்ஙனுங் குலவ
வன்கொண்டிடு கதியைந்தையு மறிவெம்பரி கொண்டே
நன்கொன்றிய நகர்நின்றினி தெழுந்தார்நபி யன்றே.
25(1577)

இயற்கையினங்கள் அதனைக் கண்டு களித்தல்

பேராநிலை வளர்சாமெனும் பெருமாநகர் விடுப்ப
நீராநிலை வயலெங்ஙனு நிரைதாமரை யன்னஞ்
சீராநிலை பெறுவோர்தவ மதுசெய்திட நிலையொன்
றூராநிலை கொண்டாரிவ ரெனவோதி யுவக்கும். 26(1578)

தேனென்றுரை கனிவண்டது திருநாயகர் நம்போல்
கானந்தனி லுறுநுண்டுளி கனிறேலமற் றெவரு
மானந்தம துடனுண்டிட வணிமாநிலை செய்வான்
றுனுந்தகை மனையோடக லதுதாவுமென் றிசைக்கும்.
27(1579)

நபிநாயகர் நல்நாளொளி நயினார்தமை யீன்ற
தவநாயக ரமுதுந்திரு விழிதந்திடு மிகையு
மவமானது செலவந்தன வெனவம்பொழி லதனுள்
செவியின்புற வெழில்இஞ்சக மொடுசெங்குயில் பாடும்.
28(1580)

வெண்போதின மென்றுமரை யின்போதலர் பாதக்
கண்போதர வொடுதென்றலு முயர்கப்புறு மடவி
நண்போடுள மழைமாரியி னனிசிந்திட நயினு
ரெண்போதமு முன்போதக மெழிலில்லொடும் போந்தார்.
29(1581)

சுவனப்பரி மீது சென்ற நபியிடம் அமரர் அறிவித்தது

மணிசித்திய பணிலந்திரி வனமும்பல வின்வண்
டணிசிந்திய துகள்சுண்ணக வனமும்பயி லானின்
கணிசித்திய பசுமென்றழை வனமுங்கன லதனுற்
பணிசிந்திய மணியுஞ்சுடு வனமும்பல சென்றார். 30(1582)

வல்லோனுயர் தருதன்னனி வழியேவரு சுவனத்
தில்லோரிட முறுவெம்பரி யிலையாதலி னெடியிற்
சொல்லோரிட மிவையப்புற மொருசெம்மன றிடர்நன்
கல்லோரம துறும்வேலையி னமரோரறி விப்பார். 31(1583)

இது மக்காத் தலம், உம் மனைவியையும் மகனையும்
இறையில்லமுள்ள இங்கு விடுக என சிபுரீல் கூறல்

அன்புற்றிது பெருமைக்குய ரழகுற்றிடு மக்க
முன்புற்றிடு வரமுற்றிய முதிர்நற்புக ழகமீ
தின்புற்றும தணிபுத்திர னனிபெற்றவ ரிவரை
வன்பற்றிட விடுமித்தல மெனமற்றுரை சொற்றார்.32(1584)

நூகு நபீ கால வெள்ளத்தின் போது இறையாலயம்
வானுலகிற்கு உயர்த்தப் பெற்றது

இயல்வஞ்சக ரவரால்வள மிகையெம்மிறை நூகு
செயல்கொண்டுமு னெழுபல்லுயிர் சிதையும்படி வந்த
வயல்மண்டிய திரைவாரியி னதனுலழ கழியா
துயர்வீடிஃ தணிவானிட முயரும்படி செய்தான். 33(1585)

அடித்தளத்தினை மணல் மூடியது என அமரர் கூற,
நபி மனைவி, மகனை அங்கு விட்டனர்

அடியிட்டுறு மணன்மேடென வவர்செப்பினர் பின்னர்
படியெட்டிய புகழ்நாயகர் பரிவுற்றிடு மகவுந்
தொடியிட்டுறு மனையுந்தவ மதுதொட்டுற வவணிற்
கடிவிட்டன பிடியொத்திடு கயமொத்திடு மவரே. 34(1586)

இது நாளடைவில் பெருந்தலமாகும் எனக் கூறி
உணவும் நீரும் கொடுத்தல்

கண்ணிற்கொரு மணியாகிய கருதாமணி யுடனே
பெண்ணிற் கொரு மணியேயிவ ணனிதேபெரி தோடு
மண்ணிற்கொரு மணியாம்படி மனதுற்றுறு மென்ன
வுண்ணிற்குண வுறுநீர்கல முதவித்தனர் நபியே. 35(1587)

இறைவன் கட்டளை இது இடையே வந்து பார்க்கவும்
அவன் ஏவினன் என்று நபி கூறல்

உடையோனரு ளிஃதாகிய வுயர்காரிய ம ற்றி
யிடையேமகிழ் பெறநின்னொடு மிவண்மேவுற வென்னை
யெடுகாரணங் கோடேவின னிலனுதலி னியானே
நெடுமேனகர் புகுமென்றனர் நெயினார்முறை யுடனே.
36(1588)

வெட்ட வெளியிது, உளத்திண்மை மிக்க வீரரும் இருக்கத்
துணியாத இங்கு எனக்கு யார் துணை என மனைவி கேட்டனர்

உயிரன்னதோர் கலைதன்னொடு முடலன்னதோர் மானின்
பயிரன்னவர் நபியேயொரு பதியன்றில வெளியாய்
வெயிலன்ன விளங்குந்திடர் வெளியிற்றரு வில்லா
தயலீந்தடர் வனமேயிஃ தரிதேயுறன் மன்னே. 37(1589)



வீரம்பயில் விறல்மிக்குறு மயில்வேலட ராணின்
சூரம்பயி லவராயினு மிவணுற்றிட றுணிமோ
வீரம்பயி னபியேயணி யென்னோடுறு துணையிங்
காரென்றனர் பிரிவின்றழ லெரிகின்ற வுளத்தே. 38(1590)

இறைவன் உதவி செய்வான் என இன்சொல் உரைத்து
நபி மீளல்

கண்ணின்றிய பொருளும்பொறி கலவாதுறு முயிர்க
ளுண்ணின்றுண வருளுந்தகை யுரைசெய்திட லாமே
யெண்ணின்றுய ரிறையோன்பல வின்பம்புரி துணையின்
றண்ணின்றருள் வானென்றனர் தவநின்றருள் வாரே.
39(1591)

இன்சொற்பல விசையும்படி யெழில்வன்றிறல் கயமுந்
தன்சொற்கொடு பிடியும்மொரு தலமேவிட மதமா
மன்சொற்கொடு பிரிகின்றென மனநன்கொடு நபியார்
வன்சொற்கொடு திரும்பாதுறு வழிகொண்டன ரன்றே.
40(1592)

தனிய்யா மலைக் கணவாய் வரை திரும்பிப் பாராது வந்த நபி

உடலோரிட முயிரோரிட முளமோரிட மென்ன
வடிவாலுயிர் மனையாளொடு மகனார்வெளி யுறவே
நடவாமன மிடையாடிய வன்பானபி யங்கோர்
கடவாயத னிய்யாவரைக் கடையுற்றன ரன்றே 41(1593)

கண்ணுக்கெட்டியவரை மனித நடமாட்டம் அற்ற அவ்விடம்
நின்று நபி பிரார்த்தித்தனர்

விசைகொண்டெழு பரிகொண்டவர் வெரிநின்புற நோக்கித்
திசைகொண்ட வலத்தோடிட மதுசெவ்விழி யிட்டார்
நசைகொண்டிட நரரொன்றின நடமாடுவ காணார்
பசைகொண்டிறை தன்பால்பல பலவேண்டுவ ரன்றே.
42(1594)

வல்ல இறைவா, என் மனைவியும் மகனும் உன் அடைக்கலம்

அணியேபல தவமேயென வரிதாகிய விறையே
மணியேமணி யொளிவேயென மவுலாநிலை வல்லோய்
பணிவேகொடு வருமென்குடி பரிவாகநின் னபயந்
துணியேகொடு வெளிநின்றனர் துயரின்றிய வறிவே.
43(1595)

### பயிர், பச்சை எதுவுமே இல்லாத பாலையில் விட்டு வந்தேன் அவர்கள் உன் அடைக்கலம்

மேகந்தரு புனலின்படர் விழையும்பயி ரன்றிப்
பாகந்தரு குளிர்தன்னொடு பரிவுந்தரு வொன்று
மாகந்தர விலமேடிவ ணிடையென்குடி யபயஞ்
சோகந்தவி ரும்பேரொளி துயரின்றிய வறிவே. 44(1596)

### பைத்துல் மஃமூரின் கீழ் கஃபா அருகில் குடிவைத்தேன் அவர்கள் நின் அடைக்கலம்

இயன்மன்னிய மகுமூறெனு மெழில்பள்ளியி னேரே
வியன்மன்னிய திருவாயொளி மிகவீசிய நின்றன்
செயன்மன்னிய கஃபாவணி திகழ்நன்குடி வைத்தேன்
சுயமன்னவ அபயம்பல துயரின்றிய வறிவே. 45(1597)

### அனைத்திற்கும் காவலனான நீயே அவர்களுக்கும் காவல் அவர்கள் உன் அடைக்கலம்

பொறிகாவல புலன்காவல புகழ்காவல பிசகா
நெறிகாவல செயல்காவல நினைகாவல வைத்தக்
குறிகாவல மனைகாவலக் குடிகாவல வென்ற
னறிகாவல அபயம்பல துயரின்றிய வறிவே. 46(1598)

### இறைவனிடம் அடைக்கலமாக ஒப்புவித்து சாம் திரும்பினர்

எனவல்லவ னிடமின்பொடு மபயஞ்சொலி யெழிலின்
மனநன்கொடு நபிசென்றனர் மனைசாமெனு நகரங்
கனகஞ்சொரி பலசெல்வமு மிகுகண்மணி மகவு
மனையும்பெறு முறையன்பொடு முரைசெய்குவ னன்றே.
47(1599)

### பாலைவனத்தில் அன்றிரவு கழிந்து மறுநாள் பொழுது புலர்ந்தது

கலிவிருத்தம் [வேறு]

வஞ்சியென்று நின்றசைந்த வன்மருங்கு லன்னையும்
விஞ்சுசெஞ்சொன் மைந்தனும் விரிந்தமண்ட லத்தினே
தஞ்சமென்று கொண்டுவந்த வுண்டிதந்த முண்டுநீர்
மிஞ்சிருந்த துங்குடித்தி ராவின்மேவி னரரோ. 48(1600)

எண்டலங்க ளெங்குமன்ன வின்னிலா விளங்கல்போன்
மண்டலங்கள் வண்கதிர்க் குலஞ்சிறப்ப மைந்தனுங்
கொண்டலன் கருங்குழன் முகங்குளிர்ந் தலர்ந்துற
விண்டலம் பரந்துதித்த னன்செறிந்த வெய்யவன். 49(1601)



### வெயிலின் கொடுமை

வானெழுந்த வாதவன் வழங்குசெங் கதிர்க்கர
மூனெழுந்த வாளியென்ன வொக்கவெங்கும் வீசுவ
தேனெழுந்த வாகைமன்னர் தேவியார் பிரிந்ததீ
தானெழுந்த தன்மையொடு தன்றிறஞ் செலுத்தலே.
50(1602)

தண்கடற்ற லத்தெழுந்த தாவருங் கொடுந்தழற்
புண்கணற்ற தென்னவெய்ய பொங்குசெங் கதிர்க்கரன்
மண்கணத் தலர்ந்துகொண்ட வண்புலிங்க முங்கலாற்
கண்கலந்த தென்னவெங்கு மின்கலந்த மேகமே. 51(1603)

### ஒரு மரத்தின்கீழ் துணிகட்டி அதன் நிழலில் தங்கினர்

ஆதவன் பரந்தகாந்தி யங்கணெங்கு மண்டலான்
மாதுமைந்த னுஞ்செறிந்த தோர்மரத் திடத்தினே
மீதிருந்த வண்டுகிற் படங்கியற்றி மேநிழற்
சீதமல்க நன்கிருந்து கன்னனீர் தெரிந்தனர். 52(1604)

### கடுந்தாகம் கொண்டு நீர் தேடினர்

கூசுகொண்ட நீரழிந்த கூறுகண்டு நிற்பவுந்
தேசுகொண்ட கண்மணிக்கும் நன்றிசெய்யு மன்னமென்
வாசமென்ன நுண்பதத்து மாதினுக்கு மட்டிடா
தாசுகொண்டு தாகமென்னு மாக்கமூக்க மானதே. 53(1605)

மேனிவாட வீரமாட மீறுகின்ற தாகமே
கானலோடு வாயுனீர் கலந்துபஞ்சி னூடவே
தேனிறைய வள்ளலந்த சின்னிழற் றுலங்கிட
மானனார் விரைந்தெழுந்து வண்புனற்க டேடினார். 54(1606)

### நீர் தேடி அங்குமிங்கும் ஓடிக் கால்கள் ஓய்ந்தன

பஞ்சினுண்மை பாதவன்மை பங்கயத்தை வன்பரன்
மஞ்சினிட்ட தென்னவைத்து மண்டுகு டழற்றவே
நெஞ்சுலர்ந்து கண்டுளிக்கு நீருலர்ந்து தன்கலை
எஞ்சிநின்ற மானின்வல்லி எங்குமங்ங னோடுமே. 55(1607)

வென்றிமன்னு முள்ளமங்கம் வெம்பிவெம்பி வெய்யழற்
றுன்றிமன்னு கேடமென்னச் சோம்பிச்சோம்பிச் செங்கணீர்
நின்றுமன்னு மேன்மக னிழற்குள்மன்ன லெந்துயர்
கன்றுமென்ன வெந்துயிர்த்த காலுயிர்த்துச் சாம்புமே.
56(1608)

மீண்டும் ஸபா, மறுவா குன்றுகளிடையே
ஓடி ஓடி நீர் தேடுதல்

வேகமுற்ற செந்தழல் விளைந்தெழுந்த வுள்ளமே
தாகமுற்ற மேனியோடு தாவருங் குணத்தினர்
சோகமுற்ற தெம்மனோர் தொகுத்தியம்ப லாகுமே
ஆகுவா மெயழுந்தொனித் தலம்மகோ வுரைப்பதே.
57(1609)

சூடமுன்ற பாததூளி தூமமென்ன வோடியே
மாடிருந்த தேஸபா மதித்தவெற்பி னேருமற்
நீடிருந்த மறுவாவென்னு மிம்மலைக்கு நேரவே
நீடினோடு மீளுமோடும் நின்றுநின் றரற்றுமே 58(1610)

இங்கு பசி, தாகத்தால் நாங்கள் மாளாது காத்தருள் என
அன்னை இறைஞ்சுதல்

சொன்னவிம் மலைக்கிடைக்கு ளோடுமீளுந் தோறுமே
மின்னலர்த்த மேனிவஞ்சி மேவுகின்ற வின்னலான்
மன்னுயிர்க்கு மன்னவர் மதித்தயாங்கள் வேட்டலா
னின்னிலத் திறந்திடாது காத்தளிப்பை நாதனே. 59(1611)

ஒருமலைக்கு ளோடுமற்று மீளுமுள்ளம் வெம்மையான்
மருமலைக்கு ளோடுநின்று பின்னுமாழ்கி நாதனே
பெருமலைக்கு ணின்றதற்கு மூண்பரித்த வல்லவா
வருமலைப்பி லாதுகாத்தி யாங்கள்மாய்ந்தி டாதரோ.
60(1612)

வானவர் தலைவர் வந்து தோன்றினர்

என்றுநின் றிரந்திரந் திறந்திடாது காத்தியென்
றன்றுகுன்றி ரண்டினுக் கடுக்கிடைக்கு ளோடவே
வென்றிகொண்ட வல்லவன் சிறந்தமெய்மை வாய்மையே
துன்றுமும்பர் தம்பதிக் குரைத்தபோது தோன்றினர்.
61(1613)

துன்பத்திலும் பொறுமை மேற்கொண்டதால் உமக்கு
சோபனமும் நன்மாராயமும் என சிபுறீல் வாழ்த்தல்

உள்ளமும் படர்ந்தெழுந்த வோகையோடு மேகமாய்
வெள்ளமுங் கொணர்ந்ததென்ன மீறுவான வர்க்கிறை
யள்ளரும்பு னற்குளங்க மாதயங்கு நங்கையே
பிள்ளையே நிறைந்தசோப னம்பெறுவென் றெய்தினர்.
62(1614)



ஆயதுன்ப மெய்திடா தருங்குணம் பொறுத்ததான்
மேயமெய்மை யேத்தரும் விளங்குசோப னத்துடன்
சேயுநீயு மெய்தினீர் செழித்துவக்கு நன்மைமா
ராயவாள ரென்னமுன்னர் நண்பின்வாழ்த்தி னாரரோ.
63(1615)

மகிழ்ந்த அன்னையார் திரும்பிவந்து மகன் தரையை
விரலால் கிளரக் காணல்

உவகைபொங்கு மொழியினோடு முறுதிகொண்ட நாயகி
தவமும்வண்மை தங்குமைந்தன் மேவிடத்துச் சந்தமார்
நவமதோடும் விரைவினெய்த நம்பியொண்கை விரற்களாற்
புவிமணற் கிளக்குகின்ற போதுகண்டு நின்றனர். 64(1616)

அவர் மண் பறித்த இடத்தில் ஸம்சம் என்னும்
நீரூற்று எழுந்தது

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

எம்மிறை யலர்ந்த செங்கை யெழில்விரற் கிளைத்த போதி
லம்மலி ஸம்ச மென்னு மக்குழி யிடத்தி னின்று
செம்மனங் களிப்ப நன்கிற் செல்பவ ரறிவிற் றுன்னு
மம்மனக் கண்ணி னூற்றொன் றதினிடை யெழுந்த தன்றே.
65(1617)

கொடை நாயகரின் மனையில் செல்வம் சுரந்தது ஒப்ப

பன்னரு மறிவிற் றுன்னும் பண்புறுங் கொடையின் மிக்க
நன்னிறப் புனலு மூறி நனிகொளப் பொங்கிற் றிந்நாள்
மன்னணி மணிக பீபு முகம்மதின் மனையிற் செல்வ
மன்னதே சுரப்ப நாளு நாமத்தா னருள்வன் வல்லோன்.
66(1618)

அளவிலா மகிழ்ச்சியுற்று இறைவனுக்கு சுஜூது செய்தல்

கைவிரற் றொட்ட பாரிற் கண்ணுறுந் தகுதி நோக்கி
மெய்வழி யுவகை யோடு மரிதென வியந்து நண்பிற்
றுய்வரு மிறைவன் பாலில் சுஜூதுடன் செய்து போற்றி
மைவருங் கூந்தற் பூவை மகிழ்ந்தன ரளவின் றம்ம. 67(1619)

பெருகிய ஊற்றை அணைகட்டி மறித்து அள்ளியருந்தல்

செறிதருந் துறுகன் மற்றும் பருக்கையுஞ் சிலையுங் கொண்டு
குறிதருஞ் சலத்தி னூற்றைக் கொண்டவண் பிரிவி டாது
மறிதர வடுக்கிக் கட்டி மலிந்தவத் தெண்ணீ ரள்ளி
நறிதரு மகவுந் தாமும் நவம்பெறப் பருகி னாரால். 68(1620)

### சிபுரீல் தோன்றிச் சொன்ன செய்தி

வல்லவ னளித்த மேன்மை மதுரமூற் றிருந்த தெண்ணீர்
சொல்லவன் புகழி னோடுந் தோற்றமே கொண்டுண் டாக்கை
யெல்லையி லின்ப மெய்தி யெழிலொடும் பூப்ப வைகும்
வல்லிதன் வதன நோக்கிச் சிபுரியீல் வழங்கு வாரால்.
69(1621)

### அஞ்சாதீர், இந்த இடம் மக்கள் கூடுவதால் நகரமாகும் எனக் கேட்டு மகிழ்தல்

எவருமே யெய்தி டாதித் தலமென விதய மஞ்சல்
கவலைபல் லாற்றி னானுங் கருதற்க மதிக்கக் கூடா
உவகையே யனந்தங் கொள்க வுறுதியி னிவணிற் றக்க
வவர்களா னகர மாக்கு மாண்டகை யென்று சொற்றார்.
70(1622)

பெருங்குடி மல்கு மென்னப் பின்குடி குடிமுன் னாக
வருங்குடி யென்று சிந்தை மகிழ்வொடு முலகெ லாஞ்சென்
றொருங்கொடி யாது கல்லா னுறவியை யடைத்த மாதுந்
தருங்குடி மகவு மேவுந் தகுதியார் வகுக்கற் பாலரர்.
71(1623)

### எமன் நாட்டார் சாம் சொல்லும் வழியில் பறவைகள் சாயக்கண்டு வியப்புறல்

இயலொடு மிவர்கண் மேவு மெல்லையி னெமனென் றோது
முயர்நகர்ச் செட்டர் சாமுக் குவப்பொடும் போதுங் காலை
நவமுற வின்ன மேன்மை நனிதலத் தருகிற் புக்க
வவனுயர் பறவை சாயு மாக்கத்தின் றன்மை கண்டார்.
72(1624)

### அவ்விடந் தேடி வந்தோர் தாயையும் மகனையும் கண்டு ஐயுறல்

வெந்தழற் கான லோடும் வெளியிடை மாக்கள் கூடிச்
சந்தத முறுத தானஞ் சலக்குழி யில்லாக் கான
மிந்தவிவ் விடத்திற் பக்கி யிருந்திடா திருக்கும் வண்ண
மெந்தவா றென்ன வெண்ணி யிவர்களே யிகலா நின்றார்.
73(1625)

இகலியோர் திரண்டு வந்தங் கடுத்தலு மெழிலின் முத்து
நகைமதிர் சங்கு மென்ன நம்பியுந் தாயு மாங்கர்
மிகைகட லுறவி தானு மேவிடக் கண்ட பேர்க
ளகநிறை புதுமை யெய்தி யரிவைபா லையங் கொண்டார்.
74(1626)



### அம்மா நீர் சொக்க மங்கையா, ஜின்குலப் பெண்ணா மானிட இனத்தாளா? எனல்

வானுலாக் கதிரின் செய்ய மாளிகை சுவன மின்னே
மீனுலாக் கடலி னுப்பண் மேவுஜின் குலத்தின் மானே
தேனுலா வமுதத் தீஞ்சொற் சேயிழை மனுவே யென்ன
வானவர் வினவ முன்ன ரவரையங் கூடியும் பொன்னே.
75(1627)

### இறைதோழர் நபி இபுறாகீமின் மனைவி நான்; எம் மகன் இசுமாயீல் இவர்

கணித்திடா வல்லோன் மெய்மை கலீலெனும் பாங்க ராகித்
திணித்தடப் பொற்றோள் வண்கைச் செம்மலா மிபுறா கீந்தம்
பிணித்திடுந் தேவி யானென் பெருமையின் றோன்றன் மேன்மை
யணித்துறு மிஃதின் னாம மணியிசு மாயீ லென்றார். 76(1628)

### இக்கிணற்றுக்குரியோர் வேறெவரும் உள்ளனரோ?

பெருந்தொழி லாளர் நோக்கிப் பிறந்திடாக் கருணை யென்ன
வருந்தகை கொண்டுள் ளூறும் வண்புன றனக்கு நும்மோ
டருந்திடற் குரிய பங்கி னாளர்மற் றுண்டு கொல்லோ
தெரிந்தரு ளுதிரென் றார்பின் சேயிழை புகலு மன்றே.
77(1629)

### யானும் என் மகனுமே இதன் உரிமையாளர், தடையின்றி அருந்துக எனல்

இருந்தவ ளியானு மென்ற னெழின்மணி மகவு மல்லாற்
பொருந்துறும் பகுதி யாளர் வேறின்று புதியோ னன்பாற்
றருந்தவப் பயனு லியாருந் தடையறக் கோட லாமென்
றருந்தவத் துருவின் மேய கற்பணி யறைந்தா ரன்றே.
78(1630)

### அனைவரும் அள்ளிப் பருகி மகிழ்ந்து தம்மோடு எடுத்தும் சென்றனர்

விளக்கிய மொழியி னியாரு மேன்மையி னிறங்கி யந்நீ
ரளிக்கர கத்தி னுண்டு மாடியும் விலங்கிற் கூட்டிக்
களித்துடற் சிலிர்த்து நாதன் கனிமது ரத்திற் போற்றி
வளத்தொடுந் தத்த நாட்டின் வழிகொண்டு போந்தா ரன்றே. 79(1631)

**சென்றவர் மக்கள் கூட்டத்தோடு திரும்பி வந்து நகரமைத்து குடியேறினர்**

தந்தநாட் டேகி வாழுந் தங்குடி யவரி னோடுஞ்
சொந்தமேம் பொருளி னோடுந் தொகுபல கருவி யோடு
மந்தமே யிபுறு கீந்த மணிதவப் பலனான் மக்கம்
அந்தவ ரில்லங் கூட்டி வளங்குடி யேறி னாரால். 80(1632)

பற்பல விலங்கி னோடும் பன்மணித் தொகையி னோடு
மிற்பல வியற்றி யங்ங னியல்பொடு மிருந்தார் வள்ளல்
சொற்பயிற் றேவி யார்க்குந் தோட்டுணை யுரிய ராகி
நற்பலன் கொண்டு மக்க நகரென வியப்பி னன்றே.
81(1633)

**பொறுமையால் பெருமை பெற்ற அன்னையின் மகிமையால் மக்கா என்னும் சுவனம் உருப்பெற்றது**

ஏதொரு வன்மை யுற்ற விடுக்கணே விடுக்கென் றுது
தீதினை யொருவி நின்றார் சேர்ந்தவ ரோடு மேன்மை
மாதுறை சேர்வ ரென்னு மகிமையாற் றேவி தம்பாற்
சோதியி னழகின் மக்காச் சுவனமே யிவர்கள் பெற்றார்.
82,1634)

பின்குடியை நன்குடியாக்கிய படல முற்றிற்று
ஆகப்படலம் 28-க்கு திருவிருத்தம் 1634.

—:—

# 29. இசுமாயீல் நபியைக் குறுபான் செய்த படலம்

**படலச்செய்தி**

**கலிவிருத்தம்**

எழிறரும் பேரொளி விலங்கு மேன்மையி
னழகுயர் நபியிசு மாயி லன்புறப்
பொழிறிகழ் மக்கத்திற் போற்றும் வல்லவன்
வழிகுறு பானியல் வரிசை யோதுவாம். 1(1635)

**பாலையில் மனைவியையும் மகனையும் விட்டு நபி சாம் திரும்பிய பின் இருவரும் சிறப்புற்றனர்**

தேவியு மெழினவஞ் செழித்த மைந்தனு
மாவியு முடலென வரிய கானகத்
தேவின னியல்பினு னியற்றி நன்னபித்
தாவருஞ் சாமெனும் பதியைச் சார்ந்தனர். 2(1636)

மேவிய வழிமுறை வியப்பி னியாவரும்
பாவிய தகையொடும் பயிற்சி கொள்ளவே
பூவியல் பெரும்புகழ் புனைந்து முன்வருந்
தேவியும் வள்ளலுஞ் சிறப்பி னின்றனர். 3(1637)

**அவ்விருவரையுங் காண நபி விரும்பும்போதெல்லாம் வானவர் புரவி தருவார் அது நொடியில் கொண்டு சேர்க்கும்**

பொன்னலந் திகழ்பதி புரவி வானவர்
நன்னபி வேண்டிடி னல்கு வார்தினம்
பின்னர்தம் பின்வரும் பெட்பின் பாரியா
ரன்னவ ருறுந்தல மதனை நாடினார். 4(1638)

**வான் புரவியேறி காலை மக்கத்திலும், மாலை சாமிலும் நபி இருத்தல்**

முன்வருந் தேவியார் மொழியுஞ் சொற்படிப்
பின்வருந் தேவியார் பெரிய நன்குடி
யின்வரும் பகற்றுயி லெழுந்தேற் பாட்டினிற்
றன்வருஞ் சாமிடை யுவத்தி னுதரே. 5(1639)

காரணப் புரவியிற் காலை மக்கத்தில்
வாரணப் புவிபுகழ் மாலை சாமினிற்
சீரணித் திரவிவண் சிறந்த மேன்மையிற்
பேரணித் துறுமிகு பெற்றி வள்ளலே. 6(1540)

**இரு நகரும் ஒன்றென நபி இருக்கும் போது துல்ஹச்சு மாதம் வந்தது**

இருபதி யொருபதி யென்னுந் தன்மையின்
வருபதி நபியவர் வரிசை மிக்குறு
மொருபதி யுவந்திடு முவமை யொன்றிலா
திருப்தி வினையின்துல் ஹச்சி யெய்தின. 7(1641)

**பிறை எட்டில் கனவில் ஒருவர் வந்து முன் இறைவனுக்கு அளித்த வாக்கை நிறைவேற்றுக என்றார்**

இம்மதி யதனிடைத் தெய்தி யெட்டினிற்
செம்மையிற் பராயமுற் சிறந்த நாயனுக்
கம்மனக் காரிய மரிதிற் செய்கவென்
றைம்மனக் கனவினோ ரறிஞ ரோதினார். 8(1642)

நூறு செம்மறியாடறுத்து பலியிட அவற்றை வானத்தீ உண்ணக் கண்டு கடமை நிறைவேறியதாய் நினைத்தல்

கனவது கண்டபின் களித் திருந்தனர்
தினகரன் றோன்றலுஞ் செம்ம னன்னய
நனிநகர் மக்கமே நண்ணி நண்பொடுந்
தனியுள மகிழ்ச்சியிற் றவத்தின் முன்னினார். 9(1643)

வாழிய நேர்ச்சையால் வலியிற் பின்மயிர்
மேழகத் தகரொரு நூறு வீறுடுஞ்
சூழ்தர வறுத்தனர் தோற்றி டாத்தழற்
பாழியி னருந்தின பான்மை நோக்கினார். 10(1644

காண்டகாச் செந்தழற் களிப்பிற் றின்றலு
மாண்டகை யேவலி னுக்க முற்றிய
தீண்டென வுளத்திடை யெண்ணங் கொண்டனர்
வேண்டரு முயற்சியின் வேந்த ராமரோ. 11(1645)

**மறுநாளிரவில் மீண்டும் அதே கனவு காணல்**

மேற்றகை யியற்றினர் பின்னர் மெய்ம்மையிற்
றேற்றுள வள்ளலுஞ் சிறந்த சாமிடை
யாற்றலின் மாலையி னடைந்தி ராவினிற்
பேற்றியிற் கண்படை பெற்ற காலையே. 12(1646)

நென்னல்வந் துரைத்தவர் நேர்ந்து நாயக
முன்னரிற் பராயது முற்ற வெற்றியி
னின்னண முடித்திரென் றிசைத்து மீண்டனர்
துன்னிய கனவதி விதத்தின் றோற்றத்தால். 13(1647)



நூறு ஒட்டகமறுத்து பலி கொடுத்தனர்

வைகறை வள்ளலு மகிழ்ந்து மேனக
ரெய்திவன் னெடுங்கழுத் தீரைம் பான்றமை
மெய்தவத் தியல்பினுற் றெரிந்து மிக்கொடுஞ்
செய்தன ரணிகுறு பானற் சீர்மையால். 14(1648)

**அதனையும் தீ விழுங்கியது**

இயலினி லறுத்தலு மெரியொன் றெய்தியே
செயலினி லனைத்தையுந் தின்று போதலு
நயனுறப் பணித்தலி னடக்கை யென்னவுள்
ளயர்விலா தெண்ணின ரண்ண லன்றரோ. 15(1649)

**மூன்றும் நாளிரவும் அதே கனவு காண அவரிடமே விளக்கம் கேட்டனர்**

உன்னிய மகிழ்வொடு முற்று நண்பகற்
பின்னிய லரிபடும் போது பேரணி
மன்னிய சாமிடை வந்து மாதவந்
துன்னிய நாயகர் சுகத்தின் மேயினார். 16(1650)

களிப்புறு நன்னபி யன்றுங் கண்படைக்
குளிப்புறுங் காலையி னென்னல் கொண்டவர்
வெளிப்படக் கனவினில் விளங்கி நேர்ச்சையே
தெளிப்பட வியற்றுக வென்னச் செப்பினார். 17(1651)

முன்னிலை யன்னவர் முகத்தை நோக்கியே
மன்னிலை பராயது வரிசை மேவுற
வென்னிலை முற்றுவ தியாதின் பாலென
நன்னிலை யண்ணலு நனிவி னாவினார். 18(1652)

**மகன் இசுமாயீலைப் பலியிடுவதாய்க் கூறியதை நினைவு படுத்தினார்**

அருந்தவ நாயக வகமுங் கண்களும்
பெருந்தகை யெத்தகை பேறு கொள்ளவே
மருந்தகை வல்லவன் மகிழ்ந்த மாமகன்
பொருந்திசு மாயில்பாற் புகலக் கேட்டனர். 19(1653)

**துல்ஹச்சு பத்தாமிரவு இக்கனவு கண்டு காலையில் மக்கம் உற்றனர்**

கருதிய திங்கள்துல் ஹச்சு மேன்மையின்
வருபதின் றெய்தியிவ் வரிசை காண்டலுந்
திருநபி திடுக்கொடு மெழுந்தி ராஅத்துக்கண்
மருவொடு மிருந்தனர் வழியி னேர்மையால். 20(1654)

திருமகன் கழுத்தினிற் கருவி தீயெழப்
பொருமனத் திருந்தனர் புனித ரென்னிலே
வருமஃ தென்கொலென் றயர்ந்து மாழ்கியே
வருணமுற் றெழுந்தன னருண னன்றரோ. 21(1655)

விடிந்தபின் வானகர் வேக வெம்பரி
யிடந்தனி னுடியினி லேகி மெய்மையிற்
படர்ந்தெழும் பெரும்புகழ் பதியி னம்மிறைத்
தடந்தகை காரணர் தழைக்கச் செய்வரால். 22(1656)

மகன் இசுமாயீலுக்கு நன்னீராட்டி புத்தாடை புனையச் சொல்லல்

காலையி லலர்தருங் கமல மென்னவே
சீலநல் லெழின்முகத் தேவி நோக்கிநின்
பாலக னணியுடற் பரிவின் முற்சிர
மாலுற மஞ்சன மகிழ்வி னூட்டுமின். 23(1657)

அணிதரு மித்துகி லீத்துப் பேரழ
கணிதரு மாலைகள் புனைமி னன்புடன்
கணிதரு மோரையி னென்னக் காவலற்
பணிதரு நாயகர் பகர்ந்திட் டாரரோ. 24(1658)

அவ்வண்ணமே அன்னை செய்தனர்

விரிகதிர் விண்மணி விளங்க வெண்கதிர்
புரிகதிர் புனலிடைப் புனித மாக்கல்போற்
சொரிகதிர் மஞ்சன மாட்டித் தோன்றலுக்
குரிகதிர் நல்லுடை யுடுத்தி னாரரோ. 25(1659)

காடு சென்று விறகு வெட்டி வருவோம் கயிறும் கத்தியும் கொண்டு வா என மகனைப் பணித்தல்

அணித்துறு மடவியி லரிய விந்தனம்
பிணித்திவண் சேர்க்குவம் பெலனிற் றும்பொடுந்
துணித்திடுங் கருவியுந் தொக்கி வம்மெனப்
பணித்தனர் மகனிடம் பரிவின் வள்ளலே. 26(1660)

தந்தையும் தனயனும் புறப்பட்டுச் சென்றனர்

சொற்றிடுஞ் சொற்படி தோன்றற் றும்பொடுங்
கொற்றகுங் கருவியுங் கொண்டு தோன்றலு
நற்றவ நாயகர் நயந்து போந்தனர்
வெற்றியும் வீடுமே வேண்டுஞ் சிந்தையால். 27(1661)



வெங்கய மருப்புகும் வீர வெவ்வரி
தங்குழைப் பறமொடுந் தகைய தன்னுழை
யங்கிருந் தெழுந்தன வண்ண லோன்றலும்
புங்கமே விட்டிலம் புறப்பட் டாரரோ. 28(1662)

அப்போது இசுமாயீலுக்கு வயது பன்னிரண்டு

கலிநிலைத்துறை

ஒன்றி னுள்ளத்தி னிருவர்மும் மலமொரீஇ நான்கிற்
றுன்று மெய்ப்பொரு ளைந்தினு றுணர்துதி யுலகேழ்
சென்ற கீர்த்தியெண் டிசையெழி னவமனம் பத்தி
னின்றற் பன்னொன்றிற் பன்னிரண் டொருநிவர் பருவம்.
29(1663)

இபுலீசு மனித உருவில் ஹாஜரு மனையடைந்து அன்னையே கேளும் எனல்

மகவுந் தந்தையும் போதலும் வன்மனத் திபுலீ
சகமும் வாய்மையு மொத்தவர் போலணி முகமு
நகைசெய் மேனியு மிளிர்பல வுடையொடு நரர்போன்
மிகையி னுகுலத் தாஜரு வியன்மனை யடைந்தான். 30(1664)

ஏக்க முற்றுமுட் டுயரொடு மெண்ணமுங் கவலை
யாக்க முற்றுநல் லுபகரித் தவரென வயரு
நோக்க முற்றுமென் னறுமலர்க் கருங்குழ லாலிற்
றேக்க முற்றிடை யன்னைநீர் கேண்மெனச் செப்பும்.
31(1665)

கத்தியும் கயிறும் கையில் கொண்டு மகனுடன் கணவன் போவது ஏன் என்றறிவாயா?

முறுக்கு முப்பிரி வன்கயிற் றொடுமுனை வடிவி
னறுக்குஞ் சத்திர மருமகன் கைக்கொடு தொடர
வுறுக்குஞ் சிந்தையி னும்முணர் காந்தனு முடன்று
பொறுக்குங் காரண மென்னைகொ லுணர்ந்தனை புகலாய்.
32(1666)

விறகு வெட்டிக் கொணரப் போகிறார் என் நாயகர் எனல்

வினவிக் கேட்டலு மணிமணி விழைதரு மன்னை
நனைகொள் பன்மர வடவியி னறுவிற கெடுப்பா
னினைவி னன்பொடும் போந்தனர் நிலையது பிசகா
தெனைவ ணக்கிய நாயக ரென்றனை ரியல்பின். 33(1667)

**சுய சிந்தனை இன்மையாலே பெண்கள்
மடவியர் எனப்படுகின்றனர்!**

மதிக்குஞ் சிந்தையுந் தெரிவொடுந் தெளிவுமன் னியனூல்
கதிக்குஞ் சிந்தையுங் காரணங் கருத்துள தேனும்
பதிக்குஞ் சிந்தனைக் கீழ்ப்படுந் தன்மையாற் பாரில்
விதிக்குஞ் சிந்தனை மடவிய ரெனவிளங் கிழைக்கே. 34(1668)

**மணவாழ்வு மேற்கொண்டு மகன் பெற்றும் காட்டில்
விட்டதை நீர் சிந்திக்கவில்லை**

மோட்ட கத்தொடு மணங்கொண்டு முகமளாய் வாழ்ந்தும்
வீட்ட கத்தொடு மனையென விழைமக வீன்றுஞ்
சாட்ட கத்தொடு நும்முளந் தயங்குறத் தனியிக்
காட்ட கத்திடை விடுத்தது முணர்ந்திலீர் கருத்தில்.
35(1669)

**மூத்தாள் குடியுடன் வழக்கு வருமென்றெண்ணி உன்
மகனைக் கொல்லப் போந்தார்**

குடியி லாத்தலம் பெருங்குடி குழுவலாற் குணத்தின்
மடியி லாதுபின் வழக்கொடு மருவுமென் றுணர்ந்து
கடியி லாதுவந் துவப்பொடு நுங்கரு மணியை
முடியி லாதருங் கொலைசெய்வான் முயற்சியிற் போந்தார்.
36(1670)

**எனக்காகவோ சாருவுக்காகவோ சொல்லவில்லை உன்
மகனுக்கிரங்கி இறைவன் மேலாணையாய்ச் சொன்னேன்**

எமக்கு வேண்டியு மன்றுமின் னியறருஞ் சாருத்
தமக்கு வேண்டியு மன்றுமெய் யறிவுறுந் தனைய
னமைக்க வேண்டியு மரியவ னுணையா னறைந்தே
னுமக்கு வேண்டியே நுண்டகை நிலைதர வேண்டி. 37(1671)

**அனைத்தும் முன்பே இழந்த நீ உன் மகனையும் இழப்பாய்**

நாடி ழந்தனை நன்மனை யிழந்தனை நாடும்
பீடி ழந்தனை பேரணி யிழந்தனை பெற்றக்
காடி ழந்தனை கண்மணி யிழந்தனை களிக்குஞ்
சேடி ழந்தனை யிழந்தனை நின்னுயர் செல்வம். 38(1672)

**மகனைப் பற்றியழைத்துவா என இபுலீசு கூற
அன்னை கூறுவார்**

ஆத லாற்றொடர்ந் தருமணி யங்கரம் பற்றிப்
போத லாலன்றி வேறின்று நினக்குறு புகழென்
றோத லாலவன் படுமுக நோக்கியிவ் வுலகங்
காத லாற்கொளு மொருமொழி காரிகை நவிற்றும்.
39(1673)



**என் நாயகர் போல் இச்செகத்தில் எவருமில்லை எம்மை இங்கு
விட்டது எம் நன்மைக்கே**

கணிக்குஞ் சிந்தையிற் களிப்பினிற் போற்றலின் வயிற்றுள்
பிணிக்கும் வெம்மைய தகற்றுதல் பிரிவுற வேறிற்
குணக்கு மன்னையென் றுறுமகற் கென்கொலக் குறிப்புதி
திணிக்கு மெவ்வுயிர்த் துணைவர்போ லிச்செகத் தின்றே.
40(1674)

வல்ல நாயகன் கருணையான் வரிசையி னின்ன
நல்ல நண்ணிலம் வியப்புற நவத்தொடு மிவணிற்
சொல்ல ருங்குணத் தெங்களை விடுத்தனர் தூய்மைப்
பல்ல ருங்குணம் பெறுவதற் கென்றனர் பாவை. 41(1675)

**உன் நாயகரைக் கேள் இறைவன் கட்டளைப்படி இவனை
அறுக்கப் போகிறேன் என்பார் எனல்**

மலையி டத்தினி லருமணி மகன்றனை வருந்தி
யுலைவி டத்துறப் பதைத்துள முயிருடல் விடுப்பக்
கொலை யிடத்திட னுரைத்தன னிறையெனக் குறித்தும்
வலையி டத்தொடு முரைக்குவ ரென்றுமேல் வகுத்தான்.
42(1676)

**நபிமார் சொல்வது பொய்யாவதில்லை**

குணக்கி டத்தெழுஞ் செழுங்கதிர் குடக்கெழுந் திடினுங்
கணக்கி டத்துறு மெழுத்துமக் கருத்திலா தேனும்
பணக்கி டத்துறும் புவிககை ஞயினும் பண்வாய்
மணக்கி டத்தசொற் படிறன்று நன்னபி மார்தம். 43(1677)

**இறைகட்டளை அதுவாயின் நான் தடுப்பது முறையன்று**

இன்ன காரண மிறையவ னருளிய வியல்பேல்
என்ன காரண மாண்டகை யரிதுட னியற்றுஞ்
சொன்ன காரணந் தோழரே தொடர்ந்திடி னும்போ
யென்ன காரணந் தடுத்திடன் முறையிஃ தன்று. 44(1678)

**என்ன இழப்பு ஏற்படினும் இறைவழி நிற்பதே முறை**

நாடு பொன்றினு நன்னகர் பொன்றினு நங்கைப்
பாடு பொன்றினுஞ் சுற்றங்கள் பொன்றினும் பயிலுங்
கூடு பொன்றினு முள்ளுயிர் பொன்றினுங் கொற்ற
மோடு பொன்றிலா திறைவழிப் படுதலே முறைமை.
45(1679)

வல்ல நாயகன் விதித்த வழியிலேயே செல்வோம்

தேட்டத் தான்மிக வறிவத னுண்மிகச் சிறந்த
நாட்டத் தான்மிக நங்குலத் தான்மிக நன்மை
யாட்டத் தான்மிகத் தகுதிய தான்மிக வரிய
சேட்டத் தான்மிக மேன்மைவல் லவன்வழிச் சேறல்.
46(1680)

வல்ல நாயக னெவ்வழி விதித்ததவ் வழியே
செல்ல நாடின மியாங்களென் றரிவையர் திலக
மொல்லை நாயக னிடத்தினி விரந்தன ருலைக்குந்
தொல்லை வஞ்சக னீங்குதற் றகுந்துதி யோடே. 47(1681)

அன்னையிடம் தோற்ற இபுலீசு இசுமாயீலிடம் வருதல்

கலைப்ப தற்கிட மில்லெனப் புலைமனங் கலங்கி
யுலைப்ப டும்படு பாவியின் னுயர்நபி யுடனே
தலைப்ப டுங்குணத் தேகுமெந் நபியொளி தயங்குங்
குலைப்ப ருங்கருத் தாண்டகை முன்குறு கினனே. 48(1682)

எங்கு செல்கிறீர் எனக் கேட்டனன்

சந்தி ரற்கொரு முயலுண்டு முயலின்று தயங்குஞ்
சுந்த ரத்திரு வதனநற் கருணையந் தோன்றஅல்
வெந்த ருங்கரு விகைக்கொண்டு வேந்தருந் தகைவிண்
மந்த ரத்தெவன் காரணஞ் செல்கிற்றி மவுல்வாய். 49(1683)

விறகு வெட்டிவரப் போகிறோம் எனல்

என்று புன்மொழி யுளத்தினன் வினவலு மெழிலித்
துன்று வன்றரு வடவியிற் சுமைவிற கெடுப்பா
னின்று நன்றியிற் செல்கிற்றே மியாமென விசைத்தார்
வென்றி யென்றுமிப் பாருல கிருத்திய விறலோர். 50(1684)

புத்துடை உடுத்தியும் குளிக்கச் செய்தும் கத்தியும் கயிறும் கொண்டேகுதல் ஏனோ சிந்தித்துப்பார்

செய்ய மேனியின் முன்னுடை கழித்ததுஞ் செழுநீர்
மெய்ய தேபுனி தங்கொள வித்ததும் விரியுங்
கையிற் கூரிய கருவியும் பாசமுங் கொண்டோ
வைய கானக மேகுத லறிந்துளந் தெளியாய். 51(1685)



கனவில் நாயன் சொன்னது என்று மூத்தாளின் சூழ்ச்சியால் உன்னை அறுப்பார்

நாயன் சொற்றதென் றுறுகன வரவது நயந்து
சேயன் முற்றொடை தேவியின் வழக்கது சேரா
தாய சூழ்ச்சியா னின்றனை யடவியி னறுத்து
மாய வித்லைதயி தென்றனன் மாயவித் தையனே. 52(1686)

அனைத்து சிறப்புகளும் பெற்ற நீ வீணில் அழிவதோ?

செல்வ மேன்மையு மழகுறும் பருவத்தின் சிறப்புங்
கல்வி மேன்மையும் பற்பல முயற்சியுங் கருத்தும்
வெல்லை மேன்மையுந் தகுதியும் வீணினே வியப்
புல்லை மேன்மையி தென்னெனப் புகன்றனன் பொருமி.
53(1687)

நீ புவியில் வாழாமல் கத்திக்குப் பலியாவது எதற்கோ? என்றான்

திரைகொள் வாருதி யணிபுவி யிடைவருஞ் செயற்கை
கரைகொ ளாதய லின்பமே கருத்துடன் கலத்தல்
புரைகொ ளும்படி யுயிர்செலப் பொறையுடல் சிறந்த
திரைகொ ழுங்கதிர் வசியினிற் கொடுத்தலெச் செயலே.
54(1688)

வஞ்சகன் வாய்மொழி கேட்ட இசுமாயீல் விடை கூறல்

இனைய தன்மையி னருமையி னிரக்கமுங் கொண்டு
வினையன் கூறலு மெம்மிறை யவன்முகம் வெதும்ப
நினைவி னரொடு நியதியும் போதமும் நிறைய
வனைய வாய்மைநல் லன்பொடு மெடுத்தெடுத் தறைவார்.
55(1689)

இவ்வுடல் நித்தியமானது அன்று, என்றுவது அழியக் கூடியதே

வான வில்லென மின்னென வருநிலை யென்னக்
கான வில்லெனக் குமிழெனக் கலந்தவைம் பொறிக
ளான வில்லென வமைவதிவ் விளமைமற் றவைகள்
கூன வில்லென வளைத்திடுங் குரம்பையென் பவையே.
56(1690)

இனியவை அனைத்தும் நுகர்ந்தாலும் இறுதியில் சாவை நுகராதாருண்டோ?

தேனு கர்ந்தவை நீரது நுகர்ந்தவை செனித்துப்
பானு கர்ந்தவை மண்ணைய் நுகர்ந்தவை பலகா
லூனு கர்ந்தவை மற்றவை நுகர்ந்திலா வுயிர்கள்
சாநு கர்ந்தவை யன்றுகொ லெத்தலந் தனினும். 57(1691)

பிறந்தவர் இறப்பர், இது உண்மை

விரிந்த பாரினிற் பிறந்தவ ரிறத்தலே மெய்மை
புரிந்த நல்லறன் கொள்ளலும் புகழது கொள்ளல்
வரந்த ருந்தகை செயற்கையி னிற்றல்வாழ் வனைத்துஞ்
சுரந்த பேர்களா மண்ணினும் விண்ணினுந் தொடர்ந்தால்.
58(1692)

இறைவழி நடப்போரே வாழ்வின் பயன் பெற்றோர்

வேழ மொத்தவர் வெம்புலி யொத்தவர் வீரத்
தாழ முற்றவ ரனைவரு மதன்பய னில்லார்
சூழ மொய்த்திடும் வல்லவன் வழிதொடர்ந் தவர்கள்
வாழ வுற்றவ ரனைத்தையு முடையவர் மதித்தால். 59(1693)

பெற்றோர் சொற்கேட்டு நடப்பதினும் பேறு வேறுண்டோ?

தொகுத்த பல்லுயிர் வழியொடுந் தொழுமலை நீர்போற்
பகுத்தி டாதவன் றன்னிட மொழுகலின் பான்மை
வகுத்தி டாநல னொடுவருங் குரவர்கள் மலர்த்தா
ளகத்தி ருத்துத லன்றிமற் றுண்டுவே றரிதே. 60(1694)

பெற்றோர்க்கிணங்கி நடப்போருக்கு புன்மையனைத்தும் நீங்கும்

வன்மை நீங்குமெய் யுறுபிணி நீங்கும்வஞ் சகத்தின்
புன்மை நீங்குநிந் தாக்கமு நீங்குமப் புறத்துத்
துன்மை நீங்குமுட் டிடுக்கமு நீங்குமே துதித்து
நன்மை நீங்கிலா திருவர்சொன் னடைநடந் தவர்க்கே.
61(1695)

மாறு செய்வோருக்கு நன்மையனைத்தும் மாறும்

வேத மாறுநல் வினைபல மாறுமெய் யுளத்தின்
போத மாறுமவ் வின்பமு மாறும்புண் ணியத்தின்
பாத மாறும்வல் லவனருண் மாறும் பண்புடைய
நீத மாறிலா திருவர்சொன் னிலைமறுத் தவர்க்கே. 62(1696)

உயிர்போயினும் தந்தை சொல்லுக்கிணங்கி நடத்தலே சிறப்பு

ஆக்க நீங்கினு மகவின்று நீங்கினு மாக்கை
யூக்க நீங்கினு முறுமுறை நீங்கினு முயிரின்
வீக்க நீங்கினு நீங்கும்நண் புடன்வியந் தளித்தத்
தேக்க நீங்கிலா தெந்தைசொற் போற்றுதல் சிறப்பே.
63(1697)



வல்ல இறைவனுக்கு வழிபட்டு நிற்கும் எந்தையின்
செயலுக்கு இணங்குவதினும் சிறந்த கைமாறுண்டோ?

அளிக்கு வல்லவன் றனக்கவர் வழிகொண்ட வியல்பாற்
களிக்கு மேன்மையி னியானொரு சிறியவன் கருத்திற்
றெளிக்கு மன்பினாற் பெறுபல னாலவை சேர்ப்பான்
விளிக்கு மெய்மையங் கருணைக்கும் வேறுமா றுண்டோ.
64(1698)

என் தந்தை வழியே என்வழி என்று இசுமாயீல் உரைப்ப
இபுலீசு, நபியிடம் விரைந்தான்

எந்தை யார்வழி யென்வழி யென்றனர் வரிசை
யுந்து நாயகர்க் கஞ்சியே யோடினன் கொடியோ
னந்த மேயவக் கோலத்தி னணியொழுக் குடனே
முந்தி நன்னபி யவரிட முடுகின னன்றே. 65(1699)

நீர் கண்ட கனவு பொய்யானது, மகனுயிர் போக்கல் தவறு

திருந்து நேர்மையி னாண்டகைஇ யிச்செயல் என்னைப்
பொருந்து நுங்கன விடத்தரு மகனுயிர் பொன்ற
வருந்துங் காரியத் தாக்கென வழங்கிய துணர்வீ
ரருந்து முள்ளத்தின் வியந்தர மடர்தர வென்றான். 66(1700)

கனவில் கண்டதை நிறைவேற்றாதீர் என்றவன் சொல்ல
இபுலீசு அவன் என்றுணர்ந்து சீற்றமுறுதல்

புரியு மிச்செயல் பொய்ச்செயல் புகழ்தருங் கனவி
லுரிய நல்லுணர் வல்லுணர் வென்றலு முடையோ
னரிய பேரின்ப வாற்றிடை யழகுறு நடையார்
தெரியும் வஞ்சக னிவனென வளர்ந்தது சீற்றம். 67(1701)

எம் மூதாதை ஆதம் ஹவ்வாவைக் கலைத்தவனே
என்முன் நில்லாதே போ எனல்

மன்னி நின்றமூ தாதையை மனநிலை பிசகப்
பன்னி நின்றதா லப்பதி யிழந்தனை படுவா
முன்னி னின்றிவ ணெத்தொழில் முயற்சியே கொண்டா
யென்னி னின்றிடா தேகென வுறுக்கின ரிறசூல். 68(1702)

வல்ல இறைவனுக்கு வழிப்பட்டோரிடம் உனக்கென்ன
வேலை போ எனலும் வெருண்டோடினான்

வரிசை நாயகன் பணிவிடை கொண்டவன் வழியே
புரிசை நாடிய பேர்களி னிடத்துனக் கென்னை
யெரிசி னத்தினாய் மாறுறு மிதயத்தா யேகென்
றரச ராக்கிரத் துறுக்கின ரஞ்சியோ டினனே. 69(1703)

ஜம்றத்துல் அகபாத் தலம் சென்றடைதல்

கருத்தி னுள்ளகம் பொருத்திய பாங்கினர் களித்துத்
திருந்து நல்லறி வுறுத்திய திருமகன் றொடரப்
பெருத்த மேம்புகழ் பின்னிய ஜம்றத்து லகபாக்
குருத்த மெய்த்தலம் புகுந்தனர் கொண்டலி னபியே.
70(1704)

அங்கும் இபுலீசின் தோற்றங்கண்டு ஏழு தடவை
கல்லெடுத்தெறிந்தபின் அவன் அகன்றான்

அத்த லத்தினிற் றோற்றலு மாண்டகை முன்னர்
பொய்த் தலத்துறும் வஞ்சகன் புறப்படக் கண்டார்
கைத்த லத்தொரு கல்லெடுத் தெறிந்தனர் கனன்று
சித்த முற்றவன் வற்பொடுஞ் சென்றிடா நின்றான். 71(1705)

மறுத்து மற்றொரு கல்லெடுத் தெறிந்தனர் வஞ்சன்
பொறுத்து முற்படப் பிரிகிலான் போகிலான் போவான்
கறுத்து ருத்தியிவ் வாறெழு கல்லெறி காண
வொறுத்த கன்றனன் பாதக மகன்றிடா வுள்ளான்.
72(1706)

ஜம்றத்துல் உஸ்தாத் தலம் அடைய அங்கும் அவன் எதிர்ப்படல்

கவலை நீங்கிய கான்முளைத் தொடர்தருங் கருணை
நிவரும் நாயகர் போம்பொழு துயர்புகழ் நிறைந்த
தவநி தந்தரு மானந்த ஜம்றத்து லுஸ்தாப்
பவம றுந்தலத் தன்னவன் கண்ணெதிர்ப் பட்டான்.
73(1707)

கல்லெறிய மறைந்தவன் மீண்டும் ஜம்றத்துல்
குபுறாத் தலத்தில் காணப்படல்

கண்ட போதினிற் சினத்தொடுங் கல்லின முன்போன்
மீண்டு நாயகர் வீறொடு மெறிதலு மறைந்து
கொண்ட கத்திடை கடுப்பொடுஞ் ஜம்றத்துல் குபுறா
மண்டு நற்றலத் தருகினில் வஞ்சகன் முளைத்தான். 74(1708)

மூன்றாம் இடத்திலும் கல்லெறிய இபுலீசு தோற்று ஓடுதல்

தோற்றும் பாதகன் மனமது துணுக்குற முன்போ
லாற்ற வன்கலை யெடுத்தழன் றெறிந்தன ரப்பாற்
றேற்ற னம்முரைக் கிடமின்றென் றுள்ளகந் திடுக்குற்
றேற்ற வஞ்சமோ டோடினன் புரையிபு லீசே. 75(1709)



வானவர் பார்த்துப் புகழ மினா எனும் தலத்தில் தபீறு
மலையருகில் சென்றனர்

பின்னர் வானவர் பெரும்புகழ் பேணவும் பிரியா
நன்ன யந்தரு மகவொடு நாயகர் தவங்க
டுன்னு கின்றமி னாவெனு மிடத்தருந் துதிசே
ரின்ன லீங்குத பீறெனு மிரும்பரு குற்றார். 76(1710)

மாதவத்தினரின் மேன்மை பகர்தர்க்கரிது

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

உரவி லங்கெனும் பூதங்கள் வேதனை
யொன்றுபட் டுடன்மீதிற்
சரவி லங்கெனத் தீவினைப் பாவினைத்
தான்செல லூன்செல்லா
வரவி லங்கினின் மாதவ மேதவ
வழிகொளு மெழிலோர்கள்
பரவி லங்கலின் மேன்மையின் பான்மையைப்
பகருவ தரிதம்மா 77(1711)

நபியின் தியாகச் செயல் காண வானவர் குழுமினர்

வடிவ மேபல கொண்டவர் கண்டவ
மதிக்கரும் விதத்தாய
நெடிய வானவ ரணியணி நிரைநிரை
நிகழ்தவ மதுகாண்பா
னடியி டாதுநின் றெழில்புக ழணிதரு
மருந்தொனி மாறாத
குடில மேதொடு சிகரியி னகமது
கொள்கையென் னென்றறைகும். 78(1712)

நடக்கப் போவதையறியாப் புள்ளினம் அவ்விருவர் அழகு
கண்டு சோபனம் இசைத்தன

செறிந்த பன்மரப் பஞ்சரப் புஞ்சம
துறைமணி சிறைபுட்க
ளறிந்தி டாதிவை யருநபி யிருவரி
ளழகுகண் டுளத்தூடு
நிறைந்த வானந்த வுவகையி னுடலு
நிலைதர மிசைபாடிப்
ப்றந்து பாருளர்க் கினிதொடு சோபனம்
பகர்வது கோடுலவும். 79(1713)

### அந்நாயகர் வரவின் பொருட்டால் பகைத்திடும் விலங்கினம் ஒன்றுபட்டன

வன்ம மிஞ்சிய புலியின மானின
    மனத்தொடு மினமொத்துத்
தன்மை யாயின பல்வழி மறுகினர்
    தருமுறை குருவாலே
பன்மை யாயவை யொருமையிற் புகுந்தெனப்
    பலனரு ணவநீத
நன்மை யாகிய நாயக ரவணிட
    நண்ணிய பொருட்டன்றே. 80(1714)

### வண்டுகள் இசைபாடின

குளிரு லாம்புய லடர்தருங் கோட்டினிற்
    கொத்துறு மலர்மீதி
னளியு லாவிசை முழங்குவ வாதியி
    னருளணிச் சமுகத்திற்
றெளிவு லாவு கபீபு முகம்மதின்
    றிருமணி நலத்தாலே
களியு லாவின ரென்றன போன்றன
    கதிநபி யிசுமாயீல் 81(1715)

### தபீறு மலையடைந்தபோது மகனிடம் தந்தை உரைத்தது

அளவி டாநெடுந் தகைய தபீறெனும்
    மணிவரை யருகாய
விளவ லாகிய திருநபி யினிதெழி
    லிசைமதி முகநோக்கிக்
களவி லாதெவர் பூவினிற் களிப்பொடு
    மதித்திடக் கதிபெற்றி
னுளவ தாகிய வொருமொழி முதியவ
    ரினையன வுரைசெய்வார். 82(1716)

### நபி இபுறாகீம் கண்ட கனவை மகனிடம் கூறி கருத்து கேட்டல்

செய்ய நாடொறு மருந்தவத் தென்பலன்
    சிறப்பொடும் பெறுபேறே
யுய்யு நேர்மையி னுன்மணிக் கழுத்தினை
    யறுத்திடத் திடத்தோடு
மெய்ய தாங்கன வதுவளந் தரமிகக்
    கண்டனன் விளக்கோடு
மைய காரணக் கருத்துற லென்னென
    வன்பொடு முரைமென்றார். 83(1717)



### இறைவன் கட்டளையை அப்படியே நிறைவேற்றுவதே கடமை

கருணை யாலருந் தவத்தொடு மருமையி
    னளித்திடுங் கதியெந்தாய்
வருண மேதொன்று மறிவதற் கரியவன்
    புவியிடை வாழ்வோர்கள்
தருண மேயென மகிழ்தரப் பணித்திடுந்
    தகுதியிற் சறுகாது
தெருண யால்புரிந் திடலது நல்லுளச்
    சிறப்பினின் வியப்பாமால். 84(1718)

### என்னைப் பொறுமையாளனாய்க் காண்பீர்கள்

அரிதி னீவிர்செய் முறையினிக் களித்தவ
    னாயிடி னளவில்லாப்
பெரிது மெய்ம்மையின் வல்லவ னன்பொடு
    பிரியத்தி னாடானா
லுரிய மாதவ ரியாவரு முரைதரப்
    பொறுமையி னுயர்மேன்மைத்
தெரியு மன்னவர் முதன்மையி னுணர்குவிர்
    சிறப்பொடு மெனைமேற்றே. 85(1719)

### அதுகேட்டு வியந்தனர் தந்தை

என்று மாமதி கருத்தொடுங் கான்முளை
    யிசைத்தவக் குணமுற்றுக்
கொன்று செய்வது காரியந் தனக்குமிக்
    குளிர்மனங் களியோடு
நன்று கூறிட வித்தகை யினிற்பொறை
    நல்கிய பொறையாதி
வென்றி யாரள விடற்குரி யாரென
    வள்ளலும் வியந்தாரால். 86(1720)

### இதனை நம் வீட்டிலேயே சொல்லியிருந்தால் அன்னையிடம் மன்னிப்புக் கேட்டு மகிழ்வுடன் வந்திருப்பேன்

என்னை யீன்றரு ளருங்குண வையவிவ்
    வுரைதனை யிவையென்ன
முன்னை யாமுறு மகத்தினி லிசைத்திடின்
    முகமதி நனிநோக்கி

திருமணி மாலை

யன்னை யாரிடஞ் செய்பிழை பொறப்பெறு
மன்றியும் பொருணீக்கும்
பின்னை நன்றியிற் புறப்படு மியாமஃ
தினும்பெரி திஃதாமே. 87(1721)

எனக்குத் தோன்றும் சில எண்ணங்களை நான் சொல்லக் கேளுங்கள்

அகத்தி னன்புறு மருந்தவ முயற்சியி
னணிநிலை வழியெந்தாய்
ஜகத்தி னுங்கடந் திருப்பதம் பிரிதருந்
தருணமுற் றிடலாலே
மிகுத்த வன்பொடு நன்குறத் தெரிந்திட
வென்னுள மிசைநாட்டந்
தொகுத்த துண்டுசிற் சிலவுரைத் திடும்வரை
சுகவருள் செயல்வேண்டும். 88(1722)

கேளுங்கள் தந்தையே, பெற்ற அன்னைக்கு நன்றி செய்ய இயலா என் சலாமை அவருக்குக் கூறுங்கள்

என்ன வேண்டிநன் குணர்வுளத் திறைநபி
யெழின்மதி முகத்தோடு
மன்னும் வேண்டுத லருணல விழிகளு
மறையது கனிவாயுஞ்
சொன்ன மேனியின் வடிவமுந் துணைக்கர
நீட்சியுந் தொடருள்ளு
மன்ன மேன்மையுந் தெரிசனத் தாக்கிப்பி
னணிமணி யுரைசெய்யும். 89(1723)

ஓதன் மிக்கினி லருந்தவ மிக்கிடத்
துவப்பொடுந் தருமெந்தாய்
மாதம் பத்தினுஞ் சுமந்தவக் கொடைப்பயன்
வழங்கில னலனின்னுங்
காதல் பற்றுள ரடவியி லென்பொருட்
டடைந்தனர் களிகூரப்
பாதம் பற்றின னென்பணி விடையின்
சலாம்பகர்ந் திடல்வேண்டும். 90(1724)

மேலங்கியில் இரத்தத்துளி கண்டால் தாய் கதறுவார் எனவே அதை அகற்றிடுக

மெய்யி ருந்தெழுஞ் சோரியி னுண்டுளி
விரைதருந் தருணத்திற்
செய்யி ருந்தவெண் கவசத்தி னிடையுறிற்
றிருவனை கண்டாரே



லைய கோமக வெனத்திடுக் குறுமுள
மாதலி னென்மேனி
யுய்ய வேமுன மரிதொடும் வாங்கிட
லுவந்தனன் றருமெந்தாய். 91(1725)

கைகால்களை நன்கு பிணித்து விடுங்கள்; அவை துடித்தால் இறையாணைக்குப் பணியாதவனாவேன்

செய்ய பூநிறப் பாதமுங் கரங்களுந்
திறக்கயி றதுகொண்டு
தொய்யி லாதுநன் கிறுகுற வரிந்திடு
முடலது துடியாமன்
மெய்ய தேபத றிடிலது நெறியன்று
மேலவன் பணிபேண
துய்ய வேறின்றி மாறின னாகுமவ்
வினையொழித் திடல்வேண்டும் 92(1726)

என்முகம் திரும்பியிருக்கட்டும் என் கண்களை நோக்கின் தங்களுறுதி குலைந்திடலாம்

நிலத்தி டத்தினி லொருபுறஞ் சாய்தர
நிவர்முக மதுதோற்ற
நலத்தி டத்தொடுங் கிடத்தி னுங்கருணைய
நயனங்கள் காணாது
வலத்தி டத்தொடு மானனை மாறிடல்
வேண்டுமுன் மதியோடுங்
குலத்தி டத்துள வன்புறுங் கருவிகைக்
கொண்டிட லரிதெந்தாய். 93(1727)

எனையொத்த சிறுவரைக் காணின் என் நினைவு தோன்றி வருத்தாமல் காத்துக் கொள்க

கருமை கொண்டெழு மழகிய சிறுவர்கள்
கண்ணெதிர் கொண்டாரே.
வருமை யால்வளர்த் துவந்திடு மன்பொடு
மடர்தருந் தொழிறானும்
பெருமை யாயுளம் பல்பல நினைவொடும்
பேரருள் சுரந்தோடு
மிருமை யிரிவை பாரன்மி னனையகங்
கொண்டுறு மியல்பானே. 94(1728)

பதறுவதால் நம்மிருவரின் நற்செயலும் பாழ்படாதிருக்க ஒரே முயற்சியில் முடிய கருவியைக் கூராக்குக

நனியி னீவிர்செய் முறைமையு நலனுறு
மியான்செயு நயப்பேறு
மினியி னேடிறை பொருந்துதற் கியல்பொடு
மெழிலுட லதிராமற்

பனியின் மீதிடுங் கதிரென வசியுறுங்
    கருவியின் பதறின்றித்
தனியி னற்கழுத் தொருவிசை யழுந்தலிற்
    றவநிலை பெறல்வேண்டும். 95(1729)

உங்கள் உடையை ஒதுக்கி, சலனம் ஏற்படாமுனம்
நிறைவேற்றிடுக

கனத்தி னேர்தருந் திருக்கரக் கருவியைக்
    கனிவுறக் கூராக
மனத்தி னேரொடுந் தேய்த்தழ கணிதுகில்
    வசத்தொடு மொருவாநின்
றினத்தினி யாதொன்று முளத்திடை வருமுன
    மிம்முறை செய்கென்ன
வினித்த மாமொழி யெம்மருங் கனின்மணி
    யிசைத்ததிவ் வுலகோங்க. 96(1730)

இறைவன் பணித்ததைச் செய்திட இருவரின் இசைவையும்
அமரர்கள் கண்டு வியத்தல்

வண்ண மோங்கிய நாயகர் மனத்திடை
    யயர்வின்றி வழியோடுந்
திண்ண மோங்கிய பேருல கிரங்கிடத்
    திருமணி வாய்விள்ளும்
பண்ண மோங்கிய தகுதியு மிறையவன்
    பணித்திடும் பணிகொண்ட
வண்ண லோங்குகைக் கருவியின் மனநிலை
    கண்டன ரமரோர்கள் 97(1731)

ஆகாயத்திலிருந்து தொனி கேட்டல்

உள்ள மீதினி லன்பொடு மிஃதிய
    லென்னென வுரையாடா
வெள்ள லின்றிமெய்ப் புதுமையின மரர்க
    ளிருக்கின்ற பெருவான
நள்ளி டத்திருந் தெழுந்தது கருணையி
    னொருதொனி நவநீதந்
தெள்ளுஞ் சிந்தையி னுண்டகை கேண்மென
    வகைதரத் தெரிகிற்கும். 98(1732)



நற்பண்புகள் பல பெற்று உயர்ந்துள்ள நீர் கொலைத்
தொழில் செயத் துணிந்தது ஏனோ?

செய்த வெந்தொழி ருங்கிய புவியினுஞ்
    செறிதரும் பொறையுள்ளார்
பொய்த ருங்கொடும் பவநினைத் தாகுல
    நிதநிதம் புனைகின்றோர்
மெய்த ருந்தகை யிறையவன் வழியிடை
    விரைதரும் பலனுரென்
றுய்த ரும்பொருள் பல்லபற் புகழணிந்
    துயர்ந்தவ ரன்றோநீர். 99(1733)

தகையு ளார்வர நிலைபல வுடையவர்
    தற்குண மற்றோர்பால்
வகையு ளார்பிறர் துனிபடல் தனதென
    மலிதரு மன்புடைய
தொகையு ளாரெனு மிம்மொழி மேன்மையு
    முயர்தரச் சூடியநீர்
நகையு லாஞ்சுடர் கருவிகைச் சூடிய
    நவமது நவமன்னே. 100(1734)

அழகொழுகும் மகன்பால் உமக்கு இரக்கமில்லாது
போனது எப்படி?

அரிய மேன்மையி னும்மக வாகியு
    மழகொழு கெழில்வாயாற்
புரியும் வாசகஞ் செவியொடு முள்ளகம்
    பொங்கிய களிதூங்க
வுரிய நேர்மையுங் கண்டும்நு முளத்திடை
    யெள்ளள வுவப்போடுந்
தெரிய வேதய விரக்கமி லாத்திற
    மென்னெனச் செவியோர்ந்தார். 101(1735)

மலையின் குரலது என நபியுணர்ந்து நான் இறையாணைக்குப்
பணிந்து செயல்படுகிறேன் எனல்

எழுந்த பேரொலி வரையிடத் தெனநபி
    யெழிலொடு மதனோக்கி
யொழிந்தி டாப்புக ழாண்டகை மாண்டகை
    யுடையவ னினிதோடுந்
தொழுந்த ராதர னெனமதித் தளித்திடும்
    பணியிலை துளந்தொட்டுக்
கழிந்தி டாநிலை கொண்டனன் விண்டொடு
    கருமுகின் மலிவிண்டே. 102(1736)

எனைக் குழப்பி இறைமொழி மறுத்தவனுக்க முயலாதே

நின்ற நீயெனக் குளத்திடை மகனிட
    நினைமகிழ் வழியூறத்
துன்று காரண மெழச்செய லெழுந்திடற்
    றுதிதரும் பெருநாய
னன்றி நேர்நெறி மறுத்தவ னாந்தகை
    நவிற்றுத லொழிகென்ன
வென்றி யாம்படி யுரைத்தன ரருவரை
    விரைதரு புயவள்ளல். 103(1737)

உங்கள் உறுதி குலையுமுன் யான் நற்கதிபெற விரைந்து செயல்படுக

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம் [வேறு]

இருபுற மொழியு மோர்ந்து
    மாதவத் திளங்கு மாரர்
வருபுறக் கடியா லெய்தும்
    வன்றிறங் கலையா முன்ன
ரொருபுறத் தேவல் வண்ண
    முவப்பொடுங் கதியா னெய்த
வெருபுறங் கொள்ளா தெந்தாய்
    விரைமியா விரைமி னென்றார். 104(1738)

கரம் கால்களைக் கயிற்றினால் பிணித்தல்

செவியுரை யுணர்ந்து முன்னின்
    செவ்விய தோன்றன் மெய்யி
லவிரொளி போர்வை நீத்து
    மதியென வழகு லாவுங்
குவிதரா மலரி னன்ன
    கொழுங்கர மிரண்டுந் தூய
சவிதரும் வலத்தா ளொன்றிற்
    றாம்பினி னிறுக வீக்கார். 105(1739)

கீழே கிடத்தி இறைநாமம் கூறி கழுத்தையறுத்தனர்

கதிர்தரு மிடது பாகங்
    கணிதர நிலத்தின் மீதிற்
பிதிர்தரச் சாய்த்துத் தள்ளிப்
    பின்னாடி யிடது கையின்
முதிர்மதி தமது செய்ய
    முகமது புறத்து மாறி
யதிர்தரா திறைவ னாமத்
    தருங்கழுத் தறுத்தார் தந்தை. 106(1740)



கத்தி கழுத்தில் அழுந்தாமல் திருகியது

ஆதியி னாமத் தோடு
    மன்பின்றித் தந்தை யென்போர்
காதலன் மிடற்றில் வைத்த
    கருவிய தழுந்தி டாது
தீதிலா தொருவச் செங்கைத்
    திருகலும் பின்னர் வண்மைப்
போதமே கொண்ட வள்ள
    லின்புறப் புகலு மைந்தன். 107(1741)

மகன் சொன்னபடி கத்தியைத் தீட்டிப் பதம் பார்த்தனர் நபி

கையுறுங் கருவி மேன்மை
    வசியுறக் கல்லிற் றேய்த்துச்
செய்யுறு மனத்தி னன்பி
    னுத்திர ளேனுங் கொள்ளா
தையவல் லுரத்தி னோடு
    மறுத்திரென் றுரைப்பக் கேட்டு
மெய்யுளம் பூத்துப் பின்னர்
    விரிவினோர் திண்கற் றேர்ந்தார். 108(1742)

திருமணிக் கரம்வி டாது
    மடிப்பொடுந் தேய்த்துத் தீட்டி
விரிமணிக் கதிரி னங்கி
    மிகுவசி கருவி தன்னை
யொருமணிக் கருங்கல் வைத்து
    வலிதின்றி யுழுக்க முற்றுங்
கருமணிப் பாந்த னாண்ட
    கதிரென வழுந்திற் றன்றே. 109(1743)

இப்போது என்னை நன்கு பிணித்து மீண்டும் அறுங்கள்
என மகன் உரைத்தல்

இத்திறங் கூர்மை பெற்ற
    விருங்கரக் கருவி வள்ளன்
மெய்த்திறந் தெரியா தென்றன்
    மீதுறும் பிணித்த தாம்ப
தெய்த்திடா திறுக்கிப் பின்ன
    ரீர்ந்திடு மகிழ்வி னென்றார்
செய்த்திற மறிந்து பொய்மைச்
    சிய்த்திறங் கொண்ட மைந்தன். 110(1744)

உங்கள் மேலங்கியில் இரத்தம் தெறிக்காதபடி என்
நன்மை குன்றாமல் தொடியிலறுங்கள் எனல்

காலணி கரங்க ளாடிற்
கசிந்தெழுங் குருதி நுங்கண்
மேலணி யாடை துள்ளி
துளித்திடில் வினையே யன்மைப்
பாலணி குறையு மென்றாற்
பாரினிற் புகழுங் குன்று
நூலணி யொதுக்கி வற்பா
ஞொடியினி னீர்க வென்றார். 111(1745)

இறைவன் பக்கம் நாட்டம் செலுத்து என்று கூறி
அறுத்திட மீண்டும் கத்தி பிசகி கை புரண்டது

என்னரு மைந்த வல்லோ
னிடத்துநின் சிந்தை கொண்டு
நன்னய வுறுதி பற்று
நவநித மென்னென் றுய்கே
னென்னவே வியந்து கண்டத்
திடத்தினிற் கருவி நாட்டப்
பின்னரு மழுந்தி டாது
பிசகிய புரண்டு செங்கை. 112(1746)

நடப்பது யாவும் இறைவனாலே என நபி திகைத்து
நிற்க மகன் கூறியது

கருவியே நெகிழ வுள்ளங்
கலங்குறத் திகைத்தி யாவு
மருவியே செயற்கை யோடு
மியற்கையும் வலனு மேற்றுப்
பொருவிய திறைவன் றன்னா
லன்றென்றும் பொருந்தி டாதென்
றிருவினை யற்று நின்ற
வேந்தலோ டுரைக்குந் தோன்றல். 113(1747)

கூர்மையின்மையால் உடல் எரிகிறது விரைவிலரிந்தால்
சுகம் பெறுவேன்

உளத்திடை கோண மெய்மை
யுணர்தரு மெந்தாய் கையின்
வளத்திடை கருவி கூர்மை
வாய்ந்திடா தாலென் றூய
விளத்திட வாக்கை முற்றும்
புண்பட வெரியா நின்ற
களத்திடை வசியி னீர்ந்தாற்
கதிசுகம் பெறுவே னென்றார். 114(1748)



மூன்றும் முறையும் கத்தி புரண்டு வளைந்தது

புலிங்கமே தெறிப்பச் செந்தீப்
புஞ்சமே யென்னத் தேய்த்து
வலங்கொளுங் கருவி மீண்டு
மகன்மணிக் கழுத்தில் வைத்து
நலங்கொளு மிறைவ னுமம்
நாட்டியே யறுப்பப் பின்னும்
வலங்களுங் குன்றச் செங்கை
புரடர மடித்த தன்றே. 115(1749)

ஒரே குத்தாய்க் குத்தி வெற்றியுறச் செய்க எனல்

வண்படு மிடற்றிற் கொள்ளா
வடிதருங் கருவி தன்னாற்
புண்படாக் களத்தின் வன்பாற்
பொருவலி யணைத்துங் கொண்டு
திண்படக் குத்தொன் றாலே
ஜெயம்படச் செய்மி னென்றார்
எண்படுஞ் சிந்தை நன்கி
னிடம்படுந் தோன்ற லன்றே. 116(1750)

மீண்டும் வலிமையெல்லாம் திரட்டிக் கழுத்தில்
குத்தியும் அது இறங்காமல் வளைந்தது

முன்னியன் முறைமூன் றாலே
மூற்றிய சினத்தி னுயன்
றன்னியல் வேண்டுஞ் சிந்தைத்
தகையினால் வலிமேற் கொண்டு
பன்னியன் மிடற்றிற் குத்தப்
பயிலொளி கருவி நில்லா
வன்னியின் வளைத்தா லென்ன
மடங்கின தெடுத்தார் நீண்ட. 117(1751)

சினத்தொடு கத்தியையெறிய அது பாறைக்குள்
புதைந்தது கண்டு நபி திகைத்தனர்

ஈர்ந்தமுப் பாலும் பிற்பா
லெறுழ்வலிக் குத்துங் கொள்ளா
தார்ந்திடுங் கருவி தன்னை
யப்புறத் தெறிந்தார் வன்க
லாழ்ந்திடப் புதைந்து செய்ய
வங்கையிற் கடையே நிற்க
வாழ்ந்தொளிர் சிந்தை வள்ளற்
புதுமையி னுக்கங் கொண்டார். 118(1752)

அமரரும் படைப்பினமும் வாழ்த்த அசரீரி ஒலி கேட்டல்

மீதவத் தமரர் வாழ்த்த
மேதினி யுயிர்கள் வாழ்த்த
மாதவ மணிக பீபு
முகம்மது மகிழ்ந்து வாழ்த்தச்
சீதமெய்க் கருணை வல்லோன்
றிறந்தரு முண்மை கண்டு
போதமுற் றுவந்த போதோர்
புகழ்நபி யோதை கேட்டார். 119(1753)

நீர் உம் கனவுக் காட்சியை மெய்யாக்கினீர், மைந்தனுக்குப் பகரமாக இவ்வாட்டை அறுத்திடும்

வண்மையுந் தகையுங் கொண்ட
வரிசையி னபியே முன்ன
ரண்மையிற் கனவிற் கண்ட
பராயவவ் வார்த்தை நன்கி
னுண்மையி னியற்றி னீரிவ்
வுயர்தருந் தகரம் மைந்தன்
றிண்மையின் கைமா றுகத்
திடத்தறுத் திடுதி ரென்றும். 120(1754)

உமக்கும் உம் சந்ததி நபி முகம்மதுக்கும் உமைச் சேர்ந்தோர்க்கும் இந்நாள் பெருநாளாகும்

நேரிடத் தெய்து மன்ன
நெய்தரு மொருத்த றன்னைச்
சீரொடு மீரு மெய்மைத்
திறலணி நுமக்கும் நும்பாற்
பேரொடுந் தோற்றும் பின்னர்
பெருநபி முகம்ம துக்கு
மேரொடுஞ் சேர்ந்தோர்க் கெல்லா
மிம்முறை பெருநா ளாமே. 121(1755)

அனைத்துத் தீமைகளையும் நீக்கும் நன்னாளிதுவாகும் என்றது அவ்வொலி

மெய்வருந் துன்ப நீங்கும்
விரிந்ததீ வினைக ணீங்கும்
பொய்வரு மார்க்க நீங்கும்
புன்றொழிற் பலவு நீங்கு
முய்வருந் தகுதி யீதே
யுயர்வழி பாடு மீதென்
றைவருங் கார ணத்தி
னரும்பொரு ளுணர்ந்தா ரன்றே. 122(1756)



அல்லாகு அக்குபறு என நபி மும்முறையோத மகனும் சிபுறியீலும் பூர்த்தி செய்தல்

அக்கண நபிஅல் லாகு
அக்குபறென் றொருமூன் றோத
இக்கணஞ் சொல்ல லாயி
லாகஇல் லல்லாஃ ஒல்லாகு
அக்பறென் றன்பிற் றோன்ற
லறையவே பின்அல் லாகு
அக்குபர்ஓ லில்லா இல்கம்
தென்றன ரமரர் கோமான். 123(1757)

அதுவே பெருநாட்களில் முழங்கப்படுவதாயிற்று

அப்பொழு தரிய மூவ
ரறைந்திடும் வாய்மை தானே
யெப்பொழு துலவுஞ் சோதி
யெழினபி யும்மத் தோர்கட்
கிப்பொழு துயர்ந்த நாட்க
ளுரைப்பவே யியல்பி னின்ற
முப்பொழு தென்ப மெய்மை
மூதுரை யறிஞ ரன்றே. 124(1758)

இறைநாமத்தால் என்னை அறுங்கள் எனக் கூறி ஆடு இறங்கி வரல்

வன்றிறல் மருப்பும் பின்னு
மயிரொடு கொழுத் திரத்த
மன்றிறத் தகரு முச்ச
மலையினின் றிறைவ னுமத்
தென்றனை யறுப்பா னேத்தத்
தியல்பின னென்னப் போற்றி
முன்றனி யிறங்கக் கண்டார்
முதிர்புகழ் நயினு ரன்றே. 125(1759)

அதைப் பற்றிக் கொண்டு 'இறைவனை எவ்வாறு புகழ்வோம்' எனல்

வந்தவத் தகரைக் கொண்டு
வரிசையி னுதர் மெய்மைச்
சிந்தையின் மகிழ்ந்து மைந்தன்
மேற்சென்ற கருவி நீக்கி
யிந்தவா றியற்று மேன்மை
யிறையவன் கருணைத் தன்மை
யெந்தவா றேத்த லென்ன
வின்பொடும் புகழ்ந்தா ரன்றே. 126(1760)

மகனைப் பிணைத்திருந்த கயிறு அறுபட்டு வடுவின்றி திற்கக் கண்டு யார் செய்ததென வினவல்

திருநபி யரிய மைந்தன்
சிக்குற விறுக்கும் பாச
மொருவிடச் செய்வான் ஞாங்க
ருவப்பொடு நோக்க முன்னர்
மருவிய பிணிப்பு நீங்கி
வடுவின்றி விளங்கக் கண்டு
வருபய னெவரி னென்றார்
வண்மையே சிறந்த கோமான். 127(1761)

ஆடு கொணர்ந்த அமரர் கயிறு தெறிக்கச் செய்தார், மேலங்கியைத் தருக எனல்

இவ்விடத் திவணி னுக்கத்
தித்தகர் கொணர்ந்த மேலோர்
செவ்விடத் தென்மேற் கட்டுந்
தாம்பது தெறிக்கச் செய்தார்
குவ்விடத் துயர்ந்த சீர்த்திக்
கொற்றவன் கருணை யுள்ளீர்
மெய்யிடக் கவச நன்கின்
வியப்புற வேண்டு மென்றார். 128(1762)

மேலங்கியைப் பெற்ற மகன் சுஜுது செய்தல்

அகங்களித் தரிய வள்ள
லணிநிலாக் கவசந் தன்னை
மகன்களித் துவப்பச் சேர்த்தார்
மைந்தனு முள்ளம் பூத்துக்
ககன்பல வனைத்துங் காக்குங்
காவலன் றன்னை யுன்னிச்
சுகந்தர மேன்மை யோடு
சுஜுதுசெய் தேத்தி னரால். 129(1763)

மலை நின்றிறங்கி குறிக்கப்பட்ட இடத்தில் இறைநாமங் கூறி ஆட்டை அறுத்தனர்

பின்னரத் தகர்கைக் கொண்டு
பிறங்கற்சார் விடுத்தப் பாலி
னின்னதற் கியன்ற மேன்மை
யிருந்தலங் கொணர்ந்து வல்லோன்
றன்னரு நாமத் தோடுந்
தகையொடு மறுத்து நின்றார்
சொன்னலங் கொண்ட மெய்மைத்
தூய்நபி யிபுறு கீமே. 130(1764)



வான் நின்று செந்தீ இறங்கி தலைதவிர்த்து உடலை உண்டது

கண்டல நோக்க மெய்தாக்
ககனிடத் தொருசெந் தீயே
மண்டலம் புகையி லாது
வந்தணி யொருத்த றன்னைத்
திண்டலை யன்றி முற்றுந்
தின்றபின் னிவர்க ளுள்ளங்
கொண்டபே ரின்பத் தோடுங்
குளிர்ந்தன ருள்ள மன்றே. 131(1765)

ஆட்டுத் தலையுடன் வீடு திரும்பி மனைவியிடம் நடந்தது கூற அவர் இறைவனைப் புகழ்தல்

கைக்கொண்ட சிரத்தி னோடுங்
கடிமனை புக்கி நன்கின்
மெய்க்கொண்ட மனைவிக் கின்ன
விளங்குகா ரணங்க ளெல்லாஞ்
செய்க்கொண்ட வள்ளல் சொற்றார்
தோன்றலின் மகிழ்ந்து சீர்த்தி
மெய்க்கின்ற பெருமை யீந்த
மேலவற் புகழ்ந்தா ரன்றே. 132(1766)

மனைவியையும் மகனையும் விட்டு உறுதுன் நகர் திரும்புதல்

வள்ளலு மகனுந் தாயு
மதித்திடா மேன்மை யாலே
யுள்ளமு முடலும் பூப்ப
வுற்றுப்பி னவ்வூர் தங்குந்
தள்ளையுஞ் சுதனும் விட்டு
நண்பகற் சாய்ந்த பின்னர்
பள்ளநீர் வனஞ்சூழ் சாமிற்
பதியுறு துனினில் வந்தார். 133(1767)

அதன் பின் மக்காவுக்கு வராமலே இருந்தனர்

நீதிசேர் நயினர் முன்ன
நிலைகொளுந் தேவி யின்ப
நாதமே விளங்கு மில்ல
நயத்தொடு மிவணி னெய்தா
தேதமொன் றின்றி வாழ்ந்தா
ரிசைவிரிந் தொழுகுஞ் செந்தேன்
போதணி மாலை வண்மைப்
புரவலன் மகிமை சொல்வாம். 134(1768)

இசுமாயில் நபியைக் குறுபான் செய்த படல முற்றிற்று.
ஆகப் படலம் 29-க்கு கூடிய திருவிருத்தம் 1768.

# 30. இசுமாயீல் நபி வதுவை வேட்டுப் படலம்

### மக்காவில் வாழ்ந்த இசுமாயீல் நபி வாலிபராதல்

கலிவிருத்தம்

சீரணி பெரும்புகழ் சிறந்த நன்னபி
பேரணி வேண்டலின் பெற்றி யாலுயர்
நேரணி பெருங்குடி நிறைகொண் மக்கநல்
லூரணி மைந்தரு மனையு முற்றனர். 1(1769)

மேதகை யறிவொடும் விளக்க நல்லுணர்
வாதகை யொழுக்கமு மரிய வல்லவன்
மீதகை யெம்மிறை யொளிவு மேலரு
ளுதரும் வாலிப நயங்கொண் டாரரோ. 2(1770)

### வீராகவும் வேட்டைப் பிரியராகவும் ஆதல்

காரணக் குரிசிலார் கதித்த வீரியப்
பூரணத் தாக்கமே பூண்டு தந்துணை
யாரணித் துறுங்குடி யவர்கண் மொய்ப்பக்கான்
சாரணி வேட்டையின் செருக்குத் தாங்கினர். 3(1771)

தண்புய லுருமொடு தவழும் பூந்துணர்
வண்பொழில் வரைப்புற மருங்கின் வல்விலங்
கெண்பட விரிதர நூறி யின்பொடு
முன்பொரு ளொடுமகத் துறுவர் வீரியோர். 4(1772)

வெஞ்சின வெழிறரும் வேற்கை வள்ளலார்
மஞ்சுலா வனத்தடர் மாவி னூனுகர்ந்
தஞ்சொலா ரனையுரை யகத்தின் மாட்சியாற்
றஞ்செயல் வேட்டினே தகைய நின்றனர். 5(1773)

### அன்னையாரின் இறுதி நாள் அடுத்தது; சொர்க்கம் புகுந்தனர்

பயன்றரும் பார்த்திபர் பன்மை நல்லுற
வயந்தருந் தருக்கொடும் வருமக் காலையிற்
சயந்தரு மரிதுணர் தாயர்க் காக்கிய
நயந்தரு நாள்வரை நண்ணிற் றுமரோ. 6(1774)

கன்மலை திரியினுங் கதிர்கண் மாறினு
முண்மனந் திரிதரா வூக்க நல்லறி
வெண்மதி நாயகி யிசைகொ ளாநிலைப்
பொன்மனை புகுந்தனர் யாரும் பூப்பவே. 7(1775)

### துயரக் கடலுள் ஆழ்ந்தனர் இசுமாயீல், அன்னையார் நல்லடக்கம் செய்யப்பட்டார்

தான்வருந் தகையதோர் தக்க வாயினே
மான்விழி போதவு மனத்தி னூக்கத்தார்
வான்வருங் கதிரரி வன்பற் செங்கணீ
னூனுக ரரவுண்ட தொத்துத் தேம்பினார். 8(1776)

மெய்முறை நாயகி விரும்பு மைந்தர்தாஞ்
செய்முறை யடக்கமுஞ் செய்தி யாவர்க்குங்
கைமுறை கொடுத்தபின் கண்ட தன்மையின்
மைமுறை நீங்கினார் வரிசை கொள்ளவே. 9(1777)

### தந்தை தொலைவில் சாமில் வாழ தாயை இழந்த தனயன் நலிவுற்றார்

பூமல ரணிவனம் புடையின் சாமினின்
மாமணி யையரு மக்க நன்னகர்
காமரி னன்னையு மறையக் காளையர்
நாமணி வேலினார் நலிவு ளெய்தினார். 10(1778)

கருங்கலை யொருபுறங் காண்கி லாதுறும்
பெரும்பிணை யிறந்திடப் பிரிந்த கன்றென
மருந்தவத் தாகுல வாரி மூழ்கினா
ரருந்தவ மேனல மலருஞ் சிந்தையார். 11(1779)

### கவலை நீங்க அவருக்கொரு பெண்மணி மணஞ்செய்து வைக்கப்படுதல்

கருத்துறுங் கவலைக ணீப்ப மாநிலம்
பொருத்துமுற் குடிமையார் புதிய மென்கொடி
யொருத்திநல் லன்பொடு முணர்ந்து மாமண
மருத்தினர் சிறப்பொடு மரசர்க் கங்ஙனே. 12(1780)

### கணவனும் மனைவியும் அன்பொடு வாழ்ந்தனர்

செழுமணி மலர்ப்பொழி லனைய சீர்மைய
வெழுநெறி கூந்தனு மின்சொன் மாமறை
முழுதுணர் வள்ளலு முற்று மன்பொடும்
பொழில்புனை மக்கமா புரத்து வாழ்ந்தனர். 13(1781)

### நபி இசுமாயீல் மீண்டும் வேட்டையில் ஈடுபடுதல்

தாவிய பெரும்புகழ் தவத்தி னாயகர்
கோவியன் முறைகொடு கொற்ற முற்றவே
பாவிய வேட்டையின் பயிற்சி மிக்கினிற்
றேவியல் புயர்தரச் சிறப்பி னின்றனர். 14(1782)

### மனைவி மரணம் பற்றி இபுருகீம் நபி அறிதல்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

சிறப்பொடும் பன்னா ளோகாச் சீரணி வினவி யன்பாய்
மறப்பிலா திருக்குங் கால மானனார் வரிசை தாங்கி
யிறப்பெனு மதுர மாந்தி யிருங்கதி யடைந்தா ரென்ன
நிறப்பெரும் புரிசை சாமி னிருபர்கோ னுணரப் பட்டார்.
15(1783)

### சென்று மகனைப் பார்க்கும் ஆசையை மனைவி சாறாவிடம் கூறல்

தன்னுரை மறாது வாஞ்சைத் தழையொடு மின்ப மாறா
தின்னுரை பிடியி னீங்கு மெறும்நபி களிறு போன்று
மன்னுரை கொண்ட வள்ளன் மனத்துயர் கண்டு தேறி
நன்னிலை மகன்பாற் பற்று நாட்டமுண் மவுனி போன்றார்.
16(1784)

ஒருபுறத் தெழுந்த காத லொருபுறத் துயர்ந்த தன்னு
லிருபுறம் வழிந்த தென்ன விருகண்ணீர் மணிகண் மாற்றித்
திருபுற மைந்தற் காண்பான் சிந்தைகொண் டெழிலி
யொவ்வா
மருபுறக் கூந்த றன்பான் மாதவ ருணரச் செய்தார்.
17(1785)

### நலமே சென்று மீள்க என சாறா கூறல்

மனமிகக் கரைந்து வாடி மறுகிநுங் கருத்திற் கொண்ட
துனியது சிதற வேண்டுஞ் சுகத்தொடு மளவி லாத
நனிநகர் போக மீள்க நவம்பெறு மெனது பான்மை
யினிதகை யுயிரி னன்னீ ரெனவெழின் மயிலுஞ் சொற்றார்.
18(1786)

### முன்போல் சிபுறியீல் சுவனப் பரி கொண்டு வரல்

தேவிய ருரையுங் கொண்டு சிந்தனை யோடு முற்ற
நாவலர் நபிமுன் வண்மை நலங்கிளர் சுவன நாட்டுத்
தூவியந் தோகை யாடற் றெருதுவிசைப் பரியு மாகத்
தேவர்கோன் கடிதி னுற்றுத் தேற்றத்தி னளித்தா ரன்றே.
19(1787)



### விரைவில் மைந்தனில்லம் சேர்ந்தனர்

உன்னுமுன் மனத்தை யுன்னு முன்னியி லேறி வன்னப்
பொன்னணி நேர்ச்சி யன்ன புரம்விடுத் தடர்கா னெல்லாம்
பின்னிட மண்ணில் வண்ணப் புண்ணியம் பிறங்கு மூதூர்
தன்னிடை மைந்த னில்ல மணித்தலைக் கடையி னுற்றார்.
20(1788)

### வீட்டில் கண்ட மாதிடம் உன் கணவன் எங்கே என்றனர்

வேதமு மறிவும் பூத்து விளங்கிய சிந்தை வள்ள
லாதரம் பெருக நன்கி னகத்தின்மீ திருந்த மாதின்
றீதறு வதன நோக்கித் தெரிவைநின் காந்த னெங்ஙன்
போதலுற் றனர்கொ லென்ன வினவலும் புகல லுற்றாள்.
21(1789)

### வனத்தில் வேட்டையாடச் சென்றனர் என அவள் கூற பசி தணிக்க ஏதேனுமுண்டோ என நபி கேட்டல்

வல்விலங் குலவா நிற்கும் வரைசெறி யடவி ஞாங்கர்
நல்விலங் கினத்தின் வேட்டு நயந்தன ரென்ன நாதன்
புல்விலங் காது நின்ற பொருபசி தணிப்பாக் கேது
மல்விலங் காத செவ்வூண் மனையிடத் துளவோ வென்றார்.
22(1790)

### ஏதுமில்லை என்ற பெண்ணிடம் நாளும் நீவிர் புசிப்பதென்ன எனல்

நெய்மணங் கொண்ட வூணம் நிவரடை கனிகள் வண்டேன்
பெய்மணப் பாகு மற்றும் பேணிய வுணாக்க ளேது
மிம்மனை யிலையென் றன்னா ளிசைத்திடப் பின்னர் நீவிர்
பம்மிய கால மென்கொல் பயில்வன வெனவுங் கேட்டார்.
23(1791)

### பசி பட்டினியால் வாடுகிறோம் என அப்பெண் கூறல்

வான்சுடுங் கதிரிற் றீய்ந்த வழிபடும் பயிரி னங்க
மூன்சுடும் பசியின் வெந்தீ யுயிர்ச்சுடப் படர்ந்த தன்றி
மான்சுடு முள்ளங் கொண்டே மனைச்சுடுஞ் சுல்லி மீதோர்
தேன்சுடுஞ் சூடுங் காணாச் சிறுமையே பூண்டு நின்றோம்.
24(1792)

மனத்திடை யுன்னு முன்ன மஞ்சுகு நீரு முண்டு
வனத்திடு மிகைய வேக வறுமையிற் படைத்த மெய்யே
மனைத்தினுங் கீழ்மைப் பான்மை யாதகச் சூட்டுந் துன்ப
வினத்தொடு மிருந்தே மின்ன வேந்தலு மென்று
சொன்னாள். 25(1793)

உன் நாதன் வந்தால் என் சலாம் கூறு

முறைப்படும் வசனங் கொண்ட மூன்னலி னுன்னல் கண்டு
நறைப்படும் புயத்து நாதர் நாரியை நோக்கி வன்மை
சிறைப்படுங் கரத்தின் றோன்றற் செழுமனை யடைந்த காலை
குறைப்படா தென்ச லாமுங் கூறுதி மறுத்துஞ் சொல்லாய்.
26(1794)

வீட்டு வாயலின் நிலைப்படியை அகற்றி வேறொன்றை
அமைக்க நான் சொன்னதாய்ச் சொல்

வனைதரு மில்லின் மாட்சி வளந்தரு மணிக டன்னுற்
புனைதரு மழிவி னுட்டும் பொருநிலை யதனை மாற்றி
வினைதரும் படிவே றொன்று விளக்கொடு நிறுத்தா யென்றே
நனைதருங் குழலின் கோதாய் நவிற்றினே னென்றுங் கேட்டி
27(1795)

இந்த நிலை பொருத்தமானது அல்ல என்று வந்த கிழவன்
சொன்னதாய்க் கூறுவாய் எனல்

பாடலு மலைவுஞ் சார்வு பற்றலுங் கபாடங் கொண்ட
தோடலும் பொருந்து மாற்று லுளத்திலியான் பொருந்தி
லேனென்
றீடணி விருத்தன் வந்திங் கிசைத்தன னென்க வென்றார்.
நீடிய புகழின் மேய நிதிபதி யுடைய கோமான். 28(1796)

தந்தையார் திரும்பிய பின் தனயன் தம்மகம் மீண்டனர்

திசைநிறைந் துலவுங் கீர்த்தித் திருப்பதி விடுத்து வென்றி
யிசைநிறைந் துலவா நின்ற விரும்பதி வள்ளல் போந்தார்
நசைநிறைந் துலவு முத்த நலங்கொள வமுதச் சோமன்
மிசைகொளும் வதன நாதன் மிகைதரு மகத்தி னுற்றார்.
29(1797)

தந்தையாரின் வாடையை தம் இல்லில் நுகர்ந்த மகன்
யாரும் வந்தனரோ என வினவல்

அருமையிற் சிறப்பிற் றோன்று மனிநலங் குடிகொள் வல்லோன்
பெருமையின் பாங்கர் மெய்யிற் பிலிற்றிய வாடை வீசி
யுரிமையி னுள்ளத் துற்ற வூற்றத்தா லில்லா ளைக்கிக்
கருமையி னிங்க ணேதுங் காரண முறுங்கொ லென்றார்
30(1798)

விருத்தர் ஒருவர் வந்தனர் என்றாள்

விண்ணிடத் தேகுங் கொண்மூ விரசின கலினப் பாய்மாப்
பண்ணிடத் தொருவ ராக்கைப் பண்பினிற் றளர்ந்து மேவு
முண்ணிறை வயது போந்த விருத்தருற் றனரென் றின்ன
வெண்ணிட மென்மை தோன்ற வாய்மையி னினிதிற்
சொற்றாள். 31(1799)



முதியவர் உன்னிடம் என்ன கூறினர் எனக் கேட்க
விவரம் உரைத்தனள்

வருநெறி யவர்நின் பாங்கின் வழங்கிய தென்கொ லுண்டேற்
றருநெறி கூந்த லல்லா யென்றலுந் தவத்தின் கோமான்
புரிநெறி சலாமு மற்றும் பொருத்திறப் பொருத்தும் வாய்மைக்
குரிநெறி யனைத்துஞ் சொன்னாள் கோமழ விடலை
யோர்ந்தார். 32(1800)

நீ கூறியதென்ன என்று வினவ அவள் நடந்ததுரைத்தல்

நின்மொழி மறுத்துஞ் சிந்தை நேர்பெற மீட்டி யென்ன
நன்மொழி நாதன் கேட்ப நகைமுகத் தவளு மன்ன
வன்மொழி விரிவிற் றுவ ளரிகல னறுப்பா னுகச்
சொன்மொழி கொண்டா ளையன் றொகுமொழி யுணர்த்த
வன்றே. 33(1801)

தந்தை சொல்லின் பொருளுணர்ந்து நீ உன் கிளையாரிடம் செல்
என அவளை விலக்கி அனுப்பல்

உணர்வினு னுவமங் கண்டு நல்லறி வுடைய சிந்தைப்
பணர்வினு ளோர்ந்து பெண்மைப் பண்ணிய மாதை நோக்கி
யிணர்தருங் குறிய செந்தோட் டிருமல ராம்பல் வண்ணத்
துணர்தரு மலரி தன்பாற் றோற்றுமே தோற்று தன்றே.
34(1802)

மன்கிளை யனைய பண்பின் மரங்கிளர்த் தன்ன நின்ற
நின்கிளை யவர்க டம்பா னின்குணங் கொண்டு வாழ்க
வென்கிளை யவரி லியானே யின்கனி கொள்க வென்ன
வன்கிளை மொழியி னுளைத் துறந்தனர் வள்ள லன்றே.
35(1803)

அப்படிச் செய்ததேன் எனக் கிளையார் வந்து வினவல்

அன்பினிற் சிறந்த வள்ள லரியதன் னுரிமை நீக்கும்
வன்பினை யுணர்ந்து செந்தேன் வழிமொழி மடவா ளீன்ற
முன்பினர் தமர்கள் வந்து முரண்டகை யிடையி னென்னென்
றின்பொடு வினவ வென்றி விளங்குற விசைக்க லுற்றார்.
36(1804)

என் தந்தையின் மாண்புணராது விருந்தினர் பேணாது இறுமாப்பில்
இருந்தனள் எனல்

பொறிபடு புலனிற் கேனும் பொருவின்றி யுணர்தற் காகா
வறிபடு பொருளிற் கெட்டா தாண்டகை யொருவன் சந்த
நெறிபடும் பாங்க ராகி நிறைமுழு திறைஞ்சா நிற்கும்
வெறிபடு வொழுகுந் தண்டார் விறற்புயத் தெந்தை மன்னே.
37(1805)

மாதவ ரெய்துங் காலை மதிப்புளங் கொள்கி லாது
சீதநல் வசனப் பண்புஞ் சிறப்பணி சங்கை செய்யா
தேதிரு மாப்பி னின்ற வியல்பினு ளுவமந் தன்னு
வீதகை யின்றென் றின்னே யிகழ்ந்ததென் னுள்ள மென்றார்.
38(1806)

தன் கிளையான சுறுகமிய்யூன் குலப்பெண்ணை மணமுடித்தனர்

ஏதொன்று முரையி லாது சென்றன ரிளையோர் பின்னர்
காதொன்றுங் கதிர்வேற் செங்கை கபீபொளி யிலங்குங்
மீதொன்று மரபன் றேரி னக்கிளை சுறுக மிய்யூ [கோமான்
ஞதொன்று பெயருண் மேன்மை யந்நலார் மணங்கொண்
டாரால். 39(1807)

நன்குடியினர் ஆரிதின் மகன் அமுறுவின் மகள்
ஆயிலா மனைவியாதல்

முன்குடி நிறைந்த செல்வ முதிர்குடி யொழுக்கங் கொண்ட
நன்குடி யாரி தீன்ற நன்மணி யமுறென் றோதும்
பொன்குடி யாளன் பெற்றப் பூங்கொடி யாயி லாவை
மன்குடி வேண்டி நின்றார் மனைக்குடி வேண்டி னாரே.
40(1808)

இல்லறம் சிறந்தது

கொலைபழுத் தொழுகி யூனங் குடிநிறை செவ்வேற் றன்னை
நிலைபழுத் தொழுகு மேன்மை யாருளினு னிகழச் செய்யு
மலைபழுத் தொழுகுந் தூய வரிவிழி மயிலி னன்னார்
சிலைபழுத் தொழுகுங் கையார் சீர்மையே படைத்து நின்றார்.
41(1809)

மகனின் நிலையைக் காண இபுருகீம் நபி மீண்டும் வரல்

வண்மையி னெழிலி வாச வனப்பொழில் சாரி னூட்டி
னுண்மையி னிருக்கு மென்கோ னுளத்தினி லரிய மைந்த
னண்மையி னடந்த வண்ண மறிகுது மெனும்வெ னீரா
லெண்மையிற் பன்னாள் சென்ற பின்னரின் னருளிற் புக்கார்.
42(1810)

அன்னை சாருவும் சென்று வருக வென்றனர்

நன்மகன் பாலிற் பற்று நாட்டம துணர்ந்து வெவ்வேற்
கைம்மக னபியை நோக்கிக் கதிநக ரடைந்து முன்போ
லிம்மனை யடைக வேண்டு மென்றன ரலர்ந்த செல்வத்
தன்மையின் கனியிற் றேன்றுந் திருமயில் சாரு வன்றே.
43(1811)



சிபுறியில் வானப்பரி கொணர்தல்

அவ்வயின் வானோர் கோமா னழகொளிர் ஜிபுரி யீலு
மூய்வள நாட்டுள் வைத்த வொண்மணிப் பண்ணஞ் செய்த
வெவ்விழி கலினப் பாய்மா விரைவினி லளிப்ப மீக்கொண்
டெவ்வுல குளுற்றுங் கோமா னினிதொடும் போந்தா ரன்றே.
44(1812)

தன் மகன் இல்லத்தின் வாயில் முன் வந்து நின்றனர்

செறிதரு மொழுக்கம் பற்றிச் சீர்தரு மறிவு போர்த்து
நெறிதரு மேன்மை நோக்கி நிலையினை யுள்ளங் கொண்டோர்
பறிதரும் புன்மை நீத்துப் பரிவுட னடையு மூதூர்
குறிதருந் தோன்றல் முன்றிற் கொற்றவ ரடைந்தா ரன்றே.
45(1813)

அதுகண்டு ஆயிலா அருகில் வந்து வரவேற்று நின்றார்

வண்ணிலா வொழுகுந் தூய மதிமுக மலர்ந்து மேன்மைக்
கண்ணலா ரமுத நோக்கங் களிப்புற நாண மற்று
முண்ணிலா வொழுக முன்வந் தொன்னொளி யலர்ந்த பூந்தா
ளண்ணலார்த் தொழுது நின்றா ரவ்வில்லத் துறைந்த பூமான்.
46(1814)

உன் கணவன் எங்கே எனக் கேட்க ஆயிலா மறுமொழிதல்

பன்மலர் வாடை யோடும் பரிவொடு மலர்ந்த பூங்கொம்
பென்னமு னிற்கும் வல்லி யெழின்முக நோக்கி யன்பி
னின்முகங் கொண்ட கொண்க னெங்கன நேர்ந்தா ரென்ன
மன்னபி வினவ மீண்டு மதிப்பொடும் பணிந்து சொல்வார்.
47(1815)

வேட்டைக்குச் சென்றனர்; வரும் நேரம்தான்,

செங்கதிர்க் கரங்க டோற்றுச் செறியடை படர்ந்த கானத்
தங்குல விலங்கு ளஞ்சி யிரிதர வடர்ந்து வேட்டைப்
பொங்கலிற் போந்த வள்ள லெய்துமிப் போதின் வல்லோன்
பங்கினிற் சிறந்த மெய்ம்மை பயக்குந்தன் னளியா னன்றே.
48(1816)

தாங்கள் நலன் பெற தாங்கள் திருவடி பெயர்க்க வேண்டும்

மதித்திடா வல்ல நாயன் வரிசையின் கருணை மேன்மை
விதித்திடல் வேண்டு மியாங்கள் வென்றியே பெறுவ தாகத்
துதித்திடல் வேண்டு மியாங்கள் சுகம்பெற வேண்டு மேலும்
பதித்திட நுங்கள் பூந்தாள் பயிறர வேண்டு மெந்தாய்.
49(1817)

முதியவர் நீராட வேண்டியவற்றைக் கொணர்ந்தனர் ஆயிலா

வானுலாங் கதிரின் சோதி வழிந்துலா மேனி யோடுங்
கானுலாம் பரியின் மீதே கதியுலாங் கொண்ட வாலே
தேனுலா மாக்கை யுள்ளஞ் செழித்துலாந் தண்ணம் பூண்பா
ஞனுலாஞ் சலக்கி ரீட நலனுலா வேண்டுங் கோவே.
50(1818)

அழகிய கல்லொன்றையும் கொணர்ந்து குதிரையருகில் வைத்தனர்

பூந்தவி சுலவுஞ் செம்பொற் பொலஞ்சிறை யன்ன மென்ன
வேந்திழை வண்மை தாங்கி யிலங்கிய பருதி போன்று
மோங்கிய வடிவநன்கல் லுவப்பொடுங் கொணர்ந்து வள்ளற்
பாங்கினின் வலத்தி னிட்டார் பரியிடத் தொருவ வன்றே.
51(1819)

நபிநாதர் அதன் மேல் வலதுகாலை வைக்க வலப்புறம் நீராட்டினர்

வரிசையி னிலையி னுதர் வலப்பத மதனிற் றூங்கப்
பிரிசமுற் றழகி னிற்பப் பெண்மையங் கனியிற் பூத்தோர்
சிரசினி னெய்தொட் டங்கஞ் செறிவொரு பாகந் தெண்ணீர்
விரைசினீ ராட்டித் தானே மென்மையிற் புலர்த்தி னூரால்.
52(1820)

பின் இடது பாதம் கல்மேல் வைக்க இடது புறமும் நீராட்டினர்

அன்பொடு மிடப்பால் பின்ன ரணிபெறச் செறிப்ப வண்ண
முன்புறு சிலையிற் பாத முறையொடு மூன்றி நிற்பத்
துன்பறும் வள்ளல் சென்னித் தொட்டு நெய் நீவி நன்னீ
ரின்புறப் பாக மற்ற தேந்திழை புலர்த்தி னூரால். 53(1821)

நபிகோமானின் இருபாதச் சுவடுகளும் அக்கல் மீது படிந்தன

இருபுறந் திரித்த வண்கல் லிடத்தினி லழகு லாவுந்
திருபுரங் காக்கும் வள்ள லழுத்திய சீர்மை தன்னுல்
மருவள ரணிக பீபு முகம்மதின் மனத்திற் கொண்ட
வுருமணத் தலர்ந்த பாதச் சுவடுவண் மலர்ந்த வன்றே.
54(1822)

உண்ண ஏதும் உண்டோ என பாலும் இறைச்சியும் கொணர்ந்தனர்

ள்ளமுஞ் செழித்த வள்ள லொண்டொடி நோக்கி நின்றன்
றெள்ளணி மணையி லேதுஞ் சீருண வுண்டு கொல்லென்
றெள்ளலி லாது கேட்கு மின்னுரை யோடும் புக்கி
விள்ளரும் பாகுங் கந்த மிகுதசை தன்னொ டுற்றூர். 55(1823)

உங்கள் குடும்ப நிலை எப்படியோ என வினவல்

நறுவிய வாடை மேய நல்லமு தத்தி னின்ற
வெறிகமழ் வனிதை நோக்கி விளங்குமிவ் வூரி னுங்கள்
பெறுபலன் பொழுதெவ் வாறு புகழொடு பேர்தல் கொண்ட
நெறியறத் தில்லின் பெற்றி நிகழ்த்திய நிகழ்த்து கென்றூர்.
56(1824)

சுவர்க்க வாழ்வுக்கு ஒப்பானது எங்கள் வாழ்க்கை

நெடுங்கட லுடுத்த வன்மை நிலமுழு துவப்பிற் காக்குங்
கொடும்பவ மறுப்பத் தோன்றுங் குளிர்மதி பயந்த வள்ள
லிடங்கொள மலர்ந்த வண்டா ரின்பொடு மளித்த ஞான்றே
தடங்கொளுந் துறக்க வாழ்க்கை மேன்மையிற் றூங்கா
[நின்றேன். 57(1825)



என் கணவரால் எம் வாழ்வில் அனைத்து நலன்களும் நிறைந்துள்ளன

நெஞ்சமுங் களிப்பக் கொண்ட நிலையது களிப்ப வாய்மைப்
புஞ்சமுங் களிப்ப மிக்கோர் போற்றலுங் களிப்ப நீர்கொள்
மஞ்சமுங் களிப்பச் செல்வ மலிகின்ற பயனி னுந்தாட்
கஞ்சமுங் களிப்பக் கண்டேன் காதலன் பொருட்டு மன்னே.
5 (1826)

பொலிவும் வளமும் நிறையப் பெற்று வாழ்கிறோம் எனல்

பெருக்கொடும் பொங்கா நிற்கும் வாரியும் பெய்யு மேன்மை
யுருக்கொடு குளிரா நிற்கு மாரியு மொளிர்ந்து செம்மாந்
தருக்கனிற் பொலியா நிற்கு மேருவு மரிய செல்வச்
செருக்கெனிற் கொண்ட தென்னிற் சீர்மையார் வகுக்க
[வல்லார். 59(1827)

மருமகளின் நல்லியல்பு கண்டு மகிழ்ந்து உளமார வாழ்த்தினர்

என்றிவை யுரைத்த மாதி னியல்புளங் கூர்ந்து மெய்மை
துன்றிய நயினு ரின்ன சுவைதரும் பாகுஞ் செய்ய
வன்றசை யிரண்டு மியாண்டும் வளம்பெற வெக்கா லத்துங்
குன்றிடாப் பொலிக வென்னக் குணத்தொடு மிரந்தா
[ரன்றே. 60(1828)

நோன்பு வைத்துள்ளேன், உன்மனம் போல் என் மனமும் பூரித்தது

தன்மனங் குளிர்ப்ப வன்ன னூரிலை நோக்கி வல்லோன்
முன்மணங் கமழ வாய்மை முற்றிய விரதங் கொண்டே
னின்மனங் களித்த லென்ன வென்மன நிறைந்த பண்பென்
றன்னவி னுரைத்துப் பின்ன ருவப்பொடுங் கூற லுற்றூர்.
61(1829)

உன் கணவன் வந்தால் என் சலாம் கூறு. உன் இல்லத்தின் இவ்வழகிய கோலம் இப்படியே தொடரட்டும்

அரியநின் னுயிரி னன்ப னகத்திடை யெய்தி னென்றன்
பரிவுறுஞ் சலாமும் பேணிப் பண்புட னில்லின் வண்ணம்
புரியுமிந் நிலைகோ ளுது புகழொடு நின்றதாலே
யுரிமையிற் பற்று கென்ன நன்கொடு முரைத்தி யம்மா.
62(1830)

வாசல் நிலை இப்போது சரியாக உள்ளது அதைப் போற்றுக என்று சொல்வாயாக எனல்

புறத்தொரு நான்குஞ் சாயாப் புகழொடு மோசை யின்றி
யறத்தொடு மும்மைத் தான மாக்கிய காப்புங் கொண்ட
நிறத்துடை நிலையா லன்பி னிலைபெறப் போற்று கென்றோ
திறத்துரை சொற்றே னென்க வென்றுசேட் பட்டா ரன்றே.
63(1831)

தந்தை சாம் திரும்பிய பின் தனயன் வீடு திரும்பினர்

பன்னல நபிமா ரெல்லாம் பண்பொடுந் தொடரத் தக்க
முன்னிலை நபியென் றுதி மொழிந்தமே னிலையின் கோமான்
றன்னிலை சாமிற் போதத் தவமுகம் மதுதம் முத்தூ
மன்னிலை கொண்ட வள்ளன் மனையிடங் குறுகி னூரால்,
64(1832)

தந்தையின் மெய்வாடை நிலவக் கண்டு நாயகியிடம் விவரம் கேட்டல்

தவத்துறை பயிலா நிற்பத் தருக்கொடு மரிதிற் பெற்ற
நவத்துறை பயிலா நிற்கு நாயகர் மெய்யின் வாடை
நிவப்பொடும் பயிலக் கண்டு நெஞ்சகங் குளிர்ந்து வள்ள
லுவப்பொடு முரிமை நோக்கி யுற்றவா றென்னை யென்றார்.
65(1833)

நலமனைத்தும் திகழும் பெரியார் ஒருவர் வந்தனர்

பல்லுயி ருளமுந் தோற்றும் பளிக்கியின் மதியம் போன்று
நல்லொளி முகமுந் தண்ண னனிநதி யொழுக்க மென்னச்
சொல்லளி யலர்ந்த கண்ணுஞ் சுடர்விரிந் தொழுகு மெய்யும்
வெல்லணி யுரையின் மிக்கோர் விருப்பொடு மொருவ
[ருற்றார். 66(1834)

ஒப்பற்ற அழகுள்ள குதிரை ஒன்றில் வந்தனர்

செவ்விய வரம்பை யீன்ற செழுங்குருத் தனைய காது
நவ்வியி னயன மீது செவ்வரி நடவி நிற்பக்
குவ்விடங் கொளத்த காவாங் குரத்தொடு முழையு ரோம
மெய்விளங் கெழிலின் பண்ண மிகைதரும் பரியின் மன்னே.
67(1835)

அப்பெரியாரின் பாதச் சுவடு படிந்த கல் இதோ என அறித்தல்

ஆண்டகை தமக்குப் போந்த வருமையி னடியேன் வண்மைப்
பூண்டகை சலக்கி ரீடைப் புரிந்தன னுலவு மண்ணிற்
றீண்டரும் பாத வண்ணச் சுவடிணை பதிந்த தின்ன
மாண்டகை பருதி கொண்ட சிலையென வழங்கி னூரால்.
68(1836)

மேலும் நடந்த பேச்சையும் ஆயிலா கூறுதல்

நின்மண நியதி கண்டு நிகழ்ந்தவை யென்கொ லென்ன
மன்மனங் குளிர நோக்கி மானன விழியின் மின்னார்
நன்மனத் திரந்து நின்ற நயப்பொடு மரிதிற் சொன்ன
நின்மண நிலையின் மாற்றம் வள்ளனேர்ந் ததனைச் சொற்றாள்.
69(1837)

தம் தந்தை வந்து மகிழ்ந்து மனைவியைப் பேண உணர்த்திச் சென்றிருப்பதாய்க் கூறி மேலும் அன்பு செலுத்தினர்

உள்ளுறை யுவம மோர்ந்து மனத்திடை யுவந்து வாசந்
தெள்ளிய நிலையே நின்னைச் சீர்பெறப் பேண வேண்டி
விள்ளிய வாய்மை யென்ன விளக்கிநல் லன்பு கூர்ந்து
வள்ளலெந் தையரென் றேற்றி மாதவர் வாழ்ந்து நின்றார்.
70(1838)

இசுமாயீல் நபி வதுவை வேட்டுப் படலம் முற்றிற்று
ஆகப் படலம் 30-க்கு கூடிய திருவிருத்தம் 1838.

# 31. கருபத்துல்லா வியற்றிய படலம்

படலச் செய்தி

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

அளவறுங் கருணை தன்னா லனைத்துயி ராக்கும் வல்லோன்
வளவுறு பருமான் கொண்டு வரிசையி னிபுறு கீமுங்
களவறு முலக நாப்பண் கதிபதி மக்க மீதி
லுளமகிழ் கஃபத் துல்லா வுஞற்றிய முறைமை சொல்வாம்.
1(1839)

நபி இபுருகீமுக்கு மகனைக் காண ஆசை தோன்றல்

செழுமணி வளையி னேடுஞ் சீதநீ ரொலிக்கு மோசை
விழுமிய வருவிக் குன்ற மயிலின மிகைய வண்ணத்
தெழில்கெழு சாமில் வாழு மிறையவர் கருத்திற் கொண்டார்
வழுவறு மகன்பால் பற்றும் வாஞ்சையின் வியப்பு மாதோ.
2(1840)

சிபுரியில் குதிரை கொணர்ந்தார்

காட்சியின் மனத்தால் வென்றிக் கதிரயில் விழியார் கூறு
மாட்சியின் மிகையும் பற்று மாதவ ரிடத்திற் செம்பொ
னாட்சியி னகரத் தண்ண வருந்திறற் கலின வாசித்
தாட்சியிற் கொணர்ந் தளித்தார் தலைபதி ஜிபுரி யீலே.
3(1841)

மக்கா வந்து சேர்ந்தனர்

குணமெனக் குணமுங் கொண்டு குணமிகு மழிவின் மேனி
மணமென மணக்கும் வேக வாம்பரி மிசையி லுற்றுப்
பணமெனத் திகிரி யாக்கிப் பற்பல வனங்க ணீந்திக்
கணமெனக் கழைமுத் தார்க்குங் கதிபதி வள்ளல் புக்கார்.
4(1842)

சம்சம் ஊற்றருகில் கோணலான அம்பைச் சீவி நேர் செயும் மகனைக் கண்டனர்

தேனினு மதுர மாறுச் செழீஇயநீர் சம்ச மென்னு
மாநவத் துரவு ஞாங்கர் வளர்ந்ததோர் மரத்தி னீழ
லூனுகர் கணையிற் கோண லொன்றுறச் சீவுங் கன்ம
மானநல் விளங்கு மார ராண்டகை தம்மைக் கண்டார்.
5(1843)

தந்தையும் மகனும் கண்டு மகிழ்ந்தனர்

படைப்பதற் கரிய மெய்மை பயக்கும்நல் வரத்தின் கோமான்
கிடைப்பதற் கரிய தீபங் கிளரொளி வதன வள்ள
லிடத்தினி லெய்தும் வெற்றி யிறையெழில் காட்சி தன்னாற்
றடத்தவப் பான்மை மிக்குத் தம்மகம் பட்ட தொத்தார்.
6(1844)

பொங்கிய வாரி யின்பம் பூத்தலர் கடலிற் றாழ்ந்து
தங்கிய காட்சி யென்னுந் தாவலை மிதந்து நன்னா
லிங்கித வாய்மை வள்ள லெழின்மலர்ப் புணைதாள் பற்றி
யங்குமா னந்தக் காலி னூக்கமே யிளவல் கொண்டார்.
7(1845)

### தந்தை தனையனைத் தழுவுதல்

பரியைவிட் டிழிந்த நாதன் பண்பணி யுடலி னாவிப்
பிரியவிட் டதனைச் சேர்த்தா லெனப்பெரி தாசை யோடுங்
கிரியைவிட் டனைய மற்றோள் கிளரொளி யிசுமா யீல்தம்
விரியவிட் டலர்ந்த மார்போ டணைத்தனர் வியந்து
மோந்தார். 8(1846)

### தனயனின் உடல் சிலிர்த்தது

தாதையர் மெய்யிற் பூத்துத் தவழ்தரு மொளிவின் வாச
மீதணி வளியே கொண்டு மிகைப்பொடு முள்ள மெல்லாம்
போதர நிறைந்து விம்மிப் புளகமொன் றெழுந்த வாற்றா
லேதறு முரோம மியாவுஞ் சிலிர்த்தெழப் பொடித்த
வன்றே. 9(1847)

### தந்தைக்குத் தனயன் மனைவியுடன் தொண்டியற்றல்

கண்மணி யென்னப் போற்றிக் கருத்திடைப் பணிகள் வேண்டி
மண்மணி யனைய மக்கந் தம்மனை வாழு மில்லத்
துண்மணி யனைய தாக வுவப்பொடுஞ் சேர்த்து வள்ளற்
கெண்மணி யிறையுந் தீஞ்சொல் லிருவருந் தொண்டி
னின்றார். 10(1848)

### சிபுரியில் வந்து கருபத்துல்லாவின் செய்தி யுரைத்தல்

வாய்மையே விளக்கு மிக்க வானவர்க் கரசன் வல்லோன்
றூய்மையிற் பணிகொண் டெய்தித் துதிதரு நபியைப் போற்றிக்
காய்மையிற் பாவ நீக்குங் கருபத்துல் லாவின் செய்தி
நேயமுற் றுரையா நின்றார் நெஞ்சகங் குளிர வன்றே.
11(1849)

### கருபத்துல்லாவை எழுபதினாயிரம் வானவர் எப்போதும் சுற்றி இறைவனை வணங்கினர்

வரிசையின் வளர்ந்த மேன்மை முகம்மதர் மணியி னின்று
விரைசிய வான மேவும் விண்ணவர் நாளொன் றிற்குப்
பரவுவான் வேண்டிப் போது மெழுபதா யிரவர் பண்பின்
வருபவ ரல்லா றாழி காலமோர் வரையு மன்றே. 12(1850)



### கருபா நான்காம் வானத்தின் கணுள்ள பைத்துல் மகுமூறு பள்ளிக்கு நேர்கீழே அமைந்தது

பேறணி கொள்வார் கொள்ளும் பெருமித மென்னோ வின்ன
வீறணி நான்கா மும்பர் மேவிய வளவில் சோதி
யூறணி கொண்ட பைத்துல் மகுமூறென் றுரைக்கும் பள்ளி
யாறணி கொண்டிவ் வைய நடுவணி கொண்ட தன்றே.
13(1851)

### இறை ஏவலுக்கிணங்க அமரர்கள் ஒன்று சேர்ந்தமைத்தது அது

முத்தொழிற் குரிய வல்லோன் மொழிப்படி யமரர் கூண்டு
சுத்தநற் றுறக்க நாட்டிற் சொரிகதிர் மணிக டாமே
பத்தியிற் சேர்த்து விண்ணிற் படர்சுடர் வெட்க நீர்கு
ழைத்தலத் தெவனு மேலு மெழில்கொள வமைத்த தன்றே.
14(1852)

### அம் மணிமண்டபத்தை வானவரான நாங்கள் வலஞ் செய்து நாயனை வணங்கி வந்தோம்

கண்டவர் பெறுபே றெண்ணுக் காரண வீட்டிற் கன்பாய்
மண்டிய நிழல் குலாவு மரகத மதனால் வாயல்
மிண்டுறு மேல்பால் கீழ்பால் விளங்கொளி பொழிவ தாகப்
பண்டமைத் தமர ரியாரும் வலஞ்செய்து பரவா நின்றோம்.
15(1853)

### வர்ணனைக் கடங்கா புகழ்ச்சிக்குரியது அக் கருபா வீடு

மீப்படர்ந் தொளிரும் வண்ண மிகைப்படர் மணிக டம்மால்
வரப்பணி விளக்கி னங்கள் வாய்ப்பருஞ் சுவர்க்கந் தன்னை
நீப்பற திலங்கத் தூக்கி நிறுத்துமே லலங்கா ரங்க
ளியாப்புற வகுக்கற் கேலா வெண்ணறும் புகழ்ச்சி வீடே.
16(1854)

### பூமியில் முகம்மதை வெளிப்படுத்தும் பொருட்டு ஆதமைப் படைத்தான் இறைவன்

நுங்கடம் மரபிற் றோற்று நூற்கட றவழ்ந்த செல்வ
மெங்கடங் கருத்தாய் நின்ற வெழின்முகம் மதுவைப் பூவி
னிங்கிதத் தமைப்பா னாக விறையவன் கருணை யானே
தங்கிய வாதந் தம்மைத் தகைபெற வகுத்தா னன்றே.
17(1855)

### ஆதம் தோன்றிய போது கருபா தவிர வேறொன்றும் கண்டிலர்

நல்லொளி விளங்கு மாத நபியவர் புவியிற் றோன்றிப்
பல்லொளி வினங்க ளெல்லா மொருதுறைப் பதிந்த தென்ன
மல்லொளி யணிவீ டன்றி மறுத்தொன்றுங் கண்டா ரல்லார்
சொல்லொளி வினவிப் போற்றித் தோற்றமே புரியா
நின்றார். 18(1856)

**இறைவனின் அறுசை வலம் செய்வது போன்றது கருபாவை வலம் செய்து வணங்குவது**

அணிதரு வான நீர்சூ ழரும்புவி மற்ற வெல்லாங்
கணிதரப் பொதிந்த மேன்மை கணக்கறு மொளிவு பூத்து
மணிதரு மறுசிற் செய்த வணக்கத்தின் வலஞ்செய் பான்மைத்
திணிதரும் பெற்றி வாய்ப்பச் சிறப்பழ கலர்ந்த தன்றே.
19(1857)

**ஹறமை வலஞ் செய்து என்னை வணங்குக என ஆதமுக்கு இறைவன் கட்டளையிட்டான்**

என்னணி யறுசைச் சூழ்ந்து நலங்கொள விலங்கா நிற்குந்
தன்னணி ஹறமீ தன்பாற் றகையொடு வலமுஞ் செய்து
மன்னணி மனத்தி னூளும் வணங்குக விவணி னென்ன
வன்னதே யணிந்து நின்று ரம்பொன்னூ ரணிந்த கோமான்.
20(1858)

**அதன் ஆதீனத்தை உம் மரபில் வரும் இபுருகீமுக்குக் கொடுப்பேன் என்றனன் இறைவன்**

வணக்கமும் புகழுங் கொண்டு வழியொடு மொழுகும் வள்ள
லிணக்குறு மேன்மை யோங்க வியல்பொடு மருளிச் செய்தான்
மணக்குமிவ் வீட்டின் பேறும் வரிசையும் வழங்கு நேர்மை
கணக்குறுந் தாய மாட்சிக் கருத்தனை யொருவர்க் கென்றும்.
21(1859)

இதனிடை வழிபா டிங்ங னிருந்தகை யறிவு மெல்லா
மதனிடை புரத்த லன்னோர் கரத்தளித் திடுகு மென்றன்
மதநெறி பாங்கர் நின்றன் மரபணி பேரர் நல்லோர்
துதியிபு ருகீ மென்போ ரென்னவல் லவனுஞ் சொற்றான்.
22(1860)

**ஆதமுக்கு ஆயிரம் ஆண்டுக்குப் பின் தோன்றிய நூகுநபியின் சமூகத்தார் மாறுசெய்யப் பிரளயம் உண்டாயிற்று**

இம்மொழி யாதங் கேட்டு ளிருதயங் களிப்பப் போற்றிச்
செம்மொழி கொண்டு வாழ்ந்தார் சிறப்பொடு மவர்பின் வந்தோர்
பம்மிய வணக்கங் கொண்டு பரவிநின் றவர்பின் மிக்க
நம்பியல் புடைய நூகு நன்னபி யுதித்தார் மன்னே.
23(1861)

முற்படு நபிக்கு மின்ன மூதுரை யவர்க்கு நாப்பண்
பிற்பட நடந்த தியாண்டோ ராயிரம் பிணங்கி நின்ற
கற்படு நெஞ்சி னென்னோர் காரணத் தின்னோர் வாக்கிற்
சொற்படும் பொருட்டா லோதை வாரியே தோற்றிற் றன்றே.
24(1862)



**அப்போது கருபா நான்காம் வானத்திற்கு உயர்த்தப் பட்டது**

மண்ணினுந் துளங்கா நிற்கு மலையினந் திரையி லேந்தி
விண்ணினுந் துளங்கக் காட்டி வெள்ளமே யெழுந்த காலைப்
பண்ணினுந் துளங்கு நுந்தம் பயிற்சியே விளங்க வல்லோன்
கண்ணினுந் துலங்கு மிவ்வீ டுயர்த்தினன் காய நான்கே.
25(1863)

**அதை இப்போது கட்ட ஆணைபிறந்துள்ளது கட்டுங்கள் என சிபுறியீல் கூறிப்போதல்**

இத்தகை யியல்பு வாய்ந்த விசைதருங் கருபத் துல்லாச்
சித்திரத் தமைக்க வென்றித் திருமொழி பிறந்த தன்ன
வுத்தம வினைகொண் மியாவென் றுவப்பொடு மருளிப் போந்தார்
கத்தனற் றூதர் வானோர் கனிதருஞ் ஜிபுரி யீலே. 26(1864)

**மகனிடம் அது கூற அவர் உடன்படல்**

திருமனங் களித்து வள்ள லன்பொடுஞ் சிறப்பு லாவி
மருமணங் குளிக்குந் திண்டோண் மைந்தனை நோக்கிக் கொண்ட
பெருமனங் களிக்கும் வல்லோன் பணிவிடை பிரித்துச் சொற்று
ரருமன வியப்பிற் சேர்க்கும் பயனென வாக்கங் கொண்டார். 27(1865)

**அதை அமைக்க வேண்டிய இடம் யாதென அறியாது இருவரும் மயங்கல்**

தகைகொளு மிபுறு கீமுந் தவத்துறை யிசுமா யீலு
மிகைகொளும் வீறி னோடு மேலவன் பணித்த வண்ண
நகைகொள வமைப்பா னாக நவத்துறை ஞாங்கர் போந்து
வகைதரு மிடந்தோற் றுது மனமிக வாய்தல் கொண்டார்.
28(1866)

**அதை அறிவிக்க இறைவனிடம் இரந்து நிற்றல்**

அருவமு மருவங் கொள்ளா வார்ப்பினு மூவந்து காக்கு
மொருவனே யழிவி லானே யுன்னருள் பணியி னின்றேம்
பெருவரப் பேறு தூங்கும் பேரணி வீட்டின் மூலந்
தெரிவர வருள்வா யென்னத் திருநபி யிரந்து கேட்டார்.
29(1867)

**மேகம் ஒன்று தோன்றி அதற்கு ஒரு சிரசும் அமைய அது விண்டது**

கலிவிருத்தம்

வல்லவ னுரைப்படி வளங்கொண் டும்பரிற்
பல்லுயிர் மகிழ்வுறப் படர்ந்து தண்ணரு
தல்லென விளநிறங் குலவி யங்ஙனோர்
செல்லது தோன்றின சிக ரத்தினே. 30(1868)

எண்டிசை பெருமணங் கமழ்ந் தியைதர
மண்டிய புயலினோர் சிரமும் வாய்ப்பவே
கொண்டெழி னபியுளங் குளிர்ப்ப நண்பொடு
மண்டிநின் றொருமொழி யன்பி னோதிற்றே. 31(1869)

என் நிழல் விழுமளவுக்கு எல்லைகளை அமைத்திடுக
என மேகம் கூறியது

என்னிழ லெவ்வள வியைவ தவ்வள
வன்னிழ லந்நிலங் குறிய தாகவே
நன்னிழ னுயக நயந்து கொள்கவென்
றுன்னலின் முன்னொரு வளியு முற்றன. 32(1870)

அடுத்து வீசிய சூறைக் காற்றினால் மணல்விலக
அஸ்திவாரம் தெரிந்தது

பல்வழி செறிதரு மரங்கள் பற்றறச்
சொல்வழி படுத்திய சூறை மீக்கொடு
செல்வழி மணலெலாஞ் சிய்த்து நீக்கவே
நல்வழி வீட்டடி நகைத் திலங்கின. 33(1871)

அடிப்படை தோற்றவும் மதிலமைத்தனர்

முதிர்புகழ் வானவர் முயன்று கட்டிய
பிதிரெழி லடிப்படை பிறங்கித் தோற்றவே
யதனிடை நன்னபி யணிகள் வாய்த்திடத்
திதிமதி லியற்றுவர் சிறந்த மேன்மையால். 34(1872)

ஐந்து மலைகளினின்று மகன் கல் எடுத்து தந்தையிடம்
கொடுத்தனர்

மாட்டுறு மைந்தரு மாண்பு போர்த்திடச்
சாட்டுறுங் கிரிகளோ ரைந்திற் றக்கவே
பூட்டுறும் வண்சிலை வாங்கிப் பூபதி
நீட்டிய கைக்கெலா நீட்டி னாரரோ. 35(1873)

அபறானி மொழியினராம் தந்தையும் அரபி மொழியினர்
தனயனும் பேசிக் கட்டினர்

மூதுரை மொழியப றானி யாலெழிற்
றாதையர் வியங்கொளிற் றக்க தாகவே
யாதியி னுதிப்பினு லறபின் பாடையா
ரோதிநின் றொழுகுவார் கருத்தி னூக்கத்தால். 36(1874)



கிரு மலைக் கற்களை எடுத்தளித்தனர்

கையிடத் துன்னுமுன் கதிர்கள் கான்றதாய்
மெய்யிடத் தண்ணலார் விருப்பி னோர்முறை
யொய்யெனக் கொடுப்பர்மே லொளிவு தூங்கிய
செய்யணி கிருமலைச் சிலைக ளாமரோ. 37(1875)

நபி நூகுவின் மரக்கலம் ஒதுங்கிய சூதி மலையின்
கற்களையும் எடுத்தளித்தனர்

பின்னு நன் னபிதிருக் கரத்திற் பேரொளி
யின்னவ ரளிப்பர்முன் னிரைந்த வெள்ளத்தி
னுன்னத மரக்கல முற்றுத் தாங்கிய
நன்னலன் சூதியா நாக வண்சிலை. 38(1876)

இறையொளி இறங்கும் பேறுபெற்ற தூறுசீனா மலையின்
கற்களையும் எடுத்தனர்

திருமுக நோக்குமுன் சிறப்பி னீகுவார்
மருமுகத் தண்ணலார் வல்ல நாயகன்
பெருமுகத் தொளிவினாற் பேறு பூத்தலர்
தருமலைத் தூறுசீ னாவின் றன்சிலை. 39(1877)

சாமில் உள்ள சைத்தா மலைக்கல்லும் எடுத்தனர்

அணியணி யுயர்தர வடுக்கு நேர்தரக்
கணியள வுயரிய கருத்த ரீகுவார்
மணிமிகு பெருநகர் சாமின் மாடுறுந்
திணிகொள்சைத் தாவெனுந் திகிரி வண்சிலை. 40(1878)

லுபான் மலைக்கல்லும் எடுத்தளித்தனர்

விரைவொடு மியற்றுமவ் வேந்தர் தண்மழைக்
கரமது களித்திடக் கொடுப்பர் காவலோ
ரிரவியு மழுங்குநன் னிறத்த வேந்தல்கொள்
புரமது புடைலுபான் பொருப்பின் வண்சிலை. 41(1879)

மதில் சிறந்து வளர்ந்தது.

அடிக்கடி யிறைவ னருளி னிவ்வண்ணங்
கொடுத்திடுஞ் சிராவணங் குலவுஞ் செங்கதிர்
படுத்தன வணிமதிற் பரிவி னேற்றின
நடுத்தகை நாடுமு னலங்கொள் கைகளே. 42(1880)

அருளென வறிவென அறத்தின் பேறெனப்
பொருளென மேன்மையி னுயரும் பொன்மதி
லருகினிற் கொணர்ந்தரு மைந்த ரிட்டனர்
திருமயி லிட்டமுன் சிறந்த கல்லரோ. 43(1881)

நலனெழில் பிறங்கிய நவங்கொள் வண்ணப்பொற்
சிலைமிசை நின்றணி சிறந்த மாதவர்
பலனுற வியற்றுமம் மதிலிற் பாவுற
வலனுறுஞ் சிராவணம் வழிகொ ளாநின்றார். 44(1882)

### இசுமாயீல் நபி அருகில் சென்று பார்த்தல்

தாளணி யிலங்கிய தவத்தின் கன்மிசை
யாளணி யிலங்கிய வண்ணல் வாண்மதி
னீளணி யிலங்குநின் றியற்று நேரமோர்
கோளணி யானிளங் குரிசில் போயினார். 45(1883)

### ஓரிடத்தில் ஒருகல் இல்லாமலிருந்தது கண்டனர்

நிலைகொளு நாற்றிசை நிவரு மேன்மையி
னலனெழு மதிலொரு புறத்தி னாட்டிய
திலதவ ரேகியோ ரரிதி னெய்தினார்
சிலையது பொருந்துறுஞ் சிறப்பு நோக்கினார். 46(1884)

### ஏன் எனக்கேட்க தந்தையார் விளக்கினர்

வெளிப்புடை மறைப்படும் வியப்பு நோக்கியுட்
களிப்பொடுந் தாதையை விளித்துக் கன்மதில்
வளப்படச் சிலையிவண் வரிசை வேண்டிநின்
றளித்தவ ரெவரென வன்பிற் கேட்டனர். 47(1885)

இசைதரச் சிறப்பணி யியற்ற வேண்டிமுன்
பசைதரும் வினைக்குநின் பரத்தி லென்றனை
விசைதரச் சாட்டிலான் விளக்கத் தான்மணந்
திசைவரச் சிலைவரச் சிறந்த தின்றரோ. 48(1886)



### மதில்களின் சிறப்பின் வருணனை

வண்ணிலா வொழுகிய மதில்க ளானுமே
லண்ணலா ரொளிவின மலர்ந்து பூப்பவே
விண்ணிலார் சுடரெல்லாம் வெட்க மேன்மையின்
மண்ணிலார் விளக்கென மன்னுஞ் சோதியே. 49(1887)

காண்டகா தெழிலது கனிந்து தூங்கிய
மாண்டகுந் தூண்களோர் நான்கு மன்னுறும்
பூண்டரும் வெம்பவப் புஞ்சம் போக்குநற்
றேன்றருந் தெளிவெனச் சிறந்தி லங்குமே. 50(1888)

மேல்வருங் காரணம் விரிவி னாகவிப்
பால்வரும் பரிசெனப் பகர்தற் காதியி
னூல்வருங் காரண நுவல வல்லவ
ராலுமுண் மருடரு மனைய மேன்மையே. 51(1889)

தோற்றிடாக் காரணத் தூணு மாதவ
ரேற்றிய மேன்மையி னிலங்கி வெந்துய
ராற்றிய தூண்களு மதனிற் றங்கிய
பேற்றியை யாவரே பிரித்துக் கூறுவார். 52(1890)

### பாவம் போக்கும் முத்திரைக் கல் உதவ பிரார்த்தனை செய்தல்

தெரிதருந் தூணினிற் றேய மாக்களே
புரிதரும் வெம்பவம் போக்கு முத்திரைக்
குரியதோ ரெழிற்சிலை யுதவு கென்னநல்
லரசினைக் கேட்டன ரறிவின் வள்ளலே. 53(1891)

### அருகிலுள்ள அபூகுபைசு மலை கூறியது

வரிசையிற் சிறந்தவர் வழங்கும் வாய்மையிற்
பிரிசமுற் றணிவளர் பெருமை தாங்கிய
தரைசெறி யபூகுபை சென்னுந் தாவரும்
வரையுள மிகமகிழ்ந் துரைக்கு மாண்பினே. 54(1892)

### பிரளயத்தின் போது கருபா வானுக் குயர்ந்தது அத்தலப் பெருமையை நான் வேண்டினேன்

வான்றல நனைதரத் திவலை வாரியின்
மான்றல மழுந்திய கால மாதவத்
தான்றலப் பள்ளியே ககனஞ் சார்ந்தன
யான்றல மேன்மையே தருக்கின் வேண்டினேன். 55(1893)

நெடுங்காலம் கருபர் அருகில் நின்றதால் எனக்கொரு பெருமை கிட்டியது

கணித்திடற் கரியதோர் காலங் கொண்டுமே
லணித்திடத் திருந்தயா னாற்ற லென்னெனப்
பணித்தனன் பணித்தலு மும்பர் பண்பினார்
பிணித்துயர் நீங்குவான் பெருமை யேந்தினார். 56(1894)

சொர்க்கத்து அழகிய வெண்கல் கருபாவில் பொருந்தி பாதகந் தொலைத்து வந்தது

மேதகு பண்பின வியப்புக் கொண்டன
வாதகு மொளிவிடத் தமைந்து நின்றன
தாதணி துறக்கநா டதனிற் றங்கின
பாதகந் தொலைத்திடும் பான்மை பூண்டன. 57(1895)

அறிவுயர் கருத்தென வழகு பூத்தன
செறிமதி யொலிவெனச் செழுமை கான்றன
வெறிமண முள்ளக மிகைப்பக் கொண்டன
துறவொடு பலநெறி துலக்கி நின்றன. 58(1896)

முழுக்கு விதியான பெண்களும் அழுக்கினர் பலரும் முத்திய தால் அது கறுத்து 'கசுறசுவது' என்றே பெயராயிற்று

முழுக்கினள் மற்றவள் முத்த மிட்டன
வழுக்கின ரிடையிடை வைத்த கைகளா
லழுக்கினை நீக்கின வணி கறுத்தன
வெழில்கசு றசுவதென் றிசையும் வேய்ந்தன. 59(1897)

அக்கல் என்னிடம் வைப்பாய் ஒப்படைக்கப்பட்டது

அப்பெருஞ் சிலையென தகத்தி னன்பொடும்
வைப்பெனப் பதனத்தின் வைத்த தாலுடற்
றுப்புர வுடையவாய் படருந் துன்பிலா
திப்பெரும் பேறுகொண் டிருமை பூண்டனன். 60(1898)

எடுத்துக் கொள்க என மலை அதையளிக்க அவர்கள் மகிழ்ந்தனர்

நன்னிலைக் குரியவ நயந்து கோடிரென்
றன்னதை வெளிப்படை யாக்கிற் றங்ஙன
மன்னிய சோதியின் மணியிற் றேற்றினப்
பொன்னலங் குமரரும் பூரிப் பெய்தினார். 61(1899)



ஏற்று இடைவெளி இருந்த மதிலில் பொருத்தி அமைத்தனர்

அன்பொடுந் திருக்கரத் தேந்தி யாண்டகை
முன்பினி லளித்தலு முத்த மிட்டெழிற்
றன்பிறழ் மதிலிடைச் சாத்தி முற்றுற
வின்பநல் வீட்டினை யியற்றி னாரரோ. 62(1900)

கருபத்துல்லாவின் பெருமைகளின் வருணனை

முற்படு மொளிவினின் முரண் டகும்பிய
தற்படு புனலிடை தகைகொள் வெண்ணுரை
யிப்புவி மேலெழு மணியி னாகிய
வப்படி பள்ளியே யழகி யற்றினார். 63(1901)

வானக மனைத்தையும் வயினு ளாக்கிய
மேனல னொளிவது விளக்கஞ் செய்திடற்
கானதோர் மூலபீ டத்தி னியாவர்க்குந்
தானெனுங் குறியினைச் சாற்றற் பாலதோ. 64(1902)

இருசுட ரெனும்பெய ரியைந்த வானவர்
வருவன போவன வலமு மற்றதும்
பெருவழி யாகுமேற் பெயர்த்துக் கூறுத
லருவெனு மளவுங்காண் பரிய வாமரோ. 65(1903)

திசைபல கொள்கிலா தேக தேசமாய்
நசைபயிற் றொழுகையி னடுவ னாகுமே
லிசைதரு முரையினி லென்கொல் காண்டலே
மிசைதரு மருமண மீக்கொண் டன்பினால். 66(1904)

படர்தரு மேலிடம் பதிந்து நோக்கினு
மிடர்தரா துயரிய வியல்பு காட்டுமே
லடர்தரும் பன்னினை வதனி னாக்கமே
தடனுற வரைவிடத் தக்க வல்லதோ. 67(1905)

வனந்திரி விலங்கும்வாய் மனமு மோர்மையி
னினந்திரி தரவெதிர்ந் தெவையுங் கூறிடா
மனந்திரி வின்றிய வரிசை வீட்டினை
யனந்தநா வாயினு மறைதற் பாலதோ. 68(1906)

அனைவர்க்கும் அடைக்கலத் தலமாய் விளங்கும் அவ்வீட்டின்
பெருமை உரைக்கற் பாலதோ?

வன்மையிற் கொலையுடைப் பழிவல் லாளனும்
புன்மையின் வாதியும் புகலப் பாதக
மின்மையின் விலக்கிய வினிய தாபர
நன்மையின் வீட்டினை நவிற லென்கொலோ. 69(1907)

அதனை இயற்றியோர் பெருமையை அறிய வல்லவர் யார்?

காரண மிகைதருங் கதியை யஞ்சொலி
ஞரணப் பொருளிறை யருளு மேன்மையாற்
பூரணக் களிப்பொடு மியற்றும் புங்கவர்
சீரணி பெருமையார் தெரிய வல்லரே. 70(1908)

கஃபத்துல்லா வியற்றிய படல முற்றிற்று
ஆகக் காண்டம் 2-க்கு படலம் 31-க்குக் கூடிய
திருவிருத்தம் 1908

Q7w
N24
84038